
பெண்
எனும்
தேவதை
மைதிலி சம்பத்

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : பெண் எனும் தேவதை |
| ஆசிரியர் | : மைதிலி சம்பத் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : ஜூன், 2013 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 492 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : முத்து நிலையம்<br>B-4, முதல் மாடி, அஸ்வத் பிளாட்ஸ்,<br>பு.எண்: 59 முத்து தெரு,<br>இராயப்பேட்டை, சென்னை-14. |

**விலை: ரூ.200.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : கே.வி.எஸ். ஆப்செட் பிரிண்டர்ஸ்,<br>சென்னை-14. |


# பெண்
# எனும்
# தேவதை





## இவரைப் பற்றி

| | |
|---|---|
| பெயர் | : திருமதி. மைதிலி சம்பத் |
| தெரிந்த மொழிகள் | : தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, ஹிந்தி. |
| தொழில் | : சங்கீத ஆசிரியை |
| விருதுகள் | : லேடீஸ் ஸ்பெஷல் மற்றும் 'நிறை' பத்திரிகைகள் சேர்ந்து வழங்கிய இசைத் துறைக்கான ஸ்பெஷல் லேடி விருது. கோவை வஸந்த வாசல் கவி மன்றத்தின் 'பல் கலை வித்தகர் என்ற பட்டம் பெற்றுள்ளேன். |
| தகுதிகள் | : திரு. விசு அவர்கள் நடத்திய 'அரட்டை அரங்கம்' (இரண்டு முறை), 'கல்யாண மாலை' நிகழ்ச்சியில் ஒரு முறை வந்துள்ளேன். பக்தி டி.வி.யில் ஒரு மணி நேரம் ஆண்டாளின் 'வாரணமாயிரம்' பற்றி தெலுங்கில் இசைச் சொற்பொழிவு நிகழ்த்தி உள்ளேன். Rotary Club of Secundrabadல் சங்கீதம் பற்றி 1 மணி நேரம் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றி உள்ளேன். |
| படைப்புக்கள் | : 150 கிருதிகள் தமிழில் எழுதி வைத்துள்ளேன். நிறைய சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் ஆகியவை. நிறை லேடீஸ் ஸ்பெஷல், நம் உரத்த சிந்தனை, அபிராமி இலக்கிய பீடம், இளையவன் ஆகியவற்றில் வெளிவந்துள்ளன. நெஞ்சின் அலைகள், ஐயாரப்பன் வீடு என்ற இரண்டு நாவல்களும், செல்லப் பிள்ளையார் என்ற ஒரு சிறுகதைத் தொகுப்பும் வெளிவந்துள்ளன. |
| பரிசுகள் | : நம் உரத்த சிந்தனையில் சிறு கதைப் போட்டிகளில் ஐந்து முறை பரிசு பெற்றுள்ளேன். |

# பெண் எனும் தேவதை



## 1

'ஏழுமலையானே! வேங்கடேசா! காப்பாத்துடாப்பா! என் உடம்பை ஆரோக்கியமா வையப்பா' என்று வாய்விட்டு வேண்டியபடி பேத்திகளுக்குத் தலை பின்னிவிட்டு பிச்சம்மாள் எழுந்திருந்தாள்.

நாற்காலியில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த அவள் பிள்ளை ராமமூர்த்தி பேப்பரிலிருந்து கண்ணை எடுத்து அம்மாவைப் பார்த்தார்.

''என்னப்பா பாக்கறே? இந்த வயசிலே அம்மாவுக்கு ஆசையைப் பாரேன், இன்னும் நன்னா இருக்கணும்ன்னு வேண்டிக்கறாளேன்னு நினைக்கிறியா? பின்னே யார் வீட்டில் இப்படி அழகழகா இரண்டு பேத்திங்க இருப்பா, சொல்லு? அதுகளுக்குக் கல்யாணம் ஆகி கொள்ளுப் பேரன், பேத்தி எல்லாம் வளர்க்க வேண்டாமா?

அதுக்குத்தான் இப்படி வேண்டிக்கறேன்'' என்றாள் பிச்சம்மா சிரித்தபடி.

''போ பாட்டி. நாங்க இன்னும் காலேஜ் படிப்பையே தொடல்லே. நன்னா படிச்சு கொஞ்ச நாளாவது வேலைக்குப் போயி அப்பா, அம்மா, அப்புறம் உன்னை எல்லாரையும் நன்னா கவனிச்சுக்கணும். அப்புறமாத்தான் கல்யாணம் எல்லாம். எப்ப பாத்தாலும் கல்யாணத்தைப் பத்தியே என்ன பேச்சு?'' என்றாள் மூத்த பேத்தி கல்பனா என்கிற கல்யாணி.

''அது சரி, பாட்டி! உனக்கு எதுக்குப் பிச்சம்மான்னு ஒரு கர்நாடகமான பேரை வெச்சாங்க? நீ எங்களோட அழகுப் பாட்டி, பட்டுப் பாட்டி உனக்கு ஏன் இப்படி ஒரு ரசனையில்லாத பேரு?'' என்று பேச்சை மாற்றினாள் இரண்டாவது பேத்தி சாதனா.

உள்ளே இவர்களின் அம்மா வித்யா ஒரு புன்சிரிப்போடு இவர்களுக்கு மத்தியானச் சாப்பாடு டப்பாக்களைத் தயார் செய்து கொண்டிருந்தாள்.

''என்ன பண்ணறது? என் பேரு கல்யாணிதான். என்னோட அப்பா அம்மாவுக்கு நாலு குழந்தைங்க பிறந்து, பிறந்து தவறிப் போயிடுத்தாம்மா. எங்க பெரியம்மா கிட்டே என்னைக் கொடுத்து பிச்சையா வாங்கிண்டாளாம். அதனால்தான் எனக்குப் பிச்சம்மான்னும் ஒரு பேர் வெச்சுட்டா. என் கல்யாணப் பத்திரிகையிலே கூட கல்யாணின்னுதான் இருக்கு. பாட்டியோட பெயரைப் பேத்திக்கு வைக்கறது வழக்கம்ங்கறதனாலே உனக்குக் கல்யாணின்னு பேர் வெச்சோம். ஆனா. என் பேரைச் சொல்லி, தான் எப்படிக் கூப்பிடறதுன்னு. உங்க அம்மா உனக்குக் கல்பனான்னு பேர் வெச்சா. கல்பனையில்தான்



உன் மாதிரி அழகா ஒரு குழந்தை பிறக்கும் யாருக்கும். அதனால்தான் எனக்கும் அந்தப் பேர் பிடிச்சது. ஆனா உனக்கும் ஸ்கூல்லே கல்யாணின்னுதானே பேரு?

''போ, பாட்டி! எனக்கு இந்த கல்யாணிங்கற பேரே பிடிக்கல்லே. இரண்டு பேர் இருக்கறது சங்கடமா இருக்கு பாட்டி. ஸ்கூல்லேகூட என்பேரை கல்பனான்னே மாத்திக்கறேனே, பாட்டி!''

''எங்கம்மா பேரே உனக்கு வெக்கணும்னு வெச்சுருக்கு. மாத்தற பைத்தியக்காரத்தனமெல்லாம் வேண்டாம்'' என்றார் மூர்த்தி.

''பாட்டி எனக்கு ஏன் சாதனான்னு பேரு?'' என்று சின்னப் பேத்தி கேட்க, பாட்டி ஏதோ சொல்ல ஆரம்பிக்கும்போது மூர்த்தி ''ஏய், உங்களுக்கு ஸ்கூலுக்கு நாழியாகல்லியா, காலங்கார்த்தாலே கதை பேசிண்டிருக்கீங்க?'' என்றார்.

''இல்லேப்பா. இதோ கிளம்பிட்டோம். பாட்டி, இதை மட்டும் சொல்லு பாட்டி'' என்றாள் சாதனா.

''உனக்கு உங்கம்மாவோட அம்மா பேரு வெச்சது சாந்தான்னு. அதை நான் எப்படிக் கூப்பிடறது? அதனாலே நீ சாதனா'' என்றார் மூர்த்தி.

''வாடி, சாப்பிட, ஸ்கூலுக்கு நேரமாச்சு'' என்றாள் கல்பனா.

சிரித்துக் கொண்டே அம்மா வித்யா இரண்டு தட்டையும் வைத்தாள். தடுக்கையும் எடுத்துப் போட்டாள். 35 வருடங்கள் முன்பெல்லாம் சாப்பாட்டிற்கும் மேசையும், நாற்காலியும் தமிழ்நாட்டில் மிடில் கிளாஸ் குடும்பங்களுக்கு சகஜமாக வரவில்லையே!

''அம்மா! ரசம் சாதம் போதும்மா'' என்று கல்பனா சொல்ல, பாட்டி ''சும்மா இப்படியெல்லாம் கொறிச்சா உடம்பிலே தெம்பு எப்படியிருக்கும்? நீ எடுத்துண்டு போற புஸ்தகத்தைச் சுமக்கறதுக்காவது சக்தி வேண்டாமா?'' என்று கேட்க, அம்மா வித்யா ''நாழியாச்சும்மா, சாயங்காலம் வந்து நன்னா சாப்பிடட்டும்'' என்று சிபாரிசுக்கு வந்தாள்.

இரண்டு குழந்தைகளும் புறப்படும்போது, ''ஏய் மேலாக்கை சரியாப் போட்டு, இழுத்து சொருகிண்டு போங்கோ. அந்தப் பக்கம் இந்தப் பக்கம் பார்க்காமே போயிட்டு வரணும்'' என்று பாட்டி தினமும் ஓதுவதை இன்றைக்கும் ஓதி வைத்தாள்.

அதற்குள் வித்யா ராத்திரி மாமியார் தொடுத்து ஈரத் துணியில் சுற்றி வைத்திருந்த மல்லிகைப் பூ சரத்தைக் கொண்டு வந்து அவள் கையில் கொடுத்தாள்.

ஆமாம், பாட்டி இருந்தால் அந்தக் காலத்தில் எல்லாம் பாட்டியிடம்தான் தலை வாரிக் கொள்ளணும். எப்படி வாரி விடுகிறாளோ அப்படியே இருக்க வேண்டியது தான். மாற்றியெல்லாம் வாரிக் கொண்டால் அவ்வளவு தான். போச். பூவை எல்லோருக்கும் பங்கீடு செய்கிற அதிகாரமெல்லாம் பாட்டியுடையதுதான்.

பாதியைக் கிள்ளி இரண்டு பேத்திகளுக்குமாய் இரண்டாக்கி வைத்து விட்டாள் பிச்சம்மா. இரண்டு பேரும் செருப்பு போட்டுக் கொள்ளும் வேளையில், ''இருங்கோடி'' என்று உள்ளே போய் கை நிறைய உப்பும் மிளகாயும் கொண்டு வந்து பேத்திகளுக்கு திருஷ்டி சுத்திப் போட்டு ''ஜாக்கிரதையாகப் போயிட்டு வாங்கோம்மா'' என்றவள் உள்ளே போய் கையிலிருந்ததை



அடுப்பில் போட்டாள். ''சாட்டை சாட்டையாத் தலை பின்னலுக்கே திருஷ்டியாகிவிடும்'' என்றபடி திரும்பி வந்தாள். திருஷ்டி படுவதைத் தவிர்க்கும் சக்தி இந்த மிளகாய், உப்பிற்கு உண்டோ, இல்லையோ யாருக்குத் தெரியும்?

''அம்மா, சாமான் விக்கற விலைல நீ பேத்திகளுக்குச் சுத்திப் போட வேறே நிறைய சாமான் வாங்க வேண்டியிருக்கும் போலிருக்கே'' என்றார் மூர்த்தி.

''போடா! இரண்டும் ஜோடியாய் போறச்சே லலிதா, பத்மினி மாதிரி இருக்கு. பாத்தியோல்லியோ'' என்றாள் பிச்சம்மா.

துணி தோய்க்க உள்ளே போன வேலைக்காரி கல்பகம் நினைத்துக் கொண்டாள் 'தலைப் பின்னல் மட்டுமா? இந்த இரண்டு பொண்ணுங்களுக்குமே எல்லாமே அழகு தான். இத்தனை அழகு கூட ஆகாது' என்று நினைத்துக் கொண்டாள் அவள் நினைப்பு நிஜமாகப் போவதை அவளே எதிர்பார்த்திருப்பாளா, சந்தேகம்தான்.

நிஜமாகவே கல்பனாவும் சரி, சாதனாவும் சரி வயதுக்கு வளர்த்தி அதிகம் தான். அதற்காக பருமன் எல்லாம் இல்லை. நல்ல உயரம். வாளிப்பு. இரண்டு பேருக்கும் ஒண்ணரை வயசுதான் வித்தியாசம். கண்ணும், மூக்கும், உதடுகளும் செதுக்கினாற்போல் இருக்க, தந்தக் கலரில் நிஜமாகவே ஆளை அசர வைக்கும் அழகுதான்.

நடுவில் வித்யாவும், குழந்தைகளும், ஏன் ராமமூர்த்தியுமே கூட அவர்கள் இருவருக்கும் டான்ஸ் சொல்லிக் கொடுக்கணும்னு ஆசைப்பட்டார்கள். தயங்கித் தயங்கி மூர்த்திதான் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அம்மாவிடம் சொன்னார். மறுநிமிடமே பிச்சம்மா ருத்ர

தாண்டவமே ஆடிவிட்டாள். இங்கே ஏறி அங்கே குதித்தாள். "ஏதோ ஒரு எஸ்.எஸ்.எல்.சி. படிக்க வைத்துவிட்டு கல்யாணத்தைப் பண்ணிக் கொடுப்பீர்களா, அதை விட்டுவிட்டு என்னமோ டான்ஸ் கத்துக் கொடுக்கிறாங்களாம், டான்ஸ்! அதுதான் அம்மாவே பாட்டு சொல்லிக் கொடுக்கிறாளே, அது போதாதா? போதும் போதும் போய் வேலையைப் பாருங்கோ" என்று கடுமையாகவே சொல்லிவிட்டாள்.

அதற்குப் பிறகு யாருக்கும் அதைப் பற்றி பேசவே தைரியமில்லை. அந்தக் காலத்திலெல்லாம் வீட்டுக்கு வீடு மஹாராணி அம்மாதான். (விதிவிலக்குகள் இல்லாமலில்லை) அவள் சொல்லிவிட்டால் அப்பீலே கிடையாது. எந்த விஷயத்திலும் அவள் முடிவே இறுதி. இவர்கள் வீடும் அப்படித்தான். இன்றுவரை கூட அவர்கள் வீட்டில் பிச்சம்மா ஆட்சிதான்.




ராமமூர்த்தி வித்யாவைக் கல்யாணம் பண்ணிக் கொண்டதே ஒரு கதைதான். வித்யாவின் அப்பாவும், ராமமூர்த்தியின் அப்பாவும் நண்பர்கள். இருவருமே வக்கீல்கள். ராமமூர்த்திக்குப் பிறகு 6 வருடங்கள் கழித்து பிச்சம்மா, சிவசங்கரன் தம்பதியருக்கு பிறந்தாள் ரேணுகா. ராமமூர்த்திக்குத் தன் தங்கையின் மேல் அப்படியொரு பாசம். யார் என்ன கொடுத்தாலும் பத்திரப்படுத்தி வைத்து தங்கைக்குக் கொடுத்து விடுவார். அவளுக்கும் அண்ணாவிற்கு அப்புறம்தான்



அவள் 10வது கூட முடிக்கவில்லை. நல்ல வரன் அமைந்ததென்று கல்யாணம் பண்ணி வைத்துவிட்டார்கள். சிவசங்கரனுக்கு பெண்கள் அதிகம் படிப்பது, வேலைக்குப் போவது, காதல் கல்யாணம் இதெல்லாம் பிடிக்காது. இதெல்லாம் அந்தக் காலக் கட்டத்தில்தான் காதில் விழத் தொடங்கியிருந்தன.

எனவே ரேணுகாவின் கணவன் தினகரனின் அப்பாவை ஒரு சந்தர்ப்பத்தில் சந்தித்தபோது, அவர்களுடைய குடும்பப் பின்னணி, பையனைப் பற்றிய விவரங்கள் எல்லாம் பிடித்துப் போக ரொம்ப சீக்கிரம் ரேணுகா, தினகரன் கல்யாணம் நடந்தேறி விட்டது. மறுவருடமே அவளுக்கு ஒரு ஆண் குழந்தையும் பிறந்து விட்டது. அந்த நேரம் தினகரனுக்கு மலேசியாவிலிருந்து ஒரு நல்ல வேலை வாய்ப்பு வர, தீவிரமான ஆலோசனைக்குப் பின், அங்கே இரண்டு வருடங்களுக்கென்று போனார்கள். ஊரும், சம்பாத்தியமும் நன்றாகப் பிடித்துவிட அந்த ஊரின் நிரந்தரவாசிகளாகி விட்டனர்.

ரேணுகாவிற்கு அம்மா, அப்பாவையும், முக்கியமாக அண்ணாவையும் விட்டு விட்டு இருக்க கஷ்டமாகத்தான் இருந்தது. செலவைப் பற்றியெல்லாம் கவலைப்பட வேண்டிய நிலையில் அவர்கள் இல்லை. எனவே வருடம் இரண்டு முறை வந்து விடுவாள். இப்போது தான் அத்தனை அதிகம் வருவதில்லை, தினகரனுக்கு வெளிச் சாப்பாடெல்லாம் ஒத்துக் கொள்வதில்லை என்பதால்.

அவள் ஒரு முறை வந்திருக்கும் நேரம்தான் திடீரென்று ஒரு நாள் நெஞ்சுவலி என்ற சிவசங்கரன் அரை நாழிப் பொழுதில் காலமாகி விட்டார். ராமமூர்த்தி

திடீரென்று தனக்குப் பொறுப்பு கூடிவிட்டதை உணர்ந்தார். காசு பணத்திற்குக் குறைவில்லை. அப்பா இருக்கும்போதே வித்யாவின் அப்பாவிடம் மூர்த்தியை ஜூனியராகச் சேர்த்து விட்டிருந்தார். தனியாகப் பிராக்டிஸ் செய்ய ஆரம்பித்த பின்பும் ஒரு நல்ல நாள், பெரிய நாள், என்றால் ஸீனியர் வீட்டிற்குச் சென்று மரியாதை செலுத்தத் தவற மாட்டார் ராமமூர்த்தி.

அப்பா இறந்து ஒரு வருடம் கழிந்த நிலையில் பிச்சம்மா "உனக்குக் கல்யாணத்திற்குப் பாக்கறேண்டா" என்று தொணதொணக்க ஆரம்பித்து விட்டாள். ராமமூர்த்திக்குக் கல்யாணம் என்று நினைக்கும்போதே பயமாக இருந்தது. வீட்டில் அம்மாவும் அவரும்தான். அடுத்த பெண்மணியாக வீட்டில் அடியெடுத்து வைப்பவளுக்கு அம்மாவோடு ஒத்துப் போகத் தெரியாவிட்டால்? அம்மா தன் ராஜ்ஜியமாகவே இருந்தவள். அம்மாவின் மீது அளவு கடந்த அன்பு வைத்திருந்த அவருக்குக் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் இருந்து விடுவதுதான் சரி என்று மனதில் பட்டு விட்டது.

எப்போதாவது *சீனியர்* வீட்டிற்குப் போகும்போது உள்ளிருந்து நல்ல இசை காதுகளில் விழும். ரொம்ப நாள் கழித்துத்தான் ஒரு நாள் வித்யா அவர் கண்களில் பட்டாள்.

"அப்பா இன்னும் பூஜை முடிக்கல்லே, உட்காருங்கோ, இப்ப வந்துடுவார்" என்று சொல்லிவிட்டு உள்ளே போனாள்.

அன்று வெள்ளிக்கிழமை. இன்னும் ஈரம் காயாத தலைமுடியை நுனி முடிச்சிட்டுக் கொண்டு சாம்பிராணி மணத்துடன் வெளியே வந்த அழகு தேவதை வீணை மீட்டியதுபோல் மென்மையாகச் சொன்ன அந்த



வார்த்தைகளிலேயே ஒரு பரவசமாகி உட்கார்ந்து விட்டார் ராமமூர்த்தி.

குளிர்ந்த ஜலம் கொண்டுவந்து மேசையின் மேல் வைத்துவிட்டு உள்ளே போனாள். இத்தனை நாள் தனக்குக் கல்யாணம் என்று ஒன்று தேவையேயில்லை என்று இருந்த அவருக்கு, கல்யாணம் செய்துகொள்ளணும், அதுவும் இந்தப் பெண்ணைத்தான், இவள் எனக்காகப் பிறந்தவள் என்ற எண்ணம் ஏற்பட்டது அந்த நிமிஷத்தில்தான்.

சற்று நேரம் கழித்து *சீனியர்* வந்தார். இவர் என்ன கேட்டாரோ, அவர் என்ன சொன்னாரோ எல்லாம் ஒரு உன்மத்த நிலையில் நடந்து, வீட்டிற்கு வந்தார். மாலை தன் வீட்டு மொட்டை மாடியில் நிறைய நேரம் அமர்ந்து யோசனை செய்தார். அம்மாதான் ரொம்ப நாட்களாக கல்யாணம் பண்ணிக்கோடான்னு சொல்லிக் கொண்டேதான் இருக்கிறாள். '*சீனியர்* வக்கீலின் பெண்ணைப் பார்த்தேன்மா, பிடிச்சிருக்கு. மேற்கொண்டு ஆக வேண்டியதைப் பார்' என்று சொல்ல இவருக்குப் பயம். இவருக்குப் பிடித்த பெண்ணை இவர் சொல்லி பண்ணி வைத்தால் அப்புறம் அது வெறுப்பாக மாறக்கூடும். அதனால் என்ன செய்யலாம் என்று யோசித்தார். *சீனியரிடம்* சொல்லுவதும் சரியென்று தோன்றவில்லை.

பார்ப்போம் இத்தனை நாளாய் இல்லாமல் புதிதாக ஒரு ஆசையைத் தோற்றுவித்த கடவுள் அது நிறைவேறவும் வழி செய்வார் என்று அப்போதைக்கு அந்த விஷயத்தை ஆறப் போட்டு விட்டார். அவ்வப்போது அந்த அழகு தேவதையின் உருவம் மனதில் வந்து ஹிம்சிக்காமல் இல்லை. எனினும் பொறுமை காத்தார். கூடவே

ஏதோ ஒரு நாள் கண்ணில் பட்டபோது பவ்யமாக வந்து உட்காரச் சொல்லி தண்ணீர் கொடுத்தாள் என்பதால் அவள் அடக்கமான, அம்மாவிற்கேற்ற பெண் என்று எப்படி முடிவு கட்டுவது என்றும் நினைத்தார்.

வீட்டின் முன் பக்க அறையையே இவரின் சீனியர் கோபாலன் அலுவலகமாக வைத்துக் கொண்டிருந்தார் ஆனாலும் அவர் மனைவியைக் கூட எப்போதாவது அபூர்வமாகத் தான் வெளியே பார்க்க முடியும்.

போன முறை ரேணுகா வந்திருந்தபோது அவளிடம் பேசிக் கொண்டிருந்தது நினைவுக்கு வந்தது. ரேணுகா விற்கும் அண்ணா கல்யாணம் பண்ணிக் கொள்ளவில் லையே. வாழ்க்கையில் செட்டில் ஆகவில்லையே என்று ரொம்ப குறை. எப்போதும் நேரிலும், போனிலும் சொல்லிக் கொண்டேதான் இருப்பாள். போன முறை இதே மொட்டை மாடியில்தான் அண்ணனும் தங்கையு மாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

''நீ இப்படி இருக்கும் வரை எனக்கு அங்கே நிம்மதி யாகவே இல்லை அண்ணா'' என்றாள் ரேணுகா.

''ஏன், நான் நன்னாத்தானே இருக்கேன்! நன்னாத் தான் வரும்படி வரது.

அம்மா நன்னா சமைச்சுப் போடறா, நான் நன்னா சாப்பிடறேன். பாட்டுக் கச்சேரிக்கெல்லாம் போறேன். நான் ரொம்ப சந்தோஷமாத்தான் இருக்கேம்மா. எனக் கென்ன குறை?'' என்றார் மூர்த்தி.

''நீ ஹேப்பிதான் ஆனால் அம்மா தான் சந்தோஷமா இல்லை.''

''ஏன், அம்மாவுக்கென்ன? நான் அவளை நன்னாத் தானே பாத்துக்கறேன்?''



''பாத்துக்கறதுன்னா இது இல்லை, அண்ணா! அம்மா வுக்குத் தனியாகவே இருக்க முடியல்லேன்னு வருத்தப் படறா. வீட்டு வேலைகளையும் முழுசா பாக்க முடி யல்லையாம். நீ ஏன் புரிஞ்சுக்காம பேசறே?''

''ஓ அதானா! சரி, சரி! கல்பகம் மேல் வேலை எல் லாம் பண்றா, சமையலுக்கும் ஒரு ஆளைப் போட்டுட றேன், இப்போ சந்தோஷம்தானே?''

''ஐய்யோ, மக்கு அண்ணா! அம்மா கேட்பது சமைய லுக்கு ஆள் இல்லை, பேரனைப் பெத்துத்தர ஒரு மாட்டுப் பெண். புரியல்லையா!''

''இப்போ நீ தான் புரிஞ்சிக்காமே பேசறே! நம்ம அம்மா சுபாவத்துக்கு, வருகிறவளுக்கு அடக்கம், வேலை செய்வதில் ஒரு நேர்த்தி, முக்கியமா விட்டுக் கொடுக் கும் தன்மை எல்லாம் இருக்கணும் இல்லையா? அது இல் லேன்னா நான் ரொம்பவே கஷ்டப்படுவேன். அதனால் தான் கல்யாணமே வேண்டாங்கறேன் இப்போ புரி யறதா?''

''ஹோஹ்ஹோ'' என்று பெரிதாகச் சிரித்தாள் ரேணுகா. ''மாமியார் மருமகள் சண்டைக்குப் பயந்து கல் யாணம் பண்ணிக்காமல் இருந்தால் அன்னியிலிருந்து இன்னி வரைக்கும் ஒரு பயலுக்கும் கல்யாணம் ஆகி யிருக்காது, எல்லாரும் தனி மரமாத்தான் இருக்கணும்'' என்றவள் தொடர்ந்து ஏதோ சொல்ல முற்படுமுன் கீழே யாரோ வந்திருப்பதாக பிச்சம்மா குரல் கொடுக்கவே பேச்சு அத்தோடு நின்று விட்டது.

மறுநாள் அம்மா கூட கேட்டாள் ''ஏன்டா, நான் என்ன நீ கல்யாணம் பண்ணிக்கப் பயப்படும் அளவுக்கு சண்

டைக்காரியா? அப்படிக்கூட வருகிற சின்னப் பொண்ணை அனுசரிச்சப் போக மாட்டேனா, என்ன?''

''அதில்லேம்மா, வந்து.. வந்து.''

''நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம். நீ நினைக்கிற மாதிரியெல்லாம் நான் ராட்சசி இல்லே. உன் சந்தோஷம் தானேடா எனக்கு எல்லாம்? நீ வீணா கவலைப்படாதே'' என்றாள் அம்மா.

ஒரு வாரம் ஆகியிருக்குமா, இவர் வித்யாவைப் பார்த்து? இருக்கும். அன்று சாயந்திரம் இவர் கோர்ட்டிலிருந்து வந்து வீட்டில் நுழையும்போதே அம்மா முகத்தில் ஏகப் பட்ட மலர்ச்சியோடு, ''ஏன்டா, கொஞ்சம் முன்னாடியே வந்திருக்கப்படாதா? ஏன் இவ்வளவு லேட்டு?'' என்றாள்.

''ஏம்மா, என்ன விஷயம்? யாராவது வந்திருந்தாளா?'' என்று கேட்டார் அங்கிருந்த பழங்கள், வெற்றிலை, பாக்கு பூவெல்லாம் நோட்டம் விட்டுக் கொண்டே.

''உன் *சீனியர்* கோபாலனும், அவர் பெண்டாட்டியு மாக வந்திருந்தார்கள்.''

''அவரா, என்ன விசேஷமாம்?''

''பளிச்சின்னு சொல்லட்டுமா! அவர் பெண்ணை உனக்குக் கல்யாணம் செய்து கொடுக்க ஆசைப்படறா ராம். பெண்ணோட போட்டோவைக் காமிச்சார். நன்னா யிருக்கா. நீ அந்தப் பெண்ணைப் பாத்திருக்கியோ?'' என்று கேட்டாள் அம்மா.

பார்த்திருக்கிறேன் என்று சொன்னால் அம்மாவுக்கு நிச்சயமாக பிடிக்கப் போவதில்லை என்று நொடியில் தீர்மானித்த ராமமூர்த்தி ''இல்லேம்மா, நான் பார்த்த தில்லை'' என்று அவசரமாகச் சொன்னார்.



''இதோ பார் போட்டோவை. பொண்ணு நன்னா இருக்கா. என்ன சொல்றே?'' என்று கேட்டாள் அம்மா.

''நான் வேண்டாம்னா விட்டுடப் போறியா? என் னவோ செய்'' என்று அதிக அக்கறை இல்லாததுபோல் சொல்லிவிட்டு மாடிக்குச் சென்று விட்டார். அதன் பிறகுகூட பிச்சம்மாவிற்குத் தயக்கமாக இருந்தது. ஒரே பெண், அழகா இருக்கா. பி.யூ.சி. படிச்சிருக்கா, பாடறா, ஏகப்பட்ட ஆஸ்தி. சரியா வரணுமே என்ற பயம்.

அவர்கள் நிறைய பழங்கள் வாங்கி வந்தார்களா, சற்றைக்கெல்லாம் கொஞ்சம் பழவகைகளை எடுத்துக் கொண்டு பக்கத்து வீட்டுக்குப் போனாள். எப்போதாவது, ஏதாவது பிரச்னை என்றால் அவர்களிடம் தான் கலந்து பேசுவாள். மாமா டாக்டர் அவரும் சரி, அவர் மனைவி ராஜியும் சரி, நல்ல விவேகிகள். எதையும் சரியாக யோசித்து ஆலோசனை சொல்லக் கூடியவர்கள்.

''எதுக்கு மாமி இத்தனை பழம்?'' என்று ராஜி கேட்டாள்.

''ஒன்றுமில்லை, மூர்த்தியோட *சீனியர்* வந்திருந்தார்'' என்று ஆரம்பித்து முழு விவரமும் சொன்னாள். போட் டோவையும் காட்டினாள். தன் தயக்கத்தையும் சொன்னாள்.

ராஜி ஏதோ சொல்ல ஆரம்பிக்க டாக்டர் அவளைக் கையமர்த்திவிட்டு ஒரு ஐந்து நிமிடம் யோசித்தார். ''சரி, பிச்சம்மா மாமி, இப்போ நீங்க சொல்லுங்கோ. உங் களுக்கு போட்டோவிலே இருக்கற இந்தப் பொண்ணைப் பாத்ததும் பிடிச்சுதா?''

''பாக்க நன்னாத்தான் இருக்கா, இல்லையா?'' என்று ராஜியை அபிப்ராயம் கேட்டாள் பிச்சம்மா.

''நல்ல களையா, அழகாத்தான் இருக்கா. அதிலென்ன சந்தேகம்?'' என்றாள் ராஜி.

''இந்தப் பெண்ணைப் பார்த்ததேயில்லை என்கிறான் மூர்த்தியானால்.. அதுதான் நம்பறாப்போலே இல்லே'' என்றாள் பிச்சம்மா.

''சரி, பார்த்திருந்தாலும் உங்ககிட்டே பாத்ததில்லைன்னு சொன்னான்னா அந்த வரைக்கும் உங்க மேல மரியாதை வெச்சருக்கான்னுதானே அர்த்தம். அதை அதோடு விட்டுடுங்கோ. அவன் சீனியர் ரொம்ப பெரிய வக்கீல். அவருடைய குடும்ப பின்னணியெல்லாம் உங்களுக்கு திருப்திதானே?''

''அது.. வந்து... மூர்த்தி அப்பா நாள்லேருந்து பழக்கம் தானே - நல்ல மனுஷா தான்.''

''பின்னே என்ன? பொண்ணு அதிகம் படிப்பில்லை, படிக்காமலும் இல்லை. அப்புறம் ஒரே பெண் என்கிற தாலே சில நன்மைகள் இருக்கு. அதையும் யோசிங்கோ! அவருக்கு நல்ல பிராக்டிஸ், நிறைய கிளைன்ட்ஸ். அதுக்கெல்லாம் இவன்தான் வாரிசாவான்? அது அவனுக்கு அதிர்ஷ்டம் இல்லையா? இங்கேயும் அப்பா இல்லாத தற்கு அவனுக்கு அவர் பெரிய சப்போர்ட்டா இருப்பார், இல்லையா? எனக்கென்னமோ நீங்க போய் பார்த்து விட்டு வந்து, பிடித்தால் சம்பந்தத்தை முடிக்கலாம்ன்னு தான் தோணுது'' என்றார் டாக்டர்.

''ஆமாம், மூர்த்தி என்ன சொல்றான்?'' இது ராஜி.

''உன் இஷ்டம்போல் செய்னுட்டான்.''

''அதுதான் வித்தியாசம். இத்தனை நாளா அவன் ஒரே தள்ளலா வேண்டாம்னு சொன்னவன் இப்போ இப்படிச் சொல்றான்னா அர்த்தம் என்ன? பேசாமல் இந்த வருஷம் கல்யாணத்தைப் பண்ணுங்கோ, அடுத்த வருஷம் பாட்டியாகிவிடலாம்'' என்றாள் ராஜி.

''சரி, பெண் பார்க்க நீங்க இரண்டு பேரும் வரணும்'' என்று கேட்டுக் கொண்டாள் பிச்சம்மா.



''என்னை எதிர்பார்க்காதீங்கோ, ராஜியை தாராளமாகக் கூட்டிக் கொண்டு போங்கோ'' என்றார் டாக்டர்.

ரேணுகாவிற்குப் போன் செய்ய இவர்கள் நினைக்கும்போது அவளே பேசினாள். விஷயத்தைச் சொன்னதும், ''நான் அப்பா இருக்கும்போதே அந்தப் பெண்ணை இரண்டு, மூன்று தடவை பாத்திருக்கேன். ரொம்ப அமைதி, அடக்கம், அழகு எல்லாம் உள்ள பொண்ணும்மா. நிச்சயம் பண்ணிடு. நாங்க வந்து சேர்றோம்'' என்று சொல்லி விட்டாள்.

அப்போதே திருப்தி அடைந்து விட்ட பிச்சம்மாவிற்கு, நேரே போய் வித்யாவைப் பார்த்ததும் 100%க்கு மேலேயே பிடித்துப் போயிற்று. பின்னே, அவளைப் பிடிக்கவில்லை என்று கண்ணில்லாத யாராவதுதான் சொல்ல முடியும். மேற்கொண்டு வித்யாவும், அவள் அம்மாவும் நடந்து கொண்ட பணிவு எல்லாமே பிச்சம்மாவிற்குத் திருப்தியாக இருந்தது.

அதிகம் வளர்த்துவானேன்? ரேணுகா, கணவர், குழந்தைகளுடன் வர அடுத்த இரண்டே மாதத்தில் மூர்த்தி வித்யாவின் கை பிடித்து சம்சாரியாகி விட்டான். கல்யாணத்திலேயும் இவர்கள் வீட்டுப் பெண்ணையும் அவள் குடும்பத்தினர், மற்றும் புக்ககத்தினரையும் ரொம்ப நன்றாகக் கவனித்துக் கொண்டார்கள். பிச்சம்மாவிற்கு வேறு என்ன வேண்டும்?

கல்யாணமாகி கொஞ்ச நாள் ஆன பின் வித்யா மூர்த்தியிடம் கேட்டாள் ''நீங்க ஏன் என்னைப் பாத்ததேயில்லைன்னு உங்கம்மா கிட்டே சொன்னீங்க ''ஆம்! கல்யாணத்திற்கு முன்னாலேயே ஒரு நாள் கோபாலன் வீட்டிற்குப் போன் செய்தான் மூர்த்தி. ஏதோ ஒரு

தெரிந்த விஷயத்தையே புது சந்தேகம் கேட்பதுபோல் கேட்டு வைத்தான். அதன் பிறகு கோபாலனே இங்கிதமாக, ''வித்யாவுடன் பேசணுமாப்பா'' என்று கேட்டார். மூர்த்தி பதில் எதும் சொல்லவில்லை. ஆனால் போனை வைக்கவும் இல்லை. வித்யாவிடம் போனைக் கொடுத்து விட்டு கோபாலன் உள்ளே போய் விட்டார்.

''வித்யா, நான் அம்மாவிடம் உன்னை இதுவரை பார்த்ததில்லை என்று சொல்லியிருக்கிறேன். ப்ளீஸ், நீயும் அப்படியே சொல்லிவிடு'' என்று கேட்டுக் கொண்டார். வேறு எதுவுமே பேசவில்லை. அது அவளுக்கு சற்று ஏமாற்றம்தான். ''வேறென்ன?'' என்று கேட்டாள்.

''கல்யாணத்திற்கு நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறேன்'' என்று ஒரே வாக்கியத்தில் தன் முழு தாபத்தையும் தெரிவித்து விட்டார். ''ஆமாம், நீ?''

அவர் கேட்டு முடிக்கும் முன் ''நானும் அதேதான்'' என்று மெல்லிய குரலில் சொல்லிவிட்டு போனை வைத்து விட்டாள் வித்யா.

அதனால்தான் இப்போது இந்தக் கேள்வி. மூர்த்தி தன் மனதில் இருப்பதைச் சொல்ல,

''நிஜம்தான் நீங்க சொல்வது'' என்று ஆமோதித்தவள், ''உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''என்ன, சொல்லு வித்யா.''

''எங்க அம்மா, அப்பா யார் சொல்லி உங்கம்மாவைப் பாக்க வந்தா தெரியுமா?''

''யார்?''

வித்யா முகத்தில் புன்முறுவல் மலர்ந்தது. அவனை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே'' ''நான்தான்''



என்றாள். ''என் மனதைத் திறந்து சொன்னேன் அம்மாவிடம், தெரியுமா? எத்தனை நாள் தான் இந்த அவஸ்தை படறது? அம்மா ஒரு கோடி காட்டினவுடனேயே புரிஞ்சுண்டுட்டா. எங்க அப்பா, அம்மா மனசிலேயும் இந்த மாதிரி ஒரு அபிப்ராயம் இருக்குன்னு தெரிஞ்சதும் நான் எவ்வளவு சந்தோஷப்பட்டேன், தெரியுமா?'' என்றாள் பரவசத்தோடு.

அவளை விழுங்கி விடுவதுபோல் பார்த்துக் கொண்டே ''தேங்க்ஸ், கண்ணம்மா, தேங்க்ஸ்! நான் சொல்லி நம்ம கல்யாணம் நடக்கும்னு விடாமல் இருந்தியே. நிஜமாகவே நீ என் உயிர்'' என்று தொடங்கினார் தன் காதல் பிதற்றல்களை.

அன்று அவள் வாக்குறுதி கொடுத்தவள்தான். ''என்றைக்கும் நான் உங்கள் அம்மாவிற்கும், உங்களுக்கும் நடுவில் மன வருத்தம் வருகிற மாதிரி நடந்து கொள்ள மாட்டேன்'' என்று, இன்றுவரை காப்பாற்றிதான் வருகிறாள்.

பிச்சம்மாவையும் சும்மா சொல்லக்கூடாது. மாட்டுப் பெண்ணிடம் நன்றாகவே நடந்து கொண்டாள். இரண்டு பேத்திகளும் பாட்டி வளர்ப்புத்தான். பாட்டிக்கு மிஞ்சிதான் அப்பாவிற்கு வேறு யாரும் என்று பேத்திகளுக்குத் தெரியும். மொத்தத்தில் வித்யா மூர்த்தியின் வாழ்வில் அடித்த பெரிய அதிர்ஷ்டம்தான்.




தன் காலை வாக்கிங்கை முடித்து விட்டு வீடு வந்து சேர்ந்தார் பூர்த்தா என்கிற பார்த்தசாரதி. சோபாவில்

வந்து உட்கார்ந்த அவருக்கு பூத்துவாலையை எடுத்து நீட்டினாள் பெண் மீரா.

"குட்மார்னிங், பேபி! இன்னிக்கு நீ லேட்டா எழுந்தியா, என்ன?" என்று கேட்டார் பார்த்தா.

"ஆமாம் டாடி! ராத்திரி ரொம்ப நாழி படிச்சிகிட்டு இருந்தேன்."

"பரவாயில்லியே!" என்று பார்த்தா சொல்ல, அந்த சமயத்தில் அவருக்கு டீ எடுத்து வந்த அவர் மனைவி அனுராதா" என்ன படிச்சா உங்க பொண்ணுன்னு தெரியாம இப்படி திருப்தி பட்டா எப்படி?" என்று கேட்டாள்.

"என்னடா கண்ணா, என்ன படி ச்சே அப்படி கண் முழிச்ச" என்று கேட்டார் பார்த்தா சிரித்துக் கொண்டே.

"ஹூம்! இனிமே சேஸ்ம், சிட்னி ஷெல்டனும் புதுசா ஏதாவது கதை எழுதினாத்தான் உங்க பொண்ணு படிக்க பாக்கி. பாடம்னு ஏதாவது படிக்கிறாளா என்ன?" என்றாள் அனுராதா.

"மம்மி, நான் மார்க் ஏதாவது குறைச்சலா வாங்கினாத்தானே என்னைப் படி படின்னு சொல்லணும்? நான்தானே டாடி, கிளாஸிலே ஃபர்ஸ்ட்" என்றாள் மீரா.

"ஆமாண்டி, நீ இப்படி 'நான்தான் கிளாஸிலே ஃபர்ஸ்ட்'ன்னு நினைச்சிண்டு பாடத்தையே படிக்காமல் இருந்தா, கடைசியிலேர்ந்து ஃபர்ஸ்ட்டாத்தான் வருவே. எல்லாம் உங்கப்பா கொடுக்கற இடம்" என்றாள் அனு.

"அது சரி, குழந்தை சொல்றது சரிதானே! ஆமாம், அனு, நீ காலேஜிலே படிக்கறச்சே கிளாசிலே நீ எத்தனையாவது ரேங்க்?" என்று கேட்டார் பார்த்தா சிரிக்காமல்.

"நான் டிகிரில ஸ்டேட் ஃபர்ஸ்ட் வந்தவளாக்கும். உங்க ரேங்க்கை வேணா சொல்லிக்கோங்கோ பொண்ணு கிட்டே" என்றபடி உள்ளே போய்விட்டாள்!



"அம்மா சொல்றது நியாயம் தான். மீரா! நீ தான் கிளாசிலே ஃபர்ஸ்ட், உன்னை அடிச்சுக்க ஆள் இல்லைன்னு எனக்குத் தெரியும். இருந்தாலும் படிப்பிலேயும் கவனம் குறையக்கூடாது. இல்லையா? நீ என்ன புக் வேணா படி, ஆனா ஃபர்ஸ்ட் ரேங்கிலிருந்து இறங்கிடக் கூடாது" என்றார் பார்த்தா.

இத்தனையும் சிரித்துக் கொண்டே பார்த்துக் கொண்டிருந்த அனுவின் அம்மா புஷ்பா டைனிங் டேபிளில் டிபன் சாப்பிட எல்லாம் எடுத்து வைக்க ஆரம்பித்தாள்.

"இன்னிக்கு என்ன ப்ரேக்ஃபாஸ்ட் ஜூஜ்ஜீமா?" என்று கேட்டாள் மீரா. அவள் பாட்டியை அப்படித்தான் கூப்பிடுவாள். கிரேட் கிராண்ட் மதராம்.

"மேத்தி பரோட்டா, டொமெட்டோ ராய்தா" என்றாள் புஷ்பா.

"என்ன பாட்டி, நீ! ஆலு மேத்தி பண்ணியிருக்கலாமில்லையா" என்று அலுத்துக் கொண்டாள் மீரா.

புஷ்பா சிரித்துக் கொண்டே பதில் ஏதும் சொல்லாமல் வேலையில் கவனமாக இருந்தாள். அவள் எப்போதுமே இப்படித்தான். அநாவசியமாகப் பேசமாட்டாள். தன்னால் முடிந்ததைச் செய்வாள். அந்தக் காலத்திலேயே அவள் பட்டப் படிப்பு முடித்தவள். படு ஸ்மார்ட்டாக இருப்பாள். எப்போதும் கஞ்சி போட்ட இஸ்திரி செய்த லைட் கலர் புடவைதான் உடுத்துவாள். தூக்கிப் போட்ட அளவான கொண்டை, கோல்ட்ஃப்ரேம் ரிம்லெஸ் கண்ணாடி. இடது கையிலிருந்த மெல்லிய வாட்சை கழற்றவே மாட்டாள். வலது கையில் மெல்லிய தங்க வளையல் இரண்டு, நெற்றியில் சிறிய பொட்டு. இதுதான் புஷ்பா. காலேஜ் லெக்சரராக வேலை பார்க்கிறவள்.

அனுகூட தோள் வரை வெட்டப்பட்ட தலை மயிரை அழகாக நெடுக்கு வாட்டில் க்ளிப் போட்டிருப்பாள். காதுகளில் சிறிய தோடும், இடது பக்கத்தில் மூக்குத்தி, தாழம்பூ கலரும், அளவான நாசியும், பெரிய கண்களும் லிப்ஸ்டிக் உதடுகளுமாய் இருப்பாள்.

பார்த்தா மட்டும் என்ன குறைந்தவரா? நல்ல உயரம், அதற்கேற்ற பருமன், பெரிய மீசை, மிலிடரியில் பெரிய வேலை. வீடே அதற்குத் தகுந்தபடிதான் இருக்கும். வீட்டிலேயே எல்லோரும் செருப்பு போட்டுக் கொண்டுதான் நடப்பார்கள்.

அந்தக் காலத்தில் சென்னைக்கு இதெல்லாம் புதிதுதானே! பார்த்தா கொஞ்ச நாள் போஸ்டிங்கில் நாகாலாந்தில் இருந்தார். அப்போது குடும்பம் சென்னையில் இருந்தபோது இந்த வீட்டில் குடித்தனம் இருந்தார்கள். அதன் பிறகு அவர்கள் ஐந்து, ஆறு போஸ்டிங்கில் வெவ்வேறு இடங்களில் இருந்த பிறகு, திரும்ப சென்னை வந்தார்கள். அப்போது இந்த வீடு விலைக்கு வர, வாங்கி விட்டார்கள். பெசன்ட் நகரில் அந்த பெரிய வீடு காற்றும், வெளிச்சமுமாக, வெளியே ஒரு சின்ன தோட்டமுமாக மிகவும் அழகாக இருக்கும்.

இரண்டு வருடம் முன்பு பார்த்தா சில்சாருக்கு டிரான்ஸ்பராகிப் போகும்போது பாட்டியும், மீராவும் சென்னையிலேயே தங்கி விட்டனர். நல்ல பள்ளிக் கூடத்தில் படித்து வந்த மீராவை பள்ளி மாற்ற இஷ்டமில்லாமல் இந்த ஏற்பாடு.

மீரா ஸ்கூலுக்குக் கிளம்பத் தயாரானாள். ''ஏம்மா, உன்னை நான் ஸ்கூல்லே டிராப் பண்ணிடறேனே!



திரும்ப எப்போ வரணும் கூப்பிட்டுக்க?'' என்று கேட்டார் பார்த்தா.

''வேண்டாம்பா, சாயந்திரம் நான் கல்யாணி வீட்டிற்குப் போயிட்டு வருவேன், கொஞ்சம் நோட்ஸ் எல்லாம் எழுதணும்'' என்றாள்.

''ஏம்மா, இதையே நாளன்னிக்கு, சனி, ஞாயிற்றுக் கிழமையில் பகல் நேரத்தில் போய் எழுதிண்டு வரக் கூடாதா?'' என்றாள் அனுராதா.

''பாருங்கப்பா, நான் என்ன சின்னக் குழந்தையா?'' என்று மீரா சிணுங்கினாள்.

''அதனால்தான் கவலை'' என்றாள் புஷ்பா.

''நிஜம்தானேம்மா, சனிக்கிழமையே போய்ட்டு வா'' என்று சொல்லி எழுந்து விட்டார்.

பின்னே, சின்ன வயதில் கழுதைகூட அழகாக இருக்கும் என்பார்கள். மீராவோ நிஜமான அழகி. அவள் அழகில் ஒரு கம்பீரம் இருக்கும். கொஞ்சம் அதிக உயரம். பாப் பண்ணப்பட்ட தலை. கையில், கழுத்தில், காதில் ஒரு நகை இருக்காது. சல்வார் கமீஸ் போடுவது தான் பெரும்பாலும் அவள் வழக்கம். அவள் பேசினாலும் ஒரு தன்னம்பிக்கையோடு தான் பேசுவாள். அதுவே அவளுக்கு ஒரு அலாதி அழகைக் கொடுக்கும். துணிச்சலும் அதிகம்தான். எல்லாம் வளரும் விதத்தைப் பொருத்ததுதானே!

அப்பாவும் அப்படிச் சொல்லவே ''சரி, நான் சனிக்கிழமையே போறேன். இல்லைன்னா கல்யாணியை இங்கே வரச் சொல்றேன்'' என்றாள்.

''குட் பேபி, டூ தட்'' என்றார் பார்த்தா.



## 4

உட்கார மணை போட்டு கணவருக்குத் தட்டு வைத்தாள் வித்யா. கூடவே மாமியாருக்கு அவள் காலை ஆகாரமான கஞ்சியை கொண்டு வந்து கொடுத்தாள். வாங்கிக் கொண்ட பிச்சம்மா, ''ஏம்பா, மூர்த்தி இந்த முறை ரேணுகா வரும்போது ஒரு நிச்சயதார்த்தம் பண்ணி வெச்சுடலாமா? கல்யாணத்தை வேணுமானால் ஒரு வருஷம் கழித்து வெச்சுக்கலாம்'' என்றாள்.

''நிச்சயதார்த்தமா, யாருக்கு?'' என்று கேட்டார் மூர்த்தி.

''ஏன்டா, வயசு வந்த இரண்டு பொண்களை வெச்சுண்டு கேக்கற கேள்வியா இது? நம்ம கல்பனாவுக்குத்தான். ரேணுகா பிள்ளை பிரகாஷிற்குத் தானே அவளை கொடுக்கப் போறோம்?''

''அது சரிம்மா. + 1 படிக்கிற பொண்ணுக்கு கல்யாணத்துக்கு இப்போ என்னம்மா அவசரம்?''

''என்னடா இப்படி சொல்றே? அவளுக்கும் 16 வயசு முடியப்போறதுடா. எப்படியும் அடுத்த வருஷம் பண்ணத்தானே வேணும்? எனக்கு, ரேணுகாவுக்கு எல்லாம் அப்படித்தானே நடந்தது? என்ன கெட்டுப் போச்சு இப்போ?''

''அம்மா அதெல்லாம் அந்தக் காலம்மா! இப்பல்லாம் பொண்ணுங்கறவ தன் சொந்தக் கால்லே நிக்கணும் அப்படீங்கற எண்ணமெல்லாம் எல்லாருக்கும் வந்தாச்சு. அதுக்கு ஒரு டிகிரியாவது வாங்க வேண்டாமா? நாமென்ன, ஆந்திரா ப்ரோகிதர் குடும்பமா? 5வது படிக்கற பொண்ணுக்கெல்லாம் கல்யாணம் பண்ண?''



''ஏன், அங்கெல்லாம் அப்படித்தான் நடக்குமா?'' என்றாள் வித்யா.

''ஆமா, அங்கெல்லாம் பெண் பெரியவளாறதுக்கு முன்னாடியே கன்னிகாதானம் பண்ணிக் கொடுத்தால்தான் புண்ணியம்னு நிறைய பேர் அப்படி பண்ற வழக்கம். அது சட்ட விரோதம். ஆனா அதுக்கெல்லாம் பயப்பட மாட்டாங்க. ஏன்னா உறவுக்காரங்க யாராவது புகார் பண்ணத்தான் ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியும். யார் போய் மெனக்கெட்டு புகார் குடுக்கப் போறாங்க, சொல்லு? ஆனா கூடுமானவரை கல்யாணத்துக்கு அப்புறம் பெண்ணை தங்கள் வீட்டிலேயேதான் வெச்சுப்பாங்க. நல்ல வேளையா நம்ம ஊர்லே இந்த மாதிரி பழக்கங்கள் இல்லே.

வேண்டாம்மா, இந்தப் பேச்சை இதோடு விடு. அவ டிகிரி முடிக்கட்டும். கொஞ்ச நாள் நம்ம வீட்டிலேதான் அவ சந்தோஷமாக இருக்கட்டுமே!'' என்றார் ராமமூர்த்தி.

''என்ன பேசறே நீ? கல்யாணம் பண்ணி அவளை எங்கேயோவா அனுப்பப் போறோம்? சொந்த அத்தை வீட்டுக்குத்தானே? நீ இவ்வளவு வேண்டாம்னா அப்புறமா பாத்துக்கலாம். சரி, நான் போய் ஜபத்தைப் பண்ணறேன்'' என்று பின்னால் கிணற்றடிக்குப் போனாள் பிச்சம்மா.

எல்லா வீட்டுப் பெண்களுக்கும்தான் நல்ல வாழ்க்கை அமைச்சுக் கொடுக்க ஆசைப்படுகிறார்கள் வீட்டுப் பெரியவர்கள். ஆனால் விதியின் ராட்சசக் கைகள் தன் பங்குக்கு சில பெண்களைக் கட்டி இழுக்கத்தான் செய்கிறது.

அன்று காலையில் காலேஜுக்கும், ஸ்கூலுக்கும் கிளம்பினார்கள் கல்பனாவும், சாதனாவும்.. சாதனா 9-வது படிக்கிறாள். அதனால் அவள் இன்னும் வீட்டு வாசலி லிருந்து ஸ்கூல் பஸ்ஸில்தான் செல்கிறாள். கல்பனா 11வது படிப்பதால் நல்ல பள்ளிக்கூடம் என்று திரு வல்லிக்கேணியில் சேர்த்திருந்தார்கள். எனவே அவள் தனியாக பல்லவன் பஸ்ஸில்தான் போக வேண்டும்.

வீட்டிலிருந்து இடது பக்கமாக நடந்தவள் தெரு முனைக்கு வந்ததும், பாட்டி பார்க்க மாட்டாள் என்று நிச்சயப்படுத்திக் கொண்டு, கொஞ்சம் ஆள் நடமாட்ட மில்லாத இடத்தில் நடந்து கொண்டே இரண்டு காதோரங்களில் ஒவ்வொரு சின்ன கொத்து மயிரை எடுத்து சுருட்டி தொங்க விட்டுக் கொண்டாள். தாவணிக் கொசுவத்தை ஆனாலும் வயிறு ஓரத்தில் முழு வயிற் றையும் மூடி சொருகிக் கொள்ளணும் என்பாள் பாட்டி. அதை மெதுவாக இடது பக்கம் ஓரமாகத் தள்ளி விட்டுக் கொண்டாள். யார் கவனத்தையும் கவுராத வகையில் தான் சொருகியிருந்த தாவணித் தலைப்பை அவிழ்த்து லூசாகத் தொங்க விட்டுக் கொண்டாள். தலையைச் சற்று தூக்கி வாரிக் கொள்ளணும். அது காலேஜுக்குப் போய் தான் செய்து கொள்ளணும். நடு ரோடில் செய்து கொள்ள முடியாது. இப்படியெல்லாம் செய்து கொண் டால், தான் இன்னும் நன்றாக இருப்போம் என்று நம்பி னாள்.

இவள் போய் பஸ் ஸ்டாண்டில் நிற்கவும், இவள் போக வேண்டிய பஸ் வந்து நிற்கவும் சரியாக இருந்தது. அவசரமாக ஏறினாள். ஆனால் தலைப்பு பஸ்ஸின் பக்கவாட்டில் பொருத்தியிருந்த ஒரு விளம்பரப்



பலகையில் மாட்டிக் கொண்டு விட்டது. ''ஹோல்டான், ஹோல்டான்'' என்று இவள் கத்திக் கொண்டிருக்கையில் பஸ் புறப்பட்டு விட்டது.

அதற்குள் பின்னால் இருந்து ''ஸ்டாப், ஸ்டாப்'' என்று கத்திக் கொண்டே ஒரு இளைஞன் கத்த பஸ் நின்று விட்டது. அவன் இவள் தலைப்பை விடுவித்துவிட வேகமாக உள்ளே ஏறினாள். பின்னாலேயே அந்த இளை ஞனும் ஏற பஸ் புறப்பட்டது. ''ஏம்மா, தாவணியை சொருகிக்கறதில்லே? என்ன ஸ்டைலோ?'' என்று அலுத்துக் கொண்டாள் முன் சீட்டில் உட்கார்ந்திருந்த கிழவி ஒருத்தி.

அதற்குள் கண்டக்டர், ''உள்ளே போங்க, முன்னே நகருங்க'' என்று கத்த இவள் முன்னே நகர்ந்தாள். பின்னா லேயே அந்த இளைஞனும் நகர இவள் பின்னே திரும்பி ''தேங்க்ஸ்'' என்றாள். அதற்குள் இவள் கையிலிருந்த புஸ்தகம் ஒன்று நழுவி, கீழே விழுந்துவிட்டது. அவன் குனிந்து அதை எடுத்து அவள் கையில் கொடுத்தான். இவள் மறுபடியும் ''தேங்க்ஸ்'' சொல்ல, அவன் புன்ன கைக்க, அதற்குள் அங்கே ஒரு ஸீட் காலியாகியது. இவள் அந்த ஸீட்டில் உட்கார்ந்தாள். ஜன்னல் ஓரம் உட்கார்ந் திருந்த ஒரு கிழவி தன் கறிகாய்க் கூடையை தன் காலின் கீழே வைத்திருந்ததால், இவள் ஸீட்டுக்கு சற்று வெளியே முழங்காலும், துடையும் வருகிறாற்போலத்தான் உட்கார வேண்டியிருந்தது. பக்கத்திலேயே அவன்.

இவளுக்கு ஒரே பதற்றம் முகமெல்லாம் வேர்த்து விட்டது. படபடவென்றிருந்தது. அம்மா தினமும் சொல்லு வாள். ''ஒரு தோள்பையிலாவது அந்தப் புத்தகங்களை யெல்லாம் எடுத்துப் போறதுதானே'' என்று

வந்தாச்ச. இன்னும் 4வது 5வது படிக்கிற பெண் மாதிரி புத்தகப் பையா? நினைக்கவே முடியலை. ப்ரெண்ட்ஸ் எல்லாம் என்ன நினைப்பார்கள்? ஆதலால் அந்த யோசனையை நிராகரித்து புத்தகங்களை கையிலேயே எடுத்துச் செல்ல ஆரம்பித்தாள். நல்ல வேளை, இன்று புத்தகத்திற்குப் பதில் டிபன் டப்பா நழுவி விழுந்து திறந்து கொண்டிருந்தால், இவன் முன்னாடி இன்னும் அவமானமாகப் போயிருக்கும் என்று நினைத்தாள். பஸ்ஸில் எல்லோரும்தான் பார்ப்பார்கள் இவன் என்ன ஸ்பெஷல்? என்றும் தோன்றியது.

பக்கத்தில் நிமிர்ந்து பார்த்தால் அவன் இவளை விழுங்கி விடுவதுபோல் பார்த்துக் கொண்டிருந்தான். இவளால் அவனை நேருக்கு நேர், கண்ணோடு கண் பார்க்க முடியவில்லை. காரணம் தெரியவில்லை.

ஆள் நல்ல அழகாகத்தான் இருந்தான். அம்மா கொஞ்ச நாள் முன்னால் ''ஏநாடி நோமு பலமோ'' என்று பைரவியில் தியாகராஜ க்ருதி ஒன்று சொல்லிக் கொடுத்தாள். எப்போதும் தெலுங்கு க்ருதிகளுக்கு அர்த்தம் சொல்லிவிட்டுத்தான் பாட்டை ஆரம்பிப்பாள்.

அந்த கிருதியில் தியாகராஜர் ''அந்தகாடா'' என்று ராமனை அழைக்கிறார். அந்தகாடா என்றால் அழகா என்று பொருள். ஒரு ஆண் எந்த மாதிரி இருந்தால் அழகாக இருப்பானோ அப்படி இருந்தான் ராமன் என்றாள். ராமனுக்கு பெரிய கண்கள், எடுப்பான மூக்கு, சுருண்ட தலைமுடி, நல்ல உயரம் முழங்காலைத் தொடும் நீண்ட கைகள் என்றெல்லாம் விளக்கினாள். விநோதமாக இவளுக்கு இப்போது அந்த வர்ணனை மொத்தமும் ஞாபகத்திற்கு வந்தது. கிரீடாலங்காரமெல்



லாம் செய்தால் இவன் எப்படியிருப்பான்? ராமன் மாதிரி இருப்பானோ என்று சம்பந்தம் இல்லாமல் தோன்றியது. களுக்கென்று சிரித்து விட்டாள். நல்லவேளையாக வேறு யாரும் இவளை கவனிக்கவில்லை.

அவன் புருவத்தை உயர்த்தி என்ன என்பதுபோல் பார்த்தான். இவள் லேசாக ஒன்றுமில்லை என்பதுபோல் தலையசைத்தாள். அதற்குள் இவள் இறங்க வேண்டிய ஸ்டாப்பிங் வந்துவிட்டது. இறங்கி நடந்து காலேஜில் கிளாசில் போய் உட்கார்ந்தாள். பாடத்தில் மனது பதியவேயில்லை. முழங்கால், தொடையெல்லாம் அவனுடைய கால் பட்டுக் கொண்டிருந்தது வேறு தேவையில்லாமல் நினைவுக்கு வந்து அவளை இம்சை படுத்திக் கொண்டே இருந்தது. தினமும் பஸ்ஸில் எத்தனையோ பேர்களுடன் இடித்துக் கொண்டேதானே பயணிக்கிறோம்? இவனைப் பத்தி மட்டும் இவ்வளவு நினைவுக்கு வருவானேன்? என்று நினைத்துக் கொண்டாள். '*ச்சீ*, நாம் இன்னும் 17 வயதைக்கூட தாண்டவில்லை. இந்த மாதிரி மனதை அலைய விடாமல் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும்' என்று நினைத்துக் கொண்டாள்.

ஒரு மாதிரி அன்றைய பொழுது நகர்ந்தது. மறுநாள் காலை பஸ் நிலையத்திற்கு வந்ததும் தன்னிச்சையாக கண்கள் அவனைத் தேடின. அவள் மனம் அவள் வசத்தில் இருந்தால்தானே? நேற்றைக்கு முன்னாலேயே அவனை எத்தனையோ வருஷங்களாக பார்த்துக் கொண்டே இருந்திருக்கிறோம் என்று தோன்றியது. எங்கே என்றுதான் தெரியவில்லை.

அவள் இருப்புக் கொள்ளாமல் தவித்தாள். அங்கும் இங்குமாக கண்கள் அலைந்தன. சட்டென்று அவள்

முகம் மலர்ந்தது. இதோ வந்து விட்டானே! டார்க் பொடிக்கலர் பேண்ட்டும், சந்தனக் கலர் ஷர்ட்டும் அவனுக்கு எவ்வளவு அம்சமாகத்தான் பொருந்துகிறது? அவன் கலருக்கும், ஷர்ட் கலருக்கும் ஒரு ஷேட் தான் வித்தி யாசம் என்று நினைத்துக் கொண்டாள். கழுத்தில் ஒரு ட்விஸ்ட் செயின் அழகாக மின்னியது. சுருட்டை தலையி லிருந்து இரண்டு முடிகற்றைகள் முன் நெற்றியில் புரள, ரேபான் கூலிங்கிளாசும் அணிந்து கொண்டு அவன் வரும்போது நல்ல அழகுதான் நம்ம ஆள் என்று மனம் இவளைக் கேளாமலேயே நினைத்துக் கொண்டது.

'நம்ம ஆளாவது' என்ன அக்கிரமமான நினைப்பு? அவன் யாரோ, நாம் யாரோ. நம் நினைப்பு ரொம்பவே தப்பு என்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள பிரயத் தனம் செய்தாள். ஆனால் அது பிரயத்தனமாகவே நின்று விட்டது. பலிக்கவில்லை.

நான்கு நாட்கள் பஸ்ஸில் ஒன்றாகப் பயணம், புன் னகை பரிமாற்றங்கள். ஐந்தாம் நாள் இருவரும் பஸ்ஸி லிருந்து இறங்கியதும் சேர்ந்து நடக்கும் அளவு படு வேகமாக வளர்ந்து விட்டது.

''நீங்க எங்க படிக்கிறீங்க? என்ன படிக்கிறீங்க? உங்க பேர் என்ன? என்பது போன்ற வழக்கமான கேள்விகள் அவனிடமிருந்து பிறந்தது. ''நீங்க தப்பா நினைக்க வேண்ணா நான் ஒன்னு சொல்லலாமா?'' என்று கேட் டான்.

அவள் மனம் தடதடவென்று அடித்துக் கொண்டது. ''சொல்லுங்க.''

''உங்களைப் பார்த்த உடனேயே என் மனதில் தோன்றின முதல் எண்ணம் என்ன தெரியுமா? நீங்க



ரொம்பவே அழகா இருக்கீங்க. யாராவது 'சினிமாக் காரங்க கண்ணில் பட்டா கொத்திண்டு போயிடுவாங்க'' என்றான்.

அவள் தன் உள்ளத்து உவகையை முகம் காட்டிக் கொடுத்து விடுமோ என்று பயந்து கோபம் கொண்டவள் போல் அவனைப் பார்த்து முறைத்தாள். ''என்ன சொன் னீங்க?''

''ஸாரி, ஸாரி! ஆனா நீங்க தப்பா எடுத்துண்டாலும் சரி, உண்மை இதுதான். எங்க, உங்க சிநேகிதிகள் யாரும் இதை சொல்லலியா?'' என்று முகத்தைப் பரிதாபமாக வைத்துக் கொண்டு கேட்டான்.

''என் சிநேகிதிகள் இருக்கட்டும், நீங்க என்ன நினைச்சுகிட்டு இப்படியெல்லாம் பேசறீங்க?''

''ஒ. நீங்க தப்பா புரிஞ்சுகிட்டீங்க! நான் எந்த தவறான எண்ணத்திலேயும் இதைச் சொல்லலே. நான் இயற்கை யிலேயே அழகை ரசிக்கிறவன். இப்போ ஒரு மயிலை எடுத்துக்குங்க. அதை நேர்ல பாத்தாலும், படத்திலே பாத்தாலும் அதன் அழகு ஒண்ணுதானே? இப்போ அதை நான்... நான் நேர்ல பாக்கறதனாலே என்னை அறியாமே என் மனசிலே இருக்கிறது வார்த்தையா வந்துடுத்து. அவ்வளவுதான்'' என்று ஏதோ உளறினான்.

தன் முக மலர்ச்சியைக் கஷ்டப்பட்டு மறைத்துக் கொண்டு, ''ஓஹோ! அழகை ரசிக்கிறவரா? இப்படி எத்தனை பேர் கிளம்பியிருக்கீங்க?'' என்றாள்.

''என்னங்க இது? நம்ம நட்பின் மீது ஆணையா சொல் றேங்க. நான் சொன்னதெல்லாம் உண்மை, உண்மை அக்மார்க் உண்மை.''

கல்பனா தன் கண்களை அகல விரித்து அவனை ஒரு கணம் பார்த்தாள். 'நம்ம நட்பாமே, என்ன துணிச்சல் இவனுக்கு? இஸ் ஹி நாட் டேக்கிங் திங்க்ஸ் ஃபார் கிராண்டட்? ஆனால் இதெல்லாம் உண்மையாக இருக்க வேண்டுமே' என்று அவள் ஆழ்மனதிலிருந்து ஒரு பட்சி கூவிற்று.

''அது சரி, நாம இப்படி சேர்ந்து நடக்கிறதை எங்க வீட்லே யாராவது பாத்தாங்கன்னா கொலையே பண்ணிடுவாங்க'' என்றாள் புன்முறுவல் பூத்தபடி.

''ஆனா அவங்க யாரும் பார்க்க மாட்டாங்களே'' என்றான் அவன் சிரித்தபடி.

''அதெப்படி அவ்வளவு நிச்சயமா சொல்றீங்க?''

''உங்க பாட்டி வாசலுக்கு நேரே கிணற்றடியிலே ஜபம் பண்ணிகிட்டு இருக்காங்க. அப்பா ஆபீஸ் ரூமுக்குள்ள போயாச்சு. அம்மா கிச்சன்லே. உங்க தங்கை ஸ்கூலுக்குப் போயாச்சு. இன்னும் சொல்லட்டுமா? உங்க வேலைக்காரி கல்பகம் கூட டாக்டர் வீட்டுக்கு வேலைக்குப் போயாச்சு.'' என்றான்.

கல்பனா திகைத்துப் போய்விட்டாள். இத்தனை விவரங்களும் இவனுக்கு எப்படித் தெரியும்? அதை வாய்விட்டே கேட்டு விட்டாள்.

''இதோ பாருங்க. நான் ஒண்ணும் மந்திரவாதியில்லை. நானும் நீங்க இருக்கிற தெருவிலேதான் இருக்கேன்.''

''அப்படியா, ஆனாலும் இத்தனை விவரங்கள் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

''அதுவா, அது வந்து... நம்ம மனசுக்குப் பிடிச்சவங்க வீட்டின் விவரங்கள் எல்லாம் தெரிஞ்சுக்கறது அவ்வளவு பெரிய கஷ்டமா?''



ஒரு கூடை மல்லிகைப் பூவை தலையில் கொட்டியது போல் சிலிர்த்துப் போன கல்பனா, அவனைத் தன் ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே ''ஆமா, நம்ம தெருவிலே நீங்க எந்த வீடு?'' என்று கேட்டாள்.

''உங்க பிரெண்ட் ஹரிப்ரியா இருக்காங்களே, அவங்க வீட்டுக்கு நேர் எதிர் வீட்டு மாடியிலே இருக்கேன். என் பேரு ரவிச்சந்திரன். நான் ஒரு பார்மசூட்டிகல் கம்பெனியில் சூபர்வைஸராக இருக்கேன். போதுமா இந்த விவரம்?''

''அது சரி. நீங்க ஏன் தினமும் பஸ்ஸிலே வரீங்க? உங்களுக்குத்தான் ஆபீஸிலே டூ வீலர் குடுத்திருப்பாங்களே?''

''குடுத்திருக்காங்களே! அன்னிக்கு அதான் உங்க தாவணித் தலைப்பு போர்டிலே சிக்கின அன்னிக்கு என் புல்லட்டில் ஒரு மைனர் ரிப்பேர். அது அன்னிக்கு சாயந்திரமே சரியாகி விட்டது. ஆனா அன்னிக்குத்தான் பஸ்ஸில் போறது எவ்வளவு சுகம்னு தெரிஞ்சிக்கிட்டேன். அப்புறம் என்ன? தினம் பஸ் சவாரிதான். எதுக்குன்னு புரிஞ்சிருக்குமே!''

அவள் தலை அவளையறியாமலேயே ஆடிற்று. 'பெரிய ஆள்தான் எப்படி பேசுகிறான்?'

''ஓகே, மிஸ் கல்பனா, சாயந்திரம் ஹரிப்ரியா வீட்லே உங்களைப் பார்க்கிறேன்.''

ஆம், அவனிடம் அவள் தன் பெயர் 'கல்பனா' என்றுதான் சொல்லியிருந்தாள். கல்யாணி என்ற தன் ஸ்கூல் பெயரை அவன் தன் புத்தகங்களைப் பார்த்துத் தெரிந்து கொண்டு விடக் கூடாது என்பதில் ஜாக்கிரதையாக

இருந்தாள். தான் இருக்கும் அழகிற்கு கல்யாணி என்ற கர்நாடகமான பெயர் கொஞ்சமும் பொருத்தமில்லை என்பது அவளுடைய தீவிரமான எண்ணம். சிநேகிதன் 'கல்யாணி, கல்யாணி' என்று கூப்பிட்டு போரடிப்பது போதாதா?

அட, இது என்ன? ஹரிப்ரியா வீட்டில் பார்க்கிறா ளாமே! அவள் வீட்டில் நமக்கென்ன வேலை, போகக் கூடாது என்று நினைத்தாலும் இந்த பாழாய்ப் போன மனது அதை மறுத்து 'போ' என்று உத்திரவிட்டது.

''என்ன பதிலே காணோம்? ஒகே. தானே, ஒகேதான்! எனக்கு கொஞ்சம் வேலையிருக்கிறது பை. மிஸ் பியூட்டிஃபுல்!''

''பை, மிஸ்டர் ஹான்ட்சம்'' என்று முணுமுணுத்தாள்.

''என்ன சொன்னீங்க?''

''ஒண்ணுமில்லை, நாளை பார்க்கலாம்.''

''நாளையா?'' என்று சிரித்தவன் ''சரி, சரி! நான் வரேன்'' என்றபடி எதிர் ரோட்டில் நடந்து விட்டான்.

இவளுக்கு அவன் தைரியத்தைப் பார்த்து மிகவும் ஆச்சரியம். இந்த தைரியத்தை அவனுக்குக் கொடுத்ததே தான்தான் என்றும் அவளுக்குப் புரிந்தது. அதே சமயம் தன் தைரியத்தையும் நினைத்து ஆச்சரியப்பட்டாள். தனக்கு இது எப்படி வந்தது? சாதாரணமாக அவள் எந்த ஆண்களுடனும் பேசுவதில்லை. இவன் என்ன ஸ்பெஷல்? தான் தவறான வழிக்குப் போகிறோமோ என்று மனது உறுத்தாமல் இல்லை. ''ஏ, பெண்ணே! நீ போகும் வழி மிகவும் தவறானது. பாதையை மாற்றிக் கொள்'' என்று அறிவு அடித்துக் கூறியது. ஆனால்...



ஆனால் அவன் எவ்வளவு அழகாக இருக்கிறான்? தன்னை மயிலுக்கு ஒப்பிட்டானே! தன் சிநேகிதிகள் யாரும்கூட அப்படிச் சொன்னதில்லையே? ஓ, இதுதான் காதலா? ''தப்பு, தப்பு, கல்பனா, சுதாரித்துக் கொள்'' என்று அறிவு மறுபடியும் அவள் தலையில் தட்டியது. இந்த மாயச் சூழலிலிருந்து உடனடியாக தப்பித்தாக வேண்டும் என்று ஒரு பக்கம் தோன்றினாலும் இதி லிருந்து வெளிவர இஷ்டமில்லை. ஏன், முயற்சிக்கக் கூடப் பிடிக்கவில்லை. அவளுக்கு காலங்காலமாக காதலர்களுக்கு நடப்பதுபோல் இவளுக்கும் அறிவு தோற்று, ஆசை வென்றது.

அன்று மாலை தப்பு, தப்பு என்று உள்மனம் எச்சரிக்கை யிலேயே, பாட்டியிடம், ''பாட்டி, நான் என் பிரண்ட் ஹரிப்ரியா வீட்டிற்குப் போயிட்டு வரேன்'' என்று பர் மிஷன் கேட்டாள்.

''இப்போ எதுக்கு, அங்கே?'' என்று கேட்டாள் பிச் சம்மா.

''அவகிட்டேயிருந்து ஒரு புக் வேணும்.''

''ஏன், உன்கிட்டே அந்த புக் இல்லையா, என்ன?''

''இல்லை பாட்டி! அவ ஸ்கூல்லே நல்ல நோட்ஸ் எல்லாம் குடுத்திருக்காங்களாம். வாங்கிண்டு வந்துடறேன். ப்ளீஸ், பாட்டி!''

''சரி, போனேன் வந்தேன்னு வரணும். அநாவசியமா அரட்டை அடிச்சிண்டு உட்காரப் படாது, என்ன?'' என்று எச்சரித்து அனுப்பினாள் பிச்சம்மா.

போன வருடம் வரை ஹரிப்ரியாவும் இவளும் ஒரே ஸ்கூலில் படித்தவர்கள்தான். இந்த வருடம் அவள் அதே

ஸ்கூலில் தொடர்கிறான். இவள் ஸ்கூல் மாறியிருக்கிறாள். இவளுக்கு இப்போது அங்கு எதற்குப் போகிறோம். போய் அவளிடம் என்ன சொல்லப் போகிறோம் என்று ஒன்றும் புரியவில்லை. அவள் யோசித்துக் கொண்டிருக்கும்போதே அவள் கால்கள் அவளை ஹரிப்ரியா வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிட்டன.

வயசு வயசுதான். காதலிக்கத் தொடங்கி விட்டால் பொய், திருட்டுத்தனம் எல்லாம் 'நான் வந்தேன், நீ வந்தேன்' என்று வருவது சங்க காலத்திலிருந்து நடப்பதுதானே!

''வாம்மா, நல்லாயிருக்கியா, வீட்லே எல்லோரும் சௌக்கியமா?'' என்று இவளை வரவேற்ற ஹரிப்ரியாவின் அம்மா, உள்ளே திரும்பி, ''ப்ரியா, கல்யாணி வந்திருக்கா பாரு'' என்று குரல் கொடுத்தாள்.

''வா, கல்யாணி உள்ளே வா!'' என்றபடி வெளியே வந்தாள் ஹரிப்ரியா. ஓரக்கண்ணால் ரவியின் புல்லட் எதிர்வீட்டு வாசலில் இருக்கிறதா என்று நோட்டமிட்டாள் கல்பனா.

''இல்லேடி, இங்கேயே சில்லுன்னு நன்னா இருக்கு'' என்று சொன்னவள் வெளியே படியிலேயே உட்கார்ந்து விட்டாள். கூட உட்கார்ந்த ப்ரியாவை இவள் அளவெடுப்பதுபோல் பார்த்தாள் வேறென்ன? எதிர் வீட்டிலேயே இருக்கிறானே, ஒரு வேளை ரவிக்கு இவள் மீது கவர்ச்சி வருமோ என்று ஒரு சின்ன சந்தேகம் அவள் மனதில் திடீரென்று எழுந்தது. ஆனால் அது எழுந்த வேகத்திலேயே அழிந்தும் போய்விட்டது. எந்த விதத்திலும் அவள் தனக்கு சமயில்லை. எந்த விதத்திலும் அவளுடைய தோற்றம் தனக்கு நிகராக ஆகவே ஆகாது



என்று மனதில் நிச்சயப் படுத்திக் கொண்டாள். மனதில் நிம்மதி பிறந்தது.

''ஏய், உங்க ஸ்கூல்ல பிஸிக்ஸ் நோட்ஸ் ரொம்ப சுருக்கமா நல்லா குடுத்திருக்காங்களாமே! கொஞ்சம் குடேன். காபி பண்ணிண்டு தந்துடறேன்'' என்றாள்.

''ஓ, தரேனே!'' என்று சொன்ன ப்ரியா உள்ளே போனாள். இத்தனை நேரமாக, எங்கிருந்து பார்த்துக் கொண்டிருந்தானோ தன் ரூமின் வெளிவராண்டாவில் போட்டிருந்த சேரில் ஒரு புஸ்தகமும் கையுமாக வந்து உட்கார்ந்தான் ரவி.

அவள் உள்ளே போய் பார்த்து எடுத்து வரும்வரை ஆனந்தமான பார்வைப் பரிமாற்றம் கல்பனாவிற்கும் ரவிக்கும் நடந்தது.

''ஸாரிடி! உடனே கிடைக்கவில்லை'' என்றாள் ப்ரியா.

''பரவாயில்லை, அதனால் என்னடி? கொஞ்சம் தண்ணீர் குடேன், தாகமா இருக்கு'' என்றாள் கல்பனா.

உள்ளேயிருந்து குடிக்க நீர் கொண்டு வந்த ப்ரியா கல்பனாவிடம் ''உள்ளேதான் வாயேண்டி, கொஞ்ச நாழி பேசிக் கொண்டிருக்கலாம்'' என்று அழைத்தாள்.

''இல்லேடி, சீக்கிரம் போகணும். இருட்டிட்டா பாட்டி கோவிச்சுப்பா'' என்று வாயால் சொன்னவள், அரைமணி அங்கேயே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்துவிட்டுத்தான் வீட்டிற்குக் கிளம்பினாள். ஏதோ ஸ்கூலில் அவளின் பழைய சிநேகிதிகள் பற்றியெல்லாம் விசாரித்தாள்.

இப்படி ஒரு நாளில்லாமல் வாரம் ஒருமுறை ஏதாவது காரணம் சொல்லி ப்ரியா வீட்டிற்கு வந்து போக

ஆரம்பித்தாள். ஆனால் உள்ளூர பதைபதைப்புதான். நல்ல வேளையாக ப்ரியாவின் அப்பா அந்த வேளைகளில் ஆபீஸிலிருந்து வந்திருக்க மாட்டார். அம்மாவிற்கு அது சஹஸ்ரநாமம் சொல்லும் வேளை. இதையெல்லாம் கவனிக்கும் அளவு ஹரிப்ரியா அவ்வளவு சூட்டிகை கிடையாது. ஆனாலும் நான்கு, ஐந்து தடவைக்கு மேல் அங்கு போக முடியவில்லை. இனி என்ன செய்யலாம் என்று கல்பனா யோசிக்க ஆரம்பித்தாள். ஹூம்..! இந்தக் காதலே இப்படித்தான். கொசு மாதிரி, தூங்கவும் விடாது, துரத்தவும் முடியாது. என்ன செய்யலாம்?

ஒரு நாள் பஸ் ஸ்டாண்டில் இவளைப் பார்த்தபோது ரவி "எனக்கு பஸ்ஸில் போனால் வேலை நின்றுவிடுகிறது. அதுதான் புல்லட்டில் போய்விடுகிறேன். உன்னைப் பார்க்காமலும் இருக்க முடியவில்லை. ஒன்று செய்! நீ என்றாவது ஸ்கூலில் கடைசி வகுப்பைக் கட் பண்ணிவிட்டு, வெளியே வாயேன். உன்னிடம் மனம் விட்டு நிறையப் பேச வேண்டும்" என்றான்.

கல்பனாவிற்கு நினைக்கும்போது பயத்தில் வேர்த்துக் கொட்டிவிட்டது. ஆனாலும் அந்த பயத்துடன் ஒரு த்ரில்லும் தோன்றியது. மனது, "போகாதே போகாதே" என்றாலும் மயக்கம் அவளை போ, போ என்று விரட்டியது. என்ன செய்யப் போகிறாள் அவள்?



5

ரவியைச் சந்திக்க ஒரு சாக்காகத்தான் ஹரிப்ரியாவின் வீட்டிற்குப் போனாளே ஒழிய கல்பனாவிற்கு நிஜமான சிநேகிதி என்றால் அது



மீராதான். இருவரும் முதலிலிருந்து ஒன்றாகப் படிப்பவர்கள். இவள் வீட்டிற்கு மீரா வந்திருக்கிறாள். இவளும் மீரா வீட்டிற்கு நான்கைந்து தடவை போயிருக்கிறாள். அப்போதெல்லாம் சாதனாவும் இவளோடு வருவாள். இப்போதுதான் "ஏய், நீ உன் பிரண்டோடு ஏதோ அரட்டை அடிக்கிறாய். எனக்கு போரடிக்கிறது" என்று வர மாட்டேன் என்கிறாள்.

அம்மாவிடம் சனிக்கிழமை கல்யாணி வீட்டிற்குப் போய்க் கொள்கிறேன் என்று ஒப்புக் கொண்ட மீரா, தான் அவள் வீட்டிற்குப் போவதைவிட அவளைத் தன் வீட்டிற்குக் கூப்பிடுவதுதான் தேவலை என்று தீர்மானித்தாள். புதன் கிழமையே கல்பனாவிடம் சொன்னாள் மீரா.

"கல்யாணி, எனக்கு ஃபிஸிக்ஸ் நோட்ஸ் தனியே எழுத ரொம்பவும் போரடிக்கிறது. நீ வீக்கெண்டில் என் வீட்டிற்கு வர்றியா, சேர்ந்து எழுதலாம்" என்றாள்.

"ஆமாம் மீரா, எனக்கும் தனியே எழுத போர்தான் அடிக்கிறது. அம்மா நான் உங்க வீட்டுக்கு வரேன்னு சொன்னா ஒத்துப்பா. ஆனா பாட்டி உடனே ஏதாவது சொல்லுவா. நீ பேசாமே எங்க வீட்டுக்கு வந்துடேன்" என்றாள் கல்பனா.

"எங்க வீட்ல பர்மிஷன் வாங்கறது பெரிய காரியமில்லை. ஆனா, நீ நிஜமாச் சொல்லு. என்னை நீ முழு மனசாவா கூப்பிடறே?" என்று கேட்டாள் மீரா.

நிஜம்தான். பாட்டிக்கு சிநேகிதிகள் பேசிக் கொண்டிருந்தாலே பிடிக்காது. அதுவும் வீட்டிற்குப் போய் பேசுவதெல்லாம் பிடிக்கவே பிடிக்காது. அதான்

ஸ்கூல்ல வேறு பேசிண்டாறதோல்லியோ, அப்புறம் இங்கென்ன பொண்ணு கொடுத்து பொண்ணு வாங்கற பேச்சு?'' என்பாள். அதுவும் மீரா இரண்டு, மூன்றுதரம் கல்பனா வீட்டிற்குப் போயிருக்கிறாள். அப்போதெல் லாம் அவள் வந்து போன உடனே பிச்சம்மா, ''என்ன வேண்டிக்கிடக்கு. பாப் தலையும், குட்டை பாவா டையும்' என்று சிடுசிடுத்தாள். மீராவைத் திரும்பக் கூட்டிப் போக வந்த அனுராதா, பார்த்து இருவரையும் பார்த்துவிட்டு ''அம்மாக்காரியே குதிரைவால் கொண் டையும், லிப்ஸ்டிக்குமாத்தான் இருக்கா. அந்த ஆட்டுக் கிடா வெட்டறவன் மாதிரி மீசை வெச்சுண்டு இருந்தது தான் அவ அப்பாவா? அழகுதான், போ, உன் சிநேகிதம்!'' என்றாள்.

யோசித்த கல்பனா ''சரி மீரா! நானே வரேன் சனிக் கிழமை உங்க வீட்டுக்கு'' என்றாள்.

''சரி காலம்பர அம்மா கபாலி கோவிலுக்குப் போவா அப்ப நானும் வரேன். வந்து உன்னைப் பிக்கப் பண் ணிக்கறேன். சாயந்திரம் அப்பா, அம்மா ஏதாவது சபாவுக்கு மைலாப்பூர் போவா. அவா உன்னைத் திரும்ப உன் வீட்லே விட்டுடுவா'' என்றாள்.

வியாழக்கிழமை அன்று அம்மாவிடம் ''நான் மீரா வீட்டிற்கு சனிக்கிழமை போய் ரிகார்ட் வேலையெல் லாம் சேர்ந்து பண்ணிட்டு வந்துடறேம்மா'' என்றாள் பாட்டி காதுபட.

பிச்சம்மா வித்யா தன் பெண்ணுக்கு என்ன பதில் சொல்கிறாள் என்று காதைத் தீட்டிக் கொண்டு கேட் டாள். எத்தனை வருடமானால் என்ன? மருமகள் என்றால் மாமியாருக்கு அவ நம்பிக்கைதான்.



''பாட்டியை ஒரு வார்த்தை கேட்டுக்கோம்மா. பாட்டி சரின்னு சொன்னா போயிட்டு வா'' என்று வித்யா சொல் வது கேட்டது. இந்த பதிலால் திருப்தியாகிப் போன பாட்டி கல்பனா வந்து தன்னைக் கேட்டதும், ''யாரு, அந்த பாப் தலைப்பெண் வீட்டுக்கா?'' என்று கேட் டாள். ''ஆமாம் பாட்டி, பாடமெல்லாம் ரொம்ப கஷ்டமா இருக்கு. சேர்ந்து படிச்சா சுலபம் பாட்டி'' என்றாள் கல்பனா.

''சரி, சரி. அவா வீட்லே அண்ணன், சித்தப்பன்னு யாராவது இருக்காளா?'' என்று கேட்டாள் பாட்டி.

''ஐயோ பாட்டி! ஒருத்தரும் கிடையாது. அவம்மா, அவப்பா, மீரா அவ பாட்டி மட்டும்தான். அவா வீட்லே. அப்பாவும் ஆபீஸ் போயிடுவா'' என்றாள் கல்பனா.

''சரி, சரி, போயிட்டு வா! ஆனா அங்கே போயி பாடத்தை மட்டும் கத்துண்டு வா. அவா வீட்டு வழக் கங்களையெல்லாம் கத்துண்டு வந்து நிக்காதே.''

''ஏம்மா, போன தடவை அவளைக் கூப்பிட வந்த அவ அம்மா உன் காலைத்தொட்டு நமஸ்காரம் பண்ணாளேம்மா, மறந்துட்டியா?'' என்றார் அங்கு வந்த ராமமூர்த்தி.

''அதைத்தான் சொல்றேன். காலைத் தொடுவானேன்? நன்னா நமஸ்காரம் பண்றதுதானே'' என்றாள் பாட்டி.

இது எல்லாம் கல்பனாவின் நினைவுக்கு வந்தது. சனிக்கிழமை காலையிலேயே கிளம்பி விட்டாள் கல் பனா. ''ஏதாவது சாப்பிட்டுவிட்டுக் கிளம்பு'' என்று வித்யா சொல்ல, ''இல்லேம்மா, என்னைக் காலம்பர டிபனுக்கே வரச் சொல்லியிருக்காம்மா மீரா'' என்று

சொல்லி, கிளம்பத் தயாரானாள். கல்பனாவைக் கூப்பிட உள்ளே வந்த மீரா, பாட்டிக்கு, அம்மாவுக்கு எல்லாம் நமஸ்காரம் சொன்னாள். இருவரும் கிளம்பிப் போக விட்டு'' பைஜாமா என்ன வேண்டிகெடக்கு, நன்னாவே யில்லை'' என்று தலையில் அடித்துக் கொண்டாள் பாட்டி.

''ஏன் பாட்டி, ஸல்வார் கமீஸ் உடம்பு மூடி நன்னாத் தானே இருக்கு'' என்று சொன்ன சாதனாவை ஒருமுறை முறைத்த பிச்சம்மா. ''ஏன், நம்ம பாவாடை தாவணியை உடம்பு மூடி போட்டுண்டா ஆகாதோ'' என்றாள்.

கல்பனா இரண்டு நாளாகவே பார்க்கிறாள் மீரா ரொம்பவே டல்லாக இருந்தாள். சாதாரணமாக அவள் அப்படி இருக்கவே மாட்டாள். 'சரி, இப்போது ஒன்றும் கேட்க வேண்டாம் அவள் அம்மா, டிரைவர் எல்லாரும் இருக்கிறார்கள். வீட்டிற்குப் போனதும் கேட்டுக் கொள்ள லாம்' என்றிருந்தாள்.

வீடு போய் சேர்ந்ததும் மீராவின் பாட்டி புஷ்பா சப் பாத்தி பிரஸ்ஸில் பூரி இட்டுக் கொடுக்க, அதை அவர்கள் வீட்டு வேலைக்காரி பேபி பொரித்தெடுத்தாள். மீராவின் அப்பா, அம்மாவோடு மீராவும், கல்பனாவும் ஆலு சப்ஜி யுடன் பூரி சாப்பிட்டார்கள். புஷ்பா உபசாரம் பண்ணி கல்பனாவிற்கு நிறைய பூரி போட்டாள். ''போதும், பாட்டி! அப்புறம் படிக்க முடியாது, தூக்கம்தான் வரும்'' என்று கல்பனா சொல்ல சிரித்துக் கொண்டே புஷ்பாவும் சாப்பிட உட்கார்ந்தாள்.

''வா, கல்யாணி, தோட்டத்தை ஒரு ரவுண்டு சுற்றி விட்டு வரலாம்'' என்று மீரா அவளை தோட்டத்துப்



பக்கம் அழைத்துச் சென்றாள். அங்கிருந்த ஒரு கல் மேடையில் இருவரும் உட்கார்ந்தார்கள்.

''மீரா, நீ இரண்டு நாளா சரியாகவே இல்லையே! என்ன ஆச்சு?'' என்று கல்பனா கேட்டாள்.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை.''

''இல்லை, இல்லை என்னிடம் கூட சொல்ல முடி யாத அளவுக்கு அப்படி என்ன குழப்பம் உன் மனதில்'' என்று திரும்பக் கேட்டாள் கல்பனா.

''ஒண்ணுமில்லை, கல்யாணி! உன்னோட புதன் கிழமை சாயந்திரம் பேசிவிட்டு வீட்டுக்குக் கிளம்பி னேன், இல்லையா? பஸ் ஸ்டாப்பை நான் நெருங்கும் போதே என்னோட பஸ் வந்துடுத்து. அவசரமா ஏறும் போது என் துப்பட்டா கீழே தொங்கியிருக்கு. வேற யாரோ அதை மிதிக்க, என் பின்னாலே நின்னுண்டு இருந்த ஒரு ஆள் அவன் காலுக்கடியிலிருந்து அதை எடுத்து என்னிடம் நீட்டினான். தேங்க்ஸ் சொன்னேன். என் பாஸை எடுக்கும்போது அந்த பரபரப்பில் அதுவும் கீழே விழுந்துடுத்து. அவன் திரும்ப அதையும் எடுத்துக் கொடுத்தான்.

நான் மறுபடியும் தேங்க்ஸ் சொல்லிட்டு உள்ளே நகர்ந்து விட்டேன். சற்றைக்கெல்லாம் என்னிடம் வந்து இடிச்சிண்டு நிக்கறான். நான் உள்ளே நகர்ந்து கொண் டேன். திரும்ப என்னைப் பார்த்து சிரிச்சான். ஒரு காலி ஸீட் கிடைக்கவும் நான் உட்கார்ந்து விட்டேன். என் ஸ்டாப்பிங் வந்ததும் நான் இறங்க, அவனும் பின்னா டியே இறங்கினான். இறங்கினவன் நேரே போயிருந்தா அது வேறு விஷயம். ஆனா ''நீ ரொம்ப அழகா இருக்கே,

பச்சைக் கிளி மாதிரி'' என்றான். ஓங்கி ஒரு அறை விடணும் போலத் துடித்த என்னை நானே கட்டுப்படுத்திக் கிட்டு. ''போடா, பொறுக்கி நாயே! செருப்படி வேணுமா''ன்னு மட்டும் கேட்டுவிட்டு வந்துட்டேன். வியாழன், வெள்ளி இரண்டு நாளும் அந்த பஸ்ஸில் போகவும் இல்லை, வரவும் இல்லை. அப்போதிலிருந்து கொஞ்சம் அப்செட் டாயிட்டேன்'' என்றாள் மீரா.

அதற்குள் பேபி இருவருக்கும் ஏலக்காய் போட்ட டீயை கொண்டு வந்து கொடுத்தாள்.

அவள் போகும் வரை காத்திருந்த கல்பனா ''பயமா இருக்கா, மீரா?'' என்று கேட்டாள்.

''பயமா, எனக்கா? நோ, நெவர்! அதில்லை என் கோபம், ஆத்திரம் எல்லாம் இப்படித்தான் பார்க்கணுமா பெண்களை? இப்படி மட்டும்தான் பார்க்கணுமா? அதுதான் கோபமே ஒழிய வேறே இல்லை. அவன் இனிமே என் வழிக்கு வரமாட்டான். அப்படியே வந்தாலும் என்னால் சமாளிக்க முடியும். மீறிப் போனால் அப்பா விடம் ஒரு வார்த்தை சொன்னால் போதும். எனக்குத் திரும்பத் திரும்ப இந்த மாதிரி ஆட்களையெல்லாம் கட்டி வெச்சு அடிக்கணும்னு வெறி வருது'' என்றாள்.

அந்த நேரம் பேபி அங்கு வந்து ''மீராம்மா, டெல்லி யிலிருந்து ப்ரீதாம்மா பேசறாங்க. அம்மா உங்களைக் கூப்பிடறாங்க'' என்றாள்.

''இதோ வரேன், கல்யாணி'' என்று அவள் உள்ளே ஓட தன்னைப் பற்றி சிந்திக்க கல்பனாவிற்கு சற்று அவகாசம் கிடைத்தது. கிட்டத்தட்ட தனக்கு நேர்ந்த அதே சூழ்நிலையும், நிகழ்ச்சியும் தானே இவளுக்கும்



நடந்திருக்கிறது? 'இவள் இத்தனை நிலையான புத்தியுடன், சரியாக யோசிக்கும்போது, எனக்கு மட்டும் ஏன் இப்படி புத்தி கெட்டுப் போச்சு? நல்ல குடும்பத்தில் பிறந்துவிட்டு நான் ஏன் தடுமாறுகிறேன்? *சீச்சீ*! இனிமே அவன் இருக்கும் பக்கம் கூடத் திரும்பிப் பார்க்கக் கூடாது. ஆமாம், நாளை அவன் என் பக்கம் வந்தால், கண்டிப்பாக பார்க்கக் கூட மாட்டேன்' என்று மனதிற்குள் தீர்மானம் செய்து கொண்டாள்.

போனில் பேசிவிட்டு வந்த மீரா, ''ஸாரி கல்யாணி! என் பெரியம்மா பெண் ப்ரீதா பேசினாள் அதான் பேசிவிட்டு வந்தேன்'' என்றாள்.

''அதனால் என்ன பரவாயில்லை'' என்றாள் கல்பனா.

''ஆமாம், நீ ஏன் ஒரு மாதிரி டென்ஷனா இருக்கே?'' என்று கேட்டாள் மீரா.

''ஒண்ணுமில்லை, உனக்கு பஸ்ஸில் நடந்ததைக் கேட்டதும் எனக்கே ஒரு மாதிரி ஆய்டுச்சு, மீரா!''

''அதுக்குத்தான் நான் சொல்ல மாட்டேன்னு சொன் னேன். நானாவது தைரியசாலி. நீ, பாவம், சாது. இந்த விஷயத்தை இதோடு விடு! நானே இதை மறக்கணும்னு நினைக்கிறேன். உங்கிட்டே சொன்னதே தப்பு. சரி வா! நாம போய் ரிக்கார்ட் எழுதற வழியைப் பார்ப்போம். உன் மனசில இதைப் போட்டுக் குழப்பிக்காதே'' என்றபடி எழுந்தாள் மீரா.

கெட்ட வழியில் போகும் மனதை நல்ல வழியில் திருப்புவது சுலபமாக இருந்தால் எத்தனை பேர் திருந்தி யிருப்பார்கள் இந்த உலகத்தில்!




சாயந்திரம் காலேஜிலிருந்து திரும்பி வந்து டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள் கல்பனா. போன் மணி அடிக்க, பக்கத்தில் யாரும் இல்லாததால் இவள் போய் எடுத்தாள்.

''கல்பனாக்குட்டி, நான் அத்தை பேசறேன் எப்படியிருக்கேம்மா?''

''நல்லா இருக்கேன் அத்தை. நீங்க எப்படி இருக்கீங்க? அங்கே எல்லோரும் சௌக்கியமா?''

''ஏ பொண்ணே! ஒப்பனாத்தான் கேளேன், ப்ரகாஷ் எப்படி இருக்கான்னு'' என்றாள் ரேணுகா. ''நீ எப்போ மலேசியா மருமகள் ஆகி இங்கே வரப் போறே?''

இவளுக்கு கொஞ்சம் கூட அந்தப் பேச்சு ரசிக்கவேயில்லை. ''இதோ பாட்டி வந்துட்டா, அத்தை. பேசுங்கோ'' என்று பாட்டியிடம் ரிசீவரைக் கொடுத்துவிட்டாள்.

நான்கு மாதம் முன்னால் அத்தை வந்திருந்தபோது நடந்தது நினைவுக்கு வந்தது. பெரியவர்கள் எல்லோரும் ஏதோ கோவிலுக்குப் போயிருந்தார்கள். ப்ரகாஷ் வேறு எங்கோ போயிருந்தான். கல்பனா, சாதனா இரண்டு பேருக்கும் மறுநாள் ஏதோ டெஸ்ட் இருந்ததால் அதற்குப் படித்துக் கொண்டிருந்தார்கள்.

மற்றவர்கள் வருவதற்கு முன் ப்ரகாஷ் வீட்டிற்கு வந்துவிட்டான். ''எனக்கு ஒரு கப் காபி கொடுக்க முடியுமா?'' என்று கேட்டான். சாதாரணமாக சாதனா மகா சோம்பேறி. ஆனால் இன்று ப்ரகாஷ் கேட்டதும் நறுக்கென்று எழுந்து காபி போட உள்ளே போனாள். பின்னாலேயே ப்ரகாஷ் போனான். ஏதோ சாதனாவிடம் தணிந்த குரலில் பேசிக் கொண்டிருந்தான். காபி போடும் நேரமாக இல்லாமல், சமைக்கிற நேரமே ஆன பின்புதான் இருவரும் வெளியே வந்தார்கள்.



காபியை சாப்பிட்டுவிட்டு அவன் மறுபடியும் வெளியே போய்விட்டான். ''ஏய், சாதனா! எதற்கு ப்ரகாஷுடன் அத்தனை நேரம். தனியே பேசிண்டிருந்தே? பாட்டி பாத்தா திட்டுவா. என்னதான் அத்தான் என்றாலும் இதெல்லாம் பாட்டிக்குப் பிடிக்காது'' என்றாள்.

''ஏன் பொறாமையா இருக்கா, உனக்கு?'' என்று சிரித்தபடியே கேட்டாள் சாதனா.

''*சீச்சீ* லூசு! எனக்கென்னடி பொறாமை? அநாவசியமா வம்பு எதுக்கு வீட்டிலேன்னு சொன்னேன். அவ்வளவுதான்'' என்றாள் கல்பனா.

''அத்தான் என்ன சொன்னார் தெரியுமா?'' என்று கேட்டாள் சாதனா. 'அவன் உங்க இரண்டு பேரையும்விட பெரியவன். அதனாலே அவர், இவர், வாங்கோ, போங்கோ'ன்னு மரியாதையாகத்தான் பேசணும்னு என்று பாட்டி முதலிலேயே பழக்கியிருந்தாள்.

''என்னவாம்?'' என்று அசிரத்தையாகக் கேட்டாள் கல்பனா.

''அத்தை தினம் ஒருதரம் உனக்கும் அவருக்கும் கல்யாணம் பண்ணுவதைப் பத்தி பேசறாளாம். ஆனால் அவருக்கானால் என்னைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு சின்ன வயசிலேர்ந்து தீவிரமான ஆசையாம்.''

''சொல்ல வேண்டியதுதானே, அத்தையிடம்!'' என்றாள் கல்பனா.

''நேரம் நெருங்கி வரும்போது சொல்லிக் கொள்ள லாம்னு இருக்காராம். தவிர என் அபிப்ராயத்தையும் தெரிஞ்சிண்டு சொல்லலாம்னு இருக்காராம்.''

''அடி சக்கை! உன் அபிப்ராயம் என்னவோ?''

''நான் எனக்கு இதுவிஷயமா அபிப்ராயம் சொல்ற அளவுக்கு ஒண்ணும் தோணலைனு தீர்மானமா சொல் லிட்டேன்.''

''கரெக்டா சொன்னே! சர்வ நிச்சயமா இதெல்லாம் பேசற அளவுக்கு உனக்கு வயசாகல்லே ஏன், எனக்கே வயசாகல்லே. முன்னே நாள் மாதிரி நாம என்ன 10வது வரை படிச்சிட்டு, படிப்பை நிறுத்திட்டு, கல்யாணம், கல்யாணம்னு ஜபம் பண்ணிண்டு இருக்கோமா, என்ன? நன்னா படிச்சு, டிகிரி வாங்கிட்டு, வேலை ஏதாவது பாத்துண்டு கொஞ்ச நாளாவது வீட்டுக்கு உபயோகமா இருக்கணும்'' என்றாள் கல்பனா.

''சரி, கலா! நான் ஒண்ணு கேக்கறேன் மறைக்காமே பதில் சொல்லணும்'' என்றாள் சாதனா.

''என்ன, ப்ரகாஷுக்கு உன்மேலே தான் ஆசைன்னு சொன்னதிலே எனக்கு வருத்தமான்னுதான் கேக்கப் போறே? சர்வ நிச்சயமா இல்லை. எனக்கும் அவருக்கும் மூணு வயசு கூட வித்தியாசம் இல்லை. உனக்கும் அவ ருக்கும்தான் பொருத்தம். எனக்கு அதில் சந்தோஷம் தான்'' என்றாள் கல்பனா.

அதற்குள் பெரியவர்கள் எல்லோரும் வந்துவிடவே, அதோடு அந்தப் பேச்சு நின்றது. ப்ரகாஷ் சாத்னாவை விரும்புவது நிஜமாகவே கல்பனாவிற்கு நிம்மதியாகவே இருந்தது.






அன்று விடியற்காலை. இன்னும் பொழுதுகூட சரியாக விடியவில்லை. போன் அலறியது. வித்யா அப்போது தான் எழுந்திருந்தவள் அவசரமாக போனை எடுத்தாள்.

''மேடம்! என் பெயர் பேபி'' என்று எதிர்முனையில் குரல் கேட்டதுமே ''ராங் நம்பர்'' என்று போனை வைக்கப் போனாள். ''மேடம், மேடம் போனை வெச்சுடாதீங்க! ரொம்ப முக்கியமான விஷயம்'' என்றாள்.

''நீ யாரும்மா? என்ன முக்கியமான விஷயம்?'' என்று கேட்டாள் வித்யா.

''நான் உங்க பொண்ணு கல்யாணியோட சிநேகிதி மீரா இருக்குல்லே அவங்க வீட்லே வேலை செய்ய றேம்மா!''

''என்ன ஆச்சு, இன்னும் விடியக்கூட இல்லை அதுக்குள்ள என்ன போன்? வெச்சுடறேன்'' என்றாள் வித்யா.

''அம்மா போனை வெச்சுடாதீங்க! விடியுமுன்னே போன் பண்ணறேம்மா. ரொம்ப வருத்தமான விஷயம்மா. இவங்க வீட்லே இன்னிக்கு விடியாமயே போயிடுச் சும்மா.''

''ஏய், என்ன சொல்றே நீ? புரியும்படியா சொல்லு.''

''ஆமாம்மா, மீரா பொண்ணோட அம்மா, அனு ராதாம்மா போயிட்டாங்கம்மா.''

''போயிட்டாங்களா? என்ன சொல்றே? எப்போ?'' என்று பதறினாள் வித்யா.

''இன்னிக்கு காலைலே 3 மணிக்கும்மா. அம்மா, உங்களாலே ஒரு உபகாரம் ஆகணும்மா! சார் கேட்டுக்கச் சொன்னார். அவர் ராத்திரி அம்மா உடம்பு சரியில்லேன்னதும் அவசரம் அவசரமா ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப் போயிருக்காரம்மா. ஒண்ணும் பண்ண முடியல்லே. அவரும் அப்படியே மயக்கம் போட்டு விழுந்துட்டாராம். அவருக்கு வைத்தியம் பண்ணி நினைவு வந்ததும் போன் பண்ணாரு. சமாச்சாரம் கேட்டதும் அனும்மாவோட அம்மா, மீரா இரண்டு பேரும் அப்படியே உறைஞ்சுப்போய் உட்கார்ந்திருக்காங்கம்மா. மீராவுக்கு நெருக்கம் உங்க பொண்ணு மட்டும்தான். அதுதான் கல்யாணிப் பாப்பா அப்பாகிட்டே பாப்பாவையும் அவங்க அம்மாவையும் கூட்டிகிட்டு உடனே இங்கே வரச் சொல்லி தான் கேட்டுகிட்டதாகச் சொல்லுன்னு ஐயா சொன்னாரும்மா. தயவு பண்ணி வாங்கம்மா, புண்ணியமாப் போவும். அனும்மாவை ஆஸ்பத்திரியிலிருந்து எடுத்துட்டு வர கொஞ்சம் நேரம் பிடிக்குமாம்மா. நீங்க உடனே பாப்பாவைக் கூட்டிகிட்டு வாங்கம்மா'' என்று சொல்லி விட்டு போனை வைத்து விட்டாள்.

போன் அடித்ததுமே எல்லோரும் எழுந்து வந்து வித்யாவை சூழ்ந்து கொண்டு விட்டார்கள். சாதனாதான் இன்னும் எழுந்து வரவில்லை.

எல்லோரும் பதறிப்போய் என்ன ஆச்சு என்று விசாரிக்க, வித்யா, பேபி சொன்ன மொத்த விவரமும் சொன்னாள். சொல்லும்போதே இவள் கண் கலங்க, கல்பனா அழுதுவிட்டாள்.

''முந்தாநாள் தானே அவங்க இரண்டு பேரையும் கோவில்ல பாத்தோம்'' என்றார் மூர்த்தி.



''ராத்திரி வரை ஒண்ணுமில்லை போலிருக்கே. அங்கே போனாத்தான் விவரம் தெரியும்'' என்றாள் வித்யா.

விவரங்களைத் தெரிந்து கொண்ட பிச்சம்மா, ''அதென்ன அவா நமக்கு உறவா, குலமா? நமக்கெதுக்குப் போன் பண்ணி உடனே வான்னு சொல்றது? அதுவும் ஒரு அறியாப் பொண்ணையும் வரச் சொல்றது? கொஞ்சம்கூட சரியில்லை. எனக்கு சுத்தமா பிடிக்கல்லே'' என்றாள்.

''என்னம்மா நீ. ரொம்ப தீராத நிலைமையானதுனாலே அந்தக் கிழவிக்கும் பொண்ணுக்கும் துணை வேணும்னுதானே கூப்பிடறா. ஒரு உபகாரம்தானே? ஒண்ணும் தப்பில்லை. கிளம்பு வித்யா'' என்றார் மூர்த்தி.

''நீங்க வேணா போங்கோ. கல்பனாவைக் கூட்டிண்டு போக வேண்டாம்'' என்றாள் பிச்சம்மா.

''அவளைத்தான் முக்கியமா கூட்டிண்டு போகணும். அவா இரண்டு பேரும் ரொம்ப திக் பிரண்ட்ஸ், அதுவுமில்லாமே பாடிதான் இன்னும் வரல்லியாமே? ஏம்மா கல்பனா, நீ வரியாம்மா, இல்லே பயந்துப்பேன்னா வேண்டாம்'' என்றார் மூர்த்தி.

''எனக்கு வந்தே ஆகணும்ப்பா! போன வாரம் கூட போயி அந்த ஆன்ட்டி கையாலே மூணு வேளை சாப்பிட்டுட்டு வந்திருக்கேன். எத்தனை ஆசையா இருப்பா, தெரியுமா?'' என்றாள் கல்பனா.

''சினிமாவிலேதான் இதெல்லாம் நிறைய காண்பிக்கிறானே, பார்க்கத்தானே செய்கிறோம்? பரவாயில்லேம்மா, கவலைப் படாதீங்கோ'' என்றாள் வித்யா.

''புருஷன், பொண்டாட்டி இரண்டு பேருமே இத்தனை தீவிரமா இருக்கறச்சே நான் சொல்லி எடுபடப் போறதா, என்ன?'' என்று சொல்லியபடி பாட்டி உள்ளே போய்விட்டாள்.

இவர்கள் பல் தேய்த்து புறப்படுமுன் கொஞ்சம் பாலைக் காய்ச்சி போர்ன்விட்டா போட்டுக் கொடுத்தாள். சாப்பிட்டுவிட்டு அவசரமாகக் கிளம்பினார்கள். ஏற்கனவே இரண்டு மூன்று தரம் அவர்கள் வீட்டிற்குப் போயிருந்ததால் வீடு தெரிந்திருந்தது.

''நல்ல மனுஷி! பாவம்'' என்றாள் வித்யா.

''பாவம், மீராவைச் சொல்லு'' என்றார் ராமமூர்த்தி. ''பார்த்தாவும் பெரிய ஆர்மி ஆபீஸராக இருப்பதற்கு, கொஞ்சம் கூட கர்வம் கிடையாது. எங்கே பார்த்தாலும் அன்பாகப் பேசுவார். எவ்வளவு பெரிய இழப்பு அவருக்கு!''

மீராவின் வீட்டிற்குப் போய் கதவைத் தொட்டதும் திறந்து கொண்டது. தயங்கித் தயங்கி மூவரும் உள்ளே நுழைந்தார்கள். வெறித்த பார்வையுடன் சோபாவில் புஷ்பா, கீழே அதே வெறித்த பார்வையுடன் மீரா. சுவற்றில் சாய்ந்து கொண்டு பேபி.

மீரா பக்கத்தில் போய் உட்கார்ந்த கல்பனா, ''என்ன, மீரா! என்ன ஆச்சு?'' என்று அவளைத் தொட்டுக் கேட்டதும் திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாளே தவிர வேறு ஒரு சலனத்தையும் காணோம். புஷ்பா மட்டும் வித்யா அவள் பக்கத்தில் போய் உட்கார்ந்ததும், அவளைக் கட்டிக் கொண்டு பெரிதாக அழ ஆரம்பித்தாள்.

''மீரா, மீரா!'' என்று உலுக்கினாள் கல்பனா. அவளுடைய வெறித்த பார்வையிலிருந்து மாற்றமே இல்லை. என்ன



தோன்றியதோ என்னவோ, திடீரென்று கல்பனா மீராவின் கன்னத்தில் பளாரென்று அறைந்தாள். அந்த அறையின் வேகத்தில் முழித்துக் கொண்ட மீரா தன் பக்கத்தில் கல்பனா இருப்பதைப் பார்த்ததும் அவளை அப்படியே கட்டிக் கொண்டு ஹோவென்று கதற ஆரம்பித்தாள். ''கல்யாணி, எங்க அம்மா போயிட்டாங்க, கல்யாணி, எனக்கு அம்மா இல்லையாம்'' என்று அழுதவள், ''நோ, நோ! நான் இதை ஒத்துக் கொள்ளவே மாட்டேன். கல்யாணி, நான் என்ன தப்பு பண்ணினேன், இப்படி எங்க அம்மா என்னை திடீரென்று விட்டுப் போக'' என்றாள். இன்னும் என்னென்னவோ சொல்லி அழுதாள். வித்யா அவள் பக்கத்தில் வந்து அமர்ந்ததும் ''ஆன்ட்டி, இப்போ நான் என்ன பண்ணுவேன்'' என்று அவள் மடியில் விழுந்து அழுதாள்.

கல்பனாவிற்கு சகிக்கவில்லை. அவள் அப்பாவிடம் போய் உட்கார்ந்து கொண்டாள். ''அப்பா, நான் ஏன் மீராவை அடிச்சேன்னு எனக்குத் தெரியலேப்பா. தப்பு பண்ணிட்டேனா, அப்பா?'' என்று கேட்டாள்.

''தப்பில்லேம்மா. அழலேன்னா அப்படியே பிரமை பிடித்தாற்போல் மூளை நின்றுவிட சான்ஸ் இருக்கும்மா. நீ பண்ணினதுதான் கரெக்ட். இப்போ பார். மீரா தன் நினைவுக்கு வந்துட்டா. அழட்டும் பாவம்'' என்றார் மூர்த்தி. கல்பனா மறுபடியும் போய் மீரா பக்கத்தில் போய் அவள் கையை எடுத்து தன் கைக்குள் வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள். 15 நிமிடம் போல் ஆனதும் பேபியிடம் போய் விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.

அனுராதா தினம்போலத்தான் ராத்திரி சாப்பிட்டு விட்டு கொஞ்ச நேரம் நடந்துவிட்டு வந்து 10 மணி

சுமாருக்கு படுத்துக் கொண்டாளாம். 2 மணி சுமாருக்கு பேபியை பின் பக்க வராண்டாவில் அவள் ரூமிற்கு வெளியே இருக்கிற லைட்டைப் போட்டு கூப்பிட்டிருக்கிறார், பார்த்தா.

''பேபி, அம்மாவிற்கு உடம்பு சரியில்லை. நெஞ்சு வலிக்கிறதாம். நான் டாக்டரிடம் கூட்டிப் போறேன். வீட்டைப் பாத்துக்கோ'' என்று சொல்லிவிட்டுப் போனாராம்.

''அனும்மாவும் வராங்களா'' என்று கேட்டதும்தான் ''அனுவிற்குத்தான் உடம்பு சரியில்லை. பெரியம்மாவையும், மீராவையும் எழுப்பல்லே. வெறும் நெஞ்செரிச்சல் மாதிரிதான் தெரியுது. நீ வந்து கதவைத்தாள் போட்டுக்கோ'' என்றவர், ''ஐயோ, காரை என் பிரண்ட்கிட்டே குடுத்திருக்கேனே. சரி, பக்கத்து வீட்டு கிருஷ்ணன் நாயர்கிட்டே அவர் காரை கேட்டு வாங்கிக்கறேன்'' என்றாராம்.

காரைக் கொடுத்து உதவிய நாயர், ''பார்த்தா சார், நீங்களும் மேடமும் பின்னாடி உட்கார்ந்துக்கங்க. நான் டிரைவ் செய்கிறேன்'' என்று கிளம்பிப் போனார்களாம். அங்கு போய் சேரும்போதே பல்ஸ் இறங்கி, தலை தொங்கிப் போய்விட்டதாம். ஆஸ்பத்திரியில் நேரடியாக நெஞ்சில் ஊசி போட்டு, ஆக்ஸிஜன் வைத்து, கரண்ட் வைத்து என்று எல்லா முயற்சிகளும் பண்ணியிருக்கிறார்கள். ஒன்றும் பயனில்லை. மாஸிவ் ஹார்ட் அட்டாக் என்று அறிவித்து விட்டார்கள். கேட்டதும் பார்த்தா அப்படியே மயங்கி சரிந்து விட்டாராம். எத்தனை பெரிய ஆர்மி ஆபீஸராக இருந்தால்தான் என்ன? தனக்கென்று



இத்தனை பெரும் துக்கம் வரும்போது தாங்குவது கஷ்டம்தானே.

இப்போது அவரால்தான் திரும்பி வர தாமதமாம். போகும்போது அனுவாகப் போனவள் இப்போது இல்லை. போகும்போது பக்கத்து வீட்டுக் காரில் போனவர்கள் இப்போது ஆம்புலன்ஸுக்காகக் காத்திருந்தார்கள். இப்போது கொஞ்ச நேரமாகத் தேவலையாம் பார்த்தாவிற்கு. முதலில் அவர் கல்யாணி, அவள் அப்பா, அம்மாவை வரவழைத்து துணைக்கு வைத்துக் கொள் என்றாராம்.

எல்லாம் போனில் பக்கத்து வீட்டு நாயர் சொன்ன விவரங்கள். அவர் மனைவியும் தூக்க மாத்திரை போட்டுக் கொண்டு தூங்குபவளாம். அதனால் அவளை எழுப்பாமல் கதவை வெளியே தாழிட்டுக் கொண்டு போனாராம். இனி அவர் வந்து கதவைத் திறந்தால் தான் அவளும் வெளியே வரமுடியுமாம்.

அடுத்து பேபி வித்யாவிடம் ''அம்மா, நான் என் ரூமுக்குப் போயிட்டு வந்துடறேம்மா. நீங்க இவங்களை பல் தேய்ச்சி, முகம் கழுவிக்கச் சொல்லுங்க. நான் டீ போட்டுக் கொடுக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு உள்ளே போனவள் ஐந்து நிமிடத்தில் திரும்பி வந்தாள். ''பேபி, முதல்ல இவங்க இரண்டு பேருக்கும் டீ போட்டுக் கொடு. அப்புறம் பிளாஸ்க் இருக்கா, பேபி?'' என்று வித்யா கேட்க, ''இரண்டு இருக்கும்மா'' என்று அவள் பதிலளித்தாள்.

''இரண்டிலும் ஃபுல்லா டீ போட்டு வெச்சுடும்மா. ஆஸ்பத்திரியிலிருந்து அவங்க வந்துட்டா அப்புறம் போடக் கூடாதும்மா'' என்றாள்.

அடுத்த அரை மணியில் நாயர் போன் செய்து ''நாங்கள் வந்து கொண்டிருக்கிறோம்'' என்று செய்தி சொன்னார்.

படபடக்கும் இதயத்தோடு இவர்கள் காத்திருக்க வாசலில் ஆம்புலன்ஸ் வண்டி வந்து நின்றது. வேனில் வந்த வேலையாட்கள் ஸ்டெரச்சரை உள்ளே கொண்டு வைத்தார்கள். வித்யா அவசரமாக பேபியைக் கேட்டு ஒரு விளக்கேற்றி வைத்தாள். செய்ய வேண்டியதைச் செய்தாளே ஒழிய, கண்கள் கண்ணீரைப் பொழிந்து கொண்டுதானிருந்தன. புஷ்பாவும், மீராவும் அனுவின் மீது விழுந்து கதறி அழுததற்கு ஒரு அளவே இல்லை. பார்த்தாவோ முகத்தை நிமிர்த்தவே இல்லை. குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தார்.

சற்று நேரம் கழித்து ''எல்லோருக்கும் சொல்ல வேண்டாமா'' என்று ராமமூர்த்தி கேட்டார். ''டில்லியிலே இருக்கும் அனுவோட அக்காவுக்குச் சொல்லியாச்சு. வந்துகிட்டேயிருக்காங்க. பாவம், நியூஸ் கேட்டு அவங்க வேறே மயங்கி விழுந்துட்டாங்களாம். ஒருவாறு அவங் களைத் தேத்தி அவங்க கணவர், பிள்ளை இரண்டு பேரு மாக கூட்டிக்கிட்டு வராங்க. இங்கே வில்லிவாக்கத்திலே பார்த்தாவோட சித்தப்பா பிள்ளை இருக்கான். இன்னும் சில உறவுக்காரங்க இருக்காங்க. எல்லாருக்கும் இனிமே தான் போன் பண்ணனும்'' என்று மூர்த்தியிடம் சொல்லி விட்டு, ''பார்த்தா ஸார்! கொஞ்சம் சுதாரிச்சுக்குங்க. எல் லாருக்கும் சொல்லணும்'' என்றார் கிருஷ்ணன் நாயர்.

''ஆமாம் பார்த்தா ஸார்! நீங்க இப்படி உடைஞ்சி போகக்கூடாது. கொஞ்சம் எழுந்திருங்க, ஸார்'' என்று ராமமூர்த்தியும் சொன்னார். அதற்குள் மீராவும் அவர்



பக்கம் வர, பார்த்தா அவளைக் கட்டிக்கொண்டு ''இப்படி நம்மளையெல்லாம் ஏமாத்திட்டுப் போயிட்டாளே உங் கம்மா?'' என்று கதறினார். யார் அழுது என்ன பயன்? விதியின் கரம் மிக வலியது. அதற்குப் பாசமாவது, பந்தமாவது?

சற்று நேரம் சென்றபின் பார்த்தாவே ஒரு டைரியை கொண்டு வந்து ராமமூர்த்தியிடம் கொடுத்தார். ''இதில் உறவுக்காரங்க மொத்த பேர் போன் நம்பரும் இருக்கு சார். நீங்க எல்லோருக்கும் போன் பண்ணி சொல் லிடுங்க, ப்ளீஸ்!'' என்று கேட்டுக் கொண்டார்.

''இன்னி பேப்பர்லே நியூஸ் கொடுக்கக் கூட நேரம் ஆயிடுத்தே'' என்றார் அதற்குள் அங்கு வந்திருந்த இன்னொரு பக்கத்து வீட்டுக்காரர்.

''நான் பெசன்ட் நகர் டைம்ஸ்ல போடச் சொல் லிட்டேன், சார்'' என்றார் கிருஷ்ணன் நாயர்'' நெருங்கின சிநேகிதர்களுக்கும் சொல்லிடறேன்'' என்றார்.

அடுத்த அரை மணிக்குள் புஷ்பாவின் தங்கை பெண், அவள் கணவர், இரண்டு குழந்தைகளுடன் வந்து விட்டாள். ஒரு பாட்டம் அழுது முடித்த அவளைத் தனியே கூட்டிப் போய் ''நாங்க காலை ஐந்து மணிக்கே வந்துட்டோம். இவர் ஏதாவது ஆகாரம் சாப்பிட்டு மாத்திரை போட்டுக்கணும். மாமியாருக்கும் நான் போய்தான் சாப்பிட ஏதாவது கொடுக்கணும்'' என்றாள்.

உடனே அவள், ''நீங்க சொல்றது புரியறது. ஆன்ட்டி! நீங்க கிளம்புங்கோ. இன்னும் கொஞ்ச நாழியில எல்லா உறவுக்காரங்களும் வந்துடுவாங்க. என் தம்பி பொண்ணை கூட்டிண்டு வரச் சொல்றேன். அவ

மீராவோட இருப்பா. பாவம் உங்க பொண்ணும் சின்னவ தானே! திகிலடிச்சு உக்காந்திருக்கா. நீங்க கிளம்புங்கோ, நாங்க எல்லோருமா ஆக வேண்டியதைப் பாத்துக் கறோம்'' என்றாள்.

கல்பனாவைக் கூப்பிட்டால் அவள் வருகிற மாதிரியே தெரியவில்லை. பிறகு புஷ்பாவே, ''நீ வீட்டுக்குக் கிளம்பும்மா'' என்றதும்தான், மீராவை ஒருமுறை கட்டித் தழுவிக் கொண்டுவிட்டு, புஷ்பாவைப் பார்த்து கை கூப்பிவிட்டு புறப்பட்டாள் கல்பனா.

''ரொம்ப தேங்க்ஸ் மூர்த்தி சமயத்திலே வந்து பெரிய உதவி பண்ணியிருக்கீங்க'' என்று கை கூப்பியபடி பார்த்தா சொல்ல, ''இந்த நேரத்தில் இது என்ன ஃபார்மா லிட்டி? நடந்தது, நடப்பது, நடக்கப் போவது எல்லாம் அந்த நாராயணன் செயல். நம்ம கையிலே எதுவு மில்லை. இனிமேதான் நீங்க தைரியமா இருக்கணும்'' என்று அவரைத் தட்டிக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டார் ராமமூர்த்தி.




வீட்டிற்கு பின்பக்கமாக வந்து மூவரும் குளித்துவிட்டு உள்ளே வந்தனர். பிச்சம்மா சுடச்சுட பொங் கலும், கொத்ஸும் பண்ணியிருந்தாள். வேண்டாம், வேண்டாம் என்றவர் களை வற்புறுத்தி சாப்பிட வைத்தாள்.

விவரமெல்லாம் கேட்டறிந்து கொண்ட பிச்சம்மா ''பக்கத்து வீட்டிலிருந்தெல்லாம் யாராவது துணைக்கு உடனே போக மாட்டார்களோ'' என்று கேட்டாள்.



''ஏன், பக்கத்து வீட்டு கிருஷ்ணன் நாயர்தான் உடனே உதவிக்கு ஓடி வந்தார். அவர் மனைவியும் ஹை B.P. பேஷண்ட். அதனாலே அவளை தூக்கத் திலிருந்து தொந்திரவு பண்ணாமல் இவர் கதவை வெளியே பூட்டிண்டு ஆஸ்பத்திரிக்குப் போயிட்டார். அதனாலே அவளாலே வெளியே வர முடியல்லே. அதுவுமில்லாமே, அவளுக்கு மலையாளம் தவிர வேறு பாஷையும் தெரியாதாம்'' என்று சொன்னாள் வித்யா.

பாட்டி சாப்பிட்டுவிட்டு ஒரு பக்கம் உட்கார்ந்ததும், பக்கத்தில் வந்த கல்பனா பாட்டியின் மடியில் தலை வைத்து அப்படியே படுத்துக் கொண்டாள். பாட்டி கண்டிப்பான மனுஷிதான், ஆனால் பேத்திகள் மேல் அவளுக்கு கொள்ளை பிரியம். கல்பனாவின் தலையைக் கோதி விட்டு, ''மனதைத் தேத்திக்கோம்மா. எல்லாம் விதி. நம்ம கையிலே எதுவும் இல்லை. எல்லாம் அவன் செயல்'' என்றாள்.

''அனுராதா ஆன்ட்டி கண் முன்னாலேயே நிக்கறா பாட்டி. எவ்வளவு நல்ல மனுஷி. எப்பவும் சிரிச்சிண்டே தான் இருப்பா. அவளுக்கா இந்த கதி? ஏன் பாட்டி கடவுள் இவ்வளவு கருணையில்லாமல் இருக்கார்?'' என்று சொல்லித் தேம்பினாள்.

''அப்படிச் சொல்லக் கூடாதும்மா. அவளுக்கு இந்தச் சின்ன வயசிலேயே சுமங்கலியா போகணும்னு இருந் திருக்கு. இது ஈடு செய்ய முடியாத இழப்புதான். ஆனா யாராருக்கு என்ன கொடுப்பினையோ அதுதான் நடக் கும். இதுக்கு கடவுள் என்ன செய்வார்?'' என்று சொல்லி அவளைத் தேற்றினாள்.

''ஆனாலும் இது ரொம்பவே கொடுமைதான் பாட்டி. மீராவுக்கு எல்லாமே அவ அம்மாதான். இனிமே அவ என்ன பண்ணுவாள்? பாவம்!'' என்று சொல்லி பாட்டி மடியிலேயே தூங்கிப் போய் விட்டாள்.

மொத்தத்தில் கொஞ்ச நாள் கல்பனாவும் வேறு எதிலுமே புத்தி செல்லாமல் ரொம்ப தவித்துப் போனாள். தினம் ஒரு முறை மீராவுடன் பேசுவாள். நல்லகாலமாக அந்த மாதத்தில் பரிட்சை ஏதும் இல்லாததால் பிழைத் தாள். நாட்கள் ஓடின.

அனுராதாவின் திடீர் மரணம், மீரா அதற்கு முன் வாரம் சொன்ன நிகழ்ச்சி எல்லாமே கல்பனாவின் மனதை மிகவும் பாதித்திருந்ததால் இப்போதெல்லாம் ரவியின் ஞாபகம் அறவே இல்லை அவளுக்கு. அவனும் என்னவோ கண்ணில் படவேயில்லை. அம்மா கூப் பிடும்போதெல்லாம் உட்கார்ந்து அவளும், சாதனாவும் சமர்த்தாகப் பாட்டு கற்றுக் கொண்டனர். பாட்டி ஒரு நாள் தான் போய் மீராவைப் பார்க்கணும் என்று சொல்ல, மூர்த்தியும் கல்பனாவுமாகக் கூட்டிப் போனார்கள்.

ஆயிற்று அந்த வருடப் பரிட்சை எல்லாம் முடிந்து ரிசல்ட்டும் வந்து விட்டது. கல்பனா, சாதனாவும் சரி, மீராவும் சரி நல்ல மார்க்குகள் எடுத்திருந்தார்கள். திடீரென்று ஒரு நாள் மீரா வீட்டிற்கு வந்தாள். தன் அப்பாவிற்கு மும்பைக்குப் போஸ்டிங் வந்து விட்டதாகச் சொன்னாள். இதனால் அவள் அப்பாவிற்கு சந்தோஷம் தானாம். அனுவின் நினைவுகளோடு சென்னையில் இருக்கப் பிடிக்கவில்லையாம். கல்பனாவிற்குத்தான் ரொம்பவும் வருத்தம். ''ஏன் மீரா? +2வை எங்கு படிப் பாய்?'' என்று கவலையோடு கேட்ட கல்பனாவிடம்,



''கரஸ்பாண்டன்ஸிலே தான் பண்ண வேண்டும். பரிட்சை எழுத மட்டும் சென்னை வந்தால் போதும்'' என்கிறார் அப்பா, வேறு என்ன செய்ய முடியும்?'' என்று சொல்லி அழுதாள் மீரா.

''உன்னை விட்டுப் பிரிந்து எப்படியடி இருப்பேன்?'' என்று கலங்கினாள் கல்பனா.

''நாம் தினமும் பார்த்துக் கொள்ள முடியாதே தவிர, வாரம் ஒரு தடவையாவது நான் உன்னோடு போனில் பேசுகிறேன். அதுதான் பரிட்சை எழுத இங்கு வரப் போகிறேனே! அப்போது பார்த்துக் கொள்ளலாம்'' என்றாள் அமைதியாக மீரா.

ஆம், அவள் அழுது, அழுது பக்குவப் பட்டு விட்டாள். அமைதியாக ஆகி விட்டாள். இனிமேல் பாட்டி, அப்பா இரண்டு பேரையும் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு தன்னுடையதுதான் என்ற திடம் அவளுக்கு வந்திருந்தது.

சாதனா கேட்ட குரூப் வேறு காலேஜில்தான் கிடைத் தது என்பதால் இந்த வருடமும் அவர்கள் இருவரும் தனித் தனியே தான் போய் வரவேண்டியதாகி விட்டது. இதற்குள் மீராவும் மும்பை சென்று விட்டாள்.

நாட்கள் நகர ஆரம்பித்தன. திடீரென்று ஒரு நாள் ரவி திரும்ப இவள் கண்ணில் பட்டான்.

''ஹலோ, குட் மார்னிங்! சௌக்கியமா?'' என்றான் புன்னகையோடு.

''ஹலோ, குட் மார்னிங், நீங்க எப்படியிருக்கீங்க?'' - கல்பனா விசாரித்துக் கொண்டே நடந்து தன் முன்னால் சென்று கொண்டிருந்த சிநேகிதிகளுடன் சேர்ந்து

கொண்டாள். இப்படியே நான்கு நாட்கள் அவன் என்ன முயற்சித்தும் அவள் எந்தவிதமான பதிலும் சொல்லாமல் அவனைத் தவிர்த்து விட்டாள். அவனாலும் பொது இடங்களில் எதுவும் செய்ய முடியவில்லை. இப்படி ஒரு பத்து நாட்கள் செல்ல ஒரு நாள் ஜன சந்தடி ஒரு தனியிடத்தில் அவனிடம் வசமாக தனித்து அகப்பட்டுக் கொண்டாள்.

''இதோ பார், கல்பனா! இன்னிக்கு என்னோட நின்னு நீ மட்டும் பேசாம போனா நான் இப்போ இந்தக் கத்தியால என் மணிக்கட்டில் கீறிக் கொண்டு ரத்தம் சிந்துவேன். என்னைக் காப்பாத்த கூட்டம் கூடிடும். அவங்க கிட்டே இதுக்குக் காரணம் நீதான்னு சொல்லுவேன்'' என்றான் ரவி.

சொன்னபடி செய்து விடுவான் என்று தோன்றியது கல்பனாவிற்கு. தவிர இவளுக்கே கைகளை விரித்தபடி அவளை மறித்து அவன் நின்றபோது, அவனுடைய ஆஃப்டர் ஷேவ் லோஷன் மணமும், தோற்றமும் திரும்ப இவள் மனதில் ஒருவித சலனத்தை ஏற்படுத்தியதும் உண்மை.

''இப்போ என்ன வேண்டும் உங்களுக்கு?'' என்று கேட்டாள் இதயம் படபடக்க.

''நீ, உன் காதல். அது தவிர எனக்கு வேறே ஒண்ணும் வேண்டாம்'' என்றான்.

''ஸாரி, இதெல்லாம் வேண்டாம். நான் இப்போது தீவிரமாகப் படிக்கிறேன். என் மனதில் படிப்பைத் தவிர வேறு எதற்கும் இடமில்லை.''

அவளைப் பார்த்து குறும்பாகச் சிரித்தான். ''வேறு எவருக்கும் இடம் இல்லாதவரை சரி'' என்றான்.



''நான் அந்த மாதிரி பெண்ணில்லை'' என்றாள் கல்பனா.

''என்னை மட்டுமே மனதில் வைத்திருக்கும் பெண், சரிதானே?''

''அதுதான் இல்லை என்கிறேனே.''

''பொய் சொன்னால் போஜனம் மட்டுமில்லை, இன்னும் எதுவும் கூடக் கிடைக்காது. இது கூட'' என்றவன் தன் விரலில் ஒரு முத்தத்தைப் பதித்து அதை அவள் வாயில் வைத்தான்.

''இது என்ன அநியாயம்? யாரும் கேட்பார் இல்லையென்று நினைப்பா? இப்போ நான் கத்தினா என்ன நடக்கும், தெரியுமா?''

''கத்தேன், என் மேல் உனக்கு காதல் இல்லேன்னா நன்றாகக் கத்தி ஊரைக் கூட்டு! உனக்காக, உன் காதலுக்காக அடி வாங்கிக் கொள்கிறேன்.''

''நான் உங்களைக் காதலிப்பதாக எப்போதாவது சொன்னேனா?''

''வாயால் சொன்னால்தானா? கண்ணால் சொன்னதில்லையா, என்ன? அது சரி, என் கண்ணம்மாவுக்கு அப்படி என்ன என் மேல் கோபம்? மூன்று, நான்கு மாதமாக சொல்லாமல் காணாமல் போய்விட்டேன் என்றா? சாரி, டியர், நான் ஒரு டிரெயினிங்குக்காக மும்பை போயிருந்தேன். இப்போ எனக்கு பிரமோஷனும் வந்திருக்கு தெரியுமா?''

''எனக்கெதுக்கு இந்த நியூஸெல்லாம்?''

அவன் அவள் கேள்வியை லட்சியமே செய்யவில்லை. ''நான் மும்பைக்கு போறதுக்கு முன்னாடி உங்கிட்டே

சொல்லனும்னு எத்தனையோ முயற்சி செய்தேன். நான் உனக்கு லெட்டர் எழுதலாம்னா, அது யார் கையிலாவது கெடைச்சு உனக்கு பிரச்னையாயுடுமேன்னுதான் நான் அப்படி பண்ணல்லே. வந்து சொன்னா நீ புரிஞ்சிப் பேங்கற எண்ணம்தான்'' என்றான்.

''நான் இப்போ என்ன புரிஞ்சிக்கணும்?''

''நீ என் உயிர்ங்கறதை! நீ இல்லாமல் எனக்கு ஒரு வாழ்க்கையே இல்லைங்கறதை, உனக்கும் என் மேல் பரிபூர்ணமான காதல் இருக்குங்கறதை இப்படி எல்லாத் தையும்தான்.'' என்றவன், ''எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு. நாம் நாளை சந்திப்போம்'' என்று சொல்லி விட்டு தன் புல்லட்டில் ஏறிப் பறந்தான்.

கல்பனா திகைத்துப் போய் நின்றாள். அவளுக்கு ஒரே குழப்பம். 'தனக்கு அவன் மேல் காதலா? இல்லையா? படிப்பிலே அக்கறை செலுத்தும்போது இது என்ன அநாவசியமான தடங்கல்? பேசாமல் அப்பாவிடம் சொல்லிவிடலாமா? சரி, அப்படிச் சொன்னால் என்ன ஆகும்? பாவம், அவன் மேல் போலீஸ் கம்ப்ளைண்ட் கொடுக்கக் கூடத் தயங்க மாட்டார் அப்பா. பாவம் என்ன? அவன் மேல் நான் ஏன் பரிதாபப்பட வேண் டும்? நான்கு நாட்கள் சிரித்துப் பேசியதனாலா? ஏன் பேசினோம்? எனக்கு அவனைப் பிடித்திருக்கிறதா? இல்லையென்றால் அவன் சொன்னான் என்பதற்காக ஹரிப்ரியா வீட்டிற்கு ஏன் போனோம்? அங்குதான் நமக்கு ஒரு வேலையும் இல்லையே! ஒரு வேளை பிடித்திருக்கிறதோ?'

ஒரு மாதிரி குழப்பமான நிலையிலேயே அன்றைய பொழுதைக் கழித்தாள். ''ஏன்டி, எப்படியோ இருக்கே?''ன்னு



பாட்டிகூடக் கேட்டுவிட்டாள். ''ஒன்றுமில்லை பாட்டி'' என்று சொல்லி கலகலப்பாக இருக்கப் பிரயத்தனித்தாள். மறுநாள் இவள் காலேஜுக்குப் போகும்போது, பஸ் ஸ்டாப்பில் இவளுக்காகக் காத்திருந்தான் ரவி.

அன்றைக்கு ஒரு வெளிர் நீல டெர்லின் ஷர்ட், மேட்சிங்காக டார்க் ப்ளூ பேண்ட், முகம் தெரியும் அள வுக்கு பாலீஷ் செய்யப்பட்ட பாய்ண்டட் ஷூ, என்று அமர்க் களமாக இருந்தான். ரேபான் கூலிங் கிளாஸ் வழியே அவன் பார்வை இவளை ஊடுருவியது. மெல்லிய ஆப்டர்ஷேவ் மணம் இவளைக் கிறங்கடித்தது.

''காலேஜ் முடிந்து சாயந்திரம் வரும்போது நிறையப் பேசலாம். அதற்கு முன் இதோ ஒரு குட்டி காதல் பரிசு'' என்று ஷர்ட் பாக்கெட்டிலிருந்து ஒரு காட்பரீஸ் மில்க் சாக்லெட்டை ஒரு முத்தம் பதித்து அவளிடம் நீட்டி னான்.

இவள் தடுமாறிப் போனாள். வாங்கிக் கொள்வதா, வேண்டாமா என்று தீர்மானிப்பதற்குள் அவளின் கை தானாக நீண்டு அதை வாங்கிக் கொண்டது.

''தட்ஸ் லைக் எ குட் பேபி'' என்றான்.

''நான் ஒண்ணும் இதை மனப் பூர்வமாக வாங்கிக் கல்லே. தெருவிலே யாராவது பார்க்கப் போறாங்களேன்னு வாங்கிக்கிட்டேன். வேறே ஒண்ணும் கற்பனை பண் ணிக்க வேண்டாம்'' என்று சிடுசிடுப்பாகச் சொன்னாள்.

''நான் ஏதோ கற்பனை பண்ணிண்டதா யார் சொன்னா? ஹாவ் எ நைஸ் டே'' என்றபடி தன் புல்லட்டில் ஆரோ கணித்தான்.

அதை உதைத்து ஸ்டார்ட் செய்தபடியே ''பின்னாடி ஏறிக்கறியா? பஸ்ஸில் கசங்க வேண்டாமே!'' என்றான்.

வலது கையின் ஆள்காட்டி விரலை நீட்டி ''என்ன கொழுப்பா இருக்கா'' என்று கேட்டாள். அந்த விரலை சட்டென்று பிடித்து ஒரு முத்தம் பதித்துவிட்டு அவன் பறந்தே போய்விட்டான்.

அப்படியே ஸ்தம்பித்து நின்றாள். கை கால்கள் எல்லாம் லேசாக நடுங்கின. 'என்ன துணிச்சல்? பொது ரோடு என்று தெரிந்தும் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறானே! சரிதான், இவனோடு ஒன்றும் வைத்துக் கொள்ளக் கூடாது. இவன் ரொம்பவே ஃபாஸ்ட்' என்று எச்சரித்தது உள்மனம். கூடவே அந்த விரலில் பட்ட முதல் முத்தம் ஒரு பேரானந்தப் பரவசத்தைத் தரவும் தவறவில்லை. எல்லாம் வயதுக் கோளாறு. வேறென்ன?

நடுவில் கொஞ்ச நாள் அக்கறையாகப் படித்தவளுக்கு திரும்ப உடல் மட்டும்தான் வகுப்பில் இருந்தது. சாயந்திரம் காலேஜ் முடிந்து வெளியே வந்தால் சரியாக வந்து நிற்கிறான். இவள் அவனைத் தவிர்த்து விட்டுப் போகத்தான் நினைத்தாள். ஆனாலும் அவன் ''ஹாய், குட் ஈவினிங்'' என்றதும் உடம்பு சிலிர்த்துத்தான் போயிற்று.

''வா, கொஞ்சம் தள்ளி நின்னு பேசலாம்'' என்று அவன் வண்டியைத் தள்ளிக் கொண்டு நடந்தான். ஏதோ மந்திரிக்கப்பட்டவள் போல் அவளும் அவன் பின்னா லேயே நடந்தாள்.

''வா! அந்த பார்லரில் ஐஸ்க்ரீம் சாப்பிட்டுண்டே பேச லாம்'' என்றான்.



''ஐயய்யோ! எனக்குப் பயமாக இருக்கு'' என்றாள் கல்பனா.

''ஒரு பயமுமில்லை, நீ வா! நான்தான் பயமில்லைன்னு சொல்றேன் இல்லையா.''

ஏதோ ஆர்வக் கோளாறு. கூடவே நடந்தாள். யாராவது தெரிந்தவர்கள் பார்த்துவிடப் போகிறார்களே என்று உள்ளூர பதைபதைப்புத்தான். அறிவு எச்சரித்தும் அதை அலட்சியம் செய்தாள்.

போய் இரண்டு சாக்லேட் கோன் ஐஸ்க்ரீமுக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு வந்தான். ''சொல் கல்பனா! உனக்கு என்னைப் பிடிக்கவில்லையா?''

கல்பனா தலையை ஒருவிதமாக ஆட்டினாள்.

''நீ தலையை ஆட்டி ஆமாம், இல்லைன்னு இரண் டும் சொல்றியே! வாயைத் திறந்து சரியாகச் சொல்லக் கூடாதா?''

''பிடிச்சிருக்கான்னு நிச்சயமாகத் தெரியல்லே'' என்றாள்.

''உனக்கு என்ன குழப்பம்? நான் உன்னை எந்த அள வுக்கு லவ் பண்ணறேன்னு உனக்குத் தெரியுமா?''

''சரி, எனக்குப் பிடிச்சிருக்குன்னே வெச்சுக்கலாம், அப்புறம்?''

''இதோ பார்! உனக்கு என்னை ரொம்பவே பிடிச்சிருக்கு. பிடிக்கலேன்னா என்னிக்கோ என்னை மாட்டிவிட் டிருப்பே! குழப்பமெல்லாம் பயத்தினாலே மட்டும்தான். சரி, நாம ரொம்ப நாள் பழக வேண்டாம். எனக்கு உன்னைப் பத்தி எல்லாமே தெரியும். உனக்கு என்னைப் பத்தி என்ன தெரிஞ்சுக்கணுமோ, கேளு! சொல்றேன்.

எனக்கு மறைக்க ஒன்றுமில்லை'' என்று ரவி சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஆர்டர் செய்திருந்த ஐஸ்கிரீம் வந்துவிட்டது.

காதலர்கள் சேர்ந்து உட்கார்ந்து பேசத்தான் இங்கு வருகிறார்கள் என்று பார்லர் ஓனருக்குத் தெரியாதா என்ன? இன்றைக்குத் தொந்திரவு செய்யாமல் இருந்தால்தானே நாளையும் வருவார்கள்? அதனால்தானே ஐஸ்கிரீமே மெதுவாகவே வருகிறது. இந்த இளசுகள் பேசிக் கொண்டே சாப்பிட கோன் ஐஸ்கிரீம்தான் வசதி. கண்ணால் நிறைய எதிரிலிருப்பவரை விழுங்கிக் கொண்டே, கொஞ்சமாக ஐஸ்கிரீமை ருசிக்கலாம். அந்த உதட்டசைவுகள் எல்லாமே தன்னைப் பார்த்துத்தான் என்று காதலியோ காதலனோ நினைத்துக் கொள்ளலாம். அது ஒரு கற்பனையான, விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாத ஆனந்த உலகம். போகப் போக என்ன நடக்குமோ என்று பயம், எதிர்பார்ப்பு, ஆவல், இதற்கெல்லாம் வயசு, வயசு மட்டுமே தான் காரணம்.



அன்றைய பாடத்தைப் படித்து முடித்துவிட்டுப் படுத்துக் கொண்டாள் கல்பனா. போன் அடித்தது. மீராவாகத்தான் இருக்கும் என்று நினைத்து கார்ட்லெஸ் போனை எடுத்துக் கொண்டு ''ஹலோ'' என்றாள். அவள் நினைத்தபடி மீராதான்.

''எப்படி இருக்கே, மீரா?'' என்று கேட்டாள்.

''அம்மா இல்லாம ஒண்ணுமே பிடிக்கலே, கல்யாணி!'' என்று விம்மினாள் மீரா பேசும்போதே.



''மும்பைலே இருக்கியே, இந்த இட மாறுதல் உனக்கு நல்லது செய்யல்லியா, மீரா?''

''நான் கூட அப்படித்தான் நினைச்சேன். சென்னையோ, மும்பையோ எங்கிருந்தாலும் வீட்டுக்குள்ளே நாங்க அதே மனுஷாதான்! அம்மா இல்லாதது ரொம்பவே தெரியறது. நல்ல வேளை பேபி எங்களோடயே வந்துட்டதனாலே ஏதோ வீடு நடக்கிறது. ஏதோ இரண்டு வேளை சாப்பிடறோம்'' என்றாள்.

''ஆமாம், பேபிக்கு யாரும் இல்லைன்னு சொல்லியிருக்கே, இல்லையா? சரி. அப்பா, பாட்டி எல்லாம் எப்படியிருக்காங்க?''

''பாட்டி இப்போ வேற மாதிரி இருக்கா, கல்யாணி!''

''ஏன், என்ன ஆச்சு?''

''அதையேன் கேக்கறே! பாட்டி இப்போ எப்ப பாத்தாலும் பண்ற ஒரே ஜபம், ''கடவுளே! என்னை ஆரோக்கியமா வை''ங்கறதுதான்.''

''யாரை, பாட்டியையா?''

''ஆமா, அதேதான். என்னை நம்பித்தான் உங்கம்மா உன்னை விட்டுட்டுப் போயிருக்கா. வாயாலே சொல்லலேன்னாலும் அதுதான் அவள் நினைப்பா இருந்திருக்கும். அதனாலே நான் என் உடம்பை நன்னா பாத்துக்கணும். இன்னும் நீ படிப்பை முடிச்சி, கல்யாணம் ஆகி ஒரு குழந்தை பிறக்கற வரைக்கும் நான் நல்லபடியா இருக்கணும்'' அப்படீன்னு ஒரே புலம்பல். இப்பல்லாம் ரொம்ப சாப்பிடறதே இல்லை. யோகா பண்றா. விடாம நடக்கப் போறா. தியானம் பண்றா. ஒருத்தரையொருத்தர் ஒவ்வொரு விதமா பைத்தியமா அடிச்சுட்டு அம்மா

பாட்டுக்குப் போயிட்டா. ஒவ்வொரு சமயம் நினைச்சா அம்மா மேலே கோபமா வருது கல்யாணி!'' என்றாள் மீரா.

''அப்படிச் சொல்லாதே, மீரா! பாவம், போகணும், உங்களையெல்லாம் தவிக்க விடணும்னா போயிட்டா? தனக்கு இப்படி நேரப் போவது தெரிந்திருந்தால் தவிச்சுப் போயிருப்பா. நல்ல வேளையா உங்க பாட்டி ஆரோக்கியமா இருக்காளோ உனக்கும் உங்கப்பாவுக்கும் ஒரு ஆதரவு இருக்கு. உங்க பாட்டியைப் பார்த்தா உனக்கு பாட்டி மாதிரி இருக்கா? இளமையா உடம்பை மெயின்டைன் பண்ணியிருக்கா.''

''இப்ப வந்து பாரு! உடம்பைத் தெம்பா வெச்சுக்கறேன்னு இத்தனை செய்யறாளே தவிர, முகம் எப்படியோ கிழடு தட்டிடுத்து.''

''அது சரி மீரா! நீ எப்போ இங்கே வருவே?''

''தெரியல்லே, கல்யாணி! எனக்கும் இங்கே மனமொத்த பிரண்ட்ஸ் யாருமில்லை. உன்னைப் பார்க்கணும்னுதான் இருக்கு. ஸெமஸ்டர் எக்ஸாம் போது பார்க்கலாம், சரி கல்யாணி, இப்போ வெச்சுடறேன். அடுத்த வாரம் கூப்பிடறேன். ஆன்ட்டி, அங்கிளுக்கு என் நமஸ்காரங்களைச் சொல்லு. அன்னிக்கு நீங்களெல்லாம் வந்து ஒத்தாசை செய்ததை அப்பாவும் பாட்டியும் இன்னும் சொல்லிண்டு இருக்கா. அதுவும் நீ என்னை ஒரு அடி வெச்சியே, அதுதான் கிரேட்.''

''ரொம்ப ஸாரி, மீரா! நீ க்ரேட்ங்கறே. எனக்கானா அதை நினைச்சு நினைச்சு வருத்தமா இருக்கு.''

''இல்லவேயில்லை! நீ வருத்தப்படாதே! டாக்டரே அப்பாகிட்டே அந்தப் பொண்ணு மீராவுக்கு ஒரு மகா



பெரிய ஒத்தாசை பண்ணியிருக்கா. மீராவை அப்படியே விட்டிருந்தா அவளுக்கு பைத்தியம் பிடிச்சிருக்கும்''னு சொன்னாராம். எனக்கு பைத்தியம் பிடிக்காமல் காப்பாற்றியதற்கு மிக்க நன்றி, கல்யாணி குட்நைட்'' என்று சொல்லி போனை வைத்து விட்டாள்.

அன்று இரவு படுத்தபோது மீரா ஊரைவிட்டுப் போன அன்று நடந்ததெல்லாம் நினைவுக்கு வந்தது. ஊருக்குப் போகும் தேதி நிச்சயமாகும் வரை கூட ஏதாவது அதிசயம் நடந்து மீரா மும்பை போவது கான்சலாகி விடும் என்று உள்ளூர நினைத்துக் கொண்டிருந்தாள் கல்பனா. ஆனால் நிச்சயமாகப் போகப் போகிறாள் என்று தெரிந்து, சாமான்களையெல்லாம் கட்ட ஆட்கள் வரப் போகிறார்கள் என்றதும் ரொம்பவே துக்கமாக இருந்தது.

மீராவிற்கு அதற்கு மேலே வருத்தமாக இருந்தது. என்ன செய்ய முடியும். இது சரியான நேரத்தில் வந்த ஒரு நல்ல மாற்றம் என்றுதான் பார்த்தாவும், புஷ்பாவும் நினைத்தார்கள். இப்போதும் அவர்கள் எண்ணத்தில் மாறுதல் இல்லை. மீராவிற்குக்கூட கல்யாணியை விட்டுப் போகும் வருத்தம்தான். மற்றதெல்லாம் அடுத்த பட்சம்தான்.

புறப்படுவதற்கு முதல் நாள் பாட்டியிடம் கெஞ்சிக் கூத்தாடி அனுமதி வாங்கிக் கொண்டு காலையிலேயே மீராவின் வீட்டிற்குப் போய்விட்டாள். காலையில் டிபனும், மதியம் சாப்பாடும் ரொம்ப தூரம் சொல்லி எல்லோருக்குமாகக் கொடுத்து விட்டிருந்தாள் வித்யா. உள்ளே வந்து கொஞ்ச நேரம் பார்த்தாவுடன் பேசிக் கொண்டிருந்துவிட்டுப் போனார் ராமமூர்த்தி. சாயந்திரம் வந்து திரும்பக் கூட்டிப் போவதாகச் சொல்லியிருந்தார்.

அன்று பூராவும் பேசிக் கொண்டே புஷ்பா, பேபிக்கு ஒத்தாசையாக இருந்தார்கள் கல்பனாவும், மீராவும். சாமான்களையெல்லாம் கட்டுவதை மேற்பார்வை பார்த்தார்கள். அனுவின் படத்தைப் பெரிது பண்ணி மாலை போட்டிருந்தார்கள். அதை கழற்றிப் பேக் செய்யும்போது எல்லோரும் அழுது விட்டார்கள்.

சாயந்திரம் வித்யாவும், மூர்த்தியும் கல்பனாவை கூட்டிப் போக வந்தார்கள். ''நன்றாகப் படிம்மா. பாட்டியையும், அப்பாவையும் பாத்துக்கோம்மா'' என்று அறிவுரை கூறினார்கள். பார்த்தாவிடம் விடைபெற்ற அவர்கள், ''இந்த இடமாறுதல் உங்களுக்கு நிச்சயமாக நல்லது செய்யும், சார்! நாங்க புறப்படறோம், டேக் கேர்!'' என்று சொல்லி விடை பெற்றனர்.

வீட்டை இப்போதைக்கு வாடகைக்கு விடப் போவதில்லை என்பதால் சில பெரிய சாமான்களை அங்கேயே விட்டு விட்டார்கள்.

வீட்டுக்கு வந்து கூட நான்கு நாட்கள் வரை கல்பனாவுக்கு மீராவின் நினைவுதான். ஒரே சோகம்தான். பழையபடி நார்மலுக்கு வருவதற்குக் கொஞ்ச நாட்கள் பிடித்தன.




அன்று காலை எழுந்திருக்கும் போதே ரவி போனமுறை பார்க்கும் போது சொன்னது நினைவுக்கு வந்தது. 'கடைசி கிளாசைக் கட் பண்ணிவிட்டு வா, கொஞ்ச நாழி பீச்சில் உட்கார்ந்து பேசலாம்' என்று சொல்லியிருந்தான்.



''ஐயய்யோ, பீச்சுக்கா? என்னால் முடியாது. எனக்குப் பயமாக இருக்கிறது'' என்றாள்.

''சும்மா இதைச் சொல்லாதே, டியர்! பீச் என்ன ரொம்ப தூரமா? காலேஜிலிருந்து வெளியே வந்து ரோடைக் கிராஸ் பண்ணினா பீச். நீ வரே, அவ்வளவு தான்'' என்றான் ரவி.

போக பயமாக இருந்தது. ஆனால் ஆசை அவளை உந்தித் தள்ளியது. தவித்தாள் அன்று முழுவதும். காதல் கொண்ட மனதிற்கு தைரியமும் தானே வந்துவிடாதா? கடைசியில் போனாள். பீச்சில் படகு மறைவில் உட்கார்ந்து அவனோடு பேசிக் கொண்டிருந்தபோது தன்னை மறந்த ஒரு பரவச நிலை தவிர வேறு ஒன்றுமே தோன்றவில்லை. பேசியதுகூட குறைச்சல்தான். ஒருவரை ஒருவர் கண்களால் விழுங்கிக் கொண்டதுதான் நிறைய. ரவி கண்ணியமாகவே நடந்து கொண்டான். அநாவசியமாக அவளைத் தொடக்கூட முயற்சிக்கவில்லை. ஒரு மணி நேரம் போல் உட்கார்ந்திருந்துவிட்டு கிளம்ப மனமின்றிக் கிளம்பினர் இருவரும்.

தப்பெல்லாம் முதல் தடவை செய்யும்போதுதான் ரொம்ப பயமாகவும், உறுத்தலாகவும் இருக்குமே தவிர, அடுத்தடுத்து தப்பு பண்ணும்போது குளிர் விட்டுப் போய்விடும், இல்லையா?

வாரம் இரண்டு முறை போல் வந்து, ஆறு முறை பீச்சுக்குப் போய் வந்த பின் இருவருக்கும் கொஞ்ச தூரம் எங்காவது போக வேண்டும், நாள் பூரா ஒன்றாகக் கழிக்க வேண்டும் எனத் தோன்றியது. இந்த ரவியுடன் காதல் ஆரம்பித்ததிலிருந்தே மீராவுடன் சரியாகப் பேச முடியாதபடி சந்தர்ப்பங்கள் அமைந்து விட்டன. இப்போது

மீரா தன்னுடன் இருந்தால், இதையெல்லாம் ஆமோதிப்பாளா அல்லது தவறு என்று கண்டிப்பாளா? என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டாள் கல்பனா. அவள் அன்றைக்கே சரியாக, நிலையாக ஒரு முடிவெடுத்திருந்தாள். தான் தான் தப்பான வழியில் போகிறோம் என்றும் உறுத்தியது.

கூடவே தப்பென்ன, இப்போதெல்லாம் எத்தனையோ பேர் காதலித்துக் கல்யாணம் செய்து கொள்கிறார்கள். நல்ல வேளையாக பிரகாஷிற்கு என்னைப் பிடிக்கவில்லை. இவர்களுக்கு மாப்பிள்ளை தேடும் வேலை மிச்சம். ரவிக்கென்ன குறைச்சல்? ஆளும் அழகன், நல்ல சம்பாத்தியம். இவர்களே என்னை அழகாக அவருக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கலாமே? ஆனால், ஆனால் அவன் வீட்டு மனிதர்களைப் பற்றி ஒன்றுமே தெரியாதே! அடுத்தமுறை அவனைப் பார்க்கும்போது இதைப் பற்றிய எல்லா விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளணும் என்று நினைத்தாள்.

மறுநாள் காலை பஸ் ஸ்டாண்டில் அவனைச் சந்தித்தபோது அவன், "அடுத்தமுறை கொஞ்சம் நிறைய நாழி பேசிக் கொண்டிருக்கலாம், கல்பனா! நீ முழு நாளும் காலேஜை கட் அடி. காலையிலேயே கிளம்பி ஜூவிற்குப் போகலாம். மூணு மணிக்குத் திரும்பி வந்துவிடலாம்" என்றான் ரவி.

இவள் முகம் போன போக்கைப் பார்த்துவிட்டு, "ப்ளீஸ், கண்ணா! என் செல்லம் இல்லே! வியாழன் அன்று போய்வரலாம். கூட்டமே இருக்காது" என்றான்.

"சரி" என்ற ஒற்றைச் சொல்லுடன் இவள் திரும்பிக் கொண்டு விட்டாள். பஸ் ஸ்டாப்பில் பேச



பயமாயிருந்தது. அப்பாவின் ஆபீஸ் ரூமிற்கு இவள் போவது குறைச்சல்தான். அதனால் அவர் கட்சிக்காரர்கள் தெரிந்தவர்கள் என்று யாருக்கும் இவளைத் தெரியாது. ஆனாலும் யாருக்காவது தெரிந்திருக்கக் கூடும் என்ற எண்ணமும், பயமும் இருக்கத்தான் செய்தது.

வியாழன் அன்று பஸ் பிடித்து காலேஜை விட்டு சற்று தொலைவிலேயே நின்றாள். அடுத்த ஐந்து நிமிடங்களில் அவளுடைய கதாநாயகன் வந்து விட்டான் இவளைக் கொத்திக் கொண்டு போக. எத்தனை நாட்களாக அவனோடு பழகினாலும் அவனுடன் டூ வீலரில் போவது இதுதான் முதல் தடவை. ஒரே த்ரில். அந்த ஆனந்தத்தில் பயம் கூட பறந்து விட்டது. மெயின் ரோடில் போகாமல் சந்து பொந்துகளில் புகுந்து புறப்பட்டான் ரவி.

"ஏன் ரவி?" என்று இவள் கேட்டதற்கு "பஸ்ஸில் யாராவது உனக்குத் தெரிந்தவர்கள் பார்த்துவிடக் கூடாதுன்னுதான்" என்று பதிலளித்தான்.

ஜூவை அடைந்ததும், "பார்த்தியா, கூட்டமேயில்லை, நான் சொன்னாற்போல" என்றான்.

"அதுதான் எனக்கு சந்தேகம்" என்றாள் கல்பனா மூஞ்சியைத் தூக்கி வைத்துக் கொண்டு.

"ஆமாம், அதில் உனக்கென்ன சந்தேகம்?"

"அதெப்படி, அத்தனை சரியாக உங்களுக்குத் தெரிந்திருக்கிறது? இதற்கு முன்னாடி எத்தனை பெண்களை இப்படி வியாழக்கிழமை அழைத்து வந்திருக்கிறீர்கள்?"

பெரிதாகச் சிரித்தான் ரவி. "இதோ பார், என்னைப் போய் இப்படி சந்தேகப் படலாமா? அசடு, அசடு!

எனக்கு எத்தனை சிநேகிதர்கள்? எல்லோருமே அநேக மாக காதல் வயப்பட்டவர்கள் தான். மைலாப்பூர் ஏரி யாலே பயம் இல்லேன்னா பீச்சுக்குப் போகலாம். இல் லேன்னா இதுதான் எல்லோருக்குமே பெஸ்ட் சாய்ஸ். இது எல்லாருக்குமே தெரிந்த விஷயம்தான். இதற்கா கவா இப்படி மூடு ஆஃப் ஆவே? லூசு!'' என்று அவள் கன்னத்தை செல்லமாகத் தட்டினான்.

அவ்வளவுதான் உலகமே மறந்து விட்டது கதா நாயகிக்கு! இருவருமே ஓரிடத்தில் உட்கார்ந்தபொழுது தான் சுற்றி கவனித்தாள் கல்பனா. நிஜம்தான் ரவி சொன் னது. அநேகமாக காதலர்கள்தான் ஜோடி ஜோடியாக உட்கார்ந்திருந்தார்கள். வேலை நாளான அன்று வேறு எவரையுமே காணோம்.

ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு ஒரு பரவச நிலையில் இருந்தனர். அதுவும் அவளும் இன்னமும் அவனுடைய புல்லட் என்ற காதல் ரதத்தில் பறந்து கொண்டிருப்பது போலவே ஒரு உணர்வு. அவன் மேல் பட்டபோது ஏற்பட்ட அந்த பரவசம் அவள் அனு பவித்தறியா ஒன்று. அவளுக்கு அதிலிருந்து மீளவே இஷ்டமில்லை. இப்படி பயந்து பயந்து டூ வீலரில் பட்டும் படாமலும் போனதே இத்தனை சந்தோஷம் தரு மானால் அவனோடு பயமில்லாமல் தனியே கழிக்கும் நாட்கள் வந்தால் எத்தனை ஆனந்தமாக இருக்கும் என்று நினைத்து, அந்த நினைப்பிலேயே பரவசமாகிப் போனாள்.

இவள் அவனைப் பற்றிய விவரமெல்லாம் தெரிந்து கொள்ள நினைத்தாள். ரவிக்கு என்னவோ தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ள பெரிதாக ஒன்றுமில்லை.



அப்பா புத்தி தெரிந்தபோதே போய்விட்டார். அவன் அம்மா இரண்டு வருடம் முன்புவரை இருந்தாளாம். அதற்குக் கொஞ்ச நாள் முன்பிருந்தே கிராமத்தில் தனியாகவேதான் இருந்தாளாம். அவனுக்கு ஒரே ஒரு அண்ணா. அவன் ஒரு தெலுங்குப் பெண்ணைக் காதலித்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டதால் அவள் அவனுடைய தொடர்பையே நிறுத்திவிட்டாள். தஞ்சாவூர் அருகே ஒரு கிராமம் சொந்த ஊர். அங்கிருந்த ஒரு சின்ன வீட்டையும் நிலத்தையும் விற்று, பணத்தை பாங்கில் போட்டிருக்கிறான். இப்போது வேலை செய்யும் மருந்து கம்பெனியில் இவனுக்கு நல்ல பெயர். சீக்கிரமே பதவி உயர்வு கிடைக்க நல்ல வாய்ப்புகள் உள்ளனவாம்.

''இவ்வளவுதான் பெண்ணே என்னைப் பற்றிச் சொல்ல. கை நிறையச் சம்பாதிக்கிறேன். பிக்கல் பிடுங் கல் ஏதும் கிடையாது. இப்படியே காலம் தள்ளி விடலாம். கல்யாணமே வேண்டாம் என்றிருந்தேன் உன்னைப் பார்க்கும் வரை, எப்போது உன்னைப் பார்த்தேனோ அப்போதிலிருந்து என் தூக்கம் போச்சு, என் கவனம் வேறு எதிலும் போகவில்லை. சதா கல்பனா, கல்பனா என்ற நாம ஜபம்தான். என் ஆபீஸிலும் நிறைய பெண்கள் இருக்கிறார்கள். ஆனால் ஒருத்தர்கூட என் மனதில் நிற்கவில்லை. ரொம்ப சமயம் அவர்களின் பெயர்கள் கூட மறந்து விடுகிறது. என் மனதில் நிறைந் திருக்கும் ஒரே பெயர் கல்பனாதான். ஆனால் நான், என் மனதாரக் காதலிக்கும் கல்பனாவிற்கு ஏற்ற கண் நிறைந்த கணவனா என்று நீதான் சொல்லவேண்டும்.''

அவன் கையைத் தன் கைகளோடு சேர்த்துக் கொண்ட கல்பனா ''எத்தனையோ பயம், எவ்வளவோ தயக்கம்

அத்தனையும் தள்ளிவிட்டு உங்க பின்னாடி தைரியமா சுத்தறேன்னா அதிலிருந்து தெரியல்லையா, நீங்க அவ்வளவு அழகுன்னு? இதை நான் தனியா வேறே எடுத்துச் சொல்லணுமாக்கும்'' என்றாள்.

''ஆனா, எனக்கு இன்னும் தயக்கமாத்தான் இருக்கு. நான் சுமாரா இருக்கேன்னு எனக்குத் தெரியும். உன் அழகுக்கு நான் பொருத்தமானவனான்னுதான் சந்தேகமா மிருக்கு. சத்தியமாகச் சொல்றேன் கல்பனா. சில சமயம் நான் நினைப்பதுண்டு. இந்தப் பெண்ணை நாம் ஏன் பார்த்தோம். பார்த்த உடனேயே 'இவள் வாழ்க்கை சிறப்பாக அமையணுமே, இவள் எப்போதும் சந்தோஷமாக இருக்கணுமே இவளைப் பூப்போல வைத்துக் காப்பாற்றும் ஒரு கணவன் கிடைக்கணுமே.' அந்த பாக்கியம் எனக்குக் கிடைத்தால் அந்தக் கடவுளுக்கு நான் மிகவும் நன்றியுடையவனாக இருப்பேன்'' என்றெல்லாம் எண்ணம் ஏன் தோன்றியது?

இவன் பேச்சால் மனமுருகிப் போன கல்பனா, ''நான் என்ன அவ்வளவு அழகாவா இருக்கேன்'' என்றாள்.

''உன் அழகை வர்ணிக்க எனக்கு வார்த்தைகளே கிடைக்கவில்லை.''

''முயற்சிதான் பண்ணுங்களேன், பார்க்கலாம்!'' என்றாள் கல்பனா சிரித்துக் கொண்டே. எந்தப் பெண்ணுக்குத்தான் தன் காதலன் வாயால் தன் அழகை வர்ணிப்பதைக் கேட்க ஆசை இருக்காது?

''முயற்சி பண்ணட்டுமா? எப்படி வர்ணிக்கட்டும்? காலிலிருந்து தலை வரையா, இல்லை தலையிலிருந்து கால் வரையா?'' ''இட்ஸ் யுவர் சாய்ஸ்.''



''ஐய்யே, இது ஒரு பெரிய உலக மகா பிரச்னையா? ஸார் யோசிக்கிறார். முகத்தை மட்டும் வர்ணியுங்கள் போதும்'' என்றாள்.

''அதெப்படி கல்பனா, முகம் மட்டும் அழகாகி விடுமா? நான் முழுசாத்தான் உன்னை வர்ணிப்பேன். ம்ம்.. எப்படி ஆரம்பிக்கலாம்? சரி, உன் தலைப் பின்னல் இருக்கில்லையா? அதுதான் உன் பக்கம் என்னை முதல்லே இழுத்தது. உன் பின்னால் நீ நடக்கும்போது ஆடுதே ஒரு நாட்டியம் எப்ப பார்க்கும்போதும் 'நடையா, இது நடையா, ஒரு நாடகமன்றோ நடக்குது'ன்னு பாடத்தோணும்.''

கல்பனா கலகலவென்று சிரித்தாள். ''இந்தப் பெருமை என் பாட்டியைத்தான் சேரும். எனக்குத் தினம் தவறாமல் கரிசலாங்கண்ணித் தைலம், தானே காய்ச்சினது. அதைத் தடவி ஒரு சிடுக்கில்லாமல் வாரிப் பின்னி விடுவதும், வாரம் தவறாமல் திருஷ்டி சுற்றிப் போடுவதும் அலுக்காம செய்வா. அது மட்டுமா? வெள்ளிக்கிழமை தவறாம மிளகு மஞ்சள் போட்டு, நல்லெண்ணெய் காய்ச்சி அதை உச்சந்தலையில் வெச்சி தேய்ச்சி, பதமா வெந்நீர் விளாவி, தானே வீட்லே காய்ச்சின வெந்தயம் போட்டு அறைச்சு வெச்ச சீயக்காயை கரைச்சு தேய்ச்சு, அலசி, துடச்சி விடுவா. அப்புறமா சாம்பிராணி போட்டு.

''ஸ்டாப், ஸ்டாப்! எனக்கு இந்த விவரம் போதும். என்னை மேலே பேச விடறியா, ப்ளீஸ்! எங்கே விட்டேன்? உன் தலை மயிர் அப்பப்ப நெத்திலே வந்து விழறதும், அதை நீ ஒதுக்கி விட்டுண்டு பேசற விதமும், வாவ்! அந்த அழகைச் சொல்லி மாளாது. உன் புருவம்ங்கறது யாருக்குமே கிடைக்காத அழகு வில். உன்

கண்கள் எத்தனை அழகு தெரியுமா? எனக்கு உன் கண்களைப் பார்த்துப் பேசவே ரொம்ப பயம்.''

''பயமா, ஏன்?''

''ஏன்னா, அதை பாத்துட்டா நான் என்னை மறந்துடறேன். இந்த உலகத்தை மறந்துடறேன். உன் கண்ணையே பாத்துண்டு ஆயுள் முழுவதும் இருந்துடலாமான்னு தோணும். அப்படி ஒரு காந்தக் கண்கள். அது கருவண்டு மாதிரி எப்படி சுழல்றது பாரு! அழகான மூக்கு. கொஞ்சமே கொஞ்சம் கூடியிருந்தாலும், குறைஞ்சிருந்தாலும் உன் அழகு டோட்டலா கெட்டுப் போயிருக்கும். உன் கன்னத்தைப் பாத்தா எனக்கு வர வெறியை எவ்வளவு கஷ்டப்பட்டு அடக்கிக்கறேன், தெரியுமா?''

கல்பனா பதிலே பேசவில்லை, கண்கள் சொருகி ஒரு மயக்க நிலையில் இருந்தாள்.

''இப்போ முக்கியமான விஷயத்துக்கு வருவோமா? இந்த உதடு இருக்கே, உதடு'' என்றவன் ஸ்ஸ் என்று எச்சிலை உள்ளிழுத்துக் கொண்டான். ''ரொம்பவே மெனக்கெட்டிருக்கார், அந்த பிரம்மா. ஓரத்தில் அப்படி அழகா டார்க்கா பென்சிலாலே வரைஞ்சிட்டு, ஒரு ஷேட் லைட் கலரா, ஒரு மிகச் சரியான ஷேப்போடே ஈரமா, ம்ம்...! எப்போதான் நான் அதை...!''

இப்போ ''ஸ்டாப், ஸ்டாப்'' என்று கத்துவது இவள் முறையாயிற்று.

'இரு. இரு! பாக்கியெல்லாம் சொல்ல வேண்டாமா?''

''வேண்டாம், வேண்டாம்'' என்று அலறினாள்.

''சங்குக் கழுத்து. இல்லாத இடை, அழகான நீளமான கையும், காலும் மற்றபடி வாளிப்பு, தங்கத்தை உருக்கிச்



செய்த மாதிரி நிறம். நீ எனக்குக் கிடைச்சா என் பாக்கியத்தை என்னன்னு சொல்ல முடியும்? கடவுளுக்கு நன்றி என்று நூறு கோடி முறை சொல்ல வேண்டியது தான். வேறென்ன சொல்ல?''

''தேங்க்யூ, ரவி தேங்க்யூ!'' என்று அவன் தோளில் லேசாக சாய்ந்து கொண்டாள் கல்பனா.

''இப்போ என் முறை. நான் சொல்லட்டுமா? நான் உங்களை மாதிரியெல்லாம் சிரமப்படவே மாட்டேன். உயரம், கலர், கம்பீரம், ஆண்மை, அழகு, கவர்ச்சி எல்லாத்தையும் போட்டு செய்த 100% மன்மதன் நீங்க. உங்களைக் கல்யாணம் பண்ணிண்டா நான்தான் உங்களை விட அதிர்ஷ்டசாலி. நான் உங்களைவிட அதிகம் நன்றி சொல்லணும் அந்தக் கடவுளுக்கு!'' என்றாள்.

அவன் அப்படியே பேசிக் கொண்டிருந்த அவள் உதடுகளை அழுத்தமாக தன் விரல்களால் கிள்ளி, கிள்ளிய தன் கைகளுக்கு முத்தம் பதித்தான்.

''இது நியாயமா இங்கு கொடுக்க வேண்டியது இல்லை'' என்றான் ரவி.

''ஐயய்யோ, கொஞ்ச நாளைக்கு என்னை விட்டுடுங்க சாமி'' என்றாள் கல்பனா வெட்கத்துடன்.

பேசிக் கொண்டிருக்கையில் மதியமாகிவிடவே எழுந்து நடந்தார்கள். கேண்டீனுக்குப் போய் இரண்டு ஸாண்ட்விச்சும், கூல்டிரிங்கும் வாங்கிக் கொண்டார்கள். இவர்கள் சாப்பிடும்போதே மிருகங்களுக்கெல்லாம் ஆட்கள் உணவு கொடுக்க ஆரம்பித்தார்கள்.

''ஏன் ரவி! நீங்க எத்தனையோ ஊருக்கெல்லாம் போறீங்களே, அங்கெல்லாம் நான்வெஜ் சாப்பிடுவீங்களா?'' என்று சற்று கலவரத்துடன் கேட்டாள்.

என்றைக்கோ மீரா வீட்டில் சாப்பிட போனபோது "அவா வீட்லே பூண்டு, வெங்காயம் மட்டும்தான் சேப்பாளா, இல்லே இன்னும் ஏதாவது உண்டா?" என்று பாட்டி குத்தலாகக் கேட்டது நினைவுக்கு வந்தது ஒன்றிரண்டு முறை மீராவீட்டு ஃப்ரிட்ஜில் முட்டை கண்ணில் பட்டிருக்கிறது. ஆனாலும் "என்ன பாட்டி நீ! அவா வீட்டிலேயும் ஒரு பாட்டி இருக்கா, அவளும் ஆசாரம்தான். அதெல்லாம் எதுவும் சாப்பிட மாட்டா" என்று சொல்லி விட்டாள்.

'ஐயோ, இவனை இத்தனை நாளா இந்தக் கேள்வியை கேக்காம போனோமே' என்று தோன்றியது இப்போது. இவன் "சாப்பிடுவேன்'னு சொன்னா இவனை விட்டுவிட முடியுமா? கடவுளே, இப்போது இவன் வாயிலிருந்து என்ன பதில் வருமோ' என்ற பதைபதைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இல்லேம்மா, நான் சுத்த சைவம்தான். தவறிப் போய்க்கூட வேறெதுவும் சாப்பிட மாட்டேன் கவலைப் படாதே, செல்லம்!" என்றான் ரவி.

நேரம் ஆகிவிட்டதால் அவர்கள் கிளம்பினார்கள். சமர்த்தாக தினம் காலேஜிலிருந்து வீட்டிற்குப் போகும் நேரத்தில் வீடு போய் சேர்ந்தாள் கல்பனா.

நாட்கள் நகர்ந்தன. எக்காரணத்தைக் கொண்டும் தன் காதல் இப்போதெல்லாம் வீட்டிற்குத் தெரியவே கூடாது என்பதில் கல்பனா ரொம்பவே கவனமாக இருந்தாள். அவள் உணர்ச்சிக்கு ரவி முழு மதிப்பு கொடுத்தான். ரொம்பவே கண்ணியமாக நடந்து கொண்டான். தவறிப் போய் கூட பரிசுகள் வாங்கிக் கொடுத்து அவளை தர்ம



சங்கடத்தில் ஆழ்த்தவில்லை. ஆனால் சந்திப்புகள் மட்டும் தொடர்ந்தன.



## 11

ஒரு நாள் மீராவிடமிருந்து போன் வந்தது. அவள் எப்போதுமே யாருக்கும் தொந்திரவு தராமல் இரவு 9 மணிக்கு மேல்தான் பேசுவாள். அம்மா, அப்பா அவர்கள் ரூமிலும், பாட்டி ஹாலிலும் படுத்துக் கொண்டு விடுவார்கள். சாதனாவும், கல்பனாவும் தங்கள் ரூமில் இருப்பார்கள். சாதனா சீக்கிரம் தூங்கி காலையில் சீக்கிரம் எழுந்து மொட்டை மாடிக்குப் போய்விடுவாள் படிக்க.

அன்று போனை எடுத்த கல்பனா "மீரா எப்படியிருக்கே?" என்றாள்.

"ஏய், யாருன்னு கேக்காம நீ பாட்டுக்குப் பேசறே?" என்றாள் மீரா.

"எனக்கு உன்னைத் தவிர போன் பண்றவா யாரு?" என்றாள் கல்பனா.

"எப்படி இருக்கே, கல்யாணி? நான் தான் காலேஜை ரொம்ப மிஸ் பண்ணறேன். நானே படிச்சுக்கறதும் ரொம்பவே கஷ்டமாத்தான் இருக்கு" என்றாள் மீரா.

"ட்யூஷன் வேணுமானா வெச்சுக்கலாமே, மீரா!" என்ற கல்பனா "அப்பா பாட்டியெல்லாம் எப்படியிருக்காங்க?" என்று விசாரித்தாள்.

"டியூஷனுக்குத்தான் சரியான ஆளா தேடிண்டு இருக்கேன், கல்யாணி! பாட்டி வழக்கம்போல. அங்கே நீங்க எல்லாம் எப்படியிருக்கீங்க?"

''வழக்கம்போலத்தான். காலேஜிலும் பெரிய விசேஷம் ஒண்ணையும் காணோம். நீ சொல்லு! அங்கிள் கொஞ்சமாவது தெளிஞ்சிருக்காரா, இல்லே அப்படியே தான் இருக்காரா?''

''இரண்டுமில்லை. ஒரு குரல் சொல்லி அழத்தான் உனக்குப் போன் பண்ணினேன்.''

''என்ன ஆச்சு மீரா?'' என்று பதறினாள் கல்பனா.

''அப்பா ரொம்ப குடிக்கறார், கல்யாணி'' என்றாள் மீரா.

''என்னது, அங்கிள் குடிக்கிறாரா, நிஜமாகவா சொல்றே?'' என்றாள் கல்பனா.

''ஆமாம், கல்யாணி! அப்பா ஆர்மிலே சேர்ந்த புதுசில் எல்லாம் குடிச்சிண்டிருந்தவர்தான். அப்புறம் அம்மாவைக் கல்யாணம் பண்ணின நாளா அதெல்லாம் குறைச்சுண்டுட்டார். குடிக்கிறது ஆர்மிகாரங்களுக்கு ஒரு பெரிய விஷயமே இல்லை. இங்கே குடிக்காதவங்க ரொம்ப குறைச்சல் தான். ஆனா அப்பா இப்போ அம்மா போன துக்கத்திலேருந்து மீள வழி தெரியாமதான் பாவம் குடிக்கிறார். நிறைய நாள் பாட்டிக்குத் தெரியாமல் இருக்கு. தெரியற அன்னிக்கு பாட்டி வருத்தப்படுவா, பாவம்!''

''ஐயோ! உடம்பு வீணாப் போயிடுமே, மீரா!''

''ஆமாம், கல்யாணி! அதுதான் என் கவலையும். ஆபீஸிலேயே இவர்தான் பெரிய அதிகாரி. வேலையிலேயும் ரொம்ப கெட்டி. அதனாலே யாரு கண்டுக்கப் போறா, சொல்லு? அவருடைய செகரட்டரி ஒருநாள் எங்கிட்டே தனியாச் சொல்லி வருத்தப்பட்டார்.''



''பேசாம சென்னையிலேயே இருந்திருக்கலாம்.''

''ஆமாம், கல்யாணி! எனக்கு இப்போ என்ன தோணறது தெரியுமா? அம்மா செத்துத்தான் போனா, இன்னும் ஒரு 5 வருஷம் முன்னாடியே போயிருந்தா அப்பா பேசாம இன்னொரு கல்யாணம் பண்ணிண்டிருக்கலாம்.''

''ஏன், இப்பக்கூட உங்கப்பாவுக்கு அப்படி ஒண்ணும் வயசாயிடலியே! இந்தக் குடிப் பழக்கத்தை நிறுத்தவாவது இதைப் பண்ணிப் பார்க்கலாம். என்ன, ஒண்ணு. வரவ உன்னைப் படுத்தாம இருக்கணும்.''

''நான் அவளைப் படுத்தாம இருந்தா போறதாக்கும்!'' என்றாள் மீரா கூலாக. ''ஏய், உங்கிட்டே சொல்ல ருசிகரமான நிகழ்ச்சிகள் எல்லாம் நிறைய இருக்கு, தெரியுமா? ஆனா நேரிலே பார்க்கறபோதுதான் சொல்ல முடியும்.''

''எனக்குக் கூட உங்கிட்டே சொல்லிக்க ஒரு சுவையான விஷயம் இருக்கு. தெரியுமா? ஆனா அதை நேரிலே தான் சொல்ல முடியும்'' என்றாள் கல்பனா.

''ஏய், கல்யாணி யாரையாவது சைட் அடிக்கிறியா, என்ன? ஜாக்கிரதைடி! உன் அழகுக்கு நிறைய பேர் வருவானுங்க. ஏமாந்துடாதே! அவ்வளவுதான் சொல்வேன். சரி, இப்போ நேரமாயிடுத்து. உன்னோட பேசினதிலே மனசு லைட்டாயிடுத்து, கல்யாணி! வேறே ஒண்ணுமில்லையே, வெச்சுடட்டுமா?

''ஓகே, மீரா குட்நைட்'' என்று சொல்லி கல்பனா போனை வைத்தாள்.

இன்று அவளுக்குத் தன் காதலைப் பற்றி மீராவிடம் சொல்ல வேண்டும் என்று மிகவும் ஆசையாக இருந்தது

போனில் சொன்னால் யார் காதிலாவது விழுந்து வைத்தால் அவ்வளவுதான்.

எப்படியும் பரிட்சை எழுதத்தான் அவள் வருகிறாளே! அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தவள் தொடர்ந்து, 'இதைச் சொன்னால் மீரா தன்னைத் திட்டத் தான் செய்வாளே ஒழிய ஒருநாளும் ஆதரிக்க மாட்டாள்' என்றும் தோன்றியது. 'எப்படியானாலும் நாளைக் காலையிலா கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறோம்? குறைந்த பட்சம் இன்னும் மூன்று வருடங்களுக்கு காதல் மட்டும்தான்' என்று நினைத்துக் கொண்டாள். அத்தை வேறு எப்போது பேசினாலும் ஒரு தடவையாவது இவள் கல்யாணத்தைப் பற்றிப் பேசுவாள். அன்று முழுவதும் பாட்டியும் இதே பேச்சாகத்தான் இருப்பாள். அன்று காலையில் கூட பாட்டி அப்பாவிடம், ''ஏம்பா, கல்பனாவின் கல்யாணத்தைப் பத்தி ஏதாவது யோசிச்சியா?'' என்று கேட்டாள்.

''அம்மா, பெண்களுக்கு 18 வயசுக்கு முன்னே கல்யாணம் பண்றது சட்ட விரோதம். நான் ஒரு வக்கீலா இருந்துண்டு அப்படிச் செய்ய முடியுமா?''

''அது சரி, 18 வயசுக்கு முன்னாடி கல்யாணம் பண்ணக் கூடாதுன்னு சொல்ற அரசாங்கம், வீட்டுக்கு வீடு பண வசதி இல்லாமே 30 வயசுக்கு மேலே, கிழடு தட்டிப் போய் பெண்களை வெச்சுண்டிருக்காளே, அவாளுக்கெல்லாம் கல்யாணம் பண்ணி வைக்குமா?''

''இது கரெக்ட்டான வாதம்தாம்மா! நீ பேசாம வக்கீலுக்குப் படிச்சிருக்கலாம். ஆனா, பெண்களுக்கு 18 வயசு ஆச்சுன்னா, அவங்களுக்கா நல்லது எது, கெட்டது



எதுன்னு தெரிஞ்சுக்கற பக்குவம் வந்துடறது. வாழ்க்கை நல்லபடியா அமைஞ்சுடுத்துன்னா பரவாயில்லை, இல்லேன்னா அவா தன் காலிலேயாவது நிக்கலாமோல்லியோ? அதுக்கு படிப்பு ரொம்ப அவசியம்மா. இதையெல்லாம் உத்தேசித்துதான் 18 வயசுன்னு வெச்சுருக்கா. என்னைக் கேட்டா, 18 வயசுகூட தப்பு தான், 20 வயசாவது ஆகணும் அப்பத்தான் ஒரு டிகிரியாவது வாங்கிண்டு அவசியமானால் வேலைக்குப் போக முடியும். இப்பல்லாம் 25 வயசுக்குக் குறைஞ்ச பொண்களுக்கு யாரும் வரன் பாக்கறது இல்லை.''

''இப்படி எதையாவது சொல்லி என் வாயை அடைச்சுடு! ரதி மாதிரி உன் பொண்ணு காலேஜுக்குப் போறச்சே, அவ ஒழுங்கா திரும்பி வரணுமேன்னு வயத்திலே நெருப்பைக் கட்டிண்டு உட்கார்ந்திருக்க வேண்டியிருக்கு, தெரியுமா?'' என்றாள்.

இப்படிப் பல்வேறு கலவையான எண்ணங்களுடன் தூங்கிப் போனாள் கல்பனா.

பெரியவர்களின் நியாயமான சில கவலைகள் அர்த்தமுள்ளதாகவும் ஆகிவிடுகிறதில்லையா?

அன்று காலை எழுந்திருக்கும்போதே ரவியின் நினைவுடனேயே எழுந்திருந்தாள் கல்பனா. ''பாட்டி, பூவை கொஞ்சம் தொங்கற மாதிரி வை, பாட்டி! எல்லோரும் அப்படித்தான் வெச்சுக்கறா. சுருட்டி வெச்சுண்டு போனா எல்லாரும் சிரிக்கறா, பாட்டி!'' என்றாள் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு.

''இந்தா, இந்த வயசுக்கு இந்த அலங்காரம் போதும்'' என்றாள் பிச்சம்மா. கல்பனாவிற்கு முகம் வாடிவிட்டது.

''மூஞ்சியைத் தூக்காதே! அழ அழ சொல்றவாதான் தன் மனுஷா. பாக்கிப் பேருக்கென்ன, சிரிச்சுட்டு போயி டுவா, போகட்டுமே!'' என்றாள் பிச்சம்மா.

தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு விடுவிடு வென்று பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்தாள். ரவிக்கு இப்படி பூ வைத்துக் கொண்டால் பிடிக்காது. அவன் ஏற்கனவே ஒரு தடவை சொல்லி இருக்கிறான். ''நிறைய பூவை தொங்கலா வெச்சுண்டு, அதையும் முன்னாலே விட்டுண்டா, உன்னை அப்படியே கடிச்சுச் சாப்பிடணும் போல இருக்கும்டா'' என்று, இதெல்லாம் இந்த பெரியவங்களுக்குப் புரியாது. பத்தாம் பசலி! பத்தாம் பசலி!

பஸ் ஸ்டாண்டில் போய் நின்றாள். ரவியைக் காணோம். வேண்டுமென்றே ஒரு பஸ்ஸைத் தவற விட்டாள். அடுத்த பஸ் வருவதற்குள் ரவி வந்து இவள் கையில் ஒரு காகிதத்தைத் திணித்துவிட்டு புல்லட்டில் வேகமாகப் போய்விட்டான்.

பஸ்ஸிலிருந்து இறங்கியபின் ஒரு புஸ்தகத்திற்குள் வைத்துக் கொண்டு அந்தக் கடிதத்தைப் படித்தாள். ஜாக்கிரதையாக இரண்டு பேர் பெயரும் குறிப்பிடாமல் எழுதியிருந்தான். ''இன்னிக்கு சாயந்திரம் நாம் கண்டிப் பாக பீச்சில் சந்தித்தே ஆகணும். விஷயம் ரொம்ப அவசரம்'' என்று எழுதியிருந்தான்.

கிளாஸில் அவளுக்கு இருப்பே கொள்ளவில்லை. அப்படி என்ன அவசரமாயிருக்கும்? என்று ஒரே குறு குறுப்பு! கடைசி வகுப்பை கட்டடித்துவிட்டு வெளியே விரைந்தாள். தயாராக இருந்த அவனுடன் பீச் படகு மறை வுக்குள் மறைந்தாள். காலேஜ் என்று வந்து விட்டாலே



எல்லோரும் கொஞ்சம் அப்படி இப்படித்தான் நடந்து கொள்வார்கள். யாரும் கண்டு கொள்ள மாட்டார்கள். அது ஒரு விதத்தில் வசதியாக இருந்தது.

''என்ன ரவி, என்ன விஷயம்?'' என்று கேட்டாள் கல்பனா வழக்கமாக அவர்கள் உட்காரும் இடத்தில் உட்கார்ந்ததும்.

''நம்ம கல்யாணத்தைப் பத்தி நாம வேறே விதமா நினைச்சிண்டிருந்தோமில்லையா? இப்போ அவசரமா நாம கல்யாணம் பண்ணிண்டே ஆகணும்'' என்றான் ரவி.

''ஏன் ரவி, என்ன ஆச்சு? எதுக்கு இந்த டென்ஷன்?''

''எங்க அண்ணி ஒரு தெலுங்குப் பொண்ணுன்னு சொல்லியிருக்கேன் இல்லையா?''

''ஆமா, அது ஒரு லவ் மேரேஜ்னும் கூட சொன்னீங்க.''

''லவ்வாவது மண்ணாங்கட்டியாவது! என் அண்ணா வும் சேல்ஸ் ரெப்ரஸன்டேடிவ் தான். கர்நூல் பக்கம் வேலை விஷயமா போயிருக்கான். யாரையோ சைட் அடிச்சிருக்கான். மாதா மாதம் அங்கே வேலை விஷய மாய்ப் போகும்போதெல்லாம் அதே பொண்ணைப் பார்க்கவே ஏதோ கவர்ச்சி. சபலத்தில் மாட்டிக்கிட்டான். ஊர்லே இருக்கறவங்க பார்த்தாங்க. எல்லாரும் ஒருத்தருக் கொருத்தர் உறவு. வேண்டியவங்க வேறே. பெண்ணோட அப்பா கேட்டுக்கிட்டார்ன்னு எல்லோருமா சேர்ந்து கோழியை அமுக்கற மாதிரி அமுக்கிட்டாங்க. அவ்வளவு தான்.''

''சரி, அந்தக் கல்யாணத்திற்கும் நமக்கும் என்ன சம்பந்தம்?''

''ஐயோ, மண்டு! எங்கண்ணன் பார்க்கவே ரொம்ப நல்லா இருப்பார். ஏன்னு கேக்க அம்மா ஒருத்தியைத் தவிர வேறே யாரும் கிடையாது. நல்ல சம்பாத்தியம். அதனால்தான் வலுக்கட்டாயமா தலைலே கட்டிட்டாங்க. இப்போ நானும் அதே மாதிரிதான். இருந்த அம்மாவும் இப்போ இல்லை. எங்க அண்ணி பார்க்க நல்லாவே இருக்க மாட்டாங்க. நல்ல உயரம், பருமனா ஆம்பிளைக்கு பொம்பிளை வேஷம் போட்டாப்பல இருப்பாங்க. சரி, இப்போ எனக்கு வந்த டேஞ்சர் என்ன தெரியுமா? எங்க அண்ணிக்கு ஒரு தங்கை இருக்கா. அண்ணியைப் போலவே இருப்பா.''

''அப்படியா?''

''பெயர் என்ன தெரியுமா? பாரதம்மா.''

''ஐயோ, இதென்ன பேரு? உங்கண்ணி பேரென்ன?''

''ஓ. அதைச் சொல்லலியா? அவங்க பேரு சூர்ய காந்தம்.

''கஷ்டம், கஷ்டம்!''

''இரண்டு பேர் விஷயத்திலியுமே எல்லாமே கஷ்டம்தான். அண்ணாதான் மாட்டிக்கிட்டார். இப்போ என்னை அவங்க தங்கச்சியைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி ரொம்பவும் வற்புறுத்தறாங்க. போன தடவை நான் ஊருக்குப் போனபோதே இந்தப் பேச்சு வந்தது. நான் வேறே ஒரு பொண்ணைக் காதலிக்கறேன். எனக்கு நீங்க தெலுங்கு பொண்ணைக் கல்யாணம் பண்ணியிருப்பதே பிடிக்கவில்லை. நான் ஒரு நாளும் அந்தப் பெண்ணை கல்யாணம் பண்ணிக்க மாட்டேன். நீங்க அவங்ககிட்டே பக்குவமா சொல்லிடுங்கன்னேன் அண்ணன்கிட்டே



அதை அவரு அண்ணிகிட்டே சொல்லலே போல யிருக்கு. இப்போ அண்ணி ரொம்பவே மிரட்டுறாங்க. நான் வேலை கிடைச்சு செட்டில் ஆகிறவரைக்கும் அண்ணன், அண்ணி தயவிலேதான் இருந்தேன். அத னாலே மூஞ்சியை முறிச்சுக்கறாப்பலே அவங்ககிட்டே சொல்ல முடியலே!''

''ரவி'' என்று அழைத்து அவன் கைகளைப் பற்றும் போதே கண் கலங்கி விட்டாள் கல்பனா.

''கல்பனா, இதென்ன பைத்தியம் மாதிரி! என் இஷ்ட விரோதமா எனக்குக் கல்யாணம் பண்ணி வைக்க யாராலும் முடியாது. நீ கலங்காம இரேன், ப்ளீஸ்!'' என்று அவள் கண்களைத் துடைத்து விட்டான்.

இந்தக் கவலையிலும் அவன் தொட்டதும் மெய் சிலிர்க்கத்தான் செய்தது.

''நேத்திக்கு எங்கண்ணன் எனக்குப் போன் பண்ணி, ''நீ காதலிக்கற பெண்ணை அடுத்த முஹூர்த்தத்தி லேயே ஏதாவது ஒரு கோவில்லே வெச்சு தாலி கட்டி இங்கே கூட்டிகிட்டு வா. உனக்குக் கல்யாணம் ஆயிடிச் சுன்னா இவ ஆர்ப்பாட்டம் அடங்கிடும்''ன்னு சொன் னார்.

''ஏண்ணா, அப்படி அவசரமா கல்யாணம் பண்ணிக்க முடியுமா? அந்தப் பொண்ணு படிப்பு முடிஞ்சு அதுக்கப் பறம்தான் கல்யாணம்னு நினைச்சிகிட்டிருக்கோம்'' அப்படீன்னேன்.

''இல்லேடா, ரவி! என்னாலே இந்த ரோதனை தாங்க முடியல்லேடா. கிணத்திலே குதிச்சுடுவேன்னெல்லாம் பயமுறுத்தறாடா! அவங்க ஜாதியில, பொண்ணு அழகா

இருந்தாலே ஒரு பையனா பிடிக்கணும்னா எத்தனையோ லட்சமில்லே செலவாகும்? பாரதம்மாவுக்கு கல்யாணம் பண்ணணும்னா எவ்வளவு லட்சம் பிடிக்குமோ? நமக்குன்னா ஒண்ணுமே கொடுக்க வேண்டாம். பையனும் லட்சணமா இருக்கான், பணமும் 'கொடுக்க வேண்டாம் அதுதான் அவங்க கணக்கு. முதல் பொண்ணு ஜாதி விட்டு ஜாதி ஒரு அரவ (தமிழ்) பையனை லவ் பண்ணின போது அமர்க்களப்பட்டிச்சு. இப்போ பெரிய விஷயமில்லையே அது! அதுவுமில்லாமே, இப்போ உன்னை இழுத்துப் போட்டுக்கறதிலே இருக்கற அட்வாண்டேஜ் அவங்களுக்கு ரொம்ப நல்லாவே தெரிஞ்சு போச்சு. இதை எக்காரணம் கொண்டும் விடமாட்டாங்க. இதிலேருந்து நீ தப்பிக்கணும்னா நான் சொல்றதுதான் ஒரே வழி. நீ உடனே கல்யாணத்தை முடிச்சிட்டீன்னா நீயும் தப்பிச்சுக்கலாம். நானும், 'எனக்குத் தெரியாமல் பண்ணிக்கிட்டான்'னு சொல்லி தப்பிச்சுக்கலாம். அதனாலே நான் சொன்னதை உடனே செய்யிடா''ன்னு கேட்டுகிட்டார்.

''அண்ணா, என்னாலே அப்படியெல்லாம் உடனே கல்யாணம் செஞ்சுக்க முடியாதண்ணா. இதிலே எத்தனையோ யோசிக்க வேண்டியிருக்கு''ன்னு எப்படி எப்படியெல்லாமோ சொன்னேன்.

அதற்கு அவர் ''ஏய் ரவி! உனக்கு இந்த விஷயத்தோட ஸீரியஸ்னஸ் புரியல்லே! உங்க அண்ணி பாரதம்மாவையும் இங்கே கூட்டி வந்து வெச்சுகிட்டு ரொம்பவே டார்ச்சர் பண்றாடா. நீ தான் அவ புருஷன்னு அவளுக்கு நல்லா ப்ரெயின்வாஷ் பண்ணி வெச்சுருக்கான்னு நினைக்கிறேன். அந்தப் பொண்ணும் ஏதேதோ



கற்பனையிலே இருக்கு போலிருக்கு. நான் உனக்குச் சாதகமா என்ன பேசினாலும் எடுபடல்லே. அதுனாலே தான் நான் உன்னை இவ்வளவு கெஞ்சறேன். நான் ஒருத்தன் இவங்ககிட்டே மாட்டிகிட்டு அவஸ்தை படறது போதாதா; நீ வேறே மாட்டிக்கணுமா? நல்லா யோசனை பண்ணி ஒரு நல்ல முடிவுக்கு வா. அவ்வளவு தான் நான் சொல்லுவேன், அப்பறம் உன் இஷ்டம்''ன்னு சொல்லி போனை வெச்சுட்டார். எனக்கு என்ன பண்ணறதுன்னே புரியாமேதான் உன்னை அவசரமா வரச் சொன்னேன். இரண்டு பேரா யோசிச்சா ஒரு தீர்வு பிறக்காதா?'' என்று சொல்லி முடித்து ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான், ரவி.

அவன் கலங்காதே என்று சொன்னால் ஆயிற்றா? கல்பனா தாரை தாரையாகக் கண்ணீர் பெருக்கிக் கொண்டுதான் இருந்தாள். அவள் நிலையைக் கண்டு அவன் துடித்துப் போய்விட்டான்.

''என் கண்ணில்லே, அழாதேடா! என்னை விட நீ புத்திசாலின்னு நான் நினைச்சுகிட்டு இருக்கேன். நீயே இப்படி மனம் தளர்ந்து போனால் அப்புறம் எனக்கு மூளையே வேலை செய்யாது. கண்ணைத் துடைச்சிகிட்டு உன்னை நிதானப்படுத்திக்கோ! இப்போ என்ன பண்ணலாம், சொல்லு?''

இவளுக்கு நிஜமாகவே என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

ரவியே தொடர்ந்தான். ''சரி, இப்படிப் பண்ணினால் என்ன? நான் நேரே உங்க வீட்டிற்கு வந்து உங்கப்பாவோட பேசவா?''

கல்பனா பதறிப் போனாள். "ஐயய்யோ! தயவு பண்ணி அப்படி மட்டும் பண்ணிடாதீங்க! அப்புறம் என் காலை உடைச்சி வீட்டுக்குள்ளேயே வெச்சுடுவாங்க. நோ காலேஜ். உங்களைப் பார்க்கவும் முடியாது. அந்த எண்ணமே வேண்டாம்" என்றாள்.

"வேறே வழி? அடுத்து நாம யோசிக்க வேண்டியது நாம எங்காவது போய் கல்யாணம் செஞ்சுக்கறதுதான். என்ன சொல்றே?"

கல்பனாவிற்கு சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. பேயறைந்தாற்போல் அவனைப் பார்த்தாள்.

"என்ன கண்ணம்மா, அப்படிப் பார்க்கறே? எனக்கு இதைவிட்டா வேறே வழியேதும் தெரியல்லே. இதுவும் ஒர்க்கவுட் ஆகலேன்னா நம்ம காதலை மறக்கறதுதான் ஒரே வழி. ஆனா உன்னை மறந்து என்னாலே ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாதுடா. நான் செத்துடுவேன்". அவன் கண்கள் கலங்கி விட்டன.

கல்பனா நெக்குருகிப் போனாள். அவன் கைகளை எடுத்து தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டவள், "ரவி, உங்களை மறந்து நான் மட்டும் உயிரோடு இருப்பேன்னு நினைக்கிறீங்களா? ஆனா எனக்கு ரொம்பவே பயமா இருக்கு ரவி!" என்றாள்.

"பயமாத்தான் இருக்கும். கண்ணம்மா! என்னை நீ முழுசா நம்பறியா, இல்லையா? அதை முதல்லே சொல்லு!"

"என்ன ரவி, இப்படிக் கேக்கறீங்க? என் உடல், பொருள், ஆவி எல்லாமே நீங்கதான்."

"ரொம்ப தாங்க்ஸ்டா, செல்லம்! உனக்கு என் மேலே இருக்குற நம்பிக்கை எனக்கு யானை பலம் தருகிறது.



உனக்கு நானும் ஒரு உறுதி அளிக்கிறேன், கல்பனா! எக்காரணத்தைக் கொண்டும், எந்தக் காலத்திலும் நான் உன்னை கண் கலங்க விட மாட்டேன். உன்னை என் கண் போல் பாதுகாப்பேன். இது சத்தியம். சரி நேரமாயிடிச்சு, கிளம்பி வீட்டுக்குப் போ! நான் சீக்கிரமே ஒரு நல்ல திட்டத்தோடு வரேன். அதுக்கு முன்னாடி உன்னைக் கலங்கிய கண்களோடு பிரிய எனக்கு மனசில்லை. எங்கே, ஒரு தரம் சிரி! என் தங்கம் இல்லே! நீ கவலையே படாதே! உன்னை நான் ராணி மாதிரி பார்த்துப்பேன். வா, சந்தோஷமா வீட்டிற்குப் போகலாம்" என்றான்.

அவன் வேறு பக்கம் போக இவள் பஸ் பிடித்து வீட்டிற்கு வந்தாள். வீட்டிற்குள் நுழைந்ததுமே பாட்டி சரியாகக் கேட்டு விட்டாள். "ஏன்டி, ஏதோ பேயறைஞ்ச மாதிரி இருக்கே? உடம்புக்கு முடியல்லியா?" என்றாள்.

"வயிறு ரொம்ப வலிக்கறது பாட்டி."

"சரி, வா! மோர்லே வெந்தயம் போட்டுத் தரேன். குடி. சரியாப் போயிடும். ஏதாவது சுத்திப் போட்டுருந்த எலுமிச்சம் பழம் எதையாவது மிதிச்சுட்டியா, என்ன? வா, போய் மந்திரிச்சிண்டு வரலாம் எல்லாம் சரியாயிடும்" என்றாள் பாட்டி.

பேத்தி சின்னக் குழந்தை என்று அவளின் நினைப்பு. அவள் ரொம்பவே பெரியவளாகி விட்டாள் என்பது பாட்டிக்குத் தெரியவில்லை.



## 12

ரவிச்சந்திரன் இரண்டே நாளில் ஒரு திட்டத்தோடு கல்பனாவைச் சந்தித்தான். இருவரும் அடுத்த இரண்

டாவது நாள் புறப்பட்டு விமானத்தில் ஹைதராபாத் போய்விடுவது. இரவு அவனுடைய நண்பன் சேகர் வீட்டில் தங்கிக் கொள்வது. மறுநாள் கோவிலில் கல்யாணம். சாயந்திரம் ஷாப்பிங். மறுநாள் அண்ணன் வீட்டிற்கு விசிட். திரும்ப வந்து ஜாலியான தனிக் குடித்தனம் என்று சுருக்கமாக தன் திட்டத்தை விவரித்தான். இவளுக்கோ நூறு சந்தேகம்.

''ஏன் பிளேனில் போகணும்? அவ்வளவு செலவழிக்கணுமா?'' என்றாள்.

''ஐயே, அதுக்குள்ளே பெண்டாட்டியா லட்சணமா சிக்கனம் போதிக்க ஆரம்பிச்சுட்டியா? அதுக்குக் காரணம் இருக்குடா. கண்ணா! நம்பர் ஒன். ரயிலில் யார் கண்ணிலாவது படுகிற வாய்ப்பு அதிகம். நம்பர் டூ. என் காதலி மனைவியாகப் போகிறாள். அவளை நலுங்காம பிளேனில் கூட்டிப் போகணும்னு ஆசை. செலவழிக்கப் பணமும் இருக்கு. போதுமா விளக்கம்?'' என்றான்.

''சரி, உங்களுக்கு ஹைதராபாத்துக்கு மாற்றலாவது உறுதியாகி விட்டதா?''

''ஆமாம் கல்பனா! அதனால்தான் அங்கே போறோம். எனக்கு அங்கே நிறைய சிநேகிதர்கள் இருக்காங்க. அதிலும் சேகர் எனக்கு ரொம்பவே நெருக்கம். அவனிடம் சொல்லியாச்சு.''

''அவர் வீட்லே யாரெல்லாம் இருக்காங்க?''

''பயப்படாதே! அவன் கல்யாணம் ஆனவன்தான். அவனும் அவன் மனைவியும்தான் அவங்க வீட்லே.''

இவள் இன்னும் ஏதோ கேட்க முற்படுமுன், ''இரு. இரு! என்னதான் உனக்கு என் மேலே நம்பிக்கை



இருந்தாலும் நிறைய பயங்கள், கேள்விகள் உன் மனதில் இருக்கும். முதலிலேயே விளக்கமா சொல்ல வேண்டியது என் கடமை.

''நீ காலேஜுக்குக் கிளம்பிப் போற மாதிரியே கிளம்பிப் போயிடு. இரண்டு முப்பதுக்கு நம்ம பிளைட். நான் பனிரெண்டு மணிக்கு வந்து உன்னைக் கூட்டிண்டு போறேன்.''

''எனக்கு டிரெஸ்ஸஸ்?''

''இரு. இரு! என்னை முழுசா சொல்லவிடு. அதுக்கப்பறம் ஏதாவது சந்தேகம் இருந்தா கேளு. சரியா?''

''நாம ஹைதராபாத் சேர்ந்ததும் நேரே என் பிரெண்ட் வீட்டிற்குப் போறோம். சாயந்திரம் வெளியே ஷாப்பிங் போறோம். அவன் இருக்கறது சிக்கட்பல்லி. பாதி ரங்கநாதன் தெரு மாதிரின்னு வெச்சுக்கோயேன். நமக்கும் ஒரு வீடு சின்னதா, ஒரு பெட்ரூம் ஹால், கிச்சன்னு பாத்து அட்வான்ஸும் கொடுத்தாச்சு. அதே ஏரியாவிலே தான் பாத்து வெச்சுருக்கான். அன்னிக்கே போய் உனக்கு வேண்டிய டிரெஸ்ஸஸ், பேஸ்ட், பிரஷ் அதெல்லாம் முதல்லே வாங்கிப்போம். மறுநாள் காலை கல்யாணம். பத்து சிநேகிதர்களுக்கு சேகர் வீட்லே சாப்பாடு. ஏற்பாடு பண்ணியாச்சு. சாயந்திரம் போய் குடித்தனத்துக்கு தேவையான சாமான்கள் எல்லாம் வாங்கிப்போம். அப்புறம்... ராத்திரி என்ன தெரியுமா?''

''போதும், போதும்! வழிய வேண்டாம்.''

''நீ கிரீன் சிக்னல் கொடுக்கற வரைக்கும் நான் ரொம்ப சமத்தா இருப்பேன், தெரியுமா? அப்புறம் இரண்டு நாள்லே எங்க அண்ணா வீட்டிற்குப் போயிட்டு வந்து

நம்ம புது வாழ்க்கையை ஆரம்பிக்கறோம், என்ன? சரி, இப்போ இந்த திட்டத்திலே தடை எங்கே சொல்லு.''

''திட்டமெல்லாம் சரியாத்தான் இருக்கு. ஆனா அப்பா, அம்மா கையாலே ஒரு புடவைகூட வாங்கிக்காம ஒரு கல்யாணம். எங்கம்மா எனக்காக சின்ன வயசிலிருந்து எத்தனை சாமான் சேர்த்து வெச்சுருக்கா, தெரியுமா? அதெல்லாம் ரொம்ப வருத்தமா இருக்கும்.''

''வருத்தப்படாதே! என் உயிரையே நான் உன் மேலே வெச்சுருக்கேன். எனக்காக நீ செய்யும் தியாகம்னு நினைச்சுக்கோ.''

''தியாகம் என்ன? எனக்கும் உங்க மேலே கொள்ளை ஆசை இருக்கறதனாலேதான் வரேன். ஆனாலும் ரொம்ப பயமாத்தான் இருக்கு.''

''இன்னும் என்ன பயம்? அதுதான் எல்லாம் தீர்மானம் பண்ணிட்டோமே, அப்புறம் என்ன?

''என்னவோ ஹைதராபாத்னு முன்னே பின்னே நான் பார்க்காத ஒரு ஊருக்குப் போய் நீங்க என்னை என்ன பண்ணுவீங்களோ, யாராவது நிஜாம், அரபு ஷேக்னு யார்கிட்டேயாவது வித்துட்டீங்கன்னா, நான் என்ன பண்ணுவேன்?''

''ஹை, இந்த ஐடியா ரொம்ப நல்லா இருக்கே! நல்ல லாபமும் வரும்போல இருக்கே!'' என்று ரவி சொல்லவும் டக்கென எழுந்தாள் கல்பனா.

ரவி உடனே அவள் கையைப் பிடித்து இழுத்தான். அவன் இழுத்த வேகத்தில் அவன் மடியில் தொப்பென வீழ்ந்தாள் கல்பனா. வீழ்ந்த அடுத்த கணத்திலிருந்து வீடு வந்து சேரும் வரை அவள் மனதிலிருந்த பரவச



உணர்ச்சியும், கண்ணில் ரவியும் தவிர வேறெந்த புலனும் வேலை செய்யவில்லை. காதல் என்றால் இப்படித்தான் மூளையை மழுங்கச் செய்யுமா?

திடீரென்று அவளுக்கு ஒரு சந்தேகம். தான் நிஜமாகவே அவனைக் காதலிக்கிறோமா, இல்லையா? அன்றைக்கு ஒரு நாள் அவன் வந்து 'தன்னை ஹைதராபாதிற்கு மாற்றி விடுவார்கள் போலிருக்கிறது' என்று சொன்னபோது தான் எப்படி அழுதோம் என்று நினைத்துக் கொண்டாள். அவன்தான் இவளை சமாதானப் படுத்தினான். 'மாற்றி விடுவார்கள் போலிருக்கிறது என்று தான் சொன்னேன், மாற்றி விட்டார்கள் என்று சொன்னேனா?' என்று,

''இல்லையே, அவங்க வற்புறுத்தினா என்னை விட்டு விட்டுப் போக வேண்டித்தான் இருக்கும். அப்போ என்னை அம்போன்னு விட்டுவிட்டுப் போயிடுவீங்க, இல்லே?'' என்று திரும்ப அழுதாள்.

''இதோ பார்! தீராம போனா வேலையை விட்டுவிட்டு வேறே வேலையாவது தேடிப்பேனே தவிர ஒரு நாளும் இனி வாழ்க்கையிலே உன்னை விட்டுவிட்டு இருக்கிற துங்கறது கிடையவே கிடையாது'' என்றெல்லாம் சொல்லி, கண்ணைத் துடைத்துவிட்டு, ''நீ சிரி, ராஜாத்தி! நீ சிரிக்கிறதைப் பார்த்துட்டுப் போனாத்தான் என்னாலே வீட்டுக்குப் போய் தூங்க முடியும்'' என்று சமாதானப் படுத்தினானே, அது ஒன்று போதாதா, இருவருக்கும் இடையே உள்ள காதல் எத்தனை வலுவானது என்று தெரிய?

இவர்கள் புறப்படும் நாளும் வந்தது. காலையில் சீக்கிரம் எழுந்து தயாரானாள் கல்பனா. ''என்னடி

இன்னிக்கு இத்தனை சீக்கிரம் திருப்பள்ளி எழுச்சி ஆயிடுத்து?'' என்று கேட்டாள் பாட்டி.

''கஷ்டமான டெஸ்ட் ஒண்ணு இருக்கு, பாட்டி! அதுக்குக் கொஞ்சம் பாத்துக்கணும். அதுதான் ரொம்ப டென்ஷனா இருக்கு'' என்றாள்.

ஆமாம்! இன்று அவள் வாழ்வின் மிகக் கஷ்டமான பரிட்சை ஆயிற்றே!

''டென்ஷன் எதுக்குடி கண்ணு, ஸரஸ்வதிக்கு அர்ச்சனை பண்ணின குங்குமத்தை இட்டு விடறேன், வா! பரிட்சையை நன்னா எழுதிட்டு வருவே'' என்றாள் பாட்டி.

''ஏம்மா, கஷ்டமான டெஸ்டுன்னா இன்னிக்கு நான் வேணா உன்னைக் கொண்டு விடட்டுமா?'' என்று கேட்டார் மூர்த்தி.

''வேண்டாம் அப்பா, உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்? நானே பாத்துக்கறேன்'' என்று சொல்லி கிளம்புவதற்குத் தயாரானாள். இத்தனை பிரியமான அப்பா அம்மாவை ஏமாற்றுகிறோமே என்று ஒரு கணம் தோன்றியது. அழுகையாக வந்தது.

ஒரு மாதிரி புறப்பட்டு விட்டாள். என்ன நினைத்துக் கொண்டாளோ, பாட்டிக்கு நமஸ்காரம் செய்தாள். ''எதுக்குடி'' என்ற பாட்டியிடம், ''இல்லை பாட்டி! இன்னி பரிட்சையிலே ஃபர்ஸ்ட் வருவேன்னு பிரண்ட்ஸுங்க கிட்டே பெட் கட்டியிருக்கேன். நான் இந்தப் பரிட்சையிலே ஜெயிக்கணும்னு ஆசீர்வாதம் பண்ணு, பாட்டி!'' என்றாள்.

''நன்னா எழுதி நன்னா ஜெயிப்பே! எல்லாத்திலேயும் என் பேத்திதான் முதல். நம்ம குடும்பத்திலேயே



எல்லாருக்கும் மூளை ஜாஸ்தி. உனக்கென்னடி குறைச்சல்? சந்தோஷமா போயிட்டு வா'' என்று மனதார வாழ்த்தினாள்.

அழுகை வந்து விட்டது கல்பனாவிற்கு. முகத்தைப் பாட்டிக்கே காட்டாமல், ''அம்மா, சாதனா, பை!'' என்று கத்திவிட்டுப் புறப்பட்டாள். ஆனால் எல்லா வருத்தமும் தன் மனத்திற்கினியவனைப் பார்க்கும் வரைதான். அந்த ஆறடி அழகனைப் பார்த்த மாத்திரத்தில் எல்லா புலன்களும் செயலிழந்து போயின.

அவன் வரும்போதே ஒரு டாக்சியில் தான் வந்திருந்தான். அவன் ரூமைக் காலி பண்ணிவிட்டு வந்திருந்ததால் இரண்டு சூட்கேஸ் இருந்தது அவனுக்கு. ஏர்போர்ட்டை நோக்கி விரைந்தது வண்டி. பின் சீட்டில் ரவியின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்ட கல்பனா மெல்ல அவன் தோள்களில் சாய்ந்து கொண்டாள். ஆதரவாக அவள் தோள்களை அணைத்துக் கொண்டு அவள் கை விரல்களை நீவி விட்டான். அவள் டிரைவர் இருப்பதை ஜாடையாகச் சுட்டிக் காட்டினாள். எந்த டிரைவர் இந்த மாதிரி காட்சிகளையெல்லாம் பார்க்காதவர்?

விமான நிலையத்தில் உட்கார்ந்திருக்கும் வேளையில் கூட இவளுக்கு ஒரே உதறல்தான். விமானத்தில் ஏறி இவள் ஜன்னல் ஓர சீட்டில் உட்கார்ந்தாள். அவன் இவளுக்கு அடுத்த சீட். பெரிய சீசன் நேரம் ஒன்றும் இல்லாததால் நிறைய சீட்கள் காலியாக இருந்தன. இவர்கள் பக்கத்தில் யாரும் இல்லாதது சௌகரியமாக இருக்கவே, அவன் தோளில் அவள் சாய, அவன் இவள் கன்னத்தைத் தடவி, தலையைக் கோதி ஆறுதல் படுத்தினான். ஏதோ லைட்டாக டிபன் வந்தது. கல்பனா

''வேண்டாம், வேண்டாம், எனக்கு வயத்தைப் புரட்டு கிறது'' என்றாள். ரவி அவளைக் கட்டாயப்படுத்தி சாப் பிடச் சொன்னான்.

''இல்லைடா கண்ணு, நீ சாப்பிடணும். காலையிலே புறப்படற அவசரத்திலேயும், பயத்திலேயும் அரை குறையா சாப்பிட்டிருப்பே. அதுதான் வயத்தைப் புரட்டு கிறது. நீ இதுக்குமுன்னே பிளேனில் போயிருக்கே, இல்லையா'' என்று கேட்டான்.

''போயிருக்கேன், ரவி! நிறைய தடவை. ஆனால் இது அதனால் இல்லை. பயம்தான்னு நினைக்கிறேன்'' என்றாள் கல்பனா.

''இன்னும் எதுக்குடா பயம் உனக்கு? இனிமே பயமே கூடாது. ஒவ்வொரு நிமிஷத்தையும் என்ஜாய் பண்ணு! வாழ்க்கையில் ஒரு விஷயத்தை முடிவு பண்ணின அப்புறம் அதை நினைத்து சும்மா கவலைப் படக்கூடாது. உன்னை நன்றாக, ராணி போல பாத்துக்க வேண்டியது என் கடமை. நான் அதைப் பூரணமா உணர்ந்துதான் உன்னைக் கூட்டி வந்திருக்கிறேன். நீயும் என்மேல் அன்பும், நம்பிக்கையும் பரிபூரணமா வெச்சுத்தான் என் கூட வந்திருக்கே. இனிமே நோ நெகடிவ் ஃபீலிங்க்ஸ். சரியா? நான் உங்கப்பா, அம்மா பார்த்த மாப்பிள்ளை யில்லையே தவிர, அவங்க ஒரு மாப்பிள்ளை எப்படி நடந்துக்கணும்னு நினைக்கிறாங்களோ அதை விட மேலா நடந்து, உனக்கு எல்லா விதத்திலேயும் ஒரு நல்ல கணவனாக இருப்பேன்'' என்றெல்லாம் சொல்லி அவளை சமாதானப்படுத்தினான்.





## 13

விமானம் ஹைதராபாத் விமான நிலையத்தில் இறங்கியது. ரவி இவள் கையை இறுகப் பற்றி, கீழே இறங்கி, சாமான்களை கலெக்ட் செய்து கொண் டான். ரவியின் நண்பன் சேகர் ஏற் கனவே விவரம் தெரிந்திருந்ததால் இவர்களை வரவேற்க விமான நிலை யம் வந்திருந்தான். இவர்களைப் பார்த்ததும், ''வெல்கம், வெல்கம், மணமகளே, மணமகனே, இரண்டு பேருக்கும் நல்வரவு''ன்னு சொல்லி கையில் வைத்திருந்த பூங் கொத்தை இவர்கள் கையில் கொடுத்தான்.

''தேங்க்யூ வெரிமச்'' என்று சொல்லிவிட்டு வெட்கத் தோடு சிரித்தாள் கல்பனா.

எல்லோருமாக சேகர் ஏற்பாடு செய்திருந்த டாக்சியில் பேகம்பெட் ஏர் போர்ட்டிலிருந்து சிக்கட்பல்லியில் இருக்கும் சேகரின் வீட்டை நோக்கிப் புறப்பட்டார்கள்.

''பரவாயில்லை, இங்கே ஏர்போர்ட் ஊருக்குள்ளேயே இருக்கு இல்லையா?'' என்று கேட்டாள் கல்பனா.

''இல்லம்மா, சீக்கிரமே அதை ஊரை விட்டு வெளியே கொண்டு போகப் போகிறார்கள். இதற்காக இங்கிருந்து சுமார் 35 கி.மீ. தூரத்தில் ஷர்ஷாபாத் என்ற இடத்தில் மிகவும் பிரும்மாண்டமாக கட்டுகிறார்கள். அது இந்தியாவிலயே சிறந்த ஏர்போர்ட்டாக இருக்கும் என்கிறார்கள்'' என்றான் சேகர்.

வீட்டில் போய் இறங்கினால் சேகர் மனைவியும் அன்பைப் பொழிந்தாள். எல்லாம் திட்டமிட்டபடியே நடந்தது. நேரம் ஆக, ஆக கல்பனாவிற்கு வீட்டு நினைவு

வர. முகம் சுண்டிப் போயிருந்தது. அவ்வப்போது மற்றவர்கள் அவளை கலகலப்பாக்க வேண்டியிருந்தது.

சேகர் இவளிடம், ''நிஜமாச் சொல்கிறேன், கல்பனா! எனக்கு ஒரு தங்கை இருந்திருந்தால் அவளை நிச்சயமாக ரவிக்குத்தான் கொடுத்திருப்பேன். ரொம்ப நல்ல பையன். உன் வாழ்க்கையை ஒரு நல்லவன் கையில் தாம்மா ஒப்படைச்சிருக்கே. பயமில்லாமே, கவலையில் லாமே நிம்மதியா இரு'' என்றான்.

''ஆமாம், கல்பனா! ரவி அண்ணா ரொம்பவே நல்லவர், கண்ணியமானவர். இத்தனை வருஷமாகத் தெரியுமே, வரப் போக இருக்கிறாரே, ஒரு வரம்பு மீறின செய்கையோ, பேச்சோ பார்க்க முடியாது. அண்ணின்னு தான் கூப்பிடுவார். உனக்கு கிடைத்திருக்கிறவர் மிகவும் நல்ல மனிதர் தானம்மா. நிம்மதியா இரு'' என்றாள் உமா.

கல்பனாவின் உடல்தான் இங்கிருந்ததே தவிர மனமெல்லாம் சென்னையில் இருந்தது. அவள் செய்த இந்த செயல் அவளையே வெகுவாக பாதித்திருந்தது.

மதியம் இவர்கள் வருமுன்பே உமா சமைத்து வைத் திருந்தாள். இரவு சமையலுக்கு நான் ஏதாவது உதவி செய்கிறேன் என்று உள்ளே போன கல்பனாவிற்கு சப்பாத்திக்கு மாவு பிசையத் தெரியவில்லை. மாவு ஒடிய ஒட்டத்தில் சப்பாத்தியை கோதுமை தோசையாக்கி விட்டாள் உமா. சட்னிக்கு தக்காளியை நறுக்குகிறேன் என்று விரலை வெட்டிக் கொண்டாள். பதறிப் போய் விட்டான் ரவி.

''ஒண்ணுமில்லை, ஒரு சின்ன கீறல்தான் எல்லாம் சரியாகிவிடும்'' என்று ரவியை சமதானப் படுத்தினாள்



கல்பனா. அவளுக்குத் தனக்கு ஒன்றும் தெரியவில் லையே என்று வெட்கமாக இருந்தது.

''ஏய், எல்லோரும் கற்றுக் கொண்டேவா பிறக்கி றாங்க? எல்லாம் தானே ஜோரா கத்துப்பே. இதுக்கெல் லாமா கவலைப் படுவாங்க?'' என்றாள் உமா.

சாயந்திரம் போய் இவளுக்குத் தேவையான உள் ளாடைகளை வாங்கிக் கொண்டார்கள். அதற்குப் பிறகு உமா இவளை வற்புறுத்தி 2 செட் ஸல்வார் கமீஸ் வாங் கிக் கொள்ளச் சொன்னாள். ''என்ன அண்ணி இது? நான் இதுவரை இதெல்லாம் போட்டதேயில்லை. சௌகரியமா இருக்குமான்னு தெரியல்லையே!'' என்றாள் கல்பனா.

''ரொம்ப சௌகரியமா இருக்கும்மா. உனக்கு புடவை கட்டியும் பழக்கமில்லை. சின்னப் பொண்ணு நீ. இனிமே பாவாடை வாங்கி, பிளவுஸ் தைச்சு இதெல்லாம் அவ சரத்துக்கு சரி வராது. அதனால்தான் இந்த இரண்டு செட்டு. நைட்டியும்கூட இரண்டு வாங்கிக்கோ. எல்லாம் சௌகரியமா இருக்கும். நான் கூட கல்யாணத்திற்கு முன்னால் இதெல்லாம் போட்டுக் கொண்டதேயில்லை. எல்லாம் தானே பழகிவிடும். தவிர உன் அழகுக்கு எது போட்டுண்டாலும் நன்னாத்தான் இருக்கும்'' என்று வற்புறுத்தி வாங்கிக் கொள்ளச் சொன்னாள்.

ரவி நிறைய பணம் கொடுத்து அனுப்பியிருந்தான். கல்பனா தனக்கு அப்பா அவ்வப்போது கொடுக்கும் பணத்திலிருந்து நிறைய சேமித்து வைத்திருந்தாள். அதனால் அவள் கையிலிருந்த 3000/- ருபாயையும் எடுத்து வந்திருந்தாள். அவள் தன் டிரெஸ்ஸுக்கெல்லாம் பணம் தருவதாகச் சொன்னபோது ரவி அவளைக் கோபித்துக் கொண்டான். தனியே அவளைக் கூப்பிட்டு,

''இதோ பார், கல்பனா! நானே இனிமே உன்னுடையவன். என் சம்பாத்தியம், சேமிப்பு எல்லாமே உன்னுடையதுதான். அந்த எண்ணத்தை உறுதியாக மனதில் வளர்த்துக் கொள். பிரித்துப் பேசினா எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு. கோபமும் வருது. என்னை நம்பி வந்த உனக்கு அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய வக்கில்லாதவனாக இருந்தால் உன்னைக் கூட்டிண்டே வந்திருக்க மாட்டேன். நீ குழந்தையே ஒழிய, நான் வளர்ந்த ஒரு ஆண் மகன். நாலையும் யோசித்துத்தான் எதையும் செய்வேன். முதல்லே அந்தப் பணத்தை உள்ளே வை'' என்று சற்று கடுமையாகவே சொன்னான். கல்பனா பேசாமல் அந்தப் பணத்தை உள்ளே வைத்து விட்டாள். அவன் அப்படிக் கோபித்துக் கொண்டது உள்ளுக்குள் பூரிப்பாக இருந்தது.




சாதனா வீட்டிற்கு வந்து, டிபன் சாப்பிட்டுவிட்டு எழுதும் வேலை இருக்கிறது என்று ரூமிற்குள் போய் விட்டாள். ராமமூர்த்தி ஆபீஸ் ரூமில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தார். உள்ளேயே வரவில்லை. வித்யாவும் பிச்சம்மாவும் மறுநாள் காலைக்குத் தேவையான காய்கறிகளை நறுக்கிக் கொண்டிருந்தார்கள்.

மணி டங்கென்று ஒரு தடவை அடித்தது. நிமிர்ந்து பார்த்த வித்யா, ''மணி அஞ்சரை ஆயிடுத்தே. இன்னும் இந்தப் பொண்ணு கல்பனாவைக் காணுமே. தினம் அஞ்சு அடிக்கும் முன்னாடியே வந்துடுவாளே!'' என்றாள் கவலையோடு.



''நாலு குட்டிகளாகச் சேர்ந்து தெரு முனைலே பேசிக் கொண்டிருக்கும். வரவர கொஞ்சம் கூடப் பயமே இல்லாமே போயிடுத்து. ஒரு நாள் நன்னா கொடுத்தோம்னாத்தான் சரிவரும். வரட்டும், சொல்றேன்'' என்றாள் பிச்சம்மா.

மணி ஆறு, ஆறரை என்று நகர்ந்து கொண்டே இருந்தது. ராமமூர்த்தியும் உள்ளே வந்துவிட்டார். அவர் உள்ளே வரும்போது குழந்தைகள் கண்ணில் பட வேண்டும். உள்ளே வந்தவர் 'சாதனா, கல்பனா' என்று குரல் கொடுத்துக் கொண்டே வந்தார்.

''என்னப்பா?'' என்று கேட்ட சாதனா ''அப்பா எனக்கு எழுதற வேலை நிறைய இருக்குப்பா, நான் போறேன்'' என்று சொல்லிவிட்டு உள்ளே போனாள்.

''கல்பனா எங்கே காணோம்?'' என்று கேட்டார் ராமமூர்த்தி.

''இன்னும் வரலேப்பா. பெண் குழந்தை வீட்டுக்கு வர வேளையைப் பார்த்தியா? மணி ஆறரைக்கு மேலே ஆறது.. காலம் இருக்கிற இருப்பிலே நாமானா மடியிலே நெருப்பைக் கட்டிக்க வேண்டியிருக்கு. இதுகளுக்கு எங்கே புரியறது?'' என்று புலம்பினாள் பிச்சம்மா.

''எதாவது ஸ்பெஷல் கிளாஸ் இருக்குன்னு சொன்னாளா?'' என்று வித்யாவைப் பார்த்துக் கேட்டார் ராமமூர்த்தி.

''ஒண்ணும் சொல்லலியே! அதான் கவலையா இருக்கு. இரண்டு பேரும் ஒரே ஸ்கூலானாலும் சேந்து போயிட்டு சேர்ந்து வரலாம். இப்போ கவலையாகத்தான் இருக்கு'' என்று அவள் பங்குக்கு புலம்பினாள்.

சாதனாவைத் திரும்பக் கூப்பிட்டார் ராமமூர்த்தி. வெளியே வந்த அவளிடம் ''இந்தக் கல்பனாவை எங்கே காணோம். இன்னும் காலேஜிலிருந்து வரல்லியேம்மா. உங்கிட்டே ஏதாவது சொன்னாளா?'' என்று கேட்டார்.

''இல்லையேப்பா. மணி ஏழுக்கு மேலாச்சேப்பா எனக்கு ஒண்ணும் தெரியல்லையே.''

''என்ன நடந்துதோ என்னவோ, பகவானே, எனக்கு படபடப்பா வரதே. நான் என்ன பண்ணுவேன்'' என்று பிச்சம்மா அழ ஆரம்பிக்க, ''அம்மா, நீ கொஞ்சம் சும்மா இரேன், என்னைக் கொஞ்சம் யோசிக்க விடு'' என்றார் ராமமூர்த்தி.

''ஏம்மா சாதனா! நீ பஸ்லதானே வந்தே? பஸ்ஸெல்லாம் ஓடறதா? இல்லை ஏதாவது திடீர் ஸ்டிரைக்கா?'' என்று கேட்டார் மூர்த்தி.

''இல்லேப்பா, எல்லா பஸ்ஸும் ஓடறது'' என்றாள் சாதனா.

''நான் முதல்லேந்து அடிச்சுக்கறேன். காருக்கு ஒரு டிரைவரைப் போட்டு வீட்டிலிருந்து புறப்பட்டு நேரே ஸ்கூல்லே கொண்டு விட்டு, கூட்டி வரச் சொல்லுன்னு. என் பேச்சு எங்கே எடுபடறது?''

''அம்மா சும்மா இருன்னு சொல்றேனில்லையா. வித்யா, கல்பனாவோட ஸ்நேகிதிகள் யார் யார் நம்பரெல்லாம் இருக்கோ கொண்டா, விசாரிக்கலாம்'' என்றார் மூர்த்தி.

''மீரா ஊரைவிட்டு போகவிட்டு வீட்டுக்குப் போய்வர மாதிரியெல்லாம் அவளுக்கு க்ளோஸ் பிரண்ட்ஸே கிடையாது. இதுலே 3, 4 நம்பர் இருக்கு. பண்ணிப் பார்க்கறேன்'' என்ற சாதனா போனை நோக்கி நடந்தாள்.



வித்யா தன் பங்கிற்கு ஒரு மூன்று நம்பரைக் கொடுத்தாள். அவர்களுக்குப் போன் பண்ணி நாசுக்காக விசாரித்தார்கள். கடைசியில் எல்லோருமாக முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தனர். வித்யாவும் சாதனாவும் மௌனமாக அழ, ''ஐயோ, என் பேத்திக்கு என்ன ஆச்சோ யாராவது தூக்கிண்டு போயிருப்பாளோ இல்லை ஏதாவது ஆக்ஸிடென்ட் ஆகியிருக்குமோ? ஏழுமலையானே, வேங்கடரமணா குழந்தையை நல்லபடியா எங்ககிட்டே கொண்டு வந்து சேர்த்துடுப்பா'' என்றபடியே அழ ஆரம்பித்து விட்டாள் பிச்சம்மா.

இப்போது அவளைச் சும்மா இரு என்று அதட்டக்கூட திராணியின்றி அமர்ந்திருந்தார் ராமமூர்த்தி முகம் இறுகி இடிந்து போய் உட்கார்ந்திருந்த அவரைப் பார்க்க வித்யாவிற்குப் பயமாக இருந்தது. ''ஏதாவது செய்யுங்களேன், இப்படி உட்கார்ந்திருந்தா எப்படி?'' என்றாள்.

''என்ன பண்ணலாம், நீயே சொல்லு?'' என்று ''எப்படியும் போலீசுக்குப் போய்தான் ஆகணும்'' என்றார்.

''டேய், டேய் மூர்த்தி! என்ன பேசறே? நம்ம குடும்பத்து மானம் கப்பலேறிடும்டா. வேண்டவே வேண்டாம்'' என்றாள் பிச்சம்மா.

''என்னம்மா நீ? நம்ம குழந்தையைப் பத்தி நாமளே தப்பா யோசிக்கலாமா? ஏதாவது விபத்து ஆகியிருக்கப் போறதே. எங்காவது ஆஸ்பத்திரியிலே கொண்டு போயிருந்தாங்கன்னா, போலீஸ் மூலமாத்தான் தெரிஞ்சுக்கணும்'' என்றார் மூர்த்தி.

அதற்குள் வித்யா, ''அடடா, மறந்தே போனேனே! ஹரிப்ரியா வீட்டுக்கு அடிக்கடி போயிண்டே இருப்

பாளே! கொஞ்சம் போய் கேட்டுட்டு வாயேன், சாதனா'' என்று அவசரப் படுத்தினாள்.

அதற்குள் மூர்த்தி, ''நீ நேராப் போயி 'எங்கக்கா இன்னும் வரலே, இங்கே வந்தாளான்னு' கேக்காதே. ஏதோ புஸ்தகத்தை அக்கா வாங்கிண்டு வரச் சொன்னான்னு கேட்டு நைஸா தெரிஞ்சுண்டு வாம்மா. போனேன், வந்தேன்னு வா! நீ திரும்பி வரவிட்டுத்தான் மேலே என்ன செய்யலாம்னு யோசிக்கணும். போயிட்டு சட்டுன்னு வா'' என்றார்.

வாயே திறக்காமல் செருப்பை மாட்டிக் கொண்டு கிளம்பினாள், சாதனா. மூவரும் பேயடித்ததுபோல் உட்கார்ந்திருந்தனர். பத்து நீண்ட நிமிடங்களுக்குப் பின் திரும்பி வந்த சாதனா, ''அங்கே வரலியாம்பா'' என்றாள்.

''காலம்பறவே ஆக்ஸிடெண்ட் ஏதாவது ஆகியிருக்குமோ? நம்ம சர்க்கிள்லே போலீஸ் ஸ்டேஷன் எங்கேயிருக்கு?'' என்று கேட்டபடியே எழுந்திருந்தார் மூர்த்தி.

தன் பெண்மேலே அவருக்கு அத்தனை நம்பிக்கை. அவள் ஏதாவது தப்பான வழிக்குப் போயிருப்பாளோ என்ற எண்ணம்கூட அறவே எழவில்லை. ரூமிற்குப் போய் லைட்டையும், பேனையும் நிறுத்தப் போன சாதனா, அவசரத்தில் திறந்தே வைத்திருந்த தன் புத்தகத்தையும், நோட்டையும் மூடி வைத்தாள். பேனாவை மேஜை இழுப்பறையில் போடப் போனவள் அங்கு நீளமான வெள்ளைக் கவர் ஒன்று புதிதாக இருப்பதைப் பார்த்தாள். அவசரமாக அதை வெளியே எடுத்த சாதனா கவரின் மேல் ''திரு. ராமமூர்த்தி'' என்று எழுதியிருப்பதைப் பார்த்து, ''அப்பா, இங்கே ஒரு கவர் இருக்கு.



கல்பனா கையெழுத்து மாதிரி இருக்குப்பா'' என்று கத்தியபடியே வெளியே வந்தாள்.

மூர்த்திக்கும், வித்யாவிற்கும் முன்னால் பிச்சம்மா தான் அவளிடம் ஓடி வந்தாள். ''என்னடி லெட்டர் அது? ஐயோ, பகவானே! எனக்கு வயத்தில் புளியைக் கரைக்கிறதே. நான் என்ன பண்ணுவேன்'' என்று கதறியபடி வெடுக்கென அந்தக் கடிதத்தைப் பறித்தாள்.

*''அப்பா, அம்மா, பாட்டிக்கு கல்பனா நமஸ்காரம். நான் எனக்கு மனதிற்குப் பிடித்திருக்கும் ஒருவருடன் என் இஷ்டப்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்ள இன்று வீட்டை விட்டுப் புறப்படுகிறேன் நீங்கள் எல்லாம் வேண்டாம் என்பதில்லை. சொன்னால் நீங்கள் நிச்சயமாக ஒத்துக் கொள்ள மாட்டீர்கள் என்று தெரியும். அதனால்தான் இந்த முடிவு. கல்யாணம் ஆன பிறகு கொஞ்ச நாள் கழித்து உங்கள் ஆசீர்வாதம் பெற வருவேன். அதற்குள் உங்கள் கோபம் தணிந்துவிடும் என நம்புகிறேன். என் மீது கோபப்படாதீர்கள். மன்னித்து விடுங்கள். சாதனா உங்கள் எண்ணங்களை பூர்த்தி செய்வாள். சாதனா பை!*

*உங்கள் மன்னிப்பைக் கோரும்*

*கல்பனா.*

அந்தக் கடிதத்தை முதலில் முழுவதும் படித்தது பிச்சம்மா. மற்ற மூவரும் அந்தக் கடிதத்தைப் படிக்கும் மும்முரத்தில் பாட்டியை கவனிக்கவில்லை. படித்து முடிக்கும் தருணத்தில் சாதனா ''அப்பா, பாட்டியைப் பாருங்கோ'' என்று அலறினாள். பிச்சம்மாள் ஹால் சோபாவில் அப்படியே சரிந்திருந்தாள். கண்களிரண்டும்

அப்படியே நிலை குத்தியிருந்தன. மூர்த்தி அவளை அம்மா, அம்மா என்று உலுக்கினார். அதற்குள் வித்யா ஓடிப் போய் தண்ணீர் கொண்டு வந்து பாட்டியின் முகத்தில் தெளித்தாள். ஆனால் ஒரு அசைவும் தெரியவில்லை. சாதனா பாட்டி மார்பில் காது வைத்து கேட்க, மூர்த்தி பல்ஸ் பார்க்க ஒரு அசைவும் தெரியவில்லை. மிகவும் பயந்துபோன மூர்த்தி ''சாதனா, ஓடிப்போய் பக்கத்து வீட்டு டாக்டரைக் கூட்டிவா, ஓடு!'' என்றார். அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் டாக்டர் அங்கிருந்தார். அதற்குள் வித்யா கல்பனாவின் அந்த லெட்டரை திரும்ப கவரில் போட்டு உள்ளே டேபிள் டிராயரிலேயே வைத்தாள்.

அவசரமாக மூச்சிரைக்க வந்த டாக்டர் ''என்னப்பா மூர்த்தி, என்ன ஆச்சு அம்மாவுக்கு?'' என்று சொல்லிக் கொண்டே பிச்சம்மாவின் கையைப் பிடித்து நாடியைப் பார்த்தார். அவரின் முகம் கருத்து விட்டது. மறுபடியும் ஸ்டெதஸ்கோப் வைத்து அவளை நன்றாக பரிசோதித்தவர் ''சாரி, மூர்த்தி! இனிமே அம்மா இல்லையப்பா உனக்கு'' என்று சொல்லி ஆதரவாக மூர்த்தியின் கையைப் பிடித்துக் கொண்டவர், ''என்னாச்சு?'' என்று கேட்டார்.

திகைத்துப் போய் நின்ற மூர்த்திக்கு தன் சுய நினைவு வருவதற்கு சில நிமிடங்கள் பிடித்தன. தடுமாறியபடியே ''ஒண்ணுமேயில்லையே! சாதாரணமாகத்தான் பேசிக் கொண்டிருந்தாள், திடீரென்று அப்படியே சாய்ஞ்சுட்டாள். அவ்வளவுதான். என்ன மாமா இது?'' என்று சொல்லி அழ ஆரம்பித்தார். டாக்டர் சற்று நேரம் மௌனமா இருந்தார் பிறகு ''மூர்த்தி, மனதை திடப்படுத்திக் கோப்பா. இது உனக்கு ஈடு செய்ய முடியாத இழப்புதான்.



ஆனா உங்கம்மா பச்சைக் குழந்தையா உன்னை விட்டு விட்டு போகலியே. எழுந்திருப்பா. ஆக வேண்டிய வேலையைப் பாரு'' என்று சொல்லிவிட்டு ஆதரவாக மூர்த்தியின் தோளை தட்டிக் கொடுத்தார். மூர்த்தியோ டாக்டரின் கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு ''அம்மா, மாமா.. எங்கம்மா'' என்று கேவ ஆரம்பித்தார்.

''மூர்த்தி, மாமி ஒரு நல்ல ஜீவன். அநாயாசமாக மரணம் சம்பவிச்சிருக்குப்பா அவருக்கு. பிளட் பிரஷர், சுகர் என்று ஒரு பிரச்னையும் இல்லாததற்கு இது ஒரு அதிசயம் தான். என்ன செய்யலாம் எல்லாம் ஈசன் விளையாட்டு. ஆக வேண்டியதைப் பாருப்பா, நான் போய் எங்காத்து மாமிகிட்டே சொல்றேன்'' என்று வெளியே நடந்தார். வெளியே இருந்தே அவர் தன் மனைவியைக் கூப்பிடும் குரல் கேட்டது.

மூர்த்தி ''அந்த லெட்டர் எங்கே'' என்று உறுமினார் வித்யாவைப் பார்த்து. அதற்கு அவள் ''அதை இங்கே வந்து படியுங்கோ'' என்று அழுகையினூடே சொன்னாள். ''கொண்டா'' என்று அதை வாங்கியவர் இன்னொரு முறை அதை ஊன்றிப் படித்ததும் சுக்கு நூறாகக் கிழித்துப் போட்டார்.

''அவள் ஸ்கூல் எக்ஸ்கர்ஷன் போயிருக்கிறாள். மூன்று பேரும் விசாரிப்பவர்களிடம் எல்லாம் அப்படியே சொல்லணும் ஒரே மாதிரி. அப்பத்தான் மானம் போகாமலிருக்கும்'' என்றாள் வித்யா.

''இனிமே எனக்கு ஒரே பெண்தான். மூத்த பெண் செத்துப் போயிட்டா. நம்பிக்கைத் துரோகி! எங்கம்மாவைக் கொன்ன கொலைகாரி'' என்றார் மூர்த்தி.

''அவளைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டாமா? ரொம்ப சின்னப் பொண்ணு. எவனாவது ஏமாத்தி நடுத்தெருவிலே விட்டுடப் போறான். ப்ளீஸ்! ஏதாவது செய்யுங்களேன்'' என்றாள் வித்யா கண்ணீர் பெருக்கியபடி.

''அம்மா எப்படியெல்லாம் அவளைப் பத்தி கனவு கண்டாள்? ஒரு நிமிஷத்திலே எல்லாத்தையும் நாசம் பண்ணிட்டாளே! நான் அந்த ஓடுகாலிக் கழுதையைத் தேடுவதாயில்லை. அவள் எப்படியோ ஒழியட்டும். நான் என் அம்மாவை நல்லபடியா பரலோகத்திற்கு அனுப்பற வழியைப் பார்க்கிறேன்'' என்றார்.

சாதனா, ''பாட்டி, பாட்டி! இப்படி ஏன் பாட்டி திடீர்னு எங்களையெல்லாம் தவிக்க விட்டுவிட்டு போயிட்டே?'' என்று பாட்டியைக் கட்டிக் கொண்டு கதறினாள்.

திரும்ப டாக்டரும் அவர் மனைவியும் வந்தார்கள். ''ராத்திரி லேட்டாகிவிட்டது. அக்கம் பக்கத்திற்கு காலைலே சொல்லிக்கலாம். உங்க தங்கைக்கு மட்டும் போன் பண்ணுங்கோ'' என்றார் டாக்டர்.

ரேணுகாவிற்கு போன் போட்ட மூர்த்தி, ''ரேணுகா, ரேணுகா'' என்று கூப்பிட்டாரே ஒழிய மேலே பேச முடியவில்லை. ஒரே அழுகை. அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு வித்யாதான் விஷயத்தைச் சொன்னாள்.

''அதெப்படி இத்தனை திடீர்னு. ஐயோ, அண்ணா நாம எப்படி இதைத் தாங்கிப்போம்''ன்னு பெரிதாக அழ ஆரம்பித்தாள். அவள் கணவர் போனை அவளிடமிருந்து வாங்கி, ''நாங்கள் காலை வந்து சேர்ந்துவிடுவோம். நாங்க வரும்வரை வெயிட் பண்ணுங்கோ'' என்றார்.



காலையில் மற்ற உறவுகளுக்கும், தெரிந்தவர்களுக்கும் சொல்லி, ரேணுகாவும் அவள் கணவரும் வர பாட்டியின் காரியங்கள் ஜாம் ஜாம் என்று நடந்தேறியது. வந்த எல்லோருக்கும் சொன்னதுபோலவே கல்பனா டூருக்குப் போயிருப்பதாக ரேணுகாவிடமும் சொல்லிவிட்டார்கள்.

எல்லாம் முடிந்து எல்லோரும் புறப்பட்டுப் போனபின் வீட்டிற்கு வந்த அண்ணன் தங்கையிடம் பெரிதாக ஒரு கதறலுடன் கல்பனா விஷயத்தைச் சொல்லிவிட்டார்.

ரேணுகா அதிர்ச்சியில் சிலையாகி விட்டாள். அவளைத் தேற்ற படாதபாடுபட வேண்டியிருந்தது. ''அவளைத் தேட முயற்சி செய்ய வேண்டாமா'' என்று கேட்ட ரேணுகாவிடம் மூர்த்தி ''நான் இனி எனக்கு ஒரு பெண் தான் என்று முடிவெடுத்துவிட்டேன். அவளைத் தேடுவதாக இல்லை. முதுகில் குத்தின நம்பிக்கைத் துரோகி அவள். அவள்தான் அம்மாவின் செல்லப் பேத்தியாக இருந்தாள். அவள் வாழ்வு நன்றாக அமைய வேண்டும் என்று எப்படியெல்லாம் கனவு கண்டாள் அம்மா? ஒரு நொடியில் அவளின் கனவுகளை எல்லாம் தூள் தூளாக்கி விட்டாளே, சண்டாளி! என்னைப் பொருத்தவரையில் அவள் செத்து விட்டாள். இனிமே அவள் பேச்சை யாரும் எடுத்து தன் மனத்தை வருத்தப்படுத்த வேண்டாம். கோபப் படுத்த வேண்டாம். எல்லோருக்கும் இதைச் சொல்லுகிறேன். இதை யாராவது மீறினால் நான் இந்த வீட்டை விட்டே போய்விடுவேன்'' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

அன்று மாலையே ரேணுகாவின் கணவர் ஊர் திரும்பிவிட்டார். போகும் முன் மனைவியுடன் தனியே

நிறைய பேசிவிட்டுத்தான் கிளம்பினார். காரியங்களை மூர்த்தி சீரங்கத்தில் போய் நடத்தினார். அது அம்மாவின் பிறந்த ஊர் என்பதாலும், அதுதான் அம்மாவின் ஆசையாக இருந்தது என்பதாலும், முக்கியமாக 'கல்பனாவை எங்கே காணோம்' என்று ஒவ்வொருவரும் கேட்கிறார்களே என்று ஊராரின் வாயை அடைப்பதற்காகவும் செய்ததுதான். வித்யாவிற்கு மட்டும் பெண்ணைத் தேடிப் பிடித்துவிட வேண்டும் என்று தோன்றிக் கொண்டே இருந்தது. என்ன இருந்தாலும் பெற்ற மனமல்லவா? அது எப்போதுமே எல்லோருக்குமே 'பித்து' தானே! ஆனால் இத்தனை பெரிய முடிவை கல்பனா எடுக்கும் வரை அது தனக்குத் தெரியாமல் போனது எப்படி என்று மண்டையை உடைத்துக் கொண்டாள்.



15

ஹைதராபாத் போய்ச் சேர்ந்த அன்று உமாவின் அருகில் படுத்து இரவு முழுக்கத் தூங்காமல் தவித்துக் கொண்டிருந்தாள், கல்பனா. பின்னிரவில் தூங்கியபோதும் ஏதேதோ சொப்பனங்களும், பயமும் வந்து அவளைப் பாடாய்ப் படுத்தின.

ஆக விடியற்காலையில் உமா அவளை எழுப்ப வேண்டியதாயிற்று. ''கல்யாணப் பெண்ணே, சீக்கிரம் எழுந்து தயாராக வேண்டாமா?'' என்று இனிமையாக எழுப்பினாள். காலையிலேயே டேப் ரிகார்டரில் நாதஸ்வர இசையை மங்களகரமாகப் போட்டிருந்தாள். கல்பனா எழுந்து உள்ளே வருவதற்குள் காபி கலந்து கொடுத்தவள் இவளை உட்கார வைத்து, நலங்கிட்டு, தலைக்கு



எண்ணெய் வைத்துவிட்டு 'போய்க் குளித்துவிட்டு வா' என்று அனுப்பினாள். கல்பனா குளித்துவிட்டு வந்ததும் உமா தன் பக்கத்து வீட்டுப் பெண்ணைக் கூப்பிட்டு அனுப்பினாள். அவளும் சின்னப் பெண்தான். ''இதுதான் கல்யாணப் பெண்ணா, உமா அக்கா? ரொம்ப அழகா இருக்கிறாள்'' என்று சொன்னவள் பத்து நிமிடங்களில் கல்பனாவின் கைகளில் மிக அழகாக மெஹந்தி இட்டு விட்டாள்.

''கல்பனா, நீ ஒரு அரை மணி நேரம் அப்படியே சோபாவில் படுத்துக் கொண்டு கனவு கண்டு கொண்டிரு. நான் குளித்து டிபனை ரெடி பண்ணுகிறேன்'' என்றாள் உமா. வெட்கத்துடன் சோபாவில் படுத்த கல்பனா சற்று நேரத்தில் கண்ணயர்ந்து விட்டாள். சிறிது நேரம் நன்றாக உறங்கியவள் திடுக்கிட்டு விழித்துக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தாள். எதிரே இருந்த உமா, ''நன்றாகத் தூங்கினாயா கல்பனா? எழுந்து முகம் கழுவிக் கொண்டு பொட்டிட்டுக் கொண்டு வா'' என்றாள்.

''அண்ணி, என்ன அண்ணி இது? என்னை முன்னாடியே எழுப்பியிருக்கக் கூடாதா? நானும் டிபன் செய்வதற்கு உங்களுக்கு உதவியிருப்பேனே!'' என்றாள் கல்பனா.

''போதும், போதும்! இன்னிக்கு உன் கைகளில் ரத்தக் காயமெல்லாம் வேண்டாம். மருதாணி சிகப்பு மட்டும் போதும்'' என்றாள் உமா சிரித்துக் கொண்டே. கல்பனாவிற்கு மிகவும் வெட்கமாகப் போய்விட்டது.

கல்பனா முகம் கழுவி, பொட்டிட்டு உமாவின் முன் வந்து நின்றாள். அவளுக்கு அழகாகத் தலை பின்னி, பூ

வைத்து முகத்துக்கு லைட் மேக்கப் போட்டு விட்டாள் உமா. அவளை எட்ட இருந்து அழகு பார்த்தவள், ''ஹூம்..! ரவி ரொம்பவே கொடுத்து வைத்தவர் தான்'' என்றாள். ஏற்கனவே சிவந்திருந்த அவள் கன்னம் இதைக் கேட்டதும் மிகவும் சிவந்து விட்டது. அதற்குள் எழுந்து விட்டிருந்த ரவியும், சேகரும் ''குட்மார்னிங், எவ்ரிபடி'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தனர். கல்பனாவைப் பார்த்தும் ஒரு கணம் தடுமாறிய ரவி, ''கல்பனா! ராத்திரி நன்றாகத் தூங்கினாயா?'' என்று அன்புடன் விசாரித்தான். புன்னகையுடன் தலையாட்டினாள் கல்பனா. அதற்குள் குறுக்கிட்ட உமா, ''அவள் எங்கே தூங்கினாள்? ரவி, ரவி என்று ஒரே புலம்பல்'' என்றாள்.

''போங்கண்ணி! சும்மா கேலி பண்ணாதீங்க'' என்றாள் கல்பனா கைகளால் முகத்தை மூடிக் கொண்டே ''எல்லா கல்யாணப் பெண்களும் அப்படித்தான் போலிருக்கிறது. நீ கூட இப்படித்தான் செய்தாய்ன்னு சொல்லியிருக்காங்க'' என்று சேகர் உமாவைக் கலாய்த்தான்.

''சரி, நாங்க போய் குளித்துவிட்டு வரோம், நீ டிபனை எடுத்து வை'' என்றான் சேகர்.

ஆண்கள் இருவரும் குளித்து முடித்துத் தயாரானார்கள். டிபன் முடிந்ததும், ''ரவியண்ணா, கல்பனாவிற்கு புடவையை எடுத்துக் கொடுங்களேன்'' என்றாள்.

''இல்லை, இல்லை! நீங்கள் இரண்டு பேரும் தான் எங்களுக்குக் கல்யாணம் செய்து வைக்கப் போறீங்க. ஆகையால் நீங்கள் இரண்டு பேரும் புடவை, வேஷ்டியை ஆசீர்வாதம் செய்து கொடுங்க. நமஸ்காரம் பண்ணிட்டு வாங்கிக் கொள்றோம்'' என்றான் ரவி. அவன்



கேட்டுக் கொண்டபடியே புடவையை, வேஷ்டியை பூஜை அறையிலிருந்து எடுத்து சேகர் தம்பதியினர் கல்பனாவிற்கும் ரவிக்கும் ஆசீர்வதித்துக் கொடுத்தனர்.

வாசலில், ஒரு கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. ''நம்ம பிரண்ட்ஸெல்லாம் கோவிலுக்குத்தானே நேராக வருவதாகச் சொன்னார்கள்?'' என்று சொல்லிக் கொண்டே கதவைத் திறந்தான் சேகர். வாசலில் வந்தவர்களைப் பார்த்ததும் ''ரவி, ரவி'' என்று உரத்த குரலில் அழைத்தான்.

''எதற்கு சார் இந்தப் பதட்டம்? நாங்கள் கல்யாணத்தில் கலந்துக்கத்தான் வந்திருக்கிறோம்'' என்றார் காரிலிருந்து இறங்கிய ஆண்.

அதற்குள் வெளியே வந்த ரவி ''அண்ணா'' என்று வந்தவரைக் கட்டிக் கொண்டான். ''ஏம்பா ரவி! அண்ணா மாத்திரம்தான் கண்ணுக்குத் தெரிகிறாரா?'' என்று கேட்டுக் கொண்டே சிரித்தபடி காரிலிருந்து இறங்கினாள் ஒரு பெண்மணி. பின்னாலேயே இன்னொரு பெண் ''ரவி பாவா, பாக உன்னாவா?'' என்று கேட்டுக் கொண்டே இறங்கினாள்.

திகைத்துப் போன ரவி, ''வாங்க அண்ணி, வா பாரதி. ஹவ் ஆர் யூ?'' என்று கேட்டுக் கொண்டே அண்ணா, அண்ணி காலைத் தொட்டான்.

புதிதாய் யாரோ வருவதைக் கண்ட கல்பனா சமையல் அறைக்குள் புகுந்து கொண்டு விட்டாள். ஹாலிலிருந்தும் உமா வெளியே வரவில்லை. நால்வர் மனதிலும் 'இதேதடா வம்பு! பூஜை வேளைக் கரடி மாதிரி! இவர்கள் என்ன தகராறு பண்ண வந்திருக்கிறார்களோ?'' என்ற

கேள்வி விஸ்வரூபம் எடுத்து நின்றது. அகத்தின் அழகு முகத்தில் தெரியாதா, என்ன?

ரவியின் அண்ணா மோகன் சட்டென்று, "யாரும் பயப்படாதீங்க! நான் ரவிக்கும் கல்பனாவிற்கும் கல்யாணத்தை நடத்தி வைக்கத்தான் வந்திருக்கேன். சண்டை போடறதுக்காக இல்லை. என்ன சூர்யா?" என்றார்.

"ஆமாம், பாபு!" என்றாள் ரவியின் அண்ணி. ஆந்திரக்காரர்களுக்கு எல்லா பையன்களுமே பாபுதான். "பாபு ரவி! நான் என் தங்கையை உனக்குத்தான் கல்யாணம் பண்ணிக் கொடுக்கணும்னு பிடிவாதமா இருந்தேனா, பாரு. முந்தா நாள் நம்ம வீட்லே என்ன ஆச்சு தெரியுமா?"

"என்ன ஆச்சு?" என்று கேட்டான் ரவி தயங்கிய படியே.

மோகன் குறுக்கிட்டார். "இன்னிக்கு நீ இந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்க ஏற்பாடு பண்ணியிருக்கேன்னு எங்கிட்டே போன்லே சொன்னே இல்லையா? நான் அதுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்ததை இவள் கேட்டிருக்கா. நானும் யாரும் இல்லைன்னு உங்கிட்ட கொஞ்சம் சுதந்திரமா பேசிட்டேன் போல இருக்கு. இவ காதுலே அரைகுறையா விழுந்திருக்கு" என்றார்.

ஆமாம்! அன்னிக்கு மோகன்கிட்டே "அண்ணா, நாளன்னிக்கு ஹைதராபாத் சிக்கட்பல்லி கோவில்லே கல்யாணம்"னு ரவி சொன்னதும், மோகன் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டு விட்டார். அம்மா அப்பாதான் இல்லை, நான் கிட்டேயிருந்து நடத்தி வைக்கணும்.



என்ன பண்ணறது? இரண்டு பேருக்குமே கொடுத்து வெச்சது அவ்வளவுதான். சரி மறுநாளே இங்கே வந்துட்டு போப்பா" என்று அவர் சொன்னது அண்ணி காதிலே விழுந்திருக்கு போலிருக்கு. 'அட ராமா' என்று நினைத்துக் கொண்டான் ரவி.

"ஆமாம், முஹூர்த்தம் எத்தனை மணிக்கப்பா?" என்று கேட்டார் மோகன்.

"அதுக்கு இன்னும் நிறைய நேரம் இருக்கு" என்றான் சேகர்.

"போனில் பேசியதைக் கேட்ட இவள் என்னைப் பிலுபிலுவென்று பிடித்துக் கொண்டாள். 'என் தங்கைக்குத்தான் உங்கள் தம்பின்னு ஆதியிலிருந்து சொல்லிகிட்டிருக்கேன், நான்! அவன் திருட்டுக் கல்யாணம் பண்ணிப்பான் நீங்களும் அதற்கு உடந்தையான்னு' உலுக்கினவ, உடனே என்ன ஏதுன்னு எல்லாம் சொல்லாமே பாரதியை உடனே புறப்பட்டு வரச் சொல்லி போன் பண்ணிட்டாள். எங்க ஊர்லேருந்து கொஞ்ச தூரம் தான் இவங்க பொறந்த வீடு. இவள் போன்லே விஷயம் சொல்ல மறுக்க, பாரதி 2 மணி நேரத்திலே வந்து விட்டாள்.

வந்து விஷயத்தைக் கேட்டதும் அவளுக்கு ஒரே சிரிப்பு. "என்னக்கா நீ! என்கிட்டே ஒரு வார்த்தை கேக்காமே நீயாவே எதேதோ கற்பனை பண்ணிட்டு எல்லோரையும் படுத்தியிருக்கே" என்றாள். "என்னடி சொல்லறே? உனக்கு என் மச்சினன் ரவியைக் கல்யாணம் பண்ணிக்க இஷ்டம் இல்லையா? அவனை மாதிரி ஒருத்தன் நம்ம குடும்பங்கள்ல எல்லாம் எங்கேடி கிடைப்பான்"ன்னு அவளை இவ அடிக்கவே போயிட்டா. "அது

சரிக்கா, எனக்கு நீ தமிழ்க்காரரைக் கல்யாணம் பண்ணிண்டதே பிடிக்கலே. இப்போ என்னையும் பண்ணிக்கச் சொன்னா எப்படி? நம்ம பழக்கம் வழக்கமெல்லாம் மாத்திகிட்டு அப்படி ஒரு கல்யாணம் வேணுமா? அது மட்டுமில்லை, நான் நம்ம அத்தை பிள்ளையைத் தான் பண்ணிக்கப் போறேன். இது நான் எனக்குள்ளே எத்தனையோ நாளா தீர்மானம் பண்ணி வெச்சுருக்கிற விஷயம்''ன்னு பாரதி மிகத் தெளிவா சொல்லிட்டா.

இப்போது பாரதி குறுக்கிட்டாள். ''ஆமா, அப்பக்கூட அக்கா எங்கிட்டே ரொம்ப சொல்லிப் பார்த்தாங்க. ''ஏன்டி நம்ப பாவா கேசவலு பேண்ட் கூட போடமாட்டான். வேஷ்டிதான். நாள் பூரா வெயில்லே கெடந்து விவசாயம் பண்ணறான். பலிச்சு வெள்ளாமை வந்தா வரும், இல்லைன்னா இல்லைன்னுல்லாம் வாதாடினா. அதுக்கு நான் ''அவர் மாதிரி ஆட்கள் விவசாயம் செய்யலேன்னா ஊர்ஜனம் மொத்தமும் என்ன தின்னும்?னு கேட்டு அவ வாயை அடைச்சுட்டேன்'' என்றாள்.

மோகன் தொடர்ந்தார் ''அப்புறம்தாம்பா இவ இப்படி நினைக்கும்போது எனக்கும் தோணித்து ''அநாவசியமா உன்னை நம்ம மனுஷங்க இல்லாமே ஏன் விடணும்? உன் ப்ரண்ட்ஸ் எல்லோருடன் நாங்களும் இருந்து உன் கல்யாணத்தை ஜாம்ஜாம்னு நடத்தறோம். நாங்க காலைலே குளிச்சுட்டுத்தான் கிளம்பினோம். வாங்க, புறப்படலாம்'' என்றார். எல்லோருக்கும் அவர் சொல்லச் சொல்ல ஒரு நிம்மதி பிறந்தது. அப்பாடா என்றிருந்தது.

''வாங்க ஆன்ட்டி, வந்து உட்காருங்க, டிபன் தரேன் சாப்பிட்டுவிட்டுக் கிளம்பலாம்'' என்றாள் உமா.



''நாங்க வழியிலேயே டிபன் சாப்பிட்டுட்டோம்மா! புறப்படலாம்'' என்றாள் சூர்யகாந்தம்.

எல்லோரும் புறப்பட்டு வேங்கடேசப் பெருமாள் கோவிலை அடைந்தனர். இவர்களுக்கு முன்பே பிரண்ட்ஸ் எல்லோரும் வந்திருந்தார்கள். மொத்தம் 20 பேர் இருக்கும். அதில் 5, 6 பெண்களும் அடக்கம். சாஸ்திரிகளும் வந்து விட்டார். ஒரு பக்கத்தில் நாதஸ்வரம் ஒலிக்க, ரவியின் அண்ணா, அண்ணி நிறைய கொண்டு வந்திருந்த வெற்றிலை, பாக்கு, பூ, பழங்கள் எல்லாம் சபையில் அடுக்கப்பட்டது. வீட்டிலிருந்து புறப்படும் முன்பே அவர்களை நமஸ்கரித்து அவர்கள் கையிலிருந்து புடவையும், வேஷ்டியும் வாங்கிக் கொண்டார்கள். புடவையை வாங்கிக் கொண்ட கல்பனா திருதிருவென்று விழித்தாள்.

டக்கென்று புரிந்து கொண்ட உமா அவளின் உதவிக்கு வந்தாள். ''புடவை கட்டிக்கத் தெரியாதாம்மா? வா, நான் கட்டிவிடறேன்'' என்றாள். நல்ல அரக்கில் மஞ்சள் பார்டர் போட்ட ஜரிகை புடவை. கல்பனா அதைக் கட்டிக் கொண்டதும் தேவதையாக மின்னினாள். தலை நிறைய பூவும், நெற்றியில் சுட்டியுமாக வந்து நின்ற அவளைப் பார்த்ததும், இவள் ஓரகத்தியாகப் போகிறவள் சட்டென்று ஒரு திருஷ்டிப் பொட்டு வைத்து விட்டாள்.

கோவிலில் ஹோமம் வளர்த்து, அம்மி மிதித்து, கெட்டி மேளம் கொட்ட ரவி கல்பனாவின் கழுத்தில் தாலி அணிவித்தான். மஞ்சள் கயிறு தாலி தவிர ரவி எல்லோரும் ஆச்சரியப்படும்படி தாலிச் செயின் தங்கத்தில் வாங்கியிருந்தான். அதையும் அவள் கழுத்தில் அணி

வித்த பிறகு பெரியவர்களிடம் ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டார்கள். பின் சுவாமி தரிசனம் செய்து வீடு திரும்பினார்கள்.

இவர்கள் வீடு போய் சேருமுன்பே ஷாமியானா போட்ட மாடியில் சாப்பாடு தயாராக இருந்தது. மும்பைடைப் சாப்பாடு. நல்ல பதார்த்தங்களை ருசிகரமாகச் செய்திருந்தார்கள் கேட்டரர்ஸ். எல்லோரும் திருப்தியாக உண்டு சந்தோஷமாக புது மணத் தம்பதிகளை வாழ்த்தி பரிசளித்துவிட்டு வீடு திரும்பினர்.

ரவியின் அண்ணா, அண்ணி ஒரு கனமான கவரை இவர்கள் கையில் கொடுத்தனர். ''என்ன அண்ணா இது'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் ரவி.

''பாவம்ப்பா இந்தப் பொண்ணு. பணக்கார வீட்டுப் பொண்ணாத் தெரியுது. நிதானிச்சு கல்யாணம் பண்ணியிருந்தா அவங்க எத்தனையோ நன்றாக குடித்தனம் ஆரம்பிச்சு வெச்சுருப்பாங்க. இந்த அவசரக் கல்யாணத்தினாலே அதுக்கும் எத்தனையோ கஷ்டம். அதுக்குத்தான் இதுலே 20,000/- ரூபாய் வெச்சுருக்கேன். இதை வெச்சுண்டு வாழ்க்கையை ஆரம்பிச்சு நல்லபடியா சந்தோஷமா இருங்கோ'' என்றார். போகும் முன் அவர்களையும், சேகர் தம்பதிகளையும் அழைத்துப் போய் புது வீட்டில் பால் காய்ச்சி, ஸ்வாமி படத்திற்கு முன் விளக்கேற்றி நமஸ்கரித்து, கையோடு வாங்கி வைத்திருந்த ஸ்வீட்டையும் எல்லோருக்கும் கொடுத்து மகிழ்ந்தனர்.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு மோகன் குடும்பத்தினர் புறப்பட்டு விட்டார்கள். பார்க்க சற்று அதிக உயரமும், பருமனும் என்று ரவி சொன்னபடி



இருந்தாலும், இவன் பாரதம்மா, சூர்யகாந்தம் என்றெல்லாம் பெயர்கள் சொன்னபோது கல்பனா ரொம்பவே பயந்து போயிருந்தாள். அவர்கள் ஒன்றும் இவள் கற்பனை செய்து வைத்திருப்பதுபோல் ஆதிவாசிகள் போலெல்லாம் இல்லை. கௌரவமாகவும் டீசென்டாகவும் இருந்தார்கள். அன்பாகவும் பழகினார்கள்.

சற்று நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டுவிட்டு சாயந்திரமாக இவர்களின் புது வீட்டிற்குப் போகத் தயாரானார்கள். அதற்குள் மத்தியானமே வெளியே சென்றிருந்த சேகர் திரும்பி வந்தான்.

''என்ன, போன காரியம் எல்லாம் ஆச்சா?'' என்று குறும்புடன் கேட்டாள் உமா.

சேகர் சிரித்தான். ''எல்லாம் பக்காவா முடிந்துவிட்டது'' என்றான்.

''எங்கே போயிருந்தீர்கள், அண்ணா?'' என்று கேட்டாள் கல்பனா.

''எல்லாம் உன் வேலையாகத்தான் போயிருந்தேன்.''

''என் வேலையாகவா?''

அதற்குள் ரவி குறுக்கிட்டான். ''கல்பனா, எல்லாம் அப்புறம் சொல்றேன்'' என்றான் தயங்கியபடியே.

உமா கல்பனாவின் அருகே சென்று அவள் காதில் ஏதோ குசுகுசுத்தாள். அதைக் கேட்ட கல்பனாவின் முகம் குங்குமமாய்ச் சிவந்து விட்டது. கைகளால் முகத்தை மூடிக் கொண்டு உள்ளே ஓடி விட்டாள்.

இரவில் லைட்டாக சாப்பாடு முடிந்தவுடன், புதுமணத் தம்பதிகளை அவர்களின் வீட்டில் கொண்டு போய்

விட்டுவிட்டு, உமா சேகர் இருவரும் தங்கள் வீட்டிற்குத் திரும்பினார்கள். திரும்புமுன் உமா கல்பனாவைத் தனியே அழைத்துப் போய் ஏதோ சொல்லிக் கொண்டிருந் தாள். குனிந்த தலை நிமிராமல் கேட்டுக் கொண்டிருந்த கல்பனா உமா சேகர் இருவர் கால்களிலும் வீழ்ந்து ஆசி பெற்றுக் கொண்டாள். பின் அவர்கள் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினார்கள். கிளம்புமுன் உமா "கல்பனா, நான் சொன்னதெல்லாம் நன்றாக நினைவில் வைத்துக் கொள்" என்றாள் சிரித்துக் கொண்டே.

கல்பனாவிற்கு கண் கலங்கிவிட்டது. "அண்ணி! தேங்க்யூ ஃபார் எவ்ரிதிங்" என்றாள். ரவியானால் சேக ருடைய கைகளைப் பிடித்துக் கொண்டு "சேகர், எனக்கு நன்றி சொல்லச் சரியான வார்த்தைகள் கிடைக்கலை யடா" என்றான்.

"போதும்டா, நமக்குள் நன்றியெல்லாம் சொல்லிக் கொண்டு. எதையும் எதிர்பார்த்து நாம் ஒருவருக்கொரு வர் ஏதாவது செய்து கொள்கிறோமா? நீங்க இரண்டு பேரும் நன்றாக இருந்தால் போதும். ஒண்ணே ஒண்ணு மாத்திரம் சொல்றேன். கல்பனா உன்னையே நம்பி, எல்லாவற்றையும் துறந்து உன் பின்னால் வந்து விட் டாள். அவளை எந்தக் காலத்திலும் கண்கலங்காமல் பார்த்துக் கொள்வது உன் பொறுப்பு" என்றான்.

அவர்கள் இருவரும் கிளம்பிப் போனதும் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்த ரவி தேவதை போல் நின்று கொண்டிருந்த கல்பனாவை கண் கொட்டாமல் பார்த்தான்.

"கண்ணம்மா" என்று அழைத்துக் கொண்டே தன் கைகள் இரண்டையும் நீட்டினான்.



இதற்காகவே காத்திருந்ததுபோல் கல்பனா ஓடி வந்து அவன் கைகளில் புகுந்து கொண்டாள். அப்படியே அவளை அலேக்காக தூக்கிக் கொண்டு பெட்ரூமிற்குள் போனான். அவள் முகமெங்கும் முத்தமழை பொழிந் தான். அந்த ஆனந்தப் பரவசத்தில் திக்குமுக்காடிப் போனாள் கல்பனா. கொஞ்ச நேரம் தங்களுக்குக் கிடைத் துள்ள இந்தப் புது சுதந்திரத்தின் இன்பத்தை கட்டுப் பாட்டோடு அனுபவித்த பின் இருவரும் சுய உணர்வுக்கு வந்தனர்.

"வா, கல்பனா! வந்து இந்தக் கட்டிலில் உட்கார். நாம நிறைய விஷயங்களை தீர்மானிக்கணும். உனக்கு இப்போ 18 வயதுகூட இன்னும் முடியல்லே, இல்லையா? நம்ம நெருக்கத்திலும் ஒரு அளவு கோல் வெச்சுக்கணும். நீ இப்பவே கர்ப்பமாகக் கூடாது. ஒரு இரண்டு வருஷம் போகட்டும். அதிலே உனக்கு ஒரு அப்ஜெக்ஷனும் இல்லையே?" என்றான்.

கல்பனா வெட்கத்துடன் தலையசைத்தாள். அவன் தொடர்ந்தான். "நாம் இந்த இரண்டு வருஷத்தை நம்ம இஷ்டம்போல அனுபவிப்போம் சரியா? நாளைக்குப் போய் வீட்டுக்கு வேண்டிய சாமான்களையெல்லாம் வாங்கிக்கலாம். சமையல் தெரியல்லையேன்னு எல் லாம் கவலைப் படாதே! சமையல் புத்தகம் வாங்கித் தரேன். உமா அண்ணி கிட்டேயும் கத்துக்கோ. ஒரு வாரம் கழித்து நீ இஷ்டப்பட்டால் கர்நூலுக்கு எங்க அண்ணா வீட்டுக்குப் போய் இரண்டு நாள் தங்கிட்டு வரலாம். என்ன கண்ணம்மா சொல்றே?" என்றான் ரவி.

"இனிமே எனக்குத் தனியா என்ன அபிப்ராயம் இருக்க முடியும்? நீங்க என்ன சொன்னாலும் எனக்குச்

சம்மதம்தான்'' என்று சொன்னவள் அவன் மார்பில் சாய்ந்து கொண்டு 'ஹோ' என்று அழுது விட்டாள்.

ரவி பதறிப் போய் விட்டான். அவளைத் தன்னோடு இறுக்கிக் கொண்டவன் ''ஏன் கண்ணா அழறே? நீ அழவே கூடாது. உன் கண்ணில் நீர் வந்தால் நான் துடிச்சுப் போயிடுவேன். உன்னை நான் எப்பவும் சிரித்த முகத்தோடதான் பாக்க விரும்பறேன்'' என்றான் ஆதுரத்துடன் அவள் தலையைக் கோதிக் கொண்டே.

''எனக்கு உணர்ச்சிகள் எல்லாம் ஒரே கலவையாக இருக்கு. ரவி! தப்பு பண்ணிட்டோமோ என்கிற வருத்தம். புது இடம், புது சூழ்நிலை அந்த பயம். கூடவே உங்க ளோட இருக்கிறதிலே இருக்கிற சுகம். எனக்கு என்ன செய்யறதுன்னே புரியல்லே'' என்றாள்.

''ஓஹோ! உனக்கு என்ன செய்யறதுன்னுதானே புரியல்லே? நான் சொல்லித்தரேன்'' என்றான் ரவி.

''என்ன செய்யணுமாம்?'' என்றாள் அவள் கொஞ்ச லாக, அவன் மார்பில் சாய்ந்துகொண்டே.

''எல்லா கவலையையும் மூட்டை கட்டி வெச்சுட்டு, இதோ பக்கத்திலே இருக்கிற உன் ஆசைக் கணவனை, இறுக்கி, நல்லா இறுக்கிக் கட்டிக்கோ. நன்னா தூங்கி எழுந்திரு. உடம்பு அலுப்பு, மனசு அலுப்பு எல்லாமே மாறிடும். வாம்மா, வந்து படுத்துக்கோ. நான் வேணா தாலாட்டுப் பாடவா'' என்றான்.

''இப்படி நீங்க என்னைக் கொஞ்சிக்கிட்டே இருந்தா, நான் எந்தக் கஷ்டத்தையும் தாங்கிக்குவேன். ஆனா என்னாலே என் மனசை அடக்கவே முடியல்லியே? இன்னேரம் வீட்லே என்ன அமர்க்களப் படறதோ? நான்



இப்படிச் செஞ்சதை அவங்க மன்னிக்கவே மாட்டாங்க. ஏன் ரவி, நான் தப்பு செஞ்சிட்டேனா? நீங்க என்னை ஒரு நாளும் கைவிடமாட்டீங்களே?'' என்று புலம்பி யவள் பொலபொலவென்று கண்ணீர் வடித்து விட்டாள்.

அவளை இறுக அணைத்துக் கொண்டு அவள் நெற்றியில் ஆதரவுடன் முத்தமிட்டவன் ''நீ நிச்சயமா தப்பு ஏதும் செய்யலேம்மா. கவலையே படாதே. உனக்கு நான் இருக்கேன். இந்த உலகமே எதிர்த்து வந்தாலும் நான் உன்னைக் கைவிட மாட்டேன். வா, எல்லாத் தையும் மறந்துவிட்டு தூங்கு'' என்றான்.




பிச்சம்மாவின் காரியங்கள் எல் லாம் முடிந்தன. மூர்த்தி பிச்சம்மாவிற் காக அழுதார். கல்பனா விஷயத்தையே மறந்து விட்டது போல் காட்டிக் கொண்டார். அவர் உள்ளத்தில் என்ன இருந்ததோ, யாருக்குத் தெரியும்? ரேணுகா புறப்படுவதற்கு முதல் நாள் உள் ரூமில் உட்கார்ந்து தன் பொருட்களை அடுக்கிக் கொண்டிருந் தாள். சாதனா அத்தைக்கு உதவி செய்து கொண்டிருந் தாள்.

''ஏம்மா, நீயும் புறப்பட்டுப் போயிட்டா, நான் எப் படியிருக்கப் போறேன்?'' என்றார் மூர்த்தி.

''அண்ணா, நீ இப்படிச் சொன்னால் மன்னியும் சாதனாவும் எப்படி ஃபீல் பண்ணுவாங்கன்னு யோசிச்சுப் பாரு! மனசை தேத்திக்கோ. இன்னொன்றும் சொல் றேன், கோவிச்சுக்காமே கேட்டுக்கறியா? என்னதான் இருந்தாலும் கல்பனா நம்ம குழந்தை. அவளைத் தேடிக்

கண்டுபிடிச்சு, அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சுக் கொடுக்கறது நம்ம கடமை இல்லையா, அண்ணா? அது ஏதோ வயசுக் கோளாறு, தப்புப் பண்ணிட்டாள். அதுக்காக இப்படியே விட்டுற முடியுமா?

"நன்னா சொல்லு, ரேணு! ஒரு சின்னக் க்ளு இருந்திருந்தால் கூட ஏதாவது பரிகாரம் பண்ணியிருப்பார் பாட்டி. இப்படி இழந்துட்டு நிக்கறோமே!" என்றாள் வித்யா.

மூர்த்தி கோபாவேசமானார். "என்னடி பேசறே. அறைஞ்சு பல்லெல்லாம் பேத்துடுவேன். ஒரு வயசு வந்த பெண் நடந்துக்கிற விதத்திலிருந்து தெரிஞ்சுக்க முடியாத அம்மா என்ன அம்மாடி? என்னடி வளர்த்திருக்கே பொண்ணை? இது எத்தனை நாளா நடந்துகிட்டிருக்கோ? இப்படி நம்மளையெல்லாம் தீராத அவமானத்துக்கு உள்ளாக்கிட்டு ஓடிப் போயிட்டாளே, கழுதை! இந்த ஓடுகாலியைத் தேடிக் கண்டு பிடிச்சு அவளுக்கு ஒரு வாழ்க்கை அமைச்சுக் கொடுக்கணுமா? அந்த ராஸ்கல் இவளை வெச்சுக் குடுத்தனம் பண்றானோ, இல்லை எவங்கிட்டேயாவது வித்துத் தொலைச்சுட்டானோ?"

வித்யா கைகளால் தன் காதுகளை மூடிக் கொண்டாள் "ஐய்யோ, அப்படியெல்லாம் சொல்லாதீங்க! அவளை எப்படியாவது கண்டு பிடிச்சுக் கொண்டு வந்துருங்க. அவளை என் கையாலேயே வெட்டிப் போட்டுடறேன்."

"முடியவே முடியாது. இதோ பார்! நான் அன்னிக்கு சொன்ன அதே வார்த்தைகள்தான் என் தீர்மானமான முடிவு. திரும்பத் திரும்ப யாராவது அவ பெயரையும்



விஷயத்தையும் சொல்லிண்டிருந்தா எனக்குக் கெட்ட கோபம் வரும். நான் மனுஷனா தொடர்ந்து இருக்கணுமா வேண்டாமா என்கிறது உங்க கையிலேதான் இருக்கு" என்று உறுமினார்.

"ஹூம்..! எத்தனையோ உசத்தியா என் மருமாளே என் நாட்டுப் பொண்ணுன்னு யோசிச்சு வெச்சிருந்தேன். எல்லாத்துலேயும் மண் விழுந்துடுத்து" என்று கண் கலங்கினாள் ரேணுகா.

"அப்பா, உங்க எல்லார்கிட்டேயும் ஒரு விஷயத்தைச் சொல்லலாமா? பெரியவா கிட்டே நான் இதைச் சொல்றது சரியான்னு தெரியல்லே! ஆனா எனக்குச் சொல்லணும்னு தோண்றது' என்றாள் சாதனா.

"என்னம்மா, என்ன விஷயம்" என்று கேட்டாள் ரேணுகா.

"போன தடவை நீங்களும் அத்தானும் இங்கே வந்திருந்தீங்கள்லே, அப்போ நடந்தது இது" என்றாள் சாதனா.

"என்னடி நடந்தது?"

"ஒண்ணுமில்லே, அத்தை! அத்தான் எங்கிட்டே தனியா பேச ஒரு சந்தர்ப்பம் கெடச்சபோது 'எனக்கு உன்னைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசை. சமயம் வரும்போது இதை நான் பெரியவங்ககிட்டே சொல்லிடறேன்'னு சொன்னார். நான் அதை அன்னிக்கே அக்கா கிட்டே சொன்னேன். ஒருவேளை அதுதான் அக்கா இப்போ பண்ணியிருக்கிற காரியத்துக்குக் காரணமோ என்னவோ" என்றாள் தயங்கியபடி.

"அப்படியா?" என்று ரேணுகா, மூர்த்தி வித்யா மூவருமே ஆச்சரியப்பட்டனர்.

''இப்போ அத்தான் என்னைக் கல்யாணம் பண்ணிக் கறதைப் பத்தி நான் பேச வரலே. அக்கா இப்படி போயிட்ட தனாலே நான் எல்லோர் பார்வையிலும் கொஞ்சம் மட்டம்தான். எனக்கே தெரியும்'' என்றாள் சாதனா கண் கலங்க.

''ஐயோ, என் கண்ணே! இது ஒரு பெரிய சௌகரிய மாப் போச்சு இப்ப. ஆனா பிரகாஷ் அவளைக் கல்யாணம் பண்ணிக்காட்டா என்ன? அவள் அழகிற்கு எத்தனையோ பேர் அவளை கொத்திண்டு போகத் தயாரா இருக்க மாட் டாங்களா?'' என்றாள் ரேணு.

''சரி. அதுதான் ஒருத்தன் கொத்திண்டு போயிட் டானே! இனிமே எதுக்கு அவளைப் பத்திய பேச்சு'' என்றார் மூர்த்தி வெறுப்பாக.

''சரி அண்ணா, எனக்கும் சாதனாவை என் பிள்ளைக்கு பண்ணிக்க பூர்ண சம்மதம்தான். ஆனா அவள் ரொம் பவே சின்னப் பெண். இன்னும் நாலு வருஷம் போக லாம் கல்யாணத்துக்கு'' என்றாள் ரேணுகா. தொடர்ந்து ''உன் வருங்காலத்தைப் பத்தி நீ என்ன யோசித்து வெச்சுருக்கே, அண்ணா?'' என்று கேட்டாள்.

''என்னத்தை யோசிக்கறது? எப்படியானாலும் பெண் ணால் ஏற்பட்ட அவப் பெயர் தப்பப் போறதில்லே. ஊர் முன்னாடி தலை குனிஞ்சு வாழவேண்டியதுதான். ஏதோ நாளைத் தள்ள வேண்டியதுதான். இனிமேலும் இந்த வீட்டிலே சம்பந்தம் வெச்சுக்கறதான்னு நினைக்காம நீ என் பெண்ணை உன் பிள்ளைக்கு பண்ணிக்கறேங்கறே. உன்னை அதுக்காக நான் கையெடுத்துக் கும்பிடறேம்மா, கையெடுத்துக் கும்பிடறேன்'' என்றார் மூர்த்தி.



''என்னண்ணா, நீ! இத்தனை பெரிய வார்த்தை எல்லாம் சொல்லலாமா? வேண்டாண்ணா, மனசு விட்டுப் போகாதே. அதுக்குத்தான் உன் மாப்பிள்ளை உனக்கு ஒரு நல்ல யோசனை சொல்லச் சொன்னார்.''

''அம்மாவும் போய் இவளும் இப்படி பண்ணிட்டா! நான் என்ன செய்வேன்?'' என்று அரற்றினார் மூர்த்தி.

''தப்பா சொல்றே, இவ தப்பு பண்ணினதாலே தான் அம்மா போனா. இல்லாதப்போனா அம்மா போற மாதிரியா இருந்தா?''

''ஆமாம், ரேணு! எல்லாரும் சொல்லுவா மாமியார் செத்துப் போய் மாட்டுப் பெண் அழற மாதிரின்னு. ஆனா நிஜத்திலேயே எனக்கு ரொம்பவே வருத்தம்தான், ரேணு! எத்தனை பெரிய பக்க பலத்தை இழந்துட்டு நிக்கறேன், பாரு!'' என்றாள் வித்யா பரிதாபமாக.

''நிஜம்தான் மன்னி! நீ இந்த வீட்லே நுழைஞ்ச நாளா அம்மா என்ன சொன்னாளோ அதுவே வேத வாக்காய்த்தான் இருந்திருக்கே!'' என்றாள் ரேணுகா.

''இல்லேன்னா அம்மா ரொம்பவே திண்டாடிருப்பா'' என்றார் மூர்த்தி.

''இல்லேண்ணா, மன்னி ஏறுக்கு மாறா இருந்திருந்தா உன் நிலைமைதான் கஷ்டமாப் போயிருக்கும். அந்த வரைக்கும் நீ அதிர்ஷ்டம் பண்ணினவன்தான்'' என்றாள் ரேணுகா. ''சரி, நான் விஷயத்துக்கு வரேண்ணா! நீ இனிமேயும் இங்கே தனியா இருந்தா என்னாலே அங்கே போய் நிம்மதியா இருக்க முடியாது. பேசாமே நான் சொல் றதைக் கேளு! இதை நானாச் சொல்லலே. அவரும் சொல்லச் சொல்லித்தான் நான் சொல்றேன். பேசாம

உன்னோட பிராக்டிஸ்ஸெல்லாம் வைண்டப் பண்ணிட்டு, உன் கிளைண்ட்ஸையெல்லாம் உன் ஜூனியரோ இல்லே, சிநேகிதர் யாரையாவதையோ பார்த்துக் கொள்ளச் சொல்லு.''

''சொல்லிட்டு?''

''நீங்க எல்லோரும் பேசாம மலேசியாவுக்கு வந்துடுங்கோ. நீ அங்கே ஒரு கன்சல்டண்டா போர்டு போடு.''

''புது இடத்திலே இந்த வயசுக்கு மேலே க்ளிக்காகுமா, ரேணு? நாங்க வேறே அங்கே வந்து உனக்கு பாரமா இருந்துடப் போறோமேன்னு பயமா இருக்கம்மா'' என்றாள் வித்யா.

''என்ன மன்னி சொல்றே? நீங்கள்லாம் எனக்கு பாரமா? எனக்கு இந்த நல்ல வாழ்க்கையைக் கொடுத்ததே அண்ணாதான். இன்னொரு தரம் அப்படியெல்லாம் சொல்லாதே! அப்புறம் அண்ணாவுக்கு இருக்கிற அனுபவத்துக்கும், புத்திசாலித்தனத்துக்கும் பிரமாதமா பிக்கப் ஆகும் மன்னி! சாதனாவும் கூட இதுக்கு மேலே படிக்க வேண்டியதை அங்கே வந்து படிக்கட்டும். குறைந்த பட்சம் ஒரு நாலு வருஷம் போகட்டும். அவளுக்கும் பிரகாஷுக்கும் கல்யாணம் பண்ணி வெச்சுடலாம்'' என்றாள்.

''அதெல்லாம் சரி, ஆனா வயசு வித்யாசம் கூட இருக்காது?'' என்றார் மூர்த்தி.

''இல்லையே, பார்க்கப்போனா கல்பனான்னா வித்யாசமே பத்தாது. பிரகாஷும் சின்னவன்தானே! மளமளன்னு படிச்சுட்டான் அவ்வளவுதான்.''

''நீங்க அங்கே வந்து நன்னா செட்டில் ஆற வரைக்கும் உங்களைப் பாத்துக்க வேண்டியது எங்க பொறுப்பு. இந்த



வீட்டை இப்போதைக்கு விற்காதே. வாடகைக்கு விட்டுடு. ஆபீஸ் அப்படியே இருக்கட்டும். நடத்தறவா வாடகை கொடுக்கட்டும். இதோ பாரு, அண்ணா! இந்தத் திட்டத்தை மனப்பூர்வமா சொல்றேன். உன் ஆறுதலுக்காக மேம்போக்காக சொல்ற வார்த்தைகள் இல்லை. இது சம்பிரதாயத்துக்காகவும் சொல்லலே'' என்றாள் ரேணுகா.

மூர்த்தி சற்று யோசித்துவிட்டு சொன்னார். ''ரொம்ப தேங்க்ஸ்மா! நீ சொல்ற மாதிரி எனக்கும் ஒரு மாறுதல் அவசியம் தேவைதான். ஆனா இது பெரிய விஷயம். கொஞ்சம் யோசித்துதான் சொல்லணும்மா'' என்றார்.

''ஆமாம் அண்ணா! நன்னா யோசித்தே சொல்லு. அம்மா திடீர்னு போயிட்டதாலே உனக்கு யாருமே இல்லைன்னு நினைக்காதே! நாங்க இருக்கோம். நன்னாவே ஒரு மூணு நாலு மாசம் யோசித்து பாஸிட்டிவான பதிலே சொல்லு. உங்க எல்லோருக்கும் பாஸ்போர்ட் இருக்குன்னு எனக்குத் தெரியும். நீங்க அங்க வந்து சேர்ந்ததும் என்னென்ன செய்யணுமோ அதையெல்லாம் நாங்க செய்யறோம் நீ கவலைப் படாதே'' என்றாள் ரேணுகா.

மறுநாள் ரேணுகாவை பிளைட்டில் ஏற்றிவிட்டு ரொம்பவும் கனத்த மனத்தோடு வீட்டிற்கு வந்தார் மூர்த்தி. சின்னக் குழந்தைபோல் அழுது தீர்த்தார் கொஞ்ச நேரம். தன்னைப் பெற்றவளுக்காகவா, தான் பெற்றவளுக்காகவா, யாருக்குத் தெரியும்? அதன் பிறகு அவர் ஒரு மாதம் கூட யோசிப்பதற்காக எடுத்துக் கொள்ளவில்லை ஒரே வாரத்திற்குள் இனி சென்னையில் இருக்க வேண்டாம் என்று தோன்ற வித்யா, சாதனா இருவரிடமும் சம்மதம் கேட்டார்.

"நீங்க எங்கே நிம்மதியா இருப்பீங்களோ இந்த இடத்துக்குப் போறதைப் பத்தி எனக்கென்ன ஆட்சேபணை இருக்க முடியும்?" என்றாள் வித்யா.

"மலேசியாவிற்கே போயிடலாம்ப்பா! என்னைத்தான் நிறைய பேர் கல்பனா எங்கே, கல்பனா எங்கேன்னு கேட்டு பிராணனை வாங்கறா ரொம்பவே கஷ்டமாயிருக்கு" என்ற சாதனா அப்பாவின் மடியில் படுத்துக் கண்ணீர் வடித்தாள்.

அடுத்த மாதமே வக்கீல் ராமமூர்த்தி வித்யாவுடனும், சாதனாவுடனும் மலேசியாவிற்குப் புறப்பட்டு விட்டார். இரு கரம் நீட்டி வரவேற்று அணைத்துக் கொண்டார்கள் ரேணுகாவும் அவள் கணவரும் மகனும்.



## 17

கல்யாண இரவுக்கு அடுத்த நாள் காலை கல்பனா எழுந்து குளித்து தயாரானாள். ரவி இன்னும் தூங்கிக் கொண்டிருந்தான். அவர்கள் இன்னும் பூரணமாக கணவன் மனைவியாக நடந்து கொள்ளாவிடினும் கூட அவளுக்கு அவன் முகத்தைப் பார்க்கவே வெட்கமாக இருந்தது.

பாலைக் காய்ச்சி வாங்கி வைத்திருந்த இன்ஸ்டண்ட் காபியைக் கலந்து சாப்பிட்டாள். வாசல் தெளித்து கோலம் போட்டாள். குளித்துவிட்டு ஸ்வாமி விளக்கேற்றி நமஸ்கரித்தாள். வேறு என்ன செய்வது? சமையலில் ஆனா ஆவன்னா கூடத் தெரியாது. பாட்டி எப்போதும் அம்மாவைப் பார்த்து சொல்வாள். "ரொம்ப அழகாயிருக்கு நீ குழந்தைகளை வளர்க்கிற லட்சணம்?



அதென்ன ஒரு துரும்பைக் கூட எடுத்து வேறே பக்கம் போடாமே இருக்கிறதுன்னு.. நாளைக்கு புருஷன் வீட்டுக்குப் போய் என்ன செய்யுங்களோ?" என்று. அது எவ்வளவு உண்மை! அம்மா தனக்கு எல்லாம் கற்றுக் கொடுத்திருந்தால் இந்நேரம் சமையல் செய்து முடித்திருப்பாள். இப்படி அரிசிக்கும் பருப்புக்கும் கூட வித்தியாசம் தெரியாமல் வளர்த்து விட்டாளே! அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது. இப்போது என்ன செய்வது, ரவியை எழுப்பலாமா? அம்மாடியோவ், அவன் முகத்தை எப்படிப் பார்ப்பது? அவளுக்கு மேனி சிலிர்த்தது. அப்படியே நாற்காலியில் சாய்ந்து கொண்டாள். நேற்று இரவு நடந்தது அப்படியே மனதில் சினிமா காட்சிபோல் ஓடியது. அதன் இன்பத்தில் லயித்தவள் அப்படியே நாற்காலியில் சரிந்து தூங்கி விட்டாள்.

சற்று நேரத்தில் தூக்கத்திலிருந்து எழுந்த ரவி கண்ணைக் கசக்கிக் கொண்டு சுற்று முற்றும் பார்த்தான். எங்கே கல்பனாவைக் காணோம்? இவள் இவ்வளவு சீக்கிரம் எழுந்து என்ன செய்யப் போகிறாள்? மெல்ல எழுந்து வந்தவன் நாற்காலியில் தூங்கிக் கொண்டிருந்த கல்பனாவைப் பார்த்ததும் அவன் முகத்தில் புன்சிரிப்பு பூத்தது. அவளைத் தொந்திரவு செய்யாமல் பல் தேய்த்து விட்டு சமையல் அறையில் நுழைந்தான். பரவாயில்லையே, இவள் பாலைக் காய்ச்சி வைத்து சமையல் அறையைச் சுத்தப் படுத்தியிருக்கிறாளே! மனதிற்குள்ளேயே அவளைப் பாராட்டியவன் இன்ஸ்டண்ட் காபியைக் கலந்து எடுத்துக் கொண்டு மெல்ல அருகில் வந்து அவள் தலையை ஆதுரத்துடன் தடவிக் கொடுத்தவன் அவள் கன்னத்தில் லேசாக முத்தமிட்டான்.

திடுக்கிட்டு கண் விழித்த கல்பனா, ரவி தன் அருகில் நிற்பதைக் கண்டதும் அவசர அவசரமாக எழுந்தாள்.

''எழுந்துட்டீங்களா? இருங்க காபி போட்டுத் தரேன்'' என்றவளைத் தடுத்து தன் கையிலிருந்த காபியை அவளிடம் நீட்டினான்.

''குட்மார்னிங், கண்ணம்மா! இந்தா இந்த காபியைச் சாப்பிடு!''

''குட்மார்னிங், என்னங்க இது. நான் அப்பவே சாப்பிட்டுட்டேன். நீங்க சாப்பிடுங்க'' என்றாள்.

''சாரி கண்ணம்மா, உன்னைத் தூக்கத்திலிருந்து எழுப்பிவிட்டேன். ஆமா, நீ ராத்திரி சரியா தூங்கலியா?'' என்று குறும்புடன் கேட்டான்.

கல்பனா முகம் சிவந்தாள். குறும்புக்காரன் இவன். ராத்திரி என்னை எங்கே தூங்க விட்டான்? தலையை குனிந்து கொண்டு, ''இல்லை அது வந்து.. வந்து...'' என்று இழுத்தாள்.

பெரிதாகச் சிரித்தான் ரவி. ''இன்னும் கொஞ்ச நாளைக்கு உனக்குப் பகலில்தான் தூக்கம். என்ன சரியா?'' என்றான். அவள் செல்லமாக அவன் முதுகில் அடித்துவிட்டு ''ரொம்பவும் கொழுப்புதான்'' என்றாள்.

அவன் இரு கைகளையும் விரித்து அழைக்க அப்படியே புகுந்து ஒட்டிக் கொண்டு விட்டாள். ஒரு ஐந்து நிமிடங்கள் இருவரும் ஒன்றுமே பேசவில்லை. அந்த நிலையிலிருந்து மீளவும் இல்லை. மீளும் எண்ணமும் அவர்களுக்கில்லை.

காலிங் பெல் அடித்தது. ''யாரிந்த கரடி'' என்று ரவி வாய்விட்டே கோபப்பட்டான். ''சமயம் சந்தர்ப்பம்



தெரியாமல் அவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட கல்பனா தன்னை சரி செய்து கொண்டு போய் கதவைத் திறந்தாள். சேகர் பையில் பாஸ்கெட்டோடு நின்றிருந்தான்.

''வெரிகுட், வெரிகுட்! குளித்து தயாராகி விட்டாயா, கல்பனா! சுறுசுறுப்புத்தான் என் தங்கச்சி'' என்று பாராட்டினான்.

''வாங்கண்ணா! இதுவரை சரி, ஆனா இதுக்கு மேலே டிபன், சாப்பாடுன்னு தயார் பண்ண வேண்டிய நேரம். இனிமேதான் நான் எல்லாம் கத்துக்கணும். என்ன பண்ணறதுன்னு தெரியாமே முழிச்சகிட்டிருக்கேன்'' என்றாள் கல்பனா.

''கவலைப்படாதே, கல்பனா! உங்களுக்கு டிபன் கொண்டு வந்திருக்கேன். சாப்பாட்டிற்கு உங்களை அங்கே வரச் சொல்லியிருக்கிறாள் உமா'' என்றான் சேகர்.

''ஐயோ, அண்ணியை எத்தனை நாள்தான் சிரமப்படுத்தறது?'' என்றான் ரவி.

''உதை வாங்குவே, ராஸ்கல்! ஓடி ஓடி காதல் பண்ணத் தெரியுது. அவளுக்குச் சமைக்கத் தெரியாதே. நாம சமையல் கத்துப்போம்னு இத்தனை நாள்ளே கத்துக்கிட்டு இருக்க வேணாம் நீ? என்னைப் பார். என்னுதும் லவ் மேரேஜ்தான். இப்ப நான் கத்துக்கல்லே? அவன் கிடக்கிறான், தங்கச்சி! உனக்காக நானே சமைச்சு எடுத்துட்டு வந்திருக்கேன் சாப்பிடும்மா'' என்றான் சேகர்.

கலகலவென்று சிரித்துக் கொண்டே டிபனை எடுத்து டேபிளில் வைத்தாள் கல்பனா. ''அண்ணா, இவரிடம் சொல்லுங்க இவர் சமையல் எல்லாம் கத்துக்கிட்டு

சிரமப்பட வேண்டாம். இன்னும் பதினைந்து நாள்லே நான் ஒரு சமையல் எக்ஸ்பர்ட்டாகிக் காட்டறேன்'' என்றாள் கல்பனா.

''அந்த நல்ல நாளை ஆவலுடன் எதிர்பார்க்கும், தங்கள் உண்மையுள்ள சேகர் தம்பதிகள்'' என்றான் சேகர் சிரித்துக் கொண்டே.

அதற்குள் காபி போட்டு எடுத்துக் கொண்டு வந்து விட்டாள் கல்பனா. ''எடுத்துக்குங்கண்ணா'' என்றாள். எடுத்துச் சுவைத்த சேகர். ''வெரிகுட், பால பாடம் வந்துடுத்து'' என்று சிலாகித்தான்.

''அவ எங்கே போட்டா, நான் விடியற் காலையிலேயே எழுந்து போட்டதாக்கும்'' என்றான் ரவி.

''பொய், பொய் இவர் ரொம்ப லேட்டாத்தான் எழுந்தார்'' என்றாள் கல்பனா.

''கரெக்ட்மா, அது எதிர்பார்த்ததுதானே!'' என்றான் சேகர் சிரிக்காமல்.

அந்த பதிலில் உள்ள குறும்புத்தனம் கல்பனாவையும் ரவியையும் வெட்கித் தலை குனிய வைத்து விட்டது.

''சரிம்மா, நீங்க டிபன் சாப்பிட்டுவிட்டு மதியம் சாப்பாட்டுக்கே அங்கே வந்துடுங்க. நான் கிளம்பறேன்'' என்று சொல்லி கிளம்பிவிட்டான் சேகர்.

அவன் போனதும் கல்பனா கையை இடுப்பில் வைத்துக் கெண்டு ''என்ன ஸார், புளுகு மாஸ்டர்! காபி நீங்க போட்டதா?'' என்று கண்களை உருட்டிக் கேட்டாள்.

''இல்லை, அது. நீ போட்டா என்ன, நான் போட்டா என்ன? நாம இருவரும் ஒருவர் தானே! அதுதான் அப்படிச் சொன்னேன்.''



அவன் பதிலில் வழிந்த காதலில் உருகிப் போன கல்பனா அவனை அப்படியே கட்டிக் கொண்டாள். அவள் நெற்றியில் முத்தமிட்ட ரவி, ''வா, கல்பனா! டிபன் சாப்பிடலாம்'' என்று அழைத்தான்.

''என்ன ஸார்! குளிக்க வேண்டாமா, அந்த வழக்கமெல்லாம் உண்டா இல்லையா?'' என்றாள் கல்பனா.

''இத்தனை நாள் நானே குளிச்சு, நானே டிரெஸ் பண்ணிக்கிட்டு ஆபீஸ் போயிட்டு இருந்தேன். இனிமே அதெல்லாம் உன் வேலை. என்னைக் குளிப்பாட்டி, எனக்கு டிரெஸ் போட்டுவிட்டு...''

''ஸ்டாப், ஸ்டாப்! கற்பனையை ரொம்பவே ஓட்ட வேண்டாம் ஒழுங்கா குளிச்சுட்டு வாங்க, அப்பதான் டிபன்'' என்றாள் கல்பனா.

''ப்ளீஸ், கண்ணம்மா! இன்னிக்கு ரொம்பவே பசிக்குது. அதனாலே இன்னிக்கு மட்டும் சாப்பிட்டு விட்டுக் குளிக்கறேனே!'' என்று கெஞ்சினான் ரவி.

''ஓகே பெர்மிஷன் கிராண்டட்.''

''தேங்க்ஸ்மா! வா, வா பெஸரெட்டெல்லாம் ஆறினா யார் சாப்பிடறது?''

''பெசரெட்டா, அப்படீன்னா?''

''பயத்தம் பருப்பு தோசை, உள்ளே ரவா உப்புமா வெச்சுருப்பாங்க.''

''இதென்ன காம்பினேஷன்?''

''இது ஆந்திரா ஸ்பெஷல் காம்பினேஷன், வா! சாப்பிடலாம்'' என்றான் ரவி.

இருவரும் சாப்பிட்டு முடித்து உமா வீட்டிற்குப் போகும் முன் டிபன் பாத்திரங்களையெல்லாம் நன்றாக அலம்பி

எடுத்துக் கொண்டாள் கல்பனா. ரவி கல்பனாவுடையது ஒரு அழகான தனி வீடு. ஒரு பெட் ரூம் வித் அட்டாச்டு பாத்ரூம். ஒரு குட்டி சமையல் அறை. சின்ன ஹால், என்று அம்சமாக இருந்தது. கட்டில் மெத்தை, குட்டி டைனிங் டேபிள் 4 நாற்காலிகளுடன், ஹாலில் ஒரு சின்ன சோஃபா செட் என்று எல்லாம் வாங்கிப் போட்டிருந்தான் ரவி. கிச்சனிலும் உமா பாதி சாமான் வாங்கி போட்டு விட்டாள். இன்று போய் மீதியை வாங்க வேண்டும்.

உமா வீட்டிற்குப் போய் லஞ்ச்சை முடித்துக் கொண்டு சாமான் வாங்கப் போகலாம் என முடிவெடுத்தனர். தனக்கு ஆபீஸுக்கு ரிப்போர்ட் எழுத வேண்டிய வேலைகள் நிறைய இருக்கிறதென்றும் கல்பனாவை மட்டும் கூட்டிப் போய் தேவையானவற்றை வாங்கிக் கொடுக்கும்படியும் உமாவிடம் கேட்டுக் கொண்டு ரவி வீடு திரும்பி விட்டான்.

மற்ற எல்லா சாமான்களுடன் நல்ல சமையல் புத்தகம் ஒன்றையும் வாங்கிக் கொண்டு கல்பனா வீடு திரும்பினாள். சமையலில் தனக்குத் தோன்றிய சந்தேகங்களை எல்லாம் உமாவிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு ஒரே வாரத்தில் அடிப்படை பதார்த்தங்களைச் செய்யக் கற்றுக் கொண்டாள். அடுத்த பத்து நாட்களில் நன்றாகச் சமைக்கக் கற்றுக் கொண்டாள். அவள் ஒவ்வொரு ஐட்டம் நன்றாகச் செய்யும் போதும் ரவி அவளை மனதாரப் பாராட்டி ஏதாவது ஒரு சின்ன பரிசுப் பொருள் வாங்கி தருவான். சின்ன பர்ஸ், லேடீஸ் குடை, கொலுசு, நிறைய வளையல்கள் இப்படி. இதைத் தவிர அந்தரங்கமாக அவன் அளிக்கும் பரிசுகளும் ஏராளம். இப்போதைக்கு



குழந்தை வேண்டாம் என்பதில் இருவரும் தீவிரமாக இருந்ததால் அடுத்த வருடம் 12வது பரிட்சை எழுதிவிடு என்று சொல்லிக் கொண்டிருந்தான் ரவி.

இருவருமாக ஒரு தரம் கர்நூல் போனார்கள். அங்கு இருந்த சூழ்நிலை இவளுக்கு ரொம்பவே பிடித்துப் போயிற்று. இவள் போகும்போது ரவியின் அண்ணா, மன்னி தான் இருந்தார்கள். இரண்டு நாட்கள் கூட இருக்க முடியுமா என்று சந்தேகத்துடன் வந்த கல்பனா, திரும்பி வரும்போது மனமே இல்லாமல் திரும்ப வேண்டியதாயிற்று. ஹைதராபாத் வரும் வரையில் அவர்கள் இருவரையும் பற்றியே பேசிக் கொண்டு வந்தாள் கல்பனா. நன்றாகச் சமைத்து, பசியறிந்து, பார்த்துப் பார்த்துப் பரிமாறி சாப்பிட வைத்திருந்தாள் சூர்யா. ஒரு நாள் அங்கிருந்த கோவிலுக்கும், மறுநாள் பக்கத்திலிருந்த ஒரு பிக்னிக் ஸ்பாட்டுக்கும் போய் வந்தனர். சூர்யா சிரிக்கச் சிரிக்கப் பேச, மோகன் ரொம்பவே ஆதரவாகவும் பாசமாகவும் இருந்தார். புறப்படும் முன் ரவிக்கு ஒரு பாண்ட் ஷர்ட் பீஸும் இவளுக்கு புடவையும், பிளவுஸும், ஒரு அழகான வெள்ளிக் குங்குமச் சிமிழும் வைத்துக் கொடுத்து வழி அனுப்பி வைத்தனர்.

கர்நூலிலிருந்து வந்த மறுநாள் ரவி வேலையில் சேர்ந்தான். ஆபீஸ் புறப்படும் முன் கல்பனாவிற்கு பல ஜாக்கிரதைகள் சொன்னான். கதவை எப்போதும் தாளிட்டுக் கொண்டு இருக்கும்படியும், அடுப்படியில் ஜாக்கிரதையாக இருக்கும்படியும் நிறைய ஓய்வு நேரம் இருப்பதால் அதை பரிட்சைக்குப் படிப்பதில் செலவிடுமாறும் சொன்னான். முடிந்தால் இந்த வருடமே பரிட்சை எழுத முடியுமா என்று பார் என்றும் சொன்னான். இந்த

மாதிரி ஜாக்கிரதைகளை தினமும் செல்லிவிட்டுத்தான் ஆபீஸுக்குப் போவான். மாலையில் சீக்கிரம் வரும் நாட்களில் அவளை ஹைதராபாதிலுள்ள பல இடங்களுக்கு அழைத்துப் போவான். வேண்டியதை எல்லாம் வாங்கித் தருவான். வீட்டுச் செலவுக்கும் தாராளமாக பணம் கொடுப்பான். இப்போது இவளே பக்கத்திலிருக்கும் கடைகளுக்கெல்லாம் தனியே போகக் கற்றுக் கொண்டாள். தெலுங்கு தெரியாவிட்டாலும் ஸ்கூலில் படித்த ஹிந்தியை வைத்துக் கொண்டு சமாளிக்க முடிந்தது.

பாதி நாள் இரவில் வெளியே சாப்பிடலாம், சமையல் செய்யாதே என்பான். இப்படியெல்லாம் செலவு செய்தால் எதுவும் சேமித்து வைக்க வேண்டாமா? என்று அவள் கேட்டால் ''இந்த ரெண்டு வருஷம் நான் சந்தோஷமா எந்தவித கமிட்மெண்டும் இல்லாமல் வானம்பாடிகள் போல் இருப்போம். அப்புறம் குழந்தைகள் பிறந்தால் சேமிக்க ஆரம்பித்தால் போயிற்று. நீயே பாவம், காபி போடக்கூட கற்றுக் கொள்ளாமல் என் பின்னே வந்து விட்டாய். உன்னை எவ்வளவு முடியுமோ அவ்வளவு சந்தோஷமாக வைத்துக் கொள்வது என் கடமை. நானோ நிறைய சம்பாதிக்கிறேன். அப்புறம் என்ன கவலை?'' என்று சொல்லி வாயடைத்து விடுவான். அவள் தனக்குக் கிடைத்த இந்த அதிர்ஷ்டத்தை நினைத்து, நினைத்துப் பூரித்துப் போவாள்.

போன் கனெக்ஷனும் சீக்கிரமே வாங்கி விட்டான் ரவி. கல்பனா என்னதான் தன் வீடு, தன் குடித்தனம் என்றெல்லாம் உணர ஆரம்பித்தாலும் தன் வீட்டு நினைவு வராமல் இல்லை அவளுக்கு. தினம் நினைத்து



நினைத்து வருத்தப்படுவாள். உள்ள நான்கு பேரும் பாசத்தில் ஒருவருக்கொருவர் பிணைந்தவர்கள்தானே! போனைப் பார்க்கும் போதெல்லாம் போன் பண்ணி பேசலாமா என்று மனம் துடிக்கும். ரவியிடம் ஒன்றிரண்டு முறை கேட்டதற்கு ''இப்போ வேண்டாம். கொஞ்ச நாள் போகட்டும். போன்ல நீ பேசி அவங்க உன்னைக் கண்ணா பின்னான்னு பேசிட்டா. நீ தாங்க மாட்டே. உன்னை அப்படியெல்லாம் பேசிட்டா என்னாலும் தாங்க முடியாது'' என்று சொல்லிவிட்டான். அதோடு அவளும் அந்த எண்ணத்தை விட்டுவிட்டாள்.

எல்லாம் நிறைந்திருந்தாலும் இவள் மனதில் ஏதோ ஒரு குறை இருப்பதாக அவளுக்கே பட்டது. இனம் காண முடியாத குறை. ஒரு நாள் ஏதோ ஒரு ரொம்ப காதல் சொட்டும் ஒரு கதைப் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். படித்துக் கொண்டிருந்தவளுக்கு மின்னலடித்தது போல் தன் மனதை வாட்டிக் கொண்டிருக்கும் குறை என்னவென்று புரிந்தது. குறை புரிந்தாலும் அதற்குத் தீர்வு தெரியவில்லை. அதன் காரணமும் புரியவில்லை. தினம் நன்றாகச் சாப்பிட்டு, நன்றாகத் தூங்கி சந்தோஷமாகத்தான் இருக்கிறாள். ஆனாலும் உடம்பு என்னவோ நாளுக்கு நாள் இளைத்துக் கொண்டே வந்தது. அநேகமாக தினம் ஒரு தடவை இவள் உமாவையோ, உமா இவளையோ பார்த்துக் கொள்வார்கள்.

ஒரு முறை இருவரும் ஒரு வாரம் கழித்துப் பார்த்துக் கொண்டபோது, உமாவிற்கு இவளைப் பார்த்ததும் தூக்கி வாரிப் போட்டது.

''என்ன கல்பனா! என்ன ஆச்சு உனக்கு? ஏன் இப்படி இளைச்சிருக்கே?'' என்று கேட்டாள்.

''இளைச்சிருக்கேனா, எனக்குத் தெரியல்லையே'' என்றாள் கல்பனா.

''ஆமாம்மா! உன்னைப் போன தடவை பார்த்ததற்கு அப்புறம் இப்போ ரொம்பவே இளைச்சு மோசமா தெரியறே! ஏம்மா, ரெம்பவே வீட்டு நினைவா இருக்கா?''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே, அண்ணி'' என்றாள் கல்பனா.

''அப்படீன்னா, ஏன் இப்படி இருக்கேங்கறதுக்கு ஏதாவது காரணம் இருக்கணும், இல்லையா?''

''இல்லேண்ணி! வீட்டு நினைப்பே இல்லைன்னு சொல்ல மாட்டேன். ஆனா இது நானா விரும்பி ஏத்துண்ட வாழ்க்கை. அதனாலே வீட்டை இழந்தது ரொம்பவெல்லாம் வருத்தமா இல்லை.''

''பின்னே வேறென்ன?'' என்றவள் திடீரென்று நினைத்துக் கொண்டவள் போல் ''ஏய், பீரியட்ஸ் எல்லாம் சரியா இருக்கா இல்லையா? இல்லே, தயாரிப்பு நெ. 1 வரப் போறதா?'' என்று கேட்டாள்.

''இல்லேண்ணி, நீங்க நினைக்கிற மாதிரி எல்லாம் இல்லை. அதுதான் குறைந்த பட்சம் இரண்டு வருஷம் வேண்டாம்னு முடிவு எடுத்திருக்கோமே!'' என்றாள் கல்பனா.

அவளையே உற்றுப் பார்த்த உமா, ''ஏம்மா, உங்களுக்குள்ளே ஏதாவது பிரச்னையா? ரவி உங்கிட்டே அன்பா இருக்கார், இல்லையா?'' என்று கேட்டாள்.

''ம்ம்.. அன்பாத்தான் இருக்கார் அண்ணி'' என்று ஒற்றைச் சொல்லுடன் நிறுத்திக் கொண்டாள்.



கல்பனாவின் கைகளை எடுத்துத் தன் கைகளோடு கோர்த்துக் கொண்ட உமா ''என்னம்மா ஏதோ இருக்கு. இங்கே வேறே யார் இருக்கா உனக்கு. எதுவானாலும் எங்கிட்டே சொல்லு, கல்பனா, யாரிடமாவது சொன்னாத் தானே மனசில இருக்கிற பாரம் குறையும்? எதுவானாலும் பேசி சரி பண்ணிடலாம்'' என்று அவள் கண்களை நேரிடையாகப் பார்த்து கேட்டாள்.

ஒரு கணம் தடுமாறிய கல்பனா தலையைக் குனிந்து கொண்டு, ''ஒண்ணுமில்லே அண்ணி! ஒருவேளை நான் தான் கற்பனை பண்ணிண்டு மனசு கஷ்டப் படறேனோ, என்னவோ, அதுவும் தெரியலே.''

கலவரமாகிப் போனாள் உமா. ''எதைப் பத்திம்மா?'' என்று கேட்டாள்.

உமாவின் கைகளைப் பற்றிக் கொண்ட கல்பனா, ''நான் காதலித்தபோது இருந்த மாதிரி ரவி இப்போ இல்லேண்ணி'' என்றாள் தழுதழுத்த குரலில்.

''எந்த விஷயத்தில்.''

''அப்போ அவரிடம் ஒரு இளமைத் துள்ளல் இருந்தது சீண்டிக் கொண்டே இருப்பார். தொட முயற்சிப்பார். இப்போது தொடுகை எல்லாம் இருந்தாலும் அந்தக் கேலிப் பேச்சு, சிரிப்பு எல்லாம் மிஸ்ஸிங். அதையெல்லாம் நான் ரொம்பவே மிஸ் பண்ணறேன் அண்ணி. அது மட்டுமில்லை. அதுக்குள்ளே நான் அலுத்துட்டேனோன்னு கூட பயமா இருக்கு. அவரை முழுசா நம்பி எல்லாத்தையும் உதறிட்டு வந்திருக்கேன். என் வருங்காலம் அவர் கையிலேதானே அண்ணி. அதுதான் ஏதோ ரெஸ்ட்லெஸ்ஸா இருக்கு நான் பேசறது தப்பா அண்ணி?''

அவளை ஆதுரத்துடன் தட்டிக் கொடுத்த உமா, "இதோ பார்! நீ பேசினதிலே எதுவும் தப்பில்லைம்மா! ஆனா அதுக்கு நிறைய காரணம் இருக்கலாம். வேலைப் பளு, உன்னைப் பாதுகாக்கிற பொறுப்பு, உன்னை சந்தோஷமா வெச்சுக்கணுமேங்கற கவலை, எதாவேனுமானா இருக்கலாம். எல்லாத்தையும் விட ஒரு புது பொம்மை வேணும்னு அடம் பிடிக்கற குழந்தைக்கு அது கையிலே கிடைச்சதும் அதன் மேல் இருக்கிற கவர்ச்சி குறைஞ்சிடும். இல்லையா? ஆனா அந்த மாதிரி இருக்கக் கூட சான்ஸே இல்லை. நான் ரவி கிட்டே பேசற போதெல்லாம் உன்னைப் பத்திச் சொல்லும்போது அவர் கண்களில் ஒரு மின்னல் தெறிக்கும் எப்போதும், தெரியுமா? அவர் உன்னை எப்படி நேசிக்கிறார் என்பது எனக்கு நல்லாவே தெரியும், கல்பனா! ஏதானாலும் நீ மனசை இதுக்கெல்லாம் தளர விடாதே. எல்லாம் தானாகவே சரியாகிடும்" என்று சமாதானப் படுத்தினாள்.

"பெரிய கவலைன்னு சொல்ல மாட்டேன் அண்ணி! ஆனால் இவ்வளவுதானா எல்லாம்னு ஒரு ஆயாஸம் வருது" என்றாள் கல்பனா.

அவள் வருத்தப்படுவது சரிதான். காதலித்து கல்யாணம் பண்ணிக் கொண்ட ரவியைவிட இப்போது இவளுடன் குடும்பம் நடத்தும் ரவி வித்தியாசமானவனாகத்தான் இருந்தான்.



## 18

இரண்டு நாள் கழித்து அவர்கள் ஹைதராபாத் ஏரியான டேங்க்பண்டில் போடப்பட்டிருந்த பெஞ்ச் ஒன்றில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.



"என்ன கல்பனா! நீ ஏன் ரொம்ப இளைச்சிருக்கியாம்? சேகரும், உமா அண்ணியும் என்னைக் கோபிக்கறாங்க. என்ன ஆச்சு, கண்ணா?" என்று ஆதுரத்துடன் கேட்டான். ரவி.

"ஏன் உங்களுக்கு நான் இளைச்சிருக்கேனா, பெருத்திருக்கேனான்னு தெரியல்லியா?"

"தினம் பார்க்கிறேன், இல்லையா? அதுதான் தெரியல்லே, சரியா பாத்துடறேன் இன்னிக்கு" என்றவன், "இதோ பார், கல்பனா! எதானாலும் மனசு விட்டுப் பேசினால்தான் நாம ஒருத்தருக்கொருத்தர் விருப்பமானதைச் செஞ்சி அனுசரணையாக இருக்க முடியும், இல்லையா, ராஜாத்தி? என்றான் சற்று நேர மௌனத்திற்குப் பின் "சேகர் என்னிடம் நீ உமா அண்ணியிடம் சொன்னதையெல்லாம் சொன்னான்" என்றான்.

கல்பனாவிற்கு மிகவும் பயமாகி விட்டது. இவன்தான் தன் வாழ்வு, உயிர், நம்பிக்கை எல்லாமே. அப்படி இருக்கும்போது இவன் நம்மிடம் கோபித்துக் கொண்டு விடுவானோ என்ற பயத்தில் அவள் முகம் போன போக்கைப் பார்த்த ரவி அவள் கைகளை எடுத்து தன் கைகளில் வைத்துக் கொண்டான்.

"எதுக்கு இத்தனை பயம், கல்பனா? ஒரு நிமிஷத்தில் முகம் வெளிறிப் போய்விட்டதே! என்னம்மா நீ! என் எண்ணத்தில் தவறே இல்லை, ஆனால் அதற்கான காரணத்தைதான் நீ புரிந்து கொள்ளவில்லை. நான் நிறைய மாறித்தான் இருக்கேன். காரணத்தைச் சொல்லட்டுமா?

"காரணம் இருந்தா சொல்லுங்க."

''என்ன கண்ணம்மா, என்னை நீ இப்படி கோவிச்சுக்கலாமா? உன்னை காதலித்தபோது நான் ஒரு லவ்பாய். வெறும் காதலன். அப்போ எனக்கு பொறுப்பு ஏதுமில்லை உன்னைக் காதலிப்பதைத் தவிர. இப்போ நான் ஒரு குடும்பத் தலைவன். உன் பத்திரம், உன்னைப் பார்த்துக்கிற பொறுப்பு எல்லாம் என்னோடதுதானே! அந்தக் கவலை என் சுபாவத்தைக் கொஞ்சம் மாத்தித்தான் இருக்கு.''

''அதுதான் எனக்குக் குற்ற உணர்ச்சியா இருக்கு! என்னால்தான் உங்களுக்கு இந்த பாரம். நான் இப்படி கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிக்கலேன்னா நீங்க பாட்டுக்கு ஹாய்யா இருந்திருப்பீங்க.''

''இல்லைடா! நான்தானே கல்யாணத்தை சீக்கிரம் நடத்தணும்னு அவசரப்பட்டவன்? அதனால் இளவரசி மாதிரி வாழ்ந்திண்டிருந்த உன் வாழ்க்கை இப்போ முழுசா தடம் புரண்டுடுத்தே! தப்பு பண்ணிட்டேன்கிற குத்த உணர்ச்சி வேறே என்னைக் கொல்லுது. கொஞ்ச நாள் பொறுத்து இன்னும் இரண்டு பிரமோஷன் வரவிட்டு என்றால் உங்கப்பாகிட்டே வந்து ரைட் ராயலா பெண் கேட்டிருப்பேன். அவரும் கல்யாணம் பண்ணிக் கொடுத்திருப்பார். ஆனா அதுக்குள்ளே எங்க அண்ணி அவசரப்பட்டு காரியத்தைக் கெடுத்துட்டா. நானாவது அவ சொன்னது எவ்வளவு தூரம் உண்மைன்னு தெரிஞ்சிண்டு இந்தக் கல்யாணத்தைத் தள்ளிப் போட்டிருக்கலாம். ஆனா உன்னை இழந்துடுவோமோங்கற பயத்திலே அவசரப்பட்டு இப்படிப் பண்ணிட்டேன். இதனாலே பார், நீ உன் சொந்தம் எல்லாம் இழந்து நிக்கறே! என்னை மன்னிச்சுடுடா, செல்லம்'' என்றான் கண் கலங்கியபடி.



கல்பனா பதறிப் போனாள். அவன் கையை எடுத்து தன் நெஞ்சிலே வைத்துக் கொண்டு.

''தயவு செய்து இப்படியெல்லாம் பேசாதீங்க. நான் தான் அவசரப்பட்டுட்டேன். உங்க நல்ல மனசைப் புரிஞ்சிக்காமே நான்தான் ஏதேதோ கற்பனை பண்ணிண்டு உங்க மனசைப் புண்படுத்திட்டேன். என்னை தயவு செய்து மன்னிச்சுடுங்க! இனிமே இப்படியெல்லாம் நான் நடந்துக்க மாட்டேன். இப்போ என்ன? உங்களுக்கோ காசுக்குப் பஞ்சமில்லை. நான் அந்த வீட்டை ஆள்ற மஹாராணியாகத்தான் உணர்றேன். அதனாலே உங்களுக்கு எந்த குத்த உணர்ச்சியும் வேண்டாம்'' என்றாள் அழுதபடி.

''அது மட்டுமில்லை, கல்பனா! ரொம்ப நெருங்கி சீண்டி விளையாடிண்டே இருந்தா நாம இப்போ வேண்டாம்னு நினைச்சு ஒத்திப் போட்ட விஷயம் நிஜத்திலேயே நடந்துவிடும். என் மேலே எனக்கே நம்பிக்கையில்லைடா. இப்படி ஒரு அழகுச் சுரங்கத்தை கையில் வெச்சுண்டு ஏழையா வாழ்க்கை நடத்தறேன். இதெல்லாம் போக ஆபீஸிலும் சேல்ஸிலே பெரிய டார்கெட் பிக்ஸ் பண்ணி இருக்காங்க. அதுக்கு நிறையவே வேலை செய்ய வேண்டியிருக்கும்மா. இந்த டார்கெட்டை நான் ரீச் பண்ணிட்டேன்னா எனக்கு இன்னும் ஒரு பிரமோஷன் கிடைக்கும். காரணம் போதுமா? மற்றபடி உன் மேலே எனக்கு ஆசை குறைஞ்சிடிச்சின்னோ, நீ பத்திரக் குறைவாகவோ ஒரு நாளும் உணர வேண்டாம்.''

''ஸாரி, ஸாரி ராஜப்பா! நான் உங்க மனசை ரொம்பவே புண்படுத்திட்டேன். அதுக்காக நான் மறுபடி, மறுபடி உங்ககிட்டே மன்னிப்பு கேட்டுக்கறேன். இந்தத் தப்புக்கு

நீங்க எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் சந்தோஷமா ஏத்துக்கறேன்.''

''தண்டனைதானே! கொடுத்தாப் போச்சு! இருடி, ராத்திரி இருக்கு உனக்கு...''

''இதுதான் என் பழைய ரவி'' என்று அவன் தோள்களில் சாய்ந்தாள். சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு இருவரும் புறப்பட்டார்கள். வீட்டிற்கு வந்ததும் ரவி ''கல்பனா, எனக்குக் கொஞ்சம் ஆபீஸ் வேலை இருக்கு அதை முடிக்க ஒரு இரண்டு மணி நேரம் ஆகும். அதனாலே நான் டயர்டாகி விடுவேன் இல்லையா?''

''அதுக்கு?''

''அதனாலே நான் டயர்டாகிவிடாமே பாத்துக்க வேண்டியது உன் பொறுப்பு.''

''ஓஹோ! அதுக்கு நான் என்ன பண்ணணும்?''

''பத்து நிமிஷத்திற்கு ஒரு முறை என்கிட்டே வந்து நான் சொல்ற இடத்தில் எல்லாம் முத்தம் கொடுக்கணும்.''

கல்பனா அவனைக் கட்டிப் பிடித்து அவன் உதட்டில் பச்சக் கென்று முத்தமிட்டாள். ''மன்மதன் ஸார்! இது ஒரு நாலு மணி நேரத்திற்குத் தாங்கும். வேலையை சீக்கிரமா முடிச்சிட்டீங்களா மிச்சத்தை சுத்தமா திருப்பிக் கொடுக்கணும். என்ன தெரிந்ததா?'' என்று சொல்லிவிட்டு உள்ளே ஓடிவிட்டாள்.

மறுநாள் காலையில் இருவரும் ஒரே சமயத்தில் கண் விழித்தனர். தன்னையே பார்த்துக் கொண்டு படுத்திருந்த கல்பனாவைப் பார்த்த ரவி அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.



''ராத்திரி நன்னா தூங்கினியாடா?''

''ஃபர்ஸ்ட் கிளாஸ்'' என்றாள் கல்பனா.

''கல்பனா, வாழ்க்கையில் உனக்கு எல்லாம் ஃபர்ஸ்ட் கிளாசாக மட்டும் தான் இருக்கணும். நீ தான் என் உயிர், என் வாழ்க்கை. நீ இல்லாமே என்னாலே ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாதுடா. நீ சந்தோஷமா இல்லைன்னா எனக்குத் தாங்காதும்மா, என்னைப் பாத்துக்கோ, கண்ணா!'' என்றான்.

''ஸாரி ரவி! நான் சொன்னது உங்களை ரொம்பவே பாதிச்சிருக்கு. இனிமே நான் சந்தோஷமாக மட்டுமே இருப்பேன்'' என்று சொல்லிவிட்டு எழுந்திருக்க மனசில்லாமல் எழுந்தாள்.

அவனுக்கு டிபன் கொடுத்து அனுப்பிவிட்டு துணி துவைக்கலாம் என்று உள்ளே போனாள். தற்போது தினம் இவர்கள் வீட்டில் நடக்கும் ''கூத்தை'' மனதில் அசை போட்டு அதிலேயே லயித்து நின்றாள். ரவி ஆபீஸிற்கு லேசில் கிளம்ப மாட்டான். அவனை ஒரு வழியாக கிளப்பினால் ஹாலில் உட்கார்ந்து கொண்டு ''உன்னை விட்டு ஆபீஸுக்குப் போக மனசு வரமாட்டேங்கறது. கல்பனா! இன்னிக்கு லீவு போட்டுடறேனே!'' என்று அடம் பிடிப்பான். இவளும் சற்று நேரம் அவன் கொஞ்சலுக்கு ஈடு கொடுப்பாள். அப்புறம் ''இப்படியே உட்கார்ந்திருந்தா ஆபீஸில் நன்னா வாங்கிக் கட்டிக்க வேண்டியது தான். சாயந்தரம் நீங்க வரச்சே நான் ரெடியா இருப்பேனாம். நீங்க வந்ததும் நாம இரண்டு பேரும் டாட்டா போவோமாம். சமர்த்தோல்லியோ, இப்ப குட்பாயா ஆபீஸிற்கு கிளம்புவீங்களாம்'' என்றெல்லாம் சொல்லி அனுப்புவாள்.

இப்போது அதையெல்லாம் நினைத்துக் கொண்டு துணி துவைக்க ஆரம்பித்தவளுக்கு புன்னகை அரும்பியது. ரவி எத்தனையோ முறை சொல்லிப் பார்த்து விட்டான். "பாவம் நீ எதுக்கு பழக்கமில்லாத வேலையெல்லாம் பண்ணணும்? ஒரு வேலைக்காரியை ஏற்பாடு செஞ்சுடறேன்" என்று.

"நீங்க ஆபீஸ் போகவிட்டு நான் சும்மாதானே இருக்கேன்? ஒரு வேலையும் செய்யாமல் உட்கார்ந்திருந்தால் குண்டம்மாவாகிவிடுவேன். என்னைக் குண்டு கண்ணம்மாவா பார்க்கணும்னு உங்களுக்கு ஆசையா?" என்று கேட்பாள்.

"ஐயய்யோ! நீ குண்டு கண்ணம்மாவானால் நான் உன்னை எப்படித் தூக்கறது? வேண்டாம்மா, நீ இப்படியே இருந்தால்தான் உன்னை பூங்கொத்தை தூக்குவது போல் தூக்கி..."

"போதும் வழியாதீங்க! இப்ப என்னை வேலை செய்ய விடுங்க" என்பாள்.

துணி துவைக்கும்போது அவளுக்கு சாதனாவின் நினைவு வந்து விட்டது. சென்னையில் வேலைக்காரி கல்பகம் என்றைக்காவது ஒருநாள் தான் லீவு போடுவாள். அன்று அம்மா சத்தம் போடாமல் எல்லா வேலைகளையும் செய்து விடுவாள். ஆனால் பாட்டியோ, அப்பாவோ பார்த்தால், "போங்கடி! போய் பொம்பிளை பசங்களா லட்சணமா அம்மாவுக்கு ஒத்தாசை செய்யுங்கடி!" என்று விரட்டுவார்கள். இவளுக்குத் துணி துவைக்கும் வேலைக்குப் பக்கத்தில் கூடப் போகப் பிடிக்காது. எல்லாம் சாதனாதான் செய்வாள். ஆனால் இப்போது என்னவோ ரவியின் துணிகளைத் துவைப்பது அத்தனை சந்தோஷமாக இருந்தது.



திடீரென்று நினைவுக்கு வந்தது. இன்று சாதனாவின் பிறந்த நாளாயிற்றே! எப்படி மறந்தோம்? கையைத் துடைத்துக் கொண்டு எழுந்தவள், திரும்ப ஆயாசத்துடன் உட்கார்ந்தாள். 'இப்போ நினைவுக்கு வந்து மட்டும் என்ன செய்யப் போகிறோம்? ஏன், போன் செய்து பார்க்கலாமே. ரவியை பர்மிஷன் கேட்போம்' என்று தோன்ற உடனேயே அவனுக்குப் போன் செய்தாள்.

"என்ன கல்பனா, என்ன ஆச்சு?" என்று சற்று கலவரமாகவே கேட்டான் ரவி.

"ஒண்ணுமில்லே ரவி! மொதல்லே ஸாரி, உங்களை ஆபீஸ் நேரத்திலே தொந்திரவு பண்ணிட்டேன்."

"அதெல்லாம் பரவாயில்லேம்மா. இப்போ எதுக்கு போன் பண்ணினே? பிராப்ளம் ஒண்ணுமில்லையே?"

"ஒரு ரிக்வெஸ்ட், ரவி! எனக்கு ஊருக்குப் போன் பண்ணணும். பண்ணிக்கலாமா?"

"என்னம்மா திடீர்னு?"

"இன்னிக்கு சாதனாவோட பிறந்தநாள். அவளை விஷ் பண்ணணும்னு ஆசையா இருக்கு ரவி! ப்ளீஸ்!"

சற்று நேரம் மௌனம் சாதித்த ரவி, "இதுக்கு ஏம்மா இப்படி கெஞ்சறே? நீ போன் பண்ணி அவங்க கோபப்பட்டா உனக்கு ரொம்ப வருத்தமா இருக்கும். நீ வருத்தப்பட்டா என்னோட அத்தனை அசைவுகளும் நின்னு போயிடும்மா. அதனால்தான் இத்தனை நாள் உன்னைத் தடுத்தேன். ஆனா உனக்கு இத்தனை தீவிரமா போன் பண்ணணும்னு தோணினா, செய்யேன். ஆனா ஒரு விஷயம் இப்போ பண்ணாதே! சேகர் வீட்டுக்குப்போ, அண்ணியை பண்ணித்தரச் சொல்லிப் பேசு. உன்

குரலைக் கேட்டால் போனை டிஸ்கனெக்ட் பண்ணாலும் பண்ணிடுவாங்க'' என்றான்.

''எஸ்.டி.டி. சார்ஜ் நிறைய ஆகுமே, பரவாயில் லையா?'' என்று கேட்டாள்.

''எங்களுக்குள் அதெல்லாம் பெரிய விஷயமில்லே. நீ அங்கேயே போய் பேசு. நான் சாயந்திரம் சீக்கிரம் வந்து விவரம் கேட்டுக்கறேன்'' என்று சொல்லி போனை வைத்து விட்டான்.

கல்பனா வீட்டைப் பூட்டிக் கொண்டு சேகர் வீட்டிற்குப் போனாள். ஆனால் அங்கே அவளுக்கு பெரிய ஏமாற்றமே காத்திருந்தது. வீடு பூட்டியிருந்தது. இவள் வருவதைப் பார்த்ததும் பக்கத்து வீட்டுப் பெண் வந்து ''அண்ணா ஆபீஸ் போயிருக்கார், உமா அக்கா 'ஷாப்பிங் போறேன் அண்ணா வந்தா வீட்டு சாவியைக் கொடு'னு சொல்லிட்டுப் போயிருக்காங்க. வீட்டு சாவியைத் தரட்டுமா?'' என்று கேட்டாள்.

''அண்ணி எப்போ வருவாங்க?'' என்று கேட்டபடி சாவியை வாங்கிக் கொண்டாள் கல்பனா.

''ஒரு மணி நேரத்திலே வந்துடறேன்னு சொன்னாங்க. அண்ணாவும் சாப்பிட வருவாராம் இன்னிக்கு'' என்றாள் அந்தப் பெண்.

உள்ளே போன கல்பனா தண்ணீர் எடுத்துக் குடித்து விட்டு ஹால் சோபாவில் படுத்தாள். எப்போதுமே இவர் கள் இரண்டு பேர் பிறந்த நாளுமே வீட்டில் ரொம்பவே அமர்க்களப்படும். இருவரில் ஒருத்திக்கு பிறந்த நாள் என்றாலும அடுத்தவளுக்கும் புதுத் துணி வாங்குவார் கள். பாட்டி காலையில் மங்கள ஸ்நானம், ஸ்வாமிக்கு நைவேத்தியம், கோவிலில் அர்ச்சனை என்று இவற்றில் ஒன்றையும் குறைக்க சம்மதிக்க மாட்டாள். சாயந்திரம் கோவிலுக்கு பாட்டியும் வருவதால், இங்க்லீஷ் பர்த்டே அன்று அப்பா இவர்களைச் சாப்பிட வெளியே அழைத்துப் போவார். பீச்சுக்குப் போவார்கள். அம்மா கூட சமயத்தில் இவர்களுடன் ஓடி விளையாடுவாள். மணல் வீடு கட்டி விளையாடுவார்கள். தொலைவில் உள்ள ஏதாவது கோவிலுக்கு சமயத்தில் அழைத்துப் போவார் அப்பா. பாட்டிக்கு மட்டும் வீட்டிலிருந்து சாப்பாடு எடுத்துப் போவார்கள். மற்றபடி இவர்கள் ஹோட்டலில் வெளுத்து வாங்குவார்கள். சில வேளைகளில் அம்மா மிளகாய்ப் பொடி எண்ணெய் தடவிய இட்லி, புளியோதரை, தயிர் சாதம், வற்றல், வறுவல் வகைகள் என்று வீட்டிலிருந்தே பண்ணி எடுத்துக் கொண்டு வந்து விடுவாள். ஆஹா, என்ன டேஸ்டி சமையல் அம்மா, பாட்டி இருவருதுமே!



அநேகமாக இவர்கள் இரண்டு பேர் பிறந்த நாளைக் குமே அத்தை இருப்பாள். பட்டுப் பாவாடையோ அல்லது ஒரு சின்ன நகையோ வாங்கிக் கொடுக்காமல் இருக்க மாட்டாள். எல்லாவற்றையும் நினைக்க நினைக்க துக்கம் பொங்கி எழுந்தது இவளுக்கு. இவள் அழுது கொண்டு படுத்திருக்கையிலேயே உமா வந்து விட்டாள். கல்பனா தான் அழுது கொண்டிருப்பதை மறைக்கப் பார்த்தும் பரிதாபமாக மாட்டிக் கொண்டாள்.

''கல்பனா, என்னம்மா? என்ன ஆச்சு? ஏன் அழறே?'' என்று ஆதரவாகக் கேட்டாள் உமா.

''ஒண்ணுமில்லே அண்ணி, போன் பண்ணனும்'' என்று விவரம் சொன்னாள்.

''இவ்வளவுதானே! சேகர் வந்துடட்டும், பண்ணிட் டாப் போச்சு'' என்றாள் உமா.

அடுத்த அரை மணியில் சேகர் வந்துவிட்டான். "முதல்லே சாப்பிடுங்க, அண்ணா! அப்புறமா போன் பண்ணலாம்" என்ற கல்பனா அவர்களை உட்கார வைத்து தானே சாப்பாடு பரிமாறினாள். கல்பனா வீட்டில், ஆபீஸுக்கும், வீட்டிற்கும் வெவ்வேறு நம்பர்கள். முதலில் ஆபீஸுக்குப் போன் பண்ணினால் அப்பா பேசுவதைப் பொறுத்து வீட்டிற்குப் பேசலாம். வீட்டிற்குப் பேசினால் பாட்டி இருப்பாள் என்று பயந்தாள். முதலில் சேகர் பேசட்டும். அப்புறமாக இவள் பேசலாம் என்று முடிவு செய்தார்கள்.

சேகர் போன் செய்தான். படபடக்கும் இதயத்தோடு காத்திருந்தாள் கல்பனா. உமாவிற்கே டென்ஷனாகத் தான் இருந்தது. சற்று நேரத்தில் பதில் கிடைத்தது. "இந்த எண் தற்போது உபயோகத்தில் இல்லை" என்று. தவறாகச் செய்து விட்டோமோ எனறு சேகர் கல்பனாவை மறுபடியும் நம்பர் சொல்லச் சொல்லி டயல் செய்தான். இதற்கும் அதே பதில்தான் கிடைத்தது. சேகர் உமா விடம் "இந்த நம்பரில் ஏதோ பிராப்ளம் இருக்கிறது. ஒண்ணு செய். நீ வீட்டு நம்பருக்குப் போன் செய். ஆண் குரல் கேட்டால் ஏதேனும் சந்தேகப்படுவார்கள். அத னால் நீ முதலில் பேசி சாதனாவைக் கேள். அவள் லை னில் வந்ததும் கல்பனாவிடம் கொடுத்துவிடு" என்றான். உமா முயற்சித்தாள். ஆனால் இதற்கும் அதே பதில்தான் கிடைத்தது. பலமுறை முயற்சித்தும் பலன் பூஜ்யம்தான்.

"நம்பர் தப்பாய்ச் சொல்றியாம்மா?" என்று கேட் டான் சேகர்.

"இல்லையண்ணா! எனக்கு நினைவு தெரிந்த நாளாய் இதே நம்பர்தானே இருக்கிறது. ஐய்யோ, என்ன



ஆச்சோ தெரியலையே" என்று கல்பனா கண்ணீர் வடித்தாள்.

"வீட்டை மாத்தியிருப்பாங்களோ, இல்லை நம்பரை மாத்தியிருப்பாங்களோ, ஒண்ணுமே புரியலையே!" என்று கவலைப் பட்டாள் உமா.

அதற்குள் போன் மணி அடிக்க சேகர் எடுத்தான். "அப்படியா, இதோ உடனே வரேன்" என்றான்.

"நீங்க கிளம்புங்கண்ணா, இன்னொரு நாள் பாத்துக் கலாம்" என்றாள் கல்பனா.

"கவலைப் படாதேம்மா! ஒன்றும் இருக்காது. அவர்கள் அநேகமாக வீட்டைத்தான் மாற்றியிருக்க வேண்டும். இன்னும் இரண்டு மாதம் கழித்து நீங்கள் இரண்டு பேரும் நேராகவே போயிட்டு வாங்களேன். இருக்கும் இடம் தெரிந்தால் மற்றபடி என்ன செய்யலாம்னு யோசிக் கலாம்" என்றபடி அவன் கிளம்பிவிட்டான்.

"உனக்கு உன் தெருவில் யாராவது பிரண்ட் நம்பர் தெரிந்தால் பண்ணிப் பாரேன், கல்பனா" என்றாள் உமா.

"எனக்கு ஒரு சிநேகிதிதான் அந்தத் தெருவிலே. ஹரிப்ரியான்னு பேரு. ஆனா எனக்கு அவள் நம்பர் தெரி யாது. நான் கேட்டுக்கலே, அவசியமே இல்லாததால் சரிக்கா, நேரமாச்சு, நான் கிளம்பறேன்" என்றாள் கல்பனா.

"இங்கேதான் சாப்பிடேன் கல்பனா!" என்ற உமா விடம், "இல்லேக்கா, அங்கே எல்லாம் வீணாயிடும்" என்று சொல்லிப் புறப்பட்டு விட்டாள்.

வீட்டில் போய் தனியே இருக்கும்போதுதான் தன் இழப்பு என்ன என்பதை கல்பனா புரிந்து கொண்டாள். ஒரு பாட்டம் அழுது தீர்த்தாள். நடந்ததை சேகர்

ரவிக்குப் போன் பண்ணிச் சொல்லி விட்டதால் சாயந்திரம் வரும்போது ரவி ஒரு நல்ல சினிமாவுக்கு இரண்டு டிக்கெட் வாங்கி வந்திருந்தான் சிக்கட்பல்லியில் சினிமா தியேட்டர்களுக்குப் பஞ்சமே கிடையாது. ஆந்திராவில், சாப்பிட சாப்பாடு கிடைக்கிறதோ இல்லையோ, கண்டிப்பாக எல்லோருக்கும் சினிமா பார்க்க வேண்டும். ஆகையால் இந்தியாவிலேயே ஆந்திராவில் தான் சினிமா தியேட்டர்கள் அதிகம்.

அன்று அவளுக்கு எதைப் பற்றியும் யோசனை வராதபடி அவள் மீது அன்பைப் பொழிந்தான். அந்த இன்பத்தில் தன்னையே மறந்திருந்தாள், கல்பனா.

நாட்கள் நகர்ந்தன. அழகாகக் குடித்தனம் செய்தாள் கல்பனா. வீட்டு ஞாபகம் எப்பவாவது வரும். அவர்கள் அப்படி எங்கே போயிருப்பார்கள் என்று நினைத்துக் கொள்வாள். என்ன பைத்தியக்காரத்தனம் அத்தையின் போன் நம்பர்கூட தான் வைத்துக் கொள்ளாதது என்று தோன்றியது.

அவர்கள் தன் செய்கைக்கு மனதளவில் எப்படி பாதிக்கப்பட்டிருப்பார்கள். வருத்தமா? கோபமா? அல்லது கல்பனா என்ற தங்கள் பெண்ணை மறந்தே போயிருப்பார்களா? என்றெல்லாம் யோசிப்பாள்.

உடனே இந்த யோசனையெல்லாம் வேண்டாதது. அவர்களை வேண்டாம் என்றும், ரவி மட்டும் போதும் என்று வந்தவள் நான் தானே? இப்போது தனக்கு என்ன குறைச்சல்? ரவியைவிட அன்பான புருஷன், அழகன் தனக்குக் கணவனாகக் கிடைத்திருக்க முடியுமா? எப்படிப் பார்த்துக் கொள்கிறான் தன்னை என்று மகிழ்ச்சியான நினைவுகளில் தானே மூழ்க முயற்சிப்பாள்.



தன் கண் கூட தனக்கே படுமா என்ன? பட்டுத்தான் செய்தது.



## 19

இப்போதெல்லாம் ரவி முன்பு மாதிரி இல்லையோ என்ற சந்தேகம் கல்பனாவிற்கு. முன்னெல்லாம் வாயைத் திறந்தாலே கண்ணம்மா, ராஜாத்தி என்று குழைபவன் இப்போதெல்லாம் பேசுவதையே கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டு வருகிறானோ என்றும் தோன்றியது.

பொறுக்க முடியாமல் ஒருநாள் கேட்டே விட்டாள். அதற்கு அவன் ''சாரி கண்ணம்மா, ஆபீஸில் கொஞ்சம் பிரச்னை. அதுதான் என்னை அறியாமலேயே என்னைப் பாதித்திருக்கும் என நினைக்கிறேன். நீ என் ராஜாத்தி. ரதி மாதிரி உன்னை பக்கத்தில் வைத்துக் கொண்டு நான் கவனிக்காமல் கூட இருந்திருக்கிறேன் என்றால் அது தான் காரணம். கோவிச்சுக்காதேடா, ராஜாத்தி!'' என்றான்.

அந்த அருமையான வார்த்தைகளை அவன் சொன்ன விதத்திலேயே அவள் உருகிப் போனாள். ஆனால் வரவர பெரிதாக எரிகிற நெருப்பை யாராவது கைகளால் மறைக்க முடியுமா என்ன? ஒரு நாளைக்கு ஒருநாள் அவன் ஆபீஸிலிருந்து தாமதமாக வருவது அதிகமாகியது. ஒரு முறை கேட்டபோது. ''ஆபீஸில் வேலை கசக்கிப் பிழிகிறார்களம்மா. நானே உங்கிட்டே சொல்லலாம்னு நினைச்சுகிட்டு இருந்தேன் சில விஷயங்களை எல்லாம். ஆபீஸில் லாபம் குறைஞ்சுடுத்துன்னு ஆட்குறைப்பு பண்றாங்க. கூடுதலா, அவங்க

எதிர்பார்ப்புக்குமேலே. அவங்க கொடுக்கற சம்பளத்துக்குமேலே வேலை செய்யற கொஞ்சம் பேரைத்தான் வெச்சுகிட்டு இருக்காங்க. அதனாலதான் ரொம்ப கவனமா இருக்க வேண்டியிருக்கு. அதுவும் தவிர சம்பளத்தில் அதிகப் படியா கொடுத்துட்டிருந்த அலவன்ஸ் எல்லாம் நிறுத்திட்டாங்க. அதனாலே செலவெல்லாம் கொஞ்சம் பார்த்து செய்ய வேண்டிய நிலையில் இருக்கோம். கண்ணா! இதைச் சொல்லவே எனக்கு வருத்தமா இருக்கு. ரொம்ப ஸாரி டியர்'' என்றான்.

''இதுக்கு இத்தனை வருத்தம் எதுக்கு? சினிமா, ஹோட்டல் இந்த இரண்டும் தான் எனக்குத் தோன்ற அதிகப்படி செலவு. இனிமே சினிமா வேண்டாம். பக்கத்துலே இருக்கிற பார்க்லே போயி நாம பேசிண்டிருந்தாலே போதும். இந்த ஊர்லே நிறைய வண்டிகள்லே சாட் வகையறா விக்கறான். அதைச் சாப்பிட்டாப் போச்சு. ஒரு மாறுதலுக்குத்தானே சாப்பிடப் போறோம்? இதெல்லாம் பெரிய விஷயங்கள் இல்லை. நாம இரண்டு பேரும் ஒருத்தர் மேலே ஒருத்தர் பிரியமா இருக்கறதுக்கு இதெல்லாம் அவசியமும் இல்லை, காரணமும் இல்லை'' என்றாள் கல்பனா.

ரவி முகம் மலர்ந்தான் ''என் சமத்து சக்கரைக் கட்டி! எத்தனை அழகா புரிஞ்சுண்டுட்டே. நான் ரொம்ப பயந்துண்டிருந்தேன். ரொம்ப, ரொம்ப தாங்க்ஸ்டா செல்லம்!'' என்று சொல்லி அவளை அணைத்துக் கொண்டான்.

அதன் பிறகு இவள் அதிகமாக அவனை ஏதும் கேட்க மாட்டாள். பக்கத்தில் உள்ள ஒரு நூலகத்தில் உறுப்பினராக இருந்தாள். வந்த புதிதிலேயே செய்து



கொண்டது. நம் நாட்டுப் பெண்களுக்குக் குடித்தனம் பண்ண சொல்லிக் கொடுக்கவா வேண்டும்? வீட்டில் வேலைகள், கணவனைப் பார்த்துப் பார்த்து ஆபீஸ் அனுப்புவது என்பதையெல்லாம் பிரமாதமாகச் செய்து வந்தாள். ஒழிந்த நேரங்களில் புத்தகங்கள் படிப்பாள். தனியாகவோ அல்லது உமாவுடனோ சேர்ந்து வேங்கடேசப் பெருமாள் கோவிலுக்குப் போய் வருவாள். அங்கு போய் மனமுருகி தன் கணவனுக்கு ஆபீஸ் பிரச்னைகள் எல்லாம் சரியாகிவிடணும். அவன் ஆரோக்கியமாக இருக்கணும்'' என்றெல்லாம் வேண்டிக் கொள்வாள். கர்நூலிலிருந்து ரவியின் அண்ணா எப்போதாவது போன் செய்து, ''எங்களோடு ஒரு 10 நாட்கள் வந்திருங்களேன்'' என்று கூப்பிடுவார்.

இப்போதெல்லாம் ரவி வீட்டுச் செலவுக்குப் பணம் கொடுப்பது குறைந்து கொண்டே வந்தது. இவளும் எப்படியோ சமாளித்துக் கொண்டு வந்தாள். அப்போது தான் தோன்றியது. '+2வைக் கூட முடிக்காமல் போய் விட்டோமே. இனிமேலாவது அதைப் படித்து பாஸ் செய்துவிடணும்' என்று. 'அதைப் பாஸ் செய்துவிட்டால் ஏதாவது வேலைக்குப் போய் ரவிக்கு உதவியாக இருக்கலாமே என்று நினைத்தாள். அப்படி வேலைக்குப் போய்க் கொண்டே டிகிரியையும் முடித்து விட்டால் தற்போது நிலவும் பணக்கஷ்டம் குறையுமே' என்று நினைத்தாள். ரவி இதற்கு மறுப்பு சொல்ல மாட்டான் என்று நினைத்தாள். ஆனால் அவள் நினைத்தபடி அவன் இந்த யோசனையை ஆதரிக்கவில்லை. மாறாக சற்று கோபம் கொண்டான். ''நீ + 2 கூட முடிக்கவில்லை. உனக்கு என்ன வேலை கிடைக்கும்? ஏன். நான்

இப்படியே இருந்துடுவேன்னு நினைச்சியா? நான் வேறே கம்பெனிகளிலேயும் வேலை தேடிண்டுதான் இருக்கேன்'' என்றான் காட்டமாக.

இப்போதெல்லாம் கொஞ்ச நாளாக உமாவும் சேகரும் ரொம்பவே பிஸியாகி விட்டார்கள். சேகரின் தங்கையை உமாவின் அத்தை பையனுக்குக் கல்யாணம் நிச்சயித்திருந்தார்கள். சேகரின் அப்பா அவனிடம் எதிர்பார்த்த அளவு பணம் அவனிடம் உடனே தயாராக இல்லாததால் அதைப் புரட்ட அவன் அலைந்து கொண்டிருந்தான். இருவர் வீட்டு மனிதர்களும் கல்யாணத்திற்குத் தேவையான சாமான்கள் வாங்கவும், கல்யாணம் ஹைதராபாதில்தான் என்பதால் ஏற்பாடுகள் செய்யவும் அடிக்கடி இங்கு வந்து போய்க் கொண்டிருந்தார்கள். தவிர, கல்யாணத்திற்கே 'தொட்டதற்கெல்லாம் அவர்களிடம் போய் தொந்திரவு செய்கிறோம் தப்பு' என்ற எண்ணம் வந்து விட்டதால் அவர்களிடம் தன் பிரச்னைகளைச் சொல்வதில்லை. முன்பொரு தரம் ஆனதுபோல் சேகர் போய் ரவியிடம் கேட்டு விட்டால் ரவி தப்பாக எடுத்துக் கொண்டு கோபித்துக் கொள்வானோ என்று வேறு பயம்.

ஒரு ஐந்து, ஆறு மாதங்களை இப்படியே தள்ளி விட்டாள். அன்று ரவி வீட்டிற்கு வர பதினோரு மணியாகி விட்டது. உள்ளே வந்து நுழைந்ததும் அவன் ஷூவைக் கூடக் கழட்டவில்லை. அதற்குள் இவள் சட்டென்று ''ஏன் இத்தனை நேரம், எனக்கு ரொம்பவே பயமாக இருந்தது.'' என்று கேட்டு விட்டாள். இவனுக்குச் சட்டென்று கோபம் வந்து விட்டது ஒருநாளும் இல்லாமல்.



''அப்பா, அம்மாவையெல்லாம் விட்டுவிட்டு பதினெட்டு வயதுகூட நிறையாமல் என்னோடு வரும்போது இல்லாத பயம் இப்போ புதுசா வந்துடுத்தாக்கும்'' எனறு கேட்டுவிட்டு டிரெஸ்ஸைக்கூட கழட்டாமல் ஷூவை மட்டும் கழற்றி எறிந்துவிட்டு படுத்து விட்டான்.

இவளுக்கு அழுகை முட்டிக் கொண்டு வர அழுது தீர்த்து விட்டாள். அவனுக்குக் களைப்பாக இருந்திருக்க வேண்டும். நன்றாகத் தூங்கி விட்டான் போலிருக்கிறது. ஒரு தூக்கம் தூங்கி எழுந்தவன் கல்பனா அருகில் இல்லை என்பதை உணர்ந்தான். மெல்ல எழுந்தவன் கிச்சனில் லைட் எரிவதைப் பார்த்து அங்கு வந்தான். கிச்சன் கதவு உள் பக்கம் தாளிடப்பட்டிருந்தது. பயந்து போன ரவி ''கல்பனா, கல்பனா'' என்று கதவைத் தட்டினான் ரொம்ப நேரத் தட்டலுக்குப் பின் அழுதழுது வீங்கிய முகத்துடன் வந்து கதவைத் திறந்தாள்.

''இப்போ என்ன அழுகை? உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்ட நாளாய் இதைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன், வந்து படு!'' என்று சள்ளென்று எரிந்து விழுந்து விட்டு தான் போய் படுத்து விட்டான்.

தினம் இவன் வந்து சாப்பிடும்போதுதான் அவளும் கூடச் சாப்பிடுவாள். ஆனால் அவன் அதைக் கூட கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. அவளிடம் கோபித்துக் கொண்டு படுத்தவனுக்கு இப்போது தூக்கம் வரவில்லை. கல்பனா இன்னும் வந்து படுக்கவில்லை என்பதை உணர்ந்தான் அவன். என்னதான் செய்கிறாள்? திரும்ப கிச்சனுக்குப் போய்ப் பார்த்தான்.

அங்கு கிச்சனில் சுவரோரமாகப் படுத்துக் கொண்டு விசித்துக் கொண்டிருந்தாள். இவனுக்குப் பரிதாபமாகப் போய்விட்டது. போய் அவளருகில் உட்காரப் போனவன் கிச்சன் மேடையில் ஒரு காகிதம் படபடப்பதைப் பார்த்ததும் சட்டென்று திகைத்து அதை எடுத்துப் படித்தான்.

அவனுக்கு அன்று தான் அவளை ஹைதராபாத் கூட்டி வந்தபோது லெட்டர் எழுதி வைத்துவிட்டு வரச் சொன்னது நினைவுக்கு வந்தது. ரொம்ப நாள் கழித்துத்தான் கல்பனா அதற்குக் காரணம் கேட்டாள். பாவம்! அப்போது அவன் சொன்னதைச் சொன்னபடி செய்து விட்டு பிறகுதான் கேட்டாள். இந்தக் காதல் மனிதர்களை என்ன பாடு படுத்துகிறது?

''ஐய்யோ, மக்கு! உங்கப்பா, அம்மா உன்னைக் காணோம்னு போலீஸ் கம்ப்ளைண்ட் ஏதாவது கொடுத்தா கிட்நாப்னு என்மேலே கேஸ் வரும். ரொம்பவும், தோண்டினா, நீ பதினெட்டு வயசு நிறையாதவள் என்பது வேறு வெளியே வரும். முதல்லே என்னைத் தூக்கி ஜெயில்ல போட்டுடுவாங்க. அப்புறம் நான் வெளியே வருவது குதிரைக் கொம்புதான். லெட்டர் எழுதி வெச்சுட்டா, நீ இஷ்டப்பட்டுத்தான் ஏதோ பண்ணியிருக்கேன்னு தெரியும். அதுக்குமேலே அவங்க இஷ்டம்னு நினைச்சேன்'' என்றான் ரவி. அதெல்லாம் அவனுக்கு நினைவுக்கு வர அவனுக்குக் கல்பனா மேல் இரக்கம் அதிகமாகி விட்டது. கையில் இருந்த லெட்டரைப் பிரித்தான்.

டியர் ரவி,

நிஜமாகவே நான் அசட்டுத் துணிச்சலுடன் தான் இந்த சின்ன வயசிலேயே காதலித்து



உங்களுடன் ஓடி வந்து விட்டேன். அதனால் உங்களுக்கும் பாரம் என்பது புரிகிறது. ஆனால் உங்களை ரொம்ப, ரொம்பப் பிடித்து உங்களை என் முழு இதயத்திலும் வைத்துக் கொண்டிருப்பது தான் என்னுடைய இன்றையத் தவறுக்கும் காரணம். நான் இன்று முதல் உங்களிடமிருந்து விலகி விடுகிறேன் - உங்கள் சந்தோஷத்திற்காக.

என்னை அவ்வப்போது நினைத்துக் கொள்வீர்களா?

அன்பு முத்தங்களுடன், உங்கள் அருமை,

கல்பனா.

பி.கு.: இத்தனை நாட்கள் எனக்குக் கொடுத்த அற்புதமான வாழ்க்கைக்கு மிக்க நன்றி.

பதறிப் போன ரவி கல்பனாவை சுவற்றுப் பக்கத்திலிருந்து திருப்பினான். அழுதழுது அப்படியே தூங்கியிருந்த கல்பனா இவன் தொடலுக்குத் திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். அவளை எழுப்பி, முகம் கழுவிக் கொள்ள வைத்து, சில்லென்று கொஞ்சம் தண்ணீர் குடிக்கக் கொடுத்தான். அவளைக் கூட்டிப் போய் கட்டிலில் படுக்க வைத்து பக்கத்தில் தானும் படுத்துக் கொண்டான்.

''கல்பனா, கல்பனா, என் கண்ணில்லே! கொஞ்சம் இங்கே பாரம்மா'' என்று ஆதரவான குரலில் அவன் கூப்பிடக் கூப்பிட அவளின் அழுகை அதிகமாகியது. அவன் மார்பில் முகம் புதைத்து ஹோவென்று அழுது தீர்த்து விட்டாள்.

இவனுக்குப் பச்சாதாபம் அதிகமானது. ''சாரி, கண்ணம்மா! என்னை மன்னிச்சுடுடா, என் தங்கமில்லே, வெரி வெரி ஸாரிடா'' என்று திரும்பத் திரும்பச்

சொன்னான். அவள் கையை எடுத்து தன் கன்னத்தில் அறைந்து கொண்டான். அவள் பதறிப் போய் தன் கைகளை இழுத்துக் கொண்டாள்.

''நான் ரொம்பவே தப்பா பேசிட்டேன். என்னை மன்னிச்சுட்டேன்னு சொல்ல மாட்டியா?'' என்று கெஞ்சினான்.

''நீங்கள் சொன்னது நிஜம் தானே!''

''இல்லைடா. நான் அப்படி பேசியிருக்கக் கூடாது. எழுந்திரு! ஏதாவது சாப்பிட்டியா? எனக்குத் தெரியும், நான் வராமே நீ சாப்பிட்டிருக்கமாட்டேன்னு.''

''நீங்களும்தான் ஒண்ணுமே சாப்பிடல்லே. நானும் நீங்க உள்ளே நுழையும்போதே அப்படிக் கேட்டிருக்கக் கூடாது. ரொம்ப ஸாரி ரவி!'' என்றாள்.

''ஆனாலும் என் மேலே உனக்குக் கோபம் தானே?''

''இல்லை. எனக்குக் கோபம் என் மேலேதான்.''

அவள் முகத்தைத் தன் விரலால் நிமிர்த்தி, ''என் மேலே கோபம் இல்லேன்னு ஒரு சிரிப்போடதான் சொல்லேன், ராஜாத்தி, ப்ளீஸ்!'' என்றான்.

அவன் மார்பில் முதுகை வைத்து ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டு ''இல்லை'' என்றாள் சிரிக்க முயன்று கொண்டே.

''வா, ஏதாவது சாப்பிடு'' என்றான்.

''இப்ப போய் என்னத்தைச் சாப்பிடறது? நீங்க போய் சாப்பிடுங்க.''

''உன்னை விட்டுவிட்டு நான் மட்டும் எப்படி சாப்பிடுவேன்? வா, வா! நாம இரண்டு பேருமே கொஞ்சம் ஏதாவது சாப்பிட்டு விட்டுப் படுக்கலாம்.''



இருவரும் கிச்சனுக்குச் சென்று சாப்பிட்டேன் என்று ஏதோ பேர் பண்ணிவிட்டு படுத்துக் கொண்டார்கள்.

''கண்ணம்மா, என்னை நீ ரொம்பவே பயமுறுத்திட்டே! ஆமாம், என்னை விட்டு விலகி எங்கே போவதாக இருந்தே நீ? நீ பாட்டுக்கு அப்படி எழுதி வெச்சுட்டியே, நியாயம்மா அது? சொல்லு, என்ன பண்றதா இருந்தே. சென்னை போறதாகவா?''

''இல்ல, இந்த உலகத்தை விட்டே போறதா'' என்றாள் கல்பனா.

''*சீ*, என்ன பேசறே நீ?'' என்றான் அதிர்ந்து போன ரவி.

''நிஜமாவேதான் சொல்றேன். நீங்க அத்தனை கடுமையாகப் பேசினதும், நாலு நாட்கள் முன்னால் வீட்டில் எலித் தொந்தரவு இருக்குன்னு வாங்கி வெச்சுருந்த எலிப் பாஷாணத்தை குடிச்சடலாம்னு நினைச்சேன். ஆனா பாத்ரூமிலே வெச்சுருந்து அது அத்தனையும் கீழே கொட்டிக் கிடந்தது. லெட்டரை அதுக்கு முன்னாலேயே எழுதி வெச்சுட்டேன் சரி, நாளைக்குத் திரும்ப வாங்கிச் சாப்பிடலாம்ங்கற எண்ணத்தில் இருந்தேன். ஆனா பைத்தியம் நானு. அந்த லெட்டரை மறைவா வைக்க மறந்துட்டேன்'' என்று திக்கித் திணறிச் சொல்லி முடித்தாள்.

ரவியின் கண்கள் கலங்கி விட்டன. ''நான் எப்படிப்பட்ட அயோக்கியன் பாரு! உங்கிட்டே முரட்டுத் தனமா பேசி உன்னை இப்படியெல்லாம் யோசிக்க வெச்சுட்டேன் ஐ யாம் ரியலி வெரி ஸாரி'' என்றவன் ''சற்று இரு'' என்று சொல்லிவிட்டு கிச்சனுக்குள் சென்று

இருவருக்குமாக ரெண்டு டம்ளர்களில் பாலெடுத்து வந்தான்.

"இதைச் சாப்பிடு. இதோ பார், கல்பனா! இனிமே ஒரு நாளும் நீ இந்த மாதிரி எண்ணத்துக்கெல்லாம் இடம் கொடுக்க மாட்டேன்னு என் பேர்லே சத்தியம் பண்ணு" என்றவன் அவளை அணைத்து தலையைக் கோதி விட்டான். கல்பனா சத்தியம் செய்த பின் தான் அவன் தனக்காக எடுத்து வைத்திருந்த பாலையே சாப்பிட்டான். திரும்பத் திரும்ப அவன் அவளிடம் கெஞ்சி, கொஞ்சி மன்னிப்புக் கேட்டான். இதன் விளைவு என்ன ஆகுமோ அது ஆயிற்று. கல்பனா அந்த மாதம்தான் கருவுற்றாள்.

திடீரென்று ஒரு நாள் காலை எழுந்திருக்க முடியாமல் தலை சுற்றல், வயிற்றுப் புரட்டல், முதலில் அவளுக்கு புரியவே இல்லை. பிறகுதான் நாட்களைக் கணக்குப் பண்ணினால், ஆம் அதுதான்! என்னதான் பணக்கஷ்ட மான வேளையானாலும், மனதிற்குள் ஒரு ஓரத்தில் சந்தோஷம் எட்டிப் பார்க்கத்தான் செய்தது. ஆவலாக ரவிக்காக காத்திருந்தாள்.



## 20

ரவி ஆபீஸிலிருந்து வந்து உடை மாற்றி சாப்பிடும் வரை பொறுமையாகக் காத்திருந்தாள். அதன் பிறகு இவர்கள் படுக்கப் போனபோதுதான் பேச்சை ஆரம்பித்தாள்.

"ரவி, இன்னும் எத்தனை நாட்களுக்கு ஆபீஸில் இந்தப் பிரச்னையெல்லாம் இருக்கும்?" என்று கேட்டாள்.



"ஏன் கல்பனா, சீக்கிரமே சரியாகிவிடும் என்று நம்பறேன். இல்லேன்னா வேறு வேலையாவது பாத்துண்டுடுவேன். கவலைப்படாதே" என்றான்.

"சரி, நாம இரண்டு பேராக இருக்கும் வரை சரி. பர்மெனன்டா மூணாவது நபர் வரும்போது இப்படியே இருக்க முடியாதில்லையா?"

"மூணாவது ஆளா? யார் அது?" என்று அஸ்வாரஸ்யமாகக் கேட்டான்.

"என்ன புரியல்லையா?" என்று கேட்டாள் கல்பனா. அவளுக்குள், தெரிந்தவுடன் ரவி தன்னை அப்படியே அலேக்காகத் தூக்கி ஒரு சுற்று சுற்றுவான் என்று ஒரு எதிர்பார்ப்பு. என்னதான் இப்போது வேண்டாம் என்று நினைத்திருந்தாலும் இந்த மாதக் கடைசியில் இரண்டு வருஷமாகப் போகிறது. குழந்தை என்பது வாழ்வின் ஒரு பெரிய மகிழ்ச்சி தானே, சாதனை தானே! அதுதானே மணவாழ்க்கையின் நிறைவு!

ஆனால் செய்தி கேட்ட ரவியின் முகம் இறுகிப்போய் அவன் வாயையே திறக்கவில்லை.

"என்ன ரவி, உங்களுக்கு சந்தோஷம் இல்லையா? ஒண்ணுமே பேசலே?" என்று கேட்டாள் ஏமாற்றத்துடன்.

ரவி ஒரு பெருமூச்சுடன், "நாம இப்போ இருக்கிற நிலைமையே கவலைப் படும்படியாகத் தான் இருக்கு! இப்போது இது அவசியமா?" என்று கேட்டான்.

"அவசியமோ, இல்லையோ, எத்தனையோ பேர் வேண்டுமென்று ஏங்குகிற ஒரு செல்வம் நம்மைத் தேடி வந்திருக்கு. நாம் சந்தோஷப்பட வேண்டியதுதான் நியாயம்."

"இல்லை கல்பனா. இப்போ நமக்கிது பெரிய பாரம். முதல் மாதத்திலிருந்து டாக்டரிடம் போயாகணும். ஆமாம் உனக்கு எப்படி இது கர்ப்பம்தான் நிச்சயமா தெரியும்?"

"இன்னிக்கு உமா அண்ணி வீட்டிற்குப் போயிருந்தேன். அண்ணி இருக்கலே. அவங்களுக்கு வேலை செய்யற பாட்டி என்னைப் பார்த்த உடனே கேட்டிடுச்சு. அப்புறம் கையைப் பிடிச்சி பார்த்துட்டு 'நீ கர்ப்பம் ஆயிருக்கே, பொண்ணே'ன்னு சொன்னாங்க."

"எத்தனை நாளிருக்கும்?"

"நாற்பத்தைந்து நாளிருக்கும்?"

"சரி, இரண்டு நாள்ல கொஞ்சம் பணம் தயார் பண்ணிண்டு லேடி டாக்டரிடம் போகலாம். இதைக் கலைக்கச் சொல்லலாம்" என்று சொன்னவன், "உடனே அழ ஆரம்பிக்காதே. கோபப்படாதே. யோசிச்சுப் பார்! நான் சொல்றதுல இருக்கிற நியாயம் உனக்குப் புரியும்" என்றான் ரவி. சொல்லிவிட்டு திரும்பிப் படுத்துக் கொண்டு நிச்சிந்தையாகத் தூங்கிவிட்டான்.

கல்பனா முகத்தில் அறைபட்டதுபோல் துடித்துப் போனாள். துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது. நடந்து முடிந்த எத்தனையோ காரியங்களை திருப்பி வேறு விதமாக நடத்த முடிந்தால் எவ்வளவோ நன்றாக இருக்குமே என்று நினைத்துக் கொண்டாள். 'என்ன இவன்? குழந்தை பாக்கியமே வேண்டாம் என முடிவெடுத்து விட்டானா? அவன் சொன்ன இரண்டு வருடங்கள் தான் கழிந்து விட்டதே. இன்னும் என்ன? குழந்தை என்று ஒன்று வந்தால் செலவு அதிகமாகுமே என்று பயப்படுகிறானா? ஆண்டவன் அளிக்கும் இந்த அற்புத பரிசை



வேண்டாம் எனத்தள்ள எப்படி மனம் வந்தது?' அவனைப் பற்றி அவள் கட்டியிருந்த மனக் கோட்டையெல்லாம் சடசடவென்று சரிந்தது. நிச்சிந்தையாகப் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கும் கணவனைப் பார்க்கப் பார்க்க கோபமாக வந்தது. தன் புத்தி கெட்டதனத்தை நினைத்துப் பார்த்து, நினைத்துப் பார்த்து கண்ணீர் பெருக்கினாள். எப்போது தூங்கினாளோ தெரியாது. படுக்கும் போது திரைச் சீலைகளை முழுமையாக மூடும்படி இழுத்து விட்டாலொழிய அவளுக்குத் தூக்கம் வராது. அந்த அறை கிழக்குப் பார்த்த அறையாதலால் திரைச் சீலைகளைத் தாண்டி வெளிச்சம் உள்ளே வந்து இவள் கண் விழிக்கும்போது மணி எட்டு முப்பது ஆகிவிட்டது.

பக்கத்தில் ரவியைக் காணோம். ஐயோ, ஆபீஸுக்குக் கிளம்ப நாழியாகி விட்டதோ என்னவோ என்ற பதை பதைப்புடன் எழுந்தாள். அவன் பாத்ரூமிலும் இல்லை. உள்ளே பால்கனியில், இன்னும் மொட்டை மாடியில் கூடப் போய் தேடிப் பார்த்து விட்டாள். ஆளைக் காணோம். நாம் எழுந்திருக்கவில்லையே என்று டிபன் ஏதாவது வாங்கப் போயிருப்பானோ என்று நினைத்து அவன் ஷூ வைக்கும் இடத்தைப் பார்த்தாள். ஷூக்களை அங்கே காணோம். அது மட்டுமா, அவன் தினம் ஆபீஸுக்கு எடுத்துப் போகும் சிறிய ப்ரீஃப்கேஸ் கூட அங்கில்லை. பாவம் நம்மை எழுப்பக் கூடாது என்று தானாகவே கிளம்பிப் போயிருக்கிறார் போலும் என்று நினைத்துக் கொண்டவள், சரி 10 மணிக்கு மேல் ஆபீஸுக்குப் போன் பண்ணி பார்க்கலாம் என்று நினைத்துக் கொண்டாள். ஆனாலும் இப்படியா ஒரு பெண் தூங்குவேன் என்று வருத்தப்பட்டாள். தானும் குளித்து,

தலை பின்னி, வீட்டை சீர் செய்து என்று வேலையில் மூழ்கினாள். 10 மணிக்குப் போன் செய்ய முயற்சி செய்தபோது போன் வேலை செய்யவில்லை என்று தெரிந்தது. போன் வேலை செய்திருந்தால் அவனே கூட போன் செய்திருப்பானே என்று நினைத்துக் கொண்டாள். சேகர் வீட்டில் ஒரே உறவுக்காரர்கள் கூட்டம். இவளுக்கு அங்கே போகப் பிடிக்கவில்லை. சரி சொல்லாமல் போய் விட்டதால் சீக்கிரம் வீட்டிற்கு வருவான். அவன் வரும் போது அழுது வடியாமல் பளிச்சென்று டிரெஸ் செய்து கொள்ள வேண்டும் என நினைத்துக் கொண்டாள்.

மாலை ஐந்து மணிக்கே தயாராகி உட்கார்ந்து விட்டாள். ஆறு மணியிலிருந்து அவனை எதிர்பார்த்து ஏழு, எட்டு, ஒன்பது மணி ஓடியதுதான் மிச்சம் அவன் வரக்காணோம். சரி சேகர் வீட்டிற்கு வேணுமானால் போய் கேட்கலாம் என்றால் தெருவே அடங்கியிருந்தது. தனியாகப் போகப் பயமாக இருந்தது. பயம் என்ற வார்த்தை சொன்னதற்காகத்தானே ரவியே தன்னைக் குத்திக் காண்பித்து விட்டான் என்று மனதிற்குள் கஷ்டமாக இருந்தது. இப்போது என்ன செய்வது. போனோ வேலை செய்யவில்லை. பொழுதோடேயே எதோ ஒரு போன் பூத்திற்குச் சென்று அவனுக்குப் போன் செய்திருக்க வேண்டும். தப்பு பண்ணி விட்டோமே என்று நினைத்துக் கொண்டாள். கண்களில் கரகரவென்று நீர் வழிய ஆரம்பித்து விட்டது.

சரி என்று ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்க முயற்சி செய்து கொண்டே விழிப்பும் இன்றி, தூக்கமும் இன்றி ஒரு மாதிரியாக இரவைக் கழித்தாள். காலை கண் விழித்து மணியைப் பார்த்தால் ஆறு தான் ஆகியிருந்தது.



சேகர் வீட்டில் போய் விசாரிப்பதைத் தவிர அவளுக்கு வேறு ஒரு வழியும் தெரியவில்லை. ஆனால் பொழுது விடியும்போதே கடன்காரி மாதிரி அவர்கள் வீட்டிற்குப் போய் நிற்கவும் பிடிக்கவில்லை. எட்டு முப்பது மணிக்குக் கிளம்பி அங்கே போனால் பூட்டிய வாசற் கதவுதான் இவளை வரவேற்றது. பக்கத்து வீட்டில் விசாரித்ததில் சற்று முன்புதான் இருவரும் வெளியே போனதாகவும், மத்தியானம் வந்து விடுவதாகவும் சொன்னதாகச் சொன்னாள். கூடவே, "ஏம்மா, உனக்கு உடம்பு சரியில்லையா? எப்படியோ இருக்கியே!" என்று விசாரித்தாள்.

"ஒன்றுமில்லையே" என்று அவளிடம் சொன்னவள் கனத்த இதயத்துடன் வீடு திரும்பினாள். இனி நன்றாக டிரெஸ் செய்து கொண்டுதான் வெளியே போக வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். மத்தியானம் திரும்ப சேகர் வீட்டிற்குப் போனபோது நல்ல காலமாக அவர்கள் இருவரும் வீட்டில் இருந்தனர்.

இவளைப் பார்த்ததும் அவர்களுக்குத் தூக்கி வாரிப் போட்டது. முதன் முதலில் பேரழகியாக ரவியோடு வந்திறங்கிய கல்பனா எங்கே? கண்ணைச் சுற்றி கருவளையமும், கண்களில் அளவிட முடியாத சோகமுமாக வந்து நிற்கும் இவள் எங்கே? அதுவும் ஒரு வாரம் போல் பார்க்காமலிருந்துவிட்டு இப்போது பார்த்தபோது அந்த மாறுதல் ரொம்பவே தெளிவாகத் தெரிந்தது. காலையில் பக்கத்து வீட்டுக்காரி அப்படிக் கேட்டாளேயென்று நன்றாக டிரெஸ் செய்து கொண்டாலும் அகத்தின் அழகு முகத்தில் தெரியாதா என்ன?

கிட்டே வந்து அவள் கையைப் பற்றி சோபாவில் உட்கார வைத்த உமா, "என்னாச்சு கல்பனா? ஏன் இப்படி இருக்கே?" என்று பரிவுடன் கேட்டாள்.

''ஒன்றுமில்லையே'' என்று புன்னகைக்க முயன்று தோற்ற அவளிடமிருந்து ஒரு பெரிய கேவல் ஒன்று வெளிப்பட்டது. தூக்கிவாரிப் போட்டது சேகர் தம்பதிகளுக்கு. அவர்கள் இருவரும் அப்போதுதான் சாப்பிட்டு முடித்திருந்தனர். கல்பனா இருந்த நிலையைக் கண்ட உமா அவள் நிச்சயமாக சாப்பிட்டிருக்க மாட்டாள் என்பதை ஊகித்து. ''வா கல்பனா சாப்பிடுவியாம்'' என்றாள்.

''இல்லை அண்ணி'' என்ற கல்பனா சோபாவில் அப்படியே சரிந்து சாய்ந்தாள்.

''என்னம்மா கல்பனா, என்னாச்சு? விவரமா சொல்லேன். ரவி ஏதாவது கோவிச்சுண்டாரா? என்று கேட்டாள் உமா.

''இல்லை அண்ணி, அவரை நான் பார்த்தே இரண்டு நாளாச்சு'' என்றாள் கல்பனா தலையைக் குனிந்து கொண்டே

''என்னது? என்னம்மா சொல்றே'' என்றான் சேகர் அதிர்ந்து போய்.

எதிர் சோபாவில் வந்து உட்கார்ந்த அவனைப் பார்த்து ''ஆம் அண்ணா, அவர் வீட்டிற்கு வந்தே இரண்டு நாளாச்சு'' என்று சொல்லி அழுதாள்.

அவளுக்குக் குடிக்க தண்ணீர் கொடுத்த உமா ''ஆசுவாசப்படுத்திக்கோ, கல்பனா! நிதானமா சொல்லு. என்ன நடந்தது? விவரமாச் சொல்லு'' என்று கேட்டாள்.

ஆதியோடந்தமாக எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னாள் கல்பனா. அவன் ஆபீஸில் பிரச்னை என்று சொன்னது. அவன் ரொம்ப வீட்டிற்கு லேட்டாக வருவது.



செலவுக்குச் சரியாக பணம் கொடுக்காதது. எல்லாம் சொல்லச் சொல்ல அநுமார் வால் போல் நீண்டது. தன் மேல் எரிந்து விழுந்த ஒரு விஷயத்தை மட்டும் சொல்லவில்லை. இவளுக்கு அது அவமானமாக இருந்ததுதான் காரணம்.

''எனக்குத் தெரிந்து அவன் ஆபீஸில் பிரச்னை ஒன்றுமில்லையே'' என்ற சேகர், ''இரு. நான் ரவியுடன் ஆபீஸுக்குப் போன் பண்ணிப் பேசறேன்'' என்றவன் ''என்னம்மா, இத்தனை நடந்திருக்கு. எங்கிட்டே ஒரு வார்த்தை சொல்லாமலிருந்துட்டியேம்மா'' என்று வருத்தப்பட்டான்.

ரவியின் ஆபீஸுக்குப் போன் செய்து பேசிய சேகரின் முகம் மாறத் துவங்கியது ''என்னவோ ஆபீஸில் ஒன்றும் சரியா சொல்ல மாட்டேங்கறாங்க. நான் நேரிலேயே போய் விசாரிச்சுண்டு வரேன் கல்பனா. நீ வீட்டிற்குப் போய் ரெஸ்ட் எடு. நான் போய் வந்து உனக்கு விவரம் சொல்றேன்'' என்றான்.

உமா மறுபடியும் கல்பனாவைச் சாப்பிடச் சொல்லி வற்புறுத்தினாள் மறுத்துவிட்ட கல்பனா. ''அண்ணி அவருக்கு ஒன்றும் ஆகியிருக்காதே? எனக்கு பயமாக இருக்கு அண்ணி'' என்றாள்.

''*சீச்சீ!* அதெல்லாம் ஒன்றும் இருக்காது. நீ கவலைப் படாமல் வீட்டுக்குப் போ. அண்ணா வந்து உனக்கு விவரம் சொல்வார்'' என்று சமாதானப் படுத்தி அனுப்பி வைத்தாள்.

வீட்டிற்கு வந்த கல்பனா சாப்பிடப் பிடிக்காமல். பூஜை அறையில் அமர்ந்து ஆண்டவனை மனமுருகிப்

ப்ரார்த்தித்தாள். "பெருமாளே, அவருக்கு ஒன்றும் ஆகாமல் இருக்கணும். இனிமே அவர் மனதறிந்து நடந்துக்கறேன்" என்று வேண்டிக் கொண்டாள். பிறகு சோபாவில் வந்து அமர்ந்தவள் அப்படியே களைப்பினால் தூங்கிப் போனாள். பெண்களுக்கு எப்போ பார்த்தாலும் தூக்கம் வந்தால் ஆகாது என்று பாட்டி சொல்லுவாள். ஆனால் கர்ப்பிணிப் பெண்களுக்கு எப்போ பார்த்தாலும் தூக்கம் வரும் என்று யாரும் சொல்லிக் கேட்க இவளுக்கு இதுவரை சந்தர்ப்பம் எங்கே வாய்த்திருக்கிறது? பாவம். சேகர் நான்கு முப்பது மணிக்கு வந்து கதவைத் தட்டினான். கூடவே உமாவும் வந்திருந்தாள்.

"என்ன அண்ணா, என்ன ஆச்சு? ஏதாவது தெரிந்ததா? அவர் ஆபீஸில் என்ன சொன்னாங்க?" என்று வரிசையாக கேள்விகளை அடுக்கினாள்.

"போம்மா, நீ முன்னாடியே எங்கிட்டே சொல்லியிருக்கலாம், இல்லையா? லேட் பண்ணிட்டேம்மா" என்றான் சேகர் வருத்தத்துடன்.

"என்ன அண்ணா சொல்றீங்க" என்று மிகுந்த கலவரத்தோடு கேட்டாள் கல்பனா.

சேகர் மௌனமாக இருந்தான்.

"அண்ணா, சொல்லுங்கண்ணா! எனக்கு ரொம்ப பயமா இருக்கு" என்றாள் கல்பனா.

"என்னத்தைச் சொல்றது? நீ முதல்லே இங்கே வந்து உட்காரு" என்று சொன்ன சேகர் உமாவைப் பார்க்க கல்பனாவைத் தன் அருகே உட்கார வைத்து தானும் அவளருகில் அமர்ந்து கொண்டாள் உமா.

"அம்மா கல்பனா, நீ மனதைத் திடமா வெச்சுண்டு தான் நான் சொல்றதைக் கேட்கணும். ரவி ஆபீஸில்



அவன் சொன்ன மாதிரி பிரச்னை ஏதும் இல்லை. ஆட்குறைப்பும் இல்லை. ஆனா என்னத்தைச் சொல்ல? அவன் சீட்டாட்டத்துக்கு அடிமையாயிட்டான். முதல்லே ஏதோ விளையாட்டாத்தான் ஆரம்பிச்சுருக்கான். எல்லாம் சகவாச தோஷம்தான். முதல்லேயெல்லாம் வெறுமே விளையாடியவன் அப்புறமெல்லாம் காசு வெச்சு விளையாட ஆரம்பிச்சுருக்கான். முதல்லே இரண்டு, மூன்று தரம் நிறைய பணம் வந்திருக்கு. ஆனா இதெல்லாம் அந்த கெட்ட நண்பர்களின் தந்திரம். இவனை முதலில் ஜெயிக்கவிட்டு இவனுக்கு இதில் மிகுந்த ஆர்வத்தை உண்டாக்கி விட்டனர்.

அதற்கப்புறம் இவன் ரெகுலரா விளையாடப் போயிருக்கான். கொஞ்சம் கொஞ்சமா பணம் தோற்க ஆரம்பிச்சிருக்கான். எப்படியும் விட்ட பணத்தை எடுக்கணும்னு வெறி வருமே. அதனாலே தொடர்ந்து விளையாடி தொடர்ந்து தோத்திருக்கான். எக்கச்சக்க பணம் நஷ்டம். இதைச் சரிக்கட்ட, தான் ஊரிலேருந்த சொத்தை வித்து கொஞ்சம் பணம் போட்டிருந்தானே, அதையும் எடுத்து வெச்சு விளையாடி முழுக்கத் தோத்துட்டான். எப்படியும் ஜெயிக்கணும்கிற வெறியிலே கடனுக்கு விளையாட ஆரம்பிச்சு, அந்தக் கடனும் எக்கச்சக்கமா ஏறிப்போச்சு. அவங்க எல்லாம் ரொம்பவும் நெருக்கி, ஆளை வெச்சு அடிப்போம்கற அளவுக்குப் பயமுறுத்தவே, ஆபீஸ் பணத்திலே கை வெச்சுருக்கான். ஆபீஸ்லே அவங்க இதைக் கண்டு பிடிச்சுட்டாங்க. போலீஸ் கேசாகப் போறதுன்னதும் வீட்டிலிருந்து ஓடிப் போயிட்டாம்மா."

கல்பனா கண்களில் நீர் வழிய சிலையாக உட்கார்ந்திருந்தாள்.

சேகர் தொடர்ந்தான். ''இத்தனை நடந்திருக்கு. எனக்கு என் ஆபீஸிலும் கொஞ்ச நாளா வேலை அதிகம். வீட்டிலும் கல்யாணம்னு மனுஷா வரவும் போகவுமாக இருந்ததனாலே, நான் இவனுடைய இந்த மாற்றத்தையெல்லாம் கவனிக்கவேயில்லை. கடைசிலேயாவது அவங்க மிரட்டறாங்கன்னு எங்கிட்டே சொல்லியிருந்தா, நான் அதை வேறே விதமா ஹாண்டில் பண்ணி இவனை மீட்டிருப்பேன். கோழையா நடந்துண்டுட்டானேம்மா! இப்போ மேற்கொண்டு என்ன என்கிற கேள்வியிலே நிறுத்திட்டானே உன்னை!'' இதைச் சொல்லும் போது சேகர் உடைந்து விட்டான்.

''கிளி மாதிரி ஒரு பொண்ணுக்கு அப்பா, அம்மா உறவும் இல்லாமே பண்ணிட்டு இவளை நடுத்தெருவிலே நிறுத்த அவனுக்கு எப்படி மனம் வந்தது?'' என்றாள் உமா.

''அண்ணி, நான் இப்போ ஃபேமலிவேலே இருக்கேன்'' என்றாள் கல்பனா. சில விஷயங்களை ஆங்கிலத்தில் சொல்லுவது சுலபமா இருக்கிறது. இல்லையா?

தூக்கி வாரிப் போட்டது இவர்களுக்கு ''அடராமா! இப்போ உனக்கு இந்த சிரமம் வேறயாம்மா, இந்த விஷயம் அவனுக்குத் தெரியுமா?'' என்று கேட்டான் சேகர்.

''தெரியுமண்ணா! நேத்து ராத்திரி சொன்னேன். ஆனா அவர் அதை விரும்பலே. 'பணம் ரெடி பண்ணறேன், கலைச்சுடலாம்'னு சொல்லிட்டு காலைல எனக்கு முன் எழுந்து போயிருக்கார்.

''சரி, எத்தனை பணம் வெச்சுட்டுப் போயிருக்கான்?''

''தெரியலே அண்ணா! வீட்டு செலவுக்குக் கேட்டால் கொடுக்கற பணத்தை நான் சாமி அலமாரியிலே



வெச்சுண்டு செலவழிச்சுப்பேன். நான் பீரோவைத் திறந்து பார்த்தே ரொம்ப நாளாச்சு.''

''உடனே திறந்து பாரும்மா! நாளன்னிக்கு ஒண்ணாம் தேதி. வாடகை, பால், அது இதுன்னு எல்லா பில்லும் வந்து பயமுறுத்துமே'' என்றாள் உமா.

பீரோவைத் திறந்ததுமே மெதுவாகச் சொன்னாள் கல்பனா, ''அவருடைய பேண்ட்ஸ், ஷர்ட்ஸ் எல்லாம் கூட காணோம் அண்ணா!'' என்று சொல்லி அமைதியானாள்.

அவளுடைய அமைதி அவர்கள் இருவருக்குமே மிக ஆச்சரியமாகவும், பயமாகவும் இருந்தது. தொட்டதற்கெல்லாம் அழுதுவிடும் கல்பனாவா இவள்? இது பொருத்தமாகவே இல்லையே!

''கல்பனா, அண்ணா சொன்னதையெல்லாம் முழுமையாக காதில் வாங்கிண்டாயா, இல்லையா? என்ன ஆச்சு? நீ இப்படி இங்கிருக்கிறது எங்களுக்கு ரொம்ப பயமாக இருக்கும்மா!'' என்றாள் உமா.

''இல்லைண்ணி! அழுதோ, சிரித்தோ ஆகப் போவதென்ன? என்ன வருதோ அதைப் ஃபேஸ் பண்ணித் தானே ஆகணும்? பெத்தவங்களைப் பத்தி நினைக்காமே ஆசைப்பட்டவரோட மட்டும் வாழ்ந்தா போதும்னு நினைச்சு வந்ததுக்கு ஆண்டவன் கொடுக்கிற தண்டனை இது. அவரே என்னை இதுக்காகக் குத்திக் காண்பிக்கவும் செஞ்சாச்சு. விடுங்கோ! ஆக வேண்டியதைப் பார்ப்போம்'' என்றபடி கல்பனா பீரோ லாக்கரைத் திறந்தாள்.

உமாவும் சேகரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். இருவருக்கும் இந்தக் கல்பனா புதியவள்.

பீரோ லாக்கரைத் திறந்தவள், ''இங்கே பாருங்க, அண்ணி!'' என்றாள்.

''என்னம்மா இது, முழுசா காலியாயிருக்கு'' என்றாள் உமா.

''ஆமா, அவர் இந்த இரண்டு வருஷமா எனக்கு சின்னச் சின்னதா நாலஞ்சு நகைகள் வாங்கிக் கொடுத்திருந்தார். அதையெல்லாம் கூட எடுத்துண்டு போயிட்டார். நான் வரும்போது என் கழுத்தில் இருந்த சங்கிலியும் இரண்டு வளையல்களும் அவர் போட்ட தாலிச் செயினும் தான் மிச்சமிருக்கு. பணம் வைக்கிற பர்ஸும் இல்லை'' என்றவள் கட்டிலின் அடியில் குனிந்து பார்த்தவள், ''இங்கே ஒரு சூட்கேஸ் வெச்சருப்போம். அதுவும் மிஸ்ஸிங். அதிலேதான் எடுத்துட்டுப் போயிருக்கார் எல்லாத்தையும்'' என்றாள்.

உமா அவளருகில் போய் ஆதரவாக அவளை அணைத்துக் கொண்டாள். ''என்ன கல்பனா, நீ மனதிலே ஏதாவது திட்டம் யோசிச்சுட்டியா? இத்தனை கூலா இருக்கே!'' என்று கேட்டாள்.

''நீங்க கேக்கறது எனக்குப் புரியறதண்ணி! தற்கொலை என்பது பற்றி நினைக்கக்கூட மாட்டேன்னு அன்னிக்கு ஒரு நாள் அவருக்கு சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கேன். இப்போ நான் கல்லா மாறினதற்குக் காரணம் ஆக வேண்டிய காரியத்தை உங்களை அதிகம் படுத்தாமல் பாக்கணும் அதனாலேதான்'' என்றாள்.

''சரிம்மா, வா, வீட்டுக்குப் போகலாம்'' என்றான் சேகர்.

''இல்லையண்ணா, நான் இங்கேயே இருக்கேனே!'' என்றாள் கல்பனா.



''இல்லேம்மா, உன்னைத் தனியா விட்டுட்டுப் போனா எங்களுக்கு நிம்மதியா இருக்குமா, சொல்லு.''

''அண்ணா, என்னைத் தனியா விட்டுட்டுப் போக நீங்க பயப்படாதீங்க. நான் ஒரு நாளும் தற்கொலை பண்ணிக்க மாட்டேன். அவர்கிட்டே சத்தியம் பண்ணிருக்கேன். என்னை நம்புங்கோ!'' என்றாள் கல்பனா.

''அதுக்குன்னு இல்லேம்மா, மேலே நீ தனியா என்ன பண்ண முடியும்? மேற்கொண்டு என்ன பண்ணலாம்னு யோசிக்க வேண்டாமா? பாவி இப்படிப் பண்ணிட்டானே!'' என்றான் சேகர்.

''அவரை ஒண்ணும் சொல்லாதீங்கண்ணா! ஏதோ கிரகக் கோளாறு. இங்கே வந்த நாளா என்னை நன்னாத் தானே பாத்துண்டார்? திரும்ப நல்ல காலம் வராதா, என்ன?'' என்றாள் கல்பனா.

''சரி, வா! எங்களோட வந்து கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துண்டு அப்புறமா யோசிக்கலாம்'' என்றான் சேகர்.

''சாரி அண்ணா! நான் உங்க இரண்டு பேரையும் ரொம்பவே படுத்தறேன்.''

''அதெல்லாம் ஒண்ணுமில்லேம்மா! எங்களுக்குத் தான் கூட இருந்து கல்யாணம் பண்ணி வெச்சோமே. இப்போ நீ இப்படி திண்டாடறயேன்னு இருக்கு'' என்றாள் உமா.

''என்ன அண்ணி பண்ண முடியும்? எல்லாம் என் நேரம். சரி, வாங்க போகலாம்'' என்று சொல்லி கல்பனா கிளம்பினாள். வீட்டைப் பூட்டிவிட்டு அவர்களுடன் கிளம்பினாள். வீட்டிற்குப் போய் கல்பனாவும், உமாவும் பெட்ரூமில் படுக்க, சேகர் ஹாலில் படுத்துக் கொண்டான். நன்றாக

இரண்டு மணி நேரம் தூங்கி எழுந்தனர். உமா சுடச்சுட டீ கொண்டு வந்து கொடுத்தாள். அதைக் குடித்ததும் மூவரும் கொஞ்சம் தெம்பாக உணர்ந்தனர்.



## 21

"சொல்லு கல்பனா! மேலே என்ன பண்ணலாம்?" என்று சேகர் பேச்சை ஆரம்பித்தான்.

"நீங்கதான் அண்ணா எனக்கு வழி காட்டணும்."

"நான் ஒப்பனா சொல்றேன். நீ வருத்தப்படக் கூடாது. இனிமே நீ இங்கே இருக்கிறது அத்தனை சரியில்லை கல்பனா! ஆபீஸில் அவனைத் தேடி இதுவரை வராவிட்டாலும் இனி கண்டிப்பாக வீட்டிற்குத்தான் வருவார்கள்."

"நீங்க சொல்றது சரிதான், அண்ணா! ஆனா ஆபீஸிலிருந்து அவங்க இவரை தேடி வீட்டுக்கு வந்து, நானும் அங்கேயில்லைன்னா, இந்த சதிக்கு நானும் உடந்தைன்னு நினைக்க மாட்டாங்களா? அப்போ போலீஸ் என்னைத்தானே முதலில் கைது செய்யும்?" என்றாள் கல்பனா.

"உண்மைதான் அம்மா! நான் அதுக்காக மட்டும் சொல்லவில்லை. அந்த ரவுடிகள் கூட அவனைத் தேடி வரலாம், இல்லையா? நீ தனியா இருக்கேன்னு அவங்களுக்குத் தெரிஞ்சா, அது உனக்கு நல்லதில்லேம்மா. மேலும் போலீஸ் கண்ணிலே பட்டாலே தீர்ந்தது கதை. அதனாலே நீ இங்கிருந்து ஒரு பத்திரமான இடத்துக்குப் போகணும், சரியா?"



"நிஜம்தான் அண்ணா, பேசாமல் கர்நூலுக்குப் போயிடட்டுமா? அவங்கல்லாம் நல்லவங்கதான் அண்ணா, என்னை வரவேண்டாம்னு சொல்ல மாட்டாங்க" என்றாள் கல்பனா, கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டே.

உருகிப் போய்விட்டனர் சேகரும் உமாவும். "அழாதே, கல்பனா, அழாதே!" என்று அவள் தலையைத் தன் தோள்களில் சாய்த்து, கன்னத்தைத் தட்டிக் கொடுத்தாள், உமா.

கர்நூல் மனிதர்கள் நல்லவர்களாக இருக்கலாம். ஆனால் நீ ஆந்திராவில் இருப்பதைவிட சென்னை போய் விடுவதுதான் சேஃப் கல்பனா. அத்தனை சுலபமாகக் கண்டு பிடிக்க முடியாது. அப்படியே கண்டு பிடித்தாலும் உன் அப்பா ஒரு வக்கீல் வேறே. உன்னைப் பார்த்துக் கொள்வார். அங்கேயே போய்விடு" என்றான் சேகர்.

"அதுதான் சரின்னு படுது" என்றாள் உமா.

"ஆனால் எங்கப்பா, அம்மா என்னைச் சேர்த்துக்கறது சந்தேகம்தான்" என்றாள் கல்பனா.

"இல்லேம்மா, அம்மா அப்பா மனசெல்லாம் அப்படிக் கல்லாக ஆகாது. எதுக்கும் ஒருதரம் போன் பண்ணிப் பார்க்கறியா?" என்று கேட்டான் சேகர்.

"வேண்டாம், கேட்டு வராதேன்னுட்டா இவளாலே போகவே முடியாது" என்று மறுத்தாள் உமா.

"அவங்க அதே வீட்லே தானே இருப்பாங்க? சந்தேகம் இருக்கா உனக்கு?"

"அதில் சந்தேகமே இல்லையண்ணா. சொந்த வீடு. நிறைய கட்சிக்காரங்க. சாதனா படிப்பு அத்தனையும் விட்டுவிட்டு எங்கே போவாங்க?" என்றாள் கல்பனா.

''பின்னே நீ நாளைக்கே கிளம்பிடு, கல்பனா'' என்றான் சேகர்.

''இந்த வீட்டை காலி பண்ணவேண்டாமா?'' என்றாள் கல்பனா.

''கொஞ்ச நாள் முன்னே ரவி எங்கிட்டே ஒருதரம் சொன்னான். ஒனர் வீட்டைக் காலி பண்ணச் சொன்னதாக. காலி பண்ணிட்டா அந்த வீட்டை ஒரு 3, 4 வேலைக்குப் போகும் பையன்களுக்குக் கொடுத்தால் நிறைய வாடகை வரும்னு நினைக்கிறாராம்.''

''சரி ஃபர்னிச்சர், பண்டம் இதெல்லாம்?'' என்று கேட்டாள் உமா.

''அதெல்லாவற்றையும் கூட ஒரு விலை போட்டு எடுத்துக் கொள்வதாகச் சொன்னாராம். நான் இப்பவே போன் பண்ணி கேட்கட்டுமா, கல்பனா?'' என்றான் சேகர்.

''நீங்க பார்த்து எது பண்ணினாலும் எனக்கு சம்மதம் தான்'' என்றவள் தொடர்ந்து ''நான் என் நகைகள் எல்லாத்தையும் கொடுக்கறேன். திருமாங்கல்யத்தை மஞ்சள் கயிற்றில் போட்டுக்கறேன். அண்ணி! ஒரு கவரிங் செயினும், வளையலும் வாங்கிக் கொடுங்க'' என்றாள்.

''எதுக்கும்மா பணம்?'' என்று கேட்டான் சேகர்.

''இந்தப் பணத்தை அவர் ஆபீஸிலே குடுத்து போலீஸ் புகார் வராம பார்த்துக்குங்க'' என்றாள் கல்பனா ''எங்கே போயிருக்காரோ அங்கே அவர் நிம்மதியாக இருக்கறதுக்கு என்னாலான உதவி'' என்றாள்.

''ஏம்மா, உனக்கு அவன் மேலே கோபமே வரலியா?'' என்று கேட்டான் சேகர்.



''கோபம் வரலேண்ணா! நான் தான் அவரை சரியாப் பாத்திண்டிருக்கணும். இல்லைன்னா தனக்கு ஒரு கஷ்டம்னா என்னிடம் சொல்லியிருக்க மாட்டாரா? ஏதோ பாவம், ஒரு பழக்கத்தில் யாரோ மாட்டிவிட்டு அவரைத் திண்டாடவிட்டு வேடிக்கை பார்த்திருக்கிறார்கள் என்று வருத்தமா இருக்கிறது.''

சேகரும், உமாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''இத்தனை நல்ல பெண்ணோட நல்லபடியா வாழக் கொடுத்து வைக்கலியே, அவனுக்கு!'' என்றான் சேகர்.

''கல்பனா, நகையை வித்து. ஆபீஸ் போய் வந்து, வீட்டுக் காரருடன் பேசி எல்லாம் நாளைக்குள் ஆகணுமே'' என்றாள் உமா.

''ஆகாட்டாத்தான் என்ன? நீங்க மெதுவா எல்லாம் பண்ணி வையுங்க. நான் அப்புறமா போன் பண்ணி தெரிஞ்சுக்கறேன்'' என்றாள் கல்பனா.

''நான் முக்கியமா சொல்ல நினைச்சதே அதுதான். நீ எங்களோட கொஞ்ச நாள் பேசாதே. இந்தப் பணத்தை வெச்சு ஆபீஸுக்குக் கட்டிட முடியும்னு நினைக்கிறேன். ஆனாலும் அந்த ரவுடிகளோ, போலீஸோ என்னைக் கண்காணிச்சா என்னை உன் இருப்பிடம் பத்திச் சொல்லச் சொல்லி இம்சை பண்ணுவாங்க. தவிர உன்னைத் தேடி வந்தாலும் பிரச்னைதானே! அதனாலே நீ கொஞ்ச மாதங்களுக்காவது எங்களைப் போனில் கூட கூப்பிடாதே! லெட்டரும் போடாதே!'' என்றான் சேகர்.

''நீ தனியா சென்னைக்குப் போவியா, கல்பனா?'' என்று கேட்டாள் உமா.

"போயிடுவேன், அண்ணி" என்றாள் கல்பனா.

"ஸாரிம்மா, உமா இப்போ இருக்கிற நிலைமையிலே அவளும் வர முடியாது. அவளைத் தனியா விட்டுவிட்டு என்னாலும் வரமுடியாது" என்றான் சேகர்.

"என்ன அண்ணி?" என்று கேட்டாள் கல்பனா.

"ஆமாம் கல்பனா. 40 நாள் ஆகிறது. இன்னிக்குத்தான் டாக்டர் நிச்சயமாகச் சொன்னார்."

"வாழ்த்துக்கள், அண்ணி!" என்ற கல்பனா உமாவின் கன்னத்தில் முத்தமிட்டாள். "இந்த சந்தோஷத்தைக் கூடக் கொண்டாட முடியாமல் என்னால்தான் உங்களுக்கு இடைஞ்சல்" என்றாள் கூடவே.

அதற்குள் சேகர், "நீ வீட்டுக்குப் போய் உன் புடவை, துணிமணிகளையெல்லாம் எடுத்து வெச்சுக்கோ. பாக்கி எல்லாம் காலைல நான் பாத்துக்கறேன்" என்றான். பிறகு "வா உன்னைக் கொண்டு போய் விடறேன்" என்றான்.

"சரி அண்ணி, நான் கிளம்பறேன்" என்றாள் கல்பனா. அவளுக்குக் கையில் ஒரு டப்பாவில் தயிர் சாதம் போட்டுக் கொடுத்தாள் உமா.

வீட்டிற்கு வரும்வரை அடக்கி வைத்திருந்த துக்கம், வீட்டிற்கு உள்ளே கதவைத் தாளிட்டு வந்ததும், பீறிட்டுக் கொண்டு வந்தது. கட்டிலில் படுத்து ஒரு பாட்டம் அழுது தீர்த்தாள். மனப் பாரம் சற்று குறைந்தாற்போல் இருந்தது.

எழுந்தாள். முகம் கழுவிக் கொண்டாள். தயிர் சாதத்தைச் சாப்பிட்டாள். சற்றுத் தெம்பாக இருந்தது. மளமளவென்று தன் டிரெஸ்ஸையெல்லாம் ஒரு ஸைட் கேஸிலும் ஜிப் பேக்கிலுமாக அடுக்கினாள். ஒவ்வொரு



டிரெஸ்ஸாக எடுத்து வைக்கும்போது, அதை ஒட்டி ஏதேதோ பழைய நினைவுகள். எல்லாம் இனிமையானவை. அதுவும் அந்த ரோஸ் நிற ஹகோபா சுடிதாரை எடுத்து மடிக்கும்போது ரொம்பவே துக்கம் பொங்கியது.

அது போன வருடம் அவள் பிறந்த நாளைக்கு இருவரும் சேர்ந்து போய் வாங்கினார்கள். முதல் கடையிலேயே இந்த டிரெஸ்ஸை செலக்ட் செய்து விட்டான் ரவி. இவளுக்கு என்னவோ அதைவிட அதே ஹகோபாவில் பார்த்த நீல வண்ண சுடிதார்தான் பிடித்திருந்தது. அதைத்தான் வாங்க வேண்டும் என்று அடம் பிடித்தாள். இவன் அப்புறம் கடையிலேயே ஒரு ஆளில்லாத மூலையில் போய் "இதோ பார் கல்பனா! என் கண்ணுல்லே, இதை வாங்கிக்கோடா. உனக்கு வேணும்னா அதையும் எடுத்துக்கோ" என்றான்.

"ஒரே டிசைனில் இரண்டு டிரெஸ் எனக்கு வேண்டாம். ப்ளு ராஜா, ப்ளீஸ்!" என்றாள் கல்பனா.

"அந்தக் கலர்ல வேறே ஒண்ணு வாங்கிக்கோ" என்றான். அவன் கெஞ்சக் கெஞ்ச இவள் ரொம்பவே சிணுங்கினாள். "ஹூம்.. ஹூம்! எதுக்கு இத்தனை பிடிவாதமாம்?" என்றான்.

"இதோ பார் நீ அந்த டிரெஸ்லே ஸ்ட்ராபெரி ஐஸ்கிரீம் மாதிரி இருப்பே! நான் உன்னை அந்த டிரெஸ்ஸிலேயே அப்படியே கடித்து..." என்றான்.

அதன் பிறகு இவள் ஏன் வாயைத் திறக்கிறாள்? அதை முதலில் போட்டுக் கொண்ட அன்று அவன் இவளை ரசித்தவிதம் இருக்கிறதே. அதை நினைக்கையில் இப்போது கண்களில் கண்ணீர் பெருகியது.

நிறைய டிரெஸ்கள் இப்படி ஒவ்வொரு சம்பவத்தை நினைவூட்டின. ஒரு மாதிரியாக பேக் பண்ணி முடித்தாள். வருங்காலத்தை நினைத்தால் பயமாகத்தான் இருந்தது. தலையை உலுக்கிக் கொண்டாள். அந்த நினைவுகளை உதறுகிறாளாம்! பைத்தியக்காரி! தலையில்தான் அந்த நினைவிருக்கிறதாக்கும், அல்லது அப்படி உதறினால் போய்விடுமா? என்னவோ அசட்டுத்தனம்.

அடுத்து பீரோவைப் பூட்டும் முன் வளையல் ஸ்டாண்ட் கண்ணில் பட்டது. ஒருமுறை சார்மினார் போனபோது மயில் மாதிரி செய்யப்பட்ட இந்த ஸ்டாண்டை வாங்கினான் ரவி. பிறகு இவளிடம் ''இந்த ஸ்டாண்ட் நிறைய வளையல் வாங்கிக்கோ'' என்றான். டஜன் கணக்கில் வளையல் வாங்கியும் அந்த ஸ்டாண்டில் இன்னும் நிறைய இடமிருந்தது. ''எதுக்கு ரவி எனக்கு இப்போ இத்தனை வளையல்கள்'' என்று சிணுங்கினாள் கல்பனா.

''இப்போ ஏன் வாங்கணும்னா வாங்கி வளை அடுக்கும் காலத்தையோ நாமளே தள்ளிப் போடறோம். அந்தக் காலம் திடீரென்று வந்ததுன்னு வை. அந்தச் செய்தி தெரிந்த நாளிலிருந்து நீ இத்தனை வளையல்களும் போட்டுக்கணும். அதுதான் என் ஆசை. அதனால்தான் நிறைய வளையல் வாங்கிக்கோ இப்போன்னு உன்னைச் சொல்றேன். வாங்கு, வாங்கு!'' என்றான் வீட்டிற்கு வந்து அவளை டிரெஸ்ஸும் வளையல்களையும் மாற்றிக் கொள்ளச் செய்து போட்டோவாக எடுத்துத் தள்ளினான். அதையெல்லாம் நினைத்துப் பார்க்கும்போது இனி அந்த வளையல்களையெல்லாம் அவசியம் எடுத்துக்



கொண்டு போகவேண்டுமா? எப்போதாவது அணிந்து கொள்வோமா? அவன் வந்து பார்ப்பானா? திரும்ப நாம் அவனைப் பார்ப்போமா என்றெல்லாம் கலக்கம் ஏற்பட்டது. ரொம்பவும் யோசனைக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று தன்னையே தேற்றிக் கொண்டு ரொம்பவும் பிடித்த வளையல்கள் சிலவற்றை துணியில் சுற்றி எடுத்துக் கொண்டாள்.

காலையில் சீக்கிரமே வந்து விட்டார்கள் சேகரும், உமாவும்.

''உன் நகைகளையெல்லாம் விற்க வேண்டாம், கல்பனா!'' என்று நேரடியாகவே விஷயத்துக்கு வந்தான் சேகர்.

''ஏன் அண்ணா? எனக்கு நகைகள் இல்லாவிட்டால் என்ன? அவர் நல்லபடியாக இருந்தால் போதும்'' என்றாள் கல்பனா.

''இல்லைம்மா, அவன் ஆபீஸில் வேலை செய்யும் என் நண்பன் ஒருவனிடம் கேட்டுட்டேன். ரவி இந்த ஆபீஸில் சேரும்போது கட்டிய டெபாஸிட் பணம், இன்னும் அவனுக்குச் சேர வேண்டிய பிராவிடெண்ட் ஃபண்ட், கிராஜுட்டி எல்லாம் சேர்த்தால் அவன் எடுத்திருக்கும் பணத்தில் முக்கால் வாசி சரிக்கட்டி விடுவார்களாம். அவன் ஆபீஸ் மருந்து கம்பெனி இல்லையா? அதனால் அவர்கள் போலீஸ் கம்ப்ளைண்ட் அநேகமாகக் கொடுப்பார்கள் என்கிறான். அது தெரிந்துதானே ரவியும் எங்கேயோ பத்திரமாக போய் ஒளிந்து கொண்டிருக்கிறான். அவனை என்ன சொல்லி திட்டறது?''

''சரி அந்த ரவுடிகளுக்கு?'' என்றாள் கல்பனா.

''யோசிச்சுப் பார்த்தா அவங்கெல்லாம் இவன் கிட்டேயிருந்து நிறையவே அடிச்சிருப்பாங்கன்னு தோண்றது. இல்லேன்னா இதுக்குள்ளேயே தேடி வந்திருக்க மாட்டாங்களா? நானா அவங்களைத் தேடிகிட்டு போய் அநாவசியமா பிரச்னைகளிலே மாட்டிக்கவும் விரும்பலே'' என்று சேகர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே வாசல் பெல்லை யாரோ அழுத்தினார்கள். வீட்டுச் சொந்தக்காரர் வந்திருந்தார்.

''என்னம்மா, ஸாருக்கு மாற்றலாகி விட்டதாமே! பிரமோஷனுடன் தானே? ஆல் த பெஸ்ட்மா. இந்தாங்கோம்மா, நீங்க கொடுத்த அட்வான்ஸ் பணம். ஃபர்னிச்சர் எல்லாம் நானாக ஒரு விலை போட்டு அந்தப் பணமும் கொண்டு வந்திருக்கேன். சரியான்னு பாருங்கம்மா. இன்னும் கொடுக்கணும்னு நீங்க நினைச்சாலும் தயங்காமே சொல்லுங்க'' என்று தானாகவே கேள்வி கேட்டு, பதிலும் சொல்லி சோபாவில் உட்கார்ந்தார்.

அவர் கொடுத்த பணமே இவர்கள் எதிர்பார்ப்பிற்கு மேலாகவே இருந்ததால், ''தேங்க்யூ, ஸார்'' என்று சொல்லி வாங்கிக் கொண்டாள். ''உமா, ஸாருக்கு காபி கொண்டு வா'' என்றான் சேகர்.

''வேணாம், வேணாம் சார்! நான் வீட்லே குடிச்சுட்டுத்தான் வரேன். எனக்கும் வெளிலே நிறைய வேலை இருக்கு. அப்ப நான் வரட்டுமா?'' என்று சொல்லி விடை பெற்றார்.

உமா கல்பனாவிடம், ''போகட்டும், கடவுள் சிக்கலில்லாமல் இந்த பிராப்ளத்தைத் தீர்த்துவிட்டார்'' என்றாள்.

''இந்தப் பணம் உனக்குத் தாராளமாகப் போதும் கொஞ்ச நாளைக்கு. ஏம்மா, இப்ப வேணா ஒரு போன் பண்ணி பார்க்கறியா அம்மா வீட்டுக்கு?'' என்று கேட்டாள் உமா.



''வேண்டாம் அண்ணி, போன் பண்ணிக் கேட்டு வராதேன்னு சொல்லிட்டா அப்புறம் நான் அங்கே போக முடியாது. நேராகவே அங்கே போய் நின்று விட்டால் என்னைச் சேர்த்துக் கொள்ள மாட்டேன்னு சொல்ல மாட்டாங்கன்னு தோணுது'' என்றாள் கல்பனா.

''ஆமாம், யார் என்ன சொன்னாலும் அவள் அம்மா அவளை வேண்டாம்னு சொல்ல மாட்டாள். அதுவும் இவள் இப்படி இருக்கும்போது'' என்றாள் உமா.

''சரி, நீ ஊருக்கு எடுத்துப் போக வேண்டிய சாமான்களையெல்லாம் பேக் பண்ணிட்டே, இல்லையா? நான் இன்னிக்கு லீவு போட்டுருக்கேன். இப்பவே சாமான்களை எங்க வீட்லே வெச்சுட்டு வீட்டைப் பூட்டி சாவியைக் கொடு. வீட்டுக்காரர்கிட்டே கொடுத்துட்டு வந்து, சாப்பிட்டு கொஞ்சம் ரெஸ்ட் எடுத்தால் உன்னைக் கொண்டு ரயிலில் ஏத்தற நேரம் வந்துடும். நகைகளைப் போட்டு பின் பண்ணிக்கோம்மா! ஒரு ஸூட்கேஸ், ஒரு ஜிப்பேக் ஒரு ஹாண்ட் பேக் இல்லையா, மூணுலயுமா பணத்தைப் பிரிச்சு வெச்சுக்கோம்மா. என்னால் தவிர்க்க முடியாமதான் உன்னைத் தனியா அனுப்பறேன். தப்பா நினைச்சுக்காதேம்மா'' என்றான் சேகர்.

''அண்ணா'' என்று கைகளைக் கூப்பினாள் கண்களில் நீர் வழிய கல்பனா ''உங்கள் இருவருக்கும் நான் எந்த வகையில் நன்றி சொன்னாலும் போதவே போதாது. எத்தனை ஜன்மமாய் எனக்குக் கடன் பட்டிருந்தீர்களோ, இப்படி ஓடி, ஓடி இத்தனை உதவிகளையும் செய்திருக்கிறீர்கள். எனக்குப் பேச வார்த்தைகளே இல்லை''

என்றாள். தொடர்ந்து, ''அண்ணா, உமா அண்ணி'' என்று இழுத்தாள்.

''என்னம்மா, சொல்லு'' என்றாள் உமா.

''நான் பாட்டுக்கு அவர் மூணு நாள் வரலேன்ன உடனே இப்படிக் கிளம்பிப் போறேனே, ஒரு வேளை அவர் வந்து தேடினாக்கா என்ன அண்ணா பண்ணறது?'' என்று கேட்டாள்.

''அம்மா. நீ ரொம்பப் பாவம்! அவன் போயிருக்கிற விதத்தைப் பார்த்தா அவன் திரும்பி வர எண்ணத்தில் போயிருக்கிற மாதிரியா தோண்றது, சொல்லு? ஓசைப் படாமே, ராவோட ராவா சொந்த வீட்டிலேயே, பெண்டாட்டி நகைகளை எடுத்துண்டு துணிமணியோட புறப்பட்டுப் போயிருக்கிறவன் இப்போவெல்லாம் திரும்பிவர ஐடியாவோடயா போயிருப்பான்? திருட்டுப் பய'' என்றான் சேகர்.

''ஆமாம். ஒருவேளை உங்கம்மா வீட்லே உன்னை ஏத்துக்கலேன்னாலோ அல்லது அவங்க அங்கே இல்லவே இல்லைன்னாலோ, என்னம்மா பண்ணுவே? தைரியமா இருப்பியா?'' என்று கேட்டாள் உமா.

''சென்னை நான் பழகின ஊர் என்கிறதனாலே, எனக்கு அங்கே ஒரு லேடீஸ் ஹாஸ்டல்லே இருப்பதோ, மேலே படிப்பதோ கூட இங்கேயவிட சுலபம். ஆனால் இதெல்லாம் அப்பா, அம்மா என்னை ஏத்துக்கலேன்னாத்தானே? ஏத்துண்டுடுவாங்கண்ணா! என்ன, திட்டித் தீர்ப்பாங்க. கேட்டுக்க வேண்டியதுதான். நான் பண்ணது தப்புதானே! அடுத்ததாக அவங்க அங்கே இல்லாமே போறதுக்கு வாய்ப்பே இல்லை. நான் தைரியமா



இருப்பேன். கவலைப் படாம இருங்க நீங்க இரண்டு பேரும்.''

''நாம போனிலோ லெட்டர் போட்டோ விஷயங்களைப் பரிமாறிக் கொள்ள முடியாது. அதுதான் வருத்தமா இருக்கு. பரவாயில்லை. எல்லாம் சரியாயிடும்னு நம்புவோம்'' என்றாள் கல்பனா.

அவளை ரயிலேற்றிவிட சேகர், உமா இருவருமே வந்திருந்தனர். நூறு ஜாக்ரதை சொல்லி அவர்கள் இருவரும் புறப்படும் வேளையில் பெண்கள் இரண்டு பேரும் உடைந்து அழுது விட்டனர். சேகர் தூரப் போய் நின்று கொண்டு கண்களைத் துடைத்துக் கொண்டான்.

ரயில் புறப்பட்டு இருபது நிமிடங்கள் போல் ஜன்னல் பக்கத்திலிருந்து இவள் தலையை உள்ளே திருப்பவே இல்லை. இவள் அழுகையும் நிற்கவில்லை. பிறகு தன்னை மெதுவாக சுதாரித்துக் கொண்ட கல்பனா மெதுவாக தன்னைச் சுற்றி இருப்பவர்களைப் பார்த்தாள்.

மொத்தமும் பெண்கள்தான். 5 சிறுமிகள் இந்தப் பகுதியிலும், இன்னும் நான்கு சிறுமிகள் அடுத்த பகுதியிலும் இருந்தார்கள். 7-ம் வகுப்பிலிருந்து 10-ம் வகுப்பு படிக்கும் மாணவிகள் போல் இருந்தனர். கூடவே அவர்கள் ஆசிரியை போல் தோற்றமளித்த ஒரு சிறிய வயதுப் பெண்ணும், ஒரு வயதான பெண்மணியும் வந்திருந்தனர். அந்த வயதான பெண்மணி அமைதி, சாந்தம் ஆகியவற்றின் மொத்த உருவமாகத் தெரிந்தாள்.

''என்னம்மா, முதல் முறையாக புக்ககம் போறியா? இப்படி அழுதுட்டியே!'' என்றாள் அந்த அம்மாள். ''அண்ணாவும், மன்னியுமாக வந்து ஏற்றி விட்டார்கள் போலிருக்கிறது.''

கல்பனா எதும் பேசும் நிலையில் இல்லாததால் ஆமாம் என்ற தோரணையில் தலையை அசைத்து வைத்தாள். பிறகு மெல்ல, மெல்ல பேச்சு வாக்கில் அந்த அம்மா கேட்ட கேள்விகளுக்கெல்லாம் இவள் ஒற்றைச் சொற்களிலேயே பதில் சொல்ல, அந்த அம்மாள் கேள்வி கேட்பதையே நிறுத்தி விட்டாள். ஆனாலும் தன்னைப் பற்றி அவ்வப்போது சொல்லிக் கொண்டுதான் வந்தாள்.

மொத்தத்தில் கல்பனாவிற்கு இரவு படுக்கும் முன் அவர்களைப் பற்றிய எல்லா விவரங்களும் தெரிந்து விட்டது.

அந்த பெண்மணியின் பெயர் சரோஜினி, "சாந்தி மகளிர் இல்லம்" என்ற இல்லத்தின் தலைவி. அவளுடைய அண்ணா, அண்ணியுடன்தான் சின்ன வயதிலெல்லாம் இருந்தாளாம். கல்யாணமாகி குழந்தை பிறக்காத அவர்கள் இருவரையும் பார்த்து மிகவும் மனம் நொந்து போவாளாம். கடைசியில் இரண்டு தாய், தந்தையற்ற குழந்தைகளை வளர்க்க ஆரம்பித்தார்களாம். அடுத்தடுத்து இன்னும் ஆதரவற்ற குழந்தைகள், இன்னும் பல்வேறு வயதுப் பெண்கள் என்று அங்கு வந்து சேர இவளுக்கும் அவர்களுக்குச் செய்யும் சேவையே ரொம்பவும் பிடித்துப் போனதாம். அதனால் கல்யாணமே வேண்டாம் என்று இருந்து விட்டாளாம். நிறைய சொத்து இருக்கவே நிறைய பேருக்கு ஆதரவும் அளித்தார்களாம்.

அண்ணா அண்ணி இருவரும் நல்ல வயது முதிர்ந்து கொஞ்ச நாட்களுக்கு முன்தான் காலமானார்களாம். அண்ணியின் பெயரால்தான் "சாந்தி மகளிர் இல்லம்" என்று தங்கள் இல்லத்திற்குப் பெயர் வைத்தார்களாம்.

"இப்போது கூட வந்திருக்கிற குழந்தைகள் எல்லாம்



உங்கள் இல்லக் குழந்தைகளா" என்று கேட்டாள் கல்பனா.

"ஆமாம்மா! எங்கள் இல்லத்தில் எல்லா வயதுப் பெண்களும் இருக்காங்கம்மா. சில பேர் இல்லத்திலேயே இருக்காங்க. சில பேர் வேலைக்குப் போறாங்க. இப்போ இந்தப் பெண்களெல்லாம் தேசிய அளவிலான சொற்பொழிவுப் போட்டியில் கலந்துக்கறதுக்காக ஹைதராபாத்துக்கு கூட்டி வந்துட்டு திரும்ப அழைச்சிட்டுப் போறோம். வேறே வெளியூர்னா நான் கிளம்பறதில்லை. ஹைதராபாதிலே என் சொந்தக்காரங்க சில பேர் இருக்காங்க. அவங்களையும் பார்க்கலாமேன்னுதான் நானும் புறப்படறேன்" என்று விவரமாகச் சொன்னாள் சரோஜினி.

அவர்களெல்லாம் சாப்பிடும்போதே தானும் உமா கொடுத்திருந்த தயிர் சாதப் பொட்டலத்தை எடுத்துச் சாப்பிட்டாள் கல்பனா. தயிர் சாதத்தைப் பக்குவமாக கலந்து கொடுத்திருந்தாள் உமா. நினைக்கும்போதே கண்களில் திரும்ப நீர் நிறைந்து விட்டது.

"இதோ பாரம்மா! இப்போ நீ சொல்ல இஷ்டப்படலேன்னா, வேண்டாம். ஆனா என்னோட அனுபவத்திலே நான் பல தரப்பட்ட, பலவிதமான வேதனைகளில் மனக் கஷ்டப்படும் பல பெண்களைப் பார்த்துவிட்டேன். நீ படுகிற வேதனை சும்மா புக்ககத்துக்குப் போகிற பெண்ணின் வேதனையில்லை என்று எனக்குப் படுகிறது. உனக்கு எப்போதாவது எதாவது உதவி தேவைப்பட்டால் எங்கிட்டே வரமட்டும் தயங்காதே. அதற்காகத்தான் நான் வலிய உன்னிடம் பேசி இத்தனை விவரங்

களையும் சொன்னேன்'' என்ற சரோஜினி அவளிடம் தன் இல்லத்தின் விசிட்டிங் கார்டைக் கொடுத்தாள்.

ரயிலில் டிக்கெட் அன்றைக்கே முயற்சித்து அன்றைக்கே கிடைத்தது பெரிய அதிசயம்தான். அதனால் இவளுக்கு மேல் பர்த் கிடைத்தாலும் தயங்காமல் வாங்கி விட்டான் சேகர். ''ரயிலில் ஏறியதும் யாராவது சக பிரயாணியைக் கேட்டு கீழ் பர்த் வாங்கி படுத்துக்கோ'' என்று சொல்லியிருந்தான் சேகர். ஆனால் அவளுக்கிருந்த மன நிலையில் அவள் அதை முயற்சிக்கவேயில்லை. ஆனால் தூங்கும் நேரம் வந்ததும் சரோஜினி தானாகவே இவளிடம், ''நீ கீழேயே படுத்துக்கோம்மா. குழந்தைகள் மேல் பர்த்தில் படுத்துண்டு ஏதாவது விளையாட்டா பேசிண்டு வருவாங்க'' என்று சொல்லி விட்டாள். நன்றி சொல்லி படுத்துக் கொண்டவளுக்கு அத்தனை சீக்கிரம் தூக்கம் வந்துவிடுமா? என்னென்னவோ யோசனைகள்.

முதன் முதலில் ரவி தன்னை இங்கே ஹைதராபாதிற்கு விமானத்தில் அழைத்து வந்த ஜோர் என்ன? இப்போது தான் அநாதையாக அதே சென்னைக்கு திரும்பிப் போகிற வேதனை என்ன? என்று நினைத்த போது துக்கம் பொங்கியது. வருத்தப் படாமல் மனதை திடமாக வைத்துக் கொள்ளணும் என்று திரும்பத் திரும்பத் தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். ஆனால் என்ன திடப்படுத்திக் கொண்டு என்ன? புடவைத் தலைப்பை வாயில் வைத்துக் கொண்டு அழுது கொண்டே ரொம்ப நேரம் படுத்திருந்தாள். எப்போது தூங்கினாளோ. காலையில் சரோஜினி இவளை எழுப்பும்போதுதான் கண் விழித்தாள்.






''அம்மா கல்யாணி, பேசின் பிரிட்ஜ் வந்துடுத்தும்மா. எழுந்திரு'' என்று இவளை உலுப்பி எழுப்பினாள் சரோஜினி. ஆம், முதல் நாள் இரவு ''உன் பெயர் என்ன?'' என்று கேட்ட சரோஜினியிடம், சட்டென்று ஒரு ஜாக்கிரதை உணர்ச்சி தோன்ற ''என் பெயர் கல்யாணி'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லியிருந்தாள் கல்பனா. நொடிக்கு நூறுதரம் கல்பனா, கண்ணே, மணியே என்று கூப்பிட்டுக் கொண்டிருந்த ரவியில்லாமல் கல்பனா என்ற பெயரைச் சொல்லிக் கொள்ளவே வெறுப்பாக இருந்தது. சரோஜினியின் அழைப்பைக் கேட்டு விருட்டென்று எழுந்து நிற்கப் போன கல்பனாவுக்கு அப்படியே ஒரு தலை சுற்றல். சட்டென்று எதிர் பர்த்தில் உட்கார்ந்து அப்படியே சாய்ந்து விட்டாள். ஓரத்தில் உட்கார்ந்திருந்த சரோஜினி, ''கல்யாணி கண்ணைத் திறம்மா! என்னம்மா பண்ணுது?'' என்று கேட்டாள். அதற்குள் இன்னொரு டீச்சர் தண்ணீர் எடுத்துத்தர, அதை இவள் முகத்தில் லேசாகத் தெளித்தாள். இவளால் கண்ணைத் திறக்க முடியவில்லை என்பது தெரிய, மற்றொரு டீச்சரிடம் தன் பிளாஸ்கில் மீதி இருந்த காபியை எடுத்துக் கொடுக்குமாறு சொன்னாள். அவள் கொடுத்த காபியை கல்பனாவைத் தன் மேல சாய்த்துக் கொண்டு அவள் வாயில் கொஞ்சம் கொஞ்சமாகப் புகட்டினாள். நாடியையும் பார்த்த சரோஜினி கல்பனாவை வற்புறுத்தி சில பிஸ்கெட்டுகளையும் சாப்பிட வைத்தாள்.

''ஏம்மா! யாராவது ஸ்டேஷனுக்கு வருவார்கள், இல்லையா?'' என்று கேட்டாள் சரோஜினி.

''இல்லேம்மா! நான் ஸர்ப்ரைஸ் கொடுக்கலாம்னு யாருக்கும் தெரிவிக்கலே'' என்றாள் கல்பனா.

''நீ இப்போ இருக்கிற நிலையிலே தனியா வந்ததே தப்பு. இன்னும் நீ தனியா ஆட்டோ பிடிச்சு இதெல்லாம் வேறே பண்ணப்போறியா? வீடு எங்கேம்மா, உனக்கு?''

''மைலாப்பூர்.''

''சரி வா! எங்க வேன் வந்திருக்கும். போற வழியிலே உன்னை இறக்கி விட்டு விடுகிறோம்'' என்றாள் சரோஜினி.

''வேண்டாம்மா! நான் கொஞ்ச நேரம் இங்கேயே ரெஸ்ட் எடுத்துண்டு அப்புறமா போயிக்கறேன்'' என்றாள் கல்பனா.

''இதோ பாரு, உன்னை இப்படியே விட்டுவிட்டு நான் போறதா இல்லை. கிளம்பு நீயும்'' என்று வந்திருந்த டிரைவரிடம் அவள் சாமான்களையும் தூக்கிக் கொள்ளச் சொல்லிவிட்டு, கல்பனாவை கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு மற்ற மாணவிகளுடன் கிளம்பினாள்.

கல்பனாவிற்கு மிகவும் பலஹீனமாக இருந்தது. நடக்கவே முடியவில்லை. அதைவிட பெரிய ஆச்சரியம் இந்த மேடம் 'நீ இருக்கிற நிலையிலே'ன்னு சொன்னாங்களே என்பது. கேள்விக் குறியோடு சரோஜினியின் முகத்தைப் பார்க்க, ''நாடி பிடித்துப் பார்த்தேன், இல்லையா? அப்போது தெரிந்தது'' என்றாள்.

''என்னை ஆட்டோவில் மட்டும் ஏத்திவிட்டுப் போயிருங்க, மேடம்! வீடு வரை வந்து நீங்க எதுக்கு சிரமப்படணும்?'' என்றாள் கல்பனா.

''இதோ பார்! உங்க வீட்டு வாசல்லே உன்னை விட்டுட்டு நாங்க உடனே கிளம்பிடறோம். உன் வீட்டு



வாசலில் உனக்குக் கிடைக்கிற வரவேற்பையெல்லாம் நான் பார்த்துகிட்டு நிக்க மாட்டேன்'' என்றாள்.

அந்த பயத்திற்குத்தானே சொன்னோம்! இவள் நம் மனதிலிருப்பதையெல்லாம் அப்படியே படம் பிடித்த மாதிரியல்லவா பேசுகிறாள். என்று தோன்றியது கல்பனாவிற்கு. வேனில் எல்லோரும் ஏறிக் கொள்ள வேன் புறப்பட்டது.

மைலாப்பூரில் வண்டி நுழையும்போதே இவளுக்கு ஒரே கலக்கமாக இருந்தது. கூடவே ஒரு சந்தோஷம் வேறு. இப்போது எல்லாவற்றையும் விட அங்கே போய்ச் சேர்ந்ததும் என்ன அவமானப் படப் போறோமோ? அதில் சரோஜினி மேடம் முன்னாடி வேறா? இவளை எப்படித் தவிர்ப்பது என்ற யோசனை வேறு. ஆனால் இன்னும்கூட தலை சுற்றல் இருந்தது. நிச்சயமாக தனியாக வரவும் பயமாகத்தானிருந்திருக்கும். அவள் செய்தது பெரிய உதவிதான்.

பல்வேறு எண்ணங்களுக்கிடையில் வீட்டை நெருங்கி விட்டாள். வேன் அந்த வீட்டின் வாசலில் நின்றது. சரோஜினிக்கு நன்றி தெரிவித்த கல்பனா அவளுக்குக் கை கூப்பி விடை கொடுத்தாள். ''மிக்க நன்றி மேடம் உங்கள் உதவிக்கு. இனிமேல் நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் கிளம்புங்கள். இல்லேன்னா, உள்ளே வந்து ஒரு கப் காபி சாப்பிட்டுவிட்டுப் போறீங்களா?'' என்றாள், எங்கே சரி என்று சொல்லி விடுவாளோ என்ற பயத்துடன். ஆனால் சரோஜினி இவளின் அழைப்பை ஏற்கவில்லை. ''இல்லைமா. நான் கிளம்பறேன். குழந்தைகள் ஸ்கூலுக்குப் போகணும்'' என்றாள். ''சரி மேடம்! ரொம்ப தேங்க்ஸ் மேடம்! எல்லோருக்கும் பை'' என்று

சொல்லி அவர்களை அனுப்பிவிட்டு, வீட்டின் காலிங் பெல்லை அடிக்கப் போன கல்பனா அந்த வீட்டில் ஏதோ மாற்றம் இருப்பதை உணர்ந்தாள். ஏதோ பெரிய பெயர் பலகை மாடி பால்கனிச் சுவர் முழுவதையும் அடைத்துக் கொண்டு மாட்டியிருந்தது. அது அவள் வீட்டிற்குப் புதுசு. சாதாரணமாக அப்பா பெயருடன் வக்கீல் என்று எழுதப்பட்ட போர்டு சின்னதாக மாட்டியிருக்கும். ஆனால் வீட்டு வாசலில். ''பவுன் ராஜ் அண்ட் பிரதர்ஸ் டேக்ஸ் கன்ஸல்டன்ஸ்'' என்று போட்டிருந்தது. தூக்கி வாரிப் போட்டது இவளுக்கு. இவர்கள் வீட்டில் சாதா ரணமாக காலை ஐந்தரை மணிக்கெல்லாம் வாசற்கதவைத் திறந்து விடுவார்கள். மணி இப்போது ஆறரைக்கு மேலாகி விட்டது. இன்னும் கதவே திறக்கவில்லை. வாச லில் கோலமும் இல்லை. இவளுக்கு எல்லாமே விநோத மாக இருந்தது. மனதைத் திடப்படுத்திக் கொண்டு காலிங் பெல்லை அடித்தாள். ஒரு மார்வாடிப் பெண் வந்து கதவைத் திறந்தாள்.

''கோன் ஹை? என்னா வேணும் உங்களுக்கு?'' என்று கேட்டாள்.

கல்பனா திக்கித் திணறி ''இங்கே ராமமூர்த்தி, வித்யான்னு...'' என்று ஆரம்பித்த உடனேயே அந்த மார்வாடிப் பெண் ''இந்த வீட்டை எங்களுக்கு வித்துட்டு அவங்க போயி இரண்டு வருஷமாவுதேம்மா. நீங்க யாரு. எங்கேயிருந்து வரீங்க'' என்று கேட்டாள். இவளுக்கு வயிற்றில் பட்டாம்பூச்சி சிறகடிக்க கண்களே இருண்டது. அந்த நேரத்தில் வாசலில் ஒரு ஸ்கூட்டர் வந்து நிற்கும் சப்தம் கேட்க, திரும்பிப் பார்த்த கல்பனா திகைத்துப் போய் விட்டாள் திருவேங்கடம் மாமா! தன்னை



சுதாரித்துக் கொண்டு, ''மாமா, மாமா'' என்று உரக்க அழைத்துக் கொண்டே அவரிடம் போனாள். அவரும் இவளைப் பார்த்து அதிர்ந்து போனார்.

''யாரு கல்பனாவா? ஏம்மா இத்தனை நாளா எங் கேம்மா போனே? என்னம்மா நீ இப்படிப் பண்ணிட்டே?'' என்று அடுக்கிக் கொண்டே போனவர் கண்களில் நீர் துளிர்த்து விட்டது. ''இப்படிக் கூடவா...'' என்று ஆரம் பித்தவர் சற்று தயங்கி, ''கொஞ்சம் இரு, வரேன்'' என்று சொல்லி அந்த வீட்டுக்காரப் பெண்மணியிடம், ''அம்மா கொஞ்சம் ஆபீஸ் சாவி தாங்க, எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு. இவங்களோட பேசிட்டு இவங்களை அனுப்பிவிட்டு வரேன்'' என்றார்.

''யாரு சார் இவங்க?'' என்ற அந்த அம்மாவின் கேள் விக்கு, ''பழைய ஓனரின் உறவுக்காரங்க'' என்று பதில் சொன்னார். பின் ஆபீஸ் ரூமைத் திறந்து கல்பனாவை உள்ளே அழைத்து உட்காரச் சொல்லிவிட்டு, தானும் அவள் பக்கத்தில் அமர்ந்தார்.

அவளைச் சற்று உற்றுப் பார்த்த அவர், ''ஏம்மா நீ பண்ணினது உனக்கே சரின்னு படுதா? ஏம்மா அப்படிச் செஞ்சே?'' என்று கேட்டார். திருவேங்கடம் மாமா இவ ளுக்குப் புத்தி தெரிந்த நாளாய் அப்பாவிடம் வேலை செய்தவர். அவர் மட்டும்தான் வீட்டின் உள்ளேயெல் லாம் வருவார். இவர்களிடம் எல்லாம் பேசுவார். பாட் டிக்கு இவரை ரொம்பவும் பிடிக்கும். சாஸ்திர சம்பிர தாயங்களில் உள்ள சந்தேகங்களை எல்லாம் இவரிடம் தான் விவாதிப்பாள்.

''மாமா, நான் போன அப்புறம் என்ன நடந்தது? அப்பா, அம்மா, பாட்டி, சாதனாவெல்லாம் எங்கே

போனாங்க? வீட்டை காலி பண்ணிட்டாங்களா?'' என்று கலக்கத்துடன் கேட்டாள்.

''எனக்கும் பெண் குழந்தை இருக்கா! நீ பண்ணின மாதிரி அவளும் பண்ணியிருந்தா இந்தக் குடும்பத்துக்கு ஆன கதிதான் எனக்கும் ஆகியிருக்கும்'' என்றார்.

கல்பனா கலங்கிப் போனாள். ''மாமா, என்ன ஆச்சு? சொல்லுங்க, மாமா'' என்றாள்.

''என்னன்னும்மா சொல்றது? என் ஒருத்தன் கிட்டே தவிர வேறு யாரிடமும் உங்கப்பா நேரடியா விஷயத்தைச் சொல்லலே. மத்தவங்க எல்லாரும் ஏதோ அரசல், புரசலாக என்ன நடந்திருக்கும்னு ஊகிச்சிருப்பாங்களே தவிர முழுசா யாருக்கும் தெரியாது.''

''சரி மாமா! அப்பா, அம்மாவெல்லாம் எங்கே?''

''இவ்வளவு அக்கறையா, அவசரமா இப்போ கேக்கற நீ. அவங்க மேலே துளி அக்கறை இருந்திருந்தா அப்படி யாருமே எதிர்பார்க்காத அந்தக் காரியத்தைச் செஞ்சிருப்பியா?''

அந்த சமயத்தில் அந்த வீட்டின் வேலைக்காரி இவளுக்கு டீயும், பிஸ்கெட்டும் கொண்டு வந்து கொடுத்தாள். திருவேங்கடம் சாப்பிட மாட்டார்.

''நீ லெட்டரை எழுதி வெச்சுட்டு புறப்பட்டுப் போயிட்டியா? அந்த லெட்டர் அன்னிக்கு ராத்திரிதான் அவா கண்ல பட்டிருக்கு. அதுவும் பாட்டி கண்லதான் பட்டிருக்கு. படிச்சதும் அப்படியே சாஞ்சவாதான், போயாச்சு! மாஸிவ் ஹார்ட் அட்டாக். உன் உபயம்'' என்றார் கலங்கிய கண்களுடன்.

''ஐயோ, என்ன மாமா சொல்றீங்க?'' என்று அலறினாள் கல்பனா.



''ஆமாம்மா! பாட்டி உன் லெட்டரைப் படிச்ச அடுத்த நொடியிலேயே போயிட்டாம்மா! அந்த ஷாக்கை அவளாலே தாங்க முடியவில்லை. எல்லார்கிட்டேயும் பாட்டிக்கு ஹார்ட் அட்டாக்னு சொல்லி, நீ ஸ்கூலோட டூர் போயிருக்கேன்னு சொல்லி, உங்க அத்தையும் வரவிட்டு காரியமெல்லாம் பார்த்தா. உங்கப்பா அப்படியே மனமொடிஞ்சி போயிட்டாரும்மா. அவருக்கு அம்மா செத்துப் போனது துக்கம்னா அதுக்குக் காரணம் தன் பெண்தான் என்கிறது மகா பெரிய துக்கம்மா! என் பெண்ணே தன் பாட்டியைக் கொன்னுட்டாள்னு தனியா கதறித் தீர்த்துட்டார். அவர் இங்கே இருக்கவும் எல்லோரையும் பார்க்கவும் ரொம்ப மானக் கேடா உணர்ந்த போதுதான், உன் அத்தை எல்லோரையும் மலேசியாவுக்கு வந்துடுங்கோ, சாதனா அங்கே மேலே படிச்சுப்பா, உங்கப்பா அங்கேயே கன்ஸல்டன்சி போர்டு போட்டு பிராக்டிஸ் செய்யலாம், கொஞ்ச வருஷம் கழித்து சாதனாவை தன் பிள்ளைக்கு கல்யாணம் செஞ்சி வெச்சுடலாம்னு சொன்னாள். தன் அம்மா காரியம் ஆனதும் உங்கப்பா வீட்டை வித்துட்டு எல்லோருமா மலேசியா கிளம்பிப் போயிட்டாம்மா. இதுதான் நடந்தது.''

கல்பனா நொறுங்கிப் போனாள். தன் சுயநலனுக்காக தான் செய்த காரியம் தன் அருமைப் பாட்டியை பலி வாங்கி விட்டதா? என்ன கொடுமை! பாட்டி தன் மேல் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தாள்! தனக்குக் கல்யாணம் செய்து தனக்குப் பிறக்கும் குழந்தையின் கையால் தன் கன்னத்தில் அறை வாங்க வேண்டும் என்று அடிக்கடி சொல்லுவாளே! அந்த அடியை வாங்கின பிறகுதான் தன் உயிர் பிரியுமென்று சொல்லுவாளே!

ஐயோ, சாகும்போது தன்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டு உயிரை விட்டாளோ? கல்பனா தலையில் அடித்துக் கொண்டு அழுதாள். சற்று நேரம் அவளை அழவிட்டுவிட்டு, திருவேங்கடம் அவளைச் சமாதானப் படுத்தினார்.

''போகட்டும் எல்லாம் விதி! ஏதோ எல்லாம் நம்ம கைமீறி நடந்துடுத்து. நீ எப்படிம்மா இருக்கே? எங்கே இருக்கே? நீ நம்பி கல்யாணம் பண்ணிகிட்டுப் போனவன் உன்னை நல்லா வெச்சுருக்கானா?'' என்று கேட்டவர் அவளை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தார். அந்தப் பார்வையில் கூனிக் குறுகிப் போனாள் கல்பனா.

நல்ல வேளையாக நகையெல்லாம் உடம்பில் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள்.

''நான் நல்லா இருக்கேன், மாமா! அப்பாவோட பேச முடியுமா?'' என்று தயங்கியபடியே கேட்டாள்.

''நம்பர் போட்டுத்தரேன், பேசிப் பாரு'' என்றார். பின் தன் டைரியைப் பார்த்து நம்பரை டயல் செய்தார். ''இப்போ அங்கே மணி பத்து முப்பது இருக்கும்'' என்று சொன்னவர் ''இரும்மா ரிங் போறது'' என்றார்.

அந்தப் பக்கத்தில் அப்பாதான் எடுத்திருக்க வேண்டும் ''ஸார், நான் திருவேங்கடம் சென்னையிலிருந்து பேசறேன். உங்க பொண்ணு கல்பனா இங்கே வந்திருக்கா. இதோ பேசறா'' என்றவர் ரிசீவரை அவள் கையில் கொடுத்தார்.

இவள் மெல்ல ''அப்பா'' எனும் போதே விசும்பி விட்டாள். இவள் குரல் காதில் விழுந்ததோ, விழாம லேயோ அங்கிருந்து ராமமூர்த்தி. ''எனக்கேது சார் அங்கே பொண்ணு? எனக்கு ஒரே ஒரு பொண்ணுதான்.



அவ இங்கே என்னோட இருக்கா. வேறே எந்தக் கொலை காரியைப் பத்தியும் எனக்கு ஒண்ணும் தெரியாது. தெரியவும் வேண்டாம்'' என்று சொன்னவர் பட்டென்று போனை வைத்து விட்டார்.

கல்பனா நெருப்பில் விழுந்ததுபோல் துடித்துப் போனாள். பொங்கி வந்த அழுகையை மிகவும் கஷ்டப் பட்டு அடக்கிக் கொண்டு கல்பனா ''நான் வரேன் மாமா!'' என்று சொல்லிக் கிளம்பினாள்.

''எங்கேம்மா போகப் போறே?'' என்று கேட்டார் திரு வேங்கடம்.

''எல்லோரையும் பார்க்கணும்னுதான் இங்கே வந் தேன், மாமா! சாயந்திரம் ரயிலுக்கு திரும்பிடறேன்'' என்று அப்போது தோன்றிய ஒரு பொய்யைச் சொன்னாள்.

''சரிம்மா, எங்கே இருந்தாலும் சௌக்கியமா, நன்னா இருக்கணும்'' என்று கண்கள் பனிக்கச் சொன்னார் திருவேங்கடம்.

வெளியே அவள் வரவும் ஒரு காலி ஆட்டோ அந்தப் பக்கமாக போகவும் சரியாக இருந்தது. அதைக் கூப்பிடும் முன் தன்னை யாரோ அழைப்பதை உணர்ந்தாள். திரும் பியவள் 'சாந்தி இல்லத்தின்' வேன் டிரைவர் இவளை நோக்கி வருவதைப் பார்த்தாள். ''அம்மா, எங்க மேடம் தெரு முனையிலேதான் இருக்காங்க. உங்களைப் பார்த்து அழைச்சிட்டு வரச் சொன்னாங்க'' என்றார். தெரு முனை யில் வேன் கண்ணுக்குத் தெரிந்தது. அந்த டிரைவரும் வயதானவர்தான். சாமான்களை அவர் வாங்கிக் கொள்ள, கல்பனா அவர் பின் நடந்தாள். வேன் அருகில் வந்ததும் தலையைக் குனிந்து கொண்டு வண்டியில் ஏறினாள்.

சரோஜினி கல்பனாவைத் தன் அருகில் உட்கார வைத்து அவள் தலையைத் தடவிக் கொடுத்தாள். "மேடம்..." என்று ஏதோ சொல்ல ஆரம்பித்த அவளை, "இப்போ ஒண்ணும் சொல்ல வேண்டாம். எல்லாம் இல்லத்திற்குப் போய் பேசிக்கலாம்" என்று அவளை அமைதிப் படுத்தினாள்.

சாந்தி இல்லத்தில் அவர்களை மற்ற எல்லோரும் வரவேற்றனர். யாரோ ஒரு புதுப் பெண்ணை மேடம் அழைத்து வருவதைப் பார்த்து கண்களை உயர்த்தினாலும் யாரும் எதுவும் கேட்கவில்லை. கல்பனாவைத் தன்னுடன் தன் அறைக்கு அழைத்துச் சென்ற சரோஜினி "இப்போ சொல்லும்மா" என்றாள். அவளின் அந்த ஆதரவான, அன்பான பேச்சு கல்பனாவை கதற வைத்து விட்டது. சரோஜினியின் மடியில் படுத்து அழுது தீர்த்து விட்டாள். சற்று நேரம் அழுதவளிடம் சில்லென்று ஆவின் பால் பாட்டிலைக் கொடுத்து, "இதைச் சாப்பிடும்மா" என்றாள்.

"கல்யாணி, நான் ஊகித்தது சரியாகத்தான் இருக்கும் போலிருக்கிறது. இப்போது நீ போக சரியான இடம் ஏதாவது இருக்கிறதாம்மா? இல்லைன்னா தயங்காமல் நீ இங்கேயே தங்கலாம். சொல்லும்மா" என்றாள் சரோஜினி.

"எப்படி மேடம் உங்களுக்குத் தெரிஞ்சது?"

"என்னோட உள் மனசுக்கு இப்படித்தான் ஏதோ நடக்கப் போகுதுன்னு பட்டுதும்மா. அதுவுமில்லாமே உன் வீட்டு வாசல்லே தொங்கின போர்டைப் பார்த்து உன் கண்லே தெரிஞ்ச பயம் இப்படித்தான் நடக்கப் போகுதுன்னு உறுதிப்படுத்திடிச்சு. அதனால்தான்



அங்கே பக்கத்திலே உள்ள சூப்பர் மார்க்கெட்லே இல்லத்துக்கு வேண்டிய சில சாமான்களை எல்லாம் வாங்கிட்டு திரும்ப உங்க தெரு முனைக்கே வந்தேன். இப்போ சொல்லும்மா, உனக்கு இங்கே இருக்கிறதுக்கு சம்மதம் தானே, இல்லே வேறே எங்காவது போகணும்னாலும் சொல்லு. கொண்டு விடச் சொல்றேன்!"

"இல்லே மேடம் நான் உங்களோடயே இருக்கேன், உங்களுக்குத் தொந்திரவு இல்லேன்னா."

"என்னம்மா இப்படிச் சொல்றே? எனக்குத் தொந்திரவுன்னா உனக்காக வெயிட் பண்ணி உன்னை இங்கே அழைச்சிகிட்டு வருவேனா? உன் மனசு இப்போ ரொம்பவே கலங்கியிருக்கு. நீ சற்று ஓய்வு எடுத்துக்கோ. எனக்கும் கொஞ்சம் வேலையிருக்கு. அதை முடிச்சுட்டு வரேன்" என்றாள் சரோஜினி.

படுக்கையில் படுத்த கல்யாணிக்கு தூக்கம் வரவில்லை. அப்பா பேசியது நினைவுக்கு வந்தது. அவரிடமிருந்து அந்த மாதிரியான பதிலை அவள் எதிர்பார்க்கவில்லை. அவள் செய்தது மிகப் பெரிய தவறுதான் என்றாலும் பெற்றோர்கள் மன்னித்து ஏற்றுக் கொள்வார்கள் என்று திடமாக நம்பியிருந்தாள். இப்போது அவர் தன்னை உதறிவிட்ட நிலையில் எங்கு போவது என்று தெரியாமல் தவித்தாள். இவள் ஸ்நேகிதி ஹரிப்ரியாவெல்லாம் இவள் எங்கு போனதாக நினைத்துக் கொண்டிருக்கிறாளோ தெரியாது. மீராவோடும் தொடர்பே இல்லாமல் போய்விட்டது. வேறு எங்கு போவது என்று திணறிக் கொண்டிருந்தபோதுதான் திரும்ப சரோஜினி வந்து கூப்பிட்டிருக்கிறாள். தன்னுடைய இந்த இக்கட்டான நிலையிலும் ஆண்டவன் இவளைக் கைவிடவில்லை.

தனக்கு ஏதோ ஒரு வழியைக் காட்டியிருக்கிறார். இவளுக்கு முதலிலிருந்தே சரோஜினி மேல் சந்தேகம் வரவில்லை. கதைகளில் படித்திருக்கிறாள். பெண்களைக் கூட நம்பக்கூடாது. விபச்சார விடுதிகளுக்கு விற்று விடுவார்கள் என்று. ஆனால் சரோஜினியைப் பொறுத்தவரை அவளுடன் கூட எல்லா வயதுப் பெண்களும் இருந்தார்கள். எல்லோருமே நல்ல மாதிரியாகவே இருந்தார்கள். அதனால்தான் அவளுடன் தைரியமாக வந்தாள்.



## 23

**சா**ந்தி மகளிர் இல்லத்தை இவர்கள் அடைந்தபோது மணி 9க்கு மேலாகி விட்டிருந்தது. சோழிங்க நல்லூரில் இருந்த அந்த இல்லம் வெளியிலிருந்து பார்க்கும்போது மிகவும் அழகாகவே இருந்தது. மிக அழகாகப் பராமரிக்கப் பட்ட தோட்டமும், விஸ்தாரமாக நிறைய புல்வெளிகளுமாக நேர்த்தியாக இருந்தது. ஒரு குட்டி ஃபவுண்டனும் அதன் நடுவில் ஒரு கிருஷ்ணன பொம்மையுமாக பார்க்கவே அழகாக இருந்தது. மெயின் ஆபீஸுக்கும், சரோஜினிக்குமாய் ஒரு கட்டிடம், பின் பக்கம் சின்னச் சின்னதாக வீடுகளுமாய் பார்த்ததுமே கல்பனாவிற்கு அந்த இடம மிகவும் பிடித்துப் போய் விட்டது.

சற்று நேரம் சென்றபின் சரோஜினி மேடம் திரும்ப வந்தாள். ''கல்யாணி, எங்கள் இல்லத்திற்கு உன் வரவு நல் வரவாகட்டும். என்னம்மா, முதல்லே அலுப்புத் தீர குளி. டிபன் கொண்டு வரச் சொல்லியிருக்கிறேன்.



சாப்பிட்டுவிட்டு ஒரு தூக்கம் போட்டு எழுந்திரு. அப்புறம் பேசிக்கலாம். அப்போதுகூட உனக்கு இஷ்டம் இருந்தால் மட்டும் உன் கதையைச் சொன்னால் போதும். நான் உன்னை வற்புறுத்த மாட்டேன். உனக்கு ஒன்று உறுதியாகச் சொல்லிக் கொள்ள விரும்பறேன். எங்கள் சாந்தி இல்லத்தின் ஒரே இலக்கு யார் மனதையும் யாரும் நோக அடிக்காமல் இருப்பதுதான். எனவே எதற்கும் கவலைப்படாதே! இந்த இல்லத்தை உன் சொந்த வீடு போல் நினைத்து சுதந்திரமாக இருக்கலாம் நீ. அப்புறமா உனக்கென்று ஒரு ரூம் ஏற்பாடு செய்து தரேன்'' என்றாள்.

''நன்றி, அம்மா, நன்றி'' என்று சொல்லி அவள் காலைத் தொட்டு வணங்கினாள் கல்பனா.

சரோஜினி தனக்கென்று வைத்திருந்த இடம் ஒரு ஹால், ஒரு பெட்ரூம், ஒரு டைனிங் ரூம், ஒரு பாத்ரூம் ஆகியவற்றுடன் இருந்தது. அதையொட்டியே அவளின் ஆபீஸ் அறை. எங்கும் படு சுத்தம். ஒரு குப்பை, ஒரு அழுக்கு. ஊஹூம்! பார்க்க முடியவில்லை.

சரோஜினி குளித்துவிட்டு வந்தபின் இவளும் போய்க் குளித்துவிட்டு வந்தாள். டைனிங் ரூமில் இருந்த ஒரு அலமாரியில் இருந்த ராமபிரான் திருவுருவப் படத்தின் முன் ஏற்றி வைத்திருந்த விளக்கின் முன் விழுந்து நமஸ்கரித்து பிரார்த்தித்தாள்.

அதற்குள் சூடாக பொங்கலும், வடையும் சாம்பாரும் வர இருவருமாகச் சாப்பிட்டார்கள். ''நீ படுத்துத் தூங் கும்மா. நான் இல்லத்தை ஒரு முறை சுற்றிப் பார்த்து விட்டு வருகிறேன். இது என் தினப்படி வழக்கம்'' என்று

புறப்பட்டு விட்டாள் சரோஜினி புறப்படும் முன் ''சும்மா என் படுக்கையிலேயே படுத்துக்கோம்மா'' என்றாள். தயக்கமாய்ப் பார்த்த கல்பனாவிடம் ''கொஞ்ச நேரம் முன்னால் நீ என்னை அம்மான்னு கூப்பிட்டேயில்லே உன்னையே அறியாமல்? அது நிஜம்னே வெச்சுக்கோ நீயும் எனக்கொரு பெண்தான்'' என்றவள் புறப்பட்டாள்.

கட்டிலில் வந்து படுத்த கல்பனாவுக்கு தூக்கம் கண்ணைச் சுற்றியது. எப்போதாவது மத்தியானத்தில் படுத்தால் பாட்டி திட்டுவாள். அது நினைவுக்கு வந்தது. கூடவே அப்பா அன்று காலை தன் குரல் காதில் விழுந்துதான் கத்தினாரோ, அல்லது தி நவேங்கடத்திடம் பேசுவதாக நினைத்துக் கொண்டு பேசினாரோ, அவர் கடுமையாகச் சொன்ன விதம் நினைவுக்கு வர துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது.

காலையிலிருந்தே அந்த வேதனை மனதை ஒரு பக்கம் அரித்துக் கொண்டிருந்தாலும், இனிமேல் எங்கே போவது என்ற கவலை, பயம், அதற்கெல்லாம் முன்னால் வேதனை பலமிழந்திருந்தது. இப்போது பத்திரமாக ஒரு இடத்தில் வந்து படுத்தவுடன் திரும்ப அந்தத் துக்கமே மேலோங்கி நின்றது. சரோஜினி மேடம் மட்டும் இன்று தன்னைக் கூட்டி வரவில்லை என்றால் என்ன பண்ணியிருப்போம் என்று நினைத்ததும் உடல் ஒருதரம் சிலிர்த்து அடங்கியது. சில பேருக்கு சிலரைப் பார்த்ததும் பிரியம் வந்துவிடும். நம்பிக்கை வரும். அந்த எண்ணம்தான் அவளுக்கு சரோஜினியைப் பார்த்ததும் ஏற்பட்டது. இத்தனை துரதிருஷ்டத்தில் ஒரு அதிர்ஷ்டம் தான் சரோஜினி மேடத்தை சந்தித்ததும், அவருடைய ஆதரவு தனக்குக் கிடைத்ததும் என்று நினைத்துக் கொண்டாள்.



நன்றாகத் தூங்கி பின் அவள் கண் விழித்தபோது மதியம் மணி 2 ஆகிவிட்டது. பசியினால் தான் கண் விழித்திருக்க வேண்டும். தயங்கிக் கொண்டே எழுந்தவள் ஹாலுக்கு வந்தாள். அங்கே சோபாவிலேயே படுத்திருந்தாள் சரோஜினி. இவள் வந்ததைப் பார்த்ததும் அவள் எழுந்து. ''வாம்மா, பசிக்கல்லியா, சாப்பிடலாம் வா!'' என்று அழைத்தாள்.

''ஸாரிம்மா! நான் பாட்டுக்கு ரொம்ப நேரம் தூங்கி விட்டேன். நீங்க பாவம், இந்த சோபாவிலேயே முடங்கிட்டீங்களே'' என்று வருத்தப்பட்டாள்.

''பரவாயில்லேம்மா, வா ரொம்ப நேரமாகிவிட்டது. சாப்பிடலாம்'' என்றாள் சரோஜினி.

''அம்மா, நீங்களுமா சாப்பிடல்லே?''

''ஒரு கர்ப்பிணிப் பெண்ணை விட்டுவிட்டு கூட ஒருத்தர் சாப்பிடுவாங்களா? வா, வா!'' என்றவள் டைனிங் டேபிள் மேல் மூடி வைத்திருந்த பாத்திரங்களைத் திறந்தாள்.

முருங்கைக்காய் சாம்பார், வெண்டைக்காய் கறி, ரசம், தயிர் என்று சிம்பிளான சாப்பாடு. எல்லா ஐட்டங்களையும் கேஸரோலில் வைத்திருந்ததால் எல்லாமே சூடாகவே இருந்தது. இருவருமாக உட்கார்ந்து போட்டுக் கொண்டு சாப்பிட்டார்கள்.

''அம்மா, இந்தத் தட்டையெல்லாம் எங்கே கழுவணும்?'' என்று கேட்டாள் கல்பனா.

''வேண்டாம்மா, அதெல்லாம் நீ செய்ய வேண்டாம். எல்லாவற்றையும் மூடி மட்டும் வைத்து விட்டால் போதும். அப்புறமா டீ கொண்டு வரும்போது கிச்சனிலிருந்து வரும் பெண்கள் இதையெல்லாம் எடுத்துக்

கொண்டு போய்விடுவார்கள். நீ வா! நாம அப்படி காலாற கொஞ்சம் நடக்கலாம்'' என்றாள் சரோஜினி.

அந்தக் காம்பவுண்டை ஒரு அரை பாகம் சுற்றி வந்தார்கள். தூரத்திலிருந்தே சரோஜினி இவளுக்கு எல்லா இடங்களையும் காண்பித்துக் கொண்டே வந்தாள். சில குட்டி வீடுகள் இருந்தன. நீளமான கூடங்கள் மூன்று இருந்தன. அதில் ஒன்று சமையல் அறையும், மற்றொன்று டைனிங் ஹாலும் என்றாள் சரோஜினி. அதற்குள் ஒரு சின்ன அறுகோண மண்டபம் ஒன்று வரை நடந்திருந்தார்கள். அதன் பக்கச் சுவர்களில் அழகாக நல்ல பூங்கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன. பாதி வரை இருந்த பக்கச் சுவர்களில் உள் பக்கங்களில் உட்கார மேடைகள் இருந்தன. இருவரும் அதில் சற்று உட்கார்ந்தார்கள்.

''கல்யாணி, நீ உன்னைப் பத்தி சொல்றியோ இல்லையோ, நான் என்னைப் பத்திச் சொல்றேன். எங்கள் குடும்பம் பரம்பரை பணக்காரக் குடும்பம். நிறைய சொத்துக்கள். இந்த நிலத்தையெல்லாம் என் கொள்ளுத் தாத்தா மலிவா கிடைச்சதுன்னு வாங்கிப் போட்டார். எனக்குப் புத்தி தெரிஞ்சபோதே எங்க வீட்டில் இருந்தது அம்மா, அண்ணா, அண்ணி தான். அண்ணா என்னை விட ரொம்பப் பெரியவர். அவங்களுக்கும் கல்யாணம் ஆகி நிறைய வருடங்களுக்குக் குழந்தையே பிறக்கவில்லை. பாவம்! வைத்தியம் என்றால் பார்த்த வைத்தியத்திற்குக் கணக்கில்லை. வேண்டாத தெய்வங்களும், பிரார்த்தனைகளும் கிடையவே கிடையாது. என்ன பிரயோஜனம்? இரண்டு மூன்று தரம் அபார்ஷன் ஆனதோடு சரி. ரொம்ப வருத்தத்தில் எல்லோரும் மூழ்கியிருந்தபோதுதான் ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக்



கொள்ளும் எண்ணம் வந்தது. ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக் கொள்ளப் போன இடத்தில் நான்கு குழந்தைகள் எங்களுக்குப் பிடித்துப் போகவே. அந்த நான்கு குழந்தைகளையுமே கொண்டு வந்து வளர்க்கலாமே நமக்கு இருக்கும் பணத்திற்கு. அது நல்ல காரியமாகவும் இருக்குமே எனத் தோன்றியது. குழந்தைகளை எடுத்துக் கொண்டு வரும்போது, அவர்களை வளர்ப்பதற்குத் தனக்குத் துணையாக கணவனால் கைவிடப்பட்ட ஒரு நடு வயது பெண்மணியையும் கூடவே அழைத்துக் கொண்டு வந்து விட்டாள் என் அண்ணி. அதற்கப்புறம் யாரோ சொல்லி இன்னும் நான்கு குழந்தைகள் எங்ககிட்டே வந்து சேர்ந்தாங்க. அதுபோல் இன்னும் இரண்டு பெண்களும் வந்து சேர்ந்துட்டாங்க. நிறைய பேர் ஆகிவிடவே இந்த இடத்தை உபயோகப்படுத்த ஆரம்பித்தோம். மொட்டையாய், கூரையில்லாமல் இருந்த இடத்தையெல்லாம், கூடங்களாகவும் சின்னதாக வீடு மாதிரியும் கட்டினோம்.

இப்போ நான் இல்லேன்னா இதையெல்லாம் பாத்துக்கறதுக்கு வனிதாங்கற லேடி இருக்காங்க. நல்ல நிர்வாகி. அவங்க கல்யாணமே பண்ணிக்கல்லே. அவங்க கூடத்தான் உன்னைத் தங்க வைக்கலாம்னு இருக்கேன்'' என்றாள்.

''இதுவரை அவங்களோட யாரும் இல்லையா?'' என்று மெதுவாகக் கேட்டாள் கல்பனா.

''போன மாதம் வரை ஒரு பெண் இருந்தாள். அவளுக்கு வெளியூர்லே நல்ல வேலை கிடைச்சுப் போயிட்டா. அதனாலே இரண்டு பேர் இருக்கக்கூடிய அந்த ரூமில் தற்போது வனிதா மட்டும்தான் இருக்கிறாள். நீ அங்

கேயே தங்கிக்கலாம். ரொம்பவே நல்ல பெண் வனிதா. மென்மையான சுபாவம்.''

''மேடம், உங்களை நான் ஒண்ணு கேக்கலாமா?''

''என்ன கேக்கப் போறே? நான் கல்யாணமே பண்ணிக்கல்லியான்னு தானே?''

''மன்னித்து விடுங்கள், மேடம்!'' என்று சொல்லி தலை குனிந்தாள்.

''உன் கேள்வியில் ஒண்ணும் தப்பில்லைம்மா! எல்லோருக்குமே என்னைப் பார்த்தா வர சந்தேகம் தான் இது. சொல்றேன் கேளு! எனக்குக் கல்யாண வயசு வரச்சே எங்கம்மாவும் மத்த அம்மாக்களைப் போலவே வரன் பார்க்க ஆரம்பித்தாள். அப்போதுதான் எங்க அண்ணிக்கு ரொம்ப மும்முரமாக குழந்தை பிறப்பிற்கான வைத்தியமெல்லாம் நடந்து கொண்டே இருந்தது. கூடவே ஜோசியர்கள் சொன்ன பரிகாரங்கள். இத்தனையும் பண்ணி கடைசியில் அபார்ஷன் தான் கண்ட பலன். அண்ணி எங்கிட்டே ரொம்பவே பிரியமா இருப்பா. அண்ணாவோ பாச மழை பொழிகிறவர். அவங்களும் சரி, அம்மாவும் சரி படற வேதனையைப் பார்க்கப் பார்க்க எனக்கும் ரொம்பவே வேதனையாக இருக்கும். எல்லாமே வெறுப்பாக இருக்கும். பாதி நாட்கள் சமைச்சு வைத்ததெல்லாம் சீந்துவாரில்லாமல் அப்படியே கிடக்கும். இந்நிலையில் என்னைப் பெண் பார்க்க நிறைய பேர் வந்தனர். பாதி பேர் என் அழகுக்காகவும், மீதி பேர் எங்கள் செல்வத்திற்காகவும் கல்யாணம் செய்து கொள்வதாகச் சொன்னார்கள். ஆனால் எதுவும் தகையவில்லை.

அடுத்தது அம்மாவும் படுத்த படுக்கையாயிட்டாள். அவளோடு இருக்கறதிலேயே என் பொழுது கழிந்து



விட்டது. அப்போதுதான் நான் தீர்மானம் செய்தேன். கல்யாணமே செய்து கொள்வதில்லைன்னு. நான் தீர்மானமா மறுத்ததனாலேதான் அம்மா எனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கல்லே. நானும் போயிட்டா என் அம்மாவையும், என் அண்ணா அண்ணியையும் யார் பாத்துப்பாங்க? என் மேலே அன்பையும், பாசத்தையும் வெள்ளமா பொழிகிற இவங்களை விட்டுவிட்டு, 'நான், என் சுகம்'ன்னு போயிட முடியுமா? அப்படிப் போனா அது நன்றி கெட்டத்தனமாக இருக்காது?''

கல்பனாவுக்கு அந்த வார்த்தை 'சுருக்'கென்று தைத்தது. பாட்டியின் நினைவு வந்தது. அந்த அன்புத் தெய்வத்திற்கு எப்படியெல்லாம் துரோகம் செய்துவிட்டோம்? பெற்றவர்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுத்திருந்தால் தான் இப்படி நடுத்தெருவில் நிற்கும் நிலையே உருவாகியிருக்காது. கண் கெட்ட பின் சூர்ய நமஸ்காரம்! எல்லாம் தானாகத் தேடிக் கொண்டதுதானே! தன்னையே மிகவும் நொந்து கொண்டாள்.

''என்னம்மா மௌனமாயிட்டே? மேலே கேளு! அப்புறம் குழந்தைகளும், பெண்களுமாய் இந்த இல்லம் வளரவே கல்யாணம் என்கிற எண்ணம் அறவே என் மனதை விட்டுப் போய்விட்டது. எனக்கு இந்தக் குழந்தைகள் மேலே அக்கறை வரவிட்டு, ஒரு வேளை எனக்கு வர புருஷன் இதைத் தடுத்தா பொருளாதார ரீதியா இதை நடத்த கஷ்டமாயிடுமேன்னு தோணித்து. ஆச்சு இப்போ எனக்கு அறுபது வயசுக்கு மேலே ஆயிடுத்து. இப்படியே இருந்துட்டேன்'' என்றாள் சரோஜினி.

''உங்களுக்கென்று ஒருத்தரும் இல்லையேன்னு நீங்க நினைக்கிறதில்லையா, மேடம்?'' என்று கேட்டாள் கல்பனா.

பெரிதாகச் சிரித்தாள் சரோஜினி. "எனக்கு எத்தனை எத்தனை பெண்கள், எத்தனை எத்தனை பேரன் பேத்திகள் தெரியுமா? இங்கே வளர்ந்து கல்யாணம் பண்ணிக்கிட்டு போனவங்க யாருமே என்னை மறக்கறதே இல்லைம்மா! சில பேருக்கு நான் அம்மா, சில பேருக்கு நான் பாட்டி. முதல்லேருந்து இங்கே இருக்கிறவங்களுக்கு நான் அக்கா. எனக்கும் தனிமை உணர்வெல்லாம் வந்தது. தினம் தவறாமல் யோகா பண்ணுவேன். தியானம் பண்ணுவேன். மனசையும், உடம்பையும் ஆரோக்கியமா வெச்சுக்கறது நம்ம கையிலேதாம்மா இருக்கு" என்றாள் சரோஜினி.

"நானும் உங்களை அம்மான்னே கூப்பிடட்டுமா, அம்மா?" என்று நெகிழ்வோடு கேட்டாள் கல்பனா.

"இதுக்கு எதுக்கும்மா இத்தனை தயக்கம்? தாராளமா அம்மான்னே கூப்பிடு. அம்மான்றது எத்தனை அற்புதமான வார்த்தை தெரியுமா? வா! மணி அஞ்சாயிடுத்து நாமெல்லாம் சேர்ந்து தியான அறைக்குப் போகலாம்" என்றாள்.

அங்கிருந்த ஒரு கூடத்தில் ஒரு பாதியைத் தடுத்து பூஜை ரூமாக ஆக்கியிருந்தார்கள். அழகான லஷ்மிதேவியின் விக்ரகம் அங்கு இருந்தது. இவர்களும் போய் உட்கார்ந்தபின் அங்கிருந்த எல்லோரும் கண் மூடி 'ஓம்' என்ற ஓங்கார ஒலி எழுப்பி தியானத்தில் ஆழ்ந்தார்கள். 15 நிமிடங்கள் ஆனதும் ஒவ்வொருவராகப் போய் தேவிக்கு பூப்போட்டு வணங்கினார்கள். சிலர் ஸ்லோகம் சொன்னார்கள்.

"கல்யாணி உனக்குப் பாடத் தெரியுமா? தெரிந்தால் ஒரு பாட்டுப் பாடேன்" என்றாள் சரோஜினி. சற்றே



தயங்கியபடி ஆரம்பித்தாலும் அதன் பிறகு பளிச் சென்று "நீ இரங்காயெனில் புகலேது" என்ற பாட்டைப் பாடினாள். எல்லோரும் அவளை வியப்புடன் பார்த்தார்கள்.

"ரொம்ப நன்னா பாடறியே, சொல்லிண்டிருக்கிறாயா?" என்று கேட்டாள் சரோஜினி.

"ஆமாம் அம்மா! கச்சேரி லெவலுக்கு நிறைய உருப்படிகள் சொல்லிக் கொடுத்திருக்கிறாள் என் அம்மா" என்றாள் கல்பனா.

"ரொம்ப சந்தோஷம்" என்றாள் சரோஜினி. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் எல்லோருக்கும் உணவுக் கூடத்தில் சாப்பாடு. எளிமையான உணவு. அன்பாகப் பரிமாறினார்கள். சாப்பிட்டதும் சரோஜினி கல்பனாவிடம் "நீ இன்னிக்கே வனிதாவோட ரூமிற்குப் போய் படுத்துக் கோம்மா. நான் வனிதாகிட்டே சொல்லிட்டேன். எதையும் நினைக்காமே நல்லா தூங்கு" என்றாள்.

அங்கு வந்திருந்த வனிதா, "வாம்மா, கல்யாணி!" என்று இவளைக் கூட்டிக் கொண்டு தன் அறைக்குப் போனாள். அறை என்று பேரே ஒழிய அதுவும் ஒரு சின்ன வீடுதான். ஒரு ஹால், கிச்சன், பெட் ரூம், ஒரு பால்கனி என்று எல்லாம் வசதியாக இருந்தது. பெட் ரூமில் இரண்டு கட்டில்கள் இருந்தன. இவள் அங்கு போவதற்குள் இவள் சாமான்கள் எல்லாம் அங்கு வந்து விட்டிருந்தன.

வனிதாவும் வீட்டை மிகவும் சுத்தமாக வைத்திருந்தாள். ஹாலில் ஒரு பெரிய அலமாரியில் கிருஷ்ணர் படம் வைத்து, விளக்கேற்றியிருந்தாள். மற்ற அலமாரிகளில் ஆன்மீகப் புத்தகங்கள் நிறைய இருந்தன.

வனிதா படுத்ததும் உறங்கி விட்டாள். கல்பனாவுக்கு அதுவரை எல்லோருடனும் இருந்ததால், மனதில் ஓரத்தில் மறைந்திருந்த கவலைகள் எல்லாம் இப்போது வெளியே வந்து குதியாட்டம் போட்டன.

காலையில் அப்பா பேசியது, ரவி ஏன் தன்னை இப்படி விட்டுவிட்டு திடீரென்று போகணும்? தான் எந்த வகையிலாவது இதற்குக் காரணமா? ரவி இல்லாமல் எப்படி இருக்கப் போகிறோம்? மேல்கொண்டு தன் எதிர்காலம் என்ன? வயிற்றில் சிசு வேறு வளர்கிறதாமே, பிறந்தால் என்ன செய்யப் போகிறோம்? நிரந்தரமாக இங்கேயே தங்கி விட முடியுமா? இதுபோல் நூறு கேள்விகள் அவளைத் தேளாகக் கொட்டின. தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போலிருந்தது.

ரவி தன்னை விட்டுவிட்டுச் சொல்லாமல் கொள் ளாமல் போய் விட்டான் எனும்போது, மேலே என்ன செய்வது, எங்கே போவது, உமா சேகரை தொந்திரவு செய்யாமல் புறப்படணும். ஏற்பாடுகளைக் கவனிக்கணும் என்பதில் இருந்து மனது அப்போது, எப்படியும் அம்மா, அப்பா தன்னை ஏற்றுக் கொண்டு விடுவார்கள், என்ன, ஒரு 100 திட்டு, வசவு ஏன், அடி உதை எல்லாவற்றிற்கும் தயாராகத்தான் வந்திருந்தாளே ஒழிய, அப்பா, அம்மா சென்னையை விட்டே போயிருப்பார்கள் என்றோ தன் செய்கை பாட்டியைக் கொன்று விட்டிருக்கும் என்பது மாதிரியான அதிர்ச்சிக்கோ அவள் மனதளவில் கூடத் தயாராக இல்லை.

காலையில் சரோஜினி அம்மா தன்னைக் கூட்டிக் கொண்டு வராவிடில் ரோடிலேயே நின்று கொண்டு என்ன முடிவு எடுத்திருக்க முடியும்?



'ரவி, நான் என்ன தப்பு செய்தேன், ரவி! ஏன் இப்படிச் செய்தீர்கள்' என்று மனதில் கேட்டுக் கொண்டு, கண்ணீர் விட்டுக் கொண்டே தன்னையறியாமல் தூங்கிப் போனாள்.



# 24

''என்னம்மா, ராத்திரி நல்லா தூங் கினியா?'' என்று கேட்டாள் வனிதா காலையில் எழுந்தவுடன்,

''ரொம்ப நாழி தூக்கமே வரவில்லை, அதுதான் எழுந்திருக்க நாழியாகி விட்டது'' என்றாள் கல்பனா வெட்கத் துடன்.

''அதனால் என்னம்மா! உனக்கு எப்படி வேணுமோ இருக்கலாம்மா இங்கே. இது உன் இடம்னு நினைச் சுக்கோ'' என்றாள் வனிதா.

''இன்னிக்கு நானே டீ போட்டுருக்கேன். வா, வந்து சாப்பிடு'' என்று முகம் கழுவி வந்த கல்யாணிக்கு டீயை ஊற்றிக் கொடுத்தாள். ''வேணுமானால் நாமே சமைச்சுக் கலாம். அதுக்கு எல்லா சாமானும் இங்கே இருக்கு. ஆனா நான் அநேகமா டைனிங் ஹாலுக்குப் போய்தான் சாப் பிடுவேன். நீ என்ன பண்ணப்போறே?'' என்று கேட் டாள் வனிதா.

''நானும் அங்கேயே வரேன்க்கா'' என்றாள் கல்பனா, வனிதாவை அக்கா என்று கூப்பிடுவது அவளுக்கு மிகவும் இயல்பாக வந்தது. ''ஆனா, அங்கே என்னைப் பார்த்து எல்லோரும் என்ன கேப்பாங்களோ? உங்களுக் கும் தர்ம சங்கடமாக இருக்கும்'' என்றாள்.

"அந்த மாதிரி கவலை உனக்குக் கொஞ்சம் கூட வேண்டாம். இங்கு யாரும், யாரையும், எதற்காகவும் அநாவசியமாக கேள்விகள் கேட்கவே மாட்டார்கள். இது இங்கு எழுதப்படாத விதி. எல்லோரும் கடைப் பிடிக்கும் விதி. கேள்விகள் கேட்டு அடுத்தவர் மனதை நோக அடிப்பது, வம்பு பேசுவது, பொறாமைப் படுவது போன்ற எண்ணங்கள் யாருக்காவது தவறிப் போய் வந்தால் கூட கண்டிப்பாக இந்த சாந்தி இல்லத்தில் அவர்களுக்கு இடமில்லை. வெளியேற்றப் படுவார்கள் என்பது இங்கிருக்கும் எல்லோருக்கும் சர்வ நிச்சயமாகத் தெரியும்" என்றாள் வனிதா.

"இங்கு எல்லா இடங்களையும் நான் பார்க்கலாமா? எல்லோரையும் சந்திக்கலாமா?" என்று கேட்டாள் கல்பனா. இரண்டு வருடமாக பகல் பொழுதெல்லாமே தனியாகவே இருந்து அலுத்துப் போன மனதிற்கு இங்கு பல பெண்களைப் பார்க்க முடியும் என்பதே மிகவும் ஆறுதலாகவும், உற்சாகமாகவும் இருந்தது.

"தாராளமாகப் போகலாம். எல்லோரும் ஒத்த மனமுடையவர்கள்தான். எங்கு வேணுமானாலும் சுதந்திரமாகப் போய்வா" என்றாள் வனிதா.

பிறகு இருவரும் குளித்து ஸ்வாமி நமஸ்காரம் செய்து பின் டிபன் சாப்பிட கூடத்திற்குப் போனார்கள். அங்கு நிறைய பேர் சாப்பிட்டுக் கொண்டிருக்க, சிலர் தோசை வார்த்துக் கொண்டிருந்தார்கள். எல்லோருக்கும் கல்பனாவை அறிமுகப் படுத்தி வைத்த வனிதா அவர்களையும் கல்பனாவுக்கு அறிமுகப் படுத்தி வைத்தாள். எல்லார் கண்களிலும் இவளின் அழகைப் பார்த்து



ஆச்சரியம். அவர்கள் எல்லோரும் இவளைக் கை கூப்பி வரவேற்றார்கள்.

"கல்யாணி, எனக்குக் கொஞ்சம் ஆபீஸ் வேலை இருக்கிறது. நீ ஒரு சுத்து சுத்திவிட்டு வா" என்ற வனிதா ஆபீஸ் ரூமிற்குப் போனாள். அவள் சென்ற பின் கல்பனா சிறிது நேரம் டைனிங் ஹாலிலேயே இருந்தாள். அங்கிருந்த மற்றவர்களுடன் எல்லாம் பேசிக் கொண்டிருந்தாள். சமையல் அறையின் முக்கிய நிர்வாகி பாரு என்கிற பார்வதி. அவளுக்கு உதவிக்கு இன்னும் மூன்று பேர் இருந்தனர். எல்லோரும் ஒன்றுபோல் இந்த இல்லத்தைப் பற்றியும், சரோஜினி அம்மாவைப் பற்றியும் மிகவும் உயர்வாகப் பேசினார்கள். இந்த இல்லத்தில் இருப்பது கடவுளாகப் பார்த்து தங்களுக்கு கொடுத்த வரம் என்று சொல்லிக் கொண்டார்கள். பாவம்! எல்லோருமே ஏதோ ஒரு விதத்தில் வாழ்க்கையில் அடிபட்டவர்கள். துணையில்லாதவர்கள். அவர்களில் ராஜிக்கு மாத்திரம் ஒரு பெண் குழந்தை இருக்கிறதாம். அதை இந்த ஆஸ்ரமத்து பிள்ளைகள் இன்னும் கொஞ்சம் பேர் படிக்கும் பள்ளியில் சேர்த்திருக்கிறார்கள். குழந்தையே இங்கு வந்துதான் பிறந்ததாம். பிள்ளைப் பேறின்போது ரொம்ப நன்றாக கவனித்துக் கொண்டார்களாம். இதைக் கேட்டதும் இவளுக்கு மனதில் ஒரு நிம்மதி பிறந்தது. ஆமாம்! இனி எங்கு போய் இருக்கப் போகிறாள்? இதைவிட நல்ல இடம் இனி எங்கு கிடைக்கும்? ரவி சரியாக இருந்து தன் குடித்தனம் நீடித்திருந்தால் இந்த எண்ணம் தோன்றுமா? சரி, அவன்தான் அப்படிச் செய்து விட்டான் என்றால், அப்பாவும் அப்படிக் கோபித்துக் கொண்டாரே? ஆனால் அவர் செய்தது ஒன்றும் தப்பில்லை. தான் செய்த

நம்பிக்கை துரோகத்திற்கு என்று நினைத்துக் கொண்டாள்.

மொத்தத்தில் ஆஸ்ரம அமைப்பெல்லாம் நன்றாகத் தெரிந்து கொண்டாள். நான்கு ஆயாக்கள் இருந்தனர். அதில் ஒருவர் அங்கிருந்த மூன்று மூதாட்டிகளைப் பார்த்துக் கொண்டாள். தவிர நிறைய சிறுமிகள் ஒன்றிரண்டு சிறுவர்களும் இருந்தனர். இங்கிருப்பவர்களில் பல பேர் ஆதரவில்லாதவர்கள் என்றாலும், சில பேர் ஒரு தொகை சாப்பாட்டுக்கும், தங்குமிடத்திற்காகவும் கொடுத்துத் தங்குகின்றனர். தோட்டக்காரர்கள் இரண்டு பேர், காவலாளிகள் இரண்டு பேர் இருக்கிறார்கள்.

வெளியே போய் சாமான்கள் வாங்குவது, மற்ற நிர்வாகங்கள் எல்லாமே வனிதாவுடைய பொறுப்புதான். வேன் ஒன்றும், கார் ஒன்றும் இல்லத்திற்கு இருந்தன. இரவில் குழந்தைகளுடன் பெரியவர்கள் சிலரும் பெரிய கூடத்தில் படுத்துக் கொள்வார்கள். ஆஸ்ரமத்திலிருந்த சில பெண்கள் வேண்டியவர்களுக்கு வேண்டிய இடத்தில் எல்லாம் கொண்டு கொடுப்பது என்கிற மாதிரி வேலைகள் எல்லாம் பார்த்துக் கொள்வார்கள். எல்லோரும் கலகலப்பாக, மரியாதையுடன் பழகினால்தான் இத்தனை விவரமும் தெரிந்து கொள்ள முடிந்தது.

ஒரு பெண் வந்து சரோஜினி மேடம் கூப்பிடுவதாகச் சொன்னாள். ஆபீஸ் ரூமில் இருக்கிறாராம். அங்கிருந்தவர்களிடம் சொல்லிக் கொண்டு உடனே கிளம்பினாள் கல்பனா. ஆபீஸ் அறையிலேயே வனிதாவும் இருந்தாள்.

''வாம்மா, உட்கார்!'' என்று அன்பாகக் கூப்பிட்டாள் சரோஜினி. ''என்னம்மா, எல்லாவற்றையும் சுத்திப்



பார்த்தாயா? உனக்குப் பிடித்திருக்கிறதா?'' என்று கேட்டாள்.

''ரொம்பவே பிடித்திருக்கிறதம்மா! கடவுள் உங்கள் அறிமுகம் எனக்குக் கொடுத்ததற்கு நான் நன்றி சொல்லி மாளாது. நேற்று காலையில் நான் இருந்த நிராதரவான நிலை என்ன, இப்போது இருக்கும் நிலை என்ன? என்னால் நம்பவே முடியவில்லை, அம்மா! உங்களைக் கடவுள் காட்டிக் கொடுக்கலேன்னா என் நிலைமை என்னவாயிருக்கும் என்று நினைத்தாலே நெஞ்சம் எல்லாம் நடுங்குகிறது'' என்ற கல்பனா அவளைக் கை கூப்பி வணங்கினாள்.

''ஆமாம்மா, பெண்களுக்கு இன்னும் பாதுகாப்புங்கறது கிடையாது உலகத்திலே. அதுவும் உன்னை மாதிரி அழகான இளம் வயது பெண்களுக்கு ரொம்பவே அபாயம்தான். என்னவோ எனக்கு உன்னைப் பார்த்த போது நீ நிராதரவா இருக்கேன்னு தெரிஞ்சதனாலே உன்னைத் தொடர்ந்து வந்தேன். அது நல்லதாப் போச்சு'' என்றாள் சரோஜினி.

''அக்காவுக்கு உன்னைப் பார்த்ததுமே அவங்க அண்ணி மாதிரி இருந்ததாம், கல்யாணி! நீ அவங்க அண்ணி படத்தைப் பார்த்தியானா தெரியும்'' என்றாள் வனிதா.

''ஆமாம், கல்யாணி! எங்க அண்ணிக்கு ஒரு பெண் இருந்ததுன்னா உன்னை மாதிரிதான் இருந்திருக்கும். அதான் உன்னைப் பார்த்ததுமே எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு'' என்றாள் சரோஜினி.

''அப்படியாம்மா! நான் இத்தனை பாவத்திலும் ஏதோ கொஞ்சம் புண்ணியம் பண்ணியிருக்கேன்னு தெரியுது.

நீங்க இவ்வளவு அன்பா இருக்கும்போது என்னைப் பத்தியும் நான் சொல்றேம்மா'' என்ற கல்பனா ''நான் இதே சென்னையிலே, மைலாப்பூர்லே பிறந்து வளர்ந்தவ தான். நீங்க சொன்னீங்களே நான் ரொம்ப அழகா இருக் கேன்னு. அதான் என்னோட இந்த நிலைக்குக் காரணம் பாழாய்ப் போன காதலாலே வந்ததுதான் எல்லாமே'' என்று ஆரம்பித்து மொத்த விஷயங்களையும் சொன் னாள். ஒன்றையும் மறைக்கவில்லை. மறைக்கத் தோன்ற வில்லை.

''சரி, நடந்தது எல்லாமே துர்பாக்கியமானதுதான். எல் லாம் வயசுக் கோளாறு. என்ன செய்ய முடியும்?'' என் றாள் சரோஜினி.

''அக்கா, நீங்க வேணா அவ அப்பாகிட்டே பேசிப் பாக் கறீங்களா?'' என்றாள் வனிதா.

''ஐயோ, வேண்டவே வேண்டாம்மா! அப்பா கையிலே நான் மாட்டினா கொன்னே போட்டுடுவார். அந்த அளவு வெறுப்பிலிருக்கார் அவருக்கு உயிரான அவர் அம்மா என்னாலே போயிட்டதனாலே அவர் என்னை ஒரு கொலை காரியாத்தான் பார்க்கிறார். ஹும்.. அவர் வரைக்கும் அது சரிதானே!''

''சரி உன் கணவனை கண்டுபிடிக்க முயற்சி செய்ய லாமா?'' என்று கேட்டாள் சரோஜினி.

''அம்மா, அதுவும் வேண்டாம். அவர் ஏதோ இக்கட்டு னாலேதான் என்னை விட்டுப் போயிருக்கார். கடவுள் மனசு வெச்சா, என் விதி நல்லபடியா இருந்தா, என்னிக் காவது ஒரு நாள் திரும்பி வருவாரம்மா.''

''சரி, உன்னை நான் எதுக்கும் வற்புறுத்த மாட்டேன். உன் விருப்பத்துக்கு மாறா எதுவும் செய்யவும் மாட் டேன். சரி, இப்போ விஷயத்துக்கு வருவோம். உனக்கு இப்போ எத்தனை நாளாறது?'' என்று கேட்டாள் சரோஜினி.



''60 நாளாறதம்மா. ஆனா கன்ஃபர்ம் ஆயிடுத்து.''

''சரி, நீ எக்காரணம் கொண்டும் இந்தக் குழந்தையை அழிக்க நினைக்கக் கூடாது. என்ன சொல்றே?'' என் றாள்.

''இல்லேம்மா, எனக்கு அந்த மாதிரியான எண்ணமே இல்லை. ஆனால் அதைப் பெறுவது எப்படி? எனக்கு யார் உதவி? அப்புறம் எப்படி வளர்ப்பேன்? இந்த மாதிரிக் கேள்விகள் எல்லாம் என் மனசை ரொம்பவே ஆட்டிப் படைக்கிறதம்மா'' என்றாள் கண்களில் நீர் மல்க.

''கவலைப் படாதேம்மா! என்னை யாராவது நாடி வந்தாலே நான் அவங்களை முழுசா பாத்துப்பேன். உன்னை நானே பாத்து கூட்டி வந்திருக்கேன். அப்படி யிருக்கும்போது உன்னை விட்டு விடுவேனா? நான் மட்டும் இல்லை. இங்கே எல்லோரும் உன்னைப் பாத் துப்பாங்க'' என்றாள் சரோஜினி.

''ஆமாம் கல்யாணி! அக்கா சொன்னா சொன்னது தான். மனசைப் போட்டு அலட்டிக்காதே!'' என்று வனிதாவும் சொன்னாள்.

திடீரென்று தன் இருக்கையிலிருந்து எழுந்த கல்பனா, சரோஜினியின் கால்களில் வீழ்ந்தாள். ''அம்மா, உலகில் கடவுள்னு ஒருத்தர் இருக்காறாங்கற சந்தேகம் எனக்கு பல தடவை வந்ததுண்டு. இருக்கிறார், அம்மா, நிச்சயம் இருக்கிறார். அதுவும் உங்கள் உருவில்'' என்று சொல்லி தேம்பினாள்.

அவளைத் தூக்கி தன்னுடன் அணைத்துக் கொண்ட சரோஜினி "இதோ பார், நீ எதுக்கும் கவலைப் படாதே! நாங்கள் இருக்கிறோம் உனக்கு" என்றாள்.

கண்களைத் துடைத்துக் கொண்ட கல்பனா, "அம்மா, எங்கிட்டே கொஞ்சம் பணம் இருக்கு. அதை, இன்னும் என் நகைகளையெல்லாம் எடுத்துக்கோங்க. நான் உங்களுக்குப் பாரமா இருக்க விரும்பல்லே" என்றாள்.

"இதெல்லாம் ஏம்மா சொல்றே? இந்த இல்லத்துக்கு நிறைய நன்கொடைகள் எல்லாம் வருது. இப்போ நீ உன் நகையெல்லம் கொடுக்கிற அளவுக்கு ஒண்ணும் ஆயிடலே" என்றாள் சரோஜினி.

"சரி வனிதா, நீ நாளைக்கே கல்யாணியை டாக்டரிடம் கூட்டிக் கொண்டு போயிட்டு வா. கல்யாணி, நீ ஹிந்தி படிச்சிருக்கியா?" என்று கேட்டள் சரோஜினி.

"ஃபர்ஸ்ட் கிளாசிலிருந்து + 2 வரை ஹிந்தி படிச்சுருக்கேன். எப்பவும் நான் தான் ஸ்கூல்லே ஹிந்தியிலே ஃபர்ஸ்ட் ரேங்க்" என்றாள் கல்பனா ஆர்வமாக.

இப்பவே இத்தனை ஆர்வமாக, குழந்தைத்தனமாக இருக்கிறாளே, இவள் அழகோடு இந்தக் குழந்தைத் தனமும் சேர்ந்துதான் அந்த ஆளை இவள் பக்கம் இழுத்திருக்கும் என்று நினைத்துக் கொண்டாள் சரோஜினி.

"சரி, நீ ஒண்ணு பண்ணு. ஆஸ்ரமத்தில் குழந்தைகள் சில பேர் ஹிந்தியில் ரொம்பவே வீக்காக இருக்காங்க. நீ அவங்களுக்கு ட்யூஷன் எடுக்க ஆரம்பி. பெரிய லீவிலிருந்து பாட்டு சொல்லிக் கொடு. அதிலே ஆர்வம் இருக்கிறவங்களை பள்ளிக் கூடத்திலிருந்து வரச் சொல்றேன். நீ இல்லத்துக்கு உதவியா இருந்துட்டா, அப்புறம்



உனக்கு என்ன தயக்கம்? உன் கையில் பணமா வெச்சிருக்க வேண்டாம் ஒரு பேங்க் அக்கவுண்ட் ஆரம்பிச்சி அதிலே போட்டுடு. வனிதா உனக்கு வேண்டிய உதவி செய்வாள்" என்றாள் சரோஜினி.

கூடவே "மத்தியானப் பொழுதையெல்லாம் வீணாக்காமல் வர வருஷம் + 2 பரிட்சை எழுத தயார் பண்ணிக்கோ. ஆமாம், நிச்சயமா நீ மேலே படிக்கணும். உன்னாலே படிக்க முடியும். சரியா?" என்று அவள் கேட்டதும், தன் அம்மாவே கேட்பதுபோல் உணர்ந்த கல்பனா பலமாகத் தலையாட்டினாள்.

"உடம்பைப் பார்த்துக்கோ. நன்னா சாப்பிடு. தியானம் பண்ணு. பிரசவ காலத்தில் யார் பாத்துப்பான்னு தேவையில்லாமல் கவலைப் படாதே. நாங்கள் எல்லாம் இருக்கோம். சரி, நீ ரூமுக்குப் போய் ரெஸ்ட் எடு" என்றாள்.

எழுந்த கல்பனாவைத் திரும்ப, "ஏம்மா, கல்யாணி! நிஜமாகவே சொல்லு. உனக்கு உன் அப்பா அம்மாவை தொடர்பு கொள்வதிலேயோ, உன் புருஷனைத் தேடறதிலேயோ விருப்பம் இல்லையா?" என்று கேட்டாள் சரோஜினி.

சட்டென்று மறுபடியும் அவள் கால்களில் விழ்ந்தாள் கல்பனா. "எனக்கு இனிமே அப்பா, அம்மா எல்லாமே நீங்கதான். நான் பிஞ்சிலே பழுத்ததனாலே வெம்பல் தான். மண வாழ்க்கை என்கிறதெல்லாம் மறந்துடறேன். அதுதான் எனக்கு நல்லது" என்றாள்.

"இத்தனை தெளிவாக இருக்கும் நீ எதுக்குத்தான் உன் வாழ்க்கையை நாசம் பண்ணிண்டியோ? எல்லாம் விதி. நீ போய் நான் சொன்ன மாதிரி செய்ய ஆரம்பி. மனதை அலைய விடாதே" என்றாள் சரோஜினி. அவர்கள்

இருவரும் வேலையைத் தொடர, கல்பனா தன் அறையை நோக்கி நடந்தாள்.



## 25

தினமும் போலவே அன்றைக்கும் தன் வீட்டில் திருவாராதனம் முதலியவற்றை முடித்து, தன் மனைவி வேதா கொண்டு வைத்த பிரசாதத்தை பெருமாளுக்கு நிவேதனம் செய்து முடித்தார் திருவேங்கடம். வழக்கம் போல தீர்த்தம் வாங்கிக் கொண்ட வேதாவிடம், "நான் கோவிலுக்குப் போயிட்டு வரேன்" என்று சொல்லிவிட்டு எதிரிலிருந்த பார்த்தசாரதிப் பெருமாள் கோவிலைப் பார்க்க நடந்தார். கோவிலுக்குப் போய் வந்து அவர் சாப்பிட இலை முன் உட்கார்ந்தால் மணி எட்டு முப்பது என்று அர்த்தம். கையில் ஒரு பிளாஸ்கில் காபியும், இன்னொரு பிளாஸ்கில் குடிக்க ஜலமுமாக அவர் புறப்பட்டு விட்டால் மணி ஒன்பதே கால் என்று அர்த்தம். பிறகு மோட்டார் பொருத்திய சைக்கிளில் மைலாப்பூரில் இருக்கும் ஆபீஸுக்குக் கிளம்பி விடுவார்.

இந்த வழக்கங்களில் எதுவுமே இத்தனை வருடங்களாக மாறியது கிடையாது. அதே திருவல்லிக்கேணியில் பார்த்தசாரதி கோவில் எதிரே தான் வாசம். அதே பக்தி. சாயந்திரம் 7 மணிக்கு வந்து, சந்தியாவந்தனம், சகஸ்ர நாமம், சாப்பாடு, ஒரு மணி நேரம் ஆன்மீகப் புத்தகங்கள் படித்தல், பிறகு பாலை அருந்திவிட்டுப் படுக்கை. அவர் பழைய வழக்கங்களின்படி வளர்க்கப் பட்டவர் தான். ஆனால் பெண்களுக்கு மரியாதை கொடுப்பது போன்ற



நல்ல கொள்கைகளுக்கும் அவரிடம் குறைவில்லை. பார்க்கப் போனால், நம் பெரியவர்கள் எல்லாம் பெண்களுக்கு மரியாதை கொடுக்காதவர்களா, என்ன? பெண்களைக் கீழே போட்டு மிதிப்பது எல்லாம் இடையில் வந்த பழக்கங்கள் தானே!

அளவான, அழகான குடும்பம். பையன் படித்து முடித்து நல்ல வேலைக்குப் போயாகி விட்டது. வேதாவின் தம்பி பெண்ணை அவனுக்குக் கல்யாணம் பண்ணி வைத்தாயிற்று. மாமியாரும், மாட்டுப் பெண்ணும் ரொம்பவே ஒற்றுமை. பையனோ நாள் கழித்துப் பிறந்தவன் என்றால், இனி தனக்குப் பிள்ளை மரத்தாகி விட்டது என்று வேதா நினைத்தபோது பிறந்தவள் வசுமதி. அதனால் ரொம்பவே செல்லம். ஆனாலும் அவளையும் கண்டிப்பாகத்தான் வளர்த்தார். அதுவும் இந்த இரண்டு வருடங்களில் கண்டிப்பு கூடித்தான் விட்டது.

ஆமாம்! கல்பனா தானாகவே போய்க் கல்யாணம் பண்ணிக் கொண்டதும், பிச்சம்மாள் தவறிப் போனதும் நடந்து இப்போது இரண்டு வருடங்களாகி விட்டது. சரியாக அந்த நேரம்தான் வசுமதி எஸ்.எஸ்.எல்.சி. முடித்திருந்தாள்.

பிச்சம்மா போனதுமே ராமமூர்த்தி திருவேங்கடத்தைக் கட்டிக் கொண்டு அத்தனை விஷயத்தையும் உள்ளபடி சொல்லி கதறித் தீர்த்து விட்டார். பாவம்! அவர் வேறு யாரிடம் மனதில் உள்ளதைச் சொல்லிக் கொள்ள முடியும்? திருவேங்கடம் என்றால் அவரின் அப்பா நாளிலிருந்து அவர்களிடம் வேலை செய்பவர். வீட்டிற்கு வந்த திருவேங்கடம் இரண்டு, மூன்று நாட்கள் வரை கூட ரொம்ப சோகமாக இருந்தார். வேதா அவரிடம்,

''இப்ப என்ன, பிச்சம்மா மாமி ஏதாவது நண்டும் சிண்டுமா குழந்தைகளை விட்டுட்டு அறியாத வயசிலே போயிட்டாளா, என்ன? எவ்வளவோ புண்ணியம் பண்ணியிருக்கா. கீழ்க் கிளைகள் நன்னா இருக்கறச்சே அநாயாச மரணம் கிடைச்சிருக்கு. விடுங்கோ'' என்றாள் இவரை தேற்றும் முகமாக.

அதன் பிறகுதான் இவர் யாரிடமும் சொல்லாதே என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டு கல்பனா விஷயத்தைச் சொன்னார். கேட்ட வேதாவுக்கு ஒரே ஷாக். ''பெண் குழந்தைகள் ரொம்ப அழகாக இருந்தாலே ஆபத்துதான்'' என்றாள்.

''நம்ம வசுவும் அழகாகத்தான் இருக்கா. அதுதான் பயம்டி. நினைச்சா வயத்தைக் கலக்கறது'' என்றார் திருவேங்கடம்.

''போதும், நீங்களும் உங்க கற்பனையும்'' என்று சொல்லி எழுந்து போனாள் வேதா.

ராமமூர்த்தி மலேசியா புறப்படும் முன் இந்த இந்திக்காரர்களிடம் வீட்டை வாடகைக்கு விடும் போது திருவேங்கடத்தைக் காட்டி, ''இவர் எங்கப்பா காலத்திலேர்ந்து எங்கிட்டே வேலை பண்ணிண்டு இருக்கார். இனிமேயும் நீங்க தயவு பண்ணி இவரை வேலைக்கு வெச்சுக்கணும். அபாரமான இங்கிலீஷ் அவருடையது. ரொம்பவும் உண்மையான உழைப்பாளி. உங்களுக்கு அவர் பெரிய சொத்தாகவே இருப்பார்'' என்று சொல்லி, திருவேங்கடத்திடம் ஒரு கணிசமான தொகையை வற்புறுத்திக் கொடுத்து விட்டு, ''உங்களை விட்டுவிட்டு போறதுதான் இந்த வீட்டை விட்டுப் போறதைவிட வருத்தமா இருக்கு'' என்றார்.



புதியவர்களுக்கும் திருவேங்கடத்தின் நேர்மையும், திறமையும் பிடித்துவிட அவரை மிகவும் பிரியமாகவும் கண்ணியமாகவும் நடத்தினார்கள்.

எல்லாவற்றையும் மனதில் அசைபோட்டுக் கொண்டு படுத்திருந்த திருவேங்கடம் வேதா ''உள்ளே வாங்கோ'' என்று கூப்பிட்டதும் தான் எழுந்து போனார்.

இரண்டு நாளில் வசுமதி, ''அப்பா, காலேஜுக்கு அப்ளிகேஷன் வாங்கணும்ப்பா'' என்றதும் ''காலேஜும் வேண்டாம் ஒரு மண்ணும் வேண்டாம். உங்கம்மா கிட்டே வீட்டு வேலையெல்லாம் கத்துக்கோ. ஜாதகம் பார்க்க ஆரம்பிக்கறேன். காலா காலத்திலே கல்யாணம் பண்ணிண்டு புக்காத்துக்குப் போற வழியைப் பார்'' என்று படபடவென்று சொல்லி முடித்துவிட்டார்.

திக்பிரமை அடைந்த வசுமதி 'இது என்ன, அப்பா புதுசா இப்படிப் பேசறாரே? என்னை நன்னா படிக்க வெச்சு பெரிய வேலைக்கு அனுப்பப் போறேன்னு சொன்ன அப்பாவா இப்படிப் பேசறார்?' அவளுக்கு ஒரே அதிர்ச்சி! அம்மாவிடம் போய் ஒருகுரல் அழுதாள்.

''சரி நான் பேசிப் பார்க்கிறேன். சமயம் பார்த்து பேசலாம்'' என்று அவளை சமாதானப் படுத்தின வேதா, பிள்ளை, மாட்டுப் பெண்ணுடன் சேர்ந்து ஒரு கூட்டணி அமைத்துக் கொண்டாள். ராத்திரி அவர் சாப்பிட்டு விட்டு சாவகாசமாக உட்கார்ந்திருந்த நேரத்தில் போய் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

''இன்னிக்கெல்லாம் வசு சாப்பிடவேயில்லை. பாவமா இருக்கு'' என்று ஆரம்பித்தாள்.

''என்ன பண்ணலாம், சொல்லு! என் பயம் எனக்கு'' என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே இடைமறித்தாள் வேதா.

''அப்படியானால் ஆதியிலிருந்து அவ மனசிலே காலேஜ், படிப்புன்னெல்லாம் ஆசையை வளர்த்திருக்கக் கூடாது. பாவம்!''

''என்ன பண்ணலாம்? ஊர் இருக்கிற இருப்பில் ஒரு கௌரவமான தகப்பனாய் என் கவலை தப்பா?'' என்று கேட்டார்.

''அப்பா'' என்று அழைத்தபடி அவர் பிள்ளை வந்தான். பின்னாடியே மாட்டுப் பெண்ணும், என்ன என்று கேட்பதுபோல் நிமிர்ந்து பார்த்தார் திருவேங்கடம்.

''அப்பா, அம்மா எல்லாம் சொன்னாப்பா! வசு கண்டிப்பா மேலே படிக்கணும்ப்பா. நீங்கதான் அடிக்கடி சொல்லுவீங்களே பெண்களுக்குப் படிப்பு ரொம்ப அவசியம்ன்னு'' என்றான் அவர் பிள்ளை ராமபத்ரன்.

''இதோ பார்! நான் ஜாதகம் பார்க்க ஆரம்பிக்கப் போறேன். அதுவரை வீட்டில் இருக்க வேண்டியதுதான்'' என்று அவர் சொல்ல, ''இரண்டு பேரோட மூணாவது பொம்மனாட்டியும் வீட்டில் இருந்தா உடம்பும், வாயும் தான் வளரும். தவிர வசுவுக்கு சட்டப்படி இன்னும் கல்யாண வயசு வரல்லே. அவ நல்ல பொண்ணுப்பா. அநாவசியமா நாம பயப்பட வேண்டாம்'' என்றான் ராமபத்ரன்.

அதற்குள் திருவேங்கடம், ''வசு, இங்கே வா!'' என்று கூப்பிடக் கூப்பிட அவள் வெளியே வரவேயில்லை. அவள் மன்னி அவளை இழுத்துக் கொண்டு வரவேண்டியிருந்தது. வந்தவளிடம் திருவேங்கடம் ''ஏம்மா! அப்பா உனக்கு நல்லது எதுன்னு யோசிக்க மாட்டேனாம்மா?'' என்றார் கனிவாக.



ஈஸிச்சேரில் உட்கார்ந்திருந்த அவரின் முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுத அவள், ''அப்பா, நீங்க இப்பவே பார்த்தசாரதி பெருமாள் சன்னதிக்கு வாங்கோ. நான் கற்பூரம் ஏத்தி வெச்சு சத்தியம் பண்ணறேன். கல்பனா மாதிரியெல்லாம் பண்ண மாட்டேன்'' என்றாள் ஆவேசமாக.

அதிர்ந்து போன திருவேங்கடம் வேதாவை ஒரு முறை முறைத்தார். ''அம்மாவை ஒண்ணும் சொல்லாதீங்கப்பா. எங்க எல்லோருக்கும் விஷயம் தெரியும்பா. எல்லா ஸ்கூல்லேயும் இதுதான் பேச்சு'' என்றாள் வசுமதி.

''அப்பா, ஒரு காலேஜிலே 500 பேர் படிச்சா, யாராவது ஒருத்தர் இப்படிப் பண்ணினா எல்லாரையும் அப்படி நினைக்கலாமாப்பா?'' என்று ராமபத்ரன் சொல்ல, அவன் மனைவி சொன்னாள். ''நம்ம பக்கத்து வீட்டு பார்வதி மாமி வேலை பண்ணற காலேஜிலேதான் அவா பொண்ணையும் சேர்க்கப் போறா. வசுவையும் அங்கேயே சேர்த்தா மூணு பேருமா ஒரே ஆட்டோவிலே ஒண்ணாவே போயிட்டு வருவா. ஒண்ணும் பயமில்லை'' என்றாள்.

''சரிதான், எல்லோரும் பேசி வெச்சுண்டுதான் வந்திருக்கேள். அவ இஷ்டப்படியே நடக்கட்டும். ஆக வேண்டியதைப் பாருடா, ராமு'' என்று அவர் சொன்னதும், ''தேங்க்ஸ்ப்பா, தேங்க் யூ ஸோ மச்'' என்று அவர் கையைப் பிடித்துக் கொண்டு கண்ணீருடன் சிரித்தாள் வசுமதி.

''ஏம்மா, நீ நல்லபடியா படிச்சா எனக்கு என்ன வலிக்கறதாம்மா'' என்று அவளை உச்சியில் முத்தம் பதித்து ஆசீர்வதித்தார் திருவேங்கடம் முத்தாய்ப்பாக.




இரண்டு வருஷம் முந்தி நடந்த இந்த விஷயமெல்லாம் இன்று மொட்டை மாடியில் போட்டிருந்த கடப்பைக் கல் மேடையில் உட்கார்ந்திருந்த திருவேங்கடத்திற்கு நினைவு வந்தது. இந்த பழைய வீட்டில் இது ஒரு சௌகரியம். மொட்டை மாடியில் இந்தக் கடப்பைக் கல்லில் உட்கார்ந்துதான் சின்ன வயதில் படிப்பார். கல்யாணம் ஆன புதிதில் மனைவியோடு ஆசையாக சற்று நேரம் பேச வேண்டுமா இதே கடப்பைக் கல் தான். இன்று இரண்டு வருஷத்துப் பழசை நினைத்துப் பார்க்கவும் இந்த இடம்தான் தோது பட்டது. மல்லாந்து படுத்து நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டிருந்த அவருடைய இந்த மன உளைச்சலுக்குக் காரணம் இரண்டு நாள் முந்தி கல்பனா வந்துவிட்டுப் போனதுதான். அன்று இவருக்கும் அவளைப் பார்த்ததும் கோபம்தான் வந்தது. அதன் பிறகு அவள் பாவம் என்று ராமமூர்த்தியிடம் மலேசியாவுக்குப் போனில் பேசியதும், அவர் ஓவென்று கத்தினதும், கல்பனா திரும்பப் போனதும் எல்லாமே மனதில் ரொம்பப் படாமலேயே நடந்து முடிந்து விட்டது. அன்றைக்குத் தோன்றாதது சாவகாசமாக அவருக்கு இன்றைக்குத்தான் உறைத்தது. கல்பனா நகை நட்டெல்லாம் போட்டுக் கொண்டு பளிச்சென்றுதான் புடவை கட்டிக் கொண்டிருந்தாள். ஆனாலும் அவள் உடம்பில் ஒரு சோர்வும், கண்களில் ஒரு சோகமும் தெரிந்ததாக இப்போது தோன்றியது. அல்லது அது தன் பிரமைதானோ? எதாக இருந்தாலும் அன்றைக்கே அவளைச் சற்று நிறுத்தி, எங்கு போகிறாள்,



என்ன விஷயம், கணவன் எப்படி என்றெல்லாம் சற்று விசாரித்திருக்கலாம் என்று இப்போது தோன்றியது. இதற்கென்ன செய்யலாம் என்று தனக்குள் தீவிரமாக ஆலோசித்தார்.

ராமமூர்த்தி கோபமாக இருந்தால் என்ன, இன்னொரு முறை போன் பண்ணிப் பார்க்கலாம், அவர் எடுத்தால் பேச வேண்டாம். வேறு யாராவது எடுத்தால் கல்பனா வந்துவிட்டுப் போனதைப் பற்றிச் சொல்லலாம், எப்படியும் அன்று கல்பனா போன் செய்ததையும், தான் கோபமாகப் பேசியதையும், அவர் வீட்டில் சொல்லியிருக்க மாட்டார். எனவே, தான் போன் செய்யலாம். ஆபீஸ் நேரத்தில் நாளை காலையில் போன் செய்வது தான் சரி என்று தீர்மானித்துக் கொண்டார்.

மறுநாள் இவர் போன் பண்ணியபோது எடுத்தது சாதனா. நல்ல காலம் என்று நினைத்துக் கொண்டு இவர் தான் யார் பேசுகிறேன் என்று சொன்னதும், சாதனா, ''மாமா, நீங்களா? எப்படி மாமா இருக்கீங்க? இருங்க, அம்மாவைக் கூப்பிடறேன். அப்பா வீட்டில் இல்லை'' என்றாள்.

''பரவாயில்லேம்மா! உன்னோடு விஷயத்தைச் சொன்னால்கூட போதும். கல்பனா வந்திருந்தாம்மா'' என்றார் திருவேங்கடம்.

''அப்படியா, மாமா! எப்படி இருக்கா அவ? எங்கே இருக்காளாம்? நன்னா இருக்காளாமா?'' என்று வரிசையாகக் கேட்க, ''நன்னாத்தான் இருந்தா. ஆனா என்னவோ ரொம்ப சோர்வா தெரிஞ்சா. நான் அவளை அன்னிக்கு எதுவும் கேட்கல்லே. சோர்வு ரயிலில் வந்ததாக இருக்கலாம். ஹைதராபாதில் இருக்கறதாச் சொன்னா.

தனியாத்தான் வந்திருந்தா. ஒருவேளை மாசமா இருந் தாளோ என்னவோன்னு இப்போ நினைக்கப் பார்க்கறச்சே தோணறது. அதுதான் விசாரிக்கலாமேன்னு தோணித்து. அவளுடைய போட்டோ ஏதாவது இருந்தா அனுப் பேம்மா. எப்படியாவது கண்டு பிடிக்கப் பார்க்கறேன்'' என்றார்.

''போட்டோதானே மாமா, கல்பனா தனியா எடுத் துண்ட போட்டோகூட இருக்கு எங்கிட்டே. அனுப்ப றேன், மாமா'' என்று அந்த வாக்கியத்தை சாதனா முடிக்கவில்லை ஒரு அடி விழும் சப்தமும்'' ஐயோ, அம்மா!'' என்று அவள் அலறும் சப்தமும் கேட்டது.

போனைக் கையில் பிடித்தபடியே சிலையாக நின்றார் திருவேங்கடம். இடியாய் ஒலித்தது ராமமூர்த்தியின் குரல். ''ஏன்யா, அப்பா காலத்து மனுஷர் என்று உமக்கு ஒரு கௌரவம் கொடுத்தால் அதைக் கெடுத்துக் கொள் ளாமல் விடமாட்டிங்களா? அந்த ஓடுகாலி இருக்காளா இல்லையான்னு எங்களுக்கில்லாத கவலை, உமக்கு எதுக்கய்யா? இன்னொரு தரம் போன் பண்ற வேலை யெல்லாம் வெச்சுண்டா நான் ரொம்ப பொல்லாதவனா யிடுவேன்'' என்று கர்ஜித்தார்.

ஏதோ பெரிய குரல் கேட்டு வித்யா பக்கத்து அறையி லிருந்தும், அன்று அவர்கள் வீட்டிற்கு வந்திருந்த ரேணு காவும் அவள் பிள்ளையும் ஓடி வந்தார்கள். வெளியே வந்த வித்யா விதிர்விதிர்த்துப் போனாள்.

ரௌத்திராகாரமாய் நின்றிருந்த ராமமூர்த்தி ''இது தான் அவளைப் பற்றி இந்த வீட்லே பேசின கடைசி பேச்சு. இன்னொரு தடவை யாராவது அவளைப் பத்தி இங்கே பேசினா நான் இத்தனை நாள் சொன்னதுபோல்



சந்நியாசியாகப் போக மாட்டேன். தூக்குப் போட்டுண்டுடு வேன். இதுதான் என் முடிவு. பரவாயில்லேன்னா யார் வேணுமானா, யாரை வேணுமானாலும் கட்டி அழுங்கோ'' என்று சொல்லிவிட்டு தடதடவென்று மாடி ஏறிப் போய்விட்டார்.

அதுவரை அப்படியே ஒரு சின்ன சிலைபோல் கண் களில் நீர் வழிய நின்றிருந்த சாதனா பக்கத்து ரூமிற்கு ஓடிப் போய் விட்டாள். அவள் தாளிட்டுக் கொள்ளும் முன் தானும் உள்ளே அவசரமாக நுழைந்த ரேணுகா ''நீ வீட்டுக்குப் போப்பா, நான் அப்புறமா வரேன்'' என்றாள் மகனைப் பார்த்து.

உள்ளே நுழைந்த ரேணுகா கட்டிலில் படுத்து அழ ஆரம்பித்த சாதனாவைத் தன் மடியில் இழுத்துப் போட்டுக் கொண்டாள். எதுவும் பேசவில்லை. மௌன மாக அத்தை மடியில் படுத்து ரொம்ப நேரம் அழுது கொண்டிருந்தாள்.

மாடிக்குப் போன ராமமூர்த்தியின் பின்னால் போன வித்யா உடனே அவரிடம் எதுவும் பேசவில்லை. ரொம்ப நேரம் கழித்து ''உங்களுக்குப் பிடிக்காத எதையும் நாங்கள் யாரும் நிச்சயம் செய்ய மாட்டோம். அவள் தன் வாழ்க்கையைத் தேடிக் கொண்டு விட்டாள் அதிகப் பிரசங்கித்தனமாய் அதுக்காக நான் என் வாழ்க்கையை ஒரு நாளும் தொலைத்துக் கொள்ள மாட்டேன். இது சத்தியம்'' என்றாள். கொஞ்ச நேரம் கழித்து ராமமூர்த் தியும், வித்யாவும் கீழே இறங்கி வரவிட்டுத்தான் ரேணுகா தன் வீட்டுக்குப் புறப்பட்டாள்.

ராமமூர்த்தியிடம் சாதனா அறை வாங்கிய அன்று இரவு ரேணுகா கணவரையும், பிள்ளையையும் சாப்பிடக்

கூப்பிட்டாள். ''எனக்கு சாப்பாடு வேண்டாம்மா'' என்றான் பிரகாஷ்.

''இந்தா, பட்டினியாப் படுத்தால் உனக்குத தூக்கம் வராதுன்னு எனக்குத் தெரியாதா? வா, பேசாமே. இல்லேன்னா நானும் சாப்பிடப் போறதில்லே. எனக்குப் பசிதான். ஆனா நீ சாப்பிடாமே நான் மட்டும் எப்படிச் சாப்பிடுவேன்?'' என்றாள்.

வந்து சாப்பிட உட்கார்ந்த பிரகாஷ், ''ஏம்மா, உங்கண்ணாவுக்கு இத்தனை ஆங்காரம்? அதென்ன வயசு வந்த பெண்ணைக் கை நீட்டி அடிக்கிற பழக்கம்?'' என்றான்.

''ஏன்டா பழக்கமா அடிச்சிண்டிருக்கானா, என்ன? என்னமோ இன்னிக்கு பெரியவ பேரை எடுத்ததும் உணர்ச்சி வசப்பட்டுட்டான்.''

''விட்டுக் கொடுக்க மாட்டியே உன் அண்ணாவை'' என்றான் பிரகாஷ்.

மூன்றாம் நாள் பிரகாஷ் ரேணுகாவிடம் வந்து, ''அம்மா, நாம பத்து மலை முருகன் கோவிலுக்குப் போகலாமா நாளைக்கு?'' என்று கேட்டான்.

''போகலாமே'' என்று ரேணுகா சொல்ல, ''சாதனாவும், அவ அம்மாவும் வரட்டும்'' என்றான் பிரகாஷ்.

''ஏம்பா, உங்க இரண்டு பேர் அப்பாக்களும் என்ன பாபம் செஞ்சாங்க? கோவிலுக்கு அவங்க வேண்டாமா?''

''நாளைக்கு அவங்க இரண்டு பேரும் ஆபீஸ் காரியமா சிங்கப்பூர் போறாங்க.''

''திருட்டுப் பையா! தெரிஞ்சுதான் பிளான் போட்டுருக்கே'' என்றாள் ரேணுகா.



''ஆமாம்மா! இரண்டு நாளா மாமா வீட்டுக்குப் போயிட்டு போயிட்டு வரேன். சாதனா என் எதிர்த்தாப்பலே கூட வரலேம்மா. பாவம்! நிஜமாகவே அவளுக்கு ஒரு சேஞ்சாக இருக்குமேன்னுதான் நினைக்கிறேன். தனியா கூட்டிண்டு போக உங்க அண்ணா ஒத்துக்க மாட்டார்.''

''ஓ. அதுக்குத்தான் எங்களையும் கூப்பிடறயா? சரி, சரி! நாளைக்காக பர்மிஷன் கேட்டு வைக்கிறேன் அண்ணாகிட்டே'' என்றாள் ரேணுகா.

''என்னோட செல்ல அம்மா'' என்று அம்மா கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்துவிட்டு நகர்ந்தான் பிரகாஷ்.

மறுநாள் நால்வருமாக ''பாட்டு கேவ்ஸ்'' என்று அழைக்கப்படும் பத்து மலை முருகன் கோவிலுக்குக் கிளம்பினார்கள். ஏற்கனவே ஒரு முறை போய் வந்த கோவில்தான் என்றாலும் அந்தக் கோவிலின் அழகும், அந்த மலையின் முன்னே இருக்கும் பிரும்மாண்டமான தங்க வண்ண முருகனின் அழகுச் சிலையும் யாரையுமே அந்தக் கோவிலுக்குத் திரும்பத் திரும்ப வரவழைக்கத்தான் செய்யும். கண்டவர்கள் அந்தக் கோவிலையும், முருகன் சிலையையும் மறப்பது ரொம்ப அபூர்வம்.

சாதனா முதலில் வரவே மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தாள். வித்யா திட்டி, ரேணுகா கெஞ்சி, கொஞ்சி அவளைப் புறப்படச் செய்ய வேண்டியிருந்தது. காரில் முன் சீட்டில் பிரகாஷுடன் உட்கார மறுத்து விட்டாள். ரேணுகா முன் சீட்டில் பிள்ளையுடன் உட்கார, பின்னால் சாதனாவும், வித்யாவும் உட்கார கார் புறப்பட்டது. பிரகாஷ் ஏதோ பேசிக் கொண்டே வர, ரேணுகாவும் வித்யாவும்தான் அவற்றிற்கெல்லாம் பதில் சொல்ல

வேண்டியிருந்தது. அவன் அடித்த எந்த ஜோக்கிற்கும் சாதனா சிரிக்கவேயில்லை. 'வா, பெண்ணே! வீடு திரும்பும் முன் உன்னைக் கலகலவென்று சிரிக்க வைக்கிறேனா இல்லையா பார்!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் பிரகாஷ்.

வித்யாவிற்கு பிரகாஷ் என்ன நினைத்துக் கொள்வானோ என்று பயம். அவளைப் பொறுத்தவரை கல்பனா அப்படிச் செய்தபின் இவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள அவர்கள் சம்மதித்திருப்பதே பெரிய விஷயம். அவர்கள் மனதை இந்தப் பெண் நோகடித்து விடக் கூடாதே என்று கவலை. ரேணுகா அவளுக்குக் கண்களாலேயே தைரியம் சொன்னாள்.

குகைக் கோவிலுக்குச் சற்று தூரத்திலேயே முருகனின் திருவுருவம் தென்பட எல்லோரும் கை குவித்தனர். கீழே இருந்து பார்க்கும்போது கண்களுக்குத் தெரிந்த படிக் கட்டுகள் செங்குத்தாக இருப்பது போலவும், நிறைய எண்ணிக்கையில் இருப்பதாகவும் பயமுறுத்தியது. ''என்னால் ஏற முடியாது, போம்மா'' என்றாள் சாதனா.

''ரொம்ப நன்னாயிருக்குடி நீ சொல்றது? இரண்டு கிழவிகள் வாயை மூடிக் கொண்டிருக்கும் போது நீ என்னமோ பயப்படறயே'' என்று அவளைக் கடிந்தாள் வித்யா.

''உனக்கேன் மன்னி? அவளைக் கட்டிக்கப் போறவன் அக்கறையாக் கூட்டிண்டு வந்திருக்கான். தூக்கிண்டு கூட படியேறுவான். நீ வா, நாம படியேறலாம்'' என்றாள் ரேணுகா.

''போங்கத்தை'' என்றபடி அவர்களுடன் சாதனாவும் படி ஏற ஆரம்பித்தாள்.



''இந்த முருகன் சிலைக்குக் கீழே நில்லேன், உன்னை ஒரு போட்டோ எடுத்துடறேன்'' என்றான் பிரகாஷ்.

''வேண்டாம் அத்தான், தரிசனம் பண்ணிடுவோம் முதலில்'' என்றாள் சாதனா. சொல்லிவிட்டு அம்மா அத்தையோடு சேர்ந்து கொண்ட அவளை பின்னாலேயே வந்த பிரகாஷ் கையைத் தொட்டு ''கொஞ்சம் மெதுவாகத்தான் என்னோடு ஏறேன். எனக்கு உன்னோட கொஞ்சம் பேசணும். அதுக்காகத்தான் மெனக்கெட்டு வந்திருக்கேன்'' என்றான் சற்றே அதட்டலாக.

மெல்ல அவனோடு சேர்ந்து படியேறிய சாதனா, ''ஒண்ணும் பேசத் தோணவேயில்லையே. அத்தான். ஸாரி!'' என்றாள்.

''அதுதான் டாலி என்னை ரொம்பவே டிஸ்டர்ப் பண்ணறது'' என்றான் பிரகாஷ்.

எப்போதாவது தனியே இருக்கும் சந்தர்ப்பங்களில் அவளை ''டாலி'' என்று அழைப்பான் பிரகாஷ். அவளுக்கு அப்படியே சிலிர்த்துப் போய்விடும். அன்றும் அவன் அப்படி அழைத்ததும் சிலிர்த்துப் போன அவள் மெதுவாக அவன் நீட்டிய கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

வாயால்தான் பேச வேண்டுமா? அன்பு கொண்ட நெஞ்சங்களானால் கண்களும், கைகளும் கூடத்தான் பேசும். மெல்லப் படியேறி மேலே குகைக்குள் குடி கொண்ட குகன் கோவிலுக்குள் நுழைந்து விட்டனர். எப்போதுமே ஏற்படும் பிரமிப்பு இப்போதும் ஏற்பட்டது. எப்பேர்ப்பட்ட பிரும்மாண்டமான குகை! மேலிருந்து தொங்கியபடியே உறைந்திருந்த கற்கள் யாரோ ஒட்ட வைத்ததுபோல் தொங்கிக் கொண்டிருக்க, எத்தனை

குளிர்ச்சியான இடம்! அங்கு பிரதிஷ்டை ஆகியிருந்த முருகன் விக்ரகமும் எத்தனை அழகு! மனிதன் உயரப் போகும்போதெல்லாம் தெய்வத்தின் புனிதத் தன்மையை உணர வைக்கிறது இயற்கை. இந்த மலையும், குகையின் அழகும், ''ஏய், மனிதா! ஒன்றும் பேசாமல், இந்த மலையின், இந்த குகையின் தெய்வத்தின் புனிதத்தை உணர்ந்தால் போதும், நீயும் உயர்ந்து விடுவாய்'' என்று உணர்த்தும் இடம் அது.

''சாதனா, ஒரு பாட்டுப் பாடேன்'' என்றாள் ரேணுகா. ஒரு மறுப்பும் சொல்லாமல் பாட ஆரம்பித்தாள் சாதனா.

''பத்து மலை முருகன் பதம் பணி திட என்ன தவம் செய்தேன்'' என்று தொடங்கிய உசேனி ராகப் பாடல் அது. ரொம்பவும் அழகாகப் பாடினாள் சாதனா.

''ரொம்ப நன்னா பாடினேடி, ராஜாத்தி'' என்று ரேணுகா சொல்ல, ''பாட்டும் ரொம்ப அழகா இருக்கே! இதை எங்கே கத்துண்டே?'' என்று கேட்டாள் வித்யா.

''என்னோட சென்னை ஸ்கூல் ம்யூஸிக் டீச்சர், மைதிலி சம்பத்னு பேரு. அவங்க இங்கே வந்தபோது தோணி எழுதின பாட்டு இது! அப்போ கத்துக் கொடுத்தா. அது இங்கே வந்ததும் நினைவுக்கு வந்தது'' என்றாள் சாதனா.

அடுத்த மேல் சந்நிதிக்குப் போனார்கள். அங்கும் ''ஶ்ரீ வல்லி தேவ சேனாபதே'' என்ற பாடலை அம்மாவும் பெண்ணும் பாட பிரகாஷ் கூட எல்லோரும் ஆச்சரியப் படும்படி ஒரு திருப்புகழை ராகத்தோடு பாடினான்.

''ரொம்ப நன்னா பாடறேப்பா'' என்றாள் வித்யா. பிறகு நால்வரும் அங்கிருந்த பிரசாதத்தை கொஞ்சம் எடுத்துக் கொண்டார்கள். அழகாக இரண்டு ஸ்டீல் பாத்திரத்தில் சுண்டலும், சர்க்கரைப் பொங்கலும்



வைத்து கரண்டியும் போட்டு மூடி வைத்திருந்தார்கள். பக்கத்திலேயே தொன்னைகளும் இருந்தன.

''என்ன இயற்கை அழகு! எத்தனை சுத்தமாகப் பராமரிக்கிறார்கள்! இங்கேயே இருந்துவிடலாம் போலிருக்கிறது'' என்றான் பிரகாஷ்.

''நானும் மன்னியும் கீழே கொஞ்சம் கடைகள் பார்க்கிறோம், நீங்க இரண்டு பேரும் கொஞ்சம் நேரம் கழிச்சுத்தானே வாங்களேன்'' என்ற ரேணுகா வித்யாவையும் அழைத்துக் கொண்டு படியிறங்க ஆரம்பித்தாள்.

ஒரு ஓரமாக உட்கார்ந்தார்கள் பிரகாஷும், சாதனாவும், ''நன்னா பாடறே, சாதனா! ரொம்ப சந்தோஷமா இருந்தது'' என்றான் பிரகாஷ்.

''நீங்ககூட நன்னாத்தான் பாடறீங்க! முறையா கத்துக்கலாமே! எங்கம்மா நன்றாகக் கத்துக் கொடுப்பா'' என்றாள் சாதனா.

''உங்கம்மாவெல்லாம் வேண்டாம்மா. நீ கத்துக் கொடுத்தா நான் கத்துக்கறேன்.''

''ஐயோ, கத்துக் கொடுக்கற அளவுக்கெல்லாம் எனக்குத் தெரியாதுப்பா'' என்றாள் சாதனா.

''சரி, உனக்குத் தெரியாட்டாப் போறது. எனக்கு நிறைய தெரியும். நான் சொல்லித்தரேன், நீ கத்துக்கோ.''

''என்ன சொல்லித் தருவீங்க?''

''என்னென்னமோ சொல்லித் தருவேன். நேரம் காலம் போறதே தெரியாம சொல்லிக் கொடுத்துண்டே இருப்பேன், தெரியுமா?''

அப்போதுதான் சாதனாவுக்கு அவன் ஏதோ விஷயமாகப் பேசுவது புரிந்தது. ''ச்சீ நீங்க ரொம்ப கெட்டவர்'' என்றாள் கொஞ்சலாக.

''நான் இப்போ ஏதாவது சொன்னேனா கெட்டதா? நீயா ஏதாவது நினைச்சுக்கறியே. நீ தான் பேட்.''

''சரி, பின்னே நீங்க என்னோட பேச வேண்டாம்'' என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள் சாதனா.

''ஸாரி, டாலி, வெரி ஸாரி! உன்னைப் போய் பேட் கேர்ள்னு சொல்வேனா? விளையாட்டுக்குச் சொன்னேன். இதோ பார்! தப்பு போட்டுக்கறேன்'' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டான்.

''ஐயோ, என்ன அத்தான் இது?'' என்று அவன் கையைப் பிடித்துக் கொண்டாள் சாதனா.

''அப்பாடா. இப்பவாவது என் கையைப் பிடிச்சுக்க மனசு வந்ததே!'' என்று அவன் சொல்ல நறுக்கென்று கையை விட்டுவிட்டாள். சாதனா.

''அட ராமா! தப்பாயிடுத்தே'' என்றான் பிரகாஷ்.

சற்று நேரம் புரியாமல் விழித்த சாதனா திரும்ப அவன் கையைப் பிடித்துக் கொண்டாள்.

''தேங்க்ஸ்டா, டாலி!'' என்று பிரகாஷ் சொல்ல, ''இதுக்குத்தான் தப்பாயிடுத்தேன்னு சொன்னீங்களா?'' என்றாள் சாதனா.

''அது புரிய இத்தனை நேரம் ஆச்சா, மக்கு!'' என்ற பிரகாஷ், அவள் தலையில் செல்லமாகக் குட்டினான்.

''வலிக்கறது, அத்தான்!'' என்று சிணுங்கினாள் சாதனா.

''சாரிடா, நீ பதிலுக்கு என் தலையில் குட்டிடு'' என்று குனிந்தான் பிரகாஷ்.

''இப்ப குட்டமாட்டேன். எல்லாத்தையும் சேர்த்து ஞாபகம் வெச்சுண்டு பின்னாடி நன்னா திருப்பிக் கொடுக்கறேன், பாருங்க!'' என்றாள்.



''நான் கொடுத்ததெல்லாம் திருப்பிக் கொடுக்கப் போறியா? வெரிகுட். அப்ப நான் விதவிதமா நிறையத் தரேனே'' என்று பிரகாஷ் சொல்ல, ''ஆசையைப் பாரு'' என்றாள் சாதனா.

''ஆமாம், டாலி! எனக்கு உன் மேலே எப்போலேர்ந்தோ எவ்வளவோ ஆசை. அதுதான் மாமா உன்னை அடிச்சதும் எனக்குத் தாங்கல்லே. ரொம்ப வலிச்சுதா, கண்ணா!''

''இல்லையத்தான். ரொம்ப அதிர்ச்சி, அவமானம். அப்பாவுக்கு அவளை பிடிக்கல்லேங்கறச்சே நானும் அவளைப் பத்திப் பேசியிருக்கக் கூடாது. ஆனா, மாசமா இருக்காளோ என்னவோன்னெல்லாம் திருவேங்கடம் மாமா சொன்னதும் நான் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுட்டேன்.''

''நல்லவேளை நமக்கு இன்னும் கல்யாணம் ஆகல்லே. கல்யாணத்துக்கப்புறம் உன்னை யாராவது கோபமாய்ப் பார்த்தாக்கூட தொலைச்சுடுவேன்'' என்றான் பிரகாஷ்.

''அவ்ளோ ஆசைக்கு எனக்கு என்ன அத்தான் தகுதியிருக்கு'' என்றாள் சாதனா கண்களில் நீர் துளிர்க்க. ''ஒண்ணு தெரியுமா, அப்பா ஒரு இரண்டு மணி நேரம் கழிச்சு கீழே வந்ததுமே என்னைக் கிட்டே கூப்பிட்டு, ''ரொம்ப சாரிடா, என் கண்ணோல்லியோ, நான் உன்னை அப்படி அடிச்சிருக்கக் கூடாது. என்னை மன்னிச்சுக்கோம்மா'' என்றார்.

அதுக்கு நான் ''என்னப்பா நீங்க. என்னைப் பெத்து வளர்த்து ஆளாக்கின உங்களுக்கு என்னை ஒரு அடி வைக்கத்தான் உரிமை இல்லையா? பரவாயில்லைப்பா''ன்னேன்.

''உனக்கு என் மீது கோபமில்லையேம்மா?'' என்று என்னை அப்பா கேட்டார். ''எனக்குக் கோபமெல்லாம் இல்லேப்பா. எனக்கும் அவள் மேலே தான் ரொம்பவும் கோபம். கூடவே இருந்திருக்கேன். எனக்கும் ஒரு சின்ன க்ளு கூட இல்லாமே இப்படி எல்லோருக்கும் அவப்பேர் உண்டாக்கிட்டாளேன்னு வருத்தம்தான். என்னை மன்னிச்சடுங்கப்பா'' என்றேன்.

நான் அவரிடம் மறைச்சது என்ன தெரியுமா?'' என்று சாதனா கேட்க, ''என்ன'' என்றான் பிரகாஷ்.

''இவர் மறந்துடுன்னு சொல்றாரே தவிர இவரும் மறக்கல்லே, நம்ம யாராலேயும் மறக்கவும் முடியாது. நான் தினமும் கடவுளை வேண்டிக் கொள்ளத்தான் செய்கிறேன்.''

''நிஜம் தான். நாம இரண்டு பேருமே கல்பனா எங்கே யிருந்தாலும் அவ நன்னா இருக்கணும்னு வேண்டிப் போம்'' என்றான் பிரகாஷ். கூடவே ''நமக்காகவும் வேண் டிக் கொள்ளணும் பெண்ணே! தெரியுமோல்லியோ?'' என்றான்.

''என்னன்னு வேண்டிக்கணுமாம்'' சாதனா என்னும் கிளி கொஞ்சியது.

''சீக்கிரமே நான் உன் கழுத்தில் தாலியைக் கட்டணும், நாம பதினாறு பெறணும்.''

''ஐயே! வழியறது.''

''ஆமா டாலி, கியா, மியான்னுனெல்லாம் அதுங்க கத்த, நான்கு பெரியவங்களும் தவிக்க, நாமா ஜாலியா வெளியே போயிட, நல்ல தமாஷாத்தான் இருக்கும்'' என்று சொல்ல கலகலவென்று சிரித்தபடி இறங்கி



னார்கள். அவர்கள் இருவரையும் பார்த்த பிள்ளையை பெற்றவள் ''எத்தனை சமர்த்து பார்த்தியா என் பிள்ளை'' என்று பெருமையாக வித்யாவைப் பார்க்க, வித்யா சிரிக்க, ''என்னம்மா, ஷாப்பிங் முடிச்சாச்சா'' என்று அசடு வழியக் கேட்டு வைத்தான் பிரகாஷ்.

சாதனா ''அம்மா ட்வின் டவர்ஸுக்குப் போய்விட்டு சரவண பவனில் சாப்பிட்டுவிட்டுப் போகலாம்மா'' என்றாள் உற்சாகமாய்.

''நேரமாயிடும்மா, வேண்டாம்'' என்றாள் வித்யா.

''அப்படியானா நான் வரலே, இங்கேயே இருக்கேன்'' என்றாள் சாதனா.

''அம்மாடியோ! இத்தனை பிடிவாதம் பிடித்தால் எனக்குக் கட்டுப்படியாகாதும்மா'' என்றான் பிரகாஷ்.

''சரி, கட்டுப்படியாறவனா வேறே ஆளைப் பாத்துட லாமா'' என்றாள் ரேணுகா.

''இல்லை, இல்லை, எனக்கே கட்டுப் படியாகும்மா'' என்றான் பிரகாஷ் சிரித்துக் கொண்டே.

இப்போது இயல்பாய் முன் சீட்டில் பிரகாஷுடன் உட்கார்ந்தாள் சாதனா. எல்லோருமாய் வாய்கொள்ளாச் சிரிப்புடன் ட்வின் டவர்ஸை நோக்கி விரைந்தனர்.



## 27

ஆயிற்று. கல்யாணி சாந்தி மகளிர் இல்லம் வந்து பத்து நாட்கள் ஆகி விட்டன. எல்லா விஷயமுமே அவளுக்கு அங்கு சௌகரியமாக இருந்தது. பிடித்தும் இருந்தது. வனிதாவிடம் நன்கு ஒத்துப் போயிற்று.

வனிதாவுடன் டாக்டரிடம் சென்று வந்ததில் ஐம்பத்தைந்து நாள் கரு சரியாக வளர்ந்து வருகிறதென்று தெரிந்து கொண்டாள். இல்லம் வந்து இரண்டு மூன்று நாட்களிலேயே ஹிந்தி டியூஷன் எடுக்க ஆரம்பித்து விட்டாள். முதலில் ஆரம்பிக்கும்போதே 5 பெண்கள், 4வதும், 3வதும் படிப்பவர்கள் வந்தனர். இவளால் அவர்களுக்கு நன்றாகச் சொல்லிக் கொடுக்க முடிந்தது. மிகவும் சந்தோஷமாக இருந்தது. இவளுக்கும் சரோஜினிக்கும். இதனிடையில் யாரிடமிருந்தோ வாங்கி வந்த + 2 புத்தகங்களை வனிதா கொடுக்க அதற்கும் படித்துக் கொண்டிருந்தாள்.

இதெல்லாம் எத்தனை சௌகரியமாகப் போனாலும், மனதில் ரவி ஏன் இப்படிச் செய்தான், தான் திரும்ப அவனை எப்போதாவது பார்க்கப் போகிறோமா என்ற கேள்விகள் குடைந்து கொண்டேதான் இருந்தன. அப்பா, அம்மாவைப் பற்றிக் கூட அவள் அத்தனை வருத்தப் படவில்லை என்று சொல்லலாம். அதுதான் இரண்டு வருஷங்கள் அவர்கள் இல்லாமல் கழித்துவிட்டாளே!

சரி, உமா, சேகருக்கும் போன் செய்து தன் இருப்பிடத்தை வேணுமானால் தெரிவித்துவிடலாம். ஒரு வேளை ரவி என்றாவது தன்னைத் தேடினாலும் தேடலாம் என்று தோன்றிக் கொண்டேதான் இருந்தது. ஒரு நாள் துணிந்து சரோஜினியிடம் போன் செய்ய அனுமதி கேட்டாள். அவள் அனுமதியுடன், ஒரு மாலைப் பொழுதில் சேகருக்குப் போன் போட்டாள்.

இவள் குரலைக் கேட்ட சேகர் ''நன்னா இருக்கியாம்மா? எங்கே உன் அம்மா வீட்லேதானே இருக்கே?'' என்றெல்லாம் விசாரித்தான்.



''இல்லைண்ணா! அவங்க எல்லாம் வீட்டை வித்துட்டு வெளிநாட்டுக்குப் போயிட்டாங்க. நான் போனில் அவங்களோட பேச முயற்சி செஞ்சேன். ஆனா எங்கப்பா என்னைத் தலைமுழுகிட்டதாச் சொல்லிட்டார், அண்ணா'' என்றாள்.

''ஐயோ, சரியா தெரிஞ்சுக்காமே உன்னை அனுப்பிச்சேனே, நான் அடடா, தப்பு பண்ணிட்டேம்மா. இப்போ எங்கேம்மா இருக்கே?''

''அண்ணா, உங்களை மாதிரி நல்ல உள்ளம் படைச்சவங்க இன்னும் உலகத்தில் நிறைய பேர் இருக்காங்க. நான் அம்மா, அப்பாவைப் பத்தி கவலைப் படல்லே. இங்கே ஒரு நல்ல மகளிர் இல்லத் தலைவி எனக்கு அறிமுகமானாங்க. அவங்க கூட இருக்கேன். என் பிறந்த வீட்டில் கூட நான் இத்தனை நிம்மதியா இருந்திருக்க முடியாது. அத்தனை நன்றாக என்னைப் பாத்துக்கறாங்க, அண்ணா!'' என்றாள் கல்பனா.

''ரவி விஷயம் என்னண்ணா ஆச்சு? ஆபீஸிலிருந்தோ, அந்த ரவுடி கும்பலோ அவரைத் தேடி வந்தாங்களா? அவர் என்னைத் தேடி அங்கே வந்தாரா? அவர் எப்படி இருக்கார்?'' என்று சரமாரியாகக் கேள்வி கேட்டாள்.

''அம்மா, நீ கேட்ட எல்லா கேள்விகளுக்கும் பதில் இல்லைதான்'' என்றான் சேகர்.

''எல்லாம் என் விதி! போகட்டும். எப்படியானாலும் என் போன் நம்பரை மட்டும் நான் உங்களுக்குத் தரேன். எப்போதாவது அவர் வந்து என்னைத் தேடினால், என்ன பண்ணுவீங்க?'' என்று சொல்லி தன் போன் நம்பரைக் கொடுத்தாள். ''அப்புறம் உமா அண்ணி எப்படி இருக்காங்க அண்ணா?'' என்று விசாரித்தாள்.

''வெளியே போயிருக்காம்மா. அவ நல்லா இருக்கா, டாக்டரிடமும் ரெகுலர் செக்கப் பண்ணிகிட்டு இருக்கோம்'' என்றான் சேகர்.

''அண்ணா, உங்களையும், உமா அண்ணியையும் என் ஆயுள் உள்ள வரைக்கும் மறக்க மாட்டேன். எனக்கு எத்தனை உதவிகள் பண்ணீங்க? எத்தனை அன்பும், அக்கறையும் காட்டினீங்க? எல்லாத்துக்கும் ரொம்ப தேங்க்ஸ், அண்ணா.''

''பரவாயில்லேம்மா! ஏதோ எங்களாலே முடிஞ்சதைச் செய்தோம். ஆனா என் வருத்தம் எல்லாம் உன் வாழ்க்கை இப்படி ஆயிடுத்தேன்னுதான். அதுவும் நாங்க பண்ணி வச்ச கல்யாணம் இப்படியா முடியணும்? எது எப்படி இருந்தாலும் நீ மட்டும் மனதைத் தளர விடாதேம்மா. நம்பிக்கையோடு இரும்மா. உனக்கு நல்ல காலம் நிச்சயம் பிறக்கும். டேக் கேர்'' என்று சொல்லி போனை வைத்து விட்டான்.

சேகருடன் பேசிய பிறகு அவளுக்கு ரொம்பவே துக்கமாக இருந்தது. ஒரு பாட்டம் அழுது தீர்த்தாள். நல்ல வேளையாக அந்தச் சமயத்தில் சரோஜினி ஆபீஸில் இல்லை. அதன் பிறகு மனது சற்று லேசானது போல் இருந்தது. பிறகு தியானம் செய்தாள். சற்று அமைதியானாள்.

அதன் பிறகு கூடுமான வரையில் தன் பழைய வாழ்க்கையை நினைப்பதையே தவிர்த்தாள். அதைப் பற்றிய எண்ணம் வரும்போது பிரார்த்தனைக் கூடத்தில் உட்கார்ந்து பாடுவாள். ஏதேனும் நல்ல புத்தகங்களைப் படிப்பாள்.



மாதங்கள் நல்ல விதமாகவே கழிந்தன. டாக்டர் எப்படிச் சொன்னாரோ அப்படியே செக்கப்பிற்கு போய் வந்தாள். அது ஒரு பொதுவான இல்லம்தான். என்றாலும் இவளுக்கு இரவில் பால், அவ்வப்போது சத்துள்ள பழங்கள் எல்லாம் கொடுக்க வேண்டும் என்று சரோஜினி சொல்லியிருந்தாள். காபியோ, டீயோ தங்கள் ரூமில் போட்டுக் கொண்டு, சாப்பிட சாப்பாட்டுக் கூடத்திற்கே போய்விடுவார்கள்.

தன் உள்ளத்தில் அவ்வப்போது எழும் உளைச்சலைத் தவிர மற்றபடி கல்பனா சாதாரணமாகவே இருந்தாள். நாட்கள் மாதங்களாகி அவையும் ஓடின. வயிறு தெரிய ஆரம்பித்து விட்டது.

அன்று தன் கட்டிலில் சோர்ந்து படுத்துக் கொண்டிருந்தாள் கல்பனா. மதியம் ஆகி விட்டது. காலையிலும் டிபன் சரியாகச் சாப்பிடப் பிடிக்காமல் இரண்டு இட்லி சாப்பிட்டதும் எழுந்து வந்து விட்டாள்.

வாசல் கதவைத் தட்டும் சப்தம் கேட்கவும் மெதுவாக எழுந்து கதவைத் திறந்தாள். வேகமாக நடக்காதே. அநாவசியமா ஸ்ட்ரெயின் பண்ணிக்காதே' என்று அவ்வப்போது வனிதா, பார்வதி எல்லோரும் சொல்லிக் கொண்டேதான் இருப்பார்கள். வாசலில் பார்வதி தான் நின்றிருந்தாள். கையில் சின்னக் கூடையில் பாத்திரங்கள்.

''வாங்க ஆன்ட்டி'' என்று வரவேற்றாள் கல்பனா.

''என்னம்மா ஆச்சு, நீ ஏன் சாப்பிட வரலே?'' என்று கேட்டாள் பாரு.

''எனக்கு ஒண்ணுமே சாப்பிடத் தோணல்லே, ஆன்ட்டி'' என்றாள் கல்பனா.

அன்று வனிதா, சரோஜினி இருவருமே பள்ளிக் கூடத்தில் பெற்றோர், ஆசிரியர் மீட்டிங் என்று காலையிலேயே கிளம்பிப் போயிருந்தார்கள். அவர்கள் திரும்பி வர மாலை ஆகிவிடும்.

''இன்னிக்கு வனிதா மேடம் இல்லைன்னு நீ சாப்பிட வராமயே இருந்துடுவியா. அதுக்குத்தான் நானே சாப்பாடு எடுத்துண்டு வந்திருக்கேன்'' என்றாள் பாரு.

''இல்லை ஆன்ட்டி, எனக்கு சாப்பாடு வேண்டாம் போல இருக்கு.''

''நல்லா இருக்கே நீ சொல்றது? பசி உனக்கில்லாவிட்டாலும் உன் வயத்திலே வளர்ற குழந்தைக்கு இருக்காதா? அதுக்காவது நீ சரியாச் சாப்பிடணும், பெண்ணே! இதோ பாரு கல்யாணி நான் சூடா ரசம் சாதம், மோர் சாதம், கீரை இவ்வளவுதான் கொண்டு வந்திருக்கேன். நீ சாப்பிட்டுத்தான் ஆகணும். நீ சாப்படு. நான் ஒரு கதை சொல்றேன்.''

''போங்க, ஆன்ட்டி'' என்று சிணுங்கினாள் கல்பனா.

''இல்லாவிட்டால், நான் ஊட்டி விடட்டுமா'' என்று பாரு கேட்டதும் கல்பனா சாப்பிட ஆரம்பித்தாள்.

''நீங்க சாப்பிட்டுட்டீகளா ஆன்ட்டி'' என்று கேட்டாள் கல்பனா.

''இல்லைம்மா, என்னிக்கு நீங்களெல்லாம் சாப்பிடாமே நான் சாப்பிட்டுருக்கேன்? நீ சாப்பிடு, அப்புறம் தான் நான் சாப்பிடணும்'' என்றாள் பாரு.

உடனே மளமளவென்று சாப்பிட்ட கல்பனா ''நான் சாயந்திரம் வந்து இதையெல்லாம் அலம்பிக் கொடுக்கிறேன், ஆன்ட்டி!'' என்று சொன்னவள் திரும்பப் படுக்கையில் சாய்ந்தாள்.



''இந்தா, கல்யாணி! இப்போ படுத்துக்காதே! கர்ப்பிணிப் பொண்ணு சாப்பாடு ஆனதும் ஒரு 10 நிமிஷம் மெதுவா நடந்துட்டுத்தான் படுக்கணும் தெரியுமில்லையா? வா, வா! வந்து எனக்குச் சாப்பாடு போடு வா'' என்றாள் பாரு.

''ஆன்ட்டி, எனக்கு ஒண்ணுமே பிடிக்கலே, ஆன்ட்டி!'' என்று கல்பனா சொல்லவும், பார்வதி கட்டிலின் பக்கத்தில் வந்து நின்று அவள் தலையைத் தடவிக் கொடுத்தாள். கல்பனா அவளை அப்படியே கட்டிக் கொண்டு தலையை பார்வதியின் வயிற்றில் சாய்த்துக் கொண்டாள். அவள் தலையை ஆதரவாகக் கோதி விட்ட பாரு, ''என்னம்மா, என்ன ஏக்கம் உனக்கு? உன் புருஷன் ஞாபகமா? இல்லை அப்பா, அம்மா நினைவா?'' என்று கேட்டாள்.

''புருஷன் ஞாபகம், அப்பா, அம்மா ஏக்கம் இல்லைன்னு நான் சொன்னா அது பொய். அப்பா, அம்மாவை இத்தனை நாளா ரொம்ப நினைக்கவேயில்லை. ஆனா இப்ப, இப்ப கொஞ்சம் தோணத்தான் செய்யறது'' என்றாள் கல்பனா.

''என்ன, இன்னிக்கு உனக்கு 7-ம் மாசம் பிறக்கிறது. அம்மா வீடு சரியா இருந்தா நமக்கு வளைகாப்பு, சீமந்தம் எல்லாம் நடத்த வேண்டிய மாசமாச்சேன்னு தோணறதாக்கும்'' என்றாள்.

''நீங்க என்ன மனோ தத்துவம் படிச்சவங்களா, ஆன்ட்டி?'' என்று கேட்டாள் கல்பனா.

''இந்த சின்ன விஷயத்துக்கு மனோ தத்துவம் படிச்சிருக்கணுமா, என்ன? எல்லாப் பெண்களுக்கும் வர ஏக்கம் தானேம்மா இது'' என்றாள் பாரு.

''என்னையே நான் எத்தனையோ சமாதானப் படுத்திக்கிறேன். இந்த வரைக்கும் இவ்வளவு நல்ல இடமும், மனிதர்களும் கிடைச்சுருக்கும்போது வேறே ஏக்கங்களுக்கெல்லாம் மனதில் இடமே கொடுக்கக் கூடாதுன்னு ஆனாலும்'' என்று இழுத்தாள் கல்பனா.

''போகட்டும், நடக்காததைப் பத்திப் பேசி லாபம் என்னம்மா? மனதை அலைபாய விடாம கவனமா இரு. சரோஜினி மேடத்திற்கு உன்னை அவ்வளவு பிடிச்சிருக்கு. அதை நினைச்சு சந்தோஷப்படு. சரி, நீ கொஞ்சம் ரெஸ்ட் எடு. நான் போய் சாப்பிடறேன் நீ கொஞ்சம் வெளியே போய் சுத்திவிட்டு வா'' என்றாள் பாரு. கல்பனா தடுத்தும், கேட்காமல், தானே பாத்திரங்களை எடுத்துக் கொண்டு, கிளம்பி விட்டாள்.




அன்று மாலை இல்லத்தின் ஒரு வீட்டில் இருந்த ஒரு பெண்ணை பார்வதி ரூமில் அட்ஜெஸ்ட் செய்து கொள்ளச் சொல்லி விட்டு அந்த வீட்டை நன்றாகச் சுத்தம் செய்ய வைத்தார்கள். சரோஜினியும் வனிதாவும், அதன் பிறகு பிரார்த்தனை மண்டபத்தில் எல்லோரையும் ஒன்றாகப் பார்த்தபோது சரோஜினி எல்லோரிடமும் விஷயத்தைச் சொன்னாள். ''இன்னிக்கு நம்ம இல்லத்துக்குப் புதுசா இரண்டு பேர் வரப் போறாங்க. யாருன்னு தெரியுமா? என்னுடைய மாமாவும், அவரின் மனைவியும்தான். இருவரும் ரொம்ப நல்லவங்க. மாமா என்னோட அம்மாவின் ஒண்ணுவிட்ட அண்ணாதான். ஆனால் எங்களோடெல்லாம் ரொம்ப



நெருக்கமாகவே இருப்பார். அவருடைய பிள்ளையை நன்னாப் படிக்க வைச்சாங்க. ஸ்கூல் ஃபர்ஸ்ட், காலேஜ் ஃபர்ஸ்ட்ன்னு படித்தவனை அமெரிக்காவில் நாஸாவில் வேலை கொடுத்து கூட்டிக் கொண்டு விட்டார்கள். மாமாவையும், மாமியையும் கூட்டிப் போக அவர்கள் பிள்ளையும், மருமகளும் தயார்தான். ஆனால் இவங்களுக்கு அமெரிக்க வாழ்க்கை, அந்தக் குளிர் எதுவும் ஒத்துக் கொள்ளல்லே. பிடிக்கவும் இல்லை. அதனால் நான் பாத்துக்கறேன்னு சொல்லிட்டேன். நம் இல்லத்திலும் இதுவரை பெரியவங்க யாரும் இருந்ததில்லை. ஆண்களும் இங்கே தங்கினதில்லை. ஆனாலும் என்னைச் சேர்ந்தவங்க துணையில்லாமே இருக்க வேண்டாமேன்னுதான் இங்கேயே வரச் சொல்லிட்டேன். இதனால இன்னுமொரு லாபம் என்னன்னா நம் இல்லத்திற்கு ஒரு பெரிய தொகையை நன்கொடையாகவும் கொடுக்கிறாங்க.

நாளைக்கு அந்த தம்பதிகள் இங்கே வராங்க. அதனால், ''பார்வதி, ஒரு பாயசம் வெச்சு நல்ல சமையலா பண்ணிடும்மா. ஏதாவது சாமான்கள் வேணும்னா வாங்கி வரச் சொல்லு. கொண்டு வந்துவிட அவங்க பிள்ளையும், மருமகளும் வறாங்க. அவங்களையும் சாப்பிடச் சொல்லணும். நாளைக்கு அந்த பெரியவங்க வந்ததும் அவங்க காலில் விழுந்து எல்லோரும் ஆசீர்வாதம் வாங்கிக்கோங்க. ஏன்னா அந்தப் பெரியவர் வயசு 85, அவர் மனைவியின் வயசு 79. எனக்கு அவங்க நம்மளோடவே இருக்கப் போறாங்கங்றது ரொம்பவே மகிழ்ச்சியாக இருக்கு'' என்று நீளமாகப் பேசி முடித்தாள். எல்லோரும் கைதட்டி தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

மறுநாள் காலையிலிருந்தே எல்லோருக்கும் ஒரு எதிர்பார்ப்பு. காலை 11 மணி அளவில் அந்தப் பெரிய கார் வந்து இல்லத்துக்குள் நுழைந்தது. காரின் அருகே போய் அவர்களை வரவேற்றாள் சரோஜினி. வனிதா கொடுத்த இரண்டு மாலைகளையும் அவர்களுக்கு அணிவித்து பின் அவர்களின் பிள்ளை, மருமகளுக்குப் பூச்செண்டுகள் கொடுத்து வரவேற்றனர். அந்த வயது முதிர்ந்த தம்பதிகளுக்குத்தான் என்ன ஒரு ராஜகளை, கம்பீரம்! கூடவே ஒரு கனிவையும் அவர்கள் பார்வையில் உணர முடிந்தது.

எல்லோருமாக பிரார்த்தனைக் கூடத்திற்குப் போய் அந்த மூதாட்டியை விளக்கேற்ற வைத்து ஸ்வாமியையும், பின் அந்தத் தம்பதிகளையும் வணங்கி எழுந்தனர். அதன் பின் அவர்களை அவர்களுக்காக தயார்ப் படுத்திய சிறிய வீட்டிற்கு அழைத்துச் சென்று அமர வைத்தனர். அவர்கள் இருவரையும் பார்த்தால் யாரும் அந்த வயசினைச் சொல்ல முடியாது 65ம், 55-ம் தான் என்றே சொல்லத் தோன்றும். சற்று நேரம் **சரோஜினி** அவர்களுடன் பேசிக் கொண்டிருந்த பின், அவர்கள் பிள்ளையும், மருமகளும் கொஞ்சம் பாயசம் மட்டும் சாப்பிட்டு விட்டு கிளம்பிவிட்டனர்... புறப்படும்போது எல்லோரும் சூழ்ந்திருக்கும்போதே தான் அந்தப் பெரியவரின் பிள்ளை ராஜன் சொன்னார்.

''சரோஜினி அக்கா, இப்போ நீங்க மட்டும் எங்க அப்பா, அம்மாவின் பொறுப்பை ஏத்துக்கலேன்னா நான் என்ன பண்ணியிருப்பேனோ தெரியாது. நான் இவங்களுக்காக என் அமெரிக்கா வேலையைக் கூட விடத் தயாராகத்தான் இருந்தேன், ஆனா அப்பாதான் ''நீ



கண்டிப்பா போயிட்டு வா. அங்கே நிறைய விஷயங்கள் கத்துக்கோ. ஆனா கண்டிப்பா இரண்டு, மூன்று வருஷங்கள் கழித்து இந்தியா வந்துடணும். இந்த அனுபவத்தை நம் தாய் நாட்டிற்குத்தான் அர்ப்பணிக்கணும். பொருளாதார ரீதியாக உனக்கு திருப்தி இல்லாட்டாலும் உன் சேவை நம் இந்திய நாட்டுக்குத்தான் பயன்படணும்'' என்றார். எனக்கு இவர்களைத் தனியே விட்டுவிட்டுப் போக கொஞ்சம் கூட இஷ்டமேயில்லை. ஆனால் இங்கு வந்து பாக்கறச்சே நீங்க என்னை விட இவங்களை நன்னா கவனிச்சுப்பீங்க என்ற நம்பிக்கை உண்டாகி விட்டது. அதற்கு எங்கள் மனமார்ந்த நன்றி அக்கா!'' என்று சொல்லி முடிக்கும்போது ராஜன் கண்ணில் நீர் நிறைந்துவிட்டது.

''நீ கவலைப்படாமல் போய்விட்டு வாப்பா! நாங்கள் எல்லாம் இருக்கோம்... நான் மட்டும் என்று இல்லை. இங்குள்ள எல்லாருமே மிகவும் பாசமாக இருப்பாங்க. அடிக்கடி போனில் பேசு. அதுவே அவர்களுக்கு மிகவும் தெம்பாக இருக்கும்'' என்றாள் சரோஜினி.

''அக்கா, எப்போ செலவுக்குப் பணம் வேணுமானாலும் கேளுங்க. தயக்கமே வேண்டாம்... அப்பா, அம்மா செலவு என்னைச் சேர்ந்தது. தவிர இல்லத்திற்கு வேணுமானாலும் எந்த சமயத்திலும் உதவத் தயாராயிருக்கேன்'' என்றார் ராஜன்.

ராஜனும், அவர் மனைவியும் அப்பா, அம்மாவையும், சரோஜினியையும் வணங்கினர். பின் திடீரென்று நினைத்துக் கொண்டவர், ''அடடா, மறந்தே போனேன். இங்கே இருப்பவர்களுக்கெல்லாம் இனிப்பு வாங்கிண்டு வந்தேன்'' என்றவர் தன் டிரைவரைக் கூப்பிட்டு அதை

எல்லாம் எடுத்து வரச் சொன்னார். நிறைய இனிப்புப் பண்டங்கள், நான்கு கூடை பழங்கள் எல்லாவற்றையும் கொண்டு வந்து வைத்தார் டிரைவர்.

அப்பாவையும், அம்மாவையும் கட்டித் தழுவி, முத்தங்கள் பரிமாறிக் கொண்ட பின் பிரிய மனமில்லாமல் இருவரும் கிளம்பி விட்டனர். பாட்டிதான் விம்மி விம்மி அழுதுவிட்டாள். சரோஜினி அவரை அணைத்து சமாதானப்படுத்தினார். கார் கிளம்பிச் சென்றதும், சரோஜினி பக்கத்திலிருந்த ஒரு பெண்ணைக் கூப்பிட்டு, ''ஐஸ்வர்யா, தாத்தாவையும், பாட்டியையும் அவங்க வீட்டுக்கு அழைத்துப் போம்மா'' என்றாள். அந்தப் பெண் அவர்களை அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். அந்தப் பெண் ரொம்பவே சமர்த்து. கேட்ட கேள்விக்கு அழகாக சுட்டியாக பதில் சொல்லும். இந்த நேரம் அவர்களுக்கு இது தேவை என்பதாலேயே சரோஜினி இந்தப் பெண்ணைத் தேர்ந்தெடுத்து அழைத்துப் போகச் சொன்னாள். கூடவே கல்பனாவையும் இன்னொரு பெண்ணையும் அனுப்பினாள். 'சாமான்களை அவர்கள் விருப்பப்பட்டால் பிரித்து அடுக்க உதவி செய்யுங்கள்' என்றாள்.

''அந்த வேலையை அப்புறம் பார்த்துக்கலாம்'' என்று பாட்டி சொல்லிவிட்டதால் அந்தப் பெண் உடனே திரும்பிவிட்டாள். கல்பனா பாட்டியுடன் பேசிக் கொண்டிருக்கிறாள் என்றும் சொன்னாள். அவளுக்குத் தன் பாட்டியைப் பார்த்ததுபோல் இருந்திருக்கும் என்று சரோஜினி நினைத்துக் கொண்டாள்.

தாத்தாவிடமும், பாட்டியிடமும் எல்லோருமே நன்றாக ஒட்டிக் கொண்டு விட்டார்கள். தாத்தா தனக்குத் தெரிந்த ராமாயண, மஹாபாரதக் கதைகளை மாலை வேளைகளில் எல்லோருக்கும் சொல்ல, பாட்டி ஸ்வெட்டர் பின்ன, மணிகளில், வயரில் கூடை பர்ஸ் பண்ணவெல்லாம் தெரியாதவர்களுக்குக் கற்றுக் கொடுத்தாள். கல்பனா கர்ப்பிணி என்பதால் அவளிடம் அவர்கள் சற்று கூடுதலாகவே அன்பைச் சொரிந்தார்கள். கல்பனா தன் ஓய்வு நேரத்தில் எல்லாம் அவர்களுடனேயே இருந்தாள். தாத்தாவும் அவளுக்கு +2வில் தெரியாத பாடங்களையெல்லாம் சொல்லிக் கொடுத்தார். மொத்தத்தில் பெயருக்காக 'நல் வரவு, நல் உறவு' என்றெல்லாம் இல்லாமல், நிஜமாகவே தாத்தா, பாட்டியின் வரவு நல்வரவாகவும் அவர்கள் உறவு நல்ல உறவாகவும், அமைந்து விட்டது.






இரண்டு நாட்களாகவே வனிதா அக்கா கடைக்குப் போய் வருகிறேன் என்று நகரத்திற்குப் போய் வந்து கொண்டிருந்தாள். ''என்ன அக்கா, நான் ஏதாவது செய்யணுமா?'' என்று கல்பனா கேட்டதற்கு, ''ஒண்ணுமில்லையம்மா, உனக்கு மாசம் ஆயிண்டு வருது, நீ ரொம்ப அலட்டிக்காதே'' என்று சொல்லி விட்டாள்.

அன்று வெள்ளிக் கிழமை. காலையிலேயே வாசலில் ஏதோ அரவம் கேட்க, தான்தான் ரொம்ப நேரம் தூங்கிவிட்டோமோ என்று எழுந்து விளக்கைப் போட்டு மணி பார்த்தாள் கல்பனா. 5 மணிதான் ஆகியிருந்தது. வாசலில் பெண்களின் பேச்சுக் குரல் கேட்க, வாசல்

கதவைத் திறந்தால் இரண்டு பெண்கள் வாசலில் பெரிதாக மாக்கோலம் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

''குட்மார்னிங், கல்யாணி அக்கா'' என்றனர் இருவரும். அவளைப் பார்த்ததும்.

''குட்மார்னிங், வாணி, பாமா! என்ன விசேஷம் இங்கே, இத்தனை சீக்கிரம் இவ்வளவு பெரிய கோலம்'' என்று கேட்டாள் கல்பனா.

''தெரியலே, அக்கா! மேடம்தான் போடச் சொன்னாங்க'' என்றார்கள் இருவரும் ஒரே குரலில்.

சரியென்று உள்ளே போன கல்பனா வனிதாவைப் பார்த்தால் அவள் படுக்கையில் இல்லை. கிச்சனில் விளக்கெரிந்தது. காபி போட்டுக் கொண்டிருந்த வனிதாவை ''என்னக்கா நீங்க! என்னை எழுப்பியிருக்கக் கூடாதா? நான் போட்டிருப்பேனே காபி!'' என்றாள்.

''அதனால் என்ன, பரவாயில்லைம்மா. நீ போய் பல் தேய்த்து முகம் கழுவிக் கொண்டு வா காபி சாப்பிடலாம்'' என்றாள் வனிதா. அடுத்து டேப்ரிக்கார்டரில் நாதஸ்வர இசையை பரவ விட்டாள். கல்யாணி காபி சாப்பிட்டுவிட்டு வந்ததும் வாணி, பாமா இருவரும் வந்து, ''கல்யாணியக்கா, வந்து இங்கே உட்காருங்க. உங்க காலுக்கு நலங்கு இட வேண்டும்'' என்றார்கள். ''என்னம்மா இதெல்லாம்'' என்று இவள் கேட்க, ''அதெல்லாம் அப்புறமாகச் சொல்கிறோம், இப்போ நீ கோலம் போட்ட பலகையில் உட்காரு'' என்றாள் வனிதா.

''அக்கா, என்னக்கா இதெல்லாம்? நீங்க சொன்னாத்தான் நான் உட்காருவேன்'' என்றாள் கல்பனா.

அதற்குள் ஜெமினிப் பாட்டி என்னும் ஜானுப் பாட்டி அங்கே வந்துவிட்டாள். ''ஏம்மா வனிதா! நான்தான்



நலங்கு வைத்து எண்ணெய் வைத்துவிட வரேன்னு சொல்லியிருந்தேனே, என்னைக் கூப்பிடக் கூடாதாம்மா?''

''நலங்கு வைக்கட்டும், அதற்குள் உங்களைக் கூப்பிடலாம்னு நினைச்சேன் பாட்டி'' என்றாள் வனிதா.

''உட்காரும்மா, கல்யாணி! இன்னிக்கு உனக்கு பூச்சூட்டி, வளைகாப்பும் பண்ணப் போறோம்'' என்றாள் வனிதா.

''எதுக்குக்கா உங்களுக்கு இந்த சிரமமெல்லாம்'' என்று முகத்தில் செம்மை படர கேட்டுக் கொண்டே பலகையில் உட்கார்ந்தாள் கல்பனா.

ஜெமினிப்பாட்டி அவளுக்கு பாட்டுப் பாடி, நலங்கு வைத்து எண்ணெய்யும் தலைக்கு வைக்க மங்கள ஸ்நானம் ஆயிற்று. ஒரு ஆயா தணல் கொண்டு வர, சாம்பிராணி போட்டு தலைமுடியை உலர்த்தி விட்டனர் வாணியும், பாமாவும்.

வெளியே வந்த கல்பனாவிடம் ஒரு புதுப் புடவையும், ரெடிமேட் பிளவுஸும் கொடுத்துப் போட்டுக் கொள்ளச் சொன்னாள், சரியாக அந்த நேரம் அங்கு வந்து விட்ட சரோஜினி.

''எதுக்கம்மா எனக்கு இதெல்லாம் வேறே செஞ்சி கஷ்டப்படறீங்க?'' என்று நிஜமான சங்கடத்தோடு கேட்டாள் கல்பனா.

''என்ன நீ? ஒரு கர்ப்பிணிப் பெண்ணுக்கு வளைகாப்பு, பூச்சூட்டல் நடத்தி சந்தோஷப்படுவது ஒரு கஷ்டமா? சின்னப் பொண்ணா லட்சணமா நாங்க சொல்றதைக் கேளு'' என்றாள் சரோஜினி.

''போம்மா, புடவையைக் கட்டிக் கொண்டு வா!'' என்றாள் ஜெமினிப் பாட்டி.

போய் புடவையைக் கட்டிக் கொண்டு வந்த கல்பனாவுக்கு வனிதா கொடுத்த சுட்டி, மற்றும் அவள் வெளியே போகும்போது எப்போவாவது போட்டுக் கொள்ளும் தங்கம் போல் ஜொலிக்கும் சாதா நகைகள் சிலவற்றைப் போட்டுவிட்டார்கள். தலையைத் தளரப் பின்னி குஞ்சலம் வைத்து, மல்லிகைப் பூவையும் வைத்து விட்டார்கள். முகத்தில் லேசாக பவுடர் போட்டு, மை தீட்டி, அழகான பெரிய திலகம் வைத்துக் கொண்டு வெளியே வந்த கல்பனாவைப் பார்த்தால் ஏதோ வானத்திலிருந்து ஒரு தேவதையே வந்து இறங்கிவிட்டது போலிருந்தது. ஆம், அந்த ஆகாசக் கலர் புடவை அவளுக்கு அத்தனை அழகாக இருந்தது. அவளைப் பார்த்ததுமே பாட்டி மை கொண்டு வரச் சொல்லி கன்னத்தில் ஒரு பொட்டு வைத்து விட்டாள்.

கல்பனாவை மணையில் உட்கார வைத்து பூச்சூட்டலை ஆரம்பித்தார்கள். அதற்குள் அங்கு மணைக்கு முன் வெற்றிலை, பாக்கு, பழம், மாலை, பூ என்று எல்லா வஸ்துக்களும் எடுத்து வைக்கப் பட்டு விளக்கும் ஏற்றி வைத்திருந்தார்கள்.

மணையில் அமர்ந்த கல்பனாவுக்கு பாட்டி சந்தனம், குங்குமம் இட்டு, மாலையைப் போட்டு, தலையில் ஒரு துண்டு பூ வைத்தாள். அடுத்தது வேறு யார் வைக்கலாம் என்று சரோஜினி கேட்க ''எல்லோருமே வைக்கலாம், இதில் பேதமென்ன?'' என்றாள் பாட்டி.

''நான் வைக்கலாமா?'' என்று சற்று சந்தேகமாக சரோஜினி கேட்க, ''என்ன சந்தேகம் உனக்கு? உன்னை



விட அவளுடைய நன்மையை நினைக்கிறவர்கள் யார்? நன்னா வை'' என்றாள் பாட்டி.

சரோஜினி, பார்வதி, வனிதா இன்னும் மூன்று பேரும் செய்ய 7 பேர் ஆகியது. இப்போது நிறைய கண்ணாடி வளையல்களை வனிதா கொண்டு வைத்தாள். வரிசையாக எல்லோரும் கல்பனாவுக்கு வளையல் அணிவித்தனர். அதற்கப்புறம் ஜெமினிப் பாட்டியிலிருந்து ஐஸ்வர்யா வரைக்கும் எல்லோரும் வளை அடுக்கிக் கொண்டார்கள்.

தெரிந்தவர்கள் இரண்டு பாட்டுப் பாடினார்கள். பாட்டி ஒரு அழகான முத்து மாலையை ஒரு மிக அழகான பர்ஸிலிருந்து எடுத்து கல்பனாவுக்குப் போட்டுவிட்டு பர்ஸை கல்பனாவின் அருகில் வைத்தாள். அதைக் கையிலெடுத்துப் பார்த்த கல்பனாவுக்குக் கண்கள் கலங்கிவிட்டன. ஆம், அந்தப் பையில் ஹைதராபாதின் மிகப் பெரிய முத்துக் கடையின் பெயர் இருந்தது. சரோஜினியை அவள் தற்செயலாகப் பார்க்க, 'உன்னை அடக்கிக்கோ' என்கிற மாதிரி உதட்டின் மேல் கை வைத்து கண்களை விழித்து எச்சரித்தாள் சரோஜினி. அதை உடனே புரிந்து கொண்ட கல்பனா தன்னை சிரமப்பட்டு கட்டுப்படுத்திக் கொண்டாள். ஆரத்தி எடுத்தானபின் கல்பனா எழுந்து ஜெமினிப் பாட்டி, சரோஜினி, பார்வதி, வனிதா உட்பட அத்தனை பெரியவர்கள் கால்களையும் தொட்டு வணங்கி ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டாள். அதன் பிறகு வனிதா எல்லோருக்கும் ஸ்வீட் கொண்டு வந்து கொடுக்க, எல்லோரும் டிபன் சாப்பிடப் போனார்கள். அன்று பகல் உணவும் மிக விசேஷமாகச் செய்திருந்தார்கள்.

''பாட்டி நல்ல சமயத்துக்கு இங்கு வந்து சேர்ந்தார், இல்லையா?'' என்றாள் வனிதா. அதற்குள் கல்பனா அந்தப் பர்ஸை எடுத்துப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்ட சரோஜினி, ''ரொம்ப ஸாரி, கல்யாணி! உன் விஷயத்தை ஒரு மாதிரி மாமிக்குச் சொன்னேனே தவிர, நீ ஹைதராபாதிலிருந்து வந்தாய் என்று சொல்லவில்லை. அதனால்தான் பாட்டி இந்த பர்ஸைக் கொடுத்திருக்கிறாள். நானும் பார்க்கவில்லை. பாவம். நீ கண்கலங்கிட்டே. மறந்துடும்மா. கூடுமானவரை பழையதை எல்லாம் நினைக்காதே. எனக்குத் தெரியும். சொல்ற அளவு இதைச் செய்யறது சுலபமில்லை. வா! புடவை மாத்திக்கோ. டிபன் சாப்பிடப் போகலாம்'' என்றாள்.

வாயைத் திறக்காமல் புடவையை மாற்றிக் கொண்டு டிபன் சாப்பிடப் போனாள் கல்பனா. அவளுக்கு ஒன்றுமே வேண்டியிருக்கவில்லை. ஆனால் மற்றவர்கள் வருத்தப்படுவார்களே என்றும், இனிமேல் தான் சாப்பிடுவது தனக்காக மட்டுமேயல்ல என்ற அறிவும் தூண்ட ஏதோ கொஞ்சம் கஷ்டப்பட்டு சாப்பிட்டு வைத்தாள்.

''போம்மா, போய் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துக்கோ'' என்றாள் வனிதா.

போய்க் கட்டிலில் படுத்தாள் கல்பனா. கண்ணை மூடியவளுக்குள் பழைய நினைவுகள் அழைக்காமலே வந்து அலை மோதின. கண்களின் ஓரங்களில் நீர் கசிய அவள் படுத்துக் கிடந்த கோலம் ஒரு அழகான அப்ஸரஸுடைய ஓவியம் புகை படிந்து, பாழடைந்து கிடந்தது போல் இருந்தது.



அந்த முத்துச்சரம் அவளுக்குள் எழுப்பிய கொந்தளிப்பிற்கு எல்லையே இல்லை.... அவளுடைய போன பிறந்த நாளன்று ரவி ஆபீஸுக்கு லீவு போட்டிருந்தான். காலையில் சிக்கட்பல்லி கோவிலுக்கு போய் வந்த பிறகு இவளை சார்மினாரில் பிரபலமான ஒரு முத்துக் கடைக்கு அழைத்துப் போனான்.

''கல்பனா, நல்லதாக ஒரு முத்து செட் செலக்ட் செய்துகொள்'' என்றான். பின் அவனே சோக்கர் என்று சொல்லவும், மாடிக்குப் போகச் சொன்னார்கள். (சோக்கர் என்றால் கழுத்தை ஒட்டிப் போட்டுக் கொள்வது) மாடியில் கடை பையன் என்ன விலையில் வேண்டும் என்று தெலுங்கில் கேட்கவும், ரவி சொன்ன விலையைக் கேட்டு அதிர்ந்து போனாள் கல்பனா. இங்குதான் ரூபாய் 2-50லிருந்து ரூபாய் 25,000/- வரைக்கும் என்ன விலையில் வேணுமானாலும் முத்துக்கள் கிடைக்குமே! அவசரம் அவசரமாக ''ஏங்க, எதுக்கு இத்தனை விலையில் முத்து எடுத்துப் போடச் சொல்றீங்க?'' என்று கேட்டாள்.

''இதோ பார்! 100, 200 விலையில் கிடைக்கும் முத்துக்களைப் போடும் கழுத்தா இது? நான் சொல்லும் விலையில் வாங்கிப் போட்டால் உன் கழுத்து எப்படி ஜொலிக்கும், தெரியுமா? ஆனால் உனக்கு வைரத்தில் மாலை செய்து போட வேண்டுமென்பதுதான் என் ஆசை. என்ன செய்வது? தற்போது இல்லாவிட்டாலும் என் ஆசை நிறைவேறும் நாள் கட்டாயம் வரும். கிடைக்கும் என்பதற்காக என் செல்லப் பெண்டாட்டிக்கு எந்த முத்து வேணுமானாலும் கொடுப்பதா'' என்று குறும்புடன் கேட்டான் ரவி. அவன் குறும்புச் சிரிப்பை பார்த்த

பிறகு தான் அவன் என்ன அர்த்தத்தில் சொல்கிறான் என்பது புரிந்து முகம் சிவந்து போனாள்.

''போங்க ரவி! உங்களுக்குக் கொஞ்சம் கூட வெட்கம் கிடையாது.''

''ஆங், என் பெண்டாட்டிக்கு நான் முத்து கொடுப்பதில் எனக்கேன் வெட்கம்?'' என்றான்.

இவள் அவன் கையைக் கிள்ளி கடைப் பையன் இருப்பதை ஜாடை காண்பித்தாள்.

''கவலைப்படாதே! இங்கேயெல்லாம் யாருக்கும் தமிழ் தெரியாது'' என்றான்.

''அது சரி! நான் இப்போ உங்களை முத்து வேணும்னு கேட்டேனா?'' என்றாள் கல்பனா பொய்க் கோபத்துடன்.

''முத்து வேணும்போதெல்லாம் பெண்டாட்டி கேட்கும் வரை வெச்சுப்பானா என்ன, புருஷன்? சரி, சரி, உனக்கு எந்த மாதிரி முத்து வேணும்னு சொல்லு! எனக்கு பரபரவென்று இருக்கிறது.''

அதற்குள் கடைப்பையன் தெலுங்கில், ''நீங்க கேக்கற விலையிலே புது டிசைனில் மாலைகள் கீழே வந்திருக்கு, சார்! நான் போய் கொண்டு வரேன்'' என்று கீழே போனான்.

''இங்கே கிட்டே வா! சட்டுனு ஒரு நிஜ முத்தம் தரேன்'' என்றான் ரவி.

''*சீச்சீ*! வந்த இடத்தில் இப்படியா நடந்துப்பாங்க?'' என்று கல்பனா சொல்ல, ''ஏய், இந்த திருட்டு முத்தத்தில் உள்ள திரில் தெரியல்லையா உனக்கு?'' என்று சொல்லி அவள் கன்னத்தை ஒரு தட்டு தட்டினான் ரவி. அதற்குள் கீழே போயிருந்த கடை பையன் வந்துவிட்டான். இவர்களுக்கு வேண்டிய மாலை உடனேயே



கிடைத்துவிட்டது. வாங்கியதும் அந்த கடைப் பையன் சிரிக்காமல் ''சார், பில்லுக்குப் பணம் கீழே தான் கொடுக்கணும். வாங்க சார்!'' என்றான் தமிழில்.

தூக்கிவாரிப் போட்டது இருவருக்கும்... கல்பனா மளமளவென்று கீழே இறங்கிவிட்டாள். ரவி அந்தப் பையனிடம் ''ஏம்பா, நீ தமிழ் பையன்னு சொல்லவேயில்லையே'' என்றான்.

''நீங்க கேட்கவேயில்லையே, சார்!'' என்றான் அவன் சிரிக்காமல். ரவி சிரித்துக் கொண்டே கீழே இறங்கி வந்தான்.

வண்டியில் போகும்போது கல்பனா, ''ரவி, வழுக்கி விடப் போகிறது வண்டி. ஜாக்கிரதை!'' என்றாள்.

''நல்ல வெய்யில் அடிக்குது. ரோட்லே என்ன தண்ணியா தேங்கி நிக்குது வழுக்கி விட?'' என்று கேட்டான் ரவி.

''வழிகிறதே அசடு, அதில்தான் வழுக்கப் போகிறதுன்னு சொன்னேன்'' என்று சொன்னாள் கல்பனா.

''வீட்டுக்கு வா, உன்னை கவனிச்சுக்கறேன்'' என்ற ரவி வண்டியை விரட்டினான்.

'அத்தனை ஆசையாக இருந்த அவன் எதற்காக தன்னை அப்படி விட்டுவிட்டுப் போனான்? என்ன கஷ்டம் வந்தால்தான் என்ன? நான் கூட துணையாகத் தானே இருந்திருப்பேன்? என்னை விட்டுவிட்டுப் போக எப்படி மனது வந்தது?' என்று எண்ணமிட்டபடியே கண்ணயர்ந்துவிட்டாள். வயிற்றுக்குள் குழந்தை வளைய வரும்போதெல்லாம், 'நாளைக்கு இந்தக் குழந்தை வந்து என்னைக் கேட்குமே, என் அப்பா எங்கே என்று? என்ன பதில் சொல்வேன்?' என்றெல்லாம் தோன்றும்.

சாயந்திரம் புதுப் புடவையை தேய்த்து மடிக்க ஆரம்பித்தாள். 'இவர்களுக்கெல்லாம்தான் என் மேல் எத்தனை அன்பு? என்றைக்கு, என்ன செய்து இந்த நன்றிக் கடனைத் தீர்க்கப் போகிறேன்?' என்று நினைத்து, நினைத்து நெகிழ்ந்து போனாள்.

மேசையின் மேல் அந்த முத்தாரத்தை வைத்திருந்த பர்ஸ் இருந்தது. அந்த மாலையைக் கழற்றி அதில் வைக்கட்டும் என்று வனிதா தான் வைத்திருக்க வேண்டும். அதை எடுத்து அதனுள் மாலையை வைக்கும் போது கடையின் பெயரோடு சார்மினார் என்ற எழுத்து இருந்ததையும் கவனித்தாள். அது அவளை பழைய ஞாபகத்துக்கு திரும்ப இழுத்துச் சென்றுவிட்டது அவளைத் சித்திரவதை செய்ய.

அன்று அந்த முத்துமாலையை வாங்கிய பின் சார்மினார் மேல் ஏறினார்கள். படிகளில் அவனை உரசி, உரசி ஏறும்போது த்ரிலிங்காகத்தான் இருந்தது. இத்தனைக்கும் வீட்டில் சுதந்திரமாக, இனிமையான வாழ்க்கை நடத்துபவர்கள் தானே!

அவன் எப்போதும் சொல்வான் ''என் பெண்டாட்டி தான் உலகத்தில் பேரழகி, அவள் என் சொந்தம்' என்று கத்திக் கத்திச் சொல்ல வேண்டும் என்ற உணர்ச்சி உன்னுடன் நடக்கும்போதெல்லாம் தோன்றுகிறது' என்று.

அவன் எப்போது இதைச் சொன்னாலும் இவள் உடனே அதற்குத் தப்பாமல் சொல்லும் பதில் இது. 'நீங்க மட்டும் அழகில் குறைச்சலாக்கும்! கண் நிறைஞ்ச கணவனோடு, மனசும் நிறைஞ்சு வாழற எங்கிட்டே நீங்க ஒண்ணும் பொண்டாட்டி பெருமை பேச வேண்டாம். என் புருஷன் இன்னும் உசத்தியாக்கும்' என்று.



அன்றைக்கு சார்மினார் உச்சிக்குப் போனதும் ''இங்கிருந்து பார்த்தால் உன் கணவனின் ஊர் எத்தனை அழகு என்று தெரிகிறதாடா செல்லம்?'' என்றான்.

''ஹூம்...! அழகாகத்தான் இருக்கு என் புகுந்த ஊர், ஆனா...'' என்று வேண்டுமென்றே இழுத்தாள்.

''என்னடி இழுக்கறே'' என்றான் ரவி விஷமம் சொட்ட.

''ஆங், என்னை டி போட்டு பேசறியா?'' என்றாள் கல்பனா.

''அப்படித்தான் டி போட்டு பேசுவேன். நம்ம பெரியவங்க எல்லாம் மனைவியை அப்படித்தான் கூப்பிட்டாங்க.''

''அப்போ நானும் உன்னை டா போட்டு பேசுவேன்'' என்றாள் இவள்.

''பேசுடி, என் செல்லக் கிளியே!''

''என்னை டி போட்டதுக்கு இப்போ ஸாரி சொல்லணும் அப்பதான் நான் உன்கூட பேசுவேன்.''

''நீ பேச்சை மாத்தாதே! உன் பிறந்த ஊர் அழகா, இல்லே, புகுந்த ஊர் அழகா? சொல்லிவிட்டு வேறே பேசு'' என்றான்.

''இந்த ஊர் பரவாயில்லை. ஆனா, எங்க ஊர் அழகு இதற்கு வராது.''

''பொய் பேசாதே! என்னோடு இருக்கும்போது இந்த ஊர் ரொம்பவே அழகாகத் தெரியல்லே உனக்கு?'' என்று கேட்டு அவள் கன்னத்தைக் கிள்ளினான்.

''ஆ, வலிக்கிறதுடா'' என்றாள் கல்பனா. அங்கிருந்த சிலர் இதைப் பார்த்துவிட்டு சிரித்துக் கொண்டே

போய்விட்டார்கள். இவர்களும் வேறு பக்கம் திரும்பி எதையோ பார்க்க ஆரம்பித்தார்கள் அசடு வழிய... ஆனாலும் விடவில்லை ரவி.

''இந்த நிமிஷம் எனக்கு என்ன தோன்றுகிறது. தெரியுமா? என் பொண்டாட்டியை அப்படியே கைகளில் தூக்கிக் கொண்டு இங்கிருந்து ஒரு ரவுண்டு ஆகாசத்தில் பறந்து சுற்றி வர வேண்டும் போல் இருக்கிறது'' என்று சொல்லி அவள் இடையை அணைத்துக் கொண்டான்.

''ப்ளீஸ் ரவி! போதும். நம்மளை துரத்திவிடப் போறாங்க'' என்றாள் கல்பனா.

கூடுமான வரை அவனையும், பழைய வாழ்க்கையையும் நினைக்கக் கூடாது என்று நினைக்க, நினைக்க, அந்த நினைவுகளே அவள் மனதில் விஸ்வரூபம் எடுக்க இவளுக்கு மிகவும் ஆயாசமாக இருந்தது.

எத்தனை முறை சண்டை போட்டிருப்பார்கள்? எத்தனை முறை அவன் ஸாரி சொல்லியிருப்பான்? கன்னத்தில் போட்டுக் கொண்டிருப்பான்? அந்த அன்புக் கணவனா இப்படி? 'என் ரவி, எங்கே போயிட்டே? ஏன் போனே? என் வாழ்க்கையில் உன்னை திரும்பவும் பார்ப்பேனா? அல்லது ஏங்கி, ஏங்கியே என் வாழ்நாள் முடிந்து விடுமா? நம்மையே நம்பி வந்த பெண்ணாயிற்றே என்று ஒரு தரம் கூடவா உங்களுக்குத் தோன்றவில்லை?'

சுய பச்சாதாபத்தில் கண்களில் நீர் வழிய அவள் நடக்க ஆரம்பித்தாள். தன்னை அறியாமலேயே அவள் நடந்தது ஜானுப் பாட்டியின் வீட்டிற்குத்தான்.

பாவம், அவளுக்கு என்ன தெரியும்? கெட்ட பழக்கத்தில் மாட்டிக் கொண்டதுதான் ரவி செய்த இமாலயத்



தவறு. பிறகு நடந்தவையெல்லாம் அவன் கை மீறிய செயல்களாகிவிட்டன. அதிலும் ஊரைவிட்டுப் போனதென்பது அவன் சூழ்நிலைக் கைதியாகி செய்ததுதான்.

ஆமாம்! சீட்டாட்ட சகாக்களிடம் தோற்றுத் தோற்று கடன் லட்சங்களைத் தாண்டியபோது அவன் ரொம்பவே மன அழுத்தத்திற்கு ஆளாகி விட்டான். ஒரு கட்டத்தில் அந்த சகாக்களின் தலைவன், ''இதோ பார், ரவி! நீ என்ன பண்ணுவியோ, ஏது பண்ணுவியோ, உனக்கு இரண்டு நாள் டைம் தரேன். அதுக்குள்ளே பணத்தைக் கொண்டு வந்து கொடுத்துட்டியானா சரி, இல்லேன்னு வெச்சுக்கோ, உன் பொண்டாட்டியை நாங்க தூக்கிட்டு வந்துடுவோம். ஏய், நரசிம்மா! இவன் பொண்டாட்டி ரொம்பவே அழகின்னு சொன்னேயில்லே? எனக்கு பார்க்கணும்டா, அவசியம் பார்க்கணும்''னு அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ரவி ஏதோ மனதினில் தீர்மானத்திற்கு வந்தவனாய், ''இதோ பார் ரஹ்மான்! இதுக்கு மேலே எதுவும் பேசாதே. உனக்கு வேண்டியது பணம்தானே. எப்படியாவது கொண்டு வந்து தந்து விடுகிறேன். என் மனைவியைப் பற்றிப் பேசாதே'' என்றான்.

''சாருக்குப் பெண்டாட்டியைப் பத்தி பேச்செடுத்தா எத்தனை சுர்னு கோபம் வருது. பாத்தீங்களாடா?'' என்று பெரிதாகச் சிரித்தவன், ''டேய் ரவி! உனக்கும் வேறு நாதி கிடையாது. உன் பொண்டாட்டிக்கும் வேறு யாரும் கிடையாதுன்னு எனக்குத் தெரியும். இரண்டு நாள் தான் கெடு. கவனம் வெச்சுக்கோ'' என்றான் விரலை ஆட்டியபடி.

இந்த அச்சுறுத்தல்தான் அவனை ஆபீஸ் பணத்தை கையாடும் அளவுக்குப் போக வைத்தது. பணத்தை

இவன் கொண்டு வந்து கொடுத்ததுமே அவர்கள் ஊகித்து விட்டனர். இது ஆபீஸ் பணமாகத்தான் இருக்கும் என்று. நான்கே கேள்விகளில் ரவி ஒத்துக் கொண்டு விட்டான்.

''சரி, சரி! உன் பொண்டாட்டியை நாங்கள் தொடப் போறதில்லை. ஆனா உங்க ஆபீஸ் கம்ப்ளைண்ட் கொடுக்கும். நீ இந்தப் பணத்தை உன் பொண்டாட்டிக்காக செலவழித்து விட்டாய்னுதான் போலீஸ் நினைக்கும். அதனாலே உன் பொண்டாட்டியும் போலீசிலே மாட்டிக்குவா. அவங்க அவளை நல்லாவே பாத்துப்பாங்க போ, போ!'' என்றான் ரஹ்மான்.

ரவிக்கு அடி வயிற்றில் பகீரென்றது. இத்தனை பெரிய தொகையை புரட்டுவதென்பது நடக்காத காரியம். தான் அங்கிருந்து போய்விட்டால் நிச்சயமாக உமா, சேகர் உதவியோடு கல்பனா தன் அம்மா வீட்டிற்கே போய் விடுவாள். தன்னை நெருங்கும் ஆபத்திலிருந்து தப்பித்து விடுவாள் என்று யோசித்துத்தான் மனதைக் கல்லாக்கிக் கொண்டு எங்கேயோ போய் விட்டான் என்பதுதான் உண்மையில் நடந்த கதை. தான் அவளைத் தொடர்பு கொண்டால் கூட அது அவளுக்கு ஆபத்தை விளைவிப்பதாகும் என்று நினைத்துத்தான் அவளை தொடர்பு கொள்ளவும் இல்லை.

போகட்டும், அவள் அம்மா வீட்டிற்குப் போகட்டும். என்ன, சற்று கடுமையாகத் திட்டுவார்கள். ஆனால் சேர்த்துக் கொண்டு விடுவார்கள். மேலும் அவள் வயிற்றில் கரு இன்னும் அதிகம் வளரவில்லை. அதனால் அதைக் கலைத்துவிட்டு வேறு கல்யாணம் செய்து கொண்டு அவளாவது நிம்மதியாக இருக்கட்டும் என்று



நினைத்தான். ஆனால் அவள் அம்மா வீட்டு மனிதர்கள் நாட்டை விட்டே போய்விட்டது அவனுக்கு எப்படி தெரியும்?




ஜெமினிப் பாட்டியோடு கல்பனாவிற்கு நன்றாகவே ஒத்துப் போனது. கல்யாணி தனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் பாட்டியின் வீட்டிற்குப் போய்விடுவாள். பாட்டி சில நாட்கள் கல்யாணிக்குத் தலை பின்னி விடுவாள். பாடச் சொல்லிக் கேட்பாள். இவளும் தாத்தாவிற்கு ஏதாவது புத்தகங்கள் படித்துக் காண்பிப்பாள். அவரும் சில வேளைகளில் +2 பாடங்களில் இவளுக்கிருக்கும் சந்தேகங்களைப் போக்குவார். ''நீ படித்துக் கொண்டே இரம்மா. பிறக்கும் குழந்தை உடனே ஸ்கூலுக்குப் போகத் தயாராக இருக்கும்'' என்பார். ''என்ன ஜெமினி சொல்றே!'' என்பார்.

''உஷ், சும்மா இருங்க'' என்று அதட்டினாள் பாட்டி ஒரு நாள்.

''அதென்ன பாட்டி மாமா உங்களை ஜெமினின்னு கூப்பிடறார்? உங்க பேரு ஜமுனா தானே'' என்று கேட்டாள் கல்பனா.

''ஆமாம்மா, என் பெயர் ஜமுனாதான். அவருக்கு ரொம்பவும் பிடித்து பார்த்த சினிமா, ஜெமினியின் சந்திரலேகா. அதில் வரும் டி.ஆர். ராஜகுமாரி மாதிரி நான் இருக்கேன்னு தமாஷ் பண்ணுவார். அதனால் என் பெயரைச் சுருக்கி ஜானுன்னு கூப்பிட்டுண்டு இருந்

தவர் ஜெமினின்னு கூப்பிட ஆரம்பிச்சுட்டார்'' என்றாள் வெட்கத்துடன்.

''உண்மைதான் தாத்தா! பாட்டியைப் பார்த்தால் அசப்பில் அப்படித்தான் தெரிகிறது'' என்றாள் சிரித்துக் கொண்டே.

இவள் அங்கு போகும் போதெல்லாம் ''என்ன சொல்றான் உன் பிள்ளை?'' என்று கேட்டுக் கொண்டே இவளை வரவேற்பாள் பாட்டி... இவளுக்கு அதுவே பெரிய சந்தோஷமாக இருக்கும். அவ்வப்போது ''என் கண்ணே பட்டுடும் போல அழகு சொட்ட இருக்கேடி பொண்ணே!'' என்று திருஷ்டி சுற்றிப் போடுவாள்.

ஒவ்வொருவரும் தங்கள் சொந்தப் பெண்ணைப் போல இவளைப் பார்த்துக் கொள்ள டாக்டர் சொன்ன தேதி நெருங்கலாயிற்று. கல்பனாவிற்கு ரொம்பவே பயமாக இருந்தது. பாட்டியின் மடியில் தலையை புதைத்துக் கொண்டு ''பாட்டி, எனக்கு ரொம்ப பயமாக இருக்கு, பாட்டி'' என்றாள்.

''என்னடா கண்ணு பயம்? உலகத்திலே இருக்கிற கோடானு கோடி பேரும் இப்படிப் பிறந்தவர்கள் தானேம்மா! பயம் என்பதே கூடாது. கடவுளை வேண்டிக்கோ. எல்லாம் நல்லபடியா நடக்கும்'' என்று பாட்டி தைரியம் சொன்னாள். பாட்டி சொன்னபடி எப்போதும் ஸ்லோகங்கள் சொன்னபடி அம்பிகையை வேண்டிக் கொண்டே நேரம் கழித்தாள் கல்பனா. டாக்டர் சொன்ன படி கூடுமானவரை மன உளைச்சல் தரும் எந்த யோசனைகளையும் அண்டவிடாமல் பார்த்துக் கொண்டாள்.

டாக்டர் சொன்ன நாள் ஆகிவிட்டது. அவரிடம் கேட்டதில் ''கவலைப் பட வேண்டாம், சரோஜினி. ஒரு



இரண்டு நாள் முன்னாடி, பின்னாடி ஆகும். நாளைக்கு இங்கே கொண்டு வந்து சேர்த்துடுங்க. போன வாரம் கூட பார்த்திருக்கேனே! எல்லாம் நார்மலாக இருக்கு'' என்றாள். பாட்டியும் இதைத்தான் சொல்லிக் கொண்டே இருந்தாள். பாட்டி கூட இருந்தது ரொம்ப நிம்மதியாக இருந்தது சரோஜினிக்கு.... இதற்கு முன்பேயும் இந்த இல்லத்தில் எத்தனையோ குழந்தைகள் பிறந்திருக்கின்றன. ஆனால் மற்றவற்றைப் போல் இந்தப் பிரசவத்தை நார்மலாக சரோஜினியால் எடுத்துக் கொள்ள முடியவில்லை. கல்பனா மீது தனியாகப் பாசம் கொண்டவளாயிற்றே! ரொம்பவே கவலைப்பட்டாள்.

மறுநாள் ஆஸ்பத்திரிக்கு பாட்டி, சரோஜினி இருவரும் கூட வர கல்பனா புறப்பட்டாள். புறப்படும் முன் பாட்டி, தாத்தா கல்பனாவை ஆசீர்வதித்து, விபூதி, குங்குமம் இட்டு, வேப்பிலையை தலையில் வைத்து அவளைப் புறப்படச் செய்தார்கள். நெகிழ்ந்து போய்விட்டாள் கல்பனா. ''உணர்ச்சி வசப் படக்கூடாது, தைரியமாக இருக்க வேண்டும்'' என்று சொன்னாள் வனிதா.

ஆஸ்பத்திரிக்குப் போய் மூன்று மணி நேரத்தில் வலி எடுத்து, அதிகம் அவஸ்தை கொடுக்காமல் பிறந்துவிட்டாள் கல்பனாவின் பெண். பெண்ணா என்று கேட்ட கல்பனாவைக் கடிந்து கொண்டாள் சரோஜினி ''என்ன கேள்வி இது சுரத்தில்லாமே? பெண்கள் தான் பிரியம் செலுத்துபவர்கள். பெண்கள் தான் விவேகிகள். நல்ல படியா, ஆரோக்கியமா, உன்னை மாதிரியே ரொம்ப அழகாப் பொறந்திருக்கு! சந்தோஷப்படுவியா, என்னவோ பெண்ணான்னு கேக்கறியே'' என்று.

மூன்றாம் நாள் அவளை வீட்டுக்கு அனுப்பவும், வனிதாவின் வீட்டிலேயே பாட்டி போய் கல்பனாவுக்கு

வேண்டிய சாப்பாட்டை பத்தியமாகச் செய்து போட்டாள். நாட்கள் ஓட குழந்தைக்குப் பெயர் வைக்கும் நாளும் வந்தது. சின்னதாக ஒரு ஃபங்க்ஷன் பண்ணி குழந்தைக்குத் தொட்டில் போட்டார்கள்.

அன்புதான் வாழ்க்கையின் அடித்தளம். அதுதான் முக்கியம். அதனால் பிரேமா என்று பெயர் வைக்கலாம் என்று சரோஜினி சொல்ல, "போங்கக்கா, அது ரொம்பவே பழைய பெயராக இருக்கிறது. ப்ரீதி" என்று வைக்கலாம் என்று வனிதா சொல்ல, எல்லோரும் அதை ஒரே மனதாய் ஒப்புக் கொள்ள, கல்பனாவின் குட்டி பாப்பா 'ப்ரீதி' ஆனது.

குழந்தைக்கு மூன்று மாதம் ஆனது. பேர்தான் கல்பனாவின் குழந்தையே தவிர, அது சாந்தி இல்லத்தின் செல்லக் குழந்தையாகத்தான் வளர்ந்தது. அது அம்மாவிடம் வருவதே பசித்தால் மட்டும்தான். இந்தக் கொள்ளை அழகுக் குழந்தையுடன் இருக்க அதன் அப்பாவிற்குக் கொடுத்து வைக்க வில்லையே என்ற எண்ணம் கல்பனாவுக்கு மட்டுமல்லாது எல்லோருக்கும் தோன்றியது. சரோஜினி கூட திரும்ப ரவியைத் தேட ஏற்பாடு பண்ணலாமா என்று கேட்டாள். ஆனால் கல்பனா வேண்டாம் என்று தீர்மானமாக மறுத்துவிட்டாள். அவளுடைய மனம் பூராவும் இப்போது குழந்தையை நல்லபடியா வளர்க்கணும், அதற்குத் தன்னைத் தான் முன்னேற்றிக் கொள்ள வேண்டும் என்பதில் தான் இருந்தது.

நாட்கள் வாரங்களாகவும், மாதங்களாகவும் பின் வருடங்களாகவும் ஆக யாரைக் கேட்கின்றன? யார் வருத்தமாயிருந்தாலும், யார் மகிழ்ச்சியாக இருந்தாலும் சூரியன் உதிப்பதும், மறைவதும் நிற்கப் போகிறதா என்ன?



இப்போது ப்ரீதி மூன்று வயது குழந்தை. முதன் முதலில் அவள் தவழ்ந்து வருவது, நிற்பது, நடப்பது, பேசுவது என்றெல்லாம் செய்த போது கல்பனாவுக்கு மகிழ்ச்சியில் தலைகால் புரியவில்லை. ஆனால் அந்த மகிழ்ச்சியிலும் கூடவே வருத்தமும் தலைகாட்டியது. கடவுள் தனக்கு எப்பேர்ப்பட்ட குழந்தையைக் கொடுத்திருக்கிறார். கொள்ளை அழகான குழந்தை. ரவிக்குத் தான் கொடுத்து வைக்கவில்லை. இந்தக் குழந்தையுடன் இருக்க. அந்தக் குழந்தை தன்னை அம்மா என்று அழைக்கும் போது தான் அடையும் பேரானந்தத்தை தன்னுடன் சேர்ந்து அனுபவிக்க ரவி தன் அருகில் இல்லையே என்று தவித்துப் போனாள். ஆனால் பாட்டி, சரோஜினி, வனிதா, பார்வதி என்று எல்லோருமே முடிந்த போதெல்லாம் இவளிடம் பழைய வாழ்க்கையை மறந்துவிட்டு, குழந்தைக்காக சந்தோஷமா இரு என்று சொல்லிச் சொல்லி இவள் மனதை மாற்ற, விடாமல் முயற்சி செய்து கொண்டே தான் இருந்தார்கள். அதற்குப் பலிதம் இருக்கத்தான் செய்தது. ரவி எனும் மனிதனை 95% மறந்துவிட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆம். அதனால்தான் அவளால் படிப்பு, பாட்டு என்று கவனம் செலுத்த முடிந்தது. அவளுக்கு +2 முடிக்கவும், பி.ஏ சரித்திரம் படிக்கவும், பரிட்சை எழுதி பாஸ் செய்யவும், எல்லோரும் உதவினார்கள். சர்ட்டிபிகேட் வாங்குவது போன்ற வேலை எல்லாம் வனிதா செய்து தந்தாள். பாடம் சொல்லிக் கொடுப்பது மட்டும் தாத்தா தான் முழுவதும் செய்தார். நல்ல உபாத்தியாயர், நல்ல மாணவி, வெற்றி பெறக் கேட்பானேன்! அடுத்தது பி.எட்., படிக்கச் சொன்னாள் சரோஜினி. ஏனென்றால் எந்த ஆணின் முன்னாடியும் நிற்கக் கூட கல்பனாவுக்கு

இஷ்டமே கிடையாது என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். அதனால் கல்பனாவுக்கு ஏற்றது ஆசிரியர் வேலைதான் என்று அவளுக்குத் தோன்றியதால்தான் அவளை பி.எட்., படிக்கச் சொன்னாள்.

"மேலே, பட்ட மேற்படிப்பு படிக்கிறாயா, கல்யாணி! காலேஜ் வேலை என்றால் இன்னும் நிறைய சம்பளம் வருமே" என்று சரோஜினி சொன்ன போது தீவிரமாக மறுத்துவிட்டாள் கல்பனா. பெண்களுக்கான பள்ளியில் ஆசிரியை வேலை போதும் தனக்கு என்று சொல்லி விட்டாள்.

சரியென்று அவளுக்குத் தேவையான வசதிகளை சரோஜினி செய்து கொடுக்க நல்ல முறையில் கல்பனா ஆசிரியை பயிற்சிப் பட்டமும் பெற்றுவிட்டாள்.

அன்று பி.எட்., கான்வெகேஷன் நாள். கல்பனா தன்னை மிக எளிமையாக அலங்கரித்துக் கொண்டு தாத்தா பாட்டியை நமஸ்கரித்துவிட்டு சென்று பட்டப் படிப்பு சான்றிதழ்களை வாங்கி வந்தாள்.

ஒரு கையில் சான்றிதழ்களும், ஒரு சிறிய பிளாஸ்டிக் பையும் மற்றொரு கையில் பெரிய இனிப்புப் பாக்கெட்டு மாக கல்பனா சரோஜினியின் ஆபீஸ் அறைக்குள் நுழைந்தாள். சரோஜினி யாரோ இரண்டு பெண்களுடன் பேசிக் கொண்டிருந்தாள். கல்பனாவைப் பார்த்ததும் அவளை வரவேற்றாள்.

"வாம்மா, கல்யாணி! கன்கிராட்ஸ்! பி.எட்., பரிட்சையை நல்ல முறையிலே பாஸ் பண்ணினதுக்கு எனது மன மார்ந்த வாழ்த்துக்கள்" என்றாள்.

"அம்மா, கொஞ்சம் எழுந்து இப்படி வரீங்களா?" என்று கேட்டாள் கல்பனா.



"என்னம்மா, என்ன விஷயம்?" என்று கேட்டுக் கொண்டே அவளருகில் வந்து நின்றாள் சரோஜினி. தன் கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் பையிலிருந்து கை நிறைய புஷ்பங்களை எடுத்து அவள் காலடியில் போட்டு, தன்னுடைய சான்றிதழ்களையும் அவளின் காலடியில் வைத்து கீழே விழுந்து வணங்கினாள் கல்பனா.

"என்னம்மா, என்ன பண்ணறே, நீ?" என்று பதறி னாள் சரோஜினி.

"அம்மா, இன்னிக்கு நான் ரொம்ப சந்தோஷமாக இருக்கேம்மா! இந்த பி.ஏ.,யும், பி.எட்டும் எனக்கு நீங்க போட்ட பிச்சை. அநாதையா எப்படியோ போயிருக்க வேண்டிய என்னை ஒரு மனுஷியா மதிச்சு, உங்க பொன்னான நேரத்தையெல்லாம் எனக்காக செலவிட்டு என்னை ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வந்துட்டீங்க. இந்த நன்றிக் கடனை நான் எப்படி தீர்க்கப்போறேன்னு தெரியல்லே. ஆண்டவனுக்கு என்னோட ஆயிரம் கோடி நன்றிகள்" என்றாள் கண்களில் நீர் வழிய.

"பைத்தியம், எழுந்திரு! நான் என்னம்மா பெரிசா பண்ணிட்டேன்? உன்னை மாதிரி ஒரு மகளை எனக்குக் கொடுத்ததுக்கு நான் தான் அந்த ஆண்டவனுக்கு நன்றி சொல்லணும். இந்தப் பட்டப் படிப்பெல்லாம் நீ உன் திறமையினாலே அடைஞ்சது. போம்மா, போய் தாத்தா பாட்டிகிட்டே எல்லாம் ஆசீர்வாதம் வாங்கிக்கோ. பொண்ணு பிறந்த வேளை உனக்கு இனிமே எல்லாம் சிறப்பா இருக்கும்" என்று சொன்ன சரோஜினி தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அவள் கிளம்பிப் போனதும் சரோஜினியுடன் பேசிக் கொண்டிருந்த அந்த இரண்டு பெண்களும் சரோஜினி

யிடம், ''மேடம்! உங்களைப் பத்தி நாங்க நிறைய கேள்விப்பட்டிருக்கிறோம். அது எவ்வளவு தூரம் உண்மைன்னு இப்போ கண்ணால பாத்துட்டோம். உங்க சிறப்பான தொண்டு மேன்மேலும் சிறப்படைய எங்களின் வாழ்த்துக்கள்'' என்றனர்.

கல்பனா நிறைந்த மனதுடன் தாத்தா, பாட்டியைப் பார்க்க சென்றாள். ''வாம்மா வாத்தியாரம்மா'' என்று வரவேற்றாள் பாட்டி. ''கன்கிராஜுலேஷன்ஸ், கல்யாணி'' என்று கை குலுக்கினார் தாத்தா. அவர்கள் இருவரையும் வணங்கி எழுந்த கல்பனா, ''தாத்தா, உங்கள் உதவியினால்தான் நான் சிறப்பாக பாஸ் செஞ்சேன். உங்கள் இரண்டு பேருக்கும் .ஏதாவது வாங்கிக் கொடுக்கணும் போல இருக்கு. உங்களுக்கு என்ன வேணும் தாத்தா?'' என்று கேட்டாள்.

''இந்தக் கிழவனுக்கு என்னம்மா வேணும்? நீ நன்னா இருக்கணும் அதுதான்'' என்றார் தாத்தா.

''போங்க, தாத்தா! ஏதாவது கேளுங்க'' என்றாள் கல்பனா.

''அப்படியா, சரி! இங்கே கிட்டே வா, சொல்றேன்'' என்றவர் அவள் காதில் ஏதோ முணுமுணுத்தார்.

கல்பனா ஹோவென்று சிரித்தாள் ''கண்டிப்பா, தாத்தா!'' என்றாள்.

''ஏய் என்னடி, தாத்தாவும் பேத்தியுமா ஏதோ குசுகுசுன்னு பேசிக்கிறிங்க.''

''பாட்டி, தாத்தாவுக்கு குச்சி ஐஸ்க்ரீம் வேணுமாம்'' என்றாள் கல்பனா.

''ஓஹோ! பிள்ளையில்லா வீட்டிலே கிழம் துள்ளி விளையாடித்தாம். அப்படின்னா இருக்கு சமாச்சாரம்.



போகட்டும் வாங்கும் போது இரண்டா வாங்கு. ஏன் நான் சாப்பிட மாட்டேனா?'' என்றாள் பாட்டி. எல்லோரும் சிரித்து ஓய்ந்தார்கள்.

''கல்யாணி, இன்னிக்கு உனக்கோசரம் சிறப்புச் சாப்பாடு பண்ணியிருக்காங்க'' என்றாள் பாட்டி.

''எதுக்கு பாட்டி இதெல்லாம்? எனக்கு சங்கோஜமா இருக்கு.''

''என்னம்மா அப்படி சொல்றே? உன்னை நினைச்சா எங்களுக்கெல்லாம் ரொம்ப பெருமையாக இருக்கும்மா. நீ சாதிச்சு காட்டிட்டே! அதுக்குதான் இந்த சாப்பாடு'' என்றாள் பாட்டி.

''கல்யாணி அடுத்தது உன்னோட கோல் கர்நாடக இசையிலே ரொம்பப் பெரிய பேர் வாங்கணும்'' என்றார் தாத்தா.

''முயற்சிக்கிறேன் தாத்தா'' என்றாள் அடக்கத்துடன். சொன்னது போலவே தன்னை கர்நாடக சங்கீதத்தில் ஈடுபடுத்திக் கொண்டு, ஒலி நாடாக்கள் கேட்டே நிறைய பாடல்கள் கற்றுக் கொண்டாள்.

கல்பனாவுக்கு ஆஸ்ரமத்துக் குழந்தைகள் பலர் படிக்கும் பள்ளியிலேயே வேலை கிடைத்து விட்டது. குழந்தை ப்ரீதியை இவள் பி.ஏ. படிக்கும்போதே நர்ஸரியில் போட்டிருந்தாள். அது இப்போது இரண்டாம் வகுப்பு வந்துவிட்டது. சுட்டியாய் படித்தது. அதற்கு மேல் படு சுட்டியாகப் பேசியது. அது ஆஸ்ரமத்தின் செல்லக் குழந்தையாகவே இருந்தது.

இப்போது நிறைய பேர் பாட்டுக்கும், இந்தி ட்யூஷக்கும் வந்து கொண்டிருந்தார்கள். இவள் டீச்சராக

வேலை ஏற்றபின். பாட ட்யூஷன்கள் எல்லாம் வேண்டாம் என்று சரோஜினி சொல்லிவிட்டாள். ஸ்கூலிலிருந்து வரவிட்டு பாட்டு கிளாஸ் இருக்கும். இப்போதெல்லாம் சரோஜினிக்கு சற்று அதிகமாக ஓய்வு தேவைபட்டதால், வனிதா தான் ஆபீஸ் நிர்வாகம் முழுவதையும் பார்த்துக் கொண்டாள். கல்பனா வனிதாவிற்கு உதவியாக இருந்தாள்.



## 31

அப்போதுதான் ஒருநாள் சரோஜினி எல்லோரையும் பாட்டியின் வீட்டிற்கு சாயந்திரம் 6 மணிக்கு ஒன்று சேரும்படிக் கூப்பிட்டாள். இப்போதெல்லாம் பாட்டிக்கு ரொம்ப நடமாட முடியாததால் அங்கேயே ஏதாவது முக்கியமான விஷயமென்றால் பேசிவிடுவது வழக்கமாக இருந்தது.

ஜெமினிப்பாட்டி வீட்டில் எல்லோரும் கூடினார்கள் ''என்னம்மா விஷயம், சரோஜினி? எல்லாரும் வந்திருக்காங்க?'' என்று கேட்டாள் பாட்டி.

''சொல்றேன். ஒரு வாரம் முன்னாலே நம்ப குடும்ப வக்கீலைப் பார்த்தேன். அவர் சொன்னார் ''சரோம்மா, உனக்கும் வயசு ஆயிண்டு வரது. இந்த இல்லத்தை இனிமே நடத்த ஒரு டிரஸ்ட் ஏற்பாடு பண்ணி, அது நிர்வாகம் பண்ணறாப்பல அமைச்சுட்டா, தேவலைம்மா. தவிர இத்தனை சொத்து ஒருத்தரிடத்திலேயே குவிஞ்சிருந்தாலும், யார் கண்ணையாவது உறுத்தும். அங்கே இருக்கிற இரண்டு, மூணு வீடுகள்ளயாவது வித்துடு. உங்க இல்லத்திலே இருக்கிறவங்களுக்கே வித்துட்டியானா பிரச்சனை இருக்காது. அவங்களுக்கு வீடு வாங்கற அளவுக்கு வசதி இருக்காதுன்னு நீ நெனச்சா, விலையை வேணுமானா கொறச்சு வாங்கிக்கோ''ன்னு சொன்னார். அது பத்தி எல்லாம் பேசத்தான் உங்களை எல்லாம் இங்கே வரச் சொன்னேன்'' என்றாள் சரோஜினி.



நம்மில் வீடு வாங்கும் அளவுக்கு வசதி யாரிடம் இருக்கிறது என்று ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''முதல் வாய்ப்பு வனிதாவுக்கு. நான் அவளைக் கேக்கறதுதான் முறை'' என்றாள் சரோஜினி.

''எனக்கெதுக்கு அக்கா வீடும் இன்னொண்ணும்? நான் இருக்கற வரை என்னை இங்கே வெச்சுப்பீங்க, இல்லையா? நான் இப்போ வீடு வாங்கி இப்போ யாருக்கு எழுதி வெக்கணும், சொல்லுங்க?'' என்றாள் வனிதா. கூடவே ''உங்களை விட நானும் கொஞ்சம் தானே சின்னவள்'' என்றாள்.

''நீ சொல்றதும் ஒரு வகையில் நியாயம்தான் வனிதா! ஜானு மாமி, நீங்க?'' என்றாள் சரோஜினி.

''ஏம்மா, விளையாடறியா? நானே இருக்கிற வீட்டையெல்லாம் வித்துட்டு இங்கே வந்து உட்கார்ந்திருக்கேன். ராஜன் என்னவோ அமெரிக்காவிலே அரிச்சுக் கொட்டிண்டு இருக்கான். நீ டிரஸ்ட் ஆரம்பி! நான் என் பங்குக்கு இந்த நல்ல காரியத்துக்கு பணம் எழுதி வைக்கிறேன்'' என்றாள் மாமி.

''மாமா, உங்க அபிப்ராயம்?'' என்று சரோஜினி கேட்க,

''நான் எப்பம்மா உங்க மாமி வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேசியிருக்கேன். தலையை ஆட்டறதோட என் வேலை ஓவர்'' என்று ஜோக்கடித்தார் மாமா.

''என்ன நீங்க, சின்னதுகளையெல்லாம் வெச்சுண்டு'' என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டாள் மாமி.

''சரி, நீ சொல்லு கல்யாணி! உனக்கு ஒரு வீடு வேணுமில்லையா?'' என்றாள் சரோஜினி.

''என்னம்மா, எல்லாம் தெரிஞ்சும் நீங்களே இப்படிக் கேட்டா நான் என்ன சொல்றது?'' என்றாள் கல்பனா.

''என்ன தெரியணும் எனக்கு இப்போ? நீ ஸ்கூலுக்குப் போறே. பாட்டு ட்யூஷன் சொல்லித்தறே! மாதாமாதம் கொஞ்சம் பணம் குடுத்துட்டுப் போயேன் எனக்கு.''

''வேண்டாம்மா! எங்கிட்டே பேங்கிலேயும் கொஞ்சம் பணம் இருக்கு. இல்லேங்கலே. ஆனா எனக்கு ஒரு வீடு வாங்கற அளவுக்கு பணத்திலே கமிட் ஆறதுக்கு பயமா இருக்கும்மா. அதுவுமில்லாமே அதுக்கு ஒரு தகுதியும் வேணுமில்லையா? வேண்டாம்மா!'' என்றாள் கல்பனா.

''இப்போ என்ன பயம், வீடு வாங்க என்ன தகுதி வேணும்? நீ வேண்டாம்னாலும் நான் ப்ரீதி பேர்ல ஒரு வீடு எழுதி வைக்கத்தான் போறேன். நீ தடங்கல் சொல்லாதே! வந்த நாளா நீ ஒரு நிமிஷம் கூட சும்மா இருந்ததில்லே. இல்லத்துக்காக உழைக்கிறே. அதனாலே உனக்கு ஒரு வீடு நிச்சயம். கூடவே நான் இன்னொண்ணையும் சொல்றேன். இந்த இல்லத்தை நடத்தப் போற ட்ரஸ்டிகள் நான், நீ, வனிதா இந்த மூணு பேரும்தான். உங்க இரண்டு பேருக்கும்தான் இந்த இல்லத்தைப் பத்தி முழு விஷயத்திலேயும் அனுபவம் இருக்கு. இந்த என் எண்ணத்திலே யாருக்காவது ஏதாவது ஆட்சேபணை இருந்தா தெரிவிக்கலாம்'' என்றாள் சரோஜினி.

''நாங்க எல்லோரும் உங்க இந்த முடிவை மனப் பூர்வமா ஆதரிக்கறோம்மா'' என்றாள் பாமா.



''இந்த சொத்து உங்களுடையது. உங்க இஷ்டம் ஆனாலும் எங்களைக் கேக்கறீங்க, எங்களையெல்லாம் மதிச்சுக் கேக்கறீங்க. இந்த குணமும், மனசும் யாருக்கு வரும்? நீங்க என்ன தீர்மானம் செஞ்சாலும் எங்களுக்குச் சம்மதம்'' என்றாள் பாமா.

''சரி, இன்னும் யாருக்கு வீடு வாங்கும் எண்ணம் இருக்கு? சொன்னீங்கன்னா நான் தரத் தயார். பணத்தையெல்லாம் பத்திக் கவலைப் படாதீங்க. நீங்க எல்லோரும் என் மனுஷங்க, உங்ககிட்டே என்ன கணக்கு? நானும் யாருக்கு சேத்து வைக்கணும்? நீங்க எல்லோரும் சந்தோஷமா இருந்தா சரி. சொல்லுங்க, தயங்காமே சொல்லுங்க'' என்றாள் சரோஜினி.

''மேடம்...'' என்று இழுத்தாள் பார்வதி.

''சரி, பாருவுக்கு ஒன்று'' என்றாள் சரோஜினி.

''பழனி, நீங்க என்ன சொல்றீங்க'' என்று டிரைவரைப் பார்த்துக் கேட்டாள். சரோஜினி, ''நீங்க ஆரம்பத்திலிருந்து எங்க வீட்டு மனுஷராகவே இருக்கிறவர். நீங்களும் ஒரு வீடு எடுத்துக்கங்க. பணத்தைப் பத்தியெல்லாம் கவலைப் படாதீங்க, உங்களுக்கு எப்படி சௌகரியமோ அப்படிக் கொடுங்க, போதும்'' என்றாள்.

அடுத்தது அந்தோணி முகத்தைக் காட்ட, ''உங்களுக்கும் அதே வார்த்தைதான். அப்புறமா வக்கீல் கிட்டே பேசி விவரமெல்லாம் தீர்மானிச்சுக்கலாம்'' என்றாள்.

''ஆயா வரலஷ்மிக்கு ஏதோ சொல்லணுமாம், மேடம்!'' என்றாள் பாமா, ''அப்போதிலிருந்து அவ தயங்கிகிட்டே இருக்கா.''

''வரலக்ஷ்மி, எங்கிட்டே என்ன தயக்கம், சொல்லு'' என்றாள் சரோஜினி.

''அம்மா, எனக்கும் ஆசையிருக்கு. என் மகனும் எங்கேயாவது வீடு வாங்கணும்னு சொல்லிகிட்டு இருக்கான். இங்கேயே வாங்கலாம், ஆனா...'' என்று இழுத்தாள்.

''என்னம்மா, சொல்லு.''

''அப்புறம் என் புருஷனும் இங்கே தங்க அனுமதி கொடுப்பீங்களா, தாயீ! எப்படியும் நம்ப வாட்ச் மேன் தாத்தாவுக்கு வயசாயிடுச்சில்லே! இவரும் அந்த வேலையைப் பாத்துப்பாரு'' என்றாள்.

''அது சரி, உன் பிள்ளையும், மருமகளும் உன்னை உங்க வீட்லே நல்லா வெச்சுருக்காங்கன்னு சொல்லுவியே! எதுக்கு இங்கே வந்து இருக்கணும்கறே?''

''அதும்மா, அது வந்து, எங்க வீட்லே பிள்ளே, மருமக, பேரப் பிள்ளைங்க எல்லோரும் இருக்கோம்மா! எனக்கும் அவருக்கும் பேசிக்கணும்னா தனியா உக்கார ஒரு இடமுமில்லை. சித்த காலை அமுக்கி விடணும்னாக் கூட பிள்ளைங்க முன்னாடி முடியறதில்லே!''

''யார் காலை யார் அமுக்கணும்'' பெரிதாகச் சிரித்துக் கொண்டே கேட்டார் தாத்தா. எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

''சரி, சரி! அவரும் வந்து இருக்கட்டும். அவரும் வயசானவர்தானே! 12 வயசுக்கு மேற்பட்டவங்க, 55 வயசுக்கு உட்பட்டவங்களை இங்கே இருக்கச் சொல்றதிலே எனக்குச் சம்மதமில்லே'' என்றாள் சரோஜினி.

எல்லோருமாக அவரவர் இடத்துக்கு நடக்கும்போது வனிதா கல்யாணியிடம் கேட்டாள் ''நீ பாட்டி இப்போ இருக்கிற இடத்தைத்தானே எடுத்துக்கப் போறே?''



''இல்லேக்கா, இப்போ நாம இருக்கிற இடத்தைத்தான் எடுத்துக்கலாம்னு இருக்கேன்.''

''ஏம்மா, நம்ப வீட்டைவிட அது கொஞ்சம் பெரிசில்லையா? முல்லைக் கொடியும் அதுவுமா அந்த வீடு நல்லாயிருக்கே!''

''என்னை ஏன்னு கேக்காதீங்கக்கா! எனக்கு அந்த வீடு வேண்டாம்'' என்று தீர்மானமாகச் சொல்லி விட்டாள் கல்பனா.

அவளுக்குத்தானே தெரியும். அந்த வீட்டிற்குப் போகும் போதெல்லாம் அவள் மனம் வலிப்பது அந்த முல்லைக் கொடியாலேதான் என்பது.

ஹைதராபாத் போக வேண்டுமானால் கல்பனாதான் டிக்கெட் வாங்கணும். அவள் மனதிற்கென்ன டிக்கெட்டா வாங்கணும்?

உமா, சேகர் வீட்டின் வாசலில் கேட்டுக்கு வெளியே ஒரு வேப்ப மரம் இருந்தது. உள்ளே உமா வைத்திருந்த ஒரு முல்லைக்கொடி நல்ல பெரிதாக வளர்ந்து, அந்த மரத்தையும் சுற்றிக் கொண்டு, வாசலிலிருந்தே தொடங்கிய மாடிப்படி, மற்றும் மொட்டை மாடி கைப்பிடிச் சுவரெல்லாம் ஆக்ரமித்திருந்தது. கொல்லென்று அது நிறைய பூக்கும். ரவியும் கல்பனாவும் அவர்கள் வீட்டிற்குப் போகும்போதெல்லாம், ''சேகர், நாம இங்கேயே உட்காரலாமே!'' என்பான் ரவி. அந்த முல்லைக் கொடியின் கீழ் உட்கார அவனுக்கு அவ்வளவு பிடிக்கும்.

''ஏய், கொசு கடிக்கிறதுடா. உள்ளே போகலாம், வா!'' என்று சில வேளைகளில் சேகர் கூப்பிட்டாலும் ரவி கேட்க மாட்டான். சில நாட்களில் சேகர் வந்திருக்க மாட்டான். இவர்கள் அங்கே போனால் உமா அவர்களை

வாசலிலேயே உட்கார வைத்துவிட்டு, ''நீங்கள் பேசிக் கொண்டிருங்கள், எனக்கு உள்ளே கொஞ்சம் வேலை இருக்கிறது'' என்று போய்விடுவாள். அவள் வேண்டு மென்றேதான் போகிறாள் என்பது இவர்கள் இருவருக் கும் நன்றாகவே தெரியும்.

அவள் போனதும் ரவி ''ஏய், கல்பனா, இந்தப் பூவைப் பாரேன்'' என்று பூவைப் பறித்து அவளிடம் கொடுப் பான். கொடுக்கும் முன் ''என்ன மணம் பாரேன்'' என்பான். இவள் அதை வாங்கி நுகர்ந்து ''நிஜமா இதன் மணம் மனதை நிரப்புகிறது'' என்று சொல்லி தன் தலையில் சூட்டிக் கொள்வாள். இவன் இன்னும் நான்கு பூக்களைப் பறித்து இவள் கைகளில் கொடுப்பான். அதையும் தலையில் சூட்டிக் கொள்வாள்.

''ஆமாம், இப்போ அந்த வாசனை உன் தலைலே அப்படியே இறங்கியிருக்கான்னு, இரு. நான் பார்க்கிறேன் இங்கே வா!'' என்பான்.

''ரொம்ப அழகா இருக்கு. உங்க விளையாட்டு, வந்த இடத்திலே'' என்று அவள் செல்லமாகக் கோபித்துக் கொள்வாள்.

சில நாட்களில் இவள் முன் மாலையிலேயே அவர்கள் வீட்டிற்குப் போனால் நிறைய பூக்களைப் பறித்துக் கொண்டு வருவாள். நெருக்கமாகத் தொடுத்து தலை யில் வைத்துக் கொள்வாள். சாயந்திரம் ரவி வரும்போதே. ''எங்கே என் முல்லை ராணி? வீடே மணக்கிறதே!'' என்று ஞாபகமாக கதவைச் சாத்திவிட்டு, கைகளை விரித்த படியே உள்ளே வருவான். இவள் அப்படியே இவன் விரிந்த கைகளில் புகுந்து அவன், நெஞ்சில் ஒட்டிக்



கொள்வாள். அவளை சேர்த்து அணைத்தபடியே சோபா வரை நடந்து. அங்கு உட்கார்ந்து. அவளை தன் பக்கத்தில் இருத்திக் கொள்வான். அவள் தலையைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டு முகர்ந்து பார்த்து. ஆனந்தப் படுவான்.

''இருங்க, நான் இந்தப் பூவை எடுத்து உங்க கையி லேயே கொடுத்துடறேன். மோந்து பார்த்து. மோந்து பார்த்து சந்தோஷப்படுங்க'' என்பாள் கல்பனா.

''அட மக்கு! அந்தப் பூக்கள் எல்லாம் உன் தலையில இருக்கறதனாலே அதுக்கு இவ்வளவு வாசனை!'' என்பான்.

''போதும், போதும்! பொய்க்கு ஒரு அளவில்லையா?'' என்று இவள் கேட்டால் ''இல்லைடா, அது உன் தலை யிலே இருக்கறதனாலதான் என்னை இவ்வளவு மயக் குது'' என்பான்.

அந்த முல்லைக் கொடியைப் பார்க்கும் போதெல் லாம் இது போன்ற நினைவுகளால் இவள் அவஸ்தைப் படுவதை யாரிடம் சொல்ல முடியும்?

அது மட்டுமா, இவளுடைய பாட்டு கிளாஸில் ஒரு மாணவியின் அம்மா ஆசையாகக் கேட்டாளே என்று 'சொல்ல வல்லாயோ கிளியே' என்ற பாரதியார் பாடலைச் சொல்லிக் குடுக்க ஆரம்பித்து விட்டாள். அந்தப் பாடலில், ''ஆங்கோர் முல்லைச் செடியதன்பால் செய்த வினை முற்றும் மறந்திடக் கற்றதென்ன என்று சொல்ல வல்லாயோ''ன்னு ஒரு வரி வரும். அதைச் சொல்லிக் கொடுக்கும்போதே முதன் முறையே பிசிறு தட்டி விட்டது இவள் குரலில். அதன் பிறகு அந்தப் பாட்டை

ஆச்சு என்று ஒரு மாதிரி சொல்லிக் கொடுத்து முடிப்பதற்குள் இவள் திண்டாடிப் போய்விட்டாள்.

இப்படித்தான் ஒரு பாரதியார் பாட்டு ஜோன்புரி ராகத்தில் எல்லோரும் பாடுவது. அதை 'ஆசை முகம் மறந்து போச்சே' என்று ஆரம்பிக்கும்போதே துக்கம் தொண்டையை அடைத்துவிடும். நிஜமாகவே அவன் முகம் இன்னும் கொஞ்ச நாளில் மறந்து விடுமோ? அதை யாரிடம் சொல்ல முடியும்' என்றெல்லாம் நினைத்து நொந்து போவாள். மனதினுள், இனி சிருங்காரப் பாடல்களே பாடுவதில்லை கூடுமானவரை என்று முடிவெடுத்ததும் அப்போதிலிருந்துதான்.

பள்ளிக் கூடத்தில் வேலையும் சரி, கூட இருப்பவர்களும் சரி, மனதிற்கு ரொம்ப இதமாகவே இருந்தது. பெண்கள் மட்டுமே படிக்கும் பள்ளிக்கூடம். அதிலும் ஆசிரமக் குழந்தைகள் மொத்தமும் அங்கே படிப்பதனால், ஆஸ்ரமத்திலிருந்து பஸ்ஸில் போய் பஸ்ஸிலேயே திரும்பி விடுவார்கள். இவள் ஐந்தாம் வகுப்பிற்கு கிளாஸ் டீச்சர். குழந்தைகள் எல்லோருக்கும் கல்யாணி டீச்சர். குழந்தைகள் எல்லோருக்கும் கல்யாணி டீச்சர் என்றாலே ரொம்ப பிடிக்கும். ப்ரீதியும் இவளுடனே வந்து திரும்புவதால் குழந்தையைப் பற்றிக் கவலை இல்லை.

வாழ்க்கையில் பெரிய தவறு செய்து, முக்கியமானதைத் தொலைத்த தனக்கு இந்த நிம்மதியான வாழ்க்கை கிடைத்ததற்குத் தான் முற்பிறவியில் எத்தனையோ புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொள்வாள். ஏதோ வாழ்க்கை கஷ்டமில்லாமல் ஓடுவதே ஆண்டவன் கிருபை என்று மகிழ்ச்சி அடைவாள்.





## 32

ஸ்கூலில் வேலை பண்ணிக் கொண்டிருந்த உடற்பயிற்சி ஆசிரியை ஓய்வு பெற்று விட்டார். அவருடைய இடத்திற்குப் புதிதாக ஒரு ஆசிரியர் வருகிறார் என்று பேசிக் கொண்டார்கள். எதற்கு ஆண் ஆசிரியர் என்று நினைத்தவர்கள் கூட அவர் பெயரைக் கேட்டதும் கவலைப் படுவதை நிறுத்தி விட்டனர். 'தெய்வசகாயம்' என்று பெயராம் வருபவருக்கு.

எல்லோரும் எதிர்பார்த்தபடி தெய்வசகாயம் மாஸ்டர் வேலையில் சேர வந்துவிட்டார். ஆனால் அவரைப் பார்த்ததும் எல்லோருக்குமே ஒரு ஷாக் தான். அவர் வந்தது மோட்டார் சைக்கிளில். ஆள் பார்ப்பதற்கு ஜெமினி கணேசன் மாதிரி இருந்தார். அவருடைய உருவத்திற்கும் பெயருக்கும் சம்பந்தமே இல்லை. இவர்கள் எதிர்பார்த்தபடி அவர் கிழவரும் இல்லை. இளம் வாலிபர், அதுவும் நல்ல அழகர். சின்னப் பெண்கள் கிளுகிளுப்படைந்தாலும் காண்பித்துக் கொள்ளவில்லை. பெரியவர்கள் + 2 வரை படிக்கும் பெண்கள் இருக்கும் இந்த பள்ளிக் கூடத்திற்கு இப்படி ஒரு இளைஞர் ஆசிரியராக வருவது தேவையா என்று பேசிக் கொண்டார்கள்.

அறிமுகப் படுத்தினபோது வணக்கம் தெரிவித்ததைத் தவிர கல்பனா அவர் நிற்கும் இடத்தில் கூட நிற்கவில்லை. அவரும் மரியாதைப்பட்ட மனிதராகவேதான் இருந்தார். அவர் வந்து ஒரு மாதம் கழிந்திருக்கும். தன் வகுப்புக் குழந்தைகளுக்கு உடற்பயிற்சி ஆசிரியர் போட்டிருக்கும் கிரேடுகள் கல்பனாவிற்குத் தேவையாக

இருந்தது. தன் வகுப்பில் வேலையை முடித்துவிட்ட ஒரு பெண்ணைக் கூப்பிட்டு, "ஸாரிடம் போய் நம் வகுப்பின் கிரேடு வாங்கி வா" என்றாள். போன பெண் உடனே வந்து விட்டாள். "ஸார் உங்களைக் கொஞ்சம் அவர் ரூமிற்கு வந்து எடுத்துக் கொள்ள முடியுமா என்று கேட்கிறார், மேடம்! எல்லா வகுப்பின் க்ரேடையும் ஒரே டைரியில் எழுதியிருக்கிறாராம். இப்போ மற்ற டீச்சர்லாம் வந்து எழுதிக்கப் போறாங்களாம்" என்றாள்.

சரியென்று கல்பனா தெய்வசகாயத்தின் ரூமிற்குப் போனாள். "வாங்க, மேடம்! உட்காருங்க என்று மேசைக்கு அந்தப் புறமாக இருந்த ஒரு நாற்காலியைச் சுட்டிக் காட்டினார். இவள் உட்கார்ந்ததும் உடனே நோட்டைக் கொடுக்க, அதைப் பார்த்து மளமளவென்று தன் நோட்டில் எழுதிக் கொண்டாள்.

இவள் எழுதி முடித்ததும், தெய்வசகாயம் இவளிடம், "மேடம், எனக்கு உங்களிடம் ஒரு விஷயம் சொல்லணும். நீங்க தப்பா எடுத்துக்க மாட்டீங்களே?" என்றார்.

இவளுக்குப் பகீரென்றது. சட்டென்று கதவு திறந்திருக்கிறதா என்று பார்த்துக் கொண்டாள்.

"ஏன் மேடம் கலவரம்? நான் ஒரு கண்ணியமான குடும்பத்திலிருந்து வந்தவன். நீங்க பயப்படற மாதிரியெல்லாம் நடந்துக்க மாட்டேன், ஜஸ்ட் என் மனதிலிருக்கறதைச் சொல்ல ஆசைப்பட்டேன். அவ்வளவுதான். முதல்லே நீங்க என்னை மன்னிக்கணும். மத்த டீச்சர்ஸ் யாரையும் இப்போ நான் கூப்பிடல்லே. என் மனசில இருக்கறதைச் சொல்லிடறேன். தயவு செய்து கோபப்படாமே கேளுங்க" என்றார் தெய்வசகாயம்.



கல்பனாவிற்கு வயிற்றில் பட்டாம்பூச்சி பறக்க ஆரம்பித்தது.

"என் அப்பா, அம்மாவிற்கு நான் ஒரே பிள்ளை. என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி எத்தனையோ நாட்களாக, ஏன், வருடங்களாகச் சொல்லிச் சொல்லி அம்மா அலுத்துப் போய் விடவே விட்டுட்டாங்க. எனக்கு வயசு 34 ஆகுது. எனக்கு கல்யாணத்தில் நாட்டமே இல்லை. ஆனா இந்தப் பள்ளிக்கூடத்துக்கு வந்து உங்களைப் பார்த்ததிலிருந்து எனக்குக் கல்யாண ஆசை வந்திருக்கு. எனக்கு உங்களைப் பத்தித் தெரியும். தெரிந்து கொண்டேன். கல்யாணம் ஆகி, ஒரு பெண் குழந்தை இருக்கு. கணவர் கூட இல்லை. நான் உங்களைக் கல்யாணம் செய்து கொள்ளணும்னா எங்க வீட்லே எதிர்ப்பு இருக்காது. மாறாக சந்தோஷமே படுவாங்க. நான் கிறிஸ்டியன் என்கிறதுனாலே உங்களை மத விஷயத்திலே ஒரு கட்டாயமும் படுத்த மாட்டேன். குழந்தை ப்ரீதி என் பொறுப்பு. என் பக்கத்திலிருந்து சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லிவிட்டேன். நீங்க மெதுவா யோசிச்சு ஒரு நல்ல பதிலா சொல்லுங்க, வணக்கம்" என்றார்.

அதற்குள் ரொம்பவே பதற்றத்தில் இருந்த கல்யாணி, "இதில் யோசிக்க ஒன்றுமேயில்லை" என்று ஆரம்பித்ததும், தெய்வசகாயத்திற்கு மகிழ்ச்சி எட்டிப் பார்க்க ஆரம்பித்தது. இவள் எங்கே கண்ணீர் சிந்தி விடுவோமோ என்று சற்று நிறுத்தியதுதான் அந்த இடைவெளி.

தன்னைச் சரி செய்து கொண்ட கல்யாணி "மன்னிக்கணும், மிஸ்டர் தெய்வசகாயம். இந்த மாதிரி ஒரு திருமணத்திற்கு, ஏன் இந்தப் பேச்சுக்கேகூட என்

வாழ்க்கையில் இடமில்லை. இந்த விஷயத்திலே நான் ரொம்பவும் தீவிரமாகவும், திடமாகவும் இருக்கேன். இனி ஒரு முறை இந்தப் பேச்சை எடுக்க வேண்டாம்'' என்று சொல்லிவிட்டுத் தன் நோட்டை எடுத்துக் கொண்டு எழுந்தாள். ''என் கிளாஸ் ரிசல்ட்டையெல்லாம் எடுத்துக் கொண்டுவிட்டேன், தேங்க்ஸ்'' என்று அவன் பதிலுக்குக் காத்திராமல் வெளியே நடந்து விட்டாள்.

அதன் பிறகு தன் சாமான்களையெல்லாம் எடுத்துக் கொண்டு, ப்ரீதியையும் அழைத்துக் கொண்டு பஸ்ஸில் இல்லம் வந்ததெல்லாம் இயந்திர கதியில் நடந்தது. ஆனால் வெடவெடத்த காலும், வறண்ட தொண்டையும் அப்படியே இருந்தது. இவளைப் பார்த்ததும் வனிதா, ''ஏம்மா, என்னம்மா ஆச்சு? ஏன் என்னவோ போல் இருக்கே?'' என்று கேட்டு விட்டாள்.

''ஒண்ணுமில்லேக்கா! கொஞ்சம் தலைவலி ஜுரம் வரும் போலிருக்கு'' என்று சொல்லி சுருண்டு படுத்து விட்டாள்.

அதற்குள் சூடாக ஒரு கப் காபியை எடுத்துக் கொண்டு வந்த வனிதா, ''இந்தா இதைச் சாப்பிடு. எல்லாம் சரியாகிவிடும்'' என்று சொன்னவள் அவளைத் தொட்டுப் பார்த்தாள். ''இல்லை உனக்கு உடம்பு ஒன்றுமில்லை. ஸ்கூல்லதான் என்னவோ நடந்திருக்கு. நீ என்னவோ மறைக்கிறே எங்கிட்டேயிருந்து'' என்றாள்.

இப்படி வனிதா கேட்டதும் அன்று தெய்வசகாயம் பேசியது மொத்தத்தையும் கொட்டி விட்டாள் கல்பனா.

''சரி, அப்படிக் கேட்டார், கேட்பது அவர் இஷ்டம். நீ மறுத்து விட்டாய். மறுப்பது உன் இஷ்டம். இதில்



இத்தனை வருத்தப் பட என்ன இருக்கிறது?'' என்று கேட்டாள் வனிதா.

''என்னக்கா சொல்றீங்க? இதுவே எனக்கு அப்பா, அம்மாவோ, கூடப் பிறந்தவங்களோ பாதுகாப்பா இருந்திருந்தா இப்படிக் கேட்க முடியுமா? கேட்டிருப்பாரா? சொல்லுங்கக்கா'' என்றாள் கல்பனா.

''என்ன பேசறே கல்யாணி? இப்போ நாங்க எல்லோரும் இல்லையா உனக்குப் பாதுகாப்பா? வேறே யார் பாதுகாப்பு இருந்தாலும் கணவன் கூட இல்லைன்னா இப்படி யாராவது கேட்கத்தான் செய்வாங்க. இப்படிக் கேக்கறவங்ககிட்டே வேணும், வேணாம்னு சொல்லிவிட்டு நம்ம வேலையைப் பாக்க வேண்டியதுதான். உலகத்திலே பல பேர் பலவிதமா இருப்பாங்க, இதையெல்லாம் ஈஸியா எடுத்துக்கக் கத்துக்கோ, கல்யாணி'' என்றாள்.

''இதைச் சுலபமா எடுத்துக்க முடியுமா, அக்கா? என்ன இப்படிச் சொல்றீங்க?'' என்று சற்று மனத்தாங்கலுடன் கேட்டாள்.

''எல்லாம் அனுபவம்தாம்மா! நான் இன்னும் மிஸ். வனிதாதான் என்கிறதை நினைச்சுப் பாரு. நான் சொல்றது விளங்கும். என்னவோ எனக்குக் கல்யாணத்தில் விருப்பமில்லை. என்னையும் எத்தனையோ பேர் கேட்டிருப்பாங்க. இவராவது கல்யாணம் பண்ணிக்கறியான்னு கேட்டார். வேறே விதமா கொச்சையாகக் கூட என்னைக் கேட்டிருக்காங்க, தெரியுமா? எல்லார் கேக்கறதையும் நினைச்சுகிட்டு உட்கார்ந்திருந்தா, நம்ம நிம்மதியே போயிடும். சரி, விடு. நான் ஒண்ணு கேக்கறேன். மனசிலே இருக்கறதை, ஒளிக்காமே, தயங்காமே பதில் சொல்றியா?''

"கேளுங்கக்கா!" என்றாள்.

"நிஜமாகவே ஒரு நல்லவர் வந்து உன்னைப் பற்றி எல்லாம் தெரிந்து உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள முன் வந்தா, நீ ஒத்துப்பியா? உனக்கு விருப்பம் இருந்தா தாராளமாக செஞ்சிக்கலாம். உலகம் எத்தனையோ மாறிண்டு வருது" என்றாள் வனிதா.

அவள் முடிக்கும் முன்பே "எனக்கு அந்த எண்ணம் இன்னிக்கும் இல்லை, என்னிக்கும் வராது. இது நிச்சயம்" என்றாள் கல்பனா.

"சரி, ரவியைத் தேடணும்னு நினைக்கிறியா? முன்னே நீ வேண்டாம்னு சொன்னது எனக்குத் தெரியும். இப்பவும் அதே அபிப்ராயத்தில்தான் இருக்கியா?" என்று கேட்டாள் வனிதா.

"ஆமாம், அதிலும் மாத்தமில்லை. ஏதோ ஒரு கட்டாயத்தினாலோ, என்னைப் பிடிக்காமலோதான் அவர் விலகி இருக்கார். எதுவானாலும் நான் அவரைத் தொந்திரவு செய்ய விரும்பலே. கடவுள் விருப்பம் எதுவோ அதன்படி நடக்கட்டும்" என்றாள்.

இவளுக்கு ரவியின் பக்கம் எப்படித் தெரியும்? அவன் பாவம்! ஆபீஸ் அமளி அடங்கி விட்டிருக்கும் என்று சேகரை தொடர்புகொள்ள முயற்சித்திருக்கிறான். சேகர் நைஜீரியாவில் ஒரு நல்ல வேலை கிடைத்து போய் விட்டது அவனுக்குத் தெரியாது. அவனைப் பற்றி தகவல் தெரிந்து கொள்ள ரவி ஹைதராபாத் போகாமலேதான் முயற்சி செய்ய வேண்டியிருந்தது. சரி, கல்பனா எங்கு, எப்படியிருக்கிறாள் என்றாவது தெரிந்து கொள்வோம் என்று சென்னை வரை வந்து முயற்சித்திருக்கிறான். அவன் துரதிருஷ்டம் அவன் வந்து தேடியபோது



திருவேங்கடத்தாலும் உருப்படியாக ஒன்றும் சொல்ல முடியவில்லை. தவிர, ஆபீஸில் பழைய ஆட்கள் யாருமே இப்போதில்லையாதலால் அவனால் அவன் முயற்சித்தும் எதுவும் கண்டு பிடிக்க முடியாமல் போயிற்று. இது அவனுடைய துர்பாக்கியமா, கல்பனாவின் துர்பாக்கியமா? விதி! அவ்வளவுதான் இந்த நிகழ்ச்சிக்குப் பின் யார், யாரிடம் என்ன சொன்னார்களோ தெய்வசகாயம் இரண்டு மாதங்களில் இதே நிர்வாகம் நடத்தும் வேறு பள்ளிக்கு மாற்றப்பட்டார். கல்பனாவுக்கு 'அப்பாடா' என்றிருந்தது. ஆனால் இவள் எந்த ஆணையும் சந்திக்கக்கூட மாட்டேன் என்று இருந்தது இவளுக்குச் சற்று வருத்தம் தந்த நேரமும் உண்டு.



## 33

ஸ்கூலின் அந்த வருட ஆண்டு விழாவிற்கு நிறைய உழைத்தவர்களில் கல்பனாவுக்கு முக்கிய பங்கு உண்டு. அவளுக்குப் பாட்டு நன்கு வரும் என்பதால் அவளால் ஒரு முழு நீள இசை நாடகமே மாணவிகளுக்கு கற்றுத்தர முடிந்தது. அதற்காக அதே நினைவில் நிறைய மாதங்கள் உழைத்தாள். அதற்காக அவளுடைய அன்றாட வேலைகளைச் செய்யாமல் இருக்க முடியுமா? கொஞ்சம் சிரமமாகத்தான் இருந்தது. ஆனால் கடைசி நாள் ஒத்திகையில் பார்த்தால் எல்லோருக்கும் நிம்மதி, மிக்க மகிழ்ச்சி.

விழாவின் மற்ற ஏற்பாடுகளைக் கவனித்து, பத்திரிகையும் போட்டு வந்து விட்டது. அதைப் பார்த்ததும் தெரிந்தது சரோஜினிக்கும், மற்றவர்களுக்கும், விழாவிற்

குத் தலைமை தாங்கப் போவது ஒரு அரசியல்வாதி என்று. சரோஜினியும் அதே பள்ளியின் மானேஜிங் கமிட்டியில் உறுப்பினர்தான். "மீட்டிங்கில் நாம் அவரை அழைக்கப் போவதாகத் தீர்மானிக்கவில்லையே" என்று ஸ்கூல் கரஸ்பாண்டன்டிடம் சரோஜினி கேட்டபோது "இல்லை நாம் நினைத்திருந்த இலக்கியவாதி நிறைய நாட்கள் மலேசியா பயணம் போவதால் இந்த ஏற்பாடு. இந்த அரசியல்வாதிதான் நாம் கட்டப்போகும் அடுத்த கட்டிடத்திற்கு இடம் சாங்க்ஷன் செய்யப்போகும் அதிகாரத்தில் உள்ளவர். இதையெல்லாம் உத்தேசித்துதான் இவரைக் கூப்பிட்டோம்" என்ற கரஸ்பாண்டன்ட் "என்ன மேடம், ஏதாவது பிரச்னையா அவரை அழைப்பதில்?" என்றும் கேட்டார்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை, சும்மாத்தான் கேட்டேன்" என்று சொல்லிவிட்டாள் சரோஜினி.

விழா நாள் நெருங்கியது. எல்லாரும் செய்ததைப் போல நான்கு மடங்கு வேலை செய்தாள் கல்பனா. அவளுக்கே இதில் ஈடுபாடு மிகவும் இருந்ததனால் தான் செய்தாள். ஆண்டாள் கதையான இசை, நாடகம், நடனம் தெரிந்த இரு ஆசிரியைகள் ஒன்றிரண்டு நடனங்களும் அமைத்திருந்தனர். பாடல்களையும் மாணவியருக்குக் கற்றுக் கொடுத்து அவர்களையே வாத்யக் குழுவினருடன் பாட வைப்பதாக ஏற்பாடு. அதனால் கூடவே இருந்தாள் கல்பனா.

இந்த நாடகம் தவிர, வரவேற்பு, மேடை அலங்காரம், மாலை மற்றும் பரிசுகளை ஒழுங்கு படுத்தி வைப்பது, பரிசு வாங்கும் குழந்தைகளை நெறிப்படுத்தி, அரங்கத்துக்கு அனுப்புவது, அறிவிப்புகள் செய்வது என்று



எத்தனையோ வேலைகள். முதலிலேயே யார், யார் என்னென்ன வேலை செய்வது என்று பிரித்துக் கொடுத்து விட்டார்கள்.

மாலைகளை சரியான சமயத்திற்கு எடுத்துக் கொடுத்து, பரிசு வாங்கும் குழந்தைகளை வரிசையாக பெயர் அறிவித்தவுடன் அரங்கிற்கு அனுப்புவது இரண்டும் கல்பனாவின் வேலையாக இருந்தது.

விழா தொடங்கியது. அரசியல்வாதி, வாழ்க கோஷம் போட 4 தொண்டர்களுடன் நிகழ்ச்சிக்கு வந்து விட்டார். மேடையில் அவரை நடுநாயகமாக மரியாதையுடன் அமர்த்தியவுடன் இறை வணக்கம் ஆரம்பமானது. சௌந்திரவல்லி என்ற ஆசிரியை மாலைகள் எடுத்து வரும்படி உதவித் தலைமை ஆசிரியை சொல்லி விட்டார். அவர்தான் மேடைக்கு அன்று நிர்வாகி. கல்பனா உள்ளேயே ஒரு ஓரமாக நிற்க, மாலை போடும் வைபவம் நிகழ்ந்தது. பரிசு வாங்கும் குழந்தைகளை ஒழுங்கு படுத்தி மேடைக்கு அனுப்பும் வேலையை மட்டும் கல்பனா செய்தாள்.

விழா முடிந்தபின் அன்றைய நிகழ்ச்சிகளில் சிறந்தது என்று ஆண்டாள் இசை நாடகத்தை அறிவித்தனர். ஆனால் பரிசுகளை வாங்க சௌந்திரவல்லி தான் போனாள், கல்பனாவை முந்திக் கொண்டு. அதனால் கல்பனாவால் ஒன்றும் செய்ய முடியவில்லை. சௌந்திரவல்லி பார்வைக்கு சுமாராகத்தான் இருப்பாள். சற்று வயதானவளும் கூட. விழா முடியுமுன்பே அந்த அரசியல்வாதி புறப்பட்டுப் போக, அதன் பிறகு ஆசிரியைகள் க்ரூப் போட்டோ எடுத்துக் கொண்டனர். அதில் கல்பனாவையும் சேர்த்துக் கொண்டார்கள்.

கல்பனாவுக்கு யார் முன்னாலும் வரப் பிடிக்காதுதான். ஆனாலும் தான் இத்தனை நாள் கஷ்டப்பட்டு செய்த வேலைக்கான புகழ் இன்னொருவருக்குக் கிடைத்த போது அவளுக்கு வருத்தமாகத்தான் இருந்தது. எதையும் செய்ய முடியாத ஆற்றாமை, மாணவிகள், மற்றும் சில ஆசிரியைகள் தொலை தூரத்திலிருந்து வருவதால் சாதாரணமாக அந்தப் பள்ளியில் நிகழ்ச்சிகளை *சீக்கிரமே* ஆரம்பித்து, *சீக்கிரமே* முடித்து விடுவார்கள். அதுபோல் இன்றைய நிகழ்ச்சியும் *சீக்கிரமே* ஆரம்பித்து, *சீக்கிரமே* முடிந்து விட்டது. இல்லத்திற்கு எல்லோரும் வேனில் திரும்பி விட்டனர்.

இரவு உணவு ஆனதும் கல்பனாவைத் தன் அறைக்கு அழைத்தாள் சரோஜினி. கல்பனா வந்ததும் ''உட்கார், கல்யாணி!'' என்றாள் சரோஜினி, வழக்கமாக அவள் சரோஜினியிடம் வரும்போதெல்லாம் தாய்ப்பசுவிடம் போகும் கன்றை போல ஒரு பாச உணர்வு அவளிடம் ஓங்கி இருக்கும். அன்றென்னவோ அது சற்று குறைந்திருந்தது.

''என்ன கல்யாணி, உனக்கு என் மேலே ரொம்ப கோபமா? இருக்கத்தான் செய்யும். போகட்டும் நீ சொல்லு! அந்த அரசியல்வாதி வந்தாரே, அவரைப் பத்தி உனக்கென்ன தெரியும்?'' என்று கேட்டாள் சரோஜினி.

''அவரைப் பற்றியா? அவர் கட்சியில் ரொம்பவே முக்கியமானவர். இன்னும் கூட பெரிய பதவிகள் எல்லாம் அவருக்காக காத்திருக்கின்றன என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''உனக்குத் தெரிந்தது இவ்வளவுதான். ஆனால் அவர் எந்த இடத்திலிருந்து இந்த உயரத்திற்கு வந்திருப்பவர் என்று தெரியுமா?''



''அவர் அடிமட்டத் தொண்டனாக இருந்தவர் என்று சொல்வார்கள். அது சரி, என்னிடம் எதற்காகம்மா இதையெல்லாம் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''காரணமாகத்தான். அடிமட்டத் தொண்டன் என்றால் அரசியலில் என்ன அர்த்தம் தெரியுமா? நிறைய பேர் விஷயத்தில் அது பேட்டை ரவுடி அப்படின்னு அர்த்தம். இப்போ இருக்கிற நிறைய அரசியல்வாதிகளுக்கு ஒழுக்கம் என்பது பூஜ்ஜியம்தான். பணம், பெண் இரண்டு ஆசையுமே அளவிட முடியாத அளவு அதிகம். எல்லாரும் இல்லாவிட்டாலும் பெரும்பாலானோர் அப்படிப் பட்டவர்கள்தான்'' என்றாள் சரோஜினி. கூடவே ''நீ எத்தனை அழகா இருக்கேன்னு யாராவது சொல்லியிருக்காங்களா?'' என்றும் கேட்டாள்.

சற்று நேரம் மௌனம் சாதித்தாள் கல்பனா.

''ம், சொல்லம்மா'' என்றாள் சரோஜினி.

''சின்ன வயசிலேருந்து நான் ரொம்ப அழகுன்னு எல்லோரும் சொல்லிச் சொல்லி போரடிச்சுப் போன விஷயம்மா அது. அந்தப் பாழாய்ப் போன அழகுதான் என்னை இந்த நிலைமைக்கு ஆளாகியிருக்கிறது.

''வாஸ்தவம்தான் கல்யாணி! நீ ரொம்பவே அழகுதான். அதிகமான அழகு எவ்வளவு ஆபத்தானது என்று உனக்குத் தெரிந்திருக்கும். உனக்கு எதிரியும் அதுவேதான். அதனால்தான் இன்னிக்கு நீ ஸ்டேஜுக்கே வராமல் உன்னைப் பாதுகாத்தேன். வந்திருந்த ஆள் கண்ணில் நீ பட்டிருந்தால் அவ்வளவுதான். அந்த ஆள் கண் அசைத்தாலே போதும். உன்னை தூக்கிண்டு போக ஆட்கள் ரெடி. அப்புறம் உன் கதி என்ன? உன் பெண் என்ன ஆவது? அதனால்தான் இன்னிக்கு உன்னை

அந்த ஆள் கண்ணில் படாமல் பார்த்துக்கிட்டேன். சௌந்திரவல்லிக்குக் கூட தான் போய் உனக்கான பரிசை வாங்க இஷ்டமேயில்லை. இப்போ உன்னை ஒதுக்கி வெச்சதுக்கு காரணத்தைச் சொல்லிட்டேன். இப்போ கோபமில்லையே எங்க பேரில் எல்லாம்?'' என்று அவளை ஆதரவுடன் தட்டிக் கொடுத்துக் கொண்டே கேட்டாள் சரோஜினி.

கல்பனா தன் நாற்காலியிலிருந்து கை கூப்பிய வண்ணம் எழுந்தாள். அவள் கண்களில் கரகரவென்று கண்ணீர் வழிந்து ஓடியது.

''அம்மா, என்னை மன்னிச்சுடுங்க. எப்பேற்பட்ட ஆபத்திலிருந்து என்னைக் காப்பாத்தியிருக்கீங்க. அப்பேற்பட்ட உங்க மேலே எனக்கு கொஞ்சம் கோபம் வந்தது பெரிய தப்புதான். நான் அவசர புத்திக்காரி. நான் அறியாமே செஞ்ச இந்த தப்பை பெரிய மனசு பண்ணி மன்னிச்சுடுங்கம்மா'' என்று அழுதுகொண்டே அவள் தோளில் சாய்ந்தாள்.

''அழாதேம்மா, எனக்கு உன் நலன்லே எப்போதுமே அக்கறை உண்டு. உனக்கு என் துணையும் எப்போதும் உண்டு'' என்று ஆறுதல் சொன்னாள். சற்று நேரத்திற்குப் பிறகு தன் வீட்டை நோக்கி நடக்கும்போது இத்தனை நல்ல மனிதர்கள் கிடைக்க என்ன தவம் செய்திருப்போம் என்று நினைத்துக் கொண்டாள் கல்பனா.



## 34

பாட்டு கிளாஸ் முடித்துவிட்டு ஸ்ருதி பாக்ஸை அதன் பெட்டியில் வைத்து மூடினாள் கல்பனா. இப்



போது ஆறு ஆறு பேராக இரண்டு செட் இரண்டு நாட்களுக்கு வருகிறார்கள். நான்கு செட் மாணவிகள் 24 பேர் அநேகமாக எல்லோரும் பக்கத்து வட்டாரத்திலிருந்து வருபவர்கள். இப்போதெல்லாம் கிளாஸ் முடிந்த பின் மாணவிகள் எல்லாம் ரிஸப்ஷன் ரூமில் காத்திருப்பார்கள். அங்கே இருந்துதான் குழந்தைகளை அழைத்துப் போக வேண்டும் என்று ஒரு விதியையே வைத்து விட்டார்கள் சரோஜினியும், வனிதாவும். அதற்குக் காரணம் சில இளம் வயது ஆண்கள் மாணவிகளின் மாமா, சித்தப்பா, ஏன் அண்ணா, அப்பாவே கூட கல்பனாவைப் பார்த்த பார்வைதான். இந்த விதியையும் கல்பனாவிடம் சொல்லிவிட்டுத்தான் ஏற்படுத்தினார்கள். அன்றைக்கு கல்பனா மனம் நொந்து வனிதாவிடம் கேட்டாள். ''ஏன்தான் இந்த ஆண்கள் இப்படி இருக்கிறார்களோ? எப்படித்தான் நாம் பத்திரமாக இருப்பது?'' என்று.

''இந்தப் போராட்டம் இன்னிக்குத்தானா இருக்கு? புராண காலத்திலிருந்து ராவணனும், துச்சாதனனும் இருக்கத்தானே செய்தார்கள்? அதற்கு நடுவில்தான் சீதையும், திரௌபதியும் தங்களைக் காப்பாற்றிக் கொண்டார்கள். சரோஜினி மேடம் சந்திக்காத போராட்டமா, இல்லை நான் தாண்டி வராத இடைஞ்சல்களா? சுமாராக இருக்கும் பெண்களையே விட மாட்டார்கள். உன்னை மாதிரி பேரழகாக வேறு இருந்து விட்டால் கேட்கணுமா?'' என்றாள் வனிதா.

இப்போது ப்ரீதிக்கு எல்லாம் தெரிகிறது. ''அம்மா, என் அப்பா எங்கே'' என்ற அந்த பயங்கரமான, கல்பனா எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்தக் கேள்வியை முதல்

தாம் குழந்தை கேட்டபோது அதிர்ந்து போனாள் கல்பனா. நிச்சயமாக இந்தக் கேள்வியை எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தாள். ஆனால் இத்தனை சீக்கிரத்தில், குழந்தை இரண்டாம் வகுப்பு படிக்கும்போதே கேட்டுவிட்டாள் என்பது அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''வெளிநாட்டிற்குப் போயிருக்காரம்மா, சீக்கிரம் வந்துடுவார்'' என்று சொல்லிவிட்டு உள்ளே போய் அவள் அழுத அழுகை அவளுக்குத்தான் தெரியும். அப்போதைக்கு குழந்தை ஓடிவிட்டாள். இனி எப்போதெல்லாம் கேட்பாளோ, என்னவெல்லாம் சொல்லி சமாளிக்க வேண்டி வருமோ என்று தினமும் பயம்தான் கல்பனாவுக்கு. எத்தனை நாள் முடிகிறதோ இதைச் சொல்லித்தான் தள்ளணும் என்று நினைத்துக் கொண்டாள்.

அன்று காலை எழுந்திருக்கும்போதே அன்று ஸ்கூல் லீவு என்பது நினைவுக்கு வந்தது. ஆம், அன்று ஆகஸ்ட் 15. சுதந்திர தினம். அன்றைக்கு ஆடி வெள்ளிக்கிழமை என்பதும் தேதி கிழிக்கும்போது தெரிந்தது. காபியை வனிதா கையில் கொடுக்கவும், வாங்கிக் கொண்டு எதிர்த்தாற்போல் இருந்த அவளுக்குப் பிடித்தமான கொடி மண்டபத்தில் போய் உட்கார்ந்தாள். ப்ரீதி இன்னும் தூங்கிக் கொண்டிருந்தது. சரோஜினி வாக்குக் கொடுத்தபடி வீடுகளையெல்லாம் அவரவருக்குப் பதிவு செய்து கொடுத்து விட்டாள். நான் வேறு வீட்டில் போய் இருக்கட்டுமா என்று வனிதா கேட்ட மாத்திரத்திலேயே கல்பனாவுக்கு துக்கம் தொண்டையை அடைத்து விட்டது ''என்னக்கா நீங்க இப்படிக் கேக்கறீங்க?'' என்று கேட்டாள்.



''இல்லேம்மா, இங்கே இருக்கறது ஒரு பெட் ரூம் தானே! குழந்தையும் இருக்கா. நீ கொஞ்சம் தாராளமா இருக்கலாமேன்னு சொன்னேன். அவ்வளவுதான் உனக்கு இஷ்டமில்லைன்னா நான் போகல்லே'' என்று சொல்லிவிட்டாள். ஸ்கூலிலிருந்து குழந்தை வந்தால் வனிதாதான் அவளுக்கு எல்லாம் செய்வாள். அதுவும் பெரியம்மா, பெரியம்மா என்று அவளுடன் ஒட்டிக் கொண்டு விட்டது. இரவில் இரண்டு பேருக்கும் நடுவில் குழந்தையை விட்டுக் கொண்டு படுப்பார்கள்.

கொடி படர்ந்த அந்த குட்டி மண்டபத்தில் உட்கார்ந்த கல்பனாவுக்கு மைலாப்பூர் நினைவுகள் வந்து அப்பியது. ஆடி வெள்ளிக்கிழமையென்றால் மைலாப்பூர் அப்படி அமர்க்களப்படும். அங்கு என்ன கோவில்களுக்குப் பஞ்சமா? அதுவும் இவர்கள் வீடு முண்டகக்கண்ணியம்மன் கோவிலுக்கு பக்கத்தில் இருந்ததா? கோவில்களில் பாட்டுப் போட்டு விடுவார்கள் காலையில். பொங்கலிடுபவர்களும், புற்றுக்குப் பால் தெளிப்பவர்களுமாக கோவில் கோலாகலமாகத்தானிருக்கும். அம்மா இவளையும், சாதனாவையும் அழைத்துக் கொண்டு புற்றுக்குப் பால் தெளிக்கப் போவாள். எப்படி இருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் என்று எண்ணி ஒரு ஏக்கப் பெருமூச்சு விட்டாள். சாயந்திரம் திரும்ப கபாலி கோவில், கேசவப் பெருமாள் கோவில்களுக்குப் போய் கற்பக வல்லித் தாயார், மயூரவல்லித் தாயார் என்று எல்லா தரிசனங்களும் உண்டு. சில நாட்கள் மாதவப் பெருமாள் கோவிலுக்குப் போய் அமிர்தலஷ்மித் தாயாரைச் சேவித்துவிட்டு வருவார்கள்.

ஆஹா! ஒரு ஆடி வெள்ளிக்கிழமையில்தான் அனு ஆன்ட்டி. அதுதான் மீராவின் அம்மா தவறிப்

போனதுகூட என்று நினைவுக்கு வந்தது. மீராவின் போன் நம்பரைக்கூட எடுத்துக் கொள்ளாமல் வீட்டை விட்டுப் புறப்பட்டுப் போனோமே, என்ன பைத்தியக்காரத்தனம் என்று இப்போதும் தன்னையே நொந்து கொண்டாள். ரவியைத்தான் சந்திக்க முடியவில்லை. மீராவையாவது பார்க்க முடிந்தால் நன்றாக இருக்குமே என்று நினைத்துக் கொண்டாள். இன்றைக்கு காலை ஒன்பது மணிக்கு இல்லத்தில் கொடி ஏற்று விழா. அது முடிந்த பின் யாரோ ஒருவரின் நினைவு நாளை முன்னிட்டு விருந்து சாப் பாடாம். அவர்கள் குடும்ப அங்கத்தினர்கள் எல்லோரும் வருவார்களாம். சரோஜினியும், வனிதாவும் சாப்பாடு சப்ளை செய்பவர்களிடம் ஆர்டர் கொடுத்து விட்டார்கள். ஆம்! நிறைய எக்ஸ்ட்ரா பதார்த்தங்கள் எல்லாம் செய்ய வேண்டியிருந்தால் வெளியே ஆர்டர் கொடுத்து விடு வார்கள். இப்போதெல்லாம் பாருவால் முடிவதில்லை. எல்லோருக்கும் நாளுக்கு நாள் வயதாகிக் கொண்டு போகிறதில்லையா?

திடீரென்று தான் ரொம்ப நேரமாய் அங்கு பழைய நினைவுகளில் மூழ்கி உட்கார்ந்து விட்டது நினைவுக்கு வர, தன் வீடு நோக்கி விரைந்தாள். குளித்து, பூஜை முடித்து, தயார் ஆகி இவர்கள் வரும்போது கொடியேற்று விழாவிற்கான நேரம் நெருங்கி விட்டது.

இவளும் போய் அந்த சின்ன மைதானத்தில் விழா விற்கான ஏற்பாடுகளைச் செய்ய உதவினாள். சரோ ஜினி, மற்றும் எல்லோரும் வந்தாகி விட்டது: வரும் விருந்தாளிதான் கொடியேற்றப் போகிறார். பாட்டிதான் கல்பனாவோடு சேர்ந்து ''தாயின் மணிக்கொடி பாரீர்'' பாடுவதாகச் சொல்லியிருந்தாள். ப்ரீதி தன் மழலையில்



'தேச பக்தி' என்ற தலைப்பில் இரண்டு நிமிடப் பேச்சுக் குத் தயாராக இருந்தாள். பாமாதான் அதைத் தயார் செய்திருந்தாள்.

எல்லோரும் சித்தமாக இருக்க வாசல் கேட்டினுள் நுழைந்தது அந்த நீலநிறப் பெரிய கார். காரிலிருந்து ஒரு வயதான அம்மா, ஒரு வயதான ஆண், ஒரு இளம் வயது பெண்மணி, ஒரு குட்டிப் பெண் ஆகியோர் இறங்கி னார்கள்.

கல்பனா பார்த்துக் கொண்டே இருந்தாள். அந்த இளம் வயது பெண்மணியைப் பார்த்ததும் அவளுக்கு ஷாக் அடித்தது போலிருந்தது. ஆஹா! இவள் மீரா மாதிரி இருக்கிறாளே! என்று நினைத்துக் கொண்டவள் அவசரமாக சற்று அருகில் போய்ப் பார்த்தாள். ஆம், மீராவேதான்! தன்னை மறந்தவள் ''மீரா'' என்று கத்திக் கொண்டே ஓடிப் போய் அவளைக் கட்டிக் கொண்டாள். திகைத்துப் போன அந்தப் பெண் தன்னை சுதாரித்துக் கொண்டு இவளை உற்றுப் பார்த்து ''கல்யாணி, நீயா?'' என்று கேட்டுக் கொண்டே அவளைக் கட்டிக் கொண்டு விட்டாள். சரோஜினி உட்பட எல்லோரும் பிரமித்து நிற்க, இரண்டு, மூன்று நிமிடங்கள் பிடித்தன. இவர்கள் தன்னிலை வருவதற்கு. இருவர் கண்களிலும் கண்ணீர் வழிந்தோடின.

சரோஜினி மெல்ல, ''கல்யாணி, இந்த மேடத்தை உனக்குத் தெரியுமா? நீங்கள் இருவரும் ரொம்ப நெருங்கிய சிநேகிதர்களா?'' என்று கேட்டாள்.

''ஆமம்மா! யூ.கே.ஜி.யிலிருந்து 11வது வரை இரண்டு பேரும் ஒரே ஸ்கூலில். ஒரே செக்ஷனில்

படிச்சோம். எங்க இரண்டு பேருக்குமே வேறே நெருங்கின ஸ்நேகிதிகள் கிடையாது'' என்றாள் கல்பனா தொடர்ந்து ''மன்னிச்சுக்குங்க, அம்மா! எத்தனையோ வருஷம் கழிச்சு மீராவைப் பார்க்கறேன். அதான் உணர்ச்சி வசப் பட்டுட்டேன்'' என்றாள் கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டே.

''சரி, வாங்க! ஃபங்க்ஷனை நல்லபடியா நடத்திடுவோம். அப்புறமா நீங்க இரண்டு பேரும் சாவகாசமாகப் பேசலாம்'' என்று சரோஜினி சொல்ல, இருவரும் நடக்க ஆரம்பித்தனர். மீராவின் அப்பா பார்த்தாவும், பாட்டி புஷ்பாவும் பின் தொடர கல்பனா அவசரமாக அவர்கள் காலைத் தொட்டு வணங்கினாள்.

''நம்ம கல்யாணியா இது?'' என்றாள் பாட்டி புஷ்பா. ''நல்லா இருக்கியாம்மா, கல்யாணி?'' என்று வினவினார் பார்த்தா.

''நன்னா இருக்கேன், அங்கிள், வாங்க!'' என்று அழைத்துப் போனாள். அந்தக் குட்டிப் பெண் மீராவின் பெண்ணாக இருக்க வேண்டும். அது முன்னே ஓடிப் போய் விட்டது. பார்த்தா கொடியேற்ற அனைவருமே சுற்றி நின்று ''ஜனகனமன'' பாடினர் அடுத்ததாக பாட்டியும் கல்பனாவும் பாடினார்கள். தாத்தா ஒரு சின்ன சொற்பொழிவு நிகழ்த்தினார். அதன் பின் குழந்தை ப்ரீதியின் பேச்சு. எல்லோரும் அதன் மழலையை வெகுவாக ரசித்தனர்.

பார்த்தா பேச ஆரம்பித்தார். இந்த தேசிய நன்னாளில் தேசம் காக்கும் பணி புரிந்து ஓய்வு பெற்ற அவருக்கு பேச நிறைய விஷயங்கள் இருந்தன. சுவாரஸ்யமான அவர் பேச்சிற்குப் பிறகு சரோஜினியின் நன்றி உரை. பின் ஜெய்ஹிந்த் கோஷம் இடம்பெற விழா முடிவுற்றது.



எல்லோரும் பிரார்த்தனை கூடத்திற்குச் சென்றார்கள். கையோடு கொண்டு வந்திருந்த அனுராதாவின் போட்டோவை, மீரா கல்பனாவிடம் கொடுக்க அவள் அதை அங்கிருந்த ஒரு மேடையில் வைத்து மீரா கொண்டு வந்திருந்த பூச்சரத்தை அந்த போட்டோவிற்கு அணிவித்தாள். விளக்கும் ஏற்றி வைத்து எல்லோரும் சற்று நேரம் கண் மூடி தியானம் செய்தனர். பிறகு எல்லோரும் சாப்பிடச் சென்றார்கள். எல்லோரும் அமர, மீரா பரிமாற ஆசைப்பட்டாள்.

''முழுசாக உன்னால் முடியாதம்மா, ஒன்று செய். நீ உன் கையால் இனிப்பைப் பரிமாறிவிடு. மற்றவற்றை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்'' என்றாள் சரோஜினி. பிறகு எல்லோரும் சாப்பிட அவர்கள் முடிக்கும் வரை கூட பொறுக்காத மீரா, ''கல்யாணி, எத்தனை விஷயங்கள் இருக்கு பேச! எப்போது பேசலாம்?'' என்று கேட்டாள்.

இவர்கள் சாப்பிட உட்கார்ந்ததும் முன்னால் சாப்பிட்டவர்கள் பரிமாறினர். மீராவும் கல்பனாவும் பேசிக் கொண்டே இருந்தனர். ''நீங்கள் இருவரும் சாப்பிடாமல் பேசிக் கொண்டே இருக்கிறீர்களே! முதலில் சாப்பிடுங்கள் அப்புறம் பேசலாம்'' என்றாள் சரோஜினி.

சாப்பிட்டு முடிக்கும் முன்பே மீரா கல்பனாவிடம் 'வரும் ஞாயிற்றுக்கிழமை தான் வந்து கல்யாணியைத் தன் வீட்டிற்கு அழைத்துப் போவதாகவும் அன்று முழுவதும் அவள் தன்னுடனேயே தங்க வேண்டும்' என்றும் கேட்டுக் கொண்டாள். ஆனால் கல்பனா அந்த ஏற்பாட்டிற்கு மறுத்து விட்டாள். தான் எக்காரணம் கொண்டும் எங்கும் போவதில்லை என்றும், அதற்கு

பதிலாக மீரா ஞாயிறு பூராவும் தன்னுடன் தங்க வேண்டும் என்றும் மீராவை வேண்டிக் கொண்டாள். இந்த ஏற்பாட்டிற்கு தான் சரோஜினி அம்மாவிடம் அனுமதி வாங்கி விடுவதாகவும், அதனால் இதற்கு தடை சொல்லாமல் மீரா ஒத்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டாள். கல்பனாவின் பிடிவாதத்தை நன்கு அறிந்திருந்த மீரா தானே வருவதாக ஒப்புக் கொண்டாள்.

''உன் பெண்ணிற்கு என்ன பெயர் வெச்சிருக்கே, மீரா?'' என்று கேட்டாள் கல்பனா.

''எங்கம்மா நினைவா அனுபமான்னுதான் பேர் வெச்சுருக்கோம்'' என்றாள் மீரா.

''மீரா, இன்னிக்கு காலைலேதான் எங்கே என் வாழ்நாளிலே உன்னைப் பார்க்காமே போயிடுவேனோன்னு நினைச்சேன். உனக்கு என்ன டெலிபதி வேலை செஞ்சுது? எப்படி இன்னிக்கு. இங்கே வந்தே? பாக்கப்போனா இன்னிக்கு ஆடி வெள்ளிக்கிழமை. அனு ஆன்ட்டி போனதுகூட இப்படிப்பட்ட ஒரு நாள்லேதான்னு நினைச்சுண்டேன்னு நான் சொன்னா நீ நம்புவியா?'' என்று கேட்டாள் கல்பனா.

''நம்புவேன், கல்யாணி, நிச்சயமாக நம்புவேன்! அன்னிக்கு நீதானே என்னோட முழுசா இருந்தவ? நீ நிச்சயமா நினைச்சிருப்பே! அடிக்கடி பேசிண்டாத்தானா, பார்த்துண்டாத்தானா? நம்ம மாதிரி நிஜமான சிநேகிதிகளுக்குள் அதெல்லாம் தேவையே இல்லை. அது சரி! நீ எப்படி இந்த இல்லத்திலே? உனக்கு தனியா வீடு வேறே குடுத்துருக்காங்க?'' என்று ஆவலுடன் கேட்டாள் மீரா.



''அது ஒரு பெரிய கதை மீரா. நாம் தான் ஞாயிறு சந்திக்கப் போறோமே, அப்ப எல்லாம் விவரமா சொல்றேன்.''

''அம்மா, மீரா! டைம் ஆயிடுத்தம்மா போகலாமா? நீதான் சன்டே வரப் போறியே அப்போ பேசிக்கோ மீதியை'' என்றார் பார்த்தா.

அவர்கள் எல்லோரும் கிளம்பி விட்டார்கள். ''மறந்தே போயிட்டேனே! மீரா, உன் போன் நம்பரைக் குடு'' என்று கேட்டாள் கல்பனா. அதற்குள் பார்த்தா தன் விஸிட்டிங் கார்டை கொடுக்கவே நன்றி சொல்லி வாங்கிக் கொண்டவள், ''மீரா, தவறாம சன்டே வந்துடுவேயில்லே?'' என்று கேட்டாள்.

''உன்னைவிட எனக்குத்தான் க்யூரியாசிட்டி அதிகமா இருக்கு. நிச்சயமா வந்துடுவேன்'' என்று உறுதி கூறி விடை பெற்றாள் மீரா.



## 35

வெள்ளிக்கிழமை அவர்கள் போக விட்டு சனிக்கிழமையை கழுத்தைப் பிடித்துத் தள்ள வேண்டியிருந்தது கல்பனாவுக்கு. ஞாயிறன்று எப்படா பொழுது விடியும் என்று காத்திருந்தது. சீக்கிரமே எழுந்து தானும் தயாராகி மீராவிற்குப் பிடிக்கும் என்று அடைக்கும் அரைத்து வைத்து விட்டாள். இவள் படும் பாட்டைப் பார்த்த வனிதா, ''கல்யாணி, மத்தியானச் சாப்பாட்டை நான் தயார் பண்ணிடறேன். நீ பதட்டப்படாமல் இரு'' என்றாள். என்றாலும் கல்பனா தானே கத்திரிக்காய் சுட்டு, துவையலுக்குத் தோலுரித்து வைத்துவிட்டு,

அப்பளம் பொரித்து, வெள்ளரிக்காய் பச்சடியும் பண்ணி வைத்தாள். "அனு எப்போம்மா வருவாள்?" என்று ப்ரீதி வேறு நொடிக்கொருதரம் கேட்டுக் கொண்டே இருந்தாள்.

கல்பனா எதிர்பார்த்திருந்த அந்தப் பொன்னான நேரமும் வந்து விட்டது. அதோ, மீராவின் கார் கேட்டினுள் நுழைகிறதே! கல்பனா அவசரம் அவசரமாக அவளை வரவேற்க வாசலுக்கு ஓடினாள். அனுபமாவுடன், மீரா வந்திறங்கினாள். கூடவே டிரைவர் ஒரு பெரிய கூடை ஒன்றில் நிறைய பழங்கள் எடுத்து வந்தார். அதற்குள் ப்ரீதி குடுகுடுவென்று ஓடிப்போய் அனு காரிலிருந்து இறங்கும்போதே அவள் கைகளைப் பிடித்துக் கொண்டாள். அனு தன் கைகளில் இருந்த இரண்டு பெரிய சாக்லெட் பார்களை ப்ரீதிக்கு நீட்டினாள். பதிலுக்கு ப்ரீதி வனிதா தன்னிடம் கொடுத்திருந்த இரண்டு பெரிய பிஸ்கெட் பாக்கெட்களை அவளிடம் கொடுத்தாள்.

"வா, மீரா! வா, அனுக்குட்டி!" என்று மலர்ந்த முகத்தோடு அவர்களை வரவேற்ற கல்பனா, "எதுக்கு இத்தனை பழங்கள், மீரா?" என்று கேட்டாள்.

"இருக்கட்டுமே, இல்லத்தில் எல்லோருமாகச் சாப்பிடலாம், இல்லையா?" என்று மீரா சொல்லிக் கொண்டிருக்கும்போதே அந்தப் பக்கமாக வந்த சரோஜினி மீராவைப் பார்த்ததும், "வாம்மா, மீரா! இன்னிக்கு உன் சிநேகிதியோடு பழங்கதைகள் பேசும் தினமா? ஜமாய்ங்க. எங்க கல்யாணி முகத்திலே இத்தனை சிரிப்பை நான் இன்னிக்குத்தான் பார்க்கிறேன்" என்றாள்.



"ஆமாம்மா! ரொம்ப வருஷத்து சமாச்சாரம் இருக்கு. பேச" என்றாள் மீரா.

அதற்குள் ப்ரீதி, அனுபமாவுடன் தோளில் கை போட்டுக் கொண்டு நடப்பதைப் பார்த்த சரோஜினி இவர்களுக்குக் காண்பித்து, "அம்மாக்கள் சிநேகம் போலவே இவர்கள் சிநேகமும் வளரட்டும்" என்று சொல்லிக் கொண்டே நகர்ந்து விட்டாள்.

மீராவைத் தன் வீட்டிற்குள் அழைத்துச் சென்ற கல்பனா, "இரு, நான் போய் டீ போட்டு கொண்டு வரேன்" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே வனிதா ஒரு டிரேயில் கொஞ்சம் பிஸ்கெட்டுகளுடன், டீ போட்டு எடுத்து வந்தாள்.

அவள் கைகளை ஆதரவுடன் பற்றிக் கொண்ட கல்பனா "அது எப்படிக்கா, நான் நினைக்கிறதை எல்லாம் நீங்க செஞ்சு முடிக்கிறீங்க? ரொம்ப தேங்க்ஸ்க்கா!" என்றாள்.

"இது என்னம்மா பெரிய விஷயம்? மீரா மாதிரி நானும் உனக்கு பெஸ்ட் பிரண்ட் தானே!" என்றாள் சிரித்துக் கொண்டே.

மூன்று பேருமாக டீ அருந்திவிட்டு "வா, மீரா, வாங்கக்கா! நாம அந்த கொடி வீட்டில் உட்கார்ந்து பேசலாம்" என்று அழைத்தாள் கல்பனா.

"இல்லேம்மா, நீ போய் உன் சிநேகிதியோட என்ஜாய் பண்ணு! சாப்பிடற வேளைக்கு உங்களைக் கூப்பிடறேன்" என்றாள் வனிதா.

"ஏதாவது உதவி வேணும்னா கூப்பிடுங்க, அக்கா!" என்றாள் கல்பனா.

''அதெல்லாம் ஒண்ணும் வேணாம்மா! உனக்கு இன்னிக்கு முழு நாளும் விடுமுறை தான்'' என்றாள் வனிதா.

''மீரா, உனக்குப் பிடிக்குமேன்னு அடைக்கு அரைச்சு வெச்சுருக்கேன், சாப்பிடலாமா?'' என்று கல்பனா கேட்க ''நான் காலை டிபன் பண்ணிட்டுத்தான் வந்திருக்கேன். அடையை ராத்திரி சாப்பிடலாம்'' என்றாள் மீரா.

''அக்கா, அப்போ எல்லாருமா 11 மணிக்கு காலைச் சாப்பாடு சாப்பிடலாமா?'' என்று கேட்க, ''அதுவே சரியா இருக்கும்'' என்றாள் வனிதா. ஒரு அரை மணி நேரம் சென்றதும், இரண்டு கப்களில் காபியும், பிரெட் சாண்ட்விச்சும் கொண்டு வைத்தாள் வனிதா.

கல்பனாவும், மீராவும் ரொம்ப நேரம் பேசிக் கொள்ளவேயில்லை. ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்திருந்தனர். இருவர் மனங்களும் வெவ்வேறு விதத்தில் சஞ்சலப் பட்டுக் கொண்டிருந்தன.

சற்றைக்கெல்லாம் சுதாரித்துக் கொண்ட கல்பனா, ''மீரா உனக்குக் கல்யாணம் ஆயிடுத்தா?'' என்று கம்மிய குரலில் கேட்டாள். மீரா பதிலேதும் சொல்லாமல் அவளை குறும்பாக ஒரு பார்வை பார்க்க, இரண்டு நொடிகள் கழித்துத்தான் கல்பனாவுக்குத் தன் கேள்வியின் விபரீத அர்த்தம் புரிந்தது.

''ஏய், மீரா! ஸாரிடி. வெரி வெரி ஸாரிடி. நான் ஒரு லூசு. உன் கல்யாண விவரமெல்லாம் கேட்க வந்தவள், வேறென்னமோ தப்பா கேட்டுட்டேன். ஒண்ணும் மனசிலே வெச்சுக்காதேடி. ரொம்ப ஸாரி'' என்றாள்



கல்பனா. மீரா ஓவென்று சிரிக்க, தானும் அவளுடன் சேர்ந்து பெரிதாகச் சிரித்தாள் கல்பனா கண்களில் நீருடன்.

இரண்டு பேரும் சிரித்துக் கொண்டிருப்பதை வெளியே வந்து பார்த்த வனிதா, வேகமாக அவர்களிடம் சென்று, ''மீரா, நீங்க அடிக்கடி இங்கே வந்து போயிகிட்டுருங்க. எங்க கல்யாணி இந்த மாதிரி வாய்விட்டுச் சிரித்து நாங்க இத்தனை வருஷத்தில் பார்த்ததே இல்லை. குழந்தை ப்ரீதி வளர்ந்து வருகையில் கூட இப்படி எல்லாம் சிரித்ததே இல்லை. நீங்க இங்கே வந்தது கல்யாணிக்கு பெரிய வரம்தாம்மா'' என்று நெகிழ்ந்து போய்ச் சொல்லிவிட்டு தான் திரும்ப வீட்டிற்குள் போய் விட்டாள்.

''என்ன கல்யாணி! இவங்க சொல்றதெல்லாம் கேட்டா ரொம்ப வருத்தமா இருக்கே! என் கல்பனா இருக்கட்டும். நீ ஏன் இந்த இல்லத்தில் இருக்கே? உன் புருஷன் எங்கே? நான் மும்பையிலிருந்து முதல் தடவை வந்த போதே உங்க வீட்டுக்குப் போய் விசாரிச்சேன். நீ கல்யாணம் செஞ்சிண்டு போயிட்டே. உன் அப்பா வீட்டை வித்துட்டு மலேசியா போயிட்டார்னும் சொன்னாங்க. உங்கப்பாவோட போன் நம்பர் தெரிஞ்சிகிட்டு போன் பண்ணினாக்க, 'எனக்கு ஒரு பெண் மட்டும்தான், அவ பேரு சாதனா. நீங்க சொல்ற பேர்லே எனக்கு பெண்ணெல்லாம் கிடையாது'ன்னு கோபமா சொல்லி போனை வெச்சுட்டாரு. என்ன ஆச்சு கல்பனா? அவங்களுக்கு இஷ்டமில்லாம வேறே ஜாதிக்காரரைக் கல்யாணம் பண்ணிண்டியா? உன்னையெல்லாம் ரொம்பவே கட்டுப் பாடாகத் தானே வளர்த்தாங்க? அப்படி நீ காதல்

பண்ணவெல்லாம் சான்ஸே இல்லையேடி'' என்றாள்
மீரா.

''எல்லாம் விதிடி, விதி! என் கதை மொத்தமும் சொல்
றேன் உங்கிட்டே சொல்லாமே யார்கிட்டே சொல்லப்
போறேன், சொல்லு? நான் லவ் பண்ண ஆரம்பிச்ச
போதே உங்கிட்டே சொல்லியிருந்தா, நீ என்னைக்
கொஞ்சம் ஜாக்கிரதை பண்ணியிருப்பியோ, என்னவோ!
எல்லாம் வயசுக் கோளாறு, கிரகக் கோளாறு. வேறென்ன
சொல்றது?

''சொல்லு கண்மணி! என்னதான் நடந்தது?''

தான் பஸ்ஸுக்கு நின்றபோது ரவியை சந்தித்த
நாளிலிருந்து, அவன் மீது தான் காதல் கொண்டது,
அங்கே, இங்கே சந்தித்தது என்பதில் ஆரம்பித்து,
தற்போது இல்லத்து வாழ்க்கை வரை முழுவதையும்
கொட்டித் தீர்த்துவிட்டாள் கல்பனா.

மீராவுக்கும் கண்கள் குளமாயின. ரவியைப் பிரிந்து
தான் அவஸ்தை பட்டதைச் சொல்லும்போது தன்
மடியில் சாய்ந்து கதறியவளை மீரா கஷ்டப்பட்டுத்தான்
தேற்ற வேண்டியிருந்தது.

''சரி, நீ ஏன் சும்மா இருக்கே? போலீஸை அணுகினா
கண்டு பிடிச்சுக் கொடுப்பாங்களே! நீ முயற்சி செய்ய
லியா?'' என்று கேட்டாள் மீரா.

''இல்லை மீரா! அவர் இந்த மாதிரி என்னை விட்டு
விலகிப் போனது என்னோட தவறில்லை. எந்த காரணத்
தினால் விலகினாரோ, யாருக்குத் தெரியும்? சொன்னா
நீ ஆச்சரியப்படுவே! எனக்கு அவர்மேலே கோபம்
வரலே. இப்போவெல்லாம் அவர் என்னைத் தேடி



திரும்ப வருவார்ங்கற நம்பிக்கையும் போய்விட்டது.
இவ்வளவுதான் என் வாழ்க்கைனு எடுத்துண்டேன்.''

''என்ன முட்டாள்தனம் இது கல்பனா? உனக்கு
இப்போதான் கல்யாணம் பண்ணிக்கற வயசே வந்
திருக்கு. நீ அதே மாதிரி அழகாகவும் தான் இருக்கே!
வாழ்க்கையை வீணடிக்காமே நீ இன்னொரு...'' என்று
அவள் முடிக்கும் முன்பே அவள் வாயைப் பொத்தினாள்
கல்பனா.

''இதோ பார் மீரா! எனக்கு கல்யாண வாழ்க்கை
மேலெல்லாம் இப்போ துளிக்கூட நாட்டமில்லை. இன்
னொண்ணும் சொல்றேன். ப்ரீதியை நன்னா வளர்த்து,
ஆளாக்கி அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சுத்
தரதைத் தவிர வேறே எந்த நினைப்பும் என் மனதில்
இல்லை. போகட்டும் நீ உன்னைப் பத்திச் சொல்லு''
என்றாள் கல்பனா.

''நான் உன்னோடு கடைசியா பேசும்போது கூட,
மும்பையில் படிச்சிண்டுதான் இருந்தேன், இல்லையா?
அப்பா ரிடையர்டு ஆனதும் ஒரு பிஸினஸ் ஆரம்பிச்சார்.
பாட்டி ஒரு பார்ட்னர், எனக்கு பதினெட்டு வயசு ஆன
தும் நானும் ஒரு பார்ட்னர் என்று போட்டு மொட்டை
மாடியில் வைக்கும் பிளாஸ்டிக் டாங்க் பிஸினஸ்
ஆரம்பிச்சார். பிஸினஸ் நன்னாத்தான் போயிண்டிருந்தது.
ஆனால் அப்பாவுக்கு ஒரு அட்டாக் வந்துடுத்து. ரொம்
பவே பயந்து போயிட்டோம். கம்ப்ளீட்டா சரியானாலும்
ரொம்ப அலையக் கூடாதுன்னு டாக்டர் சொல்லவே.
நான் காலேஜை நிறுத்திட்டு ஆபீஸ் போக ஆரம்பிச்
சேன். எப்படியோ கரஸ்பான்டன்ஸிலே டிகிரி முடிச்சுட்
டேன். கொஞ்சம் இடைவெளி, அப்புறமா எம்.பி.ஏ.யும்

முடிச்சேன். அதற்கு முன்னாடியே சந்தரைச் சந்தித்திருந்தேன். அதெல்லாம் ஒரு கதை'' என்று மீரா சொல்லிக் கொண்டிருக்கும்போதே வனிதா வந்து இருவரையும் சாப்பிடக் கூப்பிட்டாள்.

ப்ரீதியும், அனுவும் எங்கே என்று இவர்கள் பார்க்க ஆரம்பிக்கும்போதே வனிதா ''இரண்டும் வந்து சமர்த்தா சாப்பிட்டுவிட்டு போச்சுங்களே! நீங்க கவனிக்கல்லியா? பேச்சு சுவாரஸ்யம், இல்லையா? வாங்க, சாப்பிட்டுவிட்டு மீதியை பேசுவீங்களாம்'' என்றாள்.

''அப்படியா, அனு சாப்பிட எப்படிப் படுத்துவாள் தெரியுமா, கல்பனா? கூட ப்ரீதி இருந்ததனால் சாப்பிட்ட சுவடே தெரியாமல் சாப்பிட்டுட்டு போயிருக்கா, பாரேன்'' என்றாள் மீரா.

''குழந்தைகள் சுபாவமே அதுதானே!'' என்றாள் வனிதா.

''மீரா, உனக்குப் பிடித்த சமையல், ஆனா சிம்பிள் சமையல்'' என்று சொல்லியபடி கல்பனா சாப்பாட்டுப் பதார்த்தங்களை மேஜையின் மேல் எடுத்து வைத்தாள். ''நான் வேணுமானா போட்டுட்டு சாப்பிடறேனே'' என்ற வனிதாவிடம், ''இல்லைக்கா, நாம மூணு பேரும் சேர்ந்தே சாப்பிடலாம். நீங்களும் வந்து உட்காருங்க'' என்றாள் கல்பனா. பாத்திரத்தைத் திறந்து கத்திரிக்காய் துவையலைப் பார்த்ததும் ''வாவ், கத்திரிக்காய் துவையலா? எப்படி இத்தனை வருஷம் கழிச்சும் எல்லாம் மறக்காமே இருக்கே?'' என்று கேட்டாள் கண்கள் விரிய.

அவளுக்கு ஒரு புன்னகையைப் பதிலாக்கிய கல்பனா மூவருக்கும் சாப்பாட்டை பரிமாற ஆரம்பித்தாள்.



சாப்பிடும்போது மீரா கேட்டாள். ''கல்பனா! ப்ரீத்தியை நீ இந்த ஸ்கூலிலே படிக்க வைக்கிறே. பாக்கியெல்லாம் நல்லாத்தான் இருக்கும், ஆனா இங்கிலீஷ் மட்டும் போதாது. ஒரு வலுவான இங்கிலீஷ் அடித்தளம் இல்லாத போனா எதிர்காலத்திலே ரொம்ப கஷ்டம்'' என்றாள்.

''நீ சொல்றதும் சரிதான், மீரா! எனக்கும்கூட அப்படித் தோணத்தான் செய்தது. நமக்கெல்லாம் நம்ம பள்ளிக்கூடத்தில் போட்ட அஸ்திவாரத்தால் தான் இன்னிக்கு குப்பை கொட்ட முடிகிறது'' என்றாள் கல்பனா.

''பின்னே ஏன் இந்த ஸ்கூலிலேயே வெச்சுருக்கே?''

''நீ சொல்ற இந்த ஒரு பாயிண்டைத் தவிர மற்ற எல்லாமே இங்கே நல்லாத்தான் இருக்கு. இந்த ஸ்கூல்னா ஆஸ்ரமத்தின் மத்த குழந்தைகளுடன் எங்க பஸ்ஸிலேயே போயிட்டு வந்துடுவா. அது ஒரு மேஜர் பாயிண்ட். இன்னொண்ணு வேறே ஸ்கூல்னா ஃபீஸும் அதிகம். அதுக்கு ஆட்டோல அனுப்பணும். அதுக்கு வேறே செலவாகும். என்னவோ அதையெல்லாம் யோசிக்கவேயில்லை.''

''இல்லை கல்யாணி! நீ அவளை ஒரு நல்ல கான்வெண்ட்லே சேர்த்துத்தான் ஆகணும். குழந்தைகளின் நம்பிக்கையான எதிர்காலத்திற்கு நாம செய்யற முதல் முதலீடு இதுதான்'' என்றாள்.

''யோசிக்கறேன்'' என்ற கல்பனா ரொம்ப தயங்க, மீரா ''இங்கே இல்லத்து தலைவி சரோஜினி ஆட்சேபிப்பாங்களா?'' என்றாள்.

''எனக்கு அப்படித் தோணலே. ஆனாலும் பாக்கி பேரிடமிருந்து அவளைப் பிரிக்கிறோமோ, அதன்

பலாபலன்கள் என்னவாகும் என்பதெல்லாம் யோசிக்கணும். சரோம்மா ஆட்சேபிக்கறாங்களோ, இல்லே சரிங்கறாங்களோ, நிச்சயமாக அவங்ககிட்டே பேசிட்டுத்தான் முடிவு செய்யணும்'' என்றாள் கல்பனா.

பேசிக் கொண்டே ருசித்துச் சாப்பிட்ட மூவரும் எல்லாவற்றையும் இடத்தில் வைத்து சுத்தம் செய்தனர்.

''எக்ஸலண்ட் சாப்பாடு வனிதாக்கா. நானும் உங்களை அப்படியே கூப்பிடலாம், இல்லையா?'' என்று கேட்டாள்.

''தாராளமாக அப்படியே கூப்பிடம்மா. நீ வரியேன்னு இன்னும் ஏதாவது இரண்டு ஐட்டம் பண்ணலாம்னா, கல்யாணி 'கொஞ்சம் பதார்த்தங்களானால்தான் ருசித்துச் சாப்பிட முடியும்னு மீரா எப்பவுமே சொல்லுவா'' என்று சொல்லிவிட்டாள்.''

''ஆமாங்க்கா நான் நல்லா ரசிச்சு, அனுபவிச்சு சாப்பிட்டேன்'' என்றாள் மீரா.

அதன் பிறகு வனிதா இவர்கள் இரண்டு பேரையும் நாசூக்காக தனியே விட்டுவிட்டு, ''நீங்க இரண்டு பேரும் படுத்து சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு ஆபீஸில் கொஞ்சம் வேலையிருக்கிறது'' என்று சொல்லி நகர்ந்து விட்டாள்.

இரண்டு பேரும் போய்க் கட்டிலில் படுத்துக் கொண்டார்கள். ''கல்யாணி நீ இந்த வீட்டைத்தான் வாங்கியிருக்கியா, நன்னா க்யூட்டா இருக்கு'' என்றாள் மீரா.

''ஆமாம். வாழ்க்கையைத் தொலைத்த எனக்கு இப்படி ஒரு பாதுகாப்பான வாழ்க்கையை அமைத்துக் கொடுத்திருப்பதற்கு ஆண்டவனுக்கும், ஆண்டவனுக்குச் சமமான சரோஜினி அம்மாவிற்கும் நான் ஆயுசு பூரா நன்றி செலுத்தினாலும் பத்தாது. இல்லையா மீரா?''



''நிஜம்தான் கல்யாணி! அப்படி ஒரு துணை அந்த நேரத்தில உனக்கு கிடைச்சு இருக்கலைன்னா நீ சின்னா பின்னமாகத்தான் போயிருப்பே. இப்போ மண வாழ்க்கை இல்லாட்டாலும், ஏதோ நல்லபடியாத்தான் ஓடிட்டு இருக்குன்னுதான் சொல்லணும்'' என்றாள் மீரா.

''உண்மைதான், ஏதோ இந்தக் கஷ்டத்திலும் ஆண்டவன் கருணை என் பக்கம் இருக்கு. சரி, நீ சொல்லு! நீ எப்படி இங்கே சந்திச்சே உன் கணவரை? கண்டதும் காதல் டைப்பா? விவரமாகச் சொல்லு'' என்றாள் கல்பனா.

''சொல்றேன். அப்பாவுக்குப் பதிலா நான் ஆபீஸ் போக ஆரம்பிச்சு கொஞ்ச நாள்லே ஒரு நாள் பேங்கிற்குப் போயிருந்தேன். என் அம்மாவிடம் தங்க நிப் போட்ட பார்க்கர் பேனா ஒண்ணு இருந்தது. ரொம்ப விலை உயர்ந்த பேனா. அதை, தான் இருந்தவரை பத்திரமா வெச்சிருந்தா. அவளுக்குப் பின்னாடி நான் அந்தப் பேனாவை யூஸ் பண்ணிண்டுருந்தேன். அன்னிக்கு பேங்கிற்கு அந்தப் பேனாவை எடுத்துண்டு போயிருந்தேன். அங்கேதான் சந்தர் பக்கத்துக் கவுண்டரில் ஏதோ சலானைப் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது போலிருந்தது. பேனா இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தார். பிறகு எங்கிட்டே வந்து பேனா கேட்டார். எப்படி மாட்டேன்னு சொல்றதுன்னு தயக்கத்துடன் கொடுத்தேன். என்னுடைய வேலையெல்லாம் ஆனவுடன் மறந்து போய் பேனாவை வாங்கிக் கொள்ளாமலேயே நான் கிளம்பிட்டேன்.

அவர் வேலை முடிந்ததும் பேனாவைத் திருப்பிக் கொடுக்க என்னைத் தேடியிருக்கிறார். அதுவரை என்ன பேனான்னுகூட பார்க்கல்லியாம். பார்த்ததும் ''ஐயோ, இவ்வளவு விலை உயர்ந்த பேனாவா இருக்கே! எப்படித் திருப்பிக் கொடுக்கப் போகிறோம்''னு கவலைப்பட்டிருக்கிறார்.

அந்த கிளார்க்கை என் வீடு ஏதாவது தெரியுமான்னு கேட்டிருக்கிறார். அவர் கையை விரித்துவிடவே, அன்றிலிருந்து தினம் இரண்டு வேளையும் அந்த பேங்கிற்கு வந்து போயிருக்கிறார். நான் என் கைப்பையிலிருந்த வேறு பேனாவை வைத்து என் அன்றாட வேலைகளை கவனித்துக் கொண்டிருந்ததால் இந்தப் பேனா இல்லாததைக் கவனிக்கவேயில்லை.

கவனித்ததும் பதறிப் போய்விட்டேன். நானும் பேங்கிற்குப் போய் கவுண்டரில் விசாரித்துவிட்டு அதன் மதிப்பைச் சொன்னேன். பண மதிப்பு மட்டும் இல்லாமல் அது எங்கம்மா டிகிரி மாகாணத்திலேயே முதல் ரேங்கில் தேறினதற்காக எங்க தாத்தா கொடுத்த பரிசு. அம்மா இருந்த வரைக்கும் நாங்கள் யாரும் அதைத் தொட்டுக் கூடப் பார்த்ததில்லை. நான் முதன் முதலில் ஆபீஸுக்குப் போய் என் ஸீட்டில் உட்கார்ந்து முதல் கையெழுத்துப் போட அப்பா அதைக் கொடுத்தார். இப்படி அஜாக்கிரதையாக இருந்து விட்டோமே என்று ரொம்பவே வேதனைப் பட்டேன். அதற்கு அடுத்த நாள் நான் பேங்கிற்கு பேனாவைப் பற்றி ஏதாவது தெரிந்ததா என்று கேட்கப் போனபோது சந்தர் அங்கே வந்திருந்தார். என்னைப் பார்த்ததும் அவருக்கு அப்படி ஒரு சந்தோஷம், நிம்மதி. உடனே பேனாவை என்னிடம் கொடுத்து நிறைய தரம் ஸாரி கேட்டுக் கொண்டார்.



தான் வாங்கிக் கொண்ட பேனாவைத் தான்தானே பத்திரமாக கொண்டு வந்து கொடுத்திருக்க வேண்டும் என்று அவரும், நான் கவனமாகத் திருப்பி வாங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்று நானும் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டோம்.''

''அப்புறமென்ன? பக்கத்து ரெஸ்டாரெண்டில் காபி சாப்பிட்டுக் கொண்டே பேச்சு. அந்த மாதிரி பயந்து, பயந்து நான்கு சந்திப்பு, பிறகு அந்த கோல்டன் வேர்ட்ஸை சொல்லிக் கொண்டிருப்பீர்கள். அப்புறம் டும் டும், டும் தானே! உன் பாட்டி, அப்பா இவர்களிடம் சம்மதம் கேட்டியா, இல்லையா?'' என்று கேட்டாள் கல்பனா.

''நீ சொன்ன பாக்கியெல்லாம் சரிதான். ஆனா நாங்க ஒளிஞ்சி, ஒளிஞ்சி சந்திக்கல்லே. ஏன்னா, அப்பாவும் சரி, பாட்டியும் சரி கொஞ்சம் முற்போக்கான எண்ணங்கள் உள்ளவர்கள். ஆனா பிரச்னை இல்லாமே கல்யாணம் ஆகல்லே'' என்றாள் மீரா.

''அப்படி என்ன பிரச்னை உங்க அப்பா, பாட்டி இரண்டு பேருமே சம்மதிக்கவிட்டு?''

''முதன் முதலில் நாங்கள் ஒரு ரெஸ்டாரண்டில் சந்தித்தோம். அன்று நாங்கள் நன்றி பாராட்டிக் கொண்டதோடு சரி. அடுத்தடுத்த சந்திப்புக்களில் இருவரும் அவரவர் கதைகளைப் பரிமாறிக் கொண்டோம். அவருக்கு யாருமே கிடையாதாம்.

''கிரகக் கோளாறோ அல்லது விதிப்பயனோ, ஏதோ ஒன்று எங்கு போனாலும் துரத்துகிறது. நிலையாக ஒரு வேலை இல்லை. ஏற்கனவே எனக்குப் பெற்றோரோ, வேறு உறவினர்களோ கிடையாது இந்த அனாதைக்கு.

எங்கு வேலை கிடைத்தாலும், நான் எப்படி வேலை செய்தாலும் ஒரு வேலையிலும் நிலைத்து நிற்க முடியவில்லை. எப்போதும் வேலை தேடுகிற படலம் தானே தவிர வேலை பார்க்கும் படலமே கிடையாது'' என்றெல்லாம் அவர் ரொம்பவே வருத்தப்பட்டார். இரண்டு சந்திப்புக்களுக்குப் பிறகு அவருக்கு என் ஆபீஸிலேயே ஒரு வேலை போட்டுக் கொடுத்தேன். அவரும் மிக நன்றாக வேலை பார்த்தார். நல்லவராகவும் நடந்து கொண்டார். கொஞ்ச நாட்கள் கழித்துத்தான் நாங்கள் இருவருமே ஒருவர் மீது ஒருவர் கொண்ட காதலை உணர்ந்தோம். ஆனாலும் அவருக்கு ஒரு தயக்கம் இருந்து கொண்டேதான் இருந்தது. தன் தகுதிக்கு என்னைக் காதலிப்பது தவறு என்ற எண்ணம்தான் அது. ஆனால் நான் கொடுத்த தைரியத்தினால்தான் அவர் என் வீட்டுக்கு வந்து அப்பாவை சந்திக்கவே சம்மதித்தார்.

அப்பாவிடம் நான் அவரைக் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப் படுவதாகச் சொன்னேன். அதற்கு அப்பா, ''நீ அந்த பையனை வீட்டுக்கு கூட்டி வந்த போதே இதை நான் ஊகித்து விட்டேன். எனக்கு, 'அவன் அப்பா அம்மா இருக்காங்களா, அந்தஸ்து என்ன, என்ன ஜாதி அப்படிங்கறது எல்லாம் கவலையே இல்லை. ஆனா பையன் நல்லவனா, ஒரு கெட்ட பழக்கமும் இல்லாதவனா இருக்கணும்னு ஒண்ணுதான் என்னுடைய ஒரே நிபந்தனை. நான் ஒரு டிடெக்டிவ் ஏஜன்ஸி மூலமா விசாரிச்சுப்பேன். அவங்க தர ரிபோர்ட்டை பொருத்துத் தான் இருக்கு உங்க கல்யாணம்''னு சொல்லிட்டார். இரண்டு மாதம் கழித்து சந்தர் பத்தி நல்ல விதமா



ரிபோர்ட் வந்த பிறகுதான் நிச்சயதார்த்தம் வைத்துக் கொண்டார்.

ஆனால் அதன் பிறகு 15 நாட்கள் கழித்துத்தான் அப்பாவுக்கு அதிர்ச்சி தரும் ஒரு செய்தி வந்தது. அதே டிடெக்டிவ் ஏஜென்ஸியிடமிருந்து. அவர்களுடைய ரிப்போர்ட்படி சந்தருக்குப் பண விஷயம், பெண் விஷயம் இரண்டிலும் கொஞ்சம் பலவீனம் உண்டு என்பதுதான்.

சந்தரிடம் நேரடியாகக் கேட்க எனக்கு விருப்பமில்லை. நிச்சயதார்த்தம் ஆனாலும் இந்த அட்வர்ஸ் ரிப்போர்ட்டினால் கல்யாணத்தை நிறுத்திவிட வேண்டும் என்றார் அப்பா. ஆனால் சந்தர் தான் என் கணவனாக வேண்டும் என்று நான் தீர்மானமாக இருந்தேன். பாட்டி யார் பக்கம் பேசுவது என்பது தெரியாமல் தடுமாற்றத்தில் இருந்தாள். அப்போ அப்பாவைப் பார்த்து நான் ஒரு கேள்வி கேட்டேன், அதற்குப் பதில் சொல்ல முடியாமல் அவர் எங்கள் கல்யாணத்திற்கு ஒத்துக் கொண்டார்.''



## 36

''அப்படி என்ன கேள்வி கேட்டாய், உங்கப்பாவை நீ?'' என்று ஆவலுடன் கேட்டாள் கல்பனா.

மீரா தொடர்ந்தாள். ''அது ஒரு பழைய கதை. அது அப்பாவின் பழங்கதை. அதனால்தான் அப்பா கல்யாணத்திற்கு ஒத்துக் கொண்டார்.

''உங்கப்பாவுக்கு ஒரு பழைய கதையா? நம்பவே முடியல்லையே!'' என்றாள் கல்பனா.

"நிஜம்தான்! கல்யாணி! எல்லாம் வயசும் வாய்ப்பும் தந்த துணிச்சல். அப்பா ஆர்மியில் சேர்ந்த புதுசு. அவருக்கு நாகாலாந்து கிட்டே ஏதோ ஒரு இடத்திலே போஸ்டிங் ஆயிருந்தது. ஆனா அந்த கிளைமேட் அவருக்கு ஒத்துக் கொள்ளவேயில்லை. உடம்பில் கொப்புளம், கொப்புளமாக வந்து அரிப்பு, எரிச்சல் என்று கஷ்டப் பட்டிருக்கிறார். ஆர்மி டாக்டர் கொடுத்த எந்த மருந்தாலும் இவருக்கு குணமாகவில்லை. அந்த சமயம் அங்கே வேலை செய்து கொண்டிருந்த ஒரு பழங்குடியைச் சேர்ந்த ஆள் ஒருவர், "இது விஷக்கடி. இதை எங்க வைத்தியர் குணப்படுத்திடுவார், மூன்று நாள் மருந்து போதும்" என்று சொல்லியிருக்கிறான். மேலதிகாரிக்கு அப்பாவின் பிரச்னை அதிகமாக, ஆக பயமாய் போய்விட்டது. சரி, டெல்லிக்கு அனுப்பிடுவோம்னா மோசமான வானிலை, மண் சரிவு, ரோடெல்லாம் அடைப்பு, ஹெலிகாப்டர் போகாது என்று ஏகப்பட்ட பிரச்னை.

அந்த வேளையில் அந்த ஆள் சொன்னபடி செய்து பார்ப்போமேன்னு இவங்களுக்குத் தோண அந்த வைத்தியரைக் கூப்பிட்டிருக்காங்க. வந்தவர் ஒரு வயதான ஆள். வந்து அப்பாவைப் பரிசோதித்ததுமே 'இது இன்ன பூச்சிக் கடி. இதற்கு மூன்று நாள் மருந்து. மூன்று நாள் ஒய்வு தேவை. தவிர பத்தியமோ வேறே இருக்கணும். யாராவது ஒருவர்தான் கூட இருக்கலாம். நான் நாளை என் மனைவியோடு வரேன்"னு சொல்லிட்டுப் போயிட்டான்.

ஆனா, மறுநாள் அவன் பையனுக்கு ஜுரமா இருந்ததனாலே மனைவியை வீட்லே விட்டுவிட்டு தன் பெண்ணோடு வந்திருக்கான். அந்தப் பெண்ணுக்கு பதினேழு



வயசிருக்குமாம். நல்ல அழகியாம், ஷீபான்னு பேராம். அவள் அப்பாவோடு கூடவே இருந்து மருந்து தடவி, புண்களைச் சுத்தப்படுத்தி, சுடச் சுட சாப்பாடும் பண்ணிப் போட்டிருக்கா. அந்தப் பத்தியச் சமையலையே அத்தனை ருசியாக பண்ணுவாளாம்.

எல்லோரும் ஆச்சரியப் படும் விதத்தில் இரண்டு நாள்லே புண்ணெல்லாம் ஆறிடுத்தாம். அடுத்த நாலு நாளும் அந்தப் பெண் கூடவே இருந்திருக்கிறாள். உள்ளங்கால் எல்லாம் கூட புண் வந்ததனாலே அவ தான் அப்பாவைத் தாங்கி நடக்க வெச்சு எல்லாம் பண்ணியிருக்கா. அப்புறமென்ன, பஞ்சையும், நெருப்பையும் பக்கத்திலே வெச்சவங்க, பைத்தியக்காரங்க. பத்திகிடுச்சி. அப்புறம் இவங்க அடிக்கடி சந்திப்பாங்களாம். அநேகமா தினம் காலைலே அங்கே இருக்கிற ஒரு அருவிக் கரையிலே, அப்புறமா சாயந்திரம் அங்கே இருந்த ஒரு பழைய குட்டிக் கோவில்னு அவங்க சந்திப்புக்கள் தொடர்ந்திருக்கு. அப்பா அவளைக் கல்யாணம் செய்துக்கற எண்ணத்திலதான் இருந்திருக்காரு. அதனாலே எந்தக் கட்டுப்பாடும் இல்லாமே பழகியிருக்காங்க.

ஒரு நாள் அப்பாவோட மேலதிகாரி அவரைக் கூப்பிட்டு அனுப்பிருக்கார். அப்பாவை உட்கார வெச்சு, "நீ அந்த பழங்குடிப் பெண்ணிடம் அளவுக்கு மீறி பழகறதா நான் கேள்விப்பட்டேன். அது சரியில்லை, பார்த்தா!" என்றாராம். அதுக்கு அப்பா "ஸார், நான் அந்தப் பெண்ணை கல்யாணம் பண்ணிக்கற எண்ணத்தில்தான் பழகறேன்" என்று சொல்லியிருக்கிறார்.

''பார்த்தா, அது அத்தனை சுலபமான விஷயம் எல்லாம் கிடையாது. அந்தப் பழங்குடி மக்கள் தங்கள் பூர்வீகத்தை ரொம்ப கவனமாகக் காத்து வரவங்க. வைத்தியம் பண்றது ஒரு தெய்வீகக் கடமைங்கறதனாலே அவர் மகளை உங்களோட நெருங்கிப் பழக விட்டுருக்காரு அவ அப்பா. அதுக்கு நீங்க நடந்துக்கிட்டது சரியில்லை. இப்போ உங்க பத்திரத்துக்கு யாரும் உத்திரவாதம் கொடுக்க முடியாது. தெரியுமா? அவங்க ஜாதிப் பெண்ணைக் காதலிச்சதனாலேயே உங்களை அவங்க குல தெய்வத்துக்கு பலி கொடுத்துடுவாங்க. உங்களை மட்டுமில்லை, அந்தப் பெண்ணையும் சேர்த்துத்தான். தேவையா இதெல்லாம்? நல்லா யோசிங்க, பார்த்தா'' என்று சொல்லிவிட்டார் அந்த மேலதிகாரி.

அதுக்கு அப்பா அவரிடம் ''ஸார் ஒருதடவைப்போய் அவ அப்பாகிட்டே அந்தப் பெண்ணை நான் கல்யாணம் பண்ணிக்கறதுக்கு அனுமதி கேக்கலாமா? சார்? அந்தப் பெண்ணை நான் என மனப்பூர்வமாக காதலிக்கிறேன், ஸார்!'' என்றாராம்.

''பார்த்தா, கொஞ்சம் யதார்த்தத்தைப் புரிஞ்சுக்கோங்க! இந்த கேம்ப்போட இன்சார்ஜ்ங்கற முறையிலே உங்கள் எல்லோருடைய பத்திரத்திற்கும் நான்தான் பொறுப்பு. உங்களைவிட நான் ரொம்ப சீனியர். உங்களுக்கு ஏதாவதுன்னா நான் மேலிடத்திற்கு பதில் சொல்லியாகணும். என் பேச்சைக் கேட்டு நீங்க உடனே டில்லிக்கு கிளம்பிப்போயிடுங்க. அங்கே போய் ரிப்போர்ட் பண்ணிடுங்க. நான் மேலிடத்திலே பேசிக்கறேன்'' என்று சொல்லியிருந்தார்.

''ஸார், ஸார்'' என்று திணறிய அப்பாவைப் பார்த்து அவர், ''இதோ பாருங்க, பார்த்தா! இதில் யோசிக்க



ஒண்ணுமேயில்லை. எனக்கு உங்க சேஃப்டிதான் முக்கியம். இப்போ மணி காலை 9-30 ஆகிறதில்லையா, 11 மணிக்கு ஒரு ஹெலிகாப்டர் இங்கிருந்து கிளம்புகிறது. அதிலே கிளம்பி நீங்க கொல்கத்தா போயிடுங்க. சாயந்திர பிளேனில் டெல்லி போய் ரிபோர்ட் பண்ணிடுங்க. போறதுக்கு முன்னே அந்தப் பெண்ணை பார்க்கறேன்னு வெளியே போய் வம்பிலே மாட்டிக்காதீங்க.''

''ஸார், நான் வந்து...''

''மிஸ்டர். பார்த்தா! திஸ் இஸ் ஆன் ஆர்டர். யூ கேன் கோ நௌ'' என்று சொல்லி எழுந்து விட்டார் அந்த ஸீனியர் ஆபீஸர். அப்பாவால் வேறே என்ன செய்ய முடியும்? சல்யூட் செய்துவிட்டு அந்த ஆர்டரை நிறைவேற்றினார். நல்ல வேளை யாருக்கும் தெரியாமல் புறப்பட்டுப் போக வழி செய்த அந்த ஸீனியர் ஆபீஸருக்கு மிக்க நன்றி.



## 37

''ஆனா அவங்களுக்கு அந்த விஷயம் தெரியாமயே போயிடுமா, என்ன? ஒரு இரண்டு நாள்லே விஷயம் தெரிந்து இவங்க கேம்ப் கிட்டே வந்து கலாட்டா பண்ணினாங்களாம். அந்த பெரிய ஆபீஸர், 'பார்த்தாவின் அம்மா இறந்துட்டதனாலே அவர் அவசரமா ஊருக்குப் போயிட்டார், திரும்ப வருவார்'ன்னு சொல்லி சமாதானப் படுத்தி அனுப்பினாராம். அடுத்த 10 நாள்லே அந்த கேம்ப்பையே கலைத்துவிடச் சொல்லி அவருக்கு உத்தரவு வந்திருக்கிறது. அந்த தைரியத்தில்

தான் அவர் அப்படிச் சொல்லியிருக்கிறார். நினைச்சது போலவே கேம்ப்பை கலைச்சுட்டு ஊருக்குத் திரும்பிட்டாங்களாம்'' என்றாள் மீரா.

''பாவம் அந்தப் பெண்ணுக்கு ஏதாவது தண்டனை கொடுத்துட்டாங்களா?'' என்று துக்கத்தோடு கேட்டாள் கல்பனா.

''தராமலா இருப்பாங்க? அவங்க குல வழக்கப்படி கல்யாணமாகாமே ஒரு பெண் கர்ப்பமானாக்கூட பரவாயில்லையாம். ஆனா வேறே ஜாதிப் பையனுடன் பழகி கர்ப்பமானா தண்டனை என்ன தெரியுமா?''

''என்ன மீரா?'' என்று படபடக்கும் இதயத்தோடு கேட்டாள் கல்பனா.

''அந்தப் பெண்ணை நடுக்காட்டில் தனியாக விட்டுவிடுவாங்களாம். இந்த விஷயம் அப்பாவுக்கு அந்தக் கேம்ப்பில் இருந்த யாரோ சொல்லி அப்பா கேள்விப் படும்போதே ஆறு மாதங்களாகி விட்டதாம். அப்பாவிற்கு அந்தப் பெண் கர்ப்பமானதே தெரியாதாம். விஷயத்தைக் கேள்விப்பட்டதும் துடிதுடித்துப் போய்விட்டாராம். உடனே வேலையை ராஜினாமா பண்ணி விட்டு, அந்தக் காட்டில் அவளைத் தேடற உத்தேசத்தில் இருந்திருக்கிறார். அதற்குள் அந்த ஆளே சொன்னாராம் 'அந்தப் பெண் ஷீபாவை சின்ன வயதிலிருந்தே கல்யாணம் பண்ணிக்கொள்ள ஆசைப்பட்ட அவர்கள் குடிப் பையனே ஒருவன் பெரியவங்களுக்குத் தெரியாமல் போய் அவளை ரொம்ப தேடிட்டு வந்திருக்கான். பிரயோஜனமே இல்லையாம் என்று' அதுவும் ஆறு மாதங்கள் ஆகிவிட்டது எனும்போது இவரால் என்ன



பண்ணமுடியும்? ஆக, இதுதான் என் அப்பாவின் பழைய காதல் கதை'' என்று முடித்தாள் மீரா.

''அது சரி மீரா! இதெல்லாம் உனக்கு எப்படித் தெரிந்தது?''

''அதுவா? அம்மா செத்துப் போன பின்னாடி அப்பா நிறையவே குடிக்க ஆரம்பிச்சுட்டார்னு சொன்னேன் இல்லையா? அப்போதெல்லாம் அவர் தன்னையறியாமல் ''என் ஷீபாவிற்கு நான் செய்த துரோகத்திற்குத் தண்டனையாத்தான் தெய்வம் அனுவை என்னிடமிருந்து பிரித்துவிட்டது என்று உளறுவார். எனக்கு முதலில் இது ஒண்ணுமே புரியவில்லை, ஷீபா யார்? அவளுக்கு அப்பா என்ன துரோகம் பண்ணினார் என்கிறதெல்லாம் தெரியாமல் குழம்பினேன். ஆனா அப்பா அடிக்கடி இதையே புலம்பிக் கொண்டிருந்ததைப் பார்த்து சகிக்காமல் நான் ஒரு முடிவுக்கு வந்தேன். ஒரு நாள் அப்பாவுக்கு ராவாக, தண்ணி சோடா எதுவும் கலக்காமல் விஸ்கி ஊற்றிக் கொடுத்து அவருடன் ஆதரவாகப் பேசி முழு விவரத்தையும் தெரிந்துகொண்டேன்.

அதற்கப்புறம் அப்பாவிடம் ''நடந்தது நடந்துவிட்டதப்பா! அம்மாவைக் கல்யாணம் பண்ணிண்ட அப்புறம் நீங்க ஏதாவது தப்பு பண்ணியிருக்கிறீங்களா? இல்லையே! அந்தப் பெண் ஷீபாவுக்கு கூட துரோகம் பண்ற நினைப்பிலே நீங்க பழகல்லே, உங்க கை மீறி நடந்த ஒரு காரியத்துக்கு நீங்க என்னப்பா பண்ண முடியும்? மனதை தேத்திக்கோங்கப்பா'' என்றெல்லாம் ஆறுதல் சொன்னேன்.

''கர்ப்பமா இருந்த ஒரு பெண்ணை கைவிட்ட பாவம்தான் உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கக் கூட

இல்லாமே அம்மா போயிட்டாம்மா'' என்று அழுதவர், ''ஆனா நீ சொன்ன மாதிரி அம்மாவை அவ இருந்தவரை நன்னாப் பாத்துண்டேன்மா. மனசாலே கூட வேறே ஒரு பெண்ணை நான் நினைச்சதில்லே. அவளும் என் பழங்கதை தெரியாமல் நிம்மதியா போய்ச் சேர்ந்துட்டாள். அம்மா மீரா! இந்த அப்பா தெரியாமே செய்த தப்பை மன்னிப்பியாம்மா? ஷீபாவுக்கு நான் துரோகம் செய்யல்லைன்னு நீ மனசார நம்பினா அந்த பெண்ணோட ஆத்மா என்னை மன்னிக்கும்மா!'' என்று என் கையைப் பிடிச்சிண்டு கதறினார். ''அப்பா, நான் உங்களை முழுசா நம்பறேன்ப்பா! ஷீபா உங்களைக் கண்டிப்பா மன்னிச்சுடுவா! நீங்க இதையே நினைச்சு, நினைச்சு உங்க மனசையும் உடம்பையும் வருத்திக்காமே இருங்கப்பா இனிமேலே'' என்று தைரியம் சொன்னேன்.

அப்புறமா இரண்டு நாள் கழிச்சு பாட்டி கேட்டாள் ''ஏம்மா, டல்லாவே இருக்கே?''ன்னு.

''ஒண்ணுமில்லை பாட்டி!''

''எதுக்குக் கண்ணா எங்கிட்டே மறைக்கிறே? உனக்கு ஷீபாவைப் பத்தி எல்லாமே தெரியும்.''

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ''என்ன பாட்டி சொல்றே! உனக்கு எல்லாமே தெரியுமா?''

''ஆமாம்மா, எனக்கு மட்டுமில்லை உங்கம்மாவுக்குக் கூட கல்யாணம் ஆன புதுசிலேயே தெரிஞ்சுடுத்து. இப்ப, இத்தனை வருஷம் கழிச்சு இவ்வளவு வருத்தப்படறாரே, முன்னே எப்படி இருந்திருப்பார் சொல்லு?''

''இரண்டு நாள் முன்னாடி அப்பா எங்கிட்டே சொன்னதெல்லாம் கேட்டுண்டிருந்தியா, பாட்டி?''



''அதை மட்டுமில்லை, நேத்திக்கு நீ அப்பாவுக்கு ஆறுதல் சொல்லிக்கிட்டிருந்ததையும் கேட்டேன். நிஜமா சொல்றேன் எனக்கு உங்கம்மாவை நினைச்சா எப்பவும் பெருமையா இருக்கும். இப்போ உன்னை நினைச்சும் ரொம்ப பெருமையாக இருக்கும்மா! அப்படித்தான் புண்பட்ட மனசுக்கு இதமா இருக்கணும்.''

''சரி, சொல்லு பாட்டி! அம்மாவுக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்? அம்மா இதுக்கு எப்படி ரியாக்ட் பண்ணினா? இதை எப்படி எடுத்துண்டா?''

''கல்யாணம் ஆன புதுசிலேயே குடிச்சிட்டு உங்கிட்டே சொன்ன மாதிரியே உங்கம்மா கிட்டேயும் சொல்லிட்டார். அம்மா தனியே வந்து வேதனைப் படத்தான் செய்தாள். பேசாமே விட்டுட்டுப் போயிடலாமா இவரைன்னு கூட ஒரு நிமிஷம் யோசிச்சாள். ஆனா அதற்குள்ளே அவளுக்கு அவர் மேலே ஒரு பிரியம் ஏற்பட்டுட்டதனாலே, அவளுக்கு அவரை அப்படித் தவிக்க விட்டு விட்டுப் போகவும் இஷ்டமில்லை. நாளாக, நாளாக அவர் மனதில் குற்ற உணர்ச்சி மாறும்னு நினைச்சு சாதாரணமாகவே நடந்துண்டாள். எங்கே தனக்குத் தெரிந்து விட்டது அவருக்குத் தெரிந்தால், எத்தனை வருத்தப்படுவாரோ, விபரீதமான முடிவை எடுத்துவிடுவாரோ என்றெல்லாம் யோசித்துத்தான் இத்தனை வருட தாம்பத்தியத்தை அழகா நடத்திவிட்டு போய்ச் சேர்ந்துவிட்டாள். நான்தான் உட்கார்ந்திருக்கேன் எல்லோருக்கும் பாரமா'' என்றாள் பாட்டி.

அதுவும் நீ பிறந்தபோதெல்லாம் ரொம்பவே வருத்தப்பட்டு சோகத்தில் ஆழ்ந்துவிடுவார் உன் அப்பா. யாரிடமும் எதுவும் சொல்லக் கூடிய விஷயமும் இல்லை.

அப்போதெல்லாம் உன் அம்மாவின் தவிப்பும் உன் அப்பாவை சகஜமான நிலைக்குக் கொண்டு வர உன் அம்மா எத்தனை பிரயத்தனப் பட்டாள் என்பதெல்லாம் என்னைத் தவிர யாருக்குத் தெரியும்? எல்லாம் முடிந்த கதை'' பாட்டி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''ஒண்ணு பாத்தியா கல்பனா, பெண்கள் மன்னிக்கவே பிறந்தவர்கள். ஆண்கள் என்ன தப்பு செய்தாலும் பெண்கள் மன்னித்துத்தான் விடுகிறோம். என் பாட்டி, அம்மா இரண்டு பேரும் அப்பாவை மன்னிச்சுட்டாங்க. ஏன், எனக்குமே அப்பாமேலே கோபமே வரலே. பாவமாத்தான் இருந்தது. இதெல்லாம் விட உனக்கு உன் கணவன் மேலே கோபம் வரலேங்கற. அது ஒரு ஆச்சரியம்தான். அது நிஜம் தானா?'' என்று கேட்டாள் மீரா.

''நிஜம்தான், மீரா! நானே அதற்கான காரணங்களை யோசிச்சிண்டிருக்கேன் ஒண்ணு. அவர் என்னைக் கூட்டிண்டு போய் ஏமாத்திடற எண்ணத்தில் இருந்திருந்தால் இரண்டு வருஷம் என்னோட அத்தனை அழகாக குடித்தனம் பண்ணியிருக்க மாட்டார். என்னைப் புஷ்பம் போல மென்மையாகத் தானே தாங்கினார். அது மட்டுமில்லை, மீரா! நான் வயசுக் கோளாறில், மயக்கத்தில் வீட்லே சொல்லாமல் வெளியூர் போய் ரகசியக் கல்யாணம் பண்ணிண்டு வீட்டுக்கு எத்தனை கஷ்டம் கொடுத்துட்டேன். பாட்டியைக் கொன்ன கொலைகாரின்னு அப்பா மனதிலே பெரிய காயத்தை உண்டு பண்ணிட்டேன். அவருக்கு அவரோட அம்மாதான் உலகத்திலேயே ரொம்ப முக்கியம். அதனாலே அவருக்கு என்மேலே அப்படி ஒரு



கோபம் வந்ததும் சரிதான்னுதான் படறது. எதையும் எதிராளி பக்கத்திலேருந்தும் பார்க்கணும், இல்லையா?

எனக்கு அவரைத் தேடணும்னு தோணலே. ஏன்னா என்னவோ வலுவான காரணத்தினால் தான் என்னை விட்டுப் போயிருக்கணும். என் மேலே அத்தனை அன்பாக இருந்தவர் என்னை விட்டுட்டுப் போயிட்டார். அதனாலே எனக்கு வேறே கல்யாணம் பண்ணிக்கணும்ங்கற ஆசையெல்லாம் இல்லை. எனக்குப் புதுக் கணவன் கிடைக்கலாம், ஆனா என் பெண்ணுக்கு வர்றவன் நல்ல அப்பாவா இருப்பானாங்கறது சந்தேகம்தான். ஏன் வம்பு? இனிமே ப்ரீதி தான் என் வாழ்க்கை. அவளை நல்லபடியா படிக்க வைத்து தன் காலில் நிக்கற மாதிரி செய்துட்டு, பிறகு அவளுக்கு ஒரு நல்லவனா, நம்பிக்கையானவனா ஒருவனைப் பார்த்து கல்யாணம் பண்ணி வைக்கணும். இதைத்தவிர வேறு எதுவுமே இல்லை என் மனதில்'' என்றாள் கல்பனா.

''அதுசரிதான், ஆனா அதுக்கு நீ இன்னும் கொஞ்சம் தரமான பள்ளிக் கூடத்திலே போடணும். அது அப்பா எங்கேன்னு கேக்கறதில்லையா உன்னை?''

''சரி, அதெல்லாம் அப்புறமா பேசுவோம். அதுக்கு முன்னாடி நீ உன் அப்பாவை என்ன கேட்டே? அவர் எப்படி உன் கல்யாணத்துக்குச் சம்மதிச்சார்?'' என்று கேட்டாள் கல்பனா.

''அதுதான் கல்பனா, என்பாட்டி, அம்மா, நீ அந்த வரிசைலே இப்போ நானும் நிக்கறேன். எனக்கும் சந்தர் தப்பே ஏதாவது பண்ணியிருந்தால் கூட, இப்போது அவர் நல்லவராக இருக்கும் போது அந்த பழசையெல்லாம் மன்னிச்சுடலாம்னு தோணி, அவரை நான் ஏன்

கல்யாணம் பண்ணிக் கொள்ளக் கூடாது என்றுதான் வலுவான எண்ணம் இருந்தது. அதனாலே அப்பாவை நான் கேட்டேன் ''ஏம்பபா, நீங்க அந்த பழங்குடிப் பெண் வீபாவோட அத்துமீறிப் பழகியிருக்கீங்க. அதுக்கப்புறம் அம்மாவோட எத்தனை பாசமா குடும்பம் நடத்தினீங்க. உங்களுடைய அத்தனை வருஷ குடும்ப வாழ்க்கையிலே யாராவது உங்களை குத்தம் சொல்லிட முடியுமா? அது. அதுன்னு அம்மா மேலே உசிரையே வெச்சிருந்தீங்களே! அது மாதிரி இதுக்கு முன்னாடி சந்தர் தப்பே பண்ணியிருந்தாலும் மனதில் இத்தனை தூரம் எண்ணத்தை வளர்த்துக் கொண்டுவிட்ட நான் எப்படியப்பா அவரை வேண்டாம்னு சொல்லுவேன்? என்று கேட்டேன்'' என்றாள் மீரா.

''நாம நல்லவங்கன்னு நினைச்சிக்கிட்டிருக்கிற எத்தனையோ பேர் வாழ்க்கைல சின்ன வயசில எத்தனையோ தப்பு பண்ணியிருந்திருக்கலாம். ஆனா அதைச் சுட்டிக் காட்டி அங்கிளை நீ மடக்கியிருக்கணுமா?''

''இல்லை கல்யாணி! அப்பாவைக் குத்திக் காண்பிக்கறதோ மடக்குவதே என் நோக்கமில்லை. என் ஆசையெல்லாம் நான் சந்தரைக் கல்யாணம் பண்ணிக்கறதிலேதான் இருந்தது. அதற்காகத்தான் நான் அப்பாவைச் சம்மதிக்க வைக்க அப்படி ஒரு கேள்வி கேட்க வேண்டியிருந்தது. நான் கேட்டதும் அப்பா கல்யாணத்துக்கு சம்மதிச்சுட்டார், ஆனா என்ன செய்தார் தெரியுமா?''

''கல்யாணத்திற்கு முன்னாடியே மொத்த சொத்தையும் என் பெயருக்கும், குழந்தை பிறந்ததும் அதற்குத்தான் சொத்தை விற்கவோ, மாற்றவோ உரிமை



உண்டுன்னும், அதுவும் அந்தக் குழந்தை மேஜர் ஆன பிறகுதான்னும் விவரமான ஒரு உயில் எழுதி பக்காவா பதிவும் செஞ்சுட்டார். அந்த விஷயத்தை அப்பாவே நேரிடையாக சந்தரிடம் சொல்லியும் விட்டார். ஒரு வேளை பணத்திற்காக என்னைக் கல்யாணம் பண்ணிக்கறதாக இருந்தாலும் இப்போது பின் வாங்கிவிடுவார் என்ற எண்ணம்.

ஆனால் சந்தர் அந்த விஷயம் கேட்டு ரொம்பவே சந்தோஷப்பட்டார். அப்பா எதிர்பார்த்த 'என் மேல் நம்பிக்கை இல்லையா' என்று சுணங்கல்லே, எரிச்சல் படல்லே, கல்யாணம் நல்லபடியா நடந்தது. சந்தரையும் ஒரு பார்ட்னராக்கிவிட்டார் அப்பா. ஆனால் அவருக்கு இன்றுவரை பவர் ஆஃப் அட்டர்னி கொடுக்கல்லே இவரும் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவேயில்லை என் மேல் கொள்ளை பிரியமாத்தான் இருக்கார். ஆபீஸிலும் நன்றாக உழைக்கிறார். அப்பா, பாட்டியிடம் நல்ல மரியாதை. எல்லாம் சரியாகத்தான் போயிண்டிருக்கு. ஆனாலும்...'' என்று இழுத்த மீராவை கல்பனா ''ஆனாலும் என்னடி? இன்னும் என்ன வேண்டும் ஒரு பெண்ணுக்கு?'' என்றாள்.

''எல்லாம் நல்லபடியாக இருந்தாலும், என்னிக்காவது ஒருநாள் தோணும். இவர் பணம், பெண் இரண்டு விஷயத்திலும் வீக் என்றாரே அப்பா என்னன்னு கேக்கலாமான்னு. ஆனா என்னைக் கட்டுப் படுத்திக் கொள்வேன். இதெல்லாம் கல்யாணமான முதல் கொஞ்ச நாளைக்குத்தான். இப்போவெல்லாம் அப்படித் தோணறதே இல்லை. அவர் அத்தனை அன்பா என்னிடம்

இருக்கும்போது அந்தக் கேள்வி என் மனதிலிருந்து மறைந்தேவிட்டது.

ஆனால் முதல் கொஞ்ச நாளைக்கு நான் அவரைக் கேள்வி கேட்டு காயப்படுத்தாமல் இருந்ததற்குக் காரணம் முழுக்க முழுக்க பாட்டிதான் 'நீ விரும்பி அந்தப் பையனை பண்ணிண்டு இருக்கே. அதுவும் உன் அப்பா அவ்வளவுதூரம் விசாரித்துச் சொல்லவிட்டும், அவர் வேணும், அவரைத்தான் பண்ணிப்பேன்னு பிடிவாதமா கல்யாணம் பண்ணிண்டிருக்கே. அதுக்கப்புறமும் அவர் கிட்டே போயி இந்தப் பழசையெல்லாம் கிளறி அவரை யும் வருத்தப் படுத்தி, வாழ்க்கையையும் சிக்கலாக்கிக் கொண்டுவிடாதேன்னு தினமும் எனக்கு போரடிக்கும் வரை சொல்லுவாள். ஏதோ அவள் சொன்னதையும் கேட்டு நல்லபடியாத்தான் வாழ்ந்திண்டு இருக்கேன்.''

''ஒருவருக்கு தன்மேல மத்தவங்க நம்பிக்கை வெச் சுருக்காங்க என்ற எண்ணமே அவரை நல்லவராக ஆக்கி விடும், இல்லையா? சரி, நீ மும்பையிலா இருக்கே?'' என்று கேட்டாள் கல்பனா.

''ஆமாம் கல்யாணி! மும்பையில் நான் முழுநேரமும் ஆபீஸ் போக வேண்டித் தானிருக்கிறது. இவரும் முழு நேர உழைப்பைப் போடறதாலே பிஸினஸ் பலமடங்கா உயர்ந்திருக்கு. ஆனா பாட்டிக்கும் அப்பாவுக்கும் திரும்ப பெஸன்ட் நகருக்கே வந்துடணும்னு ஆசை. அப்பா ரிடையர் ஆனப்பறம் ஆரம்பிச்ச அந்த பிஸினஸ் மும்பையில் நல்லாவே வேறூன்றிவிட்டது. அந்த வரவு சென்னை வருமா? ஒரு நாளும் வராது. பார்த்தோம் பிஸினஸை முன்னிட்டு நானும் சந்தரும் மும்பையிலே தொடர, பாட்டியும் அப்பாவும் சென்னைக்கு வந்துட்



டாங்க. வந்து இரண்டு மாதம் கூட இருக்காது. இவங் களுக்கு இங்கே தனியாக இருக்கவே பிடிக்கல்லை. அங்கே அனுவும் ரொம்ப ஜுரம் வந்து படுத்துக் கொண்டுவிட்டது. தாத்தா, பாட்டி வேணும்னு ரொம்ப புலம்பல். எனக்கும் சாயந்திரத்தில் சீக்கிரம் வீட்டுக்கு வந்து குழந்தையைப் பாத்துக்கறதெல்லாம் முடியல்லே. சரின்னு அனுவை இங்கேயே கூட்டிவந்து ஸ்கூல்லே சேர்த்துட்டேன். அவங்க இரண்டுபேரும் அம்மாவை அனுருபத்திலே பார்க்கறாங்க. சரி, அவங்களுக்கும் ஒரு பிடிப்பு வேணுமில்லையா வாழ்க்கையிலே'' என்றாள் மீரா.

''சரி, நீ அவளை மிஸ் பண்ணுவதில்லையா?'' என்றாள் கல்பனா.

''நான்தான் மாசம் ஒருதரம் இங்கே வந்துடறேனே. இரண்டு மாசத்துக்கொருதடவை அவர் வந்து இருந் துட்டு வருவார். குழந்தையும் இங்கே ப்ளேனில் ஏத்தி விட்டா, அவளாகவே வந்து இறங்கிடறா. இப்படியே போயிண்டு இருக்கு வாழ்க்கை'' என்றவள் மணியைப் பார்த்தவள் திடுக்கிட்டாள். ''ஏய் கல்பனா! நாழி ஆயிடுத்துடி. நான் கிளம்புறேன்'' என்று மீரா சொல்லிக் கொண்டிருக்கும்போதே வனிதா டீயோடு வந்துவிட் டாள்.

''ஸாரிக்கா, ரொம்ப ஸாரி! நான் பாட்டுக்குப் பேசிக் கொண்டே இருந்துட்டேனா மீராவோட, நேரம் போனதே தெரியல்லே! என்னைக் கூப்பிட்டிருக்கக்கூடாதாக்கா. நான் வந்து டீ போட்டிருப்பேனே!'' என்றாள் கல்பனா.

''அதனால் என்னம்மா! என்னிக்கோ ஒருநாள் உன் னைத் தேடி ஒருத்தர் வந்திருக்காங்க. சந்தோஷமாகத்

தான் பொழுதைக் கழியேன்'' என்ற வனிதா இரண்டு கிண்ணத்தில் மிச்சரும் கொண்டு வந்து கொடுத்தாள்.

அவள் உள்ளே போனதும் மீரா கேட்டா ''கல்யாணி! இங்கே யாரும் உன்னை ஒண்ணும் சொல்ல மாட்டாங்க, இல்லையா?''

''ஒரு வார்த்தை கடுமையாக பேசறவங்க கூட இங்கே கிடையாது, தெரியுமா? இங்கே எல்லோருக்கும் நான்னாக்கா ரொம்ப பிரியம். ப்ரீதியும் எல்லோருக்கும் செல்லம்தான்'' என்றவள் நினைத்துக் கொண்டவளாய், ''இந்த வாண்டுங்க இரண்டும் எங்கே போச்சுங்க?'' என்று கேட்டுக் கொண்டே வெளியே வந்தாள்.

''இதோ இரண்டும் உட்கார்ந்து பேசிண்டு இருக்கு, பாரு!'' என்றாள் மீரா.

''இரண்டுக்கும் ஒண்ணுக்கொண்ணு ரொம்பவே பிடிச்சுடுத்து, இல்லையா?'' என்று கல்பனா சொல்ல, ''நான் இந்ததரம் இன்னும் இரண்டுநாள் இங்கிருப்பேன். அதுக்குள்ளே ப்ரீதியை அனுவின் ஸ்கூல்ல போட்டுட ஏற்பாடு செய்துடறேன்.''

''நான் சரோஜினி அம்மாவைக் கேட்டுட்டு போன் பண்றேனே உனக்கு'' என்றாள் கல்பனா.

''சரி, நான் கிளம்பறேன், திரும்ப நாளன்னிக்கி வரேன்'' என்று சொல்லி, கிளம்பினாள் மீரா.

''ஏய், கல்யாணி, நீ எப்போ எங்க வீட்டுக்கு வரே?'' என்று கேட்டாள் மீரா.

''பார்க்கலாம்'' என்றாள் கல்பனா.

''என்னடி இப்படி விட்டேத்தியாச் சொல்றே? என்னிக்கு வரே சொல்லேன், நான் கார் அனுப்பறேன்.''



''இப்போ எனக்குச் சொல்லத் தெரியல்லே, அப்புறமா சொல்றேனே.''

''சரி, அனும்மா, வீட்டுக்குப் போகலாமா?'' என்று கேட்டாள் மீரா குழந்தையிடம்.

''அம்மா, நான் வரல்லே, நீ மட்டும் போயிட்டு நாளைக்கு வந்து என்னை அழைச்சிண்டு போ'' என்றது அனு.

''இல்லேடி செல்லம், நீ ஹோம்ஓர்க் எல்லாம் பண்ணணும் இல்லையா, வா போகலாம்.''

''அம்மா, கொஞ்சம் நாழி கழிச்சி போகலாம், ப்ளீஸ்மா!''

''ஆமாம் ஆன்ட்டி, இப்பதானே வந்தீங்க, கொஞ்சம் நாழி கழிச்சி போகலாம்'' என்று ப்ரீதி கேட்டுக் கொண்டது.

''இதோ பார், நாம நாளன்னிக்குதான் திரும்ப வரப் போறோமே! அதனாலே இப்போ கிளம்பலாம்'' என்று குழந்தைகள் இருவரையும் சமாதானப் படுத்தி, அனுவை அழைத்துக் கொண்டு கிளம்பினாள் மீரா. அனு அரை மனதுடன் காரில் ஏறினாள். மீரா கிளம்பும்போது கல்பனாவுக்கும் வருத்தமாகத்தான் இருந்தது. கார் கண்ணுக்கு மறைகிறவரை கை அசைத்துக் கொண்டே நின்றிருந்தாள்.




அவள் கார் மறைந்ததும் கல்பனா சரோஜினியின் ரூமிற்குப் போனாள். ''என்னம்மா, கல்யாணி, ரொம்ப ஹாப்பிடேயா இன்னிக்கு'' என்று சந்தோஷமாக விசாரித்தாள்.

''ஆமாம்மா! இன்னி பொழுது பூரா ரொம்பவே சந்தோஷமாகக் கழிந்தது'' என்று சொன்னவள் ப்ரீதியின் ஸ்கூல் மாற்றத்தைப் பற்றி சரோஜினியிடம் சொல்லி அனுமதி கேட்டாள்.

''ஆமாம் கல்யாணி! உன் சிநேகிதி சொன்னது நிஜம் தான். கொஞ்சம் நல்ல தரம். அதுவும் ஆங்கிலத்தில் நல்ல டீச்சிங் இருக்கும் ஸ்கூல்லே சேர்த்தா குழந்தையின் பிற்காலத்திற்கு நல்லதுதான். ஆனா போயிட்டு வரது பத்தியெல்லாம் யோசிக்கணும். ப்ரீதி புத்திசாலிப் பெண். பாடங்கள் எத்தனை கஷ்டமாக இருந்தாலும் சமாளிச்சுண்டுடுவா. அந்த ஸ்கூல் நிர்வாகிகளும் எனக்குத் தெரிஞ்சவங்கதான். மீராவிற்கும் தெரியும்கறே. எல்லாம் யோசித்து முடிவெடுக்கலாம்'' என்றாள் சரோஜினி.

''சரிம்மா, நான் போய் என் வேலைகளைப் பார்க்கிறேன்'' என்று கிளம்பிய அவளை சரோஜினி தடுத்து, ''கல்யாணி, உனக்கும் அங்கேயே வேலைக்கு முயற்சிக்கலாமா?'' என்று கேட்டாள்.

''வேண்டாம்மா!'' என்ற பதில் கல்பனாவிடமிருந்து உடனடியாக வந்துவிட்டது.

''ஏம்மா, உன் முடிவில் எந்த மாத்தமும் இல்லையா?''

வேகமாகத் தலையசைத்து தன் மறுப்பைத் தெரிவித்த கல்பனா, ''எனக்கு ஆண்கள் வேலை செய்யற இடத்தில் வேலை செய்ய துளிக் கூட இஷ்டமில்லைம்மா. பார்க்கப் போனா ப்ரீதியைக் கூட பெண்கள் பள்ளிக் கூடத்தில் படிக்க வைக்கறதுதான் சரியென்று நினைக்கிறேன்'' என்றாள்.



''ஆனால், டிகிரி வகுப்பு வரை ஆண்பிள்ளைகளையே பார்க்காமல் இருந்துவிட்டு, திடீரென்று வேலைக்குன்னு வெளி உலகத்தில் ஆண்களைப் புதுசா சந்திக்கும் போது ஏடாகூடமாக ஆகிவிடும் அபாயமும் இருக்கு அதனால் ஆண்களும், பெண்களும் முதலிலிருந்தே சேர்ந்து படிப்பதில் தவறு ஒண்ணுமில்லை அதனால் பழக்கமான சூழலாகத்தான் இருக்கும். அந்தக் கோணத்தில் யோசி, கல்யாணி'' என்றாள் சரோஜினி.

''நீங்கள் சொல்வதும் சரியாகத்தான் இருக்கு. ஆனால் எனக்கு மட்டும் எக்காரணம் கொண்டும் ஆண்கள் வேலை செய்யற இடங்களிலே வேலை செய்யவே இஷ்டமில்லை. அநாவசியமாக எனக்கு அழகி, அழகி என்று ஒரு பேரைக் கட்டி நான் பட்ட கஷ்டம் போதும். எனக்கு எந்த ஆணையும் பார்க்க இஷ்டமில்லை. இந்தப் பள்ளிக் கூடம்தான் எனக்கு சரி. நான் பாட்டுக்கு நிம்மதியா இருக்கேன். நாளன்னிக்குத்தான் திரும்பி வரேன்னு சொல்லியிருக்கா மீரா. அதுக்குள்ள நீங்க யோசிச்சு குழந்தையின் எதிர்காலத்திற்கு ஒரு நல்ல முடிவா சொல்லணும்மா'' என்றாள் கல்பனா.

''நீயும் யோசிம்மா! என்ன இருந்தாலும் குழந்தைக்கு நீதானே அம்மா? குழந்தையையும் கேள். மூணாம் கிளாசில் என்ன தெரியும்னு நினைக்காதே! இந்தக் காலத்துக் குழந்தைகளுக்கு நம்மைவிட மூளை அதிகம்'' என்றாள் சரோஜினி.

வாசல் வரை போனவள் ''அதுதாம்மா இப்போ எனக்குப் பிரச்னையாக இருக்கு'' என்று திரும்பி வந்து உட்கார்ந்தாள் கல்பனா.

''ஏம்மா, என்னாச்சு? ஏதாவது பெரிய பிரச்னையா?''

''எப்போதும் உள்ளதுதாம்மா! ப்ரீதி இப்போவெல்லாம் நிறைய கேள்வி கேட்கிறா. எனக்கு அப்பாவைப் பார்க்கணும், எப்போ வருவார், எல்லார் வீட்டு அப்பாவும் அவங்க அவங்க வீட்லேதானே இருக்காங்க, நம்ம வீட்லே மட்டும் ஏன் அப்பா வெளியூர்லே இருக்கார்? போட்டோவாவது காண்பியேன்'' அப்படீன்னு ஒவ்வொரு தரம் ஒவ்வொரு மாதிரியா கேள்வி கேக்கறா. நானும் அப்பப்ப என்ன தோணறதோ அப்படிச் சொல்லி சமாளிக்கறேன். இனிமே போகப் போக என்ன செய்வேனோ தெரியல்லே'' என்றாள் கல்பனா.

''பார்க்கப் போனா அவள் வளர்ந்துட்டா நீ கவலைப்பட வேண்டாம். கொஞ்சம் பெரிய பெண்ணானதும் நிஜத்தை நீயே சொல்லிட்டா கேள்விகள் நின்றுவிடும். குழந்தை உன்னைத் தப்பாக நினைக்காதபடி பக்குவமாச் சொல்லணும். உன் பேர்லே தப்பே இல்லை, ஆனாலும் அவள் அதைச் சரியாகப் புரிஞ்சுக்கணும், இல்லையா?'' என்ற சரோஜினி கூடவே ''போம்மா, போய் வேலையெல்லாம் முடிச்சிட்டு சாப்பிட்டுட்டு படு'' என்றாள்.

அன்று இரவே கல்பனா குழந்தையிடம் ''இதோ பார் செல்லம்! உன்னை புதிய பள்ளிக் கூடத்திலே சேர்க்கலாம்னு இருக்கேன். அப்படிச் சேர்த்தா நீ சமாளிச்சுப்பியா?'' என்று கேட்டாள்.

ப்ரீதி ரொம்பவே மகிழ்ச்சியாக ''எனக்கு புதுப் பள்ளிக்கூடம் போக ரொம்பவே பிடிச்சிருக்கும்மா. அங்கே அனு இருக்கா, இல்லையா? அதனாலே எனக்கு அந்த ஸ்கூலுக்கு போக ஆசையாக இருக்கு'' என்றாள்.

''இல்லேம்மா, அந்த ஸ்கூல்லே பாடமெல்லாம் கஷ்டமா இருக்குமாம். அதுவும் இல்லாம அம்மா அந்த



ஸ்கூலுக்கு வரமாட்டேன். பரவாயில்லையாடா, செல்லம்?'' என்று கேட்டாள்.

''பரவாயிலேம்மா, நான் நன்னாப் படிக்கறேன். நீ அந்த ஸ்கூலுக்கு வரலியேன்னு அழமாட்டேன்'' என்று சொல்லிவிட்டாள் ப்ரீதி. குழந்தை தூங்கின பிறகு வனிதாவுடன் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தாள் கல்பனா.

''உனக்குத் தெரியாதா, கல்யாணி! அந்த ஸ்கூலுக்கு இங்கே பக்கத்துக் காலனியிலிருந்து கூட குழந்தைங்க ஆட்டோவிலே போறாங்களே. அவங்களோட ப்ரீதியையும் சேர்த்துவிட்டாப் போச்சு'' என்று இவள் பெரிய பிரச்னையாக நினைத்துக் கொண்டிருந்த போக்குவரத்துப் பிரச்னைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தாள் வனிதா.

மீரா வருவதாகச் சொல்லியிருந்த நாளே நல்ல நாளாக இருந்ததால், குழந்தையை புதுப் பள்ளியில் சேர்த்தாயிற்று. ஸ்கூலில் சேர்த்துவிட்டு வெளியே வந்தபோது மீரா, ''கல்யாணி உன் பெண் ப்ரீதி அனுவைவிட கிட்டத்தட்ட இரண்டரை வயது பெரியவள் இல்லையோ, ஆனா இரண்டும் ஒரே கிளாஸில இருக்காங்களே'' என்று கேட்டாள்.

''ஆமாம், அவளைப் பள்ளியில் சேர்க்க வயது வரம்பிற்கு ஒரு கட் ஆஃப் டேட் வைச்சிருக்காங்களே, அதற்குச் சரியாக நாலு நாட்கள் கழித்துப் பிறந்திருக்கா. அதில ஒரு வருஷம் போயிடுத்து'' என்றாள் கல்பனா.

''சரிதான் அனு சரியாக கட் ஆஃப் டேட்டுக்கு இரண்டு நாள் முன்னாடி பிறந்ததனாலே ஒரு வருஷம் முன்னாடியே சேர்ந்துட்டா. தவிர, மும்பைலேர்ந்து

இங்கே வந்து சேர்ந்த போது அவளுடைய இங்கிலீஷ், ஐ.கியூ எல்லாத்தையும் பாத்து அவளை ஒரு கிளாஸ் கூடவே எடுத்துண்டுட்டா'' என்றாள் மீரா. தொடர்ந்து ''ஆனாலும் வயசுக்கு மிஞ்சி பெரிய கிளாசில் படிச்சா குழந்தை கஷ்டப் படுவாளோன்னு தோணித்து. ஆனா ஜீஜிம்மா டிரெயினிங். சமாளிச்சுண்டுட்டா.''

''நல்லதாப் போச்சு! நம்மை மாதிரியே அதுகளும் ஒரே கிளாசில் படிக்கும் தோழிகள். குட்'' என்றாள் கல்பனா.

ப்ரீதியைப் பள்ளிக் கூடத்தில் சேர்த்துவிட்டு திரும்பும் போது ''இப்போ வாயேன் என் வீட்டிற்கு'' என்று மீரா அவளை அழைத்தாள்.

''இல்லை மீரா. இன்னொரு நாள் பார்க்கலாமே!'' என்றாள் கல்பனா.

அன்று விட்டுவிட்டாள் மீரா. அதன் பிறகு ஒருநாள் இவளைப் பார்த்தபோது ''ஏன் கல்யாணி வெளியே வருவதையே தவிர்க்கிறே? என்னோட ஷாப்பிங் வாயேன்'' என்று அழைத்தாள்.

''வேண்டாம், மீரா!''

''ஏன்?''

''என்னவோ எனக்கு எதிலுமே ஒரு ஸ்வாரஸ்யமே இல்லை'' என்றாள் கல்பனா.

''தெரியறது. உன் டிரெஸ்ஸைத்தான் பாரேன். சிகப்பு புடவையும், நீல ரவிக்கையுமாய்! புடவையாவது ஒழுங்கா கட்டிண்டிருக்கியா? ஏத்தமும், தாழ்த்தியுமா கட்டிண்டு! மூஞ்சிக்கு பவுடர் கூட போட்டுக்காமே. என்னடி டிரெஸ் இது? ஏன் இப்படி டிரெஸ் பண்ணிக் கறே? இதனாலெல்லாம் உன் அழகைக் கெடுத்துக் கறியே'' என்றாள் மீரா கோபமாக.



''பார்த்தியா, பார்த்தியா! இந்தப் பேச்சுத்தான் எனக்குப் பிடிக்கல்லே. எல்லோருமாச் சேர்ந்து நான் அழகு, அழகுன்னு சொல்லிச் சொல்லி அதனால் விளைஞ்ச கேடல்லாம் போதாதா? நான் அழகும் இல்லை ஒண்ணுமில்லை'' என்றாள் கல்பனா ஆத்திரமாக.

''இதோ பார், நீ மக்குன்னு சொல்லிக்கோ, நான் ஒத்துக்கறேன். அழகில்லைன்னு சொன்னா நான் எப்படி ஒத்துக்கறது? மக்கு, மக்கு!'' என்று செல்லமாக அவள் தலையில் குட்டினாள் மீரா.

''வாஸ்தவம்தான். நான் மக்குதான். நான் காமா சோமான்னு டிரெஸ் தெரிஞ்சிதான் பண்ணிக்கறேன். நிஜமாகத்தான் சொல்றேன், மீரா! எனக்கு யார் கண்ணிலும் படவோ எங்கேயும் வெளியே வரவோ இஷ்டமே துளிக்கூட இல்லை. எனக்கு ஷாப்பிங் பண்ணுவதெல்லாம் தேவையே இல்லை. வனிதாக்கா, இல்லை சரோஜினியம்மா வெளியே போகும்போது எனக்கோ ப்ரீதிக்கோ வேண்டிய சாமான்களை வாங்கிவந்துடுவாங்க. மற்றபடி சமையல் சாமான்கள் எல்லாம் பொது சமையல் அறைக்கு சாமான் போடுபவரே எனக்கும் கொண்டு வந்து போட்டுடறார். தீராதுன்னு பள்ளிக் கூடத்துக்கு நல்லதா புடவை கட்டிக் கொண்டு போறேன். அங்கேயும் இந்தப் பாழாப்போன அழகு குறுக்கே வந்து என் மன நிம்மதியைக் கெடுக்கறது. எனக்கு அழகு என்னத்திற்கு. யாருக்காக நான் அழகா இருக்கணும்? போதும் மீரா! நான் எங்கேயும் வெளியே போறதில்லைன்னு ஒரு விரதமாகவே வெச்சுண்டிருக்கேன். ப்ளீஸ், மீரா!

புரிஞ்சிக்கோயேன்!'' என்று கண்களில் நீர் ததும்ப கல்பனா கேட்ட விதத்தில் இனி அவளைத் தொந்திரவு செய்யக்கூடாது என்று தானும் மனதில் உறுதியாக நினைத்துக் கொண்டாள் மீரா.

ஒரு நாள் மாலை கல்பனா உள்ளே நுழையும்போதே குழந்தை ப்ரீதி கேட்டாள், ''அம்மா, என்னோட அப்பா எங்கேம்மா இருக்கார், எப்போ வருவார்?''

''ப்ரீதி நாளைக்கு ஸ்கூல் உண்டும்மா உனக்கு. ஹோம்வொர்க் எல்லாம் முடிச்சுட்டியா?'' என்று கேட்டாள் கல்பனா, அவள் கேட்ட கேள்வியை காதில் வாங்கிக் கொள்ளாததுபோல்.

''ஹோம்வொர்க் நேத்திக்கே முடிச்சுட்டேம்மா! உனக்கு நினைவில்லையா? இன்னிக்கு அனு வருவா, முடிச்சுடுன்னு சொன்னியே!'' என்றவள் கூடவே ''சொல்லும்மா, அனுவோட அப்பா மும்பைல இருக்காராம்மா. என்னோட அப்பா எங்கே இருக்கார், அம்மா?''

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த வனிதா, ''ஏய், ப்ரீதி! நான் முல்லை மொட்டு பறிக்கப் போறேன், நீ வரியா?'' என்று கேட்டாள்.

''இதோ வந்துட்டேன் பெரியம்மா'', என்று அவள் பின்னாலேயே ஓடினாள் ப்ரீதி.

'அப்பாடா, பிழைத்தோம் இன்னிக்கு பொழுதுக்கு' என்று நினைத்துக் கொண்டாள் கல்பனா.

இந்தக் கேள்வி பதில் நிகழ்ச்சி அவ்வப்போது நடப்பதுதான். அநேகமாக வனிதாதான் உதவிக்கு வருவாள். அதையும் தாண்டி அவசியம் நேர்ந்தால் அந்த இக்கட்டான நிலைகளில் எல்லாம், வாய்க்கு வந்த ஒரு



வெளிநாட்டின் பெயரைச் சொல்லி, ''உங்கப்பா அங்கே இருக்கார்ம்மா, சீக்கிரம் வந்துடுவார்'' என்பாள். ''போட்டோ கொடும்மா'' என்று சில வேளைகளில் கேட்பாள் ப்ரீதி.

''போட்டோ எங்கோ உள்ளே இருக்கும்மா, தேடி எடுத்துத்தரேன்'' என்று சமாளிப்பாள்.

''பகவானே! இந்தக் குழந்தைக்குப் புரியற வயசு சீக்கிரம் வந்துட்டா, நான் பேசாமே நிஜத்தை சொல்லிடுவேனே!'' என்று கண்ணீர் உகுப்பாள்.

ப்ரீதிக்கு இந்தப் பள்ளிக் கூடத்தில் சேர்ந்ததிலிருந்தே படிப்பதற்கு நிறைய இருந்தது. கல்பனா அவளுடன் உட்கார்ந்து சொல்லிக் கொடுக்க வேண்டியதாயிற்று. குழந்தையும் நன்றாகப் படித்தாள். முதல் டெஸ்டிலேயே நல்ல மதிப்பெண்கள் வாங்கினாள். இதையெல்லாம் சரோஜினியிடமும், வனிதாவிடமும் சொல்லி மகிழ்ந்தாள் கல்பனா. ஆனாலும் பணம் கொஞ்சம் அதிகமாக இருக்கிறதே என்று சற்று கவலைப்பட்டாள். இவர்கள் இருவரும் மீராவும் ''அதைப் பற்றியெல்லாம் கவலைப் படாதே, கல்யாணி எல்லாம் சமாளித்துக் கொள்ளலாம்'' என்று வலியுறுத்திச் சொல்லவே, இவளும் அதைப் பற்றி நம்பிக்கையுடன் இருந்தாள்.



## 39

கொஞ்ச நாளாகவே தாத்தா சுரத்தில்லாமல் இருந்தார். என்ன, என்ன என்று பாட்டி கேட்டாலும் பதிலில்லை. தினம் ஒருமுறையாவது சரோஜினி மாமா, மாமி என்று அவர்களை வந்து பார்க்காமல் இருக்கவே மாட்டார். முதல் இரண்டு நாட்கள்

பாட்டி சொல்லியும் சரோஜினி தாத்தாவை ஒன்றும் கேட்கவில்லை. அநாவசியமாக உடல் நிலை பற்றிக் கேட்டு வயதானவர்களின் தன்னம்பிக்கையைக் கொல்லக் கூடாது என்பது அவளுடைய அபிப்ராயம். அதுவும் சரிதானே!

ஆனால் மூன்றாம் நாள் தாத்தாவிடம் ஏதோ ஒரு மாற்றம் தெரியவே, ''என்ன மாமா? உடம்புக்கு என்ன? டாக்டரை வரவழைக்கட்டுமா, சொல்லுங்க'' என்று கேட்டாள்.

''ஆமாம்மா, இரண்டு நாளாகவே தலையிலே ஏதோ குடைச்சலாக இருக்கு. பார்வையும் சரியாயில்லே. கண் டெஸ்ட் பண்ணிக்கூட மூணு மாசம் தான் ஆகறது. சரி ஏதோ பலஹீனம்னு நெனைச்சேன். ஆனா நேத்திக்கு, இன்னிக்கு ஜாஸ்தியாயிட்டமாதிரி இருக்கும்மா வேதனை. அதுதான் முடியல்லே'' என்றார் தாத்தா.

''என்ன மாமா நீங்க. முடியல்லேன்னா நான் டாக்டர் கிட்டே கூட்டிப் போக மாட்டேனா? உடனே சொல்லியிருக்கக் கூடாதா'' என்றவள், இருங்கோ, நான் டாக்டருக்கே போன் பண்ணி வரவழைக்கிறேன்'' என்று போன் செய்தாள்.

பாட்டி ''நான்தான் சொல்றேனே, இரண்டு நாளா மனுஷர் சரியில்லைன்னு! எங்கே என் பேச்சைக் கேட்கிறார்'' என்றாள்.

''ஏய், நான் உன் பேச்சைக் கேட்க ஆரம்பித்து 60 வருஷம் ஆகப்போறது. அப்போ ஆட்ட ஆரம்பிச்ச தலை இப்பகூட நிக்கலே பார்'' என்று ஜோக்கடித்தார் தாத்தா.

''போதும் நீங்களும் உங்க ஜோக்கும்'' என்று எரிந்து விழுந்தாள் பாட்டி.



டாக்டர் வந்து தாத்தாவிற்கு BP பார்த்தார் படுக்க வைத்து கால் நரம்புகளையெல்லாம் அழுத்திப் பார்த்தார். பிறகு கண்ணை விழித்து இந்தப்பக்கம் அந்தப் பக்கம் மேலே, கீழே பார்க்கச் சொன்னார். அவர் தன்கையை தாத்தாவின் கையில் கொடுத்து நொறுக்குவதுபோல் அழுத்தச் சொன்னார். பிறகு அறையின் நடுவே எதையும் பிடித்துக் கொள்ளாமல் தனியே கண்களை மூடிக் கொண்டு, ஒரு நிமிடம் நிற்கச் சொல்லிவிட்டு கண்களைத் திறக்கச் சொன்னார். கீழே விழப் போன தாத்தாவை டாக்டரும் சரோஜினியுமாகப் பிடித்துக் கொண்டார்கள்.

பிறகு தாத்தாவிடம், ''உங்களுக்கு ஒண்ணுமில்லை சார்! காதுக்குள்ளே இருக்கிற திரவம் கொஞ்சம் பாலன்ஸ் தவறி இருக்கும்னு தோணறது. நான் மாத்திரை எழுதித் தரேன். எடுத்துக்குங்க. எல்லாம் சரியாயிடும்'' என்று சொல்லி கிளம்பிவிட்டார்.

கூடவே போன சரோஜினி, அந்த அறையை விட்டு வெளியே வந்ததும் ''என்ன டாக்டர், தாத்தாவுக்கு ஒன்றுமில்லையே'' என்று கேட்டாள்.

''ஸாரி சரோஜினி மேடம்! என்னாலே அப்படிச் சொல்ல முடியாமே இருக்கு'' என்றார் டாக்டர்.

அதிர்ந்துபோன சரோஜினி ''என்ன டாக்டர் சொல் நீங்க?'' என்று கவலையுடன் கேட்டாள்.

''ஸாரிம்மா, அவருக்கு மூளையிலே கட்டி இருக்கோன்னு எனக்கு சந்தேகமா இருக்கு. சிம்ப்டம்ஸ் எல்லாம் பார்த்தா, இருக்கும்னு நிச்சயமா நம்பறேன். டெஸ்ட் பண்ணி மீண்டும் மீண்டும் கிளைக்கிற மாலிக்

னெண்ட் வகை இல்லைன்னு தெரிஞ்சுட்டா, ஆபரேஷ னுக்குப் பிறகு பயமில்லை. இல்லாட்டா கஷ்டம்தான்."

"ஆபரேஷனா" சரோஜினிக்கு குரலே வெளிவர வில்லை.

"ஆமாம்மா, அது தவிர்க்கவே முடியாத ஒண்ணு. அவர் சன் வெளிநாட்டில் இருக்கிறார் இல்லையா? அவர் வரவேண்டியிருக்கும். நாளைக்கே நான் சொல்ற ஆஸ்பத்திரிக்குப் போய் காண்பிச்சுட்டு, அவங்க சொல்ற டெஸ்டெல்லாம் எடுத்துடுங்க. என்ன ஏதுன்னு தெரிஞ்சிண்டு அவர் சன்னுக்குத் தெரியப் படுத்தலாம்" என்றார்.

"சரி டாக்டர்!"

"மேடம், இப்போ கவலை ஏதும் காண்பிச்சுக்க வேண் டாம். எதுக்கு இப்போதே பயமுறுத்தணும்?" என்றார் டாக்டர்.

தலையசைத்துவிட்டு டாக்டர் டெஸ்டுக்கு எழுதிக் கொடுத்த காகிதங்களுடன் போனை நோக்கி விரைந்தாள் சரோஜினி. மறு நாளே பொறுப்பாக தாத்தாவை ஆஸ்பத் திரிக்குக் கூட்டிப் போக சரோஜினியுடன், கல்பனாவும் முன் வந்தாள். வனிதா பாட்டியுடன் இருந்து விட்டாள். தாத்தாவிற்கு உள்ளூர பயம் இருந்ததோ என்னவோ, வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. பாட்டி அப்படியே ஒடுங்கி உட்கார்ந்துவிட்டாள். ஸ்தோத்திரப் புத்தகங் களுடன் உட்கார்ந்திருந்த அவளிடம் போய் யார் என்ன பேசுவது? எதைப் பேசினால் அவளுக்கு ஆறுதலாக இருக்கும் என்பது யாருக்கும் தெரியவில்லை.

டெஸ்டுக்குப் போய் வருவதற்கே பாட்டி இப்படி பயப்படுகிறாளே, நாளைக்கு ஆபரேஷன் என்றால்,



அந்த செய்தியை அவளிடம் சொல்லவே பயமாக இருக் கும் போலிருக்கிறதே என்று சரோஜினி வனிதாவிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

டாக்டர் சொன்ன எல்லா டெஸ்டுகளையும் ஒன்றன் பின் ஒன்றாக எடுத்து முடித்தனர். அன்றைக்கே எல்லாம் எடுக்கமுடியாமல் மறுநாளும் போக வேண்டியிருந்தது. தாத்தாவை வீட்டில் கொண்டுவிட்டு திரும்ப வரும்படி டிரைவரிடம் சொல்லியிருந்தாள் சரோஜினி. எல்லா டெஸ்ட் ரிஸல்ட்களையும் வாங்கி வருவதற்காக அவள் பின் தங்கிவிட்டாள். முதல்நாள் எடுத்த டெஸ்ட்டுக் களுக்கான ரிசல்ட் வந்துவிட்டது. ஆம், இவர்கள் பயப் பட்டதுபோல்தான் ரிசல்ட்டும் இருந்தது. மூளையில் கட்டி இருப்பதாகவும், உடனடியாக ஆபரேஷன் பண்ண ணும் என்று சொல்லிவிட்டார்கள். இல்லம் திரும்பி வந்த சரோஜினி பாட்டியிடம், "ஒரு நான்கு நாட்கள் டாக்டரின் நேரடி கண்காணிப்பில் இருக்க வேண்டி யிருக்கும், பயப்படும்படியாக ஒன்றுமில்லை" என்று சொல்லிவிட்டாள். ஆனாலும் உள்ளூர பயமாகத்தான் இருந்தது. கல்பனா, "பாட்டி, தாத்தாவுக்கு வயசாயிடுத்து இல்லையா? அதுதான் கொஞ்சம் தன்னுடைய நேரடிப் பார்வையில் அவர் இருக்கணும்னு டாக்டர் சொல்லிட் டார், நீங்க பயப்படாதீங்க பாட்டி. அவருக்கு ஒண்ணு மில்லை" என்று ஆறுதல் சொன்னாள்.

அமெரிக்காவில் எப்போது பொழுதுவிடியும் என்று சரியாக கணக்குப் பார்த்துக் கொண்டு சரோஜினி தாத்தாவின் பையன் ராஜனுக்குப் போன் செய்தாள்.

'என்னக்கா, என்ன திடீர்னு போன் செய்யறே? அப்பா, அம்மாவுக்கு உடம்பு ஒண்ணுமில்லையே?"

என்று கலவரமான குரலில் போனை எடுத்ததும் கேட்டான் அவளின் மாமா பிள்ளை ராஜன்.

"ரொம்ப சாரிப்பா, உங்ககிட்டே அவங்க சௌக்கியம், கவலைப் படாதேன்னு சொல்லணும்னு தான் ஆசை. ஆனா அப்படி சொல்ல முடியாத நிலையில்தான் இருக்கேன்" என்றாள் சரோஜினி.

"என்னக்கா, என்ன ஆச்சு அவங்களுக்கு?"

"அம்மா நன்னாத்தான் இருக்கா. அப்பாவுக்குத்தான் கொஞ்சம்..." என்று இவள் ஆரம்பிக்கும்போதே அவன் மிகவும் பதட்டப் பட்டு "என்னக்கா, அப்பாவுக்கு என்னாச்சு?" என்று கேட்டான்.

சரோஜினி நடந்த எல்லா விஷயங்களையும் அவனிடத்தில் சொல்லி, "அப்பாவை டாக்டர் பட்டாபிராமன் தான் ட்ரீட் பண்ணறார். அவரைத் தெரியுமில்லையோ உனக்கு? இன்னித் தேதிலே அவர்தான் பெஸ்ட் நியூரோ சர்ஜன் சென்னையிலே. அவர் இந்த ஆபரேஷனை ஒரு ஒருவாரம் வேணா தள்ளிப் போடலாம் அதுக்கு மேலேன்னா நிலைமை மோசமாயிடும் என்கிறார். நாளைக்கு நம்ம டாக்டர் வந்து உங்கப்பாவிடம் பக்குவமா எடுத்து சொல்லட்டும்னு நான் நினைக்கிறேன், நீ என்னப்பா சொல்றே?" என்று கேட்டாள்.

"அது சரியான யோசனைதான். அப்படித்தான் செய்யணும். ஆனா, டாக்டர் இந்த ஆபரேஷனின் வெற்றிக்கு உத்திரவாதம் எத்தனை சதவிகிதம் என்கிறார்? ஆபரேஷனுக்குப் பின் ஒண்ணும் பயமில்லையாமா?" என்று கேட்டான்.

"ஆபரேஷன் ஆபத்தானதுன்னு அவர் ஒண்ணும் சொல்லல்லே. ஆனா உங்கப்பாவுக்கு வயசு அதிகமா



யிடுத்து. இந்த ஆபரேஷனை வித்ஸ்டாண்ட் பண்ணணுமேன்னுதான் கவலையா இருக்கு. வயசுதான் அவருக்கு இப்போ எதிரிடையா இருக்கு. நல்லபடியா முடிஞ்சிதுன்னா அப்புறம் கவலையில்லை என்கிறார். நீ கொஞ்சம் வந்துட்டுப் போறியாப்பா?" என்று கேட்டாள்.

"வந்துடறேங்க்கா. எத்தனை சீக்கிரம் வரமுடியுமோ அத்தனை சீக்கிரம் வந்துடறேன். அநேகமா இன்னும் நாலு நாள்லே அங்கே இருப்பேன். டிக்கெட் கிடைக்கணும் அவ்வளவுதான். அப்புறம் இன்னொண்ணுக்கா. அம்மாவுக்கு விஷயம் தெரியுமா?

"இல்லேப்பா, இன்னும் சொல்லல்லே. எப்படி எடுத்துப்பான்னு தெரியல்லே. பயமா இருக்கு."

"இப்போ சொல்ல வேண்டாங்க்கா, சரி, ஒருவாரம் வரை தள்ளிப் போடலாம்னு டாக்டர் நிச்சயமாச் சொல்றார், இல்லையா."

"ஆமாம்பா! நான் அம்மாவுக்கு சொல்றதை முடிஞ்ச வரை தள்ளிப் போடறேன் நீ சீக்கிரம் வந்துடுப்பா நான் பாத்துக்கறேன்" என்றாள் சரோஜினி. அவளுக்கு நன்றியைத் தெரிவித்துவிட்டு போனை வைத்துவிட்டான் ராஜன்.

மறு நாள் காலையிலேயே கிளம்பிப்போய் ஆபரேஷன் தேதியை நிர்ணயம் செய்து கொண்டு பணம் கட்டி, எப்போது ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து சேர்க்கணும் போன்ற எல்லா விவரங்களையும் தெரிந்து கொண்டு வந்தாள். பணம் இருந்தால் ராஜ வைத்தியம் நடக்கக் கேட்பானேன்? மனித யத்தனத்தில் செய்யக் கூடியது நடந்துவிடும். ஆனா எத்தனை வைத்தியம்

செய்தாலும் குணமாவதும் வேறுவிதமாக ஆவதும் நம் கையில் இல்லையே? எல்லாம் கடவுள் செயலல்லவா?

மறு நாள் டாக்டர் வந்து தாத்தாவிடம் விவரம் எல்லாம் பக்குவமாக அவர் பயப்படாத மாதிரி எடுத்துச் சொல்லிவிட்டார். தாத்தா ஒரு மாதிரி இதை ஊகித்திருப்பார் போலும்! உள்ளூர பயமாக இருந்தாலும், ரொம்ப பயப்பட்டதாக வெளியே காட்டிக் கொள்ளவில்லை. சரோஜினியிடம், "அம்மா சரோஜினி, எனக்கு ஏதாவது ஆகிவிட்டாலும் உன் மாமியை விட்டுடாதேம்மா! பாத்துக்கோ. என் பிள்ளை ரொம்ப நல்லவன்தான். அம்மாமேல் கொள்ளை பிரியம்தான். அவனால் அமெரிக்காவை விட்டு வரமுடியாது. இவளுக்கும் அந்த ஊர் எல்லாம் சரிப்பட்டு வராது" என்றார்.

"என்ன மாமா, இதெல்லாம் என்ன பேச்சு? நீங்க ஆபரேஷன் நல்லபடியாக ஆகி எழுந்து வந்து சதம் போடப் போறீங்க! இந்தக் காலத்துல மருத்துவ முன்னேற்றத்தைப் பத்தி உங்களுக்குத் தெரியாதா? அதைரியப் படாதீங்க" என்று தைரியம் சொன்னாள்.

"அதைரியம் என்னம்மா? பொறந்தவங்க எல்லாரும் ரிடர்ன் டிக்கெட்டோடத்தானே வந்திருக்கோம்?" என்று சொல்லி சிரித்தவர் "ஆமாம், காலையிலிருந்தே எங்க உன் மாமியைக் காணோம்? டாக்டர் வரார்னு அப்புறப் படுத்திட்டியா சாமர்த்தியமா?"

"ஆமாம் மாமா! சரியாச் சொல்லிட்டீங்க. மாமி பக்கத்திலிருக்கிற ஒரு கோவிலுக்கு மத்தப் பெண்களோட போயிருக்கா. காலதான் போயிருக்கா."

நிஜம்தாம்மா! முடிஞ்சவரை ஆபரேஷன் பண்ணப் போற விஷயத்தை அவ கிட்டே சொல்ல வேண்டாம். தாங்க மாட்டா."



சற்று நேரத்திற்கெல்லாம் கோவிலுக்குப் போனவர்கள் எல்லோரும் திரும்பிவிட்டனர். பாட்டி அம்மன் குங்குமத்தை தாத்தாவிற்கு இட்டுவிட்டாள். "சாப்பிட்டுவிட்டு இரண்டுபேரும் சற்று ரெஸ்ட் எடுத்துக்கோங்கோ. நான் அப்பறமா வரேன்" என்று சொல்லி சரோஜினி கிளம்பினாள்.

சரியாக மூன்றே நாளில் தாத்தாவின் பிள்ளை ராஜன் அமெரிக்காவிலிருந்து வந்துவிட்டார். அவசரம் என்பதால் குழந்தைகளையும், மனைவியையும் கூட்டிவரவில்லை. அவர் வந்து இறங்கியதும் தாத்தாவிற்கு ஆறுதலாகத்தான் இருந்தது.

"என்னப்பா ராஜா, சௌக்கியமா? நீ எப்படி இப்போ வந்தே? சரோஜினி என் உயிருக்கு ஆபத்துன்னு உன்னை உடனே வரச் சொன்னாளா" என்று கேட்டார்.

"அதெல்லாம் இல்லேப்பா. உங்களுக்கு உடம்பு கொஞ்சம் சரியில்லை. நான் வந்தா அங்கே இங்கே போக சௌகரியமா இருக்கும்னு அக்கா போன் பண்ணியிருந்தாங்க. ஒரு சின்ன ஆபரேஷன் பண்ணனும்னு முடிவு பண்ணியிருக்காங்களாம். ஒரு வாரத்திலே நீ வீட்டுக்குத் திரும்பிடலாம்னு டாக்டர் சொன்னார். நீங்க ஒண்ணும் பயப்பட வேண்டாம்" என்றார்.

"சரி, சரி! அம்மாவுக்கு விஷயம் தெரியாமே பார்த்துக்கோ" என்றார் தாத்தா.

அதற்குள் ஜானுப்பாட்டி அங்கே வந்துவிட்டாள். "டேய், வா, வா! என்னடா திடீர்னு? அப்பாவுக்கு உடம்பு சரியில்லேன்னு சரோஜினி போன் பண்ணி வந்தியா" என்றாள் சந்தோஷ அதிர்ச்சியுடன்.

''தெரியும்மா! சில டெஸ்ட்டெல்லாம் எடுத்திட்டு ஒரு வாரம் டாக்டர்கள் கண்காணிப்பில் ஆஸ்பத்திரியில் இருக்கணும்னு சொல்லியிருக்காங்களாமே! சரி உனக்கும் அப்பாவுக்கும் துணையா இருப்போம்னுதான் புறப்பட்டு வந்தேன். உன் மாட்டுப் பொண்ணுக்கும் உன்னை வந்து பார்க்கணும்னுதான் ஆசை. ஆனா உடனே எங்க நாலு பேருக்கும் டிக்கெட் கிடைக்கவில்லை. குழந்தைகளுக்கும் ஸ்கூல்லே பரிட்சை வேறே. அதுதான் நான் மட்டும் புறப்பட்டு வந்தேன்.''

''நீ வந்ததே தெம்பாத்தான் இருக்குப்பா! ஆனா உண்மையைச்சொல்லு, அப்பாவுக்கு ஒண்ணுமில்லைன்னு தானே சொன்னாங்க?''

''ஆமாம்மா! அப்பாவுக்கு ஒண்ணுமேயில்லை. வயசாயிடுத்து. இல்லையா? நீ எதுக்கும் கவலைப் படாதே'' என்றார் ராஜன் ஆறுதலாக.

எப்போதும், தான் ஸ்வாமிக்குச் செய்கிறேன் என்று சாதம், பருப்பு வைப்பாள், பாட்டி. சில சமயம் தாத்தா வேண்டுமென்று கேட்டால் தன் ஸ்பெஷல் ஐட்டமாக மிளகு குழம்பு, கத்தரிக்காய் துவையல் என்று ஏதாவது செய்வாள். இல்லை தனக்கே வேண்டுமென்று தோன்றினால் பிடி கருணை கறி, கண்டந்திப்பிலி ரசம் என்று செய்து கொள்வாள். இல்லையானால் பொதுச் சமையலிலிருந்து வருவதுதான். மாவெல்லாம் அரைத்ததும் ஒரு பெரிய டப்பாவில் கொண்டு வந்து தந்துவிடுவார்கள். பாட்டி இட்லியோ, தோசையோ சூடாக செய்து தாத்தாவுக்கும் கொடுத்து தானும் சாப்பிடுவாள்.

இப்போது பிள்ளை வந்திருக்கிறானே என்று பொதுச் சமையலிலிருந்து எதுவும் வேண்டாம் என்று அவனுக்குப்



பிடித்த பதார்த்தங்களைத் தானே செய்து போட வேண்டும் என்று செய்ய ஆரம்பித்துவிட்டாள். அவள் மாங்கு. மாங்கு என்று செய்தாளே தவிர யாருக்கு சாப்பிடப் பிடிக்கும்? மகனுக்கு அம்மாவைப் பார்க்கப் பாவமாக இருந்தது. அவளுக்காக சாப்பிட்டதாகப் பேர் பண்ணினார்.

மூன்றாம் நாள் தாத்தாவை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப் போக சரோஜினியும் ராஜனும் கிளம்பும் போது தானும் அவர்களுக்கு முன்னாடியே கிளம்பிவிட்டாள். ரொம்ப சிரமப்பட்டு ''அங்கே உட்காரக்கூட இடம் இல்லை, அதனால் நீ வர வேண்டாம். நீயும் படுத்துக் கொண்டு விட்டால் ரொம்ப சிரமம். நான் அப்பப்ப போன் பண்றேன்'' என்றெல்லாம் பலவாறு சொல்லி அவளை வீட்டிலேயே இருக்கவைத்துவிட்டு வனிதாவைத் துணைக்கு வைத்துவிட்டு கிளம்பினார்கள்.

தாத்தாவும் பாட்டியிடம், ''நீ ஒண்ணும் கவலைப் படாதே! நான் நல்லபடியா சீக்கிரமே திரும்பிவிடுவேன். சாயந்திரம கல்யாணியைப் பாட்டுக் கிளாஸை இங்கேயே எடுக்கச் சொல்லு. உனக்கும் பொழுது ஓடிடும்'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினார்.

சரோஜினிக்கும் சற்றுக் கலக்கமாகத்தான் இருந்தது. வண்டி புறப்பட்டதும் பேசாமல் மாமியையும் கூட்டிப் போயிடலாமா என்று கேட்டாள். ஆனால் தாத்தா ''அவள் அங்கு வந்தால் அவளைப் பார்த்துக் கொள்வதே பெரிய பிரச்னையாகிவிடும்'' என்றார் ''அவள் வீட்டிலேயே சௌகரியமாக இருக்கட்டும்'' என்று சொல்லி தீர்மானமாக மறுத்துவிட்டார்.



## 40

தாத்தாவை ஆஸ்பத்திரியில் சேர்த்தாயிற்று. மறுபடியும் எடுக்க வேண்டிய டெஸ்ட்டுகளை எல்லாம் எடுத்தனர். தாத்தாவின் தலையை மொட்டை அடித்தாயிற்று. இந்த வயதிலும் அவருக்கு நரைத்திருந்தாலும் சுருள் சுருளாக தலைமயிர் இருந்தது. சே! எப்படி இருந்த மாமாவை எப்படிப் பார்க்க வேண்டியிருக்கிறது என்று சரோஜினிக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. எத்தனை தைரியசாலியாக இருந்து, வாழ்க்கையின் எத்தனையோ பரிமாணங்களைச் சந்தித்திருந்தாலும் அவளுக்கும் தனக்கு உறவு என்று இருக்கும் பெரியவருக்கு ஒன்றென்றால் மனது கலங்கத்தான் செய்தது. ராஜன் என்னவோ மிகவும் இடிந்து போயிருந்தார். அவருக்குத்தான் கூட இருந்து அப்பாவைப் பார்த்துக் கொள்ள முடியாமல் போய்விட்டதே என்ற குற்ற உணர்வு வேறு.

ஆபரேஷனுக்கு முதல் நாள் தாத்தாவை ஜானுப் பாட்டியுடன் போனில் பேச வைத்தார்கள். அன்று இரவு தாத்தாவிற்கு உணவு கிடையாது. வெறும் டிரிப்ஸ்தான்.

தாத்தா புறப்பட்டு ஆஸ்பத்திரிக்கு போனதிலிருந்து பாட்டி ஸ்வாமி சந்நிதி முன்பிருந்து நகரவேயில்லை. ஸ்லோகங்கள் சொல்லிக் கொண்டே இருந்தாள். அவளைத் தனியே விடாமல் யாராவது கூட இருந்து பார்த்துக் கொண்டார்கள். அவ்வப்போது வற்புறுத்தி ஏதாவது சாப்பிட வைத்தார்கள். சாயந்திரம் பாட்டியை சற்று காலார நடக்கக் கூட்டிப் போனார்கள்.

ஆபரேஷன் விடியற்காலை என்று நிச்சயித்திருந்தார்கள். முதல் நாள் வீட்டிற்குப் போய் தூங்கிய



சரோஜினி விடியற்காலையிலேயே ஆஸ்பத்திரிக்கு வந்துவிட்டாள். பிள்ளையே ரத்தம் கொடுத்துவிட்டதால் சிரமமில்லாமல் போய்விட்டது.

ஆபரேஷன் ஐந்து மணிநேரம் நடந்தது. டாக்டர்கள் வெளியே வந்து ஆபரேஷன் வெற்றிகரமாக நடந்தேறி விட்டதென்றும் இனிமேல் பயமில்லை, கொஞ்ச நாளைக்கு ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டால் போதும் என்றும் சொன்னார்கள்.

''நாங்க எப்போ பார்க்கலாம், டாக்டர்?'' என்று கேட்டாள் சரோஜினி.

''அவசரப் படாதீங்க. பெரியவர் வயசை நாம எப்போதும் நினைவில் வச்சுக்கணும். ரொம்ப சீக்கிரம் இன்ஃபெக்ஷன் ஆகிவிட வாய்ப்பு இருக்கு. அதனாலே இப்போ எடுத்துக்க வேண்டிய ஜாக்கிரதைகள் எல்லாம் ரொம்ப முக்கியம். அவரை ஐ சி யூ விற்கு மாத்தியிருக்கோம். இன்னிக்கு முழுவதும் அவரை குளோசாக அப்ஸர்வ் செய்யணும். அவருக்கு நினைவு திரும்ப நாளை ஆயிடும். நீங்கள் நாளை அவரைப் பார்க்கலாம், ஆனா பேச முயற்சிக்காதீர்கள் நான் திரும்ப சாயந்திரம் வந்து பார்க்கிறேன்'' என்று சொல்லிவிட்டு புறப்பட்டார்.

''ரொம்ப நன்றி டாக்டர்'' என்று தன் நன்றியை மன நிறைவுடன் தெரிவித்தாள்.

சிரித்துக் கொண்டே தலையசைத்துவிட்டு டாக்டர் சென்றுவிட்டார். சரோஜினியும் ராஜனும் அப்பாடா என்று உட்கார்ந்துவிட்டனர். அவர்களுக்கென்ன தெரியும், அடுத்த நாள் பொழுது எப்படி விடியும் என்று? மனிதர்கள் நம்பிக்கை என்ற ஒரே அஸ்திவாரத்தில் தானே வாழ்க்கை என்பதை நடத்துகிறார்கள்!

சற்றைக்கெல்லாம் இன்னொரு ஸ்பெஷலிஸ்ட் வந்து தாத்தாவை பரிசோதித்தபோது "ஒரு 24 மணிநேரம் போகவிட்டுத்தான் எதுவும் சொல்லமுடியும். அவருக்கு பிளட் பிரஷர் இறங்கிக் கொண்டேயிருக்கிறது. நிலைமை கொஞ்சம் கவலைக்கிடமாகவே இருக்கிறது. கடவுள் மேலே நம்பிக்கை வைத்து நாம் நல்லதையே நினைப் போம்" என்று சொல்லிவிட்டுப் போனார்.

இவர்களுக்கு வயிற்றில் பட்டாம் பூச்சி பறக்க ஆரம் பித்துவிட்டது. ராஜன், "சரிக்கா, நீங்க போய் ரெஸ்ட் எடுங்க. கடவுள் இருக்கார், ஒண்ணும் ஆகாதுன்னே நம்புவோம். ஏதாவது அவசியமாக இருந்தா நான் போன் பண்ணுறேன்" என்றார். அதற்குள் அங்கு வந்த தலைமை நர்ஸ் "ஆமாம்மா, நீங்க போய் ரெஸ்ட் எடுங்க. நாங்க இரண்டு பேர் எப்போவும் ஐ.சி.யூ வில் இருப்போம். ஸாரும் இருக்கிறார். நீங்க 'கிளம்புங்க" என்றாள். சரி என்று கிளம்பிய சரோஜினி டிரைவரைக் கூப்பிட்டு ராஜனுக்கு டிபன் வாங்கிக் கொடுக்கச் சொல்லிவிட்டுப் புறப்பட்டாள்.

வீடு திரும்பிய சரோஜினியை எல்லோரும் சூழ்ந்து கொண்டனர். "தாத்தா எப்படி இருக்கிறார். ஆபரேஷன் நல்லபடியா முடிந்துவிட்டதா? எப்போ வீட்டுக்கு அனுப்புவாங்க?" என்று ஒரே கேள்வி மயம்.

"பாட்டி எங்கே?" என்று கேட்டு சுற்றும் முற்றும் பார்த்தாள் சரோஜினி."

"பாவம்மா அவங்க! சாமி படங்களை விட்டு இந்தப் பக்கம், அந்தப்பக்கம் நகரல்லேம்மா. அப்படியே ஒடுங் கிப் போயிட்டாங்க" என்றாள் பாரு.



"சரிம்மா, தாத்தா எப்படி இருக்காரு?" என்று விசாரித் தாள் வனிதா.

"கொஞ்சம் கவலைக்கிடமாத்தான் இருக்கு. 24 மணி நேரம் கழிச்சுதான் சொல்லமுடியும் என்கிறார் டாக்டர். சரியாயிடற வாய்ப்புதான் அதிகம். ஆனாலும் வயசாற தில்லியா" என்றாள் சரோஜினி.

"அப்படியா சொன்னார்? எல்லோருமாப் போய் பிரார்த்தனை செய்யலாம்" என்றாள் கல்பனா. "நான் போய் பாட்டியைப் பார்த்து இரண்டு வார்த்தை பேசிட்டு வரேன்" என்றபடி நடந்தாள் சரோஜினி.

பாட்டி அம்பாள் படத்தின் முன் விளக்கேற்றி வைத்து, அபிராமி அந்தாதி பாடி, அம்மனைத் துதித்துக் கொண் டிருந்தாள். சரோஜினி வருவதைப் பார்த்ததும் அவசர மாக எழுந்திருக்க முயற்சி செய்தாள். வயதாகிறதல்லவா? முழங்கால்கள் ஒத்துழைக்க தாமதம் செய்ய சரோஜி னியே போய் அவசரமாக பாட்டியை எழுப்பி பக்கத்தில் உள்ள நாற்காலியில் உட்காரவைத்தாள்.

"உங்க மாமா எப்படியிருக்கார்மா?" என்று தழுதழுத்த குரலில் கேட்டாள் பாட்டி.

"நன்னா இருக்கார் மாமி, கவலைப் படாதீங்கோ" என்றாள் சரோஜினி.

"நிஜமாகத்தான் சொல்றியா சரோ! ஒவ்வொரு தாமும் போன் மணி அடிக்கும்போதும் தூக்கி வாரிப் போடறது. போனே வரல்லேன்னாலும் பயமா இருக்கு. ஏம்மா, என்னையும் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப் போயேம்மா! இங்கே உட்கார்ந்து இருப்புக் கொள்ளாமே ரொம்பவே கஷ்டமா இருக்கு" என்றாள் ஜானுப் பாட்டி.

''இல்லே மாமி, அங்கே உட்கார, படுக்க வசதியில்லையே, உங்களுக்கு முதுகு வலிக்கப் போறதேன்னுதான் கூட்டிண்டு போகலே. தவிர மாமாவுக்கு முழுமையான ஓய்வு தேவைன்னு டாக்டர் சொல்லியிருக்கார். மாமாவோடு யாரும் பேசக் கூட கூடாதுன்னுட்டார். அப்படியிருக்கச்சே நீங்களும் வந்து அங்கே என்ன பண்ணுது? நாளைக்கு கூட்டிண்டு போறேன்'' என்றாள் சரோஜினி.

''நான் ஏம்மா பேசப் போறேன். தூர உட்கார்ந்து அவரையே பார்த்துண்டு இருக்கேம்மா, அதுவே போதும்'' சொல்லும்போதே பாட்டிக்குத் தொண்டையை அடைத்தது.

அப்போதுதான் உள்ளே வந்த கல்பனாவுக்கு அந்த வார்த்தைகள் காதில் விழுந்தன. எண்ணங்கள் எங்கெங்கோ பறந்தன. சரோஜினி பக்கத்தில் போய் தானும் உட்கார்ந்தாள். பாட்டி அபிராமி அந்தாதி பாடுவதை மீண்டும் துவக்கினாள். இவர்கள் இருவரும் கண்மூடி கை கூப்பி அம்பாள் படத்தின் முன் அமர்ந்திருந்தார்கள். முல்லை மொட்டுக்கள் அம்பாள் படத்தின் மேலேயே மலர ஆரம்பிக்க, ஊதுவத்தி மணப் கமழ, விளக்கின் சுடரில் அம்பாளின் முகம் ஒளிவீச, பாட்டியின் முகமும் அதைப் பிரதிபலித்து, ஒரு தேவதையின் முகம் போல் ஒளிவீசுவதாகத் தோன்றியது.

''கடவுளே! தாயே! அபிராமியே! தாத்தாவை - நல்லபடியாக பாட்டியிடம் கொண்டுவந்து சேர்த்துவிடு'' என்பதுதான் இவர்களின் பிரார்த்தனையும். பாட்டிக்குத்தான் வேறே எண்ணமே இல்லையே! பாட்டியின் முகத்தைப் பார்க்கப் பார்க்க அவள் மூக்குத்திகளின்



ஒளியும், அதைவிட அழகாகத் தோற்றமளித்த அவள் நெற்றிக் குங்குமமும், வகிட்டில் குங்குமமும், மஞ்சள் மெருகில் ஜொலிக்கும் கன்னங்களும் - ஐயோ, பாட்டியிடமிருந்து இதெல்லாம் பறிபோய்விடக் கூடாதே, அபிராமியே'' என்று வேண்டிக் கொள்ளத் தோன்றியது.

கடைசிப் பாட்டு ஆகி பாட்டி கற்பூர ஆரத்தி காண்பித்தாள். இருவரும் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினர். வெளியே வந்ததும் ஒரு பத்து அடி நடந்துவிட்ட தைரியத்தில், சரோஜினி கல்யாணியிடம், ''கல்யாணி, மாமி முகத்தைப் பார்த்தா என்ன ஒரு தேஜஸ், பார்த்தியா? நாளைப் பொழுது நல்லபடியா விடிஞ்சு மாமியின் திருமாங்கல்யம் பறிபோகாமே இருக்கணுமேன்னு கவலையாக இருக்கு. என்ன இருந்தாலும் மூளை ஆபரேஷன் இல்லையா?'' என்றாள்.

''ஆமாம், டாக்டர் 24 மணிநேரம் கெடு வெச்சார்ன்னு சொன்னது கவலையாகத்தான் இருக்கு'' என்றாள் கல்பனா.

இவர்கள் போனதும் வாசற்கதவைச் சாத்துவதற்காகப் பாட்டி எழுந்து வந்திருப்பாள் போலிருக்கிறது. ஒரு பூனை சுற்றிக் கொண்டே இருக்கிறது பத்து நாட்களாய். அதற்காக கதவைத் தாளிட வேண்டும் என்று எழுந்து வந்தாள் பாட்டி.

'தடால்' என்று ஒரு பெரிய சப்தம் கேட்டது. பாட்டி கீழே விழுந்துவிட்டாள். இவர்கள் பேசினதைக் கேட்டிருக்க வேண்டும். பதறிக் கொண்டு திரும்ப ஓடினார்கள் இருவரும். கதவின் கீழ்த் தாழ்ப்பாளில் தலை மோதி ரத்தமாகக் கொட்டிக் கொண்டிருந்தது. கூப்பிடக் கூப்பிட பதிலே இல்லை. பேச்சு, மூச்சைக் காணோம்.

கல்பனா ''பாரு அக்கா, வனிதாக்கா'' என்று குரல் கொடுக்க எல்லோரும் வந்துவிட்டனர். டிரைவரும் ஓடிவர, பாட்டியைத் தூக்கி எல்லோருமாகக் கட்டிலில் கிடத்தினர்.

உள்ளேயிருந்து சுத்தமான ஒரு வெள்ளை டவலை எடுத்து காயத்தின் மேல் வைத்துக் கட்டினாள் சரோஜினி. நாடிபிடித்துப் பார்த்தால் ஒன்றுமேயில்லை. ஆனாலும் பாட்டியைக் காரில் தூக்கிப் போட்டுக் கொண்டு வனிதாவும் சரோஜினியும் பறந்தார்கள் ஆஸ்பத்திரியை நோக்கி.

கல்பனா அப்படியே பாட்டி உட்கார்ந்திருந்த இடத்திலேயே உட்கார்ந்துவிட்டாள். மனது எங்கெங்கோ அலைபாய்ந்தது.

எத்தனை வருஷம் இருக்கும் பாட்டிக்குக் கல்யாணம் ஆகி? அறுபது வருஷம் இருக்குமா? மனிதர்கள் எல்லோரும் பிறக்கும்போதே அவர்கள் நெற்றியில் எக்ஸ்பைரி தேதி போட்டுத்தானே அனுப்புகிறான் ஆண்டவன்? ஆனாலும் மரணம் என்பதை நினைத்தாலே ஒரு கலக்கமாக இருக்கிறது. பாவம், பாட்டிக்கு இந்த கதி தானும் சரோஜினியும் பேசியதால்தான் வந்தது என்பது தோன்றியது.

ப்ரீதி வந்ததும் அவளைத் தூங்கப்பண்ண, அப்படியே பக்கத்தில் தானும் படுத்துக் கொண்டாள். குழந்தையும் பயந்து போயிருக்க வேண்டும். வாயையே திறக்கவில்லை. அவள் சாப்பிட்டாளா என்று கூட கல்பனா கேட்கவில்லை.

பாட்டியோடுகூட அவள் சில நாட்கள் தங்கியிருக்கிறாள். பாட்டியும் தாத்தாவும் ரொம்ப அன்பாகப்



பேசியெல்லாம் அவள் பார்த்ததில்லை. அவர்கள் தினப்படி வாழ்க்கை அநேகமாக வாய்ச் சண்டை நிறைந்ததாகத்தான் இருக்கும். ஒருவேளை அதுதான் அவர்களின் காதல் பாஷையோ என்னவோ! காலையில் எழுந்து தாத்தா காபி போடுவார். பாட்டி எழுந்ததும் ''காபியைப் போட்டு முதல் டிகாக்ஷனை நீங்க மொத்தமும் எடுத்துக் கொண்டால், என் காபி எப்படி இருக்கும்?'' என்று சண்டை போடுவாள். ''பின்னே நான் காத்திருந்து இரண்டாவது, மூன்றாவது இறங்கினப்புறம் தான் சாப்பிடணுமாக்கும்'' என்பார் தாத்தா. அடுத்த சண்டை காலை டிபன் நேரத்தில். ''இன்னொரு தோசை தான் போட்டுக்கோங்களேன். போதும், போதும்னு இரண்டோட எழுந்துட்டு, உடனே வேற என்ன இருக்கு கொறிக்கறதுக்குன்னு தேடறது என்ன பழக்கமோ? நொறுக்குத்தீனி சாப்பிடற வயசா இது'' என்பாள் பாட்டி. உடனே தாத்தா, ''என்னால் முடியறது சாப்பிடறேன், நீயும் வேணா சாப்பிடேன், யார் வேண்டாங்கறா'' என்பார் இடக்காக.

சாயந்திரம் ஒவ்வொருநாள் சேர்ந்து நடக்கப் போவார்கள். இல்லத்தின் காம்பௌண்டிற்குள்ளேயே தான் நடப்பார்கள். தாத்தா வேகமாக நடக்க, பாட்டி பின்னாடியே நடப்பாள் ''கொஞ்சம் நிதானமா என்னோட சேர்ந்து நடந்தாத்தான் என்ன குறைஞ்சிப்போயிடும் உங்களுக்கு? ஏன் என்கூட சேர்ந்து நடந்தால் கௌரவக் குறைச்சலா இருக்கா'' என்று வம்பு பண்ணுவாள்.

பாட்டி விரதமென்று பட்டினி கிடந்தால் தாத்தாவுக்குப் பிடிக்காது. தாத்தா பூஜை, புனஸ்காரமே இல்லாமல் இருப்பது பாட்டிக்குப் பிடிக்காது.

ராத்திரி பாட்டி பால் கொண்டுவந்து நீட்டுவாள் "எனக்கு வேண்டாம்" என்பார் தாத்தா. "இல்லை, உங்களுக்கு வேணும், குடிங்கோ" என்பாள் பாட்டி. "எனக்கு வேணுமா, வேண்டாமாங்கறது எனக்குத் தெரியுமா, இல்லை உனக்குத் தெரியுமா" என்று கேட்பார் தாத்தா. "எனக்குத்தான் தெரியும். அதிலென்ன சந்தேகம்?" என்பாள் பாட்டி கர்வமாக. "உனக்கு ரொம்பவே பொல்லாத்தனம் ஏறிப் போச்சு" என்று சொல்லிக் கொண்டே பாலை வாங்கி குடிப்பார்.

ஆனால் ஒரு பத்து நிமிடம் தாத்தாவைக் காணாமல் பாட்டிக்கும், பாட்டியைக் காணாமல் தாத்தாவுக்கும் இருக்க முடியாது. குளிக்கும் முன் பாட்டி தாத்தாவின் தலைக்கு எண்ணெய் வைத்து விடுவதையும், பாட்டிக்குத் தாத்தா கால் அமுக்கி விடுவதையும் கல்பனாவே காண நேர்ந்திருக்கிறது. இவள் பார்த்துவிட்டாளே என்று பதட்டப்பட்டு விலகிக் கொள்ள மாட்டார்கள். உடனே இயல்பாக நகர்ந்துவிடுவார்கள். ஆனால் பாட்டியின் முகத்தில் ஒரு வெட்கம் வந்துவிடும் அவ்வளவுதான்.

அறுபது வருட இல்லற வாழ்க்கைக்கப்புறமும் பிரிவு என்பது கொடுமையாகத் தோன்றுகிறது இவர்களுக்கு. தன்னைப் போல் இரண்டே வருடம் அத்தனை அன்பு செலுத்தியவன் எங்கே இருக்கிறான் என்றுகூடத் தெரியாமல் நாமும்தான், உண்டு, உறங்கி, வயிற்றைக் கழுவ ஒரு உத்தியோகமும் பார்த்துக் கொண்டு நாட்களை மாதங்களாகவும் வருடங்களாகவும் கழித்துக் கொண்டிருக்கிறோம். அவன் இருக்கிறானா என்று கூட சரியாகத் தெரியாது. அந்த நினைப்பே அவளுக்குச்



சுரீரென்று ஒரு பய உணர்வாக வயிற்றில் தாக்கியது. எழுந்து மணி பார்த்தாள் 11.30 ஆகியிருந்தது. அதற்குள் போன் மணி அந்த இரவின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு பெரிய அலறலாகக் கேட்டது. ஏதோ தத்துப் பித்து எண்ணங்களுடன் அரைத் தூக்கம் தூங்கியிருக்கிறோம் என்று உணர்ந்து, சரோஜினியிடமிருந்து பாட்டியைப் பற்றித்தான் இருக்கும் என்று நொடியில் எண்ணமிட்டுக் கொண்டே போனை எடுத்தாள்.

எதிர்முனையில் சரோஜினிதான். "பாட்டிக்குப் பூவும் பொட்டும் பத்திரமாக இருக்கும்மா, ஆனா பாட்டிதான் இல்லை" என்று சொல்லி விசும்பினாள்.

"அம்மா, என்னம்மா சொல்றீங்க?" என்று அழவே ஆரம்பித்துவிட்டாள் கல்பனா.

"ஆமாம் கல்யாணி, ரத்தம் நிறைய சேதமாயிடுத்தாம், அடியும் பொட்டில் பட்டிருக்கு. நாங்க வந்ததுமே சொல்லிட்டாங்க. நான் ரொம்பவே குற்ற உணர்ச்சியோட நிற்கிறேன் கல்யாணி! நாம பேசியதைக் கேட்டுத்தான் மாமி மயங்கி விழுந்திருக்கிறாள்."

"அம்மா, வருத்தப்படாதீங்க! இன்னிக்கு இல்லாட்டாலும் நாளைக்குத் தெரியாமலா போய்விடும்? அவங்க பிள்ளைக்குச் சொல்லிட்டீங்களாம்மா" என்று கேட்டாள் கல்பனா.

"சொல்லிட்டேம்மா, பாவம்! கதறிவிட்டார். நம்ம டிரைவரைப் போய் அவரோடு இருக்கச் சொல்லியிருக்கிறேன். என்னையும் வனிதாவையும் அங்கே விட்டு விட்டு ஆஸ்பத்திரி போகிறார்" என்றாள் சரோஜினி.

"பாட்டியை எப்படிம்மா..." என்று அரைகுறையாகக் கேட்டு நிறுத்தினாள் கல்பனா.

''இங்கேதான் வைத்து. இங்கிருந்துதான் புறப்படுகிறாள். நான் வந்து பாக்கி விவரம் சொல்கிறேன்'' என்று சொல்லி போனை வைத்துவிட்டாள்.

ஒன்று எண்ணெயோ அல்லது திரியோ மிஞ்சணும். எது என்பது யாருக்குத் தெரியும்? விதியின் விளையாட்டிற்கான காரணமோ, விதி செய்யப் போகும் காரியமோ, யாருக்குத் தெரியும்? அடுத்த நிமிடத்தில் நடக்கப் போவது தெரியாமலேயே மனிதன் இந்த ஆட்டம் ஆடுகிறானே!

பாட்டி இன்னிக்கு அபிராமி அந்தாதி படிக்கும்போது எத்தனை லட்சணமாக இருந்தாள்! யார் கண்ணாவது பட்டுவிட்டதா? அவள் போட்டிருந்ததோ ஒரு கோடாலி முடிச்சு. அதில் ஒரு கிள்ளுப் பூ. மற்றபடி பவுடரா, மையா? கழுத்தில் மட்டும் ஒரு மஞ்சள் சரடு. தாலிக் கொடி தவிர. தனித்தனியே வழவழவென்று பெரிய சிகப்புக் கற்கள் வைத்த அட்டிகை ஒன்று போட்டிருப்பாள். அதைக் கழற்றவே மாட்டாள். அவள் புக்ககம் வந்த இரவு தாத்தாவை விட்டு பாட்டியின் மாமியார் போடச் சொன்னதாம். இதை ஒருமுறை பாட்டியே வெட்கத்தோடு சொல்லியிருக்கிறாள்.

நிறைந்த தம்பதி. இருவருமாக வந்து சாந்தி இல்லத்தில் இறங்கியதும் இல்லமே அத்தனை நாளாக இல்லாத ஒரு மங்களக் களை கொண்டதுபோல் தோன்றிற்றே! இப்படி திடீரென்று கிளம்பிவிட்டாளே!

கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டதால், வெளியே வந்தாள் கல்பனா. போன் வந்ததுமே எல்லோரும் வெளியே வந்து விஷயத்தைத் தெரிந்து கொண்டுவிட்டார்கள். கல்பனாதான் எல்லோரையும் ''போய்



தூங்குங்கள். காலையில் எல்லோருக்கும் வேலை இருக்கும்'' என்று அனுப்பி வைத்து விட்டாள் வலுக்கட்டாயமாக கார் சப்தம் கேட்டதும் பாதிப்பேர் திரும்பி வந்துவிட்டனர். உள்ளே வந்த சரோஜினி சற்று நேரம் மௌனமாக அழுது தீர்த்துவிட்டாள் அநேகமாக எல்லார் கண்களிலும் கண்ணீர்.

''ஆஸ்பத்திரி போனதுமே டாக்டர் சொல்லிவிட்டாரம்மா?'' என்று கேட்டாள் கல்பனா.

''ஆமாம் கல்யாணி! பாட்டியின் உயிர் கீழே விழுந்ததுமே போய்விட்டது போலிருக்கிறது. நம்ம டாக்டரிடம் தான் கூட்டிப் போனோம். தெரிந்த டாக்டரானதால் ஆட்சேபணை எதுவும் சொல்லாமல் உடனேயே கவனித்தார். இல்லாவிட்டால் அதற்கு வேறு கஷ்டமாக இருந்திருக்கும்.

போனில் ராஜனிடம் சொல்வது அவ்வளவு சரியாகப் படல்லே. தனியா வேறே இருக்கானே. தப்புன்னு தோணித்து. சரின்னு நானே கார்லே மாமா இருக்கிற ஆஸ்பத்திரிக்குப் போனேன். அவன் எதிர் பார்க்காத செய்தி இல்லையா இது? அவன் அதை உள் வாங்கிக் கொள்ளவே சற்று நேரம் பிடித்தது. பாவம் அப்படியே கதறிட்டான். அவனைக் கட்டுப் படுத்தவே முடியவில்லை. இத்தனைக்கும் டாக்டரைப் பக்கத்தில் வைத்துக் கொண்டுதான் விஷயத்தை சொன்னேன். டாக்டர் ஒரு தனி அறைக்கு எங்களைக் கூட்டிப் போனதுமே, அவன் தன் அப்பாவிற்குத்தான் என்னவோ ஏதோ என்ற எண்ணத்தில் வந்தான். டாக்டர் அவன் அழுவதைப் பார்த்ததும், ''அழுவது நல்லதம்மா. கொஞ்ச நேரம் அழுது தீர்த்துவிட்டால் அவர் மன அழுத்தமும் மாறிவிடும்.

மூளையும் வேலை செய்ய ஆரம்பிக்கும். இல்லாவிட்டால் மேற்கொண்டு ஆகவேண்டிய காரியங்கள் எப்படி நடக்கும்? ஆகையால் அவரை அழவிடுங்கள்'' என்றார்.

''என்னக்கா, இப்படி நடந்துவிட்டது! நாம் எதிர் பார்க்கவேயில்லையே! மேற்கொண்டு என்னக்கா பண்ணனும்?'' என்று குழந்தை மாதிரி கேட்டான் ராஜன். நான் தான் சொல்ல வேண்டியிருந்தது. ''முதலில் உன் மனைவிக்கு போனில் விஷயத்தைச் சொல்லிவிடப்பா'' என்று.

''அவள் ஒரு அரை மணி முன்புதான் பேசினாள் அக்கா! அவளுக்கு ரொம்பவே ஜுரம். குழந்தைகளை யாரோ சிநேகிதி வீட்டில் விட்டிருக்கிறாளாம். ஜுரம் அதிகமாக இருக்கவே அவளால் பேசவே முடியவில்லை அதனால் அவள் வருவது நடக்காத காரியம்'' என்றான்.

''இல்லத்திற்கு எடுத்துப் போவோமா. அப்பாவுக்கு நினைவு திரும்பும் வரை வைத்துக் கொள்ள முடியுமா?'' என்று கேட்டான்.

''இல்லை சார், பெரியவருக்கு உடல் நிலை கவலைக் கிடமாகவே இருக்கு. மயக்கம் தெளியவே நாளை ராத்திரி ஆகிவிடும். அதுக்கப்பறம் இந்த விஷயத்தைச் சொல்வது கொஞ்சம் கூட சரியில்லை. நீங்க நாளைக்கு காரியத்தை முடிச்சுடுங்க. பெரியவரிடம் ஒரு ஒருவாரம் கழித்துத்தான் இந்த விஷயத்தைப் பத்தி சொல்லலாமான்னு யோசிக்கணும். இந்த அதிர்ச்சியை அவர் தாங்குவாரான்னு நிச்சயமா தெரியாம சொல்லக் கூடாது. அதனாலே அதுவரை எப்படி சமாளிக்கலாம்னு யோசனை பண்ணுங்க'' என்றார் டாக்டர்.



''எப்படியும் இல்லத்துக்குக் கொண்டு வந்தாலும் இங்கே சின்னக் குழந்தைகள் இருக்கிற இடம் என்பதால் ஆஸ்பத்திரியிலிருந்து அப்படியே எடுத்துக் கொண்டு போயிடலாம். அங்கேயே போய் கடைசி காரியங்கள் எல்லாவற்றையும் செய்து கொள்ளலாம்'' என்று தீர் மானித்தோம். ஆகையாலே எல்லோரும் போய் சற்று படுத்துக் கொள்ளுங்கள். காலைலே பெரியவங்க எல்லோரும் அங்கேயே போய் பாட்டியைப் பார்க்கலாம். வனிதா இன்னிக்குப் பாட்டிகூட முழுசா இருந்துட்டே நீ. அதனாலே இங்கே இருந்து சின்னக் குழந்தைகள் எல்லோரையும் பார்த்துக்கோ. இன்னொரு டிரைவரும் வருவார் அவரும் உனக்குத் துணையாக இங்கிருப்பார். காலைலே கொஞ்சம் லைட்டா உப்புமா பண்ணி குழந்தைகளுக்குக் கொடுத்துடுங்க. மத்தியானத்துக்கு தயிர் சாதம் கொடுத்து ஸ்கூலுக்கு அனுப்பிட்டு நாம போகலாம். நாம திரும்பிவர மணி மூணாயிடும். நாளைக்கு நீ போய் தாத்தாவுக்குத் துணை இரு. கல்யாணி, ராஜன் திரும்பி வந்து சற்று ஓய்வு எடுக்கட்டும்'' என்று வரிசையாக மறுநாள் செய்ய வேண்டிய வேலைகளைப் பட்டியலிட்டாள் சரோஜினி.

வருத்தம் ஒரு பக்கம் இருந்தாலும் அந்த நேரத்தில் அவளின் நிர்வாகத் திறமையைப் பார்த்த கல்பனாவுக்கு இந்த இல்லத்தை அவள் பிரச்னையின்றி நடத்துவதற்கான காரணம் புரிந்தது. 'நானும் வந்து பாட்டியைப் பார்த்துட்டு அப்புறமா தாத்தாவைப் பார்த்துக்கப் போறேன்'' என்றாள்.

எல்லோரும் தூக்கம் என்றில்லாமல் சற்று ஓய்வு எடுத்துக் கொண்டு இரவைக் கழித்தனர். எப்போது

பொழுது விடியும் என்று எல்லோரும் காத்திருந்து, அவரவர் வேலைகளை மௌனமாகச் செய்துவிட்டு, பள்ளிக்குச் சென்ற வேன் திரும்பி வந்ததும் அதில் ஏறிப் புறப்பட்டனர்.

ராஜன் நேரடியாக ஆஸ்பத்திரிக்கு வந்துவிட்டார் பாட்டியின் முகம் ரோஜாப்பூவாக அப்படியே இருந்தது. போய் அருகில் நின்று பார்த்ததும் கல்பனாவுக்கு பயம் ஏற்படவில்லை. பாட்டியின் முகம் இன்னும் அழகாக இருந்ததோ என்று அவளுக்குத் தோன்றியது. ஆனால் துளி பயமும் அதில் இருந்த மாதிரி இருந்தது. அது அவளின் கடைசி நிமிடத்தின் உணர்ச்சியோ என்னவோ? கல்பனாவுக்கு துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது. மனமொத்த தம்பதிகள் என்றால் இவர்களைத்தான் சொல்ல வேண்டும். பாட்டியின் கால்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்ட போது, வெடித்து அழுது விட்டாள்.

''கல்யாணி, நீ ஆஸ்பத்திரிக்குப் போய் சற்று நேரம் இரம்மா. ராஜனும் இங்கு வந்துவிட்டார். தாத்தாவைத் தனியே விடவேண்டாம். அவர் கண்விழிக்கும் நேரமும் நெருங்கிவிட்டது. சீக்கிரம் போம்மா. அவர் கண்விழித்தால் அவரைச் சமாளிக்க நாம யாராவது இருக்கணும்'' என்றாள் சரோஜினி. உடனே அவள் புறப்பட்டுப் போனாள். தாத்தாவிற்கு நினைவு இன்னும் திரும்பவில்லை. வேதனையோடு கல்பனா எண்ணங்கள் மனதில் குழம்பிக் கூத்தடிக்கச் சோர்ந்துபோய் உட்கார்ந்திருந்தாள். தன்னையறியமால் கண்ணயர்ந்துவிட்டாள்.

தன்னை யாரோ எழுப்புவதை உணர்ந்த கல்பனா, திடுக்கிட்டு கண் விழித்தாள். தலைமை நர்ஸ் தான்.



''பெரியவர் கண்விழிச்சுட்டாரம்மா, நீங்க போய் பார்க்கலாம்'' என்றாள். உள்ளே டாக்டரும் இருந்தார். இவளைப் பார்த்ததும் அவர் அவசரமாக எழுந்து வந்து ''ஜாக்கிரதை, அம்மா'' என்று கிசுகிசுத்தார். தலையை அசைத்துவிட்டு தாத்தாவின் அருகில் போனாள் கல்பனா. இவளைப் பார்த்த தாத்தாவின் கண்கள் இவளைத் தாண்டி பின்னால் பார்த்தன. அவர் வாய் லேசாக அசைந்தது. ''அவ எங்கே?''

''பாட்டி சற்றைக்கெல்லாம் வருவதாகச் சொன்னாள், தாத்தா. உங்களுக்கு எல்லாம் நல்லபடியா ஆயிடுத்து. அதனாலே நீங்க அலட்டிக்கவே கூடாது. மனசையும் அமைதியா வெச்சுக்குங்க. இன்னும் கொஞ்ச நாள்லே வீட்டிற்குப் போயிடலாம்னு டாக்டர் சொன்னார். நான் இங்கேயேதான் இருக்கேன். நீங்க கவலைப்படாம இருங்க'' என்றவள் அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தாள். தாத்தாவைப் பார்க்கும் போதே இவளுக்குக் கண்ணில் அருவி. பின்னே அத்தனை கம்பீரமாக வலம் வந்து கொண்டிருந்த மனிதரை இப்படி மொட்டைத்தலையும் உடம்பு முழுவதும் ட்யூபுமாகப் பார்த்தால், கண்றாவியாக இருக்காதா, பின்னே! இவர் பாட்டியின் பிரிவை எப்படி எடுத்துக் கொள்வார்? அதை நினைத்தாலே இவளுக்கு பயமாக இருந்தது.

மாலை ஆறு மணிக்குத்தான் ராஜனும் சரோஜினியும், வந்தார்கள். இதற்கு நடுவே வார்டுபாய் ஒரு தயிர் சாதப் பொட்டலத்துடன் வந்து சரோஜினியம்மா கேண்டீனிலிருந்து வாங்கிக் கொடுக்கச் சொன்னதாக கொண்டு வந்து கொடுத்தான். ''நான் இருக்கேன் அப்பாவோட நீங்க போய் ரெஸ்ட் எடுங்க'' என்றார் ராஜன்.

''இல்லேப்பா, நான் ஒரு வாட்ச்மேனை இங்கே வந்து இருக்கச் சொல்லியிருக்கேன் அவன் வந்து மாமாவோட இருக்கட்டும். நீயும் என்னோடே வந்துடேன்'' என்றாள், சரோஜினி.

''இல்லேக்கா, இங்கே பேஷண்ட்டோட வரவங்களுக்கான ஓய்வு அறை கூட சௌகரியமா இருக்கு. நான் இங்கேயே தங்கிக்கறேன். வாட்ச்மேன் வந்தால் அவனும் இங்கேயே படுத்துக்கட்டும்'' என்றார். சரியென்று சொல்லி இவர்கள் கிளம்பிப் போனார்கள். வேனில் போகும்போது மெல்லிய குரலில் கல்பனா ஆங்கிலத்தில் சரோஜினியிடம் கேட்டாள் ''நாம பேசினதைக் கேட்க நேர்ந்ததால்தான் பாட்டி கீழே விழுந்திருக்கணும் என்று அவள் பிள்ளையிடம் சொல்லிட்டீங்களாம்மா.''

''சொல்லிட்டேம்மா. ஒரு தப்பு பண்ணிட்டமோங்கற எண்ணத்தோட எப்படி நான் நிம்மதியா இருக்க முடியும்?''

''அதற்கு அவர் என்ன சொன்னார்?''

''அம்மாவுக்கு விதி அப்படிப் போட்டிருந்தது. அவளுடைய ஆசையும் பூவும் பொட்டுமாகப் போயிடணுங்கறதுதான். நீங்க என்ன, வேணும்னா பண்ணினீங்க? அப்படியெல்லாம் நினைச்சிகிட்டு நீங்க மனசு கஷ்டப் படாதீங்க, அக்கா. இத்தனை நாட்கள் நீங்க அப்பா, அம்மாவை நல்லா பார்த்துக்கிட்டதாலேதான் நான் நிம்மதியா இருந்தேன் அதனாலே எத்தனையோ லாபமடைஞ்சிருக்கேன். உங்களை நான் தப்பா நினைக்க ஒண்ணுமே இல்லேக்கா என்று சொல்லிட்டான்'' என்று சரோஜினி சொன்னாள்; ராத்திரி ஆஸ்பத்திரிக்குப் போன்



செய்து ராஜனுடன் பேசினாள். தாத்தா திரும்ப சற்றுமுன் கண்விழித்துப் பார்த்து பாட்டி எங்கே என்று கேட்டாராம். இவர் ஏதோ சொல்லி சமாளித்துவிட்டார். தான் நாளைக்கு வீட்டிற்கு வருவதாகவும், தனக்கு பேங்கில் கொஞ்சம் வேலை இருப்பதாகவும் அதை முடித்துக் கொண்டு சற்று ரெஸ்ட் எடுத்துக் கொண்டு திரும்பப் போவதாகவும் சொன்னார். அந்த நேரத்தில் யாராவது வந்து அங்கிருக்க முடியுமா என்று கேட்டார். கல்பனா தான் போவதாகச் சொல்லிவிட்டாள்.

அவள் ஸ்கூலுக்குப் போக வேண்டாமா என்று வனிதா கேட்க, தான் ஸ்கூல் திறந்ததிலிருந்து லீவே எடுக்கவில்லை என்றும் அதனால் பிரச்னை இல்லாமல் இப்போது லீவு போட்டிருக்கேன் என்று கல்யாணி சொன்னாள்.

தாத்தாவுக்குச் செய்வதைப் பற்றி சந்தோஷம்தான். ஆனால் கண் விழிக்கும் போதெல்லாம் ''பாட்டி எங்கே'' என்று கேட்கிறாரே, எப்படி சமாளிப்பது அதுதான் குழப்பமாக இருக்கிறது என்று சரோஜினியிடம் கல்யாணி சொல்ல, இப்போதைக்கு ''பாட்டிக்கு ரொம்ப ஜலதோஷமும் இருமலுமாக இருக்கிறது. இங்கே வந்தால் உங்களுக்கும் ஒட்டிக் கொள்ளும், அதனால் அவள் இங்கெல்லாம் வரக்கூடாது என்று டாக்டர் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்''னு சொல்லிடு. ஒரு ஐந்து, ஆறு நாட்கள் நாம இதையே சொல்லி சமாளிக்கலாம், அப்புறமா பார்ப்போம்'' என்றாள் சரோஜினி.

அதைத்தான் தாத்தா கேட்டபோது மறுநாள் காலை துணைக்கு உட்கார்ந்திருந்த கல்பனா சொன்னாள். தாத்தா நம்பின மாதிரிதான் தோன்றியது. அந்த வரை

நிம்மதி என்று நினைத்துக் கொண்டு தான் கையோடு கொண்டு போயிருந்த குழந்தைகளின் நோட்டுக்களை திருத்த ஆரம்பித்தாள்.

சாயந்திரம் ராஜன் வந்து இவளை பிக்அப் செய்தார் இவர் வீடு திரும்பின உடனேயே ப்ரீதி ஓடி வந்து காலைக் கட்டிக் கொண்டாள் ''என்னம்மா நீ! மூணு நாளா என்னோட இல்லாமே எங்கேயோ போய்க்கிட்டே இருக்கியே! என்னைப் பெரியம்மா நல்லா பாத்துக்கிட்டாங்க, ஆனாலும் எனக்கு எப்படி அழுகையா வந்தது தெரியுமா?'' என்றாள்.

''கண்ணா, உனக்குத் தெரிஞ்சிருக்கும்னு நெனைச்சம்மா இருந்துட்டேன். தாத்தாவுக்கு தலையிலே ஆபரேஷன் ஆயிருக்கம்மா. அப்பறம் நம்ம ஜானுப்பாட்டி சாமிகிட்டே போயிட்டாங்கம்மா. நீ குழந்தையில்லையா, பயந்துப்பேன்னு இதெல்லாம் சொல்லலேம்மா. அம்மா அவங்க இரண்டு பேருக்காகவும்தான் வெளியே போயிகிட்டே இருக்க வேண்டியிருக்கு. ஸாரிடா கண்ணா!'' என்றாள் கலா.

''இனிமேல் நீ என்னைவிட்டு எங்கேயும் போகக் கூடாது'' என்று அவள் மேல்புடவையை இழுத்துத் தலைப்புக்குள் தானும் புகுந்து விசும்பியது.

''இல்லை செல்லம்! இனிமே போகல்லே'' என்றாள் கல்பனா.

குழந்தை அப்படி அழுதது ஒரு பக்கம் கல்பனாவுக்கு வருத்தமாக இருந்தாலும், மனதின் ஒரு ஓரத்தில் திருப்தியாகவும் இருந்தது. ஆம்! கொஞ்ச நாளாகவே ப்ரீதி ஏதோ தர்மக் கட்டையாக பொதுவில் எல்லோ



ரோடும் உறவு கொண்டாடிக் கொண்டு, தானாகவே வளருவதாக இவளுக்குத் தோன்றிக் கொண்டே இருந்தது. தன்னை அவள் தேடுவதில்லையே! தன்னை விட்டு விலகிப் போகிறாளோ என்றும் தோன்றத்தான் செய்தது. ரவியுடன் இல்லாத தனக்கு இந்தப் பெண் தானே ஒரே பற்றுக் கோடு! இவள்தானே தன் வாழ்வின் ஆதாரம்? இவள் பிரியமும் இல்லாதுபோனால் தான் உயிர் வாழ்வதன் பொருள்தான் என்ன? என்கிற எண்ணங்கள் எல்லாம் அவ்வப்போது வரும். சீச்சீ! இதெல்லாம் நாமே செய்துகொள்ளும் வேண்டாத கற்பனை என்று தன் மனதிலிருந்து அந்த எண்ணங்களை ஒதுக்கித் தள்ளுவாள். இன்று அந்த சிந்தனைகள் எல்லாம் அர்த்தமில்லாதவை என்று தீர்மானமாகத் தெரிந்துவிட்டதில் நிம்மதி அடைந்தாள். இரவு குழந்தையைக் கட்டிக் கொண்டு தூங்கினாள்.




அன்றைக்குப் பிறகு கூடுமான வரை ப்ரீதி வீட்டில் இருக்கும் நேரத்தில் அதிகமாக ஆஸ்பத்திரி போய் இருப்பதைத் தவிர்த்தாள். ஆனாலும் மாறி மாறி வனிதா, சரோஜினி, ராஜன் ஆகியோருடன் அங்கு போய் இருக்கும் வேலையை பகிர்ந்து கொண்டாள்.

ஐந்தாறு நாட்கள் வரை பாட்டிக்கு ஜலதோஷம், ஜுரம் என்பதை நம்பிய தாத்தா அதற்குப் பிறகு நம்பவில்லை. ரொம்பவும் கேள்வி கேட்க ஆரம்பித்தார். இவர்களால் பதில் சொல்லி சமாளிக்க முடியவில்லை. டாக்டரே அவரிடம், ''நான்தான் உங்க மனைவியை

ஒருவாரம், பத்து நாள் உங்களைப் பார்க்க வரக் கூடாதுன்னு கண்டிப்பா சொல்லியிருக்கிறேன், ஏன்னா முக்கால்வாசி வைரஸ்ஸெல்லாம் முதலில் பிடித்தவரை விடும்போதுதான் அடுத்தவரைப் பற்றிக் கொள்ளும் தன்மையுடையவை. உங்களுக்கு மேஜர் ஆபரேஷன் ஆகியிருக்கு. இப்பப்போய் இந்த வேண்டாத சான்ஸ் எல்லாம் எடுக்கணுமா. அதுவுமில்லாம, உங்க வயசையும் பார்க்கணும் அதனாலே நீங்க கொஞ்சம் பொறுமையாக இருக்கணும். ஏதோ இதுவரை ஆண்டவன் அருளாலே நல்லா இருக்கீங்க. இப்ப ஏதாவது ஜுரம் வந்ததுன்னா ரொம்ப கஷ்டமாகிவிடும் இந்தக் காரணங்களினால்தான் அவங்களை இங்கே வரவேண்டாம்னு சொல்லியிருந்தோம். நான் கூட பெரிய ஆபரேஷன் எல்லாம் பண்ணறதாலே அவங்களைப் பார்க்க வரலேன்னுட்டேன். சாந்தி இல்லத்துக்கு எப்பவும் போற டாக்டரைக் கூட்டிண்டு போங்கன்னு சொல்லிட்டேன்னா பாத்துக்குங்களேன். அவங்க வரது சேஃப்தான்னு நாங்க நினைக்கிறபோது அவங்களை வரச் சொல்றோம். அதுக்குள்ளேயே நீங்க வீட்டுக்கு போயிட்டாலும் நல்லதில்லையா'' என்றார் டாக்டர்.

''எத்தனை நாள்லே வீட்டுக்குப் போக முடியும்?'' என்று கேட்டார் தாத்தா.

''சீக்கிரமே போயிடலாம். நீங்க மனதை நிம்மதியா வெச்சுக்கோங்க. அதுவே உங்களை சீக்கிரம் குணமாக்கிடும் அப்புறம் நீங்க சீக்கிரம் வீட்டுக்குப் போகலாம்'' என்று குழந்தைக்குச் சொல்வதுபோல் சொல்லிவிட்டு டாக்டர் புறப்பட்டுவிட்டார்.



ஆபரேஷன் ஆகி 15 நாள் கழித்து தாத்தாவை வீட்டிற்குக் கூட்டி வந்தார்கள். காரிலிருந்து இறங்கியவுடனே இருவர் தாத்தாவைக் கைத் தாங்கலாக அழைத்துப் போய் ஒரு நாற்காலியில் உட்கார வைத்தார்கள்.

''ஜெமினி, ஜெமினி! எங்கே என் ஜெமினி? எனக்கு திருஷ்டி சுற்ற கற்பூரத்துடன் நிற்பாள்னு நினைச்சேன்'' என்றார் தாத்தா. குரல் என்னவோ பலஹீனமாக இருந்தது.

''மாமா, பாட்டியை பாமா டாக்டரிடம் செக்கப்புக்கு கூட்டிண்டு போயிருக்கா. இன்னிக்கு செக்கப்பிற்கு கண்டிப்பா வரணும்னு டாக்டர் சொல்லியிருந்தார். அதனால்தான் போயிருக்க அங்கே கொஞ்சம் கூட்டமாக இருக்காம். அதனாலே கொஞ்சம் நாழியாகும்னு இப்பத்தான் போன் பண்ணினாங்க. நீங்க கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்குங்க, மாமா'' என்று சற்று இதமாகச் சொன்னாள் சரோஜினி.

''சரி எனக்கும் தூக்கம் வருது. ஜெமினி வந்ததும் என்னை உடனே எழுப்புங்க. மறந்துடாதீங்க'' என்றார் தாத்தா. அப்படியே கண்ணயர்ந்துவிட்டார். இவர்கள் எல்லோரும் கூடி ஆலோசித்தார்கள் என்ன செய்வது என்று புரியவில்லை. சொன்னால் ஆபத்து. சொல்லாவிட்டால் விடமாட்டார். என்ன செய்வது? அன்றைக்குப் பாட்டிபோய் பத்தாம் நாள். ராஜன் வெளியே எங்கோ போய் காரியங்கள் செய்ய ஏற்பாடு செய்திருந்தாள் சரோஜினி. அவர் அதை முடித்துவிட்டார். மறுநாள் பிரார்த்தனைக் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்வதாக இருந்தது.

சாயந்திரமே வழி பிறந்தது. அந்த நிகழ்ச்சியை வழி பிறந்தது என்று எப்படிச் சொல்ல முடியும்? எந்தக் குழப்பத்திற்கும், பிரச்னைக்கும் தீர்வு பிறக்கும். ஆனால் பிறக்கும் தீர்வு சந்தோஷமானதாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் உண்டா? பிரச்னைக்குத் தீர்வு எனலாம். அவ்வளவுதான்.

தாத்தாவை மெதுவாகக் கொஞ்ச தூரம் நடக்கச் சொல்லியிருந்தார் டாக்டர். தாத்தாவின் கையைத் தன் தோளில் போட்டுக் கொண்டு ஒரு பத்தடி நடக்கலாம் என்று ராஜன் மெதுவாக அவரை எழுப்பி நிற்க வைத்து, நடக்க வைக்க ஆரம்பித்தார். வெளியே சற்று சில்லென்று காற்று அடிக்கிறமாதிரி இருந்ததால் உள்ளேயே நடக்க ஆரம்பித்தார். ஆனால் அந்த பத்து அடிக்கே தாத்தா மிகவும் களைத்து விட்டார். ''அப்பா, நான் கொஞ்சம் ஹார்லிக்ஸ் கலந்து கொண்டு வரேன்ப்பா. நீங்க ரொம்ப டயர்டாகிட்டீங்க'' என்று சொல்லி அவருக்கு வியர்வையைத் துடைத்துவிட்டு, முதல் ரூமிலேயே உட்கார வைத்தார். உள்ளே போய் ஹார்லிக்ஸை கரைத்து எடுத்துக் கொண்டு, இரண்டு பிஸ்கெட்டையும் எடுத்துவர தட்டைத் துடைத்துக் கொண்டிருந்தார்.

இல்லத்தில்தான் யார் வீட்டுக் கதவும் தாழ்ப்பாள் போட மாட்டார்களே! வாசல் கதவு ஒருக்களித்து வைத்திருந்தது. சரியா அந்த நேரம் ஒரு பையன் வந்து தாத்தா கையில் ஒரு பெரிய கவரைக் கொடுத்தான். ''பணம் முதலாளி அப்புறமா வாங்கிக்கறேன்னு சொல்லச் சொன்னார் சரோஜினி மேடம்கிட்டே'' என்றான். ''அம்மாவிற்கு என்ன சார் செய்தது? ரொம்ப நல்ல மனுஷி'' என்று சொன்னான்.



சட்டென்று அந்தக் கவரைப் பிரித்தார் தாத்தா. பெரிய மார்பளவு போட்டோவில் லக்ஷ்மிகரமாய் புன்னகை ஒளிவீச வகிட்டுக் குங்குமம் பளிச்சிட அதில் இருந்தது... அவருடைய ஜெமினி எனும் ஜமுனாப் பாட்டி.

''ஜெமினி'' என்று பெரிய குரல் கொடுத்துக் கொண்டே மார்பைப் பிடித்தவருக்கு தலை தொங்கி விட்டது. குரல் கேட்டு ஓடிவந்த ராஜன் ஒரு நொடியில் நடந்ததைப் புரிந்து கொண்டான். விக்கித்து நின்ற அந்தப் பையன் மேல் ஆத்திரம், ஆத்திரமாக வந்தது ஆனாலும் சுதாரித்துக் கொண்டார். அதற்குள் அவசரமாக ஓடிவந்த சரோஜினி, ''ஐயோ ராமா! மாமி போய் சுபம் செய்யும் நாள் அன்று பிரார்த்தனைக் கூடத்தில் வைத்து மாலை போட மாமியோட போட்டோவை பெரிது பண்ணக் கொடுத்திருந்தேன். இப்படி மாமா கையிலேயேவா கொண்டு வந்து கொடுப்பான், அந்த முட்டாள்?'' என்று அந்தப் பையன் மேலே பாய வந்தவள், சட்டென்று தன்னை அடக்கிக் கொண்டாள். அவனைச் சொல்ல தனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? அவனுக்காவது ஒன்றும் தெரியாது. ஆனால் தெரிந்த நான் ஏதோ பேசி பாட்டியின் மரணத்திற்குக் காரணமாக இருக்கவில்லையா? எதுவும் நம் கையில் இல்லை. எங்கிருந்தோ ஒருத்தன் எல்லாவற்றையும் நடத்துகிறான் என்ற ஞானோதயம் தோன்ற ''மாமா, மாமா'' என்று அழுது கொண்டே மாமாவை நாற்காலியிலிருந்து எடுத்து கட்டிலில் படுக்கவைக்க உதவினாள். ராஜன் அவசரமாக தாத்தாவின் நாடியைப் பிடித்துப் பார்த்தார். வாயுடன் வாய் வைத்து மூச்சு விடுவதற்கான முதல் உதவியையும் செய்தார் மார்பில் கை வைத்து அழுத்திக் கூடப்

பார்த்தார். இமைகளைத் தூக்கிப் பார்த்தால், கருவிழிகள் தென்படவேயில்லை.

டாக்டரைக் கூப்பிட விரைந்த சரோஜினியைத் தடுத்து "வேண்டாம் அக்கா! எல்லாம் ஆயிடுத்து" என்றார் அழுதபடியே. ஆனாலும் மனது கேட்காத சரோஜினி டாக்டருக்குப் போன் செய்துவிட்டாள். நல்ல வேளையாக டாக்டர் அதே ரோடில் வேறெங்கோ போய்க் கொண்டிருந்தவர் உடனே இல்லத்திற்கு விரைந்தார்.

தாத்தாவைப் பரிசோதித்த டாக்டர், "ஆயிடுத்தம்மா பெரியவர் காலம்" ஐ யாம் வெரி ஸாரி. ஆக வேண்டியதைப் பாருங்க. உங்களுக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி தான் என்ன செய்யலாம் எல்லாம் அவன் செயல் என்று சொல்லிவிட்டு புறப்பட்டுப் போய்விட்டார். தாத்தாவின் கையிலிருந்து வாங்கி சுவர் ஓரமாக சாத்தி வைத்திருந்த போட்டோவில் சிரித்துக் கொண்டிருந்தாள் ஜெமினிப் பாட்டி!

"ஜெமினி, ஜெமினின்னீங்களே நான் வரமுடியல்லே ஆனா உங்களைக் கூட்டிண்டுட்டேன் பார்த்தீங்களா" என்று கேட்பதுபோல் இருந்தது அவளுடைய பிரகாசமான புன்னகை.

அப்புறம் என்ன? மறுநாள் காலையிலேயே ஆரம்பித்துக் காரியங்களைக் கவனித்தார்கள். பெரிய குழந்தைகள் மட்டும் வந்து தாத்தாவிற்கு தங்கள் இறுதி மரியாதைகளைச் செய்தார்கள். தாத்தாவோடு நெருங்கிப் பழகிய கல்யாணி, பார்வதி, வனிதா எல்லோரும் அழுது தீர்த்துவிட்டார்கள். ராஜனுக்கு அழக்கூட திராணியில்லை. அப்படியே சோர்ந்து போய் உட்கார்ந்துவிட்டார். ஆப



ரேஷன் செய்த டாக்டர் வந்து பார்த்துவிட்டு ரொம்பவே வருத்தப்பட்டார். ஆபரேஷன் மிகவும் சிக்கலானது. அவர் வயசுக்கு எப்படித் தாங்குவார் என்று அவருக்கு யோசனையாகவே இருந்தது. அதெல்லாம் நல்லபடியாக முடிந்து இப்படி ஒரு முடிவு வந்தது ரொம்பவே துரதிருஷ்டமானது என்று தன் சோகத்தை வெளிப் படுத்தினார்.

அன்றைக்கும் மறுநாளும் யாரும் எதுவும் பேசவில்லை. அதற்கடுத்த நாள் ராஜன் வந்து சரோஜினியிடம், "அக்கா, நான் நாளன்றைக்குப் புறப்படலாம்னு இருக்கேன். அங்கே அவளும் குழந்தைகளும் தனியே இருக்காங்க. இங்கே இருக்க, இருக்க வேதனைதான் அதிகமாகும்னு தோணுறது" என்றார்.

"பார்க்க வேண்டிய வேலைகள் நிறைய இருக்கேப்பா" என்றாள் சரோஜினி. "கொஞ்சம்தான் என்றாலும் உங்கம்மா ஃப்ரிட்ஜ், பீரோ, கட்டில்னு வீட்டுக்குத் தேவையான சாமான்களையெல்லாம் வெச்சிருக்காளேப்பா! அதெல்லாம் என்ன பண்ணறது?"

"அக்கா அதெல்லாம் இல்லத்து உபயோகத்துக்கு வெச்சுக்கோங்க. நிறைய வெத்துப் பேப்பர்ல கையெழுத்துப் போட்டுத்தரேன். பெரும்பகுதி பணத்தை நீங்க ஆரம்பிக்கும் டிரஸ்டில் போடுங்க. அந்தப் பொண்ணு ஐஸ்வர்யாவுக்கு கல்யாணத்துக்குப் பார்க்கணும்னீங்க. ஒரு கணிசமான தொகையை அதுக்காக வெச்சுக்கோங்க. நல்லா படிக்கிற குழந்தைகளுக்கு அப்பா, அம்மா பெயரால் ஸ்காலர்ஷிப் கொடுப்போம். நான் இந்த இரண்டு நாள்லே முடிந்தவரை எல்லாம் செய்யப் பார்க்கிறேன்" என்றார் கண்ணில் வழிந்த நீரைத் துடைத்தபடி "அம்மா

வின் பட்டுப் புடவைகளும் நகைகளும் நான் எடுத்துப் போகிறேன். இரண்டுபேரையும் பறிகொடுத்துட்டேன். மொத்த பணத்தையும் எடுத்துண்டுபோய் நான் என்ன செய்யப் போறேன்? நானும் அவளும் அங்கே நன்னா சம்பாதிக்கிறோம்'' என்று நீளமாக பேசி முடித்தார்.

''ஸாரிப்பா, இப்படியெல்லாம் நடக்கும்னு யாருக்குத் தெரியும். ஆனால் ஒண்ணு மட்டும் நிச்சயம் இவர்களைப் போல் ஆதர்ச தம்பதிகள் யாரும் இருக்க மாட்டார்கள். கடைசிவரைக்கும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியவே யில்லையே. மாமி சொல்லுவாள் அவரைவிட்டு நான் ஒருநாளும் போகமாட்டேன்னு. அதைச் சாவிலேயும் நிரூபிச்சுட்டா. எவ்வளவு பெரிய மனுஷி!'' என்றாள் சரோஜினி.

பிறகு நினைத்துக் கொண்டவளாக ''ஏம்மா, அப்பா வின் காரியமெல்லாம்...'' என்று இழுத்தாள்.

''அமெரிக்காவிலே நான் இருக்கும் இடத்திலேயே இங்கே மாதிரி காரியம் எல்லாம் நடத்த நிறைய வசதிகள் இருக்குக்கா. அப்பாவின் காரியம் முடியற அன்னிக்கு இல்லத்திலே எல்லோருக்கும் புதுத் துணி வாங்கிக் கொடுங்க. அம்மாவின் புடவைகளையும் கொடுத் துடுங்க. அப்பாவுடைய சில துணிகள் மட்டும் நான் எடுத்துப் போறேன். மற்றவற்றை எல்லோருக்குமாகக் கொடுத்துடுங்க. அன்னிக்கு எல்லோருக்கும் நல்ல சாப்பாடு போடச் சொல்லுங்க.''

''எல்லோருக்கும் புதுத் துணி எதுக்குப்பா? நிறைய செவாகுமே!'' என்று சரோஜினி சொல்லி முடிக்கும் முன், ''தெரியும் அக்கா! அப்பா நிறையவே வெச்சருக் கார். பென்ஷனும் நான் அனுப்பிய பணமுமாகச் சேர்ந்து



அவர் செலவு போக நிறைய சேர்ந்திருக்கிறது. உங் களோடதானே அவங்க இரண்டு பேரும் கடைசி நாட் கள்லே இருந்திருக்காங்க. நீங்கதான் அவங்க மனிதர்கள். நானே உங்களுக்குப் புடவை வாங்கிதரேன்க்கா, இன் னிக்கு உங்களைக் கூட்டிப் போய்'' என்றார்.

''வேண்டாம்பா, இருக்கிற கொஞ்ச நேரத்தையும் புடவை வாங்கவெல்லாம் வீணடிக்க வேண்டாம். நீ சொல்லிட்டேயில்லே, நான் கண்டிப்பா வாங்கிக் கறேன்'' என்றாள் சரோஜினி.

''அப்புறம் அக்கா, அம்மாவின் நகைகளில் கூட உங்களுக்குப் பிடித்த ஏதாவது ஒரு நகையை நீங்க எடுத்துக்கணும். தப்பா நினைக்காதீங்க. எது வேணு மானாலும் சரி, ஒண்ணாவது எடுத்துக்கணும்.''

''எனக்கெதுக்குப்பா நகையெல்லாம்? நான் எங்கே போட்டுக்கப்போறேன்? நீ கொண்டுபோய் உன் ஒய்ஃப் கிட்டே கொடுத்துடு. சின்னவ, ஆசையா போட்டுப்பா.''

''இல்லேக்கா, உங்களுக்குக் கொடுத்தா அப்பா, அம்மா சந்தோஷம்தான் படுவாங்க, எடுத்துக்கோங் கக்கா!'' என்றான் ராஜன்.

''சரி, ஒரு மோதிரம், பாலாஜி உருவத்தோட போட் டிருந்தாங்க. அதை எடுத்துக்கறேன்.''

''என்னக்கா நீங்க! சரி, நான் போய் வேலைகளைப் பார்க்கிறேன் ஒண்ணுமே பிடிக்கல்லே செய்ய. மூடும் இல்லே, ஆனா எல்லாம் பண்ணித்தானே ஆகணும்? இன்னும் லாக்கர் ஒழிக்கணும், பேங்க்குக்கு போகணும். ஒண்ணு பண்ணறேன். டிக்கெட்டை இன்னும் இரண்டு நாள்கூடத் தள்ளிப் போட்டு வாங்கறேன்'' என்றார்.

''அப்படியே செய்யப்பா, நல்ல காரியம்'' என்றாள் சரோஜினி.



## 42

தாத்தா பாட்டி இறந்த செய்தி கேட்டு மீரா ஒருமுறை வந்து சரோஜினி, மற்றும் எல்லோரையும் பார்த்து விட்டுப் போனாள். அவள் எப்போது வந்தாலும் அனுபமாவைத் தவறாமல் கூட்டிவருவாள். ப்ரீதியும், அனுபமாவும் நாள் முழுவதும் ஒன்றாக சந்தோஷமாகக் கழிப்பார்கள். சில நேரங்களில் வனிதா, பாமா அல்லது பாரு அல்லது இல்லத்தில் யாராவது பெண்களுடன் தாயக்கட்டை மாதிரி ஏதாவது விளையாடுவார்கள். பார்வதியிடம் கேரளத்து பகவதி, ஐயப்பன் கதைகள் எல்லாம் நிறையவே உண்டு சந்தோஷமாக, அபிநயத்துடன் அவள் சொல்ல இவர்கள் வாயைப் பிளந்துகொண்டு கேட்டுக் கொள்வார்கள். இதெல்லாம் சரி, தனியாகவும் இத்தனை நாழி பேசிக் கொள்கிறார்களே 'என்ன பேசிக் கொள்வார்கள் சொல்லேன்' என்று கல்பனா ஒருநாள் மீராவைக் கேட்டாள். 'நான்காவது படிக்கும் இந்தச் சின்னப் பெண்களுக்கு பேசிக் கொள்ள என்ன இருக்கும்? என்று அவளுக்குள் ஒரு கேள்விக் குறி இத்தனைக்கும் நாள் பூரா பள்ளிக்கூடத்தில்தான் பேசிக் கொள்கிறார்களே, இல்லையா?' என்றாள் கல்பனா.

மீரா சொன்னாள் ''என் மனதிலும் இதே கேள்வி இருந்து கொண்டே இருந்தது இப்போ இவங்க இரண்டுபேரும் ரொம்ப திக் பிரண்ட்ஸ் இல்லையா? அனுபமா கிட்டே



ப்ரீதி சொன்னாளாம்'' அப்பா இல்லாத வீடு எங்களது. ஆனா அவர் வெளிநாட்லே இருக்கார்னு அம்மா சொல்றா, அது நம்பற மாதிரி இல்லை என்றாளாம். அனு அதற்கு ''ஏன் நம்பமுடியல்லே''ன்னு கேட்டாளாம். அதற்கு ப்ரீதி ''எங்க இருந்தாலும் எங்க இரண்டு பேரையும் பார்க்க வரமாட்டாரா இரண்டு வருஷத்திலே ஒரு தடவையாவது. கேட்டா நீ சின்னவளா இருக்கச்சே வந்தார், நீ மறந்துட்டேங்கறா அம்மா. அந்த நேரங்கள்லே வனிதா பெரியம்மா இல்லே சரோஜினியம்மா யாராவது இருந்தா பேச்சை மாத்தி என்னை எங்காவது கூட்டிண்டு போயிடுவாங்க, இல்லேன்னா அம்மா கண்லே தண்ணீர் வந்துடும். அதனால்தான் நான் இப்பல்லாம் கொஞ்ச நாளா கேக்கறதேயில்லை. நானா கற்பனையிலே ஒரு உருவம் வரைஞ்சி வெச்சருக்கேன். அவர்தான் என் அப்பா. அவர் சாயந்திர வேளையிலே ஆபீஸிலேருந்து எனக்குச் சாக்லெட்டும், பிஸ்கெட்டும விளையாட்டு சாமானும் வாங்கிண்டு வருவார். என்னையும் அம்மாவையும் ஸ்கூட்டர்லே உட்காரவச்சி பீச்சிற்கோ, இல்லே கோவிலுக்கோ கூட்டிப் போவார். தினம் நான் அந்த அப்பாவோட விளையாடிட்டுத்தான் தூங்கப் போவேன், தெரியுமா'' என்றாளாம்.

''எனக்குக் கேட்டதும் ரொம்பவே கலக்கமாயிடுத்து ஸ்கூல்ல எல்லாம் அவ எப்படி இருக்கான்னு. அனுவை நிறைய கேள்விகள் கேட்டு அவ சாதாரணமாகத்தான் இருக்காங்கறதை நிச்சயப் படுத்திண்டேன்.''

இதைக் கேட்ட கல்பனாவுக்கு பயமாகிவிட்டது. ''என்ன பண்ணலாம் மீரா! எனக்கு பயமாக இருக்கே!'' என்றாள்.

''பயப்படாதே கல்பனா. இப்போ அவள் 4வது படிக்கிறா இல்லையா? அடுத்த வருஷம் சொல்லிடலாம்'' என்றாள் மீரா.

''என்னன்னு சொல்றது? அதுதான் பிடிபடல்லே.''

''உள்ளதைச் சொல்ல வேண்டியதுதான். பொய் சொன்னா கஷ்டம். அதுவும் குழந்தைகிட்டே இப்போதைக்கு உன் கல்யாணத்துக்கு அப்புறமா நடந்ததைச் சொன்னா போதும். அப்புறமா இவங்க கொஞ்சம் பெரிசாகும் போது நம்ம இரண்டு பேருமே நம்மளோட காதல் கதைகளைச் சொல்லிடணும். இவங்களை ஜாக்கிரதைப் படுத்த அது ரொம்பவே அவசியம். என்ன இருந்தாலும் பெரியவங்க பார்த்து பண்ணிவைக்கற வரைக்கும் பொறுமை காக்கறதுதான் வாழ்க்கைக்கு நல்லது.

''என் காதல் கல்யாணம்தான் இப்படி ஆகியிருக்கே ஒழிய உனக்கென்ன பிரச்னை, மீரா?'' என்று கேட்டாள் கல்பனா.

''இல்லை கல்யாணி! ரொம்ப அன்பாக எல்லோரும் வியந்து போற மாதிரிதான் குடித்தனம் பண்ணறோம் ஆனா என்னிக்காவது ஒருநாள் அவர் நடத்தை சரியில்லாதவர், பண விஷயத்திலே ரொம்பவே வீக்கானவர் என்று அப்பா சொன்னது நினைவுக்கு வந்தா, அதைத் தடுக்க முடியறதில்லே. நான் பார்த்து பண்ணிண்டது தானே! அப்பா பார்த்திருந்தா நிச்சயம் இப்படிப் பார்த்திருக்க மாட்டார். இல்லையா? ஆனா இந்த மாதிரியெல்லாம் யோசிக்கறதே தப்புதான், இத்தனை வருஷம் கழிச்சு, ஒரு வேளை அப்பா விசாரிச்சு தெரிஞ்சிண்டது தப்பாக் கூட இருக்கலாம். இருக்கணும்னுதான் நான் விரும்பறேன். இத்தனை வருஷம் குறைவில்லாத



வாழ்க்கைக்குப் பிறகு இதெல்லாம் வேண்டாத எண்ணங்கள் தான்.''

பேச ஏதும் இல்லாத அந்த தருணத்தில் சும்மா மீராவின் கைகளைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் கல்பனா. சற்று நேரத்திற்கெல்லாம் இருவரும் எழுந்து உள்ளே போனார்கள்.

''அப்பப்ப ப்ரீதியை என்னோட அனுப்பு, கல்பனா! அவளுக்கு ஒரு நல்ல மாறுதலா இருக்கும். கொஞ்சம் வெளில வாசல்ல போயிண்டு வந்திண்டு இருந்தா குழந்தைக்கு மனசு குழம்பாமே இருக்கும். அடுத்த தடவை நான் வரச்சே அவளை என் கூட அனுப்பு. அனுவிற்கு எப்ப லீவு வந்தாலும் அவளை இங்கே கொண்டு வந்து விடச் சொல்றேன். என்னதான் புஷ்பா பாட்டி, தாத்தான்னு இருந்தாலும் வளர வளர என்னை மிஸ் பண்ணத்தான் செய்யறா. சந்தர்ப்பம் கிடைக்கிற போதெல்லாம் இரண்டு குழந்தைகளும் சேர்ந்து இருந்தா இரண்டுமே சந்தோஷமாக இருக்கும், இல்லையா?''



## 43

கல்பனா அந்த இல்லத்திற்கு வரும் போது ஐஸ்வர்யாவிற்கு 12 வயது இருக்கலாம். இப்போ அவளுக்கு 20 வயதிருக்கும். அந்தப் பெண்ணின் கதையே ஒரு பெரிய கதை.

சாந்தி இல்லம் ஆரம்பித்து சில வருடங்கள் ஆகியிருந்தது. சரோஜினியின் அண்ணன் காலமாகிவிட்டார். அண்ணி அதிக நாட்டமில்லாமல் இருந்தாள். சமையலுக்கு சரியான ஆள் கிடைக்காமல் இவர்கள் கஷ்டப்பட்ட நேரம். அப்போது

வந்து சேர்ந்தவள்தான் நீலமணி. ஆந்திராவில் நிடதவோலு பக்கத்தில் ஒரு கிராமத்தைச் சேர்ந்தவள். இங்கே வரும்போது அவளுக்கு 18 வயதுகூட நிரம்பவில்லை என்றாள். நல்ல உயரமும், பருமனுமாக இருந்தாள் அந்த நீலமணி. அவளை இந்த இல்லத்தில் கொண்டு வந்து சேர்த்தது அந்த கிராமத்தைச் சேர்ந்த ஒரு டீச்சர். அவளுடன் அந்தப் பெண்ணின் மாமியார், மாமனார் இருவரும் வந்திருந்தனர். படிக்காத கிராமத்து ஜனங்கள். தமிழில் ஒரு வார்த்தைகூட த் தெரியவில்லை.

இல்லத்தில் அந்தப் பெண்ணை சேர்ப்பதற்காக வந்திருப்பதாகச் சொன்னார்கள். "எதுக்கு இந்தப் பெண்ணை இத்தனை தூரம் இங்கே சேர்க்கக் கூட்டி வந்திருக்கீங்க? எல்லா விவரமும் சொல்லுங்க" என்றாள் சரோஜினி. அப்போதுதான் அவள் இந்த இல்லத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தாள்.

அவர்கள் மொத்த விவரமும் சொன்னார்கள். அந்தப் பெண்ணுடன் வந்திருந்ததில் வயதானவள் அவள் மாமியார். இந்தப் பெண் அவளுடைய தம்பி பெண்தான். கிழவிக்கு ஒரே பிள்ளை. அத்தை பிள்ளை, மாமா பெண், மாமா என்கிற உறவெல்லாம் கல்யாணம் செய்து கொள்வதற்காகவே படைக்கப் பட்டதாக எண்ணுகிற மக்கள் அவர்கள்... அந்தப் படி கிழவியின் பிள்ளைக்குத்தான் தங்கள் பெண் என்று அந்தப் பெண்ணைப் பெற்றவர்களின் நம்பகம். வெளியே பெண் கொடுத்தால் நிறைய பணம் கொடுக்க வேண்டும். கிழவிக்கும் தன் தம்பி உறவு முறியாமல் இந்தப் பெண்ணையே தன் பிள்ளைக்கு பண்ணிக் கொள்ள ஆசைதான். ஆனால் பிள்ளையோ சின்ன வயதிலிருந்தே மகா முரடன். பெரியவனானபோது வேண்டாத பழக்கங்களும், சக



வாசங்களும் தொற்றிக் கொள்ள யாருக்கும் பயப்படாத ஒரு போக்கிரியாகவே கிளம்பிவிட்டான். அதனால் கிழவிக்கும் அவள் புருஷனுக்கும் சற்று பயமாக இருந்தது. இதற்கு நடுவில் நீலமணியின் அம்மா வயல் வேலைக்குப் போன இடத்தில் பாம்பு கடித்து இறந்துபோனாள்.

பெண்டாட்டி செத்தவன் புது மாப்பிள்ளை அல்லவா? நீலமணியின் தகப்பன் இரண்டாம் கல்யாணம் செய்துகொண்டான். சித்திக்கு வந்த அன்றே நீலமணியைப் பிடிக்கவில்லை. இத்தனைக்கும் அந்த வயதிலேயே வீட்டுவேலை, மாட்டு வேலை, தோட்ட வேலை என்று மாங்கு, மாங்கு என்று உழைத்துக் கொட்டுவாள் நீலமணி. ஆனாலும் அவளுக்குப் பாதி வயிறு சோறு கூடப் போடமாட்டாள் அந்த மகராஜி. புதுப் பொண்டாட்டி மோகத்தில் சித்திக்காரி தன் பெண்ணுக்குச் செய்யும் கொடுமைகள் எதுவும் அவள் தகப்பன் கண்களில் படவேயில்லை.

14 வயது நீலுவிற்கு அவள் அத்தை பையன் எல்லேஷை திருமணம் நிச்சயம் செய்துவிட்டாள் அவள் சித்தி. அவன் நீலுவைப் போல் இரண்டு மடங்கு வயதானவன். தம்பி பெண் அவனிடம் கஷ்டப்பட வேண்டாமே என்று தோன்றி அவன் பெற்றோர் அவனுக்குக் கல்யாணத்திற்கு வெளியில் பெண் பார்த்தனர். அவன் குணம் அந்த வட்டாரத்திலேயே மிகவும் பிரசித்தமாயிருந்ததால் யாரும் அந்தப் போக்கிரிக்குப் பெண் கொடுக்க முன்வரவில்லை.

நீலமணிக்கும், எல்லேஷுக்கும் கல்யாணம் ஆகி அவள் மாமியார் வீட்டிற்கு வந்தாயிற்று. அவள் மாமியாருக்கும் மாமனாருக்கும் ஒரு நப்பாசை. இவள்

சாமர்த்தியத்தில் மயங்கி பிள்ளை மாறிவிடுவானோ என்று. ஆனால் தன்னைவிட ரொம்ப சின்னவளான அவளைக் கல்யாணம் செய்து கொண்டதிலும், நீலுவை எல்லோரும் கொண்டாடியதிலும் அவனுக்குத் தாழ்வு மனப் பான்மை உருவாகிவிட்டது. அதனால் ஆன பயன் அவன் இன்னும் பெரிய முரடனானான்.

ஒரு வேளைகூட அவளை அன்பாக நடத்தியதில்லை. எப்போதும் அவளுக்கு அடி, உதைதான். கெட்ட வார்த்தைகளில் காது கூசும்படியாகத் திட்டுவான். பொறுத்துப் பொறுத்துப் பார்த்த அவள் பெற்றோர் நீலுவின் தகப்பனுக்கு விவரம் தெரிவித்தனர். ஆனால் அவனோ, ''பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தாயிற்று. இனி உங்கள் பாடு, அவள் பாடு என்று கையை விரித்துவிட்டான். தாயில்லாத் தகப்பன் தாயாதி என்று சும்மாவா சொன்னார்கள்?

தங்கள் பையனிடத்தில் அந்தப் பெண் படும் அவஸ்தையிலிருந்து தப்புவிக்க, அவளை யாராவது தெரிந்தவர்கள் வீட்டில் இரண்டு நாள் விட்டாலும் அங்கேயும் போய் கலாட்டா செய்து கூட்டிவந்துவிடுவான். வீட்டிற்கு வந்தவுடன் அடி, உதை, திட்டு தான். இதன் நடுவில் நீலுவிற்கு ஒரு குழந்தை பிறக்கக் கூடாது. அது வேறு பிறந்து, அதுவும் இவள் மாதிரி அவஸ்தை படக் கூடாது. அதற்குமுன்னால் அவளை ஒரு பாதுகாப்பான இடத்தில் வைக்கணும் என்றுதான் இங்கே அவளை பிள்ளைக்குத் தெரியாமல் அழைத்து வந்திருக்கிறார்கள்.

வரங்கல் அருகே அவர்களுடைய சொந்த கிராமத்தில் 'சம்மக்கா, சாரக்கா' என்று ஒரு பண்டிகை வரும்.



அதற்குப் போவதாகச் சொல்லி இவளை இங்கு கூட்டி வந்திருக்கிறார்கள்.

அந்த டீச்சர் மொத்தவிவரமும் சொல்லிவிட்டு ''எப்படியாவது பிழைத்துப் போகட்டும்மா, இவளை இங்கேயே வெச்சுக்குங்கம்மா. என்ன வேலை சொன்னாலும் நல்லா செய்வா'' என்று ரொம்பவே கெஞ்சினாள். பாவம், பெரியவர்கள் இருவரும் மாறி, மாறி தங்களுக்கு தெரிந்தபடி தெலுங்கையே தமிழ் போல் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் சரோஜினி உடனே ஒப்புக்கொள்ளவில்லை. ''நாளைக்கே உங்கள் பிள்ளை இங்கே வந்து வம்பு தும்பு பண்ணினான் என்றால், நாங்கள் என்ன செய்வோம்?'' என்று கேட்டாள். அந்தப் பெண் இத்தனை நாழி தனக்கும் நடப்பனவற்றிற்கும் சம்பந்தமே இல்லை என்பது போல் நின்று கொண்டிருந்தவள், சரோஜினி சொன்னதைக் கேட்டு, என்ன புரிந்ததோ என்னவோ கண்ணீர் விட்டு அழ ஆரம்பித்தாள். அவர்களை இருக்கச் சொல்லிவிட்டு அண்ணியிடம் போனாள் சரோஜினி. அப்போதுதான் சற்று எழுந்து உட்கார்ந்திருந்த அண்ணியிடம் எல்லா விவரமும் சொன்னாள்.

அண்ணி சொன்னாள் ''எனக்கும் உள்ளூர பயமாகத் தான் இருக்கிறது. ஆனா எப்போ ஆதரவில்லாதவர்களைப் பாத்துக்கறதுன்னு ஆரம்பிச்சுட்டோமோ, இப்படி பல சோதனைகளும் வரத்தான் செய்யும். நாம சமாளிச்சுத்தான் ஆகணும். நமக்கு போலீசிலே, நீதித் துறையிலேனு பல இடங்களிலேயும் பெரிய மனிதர்களுடைய ஆதரவு இருக்கு. அதனாலே அந்தப் பெண்ணைக் கூட்டிண்டு வா. இன்னும் தீர விசாரித்துவிட்டு சேர்த்துக்கலாம்'' என்றாள்.

திரும்ப எல்லா விவரங்களையும் அண்ணியிடம் சொன்னார்கள். சரோஜினியின் அண்ணி அனந்தபூர் பக்கத்தில் இருந்திருக்கிறாராம். ஆனாலும் இப்போது தெலுங்கு சரளமாக பேசவோ, பேசியதைப் புரிந்து கொள்ளவோ முடியாத நிலை. ஆனாலும் சரோஜினியை விட எல்லாவற்றையும் கொஞ்சம் நன்றாகப் புரிந்து கொண்டாள்.

சரோஜினி கேட்டபோது நீலமணியின் மாமியாருக்கு அது என்னவென்று புரியவில்லை போலிருக்கிறது. இப்போது அந்தக் கேள்விக்குப் பதில் சொன்னாள்.

''என் பிள்ளையால் நாங்க இப்படித் தமிழ் நாடு வரைக்கும் வருவோம் என்று ஊகிக்கக் கூட முடியாது. அங்கேயும் சொல்றவங்க யாரும் கிடையாது. அவன் வருவான்னு பயப்படாதீங்கம்மா!'' என்று சொல்லி சரோஜினியையும் அவள் அண்ணியையும் கையெடுத்துக் கும்பிட்டாள். அந்தப் பெண் நீலமணியோ இவர்கள் காலிலேயே விழுந்துவிட்டாள்.

''இந்தப் பெண்ணிற்கு வயது என்ன இருக்கும்? நம்ம ஜனங்க மாறவே மாட்டாங்களா? ஊருக்குமுன்னே கல்யாணம் என்ன வேண்டியிருக்கு?'' என்று அங்கலாய்த்தவள், சரோவிடம் ''சரி சரோ! இவங்களை உள்ளே கூட்டிப் போய் சாப்பாடு போட்டு அனுப்பச் சொல்லு. இந்தப் பெண்ணை இங்கேயே, யார் ரூமிலேயாவது கூடத்தங்க விட்டுவிடு'' என்றாள்.

பாவம், அவர்கள் போகும் போது அவர்களும் சரி, நீலுவும் சரி ஒரே அழுகை. புது இடம், பயமாகத்தானே இருக்கும்? மறுநாள் காலையில் அந்த இல்லத்தில் டிபன், சமையல் என்று செய்ய ஆரம்பித்தவள்தான்.



அதற்குப் பிறகு அந்த சமையல் கட்டு இவளுடைய சாம்ராஜ்யமாக ஆகிவிட்டது. அவள் இருந்த வரை அவள்தான் செய்தாள்; இவள் செய்த ஆந்திரா சமையல் இவர்களுக்கு ஒத்துவராததால் கொஞ்சம் கொஞ்சமாக நம் பக்கத்து சமையல் கற்றுக் கொண்டு அதில் திறமையாக செயல்பட்டாள். எத்தனை முறை தவறுகளை சுட்டிக் காண்பித்துத் திருத்தினாலும் கோபப்படவே மாட்டாள். வேலை செய்யவும் அஞ்சமாட்டாள்.

ஐந்து வருடங்கள் நல்லபடியாகவே கழிந்தன. நீலு எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டாள். முதல் கொஞ்ச மாதங்கள் வெளியே போகவே பயந்தவள், அப்புறமெல்லாம் வெளியில், வாசலில் போய்வர ஆரம்பித்தாள். இவர்களும் அவளுக்கு நல்ல துணிமணிகளை வாங்கி கொடுத்து, அவளின் நலனிலும் அக்கறை காண்பித்து நன்றாகப் பார்த்துக் கொண்டார்கள். ஐந்து வருடங்கள் கழிந்த நிலையில் சரோஜினியும் அவள் அண்ணியுமாக சேர்ந்து இவளைக் கேட்டார்கள். ''நீ இன்னொரு கல்யாணம் பண்ணிக்கறியா நீலு! அப்படி ஒரு அபிப்ராயம் இருந்தால் தயங்காமே சொல்லு. நாங்களே ஒரு நல்ல பையனாப் பார்த்து உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிறோம்'' என்று.

''ஐயய்யோ! வேண்டாம்மா. நான் பாட்டுக்கு இப்படியே என் காலத்தை நல்லபடியா ஓட்டிவிடுகிறேன் எனக்கு இந்த வாழ்க்கையே போதும்'' என்று சொல்லிவிட்டாள். 5 வருடங்களுக்குமுன் அறியாத பெண்ணாக ஆந்திரா கிராமத்திலிருந்து, இங்கு வந்து, பம்மிபம்மி நின்ற நீலமணியா இவள்? இத்தனை தெளிவாகப் பேசுகிறாளே என்று இவர்களுக்கு வியப்பாக இருந்தது.

திடீரென்று ஒருநாள் விடியற்காலையில் கேட்டருகே ஒரே சப்தம். சப்தம் இவர்களுக்குக் கேட்கும்போதே அங்கு தகராறு ஆரம்பித்து 10 நிமிடம் ஆயிருக்க வேண்டும். வாட்ச்மேனிடம் ஒரு ஆள், இவர்கள் முன்பின் பார்த்தறியாதவன், தன்னை உள்ளே விடச் சொல்லி வற்புறுத்திக் கொண்டிருந்தான். இவர்கள் பின்னாலேயே வந்த நீலு, "அது என் புருஷன் தான், அம்மா" என்று சன்னமான குரலில் வனிதாவிடம் சொன்னாள். அப்போதுதான் ஒரு மாதம் முன் வனிதாவும் பார்வதியும் அங்கு வந்திருந்தார்கள். வனிதா அதை சரோஜினியிடம் சொல்ல அவனை உள்ளே விடுமாறு சரோஜினி வாட்ச்மேனிடம் சொன்னாள்.

உள்ளே வந்த அவன் யாரும் எதிர்பாராத வண்ணம் சரோஜினியின் கால்களில் தடாலென்று விழுந்தான். திடுக்கிட்டுப் போன சரோஜினி, "எழுந்திருப்பா, யார் நீ? என்ன வேணும் உனக்கு?" என்று கேட்டாள்.

"அம்மா, எனக்கு என் பெண்டாட்டி வேணும்மா. நான் அவளை நல்லபடியா வெச்சு குடுத்தனம் பண்ணறேம்மா அவளை அடிக்க மாட்டேம்மா. பூமாதிரி வெச்சு பாத்துக்கறேம்மா. அவள் இல்லாம எனக்கு வாழ்க்கையே பிடிக்கல்லைம்மா" என்று சொல்லிவிட்டு பெரிதாக அழுதான்.

வனிதாவின் பின் நின்றுகொண்டிருந்த நீலமணியைப் பார்த்தான். அவளருகே சென்று அவள் கைகளைப் பிடித்துக்கொண்டு, "நீலு என்னை மன்னிச்சுடம்மா! இனிமே நான் உன்னை அடிக்க மாட்டேன். உன்னை நான் பத்திரமா பாத்துக்கறேன் என்னோட வந்துடும்மா" என்று கெஞ்சினான். பிறகு சரோஜினியைப் பார்த்து "அம்மா நான் இதுவரைக்கும் கெட்டவனாகத்தான் இருந்தேன். இனிமே நான் நல்லவனா நடந்துக்கறேம்மா.



நான் இப்போ திருந்திட்டேன். இப்பல்லாம் குடிக்கறதில்லே. ஒழுங்கா வேலைக்குப் போறேன். தயவு செய்து நீலுவை என்னோட அனுப்பி வையுங்கம்மா" என்று மன்றாடினான்.

அதற்குள் சப்தம் கேட்டு அங்கு மெதுவாக வந்த சரோஜாவின் அண்ணி சாந்தம்மா விவரமெல்லாம் அறிந்துகொண்டாள். பிறகு சரோஜினியையும், நீலமணியையும் தன் ரூமிற்குக் கூப்பிட்டாள். நீலமணியை நேரிடையாகவே கேட்டாள் "என்ன நீலு! உனக்கு உன் புருஷனோட போகணும்னு ஆசை இருக்கா?"

"அது வந்து... ஆசைன்னு இல்லேம்மா. ஆனா பாவம் அவரு! என்னை வேண்டிக் கேட்டு அழறாரில்லையா? அதுதான் மனதை என்னவோ பண்ணுது" என்றாள் நீலு.

"சரிம்மா, உன் மனசு புரிஞ்சுப்போச்சு. நீ உன் கணவனோட போ. சரோ! இவளை அவனுடன் அனுப்ப ஏற்பாடு செய்" என்றாள்.

"அம்மா, கோபிச்சுக்கிட்டீங்களா?" என்றாள் நீலு.

"இல்லேம்மா! கோபம் எதுக்கு? அன்னிக்கு தெளிவா இன்னொரு கல்யாணம் வேண்டாம்னு சொன்னியே, இன்னிக்கு தெளிவா இவரோடு போக மாட்டேன், வேண்டாம் இந்த வாழ்க்கைனு நிச்சயமா சொல்லல்லே. எப்ப நீ அப்படிச் சொல்லல்லியோ, நீ அவனோட போய் வாழறதுதான் சரி. உனக்கு இன்னும் வாழ வேண்டிய வயசு. போய் நல்லபடியா வாழ்க்கையை வாழும்மா. நீ இப்படித் தனியா நிப்பானேன்? அவன் வந்து கூப்பிட்டதும் அவனை மன்னிச்சுட்டே பாத்தியா? இதுதாம்மா இந்த நாட்டுப் பெண்களின் குணம். சந்தோஷமா போய் வாம்மா" என்று சொன்னாள். பின் சரோஜினியைத்

தனியே கூப்பிட்டு ''நீனுகிட்டே ரகசியமா வெச்சுக்கச் சொல்லி கொஞ்சம் பணம் கொடுத்தனுப்பும்மா. மன சிலே கொஞ்சம் பயமும் இருக்கு எனக்கு'' என்றாள்.

''அண்ணி, உங்களுக்கு கொஞ்சம் பயமிருக்கு. எனக் கானா ரொம்பவே பயமாயிருக்கு. அதனாலே இஷ்டமும் இல்லை.''

''இல்லேம்மா! அவள் போகட்டும், தடுக்காதே! 'நாளைக்கு அந்தப் பெண்ணுக்கே தோணலாம் 'என் புருஷன் திருந்தி வந்து கூப்பிட்ட போது அனுப்பி யிருந்தா நான் நல்லா வாழ்ந்திருப்பேன். இவங்களாலே தான் அது கெட்டது'ன்னு அதனாலேதான் சொல்றேன் அவளைத் தடுக்காதே. போகட்டும்'' என்றாள்.

பின் நீனுவின் புருஷனையும் கூப்பிட்டு நிறைய புத்திமதிகள் சொல்லித்தான் அனுப்பினார்கள்.




இல்லத்தில் பார்வதி சமையலறை பொறுப்பை ஏற்றுக் கொண்டுவிட் டாள். ஒரு வருடம் ஓடிவிட்டது. ஒரு நாள் மத்தியானம் வயிற்றில் எட்டு மாதக் கருவைச் சுமந்து கொண்டு நீலமணி இல்லத்தின் வாசலில் வந்து நின்றாள். அவள் நின்ற கோலம் பெற்ற வர்கள், வளர்த்தவர்கள் என்று யாராவது பார்த்திருந்தால் வயிறெரிந்து போயிருப்பார்கள். இவளை இந்த கதிக்கு ஆளாக்கினவர்களை சாபத்தாலேயே சுட்டெரித்திருப் பார்கள். சரோஜினிக்கு இவளைப் பார்க்க பாவமாக இருந்தது. கன்றாவியான ஒரு கிழிந்த புடவை, ரவிக்கை, எண்ணெய் காணாத தலை முடி. கன்னத்திலும்.



கழுத்திலும் குழிவிழுந்து குச்சி, குச்சியான கை கால் களுடன் என்ன கோலம் இது. பிச்சைக்காரி கெட்டாள். கையில் ஒரு பழந்துணி மூட்டை வேறு.

''அம்மா, என்னை மன்னிச்சுடுங்க நான் அந்த ஆளோடு போயிருக்கக் கூடாது. என்னால் அங்கே இரண்டு நாட்கள் கூட நிம்மதியா இருக்க முடியவில்லை யம்மா. இப்போ அத்தையும் இல்லை. மாமா மட்டும் தான் ஆனா அவர் பேச்சு எதுவும் இவரு கேக்கமாட்டார் இவரு மாறவேயில்லைம்மா, அதே பழைய ஆளுதான் குடி, அடி, உதை, கோபம் எதுவும் மாறல்லே. என்னை அடிச்சு துவைச்சி பண்ணின இம்சையெல்லாம் சகிச்சிக் கிட்டு இத்தனை நாள் இருந்தேம்மா. இப்போ இதுக்கு மேலே தாங்கமுடியாமேதான் வீட்டைவிட்டுப் புறப்பட் டுட்டேன். எனக்கு உங்களையும், இந்த இடத்தையும் விட்டா யாரைத் தெரியும்?

''எதுக்கு அந்த ஆள் உன்னை அப்படி படுத்தினான்? அவனுக்கு என்னதான் வேணுமாம்?'' என்று கேட்டாள் சரோஜினி.

''இத்தனை நாள் காரணமில்லாமே அடிச்சாரு. இப்போ ஒரு பெரிய காரணம் தேடியிருக்காரும்மா.''

''அதென்ன பொல்லாத காரணம்'' என்று சற்று எரிச்சலுடன் கேட்டாள் சரோஜினி.

''நான் மாசமானதிலிருந்து 'பிள்ளைக் குழந்தைதான் பெத்துத்தரணும். பொண்ணு பொறந்துதோ உன்னையும் அந்தக் குழந்தையையும் கழுத்தை நெரிச்சே கொன் னுடுவேன், நான் ஜெயிலுக்குப் போனாலும் பரவா யில்லை'ன்னு சொல்றாரும்மா. எனக்கு என்ன பண்ற துன்னே தெரியல்லே. நான் சாப்பிட்டு இரண்டு

நாளாவுதும்மா'' என்று நீலு சொல்லிக் கொண்டிருக்கும் போதே வெறி பிடித்தவன் போல உள்ளே பாய்ந்து வந்தான் அவள் கணவன் எல்லேஷ்.

வாட்ச்மேன் வாயைப் பிளந்துகொண்டு நீலு கதையைக் கேட்டு கொண்டிருந்ததில் எல்லேஷ் உள்ளே வந்ததை கவனிக்கவில்லை. இவர்கள் யாரும் என்ன ஏது என்று சுதாரித்துக் கொள்வதற்குமுன் நீலுவை நெருங்கிவிட்டான் அவன். அவள் சரோஜினி ரூம் வாசற்படியில் நின்று பேசிக் கொண்டிருந்தாள். அவளை அப்படியே கொத்தாக தலை மயிரை பற்றி கீழே இழுத்தான் எல்லேஷ்.

வாயடைத்துப் போய் அனைவரு› பார்த்துக் கொண்டிருக்க, நீலு முகத்தில் மாறிமாறி நான்கு அறைகள் விட்டான். அதற்குள் டிரைவரும் அங்கு வர வாட்ச்மேனும் டிரைவருமாக எல்லேஷ் மேல் பாய்ந்து அவனைப் பின்னாடி இழுத்தார்கள்.

''யார் இந்த ஆளை உள்ளே விட்டது? வனிதா போய் போலீசுக்குப் போன் பண்ணு'' என்று சரோஜினி சொல்ல, போலீஸ் என்ற பெயரைக் கேட்டதும் அவன் ஓடப்பார்த்தான். ஓடும்முன் தன் காலைத் தூக்கி நீலுவின் இடுப்பில் ஓங்கி ஒரு உதை விட்டான். அதற்குள் கீழே விழுந்து கிடந்த துணி மூட்டையிலிருந்து ஒரு புடவையை எடுத்து பாதியாகக் கிழித்து அவன் கைகளை பின் புறமாகவும் கால்களை சேர்த்தும் கட்டி அங்கிருந்த ஒரு மகிழ மரத்தில் கட்டிப் போட்டார்கள். நிலைமையை நொடியில் ஊகித்து அறிந்த வனிதா போலீசுடன் ஆம்புலன்சுக்கும் போன் செய்துவிட்டாள்.

விழுந்த வேகத்தில் நீலுவிற்கு ஸ்மரணை தப்பி விட்டது. வலிப்புப்போல் இரண்டுமுறை வெட்டி இழுத்தது. கிட்டத்தட்ட நிறைமாதக்காரி அல்லவா?



தரை முழுவதும் அவளின் உதிரப் போக்கால் சகதியானது. அவசர அவசரமாக அவளுடைய மற்றொரு புடவையை இரண்டு தூண்களுக்கு மத்தியில் திரையாக பாரு கட்ட, எல்லோருமாக நீலுவை இழுத்து திண்ணையில் படுக்கவிட்டார்கள்.

அடுத்த 10 நிமிடங்களுக்குள் போலீஸ், ஆம்புலன்ஸ் இரண்டும் வந்துவிட, போலீஸ் எல்லேஷை அள்ளிக் கொண்டு போனது. ஆம்புலன்ஸில் வந்த ஒரு டாக்டரும், இரண்டு நர்ஸும் இறங்கி சட்டென்று நிலைமையை ஊகித்துக் கொண்டார்கள். அதற்குள் நீலமணியிடமிருந்து ''அம்மா'' என்ற பெரிய அலறல். டாக்டர் தலை வெளியே வந்துவிட்ட குழந்தையை எடுக்க, அதுவும் சத்தமாக அழுது தான் நார்மலாக இருப்பதைத் தெரிவிக்க, நர்ஸ் உதவியுடன் குழந்தையின் தொப்புள் கொடி அறுக்கப்பட்டது.

ஒரு உயிரின் உதயம், ஒரு உயிரின் அஸ்தமனம் இரண்டுமே ஒரே கணத்தில் நிகழ்ந்துவிட்டது. ஆம், ஒரு பெண் குழந்தையை ஈன்ற நீலு அந்த கணத்திலேயே தனக்கு இந்த உலக கஷ்டங்கள் எதுவும் இனி வேண்டாம் என்று படைத்தவனிடம் போய் சேர்ந்துவிட்டாள்.

சாந்தம்மா கையில் சுத்தம் கூட செய்யப்படாத அந்தக் குழந்தை வீறிட எல்லோரும் திகைத்து நின்றார்கள். டாக்டர் ''இந்தம்மா போயாச்சு, மேடம்! யார் அவங்க உறவுக்காரங்க?'' என்று கேட்டார்.

''அப்படி யாரும் இல்லாத அனாதைங்க அவங்க'' என்றாள் சரோஜினி.

''நாங்களே அடக்கத்துக்கு ஏற்பாடு பண்ணிடலாமா'' என்று கேட்டார் டாக்டர். சரோஜினி சரி என்றதும் நீலமணியின் உடலை ஆம்புலன்ஸில் ஏற்றினார்கள்.

குழந்தையை நர்ஸ் சுத்தம் செய்து கொடுத்தாள். பார்வதி அதற்குள் இரண்டு சுத்தமான டவல்களை எடுத்துவர, குழந்தையை அதில் சுற்றி சரோஜினியின் கட்டிலில் கிடத்தினார்கள். இரண்டு பெண்கள் வெளியே இடத்தைச் சுத்தம் செய்தார்கள்.

டாக்டர், ''இந்த அடக்கத்துக்குக் கொஞ்சம் செல வாகும், மேடம்! அப்புறமா வாங்கிக்கறோம்'' என்றார். அடுத்து சரோஜினி போலீஸ் ஸ்டேஷக்குப் போன் செய்து ''அந்த ஆளுக்கு என்ன தண்டனை வேண்டு மானாலும் கொடுங்க, ஆனா கூடுமானவரை எங்கள் இல்லத்தின் பெயர் வெளிவராமல் பார்த்துக்குங்க ஸார்'' என்று கேட்டுக் கொண்டாள்.

அடுத்து சரோஜினி இந்தக் குழந்தை இப்படிக் கத்திக் கத்தியே களைச்சிப் போய் தூங்கிடுச்சே. என்ன பண்ணலாம்? என்று தவிக்க, பாரு காய்ச்சி ஆறவைத்த தண்ணீரில் துளி சர்க்கரை போட்டு ஸ்பூனுடன் எடுத்து வந்தாள்.

அதற்குள் ஆயா மீனாட்சி, ''ஒரு நிமிஷம் டிரைவரை என்னோட கார்லே அனுப்புங்கம்மா'' என்றாள். அவள் உத்தேசம் புரிந்து சரி என்று சாந்தம்மா சொல்ல, மீனாட்சி கிளம்பினாள் 15 நிமிடத்தில் அவள் மருமகள் ஒரு மாதமே ஆகியிருந்த அவள் குழந்தை, அவர்களுக்கு இரவு வேண்டிய துணிகளுடன், நீலுவின் குழந்தைக்கு என்று சில சட்டைகளுடனும் வந்துவிட்டாள். எல்லோருக் கும் ரொம்பவே சந்தோஷம். எல்லோரும் மீனாட்சிக்கு நன்றி சொன்னார்கள்.

அந்த இளம்தாயிடம் அன்று பிறந்த அந்த பச்சைமன் பசியாறியது.



''இந்த சின்ன உயிரை எப்படி அண்ணி பெரிசாக்கு வோம்? பயமா இருக்கே'' என்றாள் சரோஜினி.

''நீயும் நானுமா ஆக்கப்போறோம்? அதைக் கடவுள் பார்த்துப்பார். கவலைப்படாதே'' என்றாள் சாந்தம்மா.

''அக்கா, யாரிடமாவது கொடுத்து வளர்க்கச் சொல்லி விடுவோமா? நம்மால் எப்படி வளர்க்க முடியும்?'' என்று நிஜமான பயத்துடன் கேட்டாள் வனிதா.

''இதுவரை இத்தனை சின்னக் குழந்தை நம் இல்லத் துக்கு வந்ததில்லை. நாமும் வளர்த்ததில்லை. ஆனால் நாமும் எதையும் சந்திக்க தயாராக இருக்கணும். ஆதர வற்ற பெண்களுக்கு உதவுவதுதானே நம் லட்சியம்! இந்த குட்டி பாப்பாவும் அந்த வரிசையில் சேர்ந்தது தானே? கவலைப் படாதீங்க. நடக்க நடக்க நாராயணன் செயல். எல்லாம் நல்லபடியாகவே நடக்கும் என்று நம்வு வோம்'' என்றாள். இப்போ எல்லோரும் போய் குளிச்சி சாப்பிட்டுப் படுங்க. குழந்தையை நான் என் பக்கத்தி லேயே விட்டுக்கறேன் மீனாட்சியும், அவள் மருமகளும் அவள் குழந்தையை விட்டுக் கொண்டு இங்கேயே படுக்கட்டும். பாரு, ஒரு நைட்லைட் கொண்டு வந்து இங்கே வைய்யம்மா. வனிதா, இன்னும் இரண்டு காட்டன் புடவைகள் சலவையிலிருந்தது வந்தது இருக்கு என் துணி அலமாரியில். அதை எடுத்து குழந்தைக்குத் தேவை யான மாதிரி கிழித்துக் கொடு'' என்றாள் சரோஜினி.

அனைவரும் அவரவர் வேலைகளைப் பார்க்க கிளம்பி னார்கள். ''நாளன்னிக்கு நீலமணிக்காக ஒரு பிரார்த்தனை கூட்டம் நடத்திடலாம்'' என்று சொல்லிவிட்டு குளிக்கக் கிளம்பினாள் சாந்தம்மா.

மறுநாள் காலையிலேயே யாரோ சாந்தம்மாவிற்கு போன் செய்தார்கள். அவர்கள் வசதியானவர்கள்தானாம்.

குழந்தை இல்லையாம். "உங்கள் இல்லத்தில் ஒரு அனாதைப் பெண் பிரசவித்துவிட்டு இறந்துவிட்டாளாமே! நாங்கள் அதை வளர்க்க ஆசைப்படுகிறோம். தருவீர்களா?" என்று கேட்டனர்.

"அது பெண் குழந்தை" என்றாள் சாந்தம்மா. சாதாரணமாக இப்படிக் கேட்பவர்கள் பெண் குழந்தை என்று தெரிந்தால் பின் வாங்கிவிடுவார்கள். எதனாலோ சாந்தம்மாவுக்கு அந்தக் குழந்தையை தன்னுடனேயே வைத்துக் கொள்ளவேண்டும் என்று தோன்றியிருந்தது. அதனால் "யோசித்துச் சொல்கிறேன்" என்று பதில் சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டாள்.

மூன்றாம் நாள் அந்தச் சின்னக் குழந்தை வளரப் போவது இல்லத்திலேயேதான் என்று முடிவாகிவிட்டது. ஆமாம் பிறந்த மறுநாள் டாக்டரிடம் போய் குழந்தையைக் காண்பித்து அவர் சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டு, தேவையானதையெல்லாம் வாங்கிக் கொண்டார்கள். மீனாட்சியின் பேரக் குழந்தைக்கு இரண்டு கைகளிலும் இரண்டு நூறு ரூபாயைக் கொடுத்து அந்தப் பெண்ணை வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். எத்தனையோ பெண்களுக்கு பெற்ற குழந்தைக்குப் பால் தரமுடியாமல் ஏதாவது உடம்புக்கு வருவதுண்டு. அதனால் ஒன்றும் ஆகிவிடாது. பயம் வேண்டாம்" என்று டாக்டர் சொல்லிவிட்டார்.

அன்றிலிருந்து பாரு இரண்டு பெண்களை உதவிக்கு வைத்துக் கொண்டு சமையல் அறையைப் பார்த்துக் கொள்ள, வனிதா சாந்தம்மாவுடன் படுத்துக் கொண்டு சின்னக் குழந்தையைப் பார்த்துக் கொள்ள ஆரம்பித்தாள்.

அது பிறந்த மூன்றாம் நாள் அரசாங்கத்தின் சுகாதார இலாக்காவிலிருந்து ஒரு மிக நல்ல செய்தி வந்தது.



என்னதான் நிறைய பரம்பரை சொத்து இருந்தாலும், வருமானம் என்று பெரிதாக ஏதுமில்லாமல் மேன்மேலும் வளர்ந்து வரும் இல்லத்தைப் பராமரிப்பது கஷ்டம் என்றுணர்ந்த சாந்தம்மாவை, வக்கீல் அரசாங்கத்திடம் உதவி கேட்டு விண்ணப்பிக்கச் சொல்லியிருந்தார். அதற்கான எத்தனையோ முயற்சிகள் எடுத்தும் பயன் ஏதும் கிடைக்காத நிலையில் விண்ணப்பித்ததையே எல்லோரும் மறந்துவிட்டிருந்தனர்.

அன்று வந்த போன் இவர்கள் இல்லத்திற்கு 10 லட்ச ரூபாய் அரசின் சுகாதாரத் துறை ஒதுக்கியிருந்ததைத் தெரிவித்தது... இந்த செய்தி கிடைத்ததும் குட்டிப் பாப்பாவை எல்லோரும் இன்னும் கொண்டாட ஆரம்பித்துவிட்டார்கள். குழந்தையும் எப்படி இருந்தது? அது எத்தனை மாதங்களில் பிறந்தது என்னவோ, அப்படியே உதறி இடுப்பில் போட்டுக் கொள்ளலாம் போல் ஒரு ஆரோக்கியமான குழந்தையாக இருந்தது. தலை நிறைய முடி. கருப்புத் திராட்சையாகக் கண்கள். குண்டுக் கன்னங்கள். குட்டியூண்டு வாய். ரோஜா மொட்டு மாதிரி நல்ல நிறம். அந்தக் குழந்தையை, அதுவும் இல்லத்திற்கு அத்தனை ஐஸ்வர்யத்தை கொண்டு வந்த குழந்தையை யாருக்காவது கொடுக்கவெல்லாம் அங்கு யாருக்குமே மனது வரவில்லை. 21 நாட்களுக்கு பிறகு குழந்தைக்கு என்ன பெயர் வைப்பது என்ற கேள்வி வந்த போது "அவள் பெயர் ஐஸ்வர்யா வேறு என்ன பெயர் அதற்குப் பொருத்தமாக இருக்க முடியும்?" என்று சாந்தம்மா கேட்க, அதை எல்லோரும் ஆமோதிக்க எல்லோருக்கும் பிடித்த செல்லக் குழந்தையாக வளர்ந்தாள் ஐஸ்வர்யா.

ஆனால் எத்தனையோ செல்லமாக நடத்தினாலும் ஐஸ்வர்யா யாரிடமும் எல்லை தாண்டமாட்டாள். சின்ன

வயதிலிருந்தே ஒருவித மன முதிர்ச்சியுடன் அமைதியாக இருப்பாள். வாயாட மாட்டாள். படிப்பிலும் படு சுட்டி. முதலில் ஏழை மாணவர்களுக்கான உபகார சம்பளத்தில் படித்த அவள் ஐந்து வகுப்பைத் தாண்டியதுமே சிறந்த மாணவர்களுக்கான உபகார சம்பளம் பெற ஆரம்பித்துவிட்டாள்.

பள்ளிக் கூடத்திலிருந்து வந்ததுமே எங்கு முடியுமோ அங்கு ஒத்தாசை செய்வாள். சின்னக் குழந்தைதான் என்றாலும் தன்னால் எது முடியுமோ, அதை நிச்சயமாகச் செய்வாள். எப்போது படிக்கிறாளோ, எப்போது வீட்டுப் பாடம் எழுதுகிறாளோ யாருக்கும் தெரியாது. தன் பாடப் புத்தகங்களையும், துணிமணிகளையும் பத்திரமாக வைத்துக் கொள்வாள். மொத்தத்தில் அவளை யாரும் எதற்காகவும் ஒரு வார்த்தை சொல்லும்படியாக வைத்துக் கொள்ளமாட்டாள்.

அவள் மூன்றாம் வகுப்பு வரும்வரை சாந்தம்மா இருந்தாள். தன்னுடனேயே அவளை வைத்துக் கொள்வாள். சாந்தம்மாவின் காலம் முடிந்தபோது இந்தக் குழந்தை அழுத அழுகையில் எல்லோரும் பயந்தே போனார்கள். எப்படிடா இவளைத் தேற்றப்போகிறோம் என்பதே எல்லோருடைய பேச்சாகவும் இருந்தது.

நாளாவட்டத்தில் மனம் தேறினாள் ஐஸ்வர்யா. அது தானே பெரியவர்கள் சொல்கிறார்கள் உப்பும், தண்ணியும் ஏற ஏற உணர்ச்சிகள் ஆறும் என்று. சாந்தம்மா இருந்தபோது ஐஸ்வர்யா எப்படி நடத்தப்பட்டாளோ அப்படித்தான் இப்பவும் நடத்தப் பட்டாள்.

அவள் 10 வது வகுப்பில் மாகாணத்தில் நான்காவது இடத்தில் தேறினாள். பிறகு 12 வதிலும் இரண்டாவதாக



வர, அவளை மெடிக்கல் காலேஜில் கூப்பிட்டு இடம் கொடுத்துவிட்டார்கள். அவளின் படிப்பு முழுவதுமாய் ஆகிவிட்டதால், அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கைத் துணையைத் தேடித்தர வேண்டும் என்பதே சரோஜினிக்கு இப்போதெல்லாம் எண்ணமாக இருந்தது.

அதைப் பற்றித்தான் தன் மாமா பிள்ளை ராஜனிடம் பேசிக் கொண்டிருந்தாள். ஆனால் ஐஸ்வர்யா என்னவோ ''நான் சில வருடங்களாவது வேலைக்குப் போய் என்னை வாழவைத்த இல்லத்திற்கு ஏதாவது செய்யவேண்டும். அதற்குப் பிறகு கல்யாணம் செய்துகொண்டால் போதும்'' என்று சொல்லிக் கொண்டிருந்தாள். திருமணத்திற்கப் புறமும் தான் சம்பாதித்ததில் பாதியாவது இல்லத்திற்குக் கொடுக்க சம்மதிப்பவர்களாகப் பார்க்கும்படி சொல்லிக் கொண்டிருந்தாள்.

கல்யாணத்திற்குப் பணம் வேண்டுமே என்ற கவலை இப்போது இல்லை. ராஜன் கொடுத்து விட்டுப் போய் விட்டார். ஆனால் இவள் சொல்கிறபடி இவள் சம்பாதிக்கும் பணத்தை இல்லத்திற்குக் கொடுக்க சம்மதிக்கும் வரன் கிடைப்பது நடக்கிற காரியமா? இந்தப் பைத்தியக் காரப் பெண் இப்படிச் சொல்கிறதே! தான் நல்லபடியாக இருக்கும் போதே இவள் கல்யாணத்தை நடத்திவிட வேண்டும் என்றால் நடக்காது போலிருக்கிறதே! என்று குமைந்து கொண்டிருந்தாள் சரோஜினி மனதிற்குள்.




அன்று வெள்ளிக் கிழமை. காலை எழுந்ததும் பூஜை செய்ய ஆயுத்தமாகிக் கொண்டிருந்தாள் சரோஜினி. போன் மணி அடித்தது. எடுத்தால்

எதிர்முனையில் பேசியவர் தன் பெயர் பாக்கியலக்ஷ்மி என்றும் அடையாரில் இருப்பதாகவும் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார். அன்று ''முன்மாலை வேளையில் சந்திக்க வரலாமா'' என்று கேட்டாள்.

''என்ன விஷயமாக'' என்று கேட்ட சரோஜினியிடம், ''இது நேரே சொல்லவேண்டிய விஷயம், அம்மா! நான் வருவதில் உங்களுக்கு ஒன்றும் இடைஞ்சல் ஏதுமில் லையே?'' என்று கேட்டாள். ''தாராளமாக வாருங்கள்'' என்று சொல்லிவிட்டு பூஜையில் அமர்ந்துவிட்டாள். யாராவது டொனேஷன் கொடுக்கவோ, அல்லது அவர் கள் வீட்டு விசேஷம் எதையாவது ஒட்டி இல்லத்தில் அனைவருக்கும் சாப்பாடு போட முன்வந்தோ போன் செய்வது வழக்கம்தான். அல்லது யாராவது ஒரு தெரிந்த பெண்ணை இல்லத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளுடன் வருபவர்களும் உண்டு. யாராக இருந்தாலும் காலை இத்தனை சீக்கிரத்தில் போன் செய்ய மாட்டார்கள். 'சரிதான் வரும்போது பார்த்துக் கொள்ளலாம்' என்று நினைத்துக் கொண்டாள்.

மாலை 3-30 மணிக்கு இல்லத்தின் முன் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து பணக்காரத்தனம் சொட்ட, ஆனால் கர்வமில்லாத அழகுப் புன்னகையுடன் ஒரு பெண்மணி வந்து இறங்கினாள். வாட்ச்மேன் வந்து சரோஜினியிடம் கேட்டு அனுமதி வாங்கியபின் அவளை சரோஜினியின் ரூமிற்கு அழைத்து வந்தான். பின்னா லேயே டிரைவர் நிறைய பழங்கள், பிஸ்கெட் பாக்கெட்டு களுடன் இரண்டு கூடைகளைக் கொண்டு வைத்தார் அந்த பெண்மணியின் கையில் ஒரு சிறு கூடை நிறைய மல்லிகைப் பூ இருந்தது.

பூவை சரோஜினியிடம் கொடுத்துவிட்டு தான் பாக்கியலக்ஷ்மி என்று தன்னை அறிமுகப் படுத்திக்



கொண்டாள் வந்தவள். அவளை வரவேற்று அமரச் சொன்னபின் தானும் உட்கார்ந்தாள் சரோஜினி.

''நான் உங்களைப் பற்றி நிறைய கேள்விப் பட்டிருக் கிறேன். நீங்கள் அட்வகேட் சதாசிவம் பற்றிக் கேள்விப் பட்டிருக்கலாம். நான் அவருடைய மனைவி'' என்றாள்.

''ரொம்ப சந்தோஷம்மா. சொல்லுங்க. நீங்க வந்த விஷயம் பற்றி தெரிந்துகொள்ளலாமா?'' என்று கேட் டாள் சரோஜினி. அதற்குள் ஒரு பணிப்பெண் இரண்டு கோப்பைகளில் தேநீர் ஒரு தட்டில் வைத்து எடுத்து வந்தாள். அந்த உபசாரத்தை பாக்கியலக்ஷ்மி மறுக்காமல் ஏற்றுக் கொண்டாள். நாசூக்காக கதவை ஒருக்களித்து வைத்துவிட்டு வெளியே போய்விட்டாள் அந்தப் பணிப் பெண். பரவாயில்லையே, உங்களிடம் தனித்துப் பேச வேண்டும் என்பதுதான் என் எண்ணமாக இருந்தது'' என்று வியந்தாள் பாக்கியலக்ஷ்மி.

''இங்கு எல்லோருமே விவரமானவர்கள், நல்ல குழந்தைகள்'' என்றாள் சரோஜினி.

''அதுதான். அப்படி ஒரு நல்ல குழந்தையைப் பற்றி பேசத்தான் நான் இங்கு வந்தேன்.''

''அப்படியா, புரியவில்லையே நீங்கள் சொல்வது!''

''சட்டுன்னு சொல்லவா? உங்க ஐஸ்வர்யாவை எங்க சதீஷுக்குப் பெண் கேட்டுத்தான் நான் இங்கு வந் திருக்கேன்.''

''வெரி குட், வெரி குட்! ரொம்ப சந்தோஷம்'' என்ற வார்த்தைகள் சரோஜினி அறியாமலேயே அவள் வாயி லிருந்து வந்தன.

''விவரமா சொல்லுங்கம்மா. ஐஸ்வர்யாவைப் பற்றி உங்களுக்கு எப்படித் தெரியும்? அவ வீடும் காலேஜும்

தவிர வேறெங்கும் போக மாட்டாளே! அவளைப் பாத்திருக்கீங்களா?'' என்று கேட்டாள் சரோஜினி ஆச்சரியமாக.

''எல்லா விவரமும் சொல்றேம்மா'' என்ற பாக்கிய லக்ஷ்மி ''என் பிள்ளை சதீஷ் ஒரு டாக்டர். போன வருஷம் எம்.டி. முடித்துவிட்டான். சொந்தமாக ஒரு க்ளீனிக் ஆரம்பிச்சுக் கொடுத்திருக்கோம். பிராக்டிஸ் நல்ல விதமாக நடக்கிறது. வீட்டின் முன்புறம்தான் க்ளீனிக். பார்க்க நல்லாவே இருப்பான். அவன் அப்பா மாதிரி நல்ல கலர்'' என்று சற்று வெட்கச் சிரிப்புடன் சொல்லி தன் ஹாண்ட் பேக்கிலிருந்து ஒரு போட்டோவை எடுத்துக் காட்டினாள். பையன் ரொம்பவே அழகாக இருந்தான். ஐஸ்வர்யாவிற்கு ஏற்ற ஜோடிதான் என்று ஒரு சந்தோஷம் மனது பூரா பரவிவிட்டது.

அந்தப் பெண்மணியின் ஒவ்வொரு அசைவும், பேச்சும், மற்றும் சிரிப்பும் அவள் ஒரு பரம்பரை பணக்காரி என்று பறை சாற்றின. ஆனால் ரொம்பவே பண்பாடு உடையவளாக இருந்தாள்.

''என்னம்மா, என்ன யோசனை? எம்பையனுக்கு எந்த விதமான கெட்ட பழக்கமும் கிடையாது. அவனுக்கு ஐஸ்வர்யா மூணு வருஷம் ஜூனியராம். இவன் அவளோடு பேசியதுகூட கிடையாதாம். அவள் இவனைப் பார்த்துக் கூட இருக்கமாட்டாள் என்கிறான் அவள் யாரையும் நிமிர்ந்துகூட பார்க்கமாட்டாள்னும் சொன்னான். அவளுக்கு நாங்க கல்யாணத்துக்குப் பார்க்கறோம்னு தெரிஞ்சதும் தனக்கு ஐஸ்வர்யாவைப் பண்ணிக்கணும்னு எண்ணம் இருக்குன்னு வெளிப்படையா சொல்லிட்டான்.''

''கேக்க ரொம்ப சந்தோஷமா இருக்கும்மா. ஆனா...''

''என்னம்மா, எதுவாயிருந்தாலும் தயங்காமே கேளுங்க.''



'இல்லேம்மா, உங்க அந்தஸ்து என்ன, இந்தப் பெண்ணோட பிறப்பு வளர்ப்பு என்ன? இதெல்லாம் சரிப்பட்டு வருமா?''

''வரும்னு நாங்க நினைச்சதால்தான் உங்களைத் தேடி வந்திருக்கேன். இதுக்கெல்லாம் காரணம் இருக்கும்மா. என் மாமியார் என் மச்சினனுக்குக் கல்யாணம் பண்ணும் போது அவர் இஷ்டம் ஒண்ணைத்தவிர மத்த எல்லாத்தையும் மட்டும் பார்த்து கல்யாணம் பண்ணி வெச்சுட்டார். என் மச்சினருக்கும் அந்தப் பெண்ணுக்கும் ஒத்து வரவே இல்லை. என் மச்சினர் வீட்டைவிட்டே போய் விட்டார். ரிஷிகேஷ் பக்கம் சன்யாசியா சுத்தறதா யாரோ சொன்னாங்க. அந்தப் பெண்ணும் டைவர்ஸ் வாங்கிண்டு வேறே கல்யாணம் பண்ணிண்டுட்டா'' என்று தொடர்ந்து ஏதோ சொல்ல வர ''உங்க மாமனார் அட்வகேட் ராமரத்னமா? அவரும் அபிராமபுரத்திலேதானே பிராக்டிஸ் பண்ணிண்டு இருந்தார்?'' என்று கேட்டாள் சரோஜினி.

''ஆமாம்மா, கேள்விப்பட்டு இருக்கீங்களா?''

''கேள்விப் படுவதென்ன! என் அப்பா நாளில் அவருடன் உங்க வீட்டிற்கே நிறையதரம் வந்திருக்கேன்.''

''அப்படியா, ரொம்ப சந்தோஷம். இப்போ ஐஸ்வர்யா பத்தின விவரமெல்லாம் உங்க வக்கீல் ஜகன்னாதன் தான் சொன்னார்.''

''ஆக, நீங்க அவளைப் பத்தின விவரமெல்லாம் தெரிஞ்சிதான் வந்திருக்கீங்க!''

''ஆமாம்மா! என் மாமனார் எங்க வீட்லே இனிமே எந்தக் கல்யாணமும் மனப் பொருத்தம் மட்டும்தான் பார்த்து நடத்தணும்னு கண்டிப்பாச் சொல்லிட்டார்.

அதனாலே எங்களுக்கு எல்லா விஷயமும் சம்மதம்தான். பொண்ணைக் கொஞ்சம் கண்லே காமிச்சீங்கன்னா நல்லாயிருக்கும். ரொம்ப ஆவலா இருக்கு'' என்றாள் பாக்கியலக்ஷ்மி.

''ஆமாம், உங்க கணவர் வரல்லியா இன்னிக்கு?''

''அதைப்பத்தி நான் முன்னாடியே சொல்லியிருக்கணும் ஸாரி. அவரும் நானும் வருவதாகத்தான் இருந்தோம். இன்னிக்குக் காலைலே அவருக்கு வேறே வேலை வந்துடுத்து அவசரமா பெங்களூருக்குப் போயிருக்கார். நல்ல நாள், வெள்ளிக் கிழமை போகணும்னு நினைச்சிண்டாச்சு. அதனாலே நிறுத்தவேண்டாம். நீ மட்டும் போயிட்டு வந்துடுன்னார். அதுதான் நான் மட்டும் வந்தேன்.''

''ஆனா, அம்மா! நீங்க என்னதான் சொன்னாலும் அவளை உங்க வீட்லே கொடுக்கறதுக்கு குறைந்த பட்சமா செய்யவேண்டியதைச் செய்யணுமேம்மா! எங்களுக்கு அத்தனை வசதி இல்லையே!'' என்றாள் சரோஜினி.

''ப்ளீஸ் அம்மா! பணம் மட்டும் ஒருவனுடைய வாழ்க்கையை நிர்ணயித்து விட முடியாதம்மா. என் பையன் இஷ்டம் என்கிற ஒரு காரணம் போதும். உங்க பெண்ணை உடுத்தின புடவையோடு அனுப்புங்க. எங்க பொண்ணா நாங்க பாத்துப்போம். அவளுடைய எதிர்காலத்தைப் பத்தி கவலையே படவேண்டாம். உங்க வக்கீல் என் மாமனாரிடம் ஜூனியராக இருந்தவர்தான். அவர்கிட்டே எங்களைப் பத்தி கேட்டுக்கோங்கோ. சீக்கிரமா கல்யாணத்தை வெச்சுக்கலாம்'' என்றாள் பாக்கியலக்ஷ்மி.

அப்போது அங்கே வந்த பாமாவை ''ஐஸ்வர்யா வந்துட்டாளா? வந்திருந்தா அவளை கொஞ்சம் இங்கே



வரச் சொல்லு. அப்படியே வனிதா, கல்யாணி இவங்களையும் வரச்சொல்லு'' என்றாள் சரோஜினி.

அடுத்த ஐந்து நிமிடங்களில், அவர்கள் எல்லோரும் அங்கே ஆஜராகிவிட்டனர். அப்போதுதான் ஐஸ்வர்யா காலேஜிலிருந்து வந்திருக்கவேண்டும். லைட் நீலத்தில் சன்னப் பூப்போட்ட காட்டன் புடவை, அதே கலரில் பிளவுஸ், கழுத்தில் ஒரு மெல்லிய சங்கிலி. ஒருகையில் சன்ன வளையல் இரண்டு. இன்னொரு கையில் ரிஸ்ட் வாட்ச். காதுகளில் எளிமையான முத்துத்தோடு (எல்லாமே சரோஜினி ரொம்பவும் வற்புறுத்தி வாங்கி கொடுத்தவை) காலையில் தலைக்குக் குளித்து முடி உலராமல் தளர பின்னல் போட்டிருந்தாள்.

உள்ளே வந்து எல்லோரும் உட்கார்ந்ததும் எல்லோரையும் பாக்கியலக்ஷ்மிக்கு அறிமுகப் படுத்திவைத்தாள் சரோஜினி. வனிதாவை ''இவள்தான் ஐஸ்வர்யாவை குழந்தையாயிருந்த போதிலிருந்து வளர்த்தவள் என்றும், கல்யாணியை ''எங்களோடு சுமார் 10 வருடங்களாக இருக்கிறாள்'' என்றும் அறிமுகப்படுத்தினாள். ஐஸ்வர்யாவை பெயர் மட்டும் சொல்லி அறிமுகப் படுத்திவிட்டு, மற்றவர்களுக்கு பாக்கியலக்ஷ்மியை அறிமுகப் படுத்தினாள்.

''நீங்க பேசிக்கிட்டே இருங்க இதோ வந்துடறேன்'' என்று சொல்லி ஐஸ்வர்யாவையும் அழைத்துக் கொண்டு உள்ளே போனாள்.

தனக்கு வணக்கம் சொன்ன ஐஸ்வர்யாவை பார்த்த நிமிடத்திலேயே பாக்கியலக்ஷ்மியின் கண்கள் விரிந்தன. எத்தனை அழகும் சாந்தமும் ஒரு சேரக் குடியிருக்கின்றன, இவள் தான் என் மருமகள் என்று மனது தீர்மானமாகச் சொல்லிவிட்டது.

உள்ளே சரோஜினி ஐஸ்வர்யாவிடம் சதீஷ் போட்டோவைத் தந்து ''நீ இவரைப் பார்த்திருக்கிறாயாம்மா?'' என்று கேட்டாள்.

''தெரியல்லேம்மா! ஆனா பார்த்த மாதிரி இருக்கு. எங்கேன்னுதான் சொல்லத் தெரியல்லே. ஏம்மா கேக்க றீங்க?'' என்று கேட்டாள் ஐஸ்வர்யா.

''இவர் உன் காலேஜில் உனக்குச் சீனியராக பாஸ் பண்ணியவர். நீ பார்த்ததில்லையா?'' என்று கேட்டாள் சரோஜினி.

''ஏதாவது டிபேட் போன்ற நிகழ்ச்சிகளில் பார்த்திருக் கலாம். நீங்க சொல்லவிட்டுத்தான் தோணுது. எதுக்கும்மா கேக்கறீங்க?'' என்று கேட்டாள்.

''அந்த போட்டோவில் இருப்பவர் பேரு சதீஷ். இவங்க அவருடைய அம்மா. இவங்க உன்னைத் தன் பிள்ளைக் குப் பெண் கேட்டு வந்திருக்காங்க'' என்றாள் சரோஜினி.

''என்னம்மா, நான் என்னை இவ்வளவுதூரம் வளர்த்து ஆளாக்கின உங்களுக்கும் இல்லத்துக்கும் ஏதாவது செய்யணும்னு நினைக்கிறேன். இப்போது எனக்கு கல்யாணத்துக்கு என்ன அவசரம்மா?'' என்று கேட்டாள் மனத்தாங்கலுடன்.

''இதோபார்! நேரம் கூடிவந்து யாரோ விரும்பிவந்து கேட்கும்போது பண்ணிக் கொள்வதுதாம்மா புத்திசாலித் தனம். அவங்க நல்ல வசதியானவங்க கூட'' என்றாள் சரோஜினி.

''அப்படித் தெரியறதனாலேதான் வேண்டாம்னு தோணுது. நான் யார், என் அப்பா, அம்மா யார்னு எல் லாம் தெரிஞ்சா வந்திருக்க மாட்டாங்க.''

''மக்கு, மக்கு! தாய், தந்தை எல்லாம் வசதியாக உள்ளவங்களாக இருந்தா இல்லத்திலே ஏன் வளர்றே?



அவங்களுக்கு எல்லாம் தெரியும் அவங்க பிள்ளை சொல்லி, நம்ம வக்கீலிடமும் விசாரித்துவிட்டு, உன் னைப் பத்தி எல்லாம் தெரிஞ்சுதான் வந்திருக்காங்க'' என்றாள். ''சரி, வா, அவங்களை அங்கே உட்கார்த்தி வெச் சுட்டு நாம இங்கே ரொம்ப நாழி பேசிகிட்டு இருந்தா நல்லா இருக்காது. இந்தா இந்தப் பூவை அம்பாள் படத் துக்கு வெச்சுட்டு நீயும் வெச்சுக்கோ'' என்று சொல்லி விட்டு வெளியே வந்தாள் சரோஜினி.

''என்னம்மா சொல்றா உங்க பொண்ணு?'' என்று புன் னகையுடன் கேட்டாள் பாக்கியலக்ஷ்மி.

''வந்து... ஒண்ணுமில்லே இது ஒரு நிமிஷத்திலே பேசி முடிவு செய்யற காரியம் இல்லையே! அவளுக் குன்னு சில எண்ணங்கள். அதையெல்லாம் யோசிக்க வேண்டியிருக்கு. கல்யாணமே வேண்டாமாம் அவளுக்கு இப்போ.''

''என்னம்மா நீங்க! அவ சம்பாதிக்கறதிலே பாதியை இந்த இல்லத்துக்குக் கொடுக்க அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளறவன் சம்மதிக்கணும். அவ்வளவு தானே?''

தூக்கி வாரிப் போட்டது இவர்களுக்கு. இந்த விஷயம் இவளுக்கு எப்படித் தெரியும்?

''என்னம்மா, நீங்கதான் ஒருநாள் உங்க வக்கீல் கிட்டே சொல்லியிருக்கீங்க. பாதி இல்லை, முழு சம்பளமும் இந்த இல்லத்துக்குத்தான். என் வீட்டுக்காரர் இதை உங்ககிட்டே ஒப்பனா சொல்லிவிட்டு வரச் சொன்னா ரம்மா. என்னம்மா, ஐஸ்வர்யா, இப்பவாவது சம்மதம்னு சொல்வியா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

''இப்பவே சொல்லணும்னு இல்லே ஒரு வாரம் டைம் எடுத்துக்குங்க, எங்களைப் பத்தியும் நல்லா விசாரிச்சக்

குங்க. அப்ப நான் புறப்படட்டுமா?'' என்று கேட்டாள் பாக்கியலக்ஷ்மியிடம்.

வனிதா உள்ளே போய் அந்தப் பெண்மணிக்கு ஒருதட்டில் கொஞ்சம் பழங்களையும், குங்குமத்தையும் கொண்டு வந்து சரோஜினியிடம் கொடுக்க, அவள் பாக்கியலக்ஷ்மியிடம் கொடுத்து விடைகொடுத்தாள்.

இவர்கள் யாருக்கும் ஆச்சரியத்தில் பேச்சே எழ வில்லை அதற்குப் பின் சுதாரித்துக் கொண்ட சரோஜினி வக்கீல் ஜகன்னாதனுக்கு போன் செய்து ''இப்போது வரமுடியுமா'' என்று கேட்டாள்.

''என்ன, பாக்கியலக்ஷ்மி அம்மா வந்துட்டுப் போயிட் டாங்களா? சுபம். நான் இதோ வரேன்'' என்றவர் அடுத்த ஒரு மணிநேரத்தில் அங்கே ஆஜராகிவிட்டார்.

அவரை வரவேற்ற சரோஜினி, ''என்ன சார், நீங்களா வது ஒரு கோடி காட்டியிருக்கலாமே!'' என்று கேட்டாள்.

''எனக்கென்ன தெரியும்? எங்கிட்டே சதீஷ் வந்து பேசியதே நேத்து சாயந்திரம்தான். காலைலே இங்கே வரதுக்கு கார்லே ஏறிட்டு எனக்கு போன் பண்றாங்க. பையன் ரொம்பவே அவசரப்படறான் போலிருக்கு'' என்று சொல்லி ஐஸ்வர்யாவைப் பார்த்தார். அவள் இப் போதுதான் சற்றே வெட்கமும் சந்தோஷமும் முகத்தில் காட்டி தலை குனிந்து கொண்டாள்.

''சரி, ஒரு சந்தோஷ அதிர்ச்சிதானே, அதை நீங்க அனுபவிக்கலாமேன்னுதான் விட்டுட்டேன்'' என்று சொல்லி பெரிதாகச் சிரித்தார். அதன்பிறகு ஏற்கனவே தீர்ந்திருந்த சரோஜினியின் சந்தேகங்களை மற்றொரு முறை உத்தரவாதம் தந்து தீர்த்து வைத்தார். மறுநாள் பாக்கியலக்ஷ்மி அம்மாளிடம் பேசி மற்றவற்றை முடிவு



செய்துவிடலாம் என்று நிச்சயம் செய்துகொண்டு எல்லோரும் சந்தோஷமாகக் கலைந்தார்கள்.

ஐஸ்வர்யா முன்னாலேயே கிளம்பினாள். புறப்படு முன் அம்பாள் படத்திற்கும், சரோஜினி, வனிதா ஆகி யோருக்கும் நமஸ்காரம் செய்தாள் ''இவளுடைய அதிர்ஷ்டம் பார்த்தியா'' என்றாள் சரோஜினி வனிதா விடம்.

''ஆமாக்கா, அவள் பிறந்ததுமே நம்ம சாந்தி இல்லத் துக்கு அதிர்ஷ்டம் கொண்டு வந்தவள் என்று சொல்லி யிருக்கீங்களே'' என்றாள் வனிதா.

''வனிதா அவளுக்கு திருஷ்டி சுத்திப் போடும்மா'' என்றாள் சரோஜினி. அதன் பிறகு ஒரு நாள் ஐஸ்வர் யாவைத் தவிர மற்ற எல்லோரும் வக்கீலுடன் சதீஷ் வீட் டிற்குப் போய் வந்தார்கள்.

''கல்யாணத்தை எங்கள் இல்லத்திலேயே வைத்துக் கொள்ள எனக்கு ரொம்ப ஆசையாக இருக்கிறது'' என் றாள் சரோஜினி சற்றே தயக்கத்துடன்.

''ஓயெஸ், அப்படியே செய்யலாம், கல்யாணத்தை எளிமையாகச் செய்யலாம். ரொம்ப முக்கியமான சில பேரை மட்டும்தான் கூப்பிடப் போகிறேன். ஏன்னா என் உறவிலேயே ரொம்பப்பேர் சதீஷுக்கு பொண் கொடுக்க ஆசைப்பட்டாங்க. ஆனா இவன் பிடிகொடுக்கல்லே. அவங்கள்ளே யாராவது இந்த பெண் மனசு நோகும்படி ஏதாவது பேசிவிடக்கூடாது, இல்லையா? கல்யாணம் முடிந்ததும் ரிசப்ஷனை பெரிதாக எல்லோரையும் கூப் பிட்டு நல்ல மண்டபத்தில் செய்துவிடலாம். ஏற்பாடு, செலவு எல்லாமே எங்களுடையதுதான்'' என்றாள் பாக் கியலக்ஷ்மி.

''ஏன் கல்யாணச் செலவும் எங்களுடையதுதான்'' என்று அவள் கணவர் சொல்ல, ''இல்லை சார், கல்யாணச் செலவு நாங்கள் செய்யறோம். அதற்காக என்னுடைய மாமா பிள்ளை என்னிடம் பணம் கொடுத்திருக்கிறார்'' என்று சொன்னாள் சரோஜினி.

அதற்கு அடுத்து ''கல்யாணம் எங்க சம்பிரதாயப்படி நடக்கட்டும். கன்னிகாதானம் செய்து கொடுக்க யாராவது இருக்காங்களா?'' என்று பாக்கியலக்ஷ்மி கேட்டாள். ''இல்லைம்மா, அப்படி யாரும் எங்களிடத்தில் இல்லை'' என்று சொன்னாள் சரோஜினி.

''அதனால் பரவாயில்லைம்மா! என்னோட தங்கை இருக்கா. அவளுக்கு ஒரே பிள்ளைதான் அவள் ஒரு பெண்ணுக்குக் கன்னிகாதானம் செய்து கொடுத்த புண்ணியம் தனக்கு வேணும்னு ரொம்ப நாளா ஆசைப்பட்டுக் கொண்டு இருக்கா. உங்களுக்கு ஆட்சேபணை இல்லேன்னா அவங்க இரண்டு பேரையும் பண்ணச் சொல்றேன்'' என்றார் சதீஷ் அப்பா.

''சரி அப்படியே செய்துடுங்கோ'' என்றாள் சரோஜினி. மேற்கொண்டு சின்ன விஷயங்கள் கூடப் பேசிக் கொண்டார்கள். இல்லத்திற்குத் திரும்பியதும் அங்கு நடந்த எல்லா விஷயங்களையும் ஐஸ்வர்யாவுடன் பகிர்ந்து கொண்டு வேலைகளைத் தொடங்கினார்கள். ஐஸ்வர்யாவிற்கு இதுவரை கல்யாணத்தைப் பற்றி பெரிய எண்ணங்கள் ஏதும் இல்லைதான். ஆனால் அவளும் சந்நியாசினி இல்லையே! எல்லாம் நல்லபடியாக நடந்து கொண்டிருக்கவே சந்தோஷம் இப்போதுதான் பூத்தது அவளுக்குள். அவளுக்கு சதீஷைப் பற்றி அவ்வளவாகத் தெரியவில்லையே தவிர, அவன்



பெற்றோரை ரொம்பவும் பிடித்துவிட்டது. எவ்வளவு நல்ல மனிதர்கள்! அதுவும் அவளுக்கு மாமனாராகப் போகிறவர் இவர்கள் இல்லத்திற்கு வந்து இவளைப் பார்த்துவிட்டு, நாலு வார்த்தைகள்தான் என்றாலும் எத்தனை பிரியமாகப் பேசினார் என்பதைத் தன்னால் ஆயுசுக்கும் மறக்க முடியாது என்று தோன்றியது. கண்களில் கருணையும், அன்புமாக கனிவாகப் பேசிய அவர்கள் குடும்பத்திற்கு மருமகளாக ஆவதற்கு தனக்கு என்ன தகுதி இருக்கிறது என்று நினைத்துப் பார்த்து, நினைத்துப் பார்த்து ஆண்டவனுக்கு நன்றி செலுத்தினாள்.

ஒரு நல்ல நாள் பார்த்து வேலைகளை ஆரம்பித்தனர். சொன்னபடியே எல்லா வேலைகளும் நடக்க எளிமையாக, அழகாக நடந்து முடிந்தது ஐஸ்வர்யாவின் கல்யாணம். முக்கியமான அத்தனை வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தது கல்பனாதான். ரொம்பவும் அக்கறை எடுத்துக் கொண்டு ஸ்கூலுக்குப் போன நேரம்போக மற்ற நேரம் முழுவதையும் கல்யாண வேலைக்கே செலவழித்தாள். கடைசி ஒருவாரம் லீவே போட்டுவிட்டாள். அத்தனையும் செய்தாளே ஒழிய வெளியில் மட்டும் வரவில்லை. உள்ளேயேதான் இருந்தாள்.

பார்த்தவர்கள் அனைவரும் சதீஷ் ஐஸ்வர்யா ஜோடிப் பொருத்தத்தை வியந்து பாராட்டினார்கள். கல்யாணத்திற்கு முன் அம்மாவை விட்டு சரோஜினியிடம் கேட்டு ஐஸ்வர்யாவை இரண்டுநாள் வெளியே கூட்டிப் போனான். தன் பிறந்த நாள் என்று ஒருதடவையும், அவளுக்கு தன் பரிசாக ஒருமோதிரம் வாங்க ஒரு தடவையும் அழைத்துப் போனான். ரொம்பவே தயங்கின ஐஸ்வர்யாவை, பெரியவர்கள் தைரியம் சொல்லி அனுப்பி

வைத்தார்கள். அவள் திரும்ப மலர்ந்த முகத்துடன் வரவே எல்லோரும் நிம்மதி அடைந்தார்கள். அவர்களுடன் ஐஸ்வர்யா புறப்படும் நாள் வந்தபோது, சாதாரணமாக தன் உணர்ச்சிகளை தன் ஆளுமையில் வைத்திருக்கும் சரோஜினி கூட ரொம்பவே அழுதுவிட்டாள். ''இவள் என் வயிற்றில் பிறக்கவில்லையே தவிர என் மகள் தான். நன்னா நடந்துப்பாள். ஆனால் ஒரு வீடு, மாமியார் மருமகள் ஒருவருக்கொருவர் எப்படி நடந்துக்கணும் எதுவும் அவளுக்குத் தெரியாது. ஆனா எது சொல்லிக் கொடுத்தாலும் கேட்டுப்பா. அவளுடைய அதிர்ஷ்டம் தான் அவ உங்க வீட்டுக்கு வரது. உங்களுக்கும் அதிர்ஷ்டம்தான் அவ உங்க வீட்டுக்கு வரதுன்னு சொல்ற மாதிரி நடந்துப்பா. எனக்கு நிச்சயமாகத் தெரியும்'' என்றெல்லாம் சொல்லிவிட்டு பெரிதாக அழுது விட்டாள்.

''அழாதீங்கம்மா, நீங்க சொல்ற எல்லாமே நிஜம்தான், நீங்க சொல்ல வேண்டிய அவசியமில்லையே'' என்றாள்.

வனிதாவும் அழுவதைப் பார்த்த பாக்கியலக்ஷ்மி, ''வருத்தப்படாதீங்கம்மா! நீங்க அழுதா ஐஸ்வர்யாவும் அழறா பாருங்க. அவ உள்ளூர்லதானே இருக்கப் போறா, அதனாலே நீங்க எப்பவேணாலும் அவளை வந்து பார்க்கலாம். நானும் அவளை அப்பப்ப அனுப்பறேம்மா. நீங்க கவலையே படாதீங்க. நாங்க நன்னா பாத்துக் கறோம். சிரிச்சிகிட்டே வழி அனுப்புங்கம்மா'' என்றாள்.

கல்யாணக் களைப்புகள் எல்லாம் தீரும் வரை தினமும் இல்லத்தில் எல்லோருமே ஐஸ்வர்யாவின் அதிர்ஷ்டத்தைப் பற்றிப் பேசிப்பேசியே சந்தோஷப் பட்டுக் கொண்டிருந்தார்கள்.






ப்ரீதிக்கும் இப்படி ஒரு சம்பந்தம் வந்தால் நன்றாக இருக்கும் என்று கல்பனாவுக்குத் தோன்றிக் கொண்டே இருந்தது. ஐஸ்வர்யாவின் அதிர்ஷ்டம் எல்லாருக்கும் வருமா என்றும் நினைத்துக் கொண்டாள்.

இப்போது ப்ரீதி சின்னவள்தான். ஆனாலும் இந்தக் கவலை ஒருநாள் எல்லாப் பெண் களைப் பெற்றவர்களும் பட வேண்டிய கவலைதானே! ரவி தன்னோடு இருந்திருந்தால் பெண்ணின் வளர்ச் சியைப் பார்த்துப் பூரித்துப் போயிருப்பார். அவள் எதிர் காலத்தைப் பற்றி தான் மற்றும் கவலைப் படவேண்டாம் என்றெல்லாம் எண்ணம் ஓடியது.

ப்ரீதி இப்போதெல்லாம் தன் அப்பா எங்கே என்று கேட்பதில்லை. கேட்டால் அம்மா ரொம்பவே டென்ஷன் ஆகிவிடுகிறாள். அதனால் கேட்டு அவளை சங்கடப்படுத்த வேண்டாம். ஏதோ தப்பு எங்கோ இருக் கிறது. கேட்டு யாரையும் சங்கடப்படுத்துவதில் லாபம் என்ன? தான் 5வது படிக்கும்போது ஒரு நாள் அம்மா "அப்பா வருவாராம்மா என்று கேட்டுக் கொண்டே இருக் காதேம்மா. எனக்கு சங்கடமாக இருக்கு. எப்போ வரு வார்ன்னு எனக்கும் தெரியாது. தெரியும்போது அம்மா என் ப்ரீதி கண்ணுகிட்டே சொல்லாம இருப்பேனா?'' என்று கண்களில் நீர் மல்கச் சொன்னாள். அதன்பிறகு இதைப்பற்றிக் கேட்பதில்லை என்று நினைத்துக் கொண் டாளே ஒழிய அனுவிடம் மட்டும் தன் எண்ணத்தை எப்போதும் பகிர்ந்துகொள்வாள். சமீபத்தில் ஒருநாள் அனு விடம் வருத்தப்பட்ட போது அனு ரொம்ப சுலபமாக "இதில் என்னடி பெரிய மர்மம் இருக்க முடியும்? உன்

அம்மாவைக் கல்யாணம் பண்ணிக் கொண்டவர் ஓடிப் போயிருப்பார். இன்னொரு கல்யாணம் பண்ணிண்டிருப் பார்'' என்று சொல்லிவிட்டாள். ஆனால் ப்ரீதிக்கு தன் அப்பா என்பவரைப் பற்றி அப்படியெல்லாம் நினைக்கப் பிடிக்கவில்லை. இப்படித்தான் கழிந்தன நாட்கள்.

ப்ரீதி 10வது வந்துவிட்டாள். திடீரென்று அவள் நடத்தையில் இரண்டு நாட்களாக ஒரு மாறுதல் தோன் றியது கல்பனாவுக்கு. என்றிலிருந்து என்று யோசனைப் பண்ணிப் பார்த்தாள். முந்தாநாள் புதன் கிழமையன்று மாலை வீட்டிற்கு வந்தவள் தன் துப்பட்டாவின் ஓரத்தைத் தண்ணீரில் போட்டு கசக்கிப் பிழிந்துவிட்டு உலர வைத்திருந்தாள். வாயில் என்னவோ ஒரு புது சினிமா பாட்டு ''என்ன ப்ரீதி! உன் துப்பட்டா என்னாச்சு?'' என்று கேட்டாள் கல்பனா.

''ஒண்ணுமில்லேம்மா! கொஞ்சம் அழுக்காயிடுத்து புது துப்பட்டாவாச்சேன்னு அந்த இடத்தை அலசினேன்'' என்றாள் ப்ரீதி.

அதோடு விட்டுவிட்டாள் கல்பனா. யோசித்துப் பார்த்தால் இரண்டே நாள், இரண்டு நாளில் அவளிடத் தில் ஒரு மாற்றம் தெரிந்தது. கொஞ்சம் அக்கறை எடுத்துக் கொண்டு அலங்காரம் பண்ணிக் கொள்வது. எப்போது பார்த்தாலும் வாயில் ஒரு சினிமாப் பாட்டை முணுமுணுத்துக் கொண்டே இருப்பது தெரிந்தது சரி. இன்னிக்கு பெண்ணோட பேசிடணும்னு நினைத்த கல்பனா, மீராவிடமும் போன் பண்ணி இதைப் பற்றிப் பேசினாள். மீராவும் ''கண்டிப்பாப் பேசிடு, கல்பனா'' என்று சொல்லிவிட்டாள்.

அதற்குமுன் அவள் மடித்து வைத்துவிட்டுப் போயிருந்த துப்பட்டாவை எடுத்துப் பார்த்தாள். ஒரு ஓரத்தில் அது



கசங்கி ஒட்டை விழுந்திருந்தது. சாயந்திரம் ப்ரீதி வந்ததும் அவள் டிபனும், டீயும் சாப்பிடக் காத்திருந்தாள். பின் கேட்டாள் ''என்னம்மா ஆச்சு உன் புது துப்பட் டாலே?'' நல்ல வேளையாக வனிதா வெளியே போயிருந் தாள். எத்தனை நெருக்கமானவர்களாக இருந்தாலும் அம்மாவும், பெண்ணும் ஏதோ ஒரு தர்ம சங்கடமான விஷயம் பேசும்போது தனியாக இருப்பதே நல்லதென்று தோன்றியது.

''என்னம்மா, ப்ரீதி! கேட்டேனே'' என்றாள்.

''துப்பட்டாவைச் சொல்றியாம்மா'' என்று தன் நினைவுகளில் ஒரு புன்னகையுடன் மூழ்கியிருந்த ப்ரீதி நனவுலகத்திற்கு வந்தாள். ''இல்லேம்மா, அது முந்தா நாள் நான் சிட்டி பஸ்ஸில் போனேன் இல்லையா'' என்று ஆரம்பிக்கும்போதே ஒரு வித பரவச நிலைக்குப் போய் விட்டமாதிரி இருந்தது. இதைக் கண்ட கல்பனாவுக்கு பகீரென்றது. ''அப்போம்மா, அப்போம்மா...'' என்று இழுத்தாள் ப்ரீதி.

''சொல்லும்மா, என்னாச்சு?''

''ஒண்ணுமில்லேம்மா. பஸ்லே பக்கவாட்டத்திலே விளம்பர போர்டு இருக்கும் இல்லையா அதிலே என் துப்பட்டா முனை சிக்கிண்டுத்தும்மா. நல்ல வேளையா எனக்குப் பின்னால் வந்த ஒருத்தர் அதை ஜாக்கிரதை யாக எடுத்துவிட்டார். இல்லேன்னா ரொம்பவே கிழிஞ் சிருக்கும். நல்ல வேளை ஒரு ஒட்டையோட போச்சு.''

''அப்புறம்?''

''அப்புறமென்ன, அவருக்கு நிறைய தேங்க்ஸ் சொன் னேம்மா. அவர் இதென்ன பெரிய விஷயம்னு சிரிச்சார்.''

''அவர் எப்படிம்மா இருந்தார்?''

''அவர் ஒரு காலேஜ் ஸ்டூடண்ட் மாதிரி இருந்தார், ஏம்மா கேக்கறே?''

''இல்லே, தினம் உன் பஸ்ஸிலேயே வரவரான்னு சும்மாத்தான் கேட்டேன்.''

''இன்னிக்குப் பார்த்தேம்மா, நேத்திக்கு லீவு இல்லையா?''

''நிறைய படிக்க இருக்காம்மா, இன்னிக்கு?''

''ஒண்ணுமில்லேம்மா.''

''வா, ப்ரீதி! கொடி வீட்லே உட்கார்ந்துக்கலாமா கொஞ்ச நாழி?''

இருவருமாக அந்த கொடிவீட்டை நோக்கி நடந்தார்கள். அங்கு போய் உட்கார்ந்ததும் கல்பனா சொன்னாள்.

''என் சிநேகிதி ஒருத்தி இருந்தாம்மா, ப்ரீதி. அந்தப் பெண்ணை அவங்க வீட்லே ரொம்பவும் கட்டுப்பாடோட, ஆனா சௌகரியமா வளர்த்தாங்க.''

''அந்த சிநேகிதி இப்போ எங்கே இருக்காம்மா? அவங்க பேர் என்ன? நீங்க, மீரா ஆன்ட்டி எல்லோரும் ஒண்ணாப் படிச்சீங்களா?''

''ஆமாம்மா'' என்று அவள் கேட்ட முதல் கேள்விக்குப் பதில் சொல்லாமல் மேலே தொடர்ந்தாள். ''இப்போ உன்னைப் பாக்கறச்சே அந்த இளமைக்காலத்தை எல்லாம் திரும்ப ஒருமுறை வாழக்கிடைச்சால் எத்தனை நன்னா இருக்கும்னு தோணறதும்மா'' என்று ஒரு பெருமூச்சு விட்டு, கல்பனா மேலே தொடர்ந்தாள்.

''அந்த சிநேகிதி நன்னா இருப்பா பாக்கறதுக்கு. வீட்லே அப்பா, அம்மா, பாட்டி, தங்கை எல்லோரும் இருந்தாங்க. பாட்டிதான் அவங்க வீட்லே எல்லாம். இந்தப் பெண்கள் இரண்டும் ரொம்பவே அழகுன்னு பாட்டிக்குப் பெருமை, ஆனா அதேசமயம் பயம்.''



''பயம் எதுக்கும்மா?''

''பெண் என்றாலே பயம்தான். அதிலும் கொஞ்சம் அழகாகவும் இருந்து வயசும் சேர்ந்துண்டா கேக்கணுமா? பயம்தான். யாராவது மனசைக் கெடுத்துடுவாங்களோ, அதுக்கு இந்தப் பெண்ணும் இடம் கொடுத்துடுமோ என்றெல்லாம்தான் பெரியவங்களுக்குப் பயம். அப்போவெல்லாம் பாவாடை, தாவணிதானே போட்டுப்போம். 'தலைப்பை இழுத்து சொருகிண்டு போ' என்றெல்லாம் பாட்டி சொல்லி அனுப்பாத நாளே கிடையாது. வாசல்லே வந்து நின்னு, பேத்தி தெரு திரும்பற வரைக்கும் பார்த்துட்டுத்தான் உள்ளே போவா. பேத்தி என்ன பண்ணும் தெரியுமா? பாட்டி தலை திரும்பியதும் இரண்டு பின்னல்ல ஒண்ணை எடுத்து முன்னாலே போட்டுண்டு, சொருகியிருக்கிற தலைப்பை எடுத்து அவிழ்த்துப் போட்டு கொண்டுதான் போகும். இப்படித்தான் பஸ் ஏறும்போது ஒருநாள் பஸ்ஸிலே இருந்த விளம்பர போர்டுலே தலைப்பு மாட்ட, கூட்டம் நெரிக்க, அந்தப் பெண் படியேறி உள்ளே போகக் கஷ்டப்பட்டபோது ஒருத்தர் அந்தத் தலைப்பை ஜாக்கிரதையாக எடுத்து விட்டு உதவி செய்தார். அவரும் பார்க்க நன்னா இருந்தார். அவரும் சின்ன வயசுக்காரர். அந்த வயசிலே ஆணானாலும், பெண்ணானாலும் அழகாத்தான் தெரிவாங்க.''

''அப்புறம்'' இப்போது சுவாரஸ்யம் தட்டியவளாக பெண் கேட்க, கல்பனா தொடர்ந்தாள்.

''அப்புறமென்ன! அந்தப் பொண்ணு ஒரு தேங்க்ஸையும், புன் சிரிப்பையும் உதிர்க்க, அவன் ஒரு பெரிய சிரிப்பையே பதிலாகத் தந்தான். பிறகென்ன, சின்ன அறிமுகம், கொஞ்சம் பேச்சு, நிறைய பேச்சு, தனியே பேச்சு, என்று அவர்கள் சிநேகிதம் வளர்ந்தது.''

''அவங்க வீட்லே ஒண்ணும் சொல்லல்லியாம்மா?''

''இதெல்லாம் வீட்டுக்குத் தெரிஞ்சா தோலை உரிச்சிட மாட்டாங்களா? காதல் ஆரம்பிச்சுது. திருட்டுத்தனமும் ஆரம்பிச்சாச்சு.''

''அப்புறம் வீட்லே தெரிஞ்சு போயிடுத்தா?''

''இல்லேம்மா. அவங்கல்லாம் இந்தப் பொண்ணு மேலே ரொம்ப நம்பிக்கை வெச்சிருந்தாங்க. சந்தேகம் ஏதும் வரவேயில்லை. அதுக்குள்ளே அவங்க இரண்டு பேரும் வெளியூர் போய் கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க.''

''ஐயய்யோ! அப்புறம் என்னம்மா ஆச்சு?''

''என்னாச்சு! ஒரு இரண்டு வருஷம் அந்தப் பையன் அந்தப் பெண்ணோட ஒழுங்கா குடித்தனம் பண்ணத்தான் செய்தான். அப்புறம் அவனுக்கு என்ன கஷ்டம் வந்ததோ, என்னவோ, திடீரென்று ஒருநாள் காணாமல் போயிட்டான்.''

''அப்படீன்னா?''

''வீட்டைவிட்டுப் போயிட்டான். அவ்வளவுதான். அந்தப் பெண் ஆதரவில்லாமல் நின்னா. அவளுக்கு அதிகம் படிப்பில்லை. அப்போ அவ கர்ப்பமா வேறே இருந்தாள்.''

''அந்தப் பெண்ணும் அவ அப்பா, அம்மா வீட்டுக்கே போயிட்டாளா?''

''எப்படியம்மா போக முடியும்? இவள் வீட்டைவிட்டுப் போனது தெரிந்த அடுத்த நிமிஷமே அவள் பாட்டி உயிரை விட்டுட்டா, பாட்டியுடன் சேர்த்து இவளுக்கும் முழுகிட்டார் அவ அப்பா.''

''அப்போ பாவம், அந்தப் பொண்ணு என்னம்மா செய்தா?''



''அவள் குடும்பத்தில் எந்த முன்னோரின் புண்ணியமோ, திக்கற்றவருக்குத் தெய்வமே துணை. அந்த தெய்வமும் நேரில் வராது. மனுஷ ரூபத்தில் வரும்னு சொல்லுவாங்க. அந்தப்படி சரோஜினியம்மா வந்தாங்க.''

அம்மாவையே ஒரு நிமிடம் உத்துப் பார்த்த ப்ரீதி உதடுகள் அழுகையில் துடிக்கக் கேட்டாள் ''நீதானம்மா அந்தப் பொண்ணு?''

''புரிஞ்சுகண்டுட்டியேம்மா. அந்தப் பொண்ணு நான்தான். என்னைப் பத்தி உங்கிட்டே சொல்லவேண்டிய நேரம் வந்துடுத்துன்னு நான் தீர்மானம் செய்ததனாலே தான் இன்னிக்குச் சொன்னேம்மா. இதெல்லாம் தெரிஞ்சுக்கற வயசு உனக்கு வந்துடுத்தும்மா, செல்லம்.''

''என் துப்பட்டாவை ஒருத்தர் எடுத்துவிட்டார்ங்கறதனாலே பயந்துட்டியாம்மா.''

''ஆமாம், கண்ணே! உன் வாழ்க்கை நல்லபடியா அமையணும். அதுக்கு நீ நல்லா படிச்சு உன் கால்லே நிக்கணும். அப்புறமா உனக்குத் தகுந்த பையனாகப் பார்த்து, நாங்க கல்யாணம் பண்ணி வெக்கறோம். நீ நன்னா இருக்கணும்மா, நன்னா இருக்கணும்'' என்றவள் அடக்கமுடியாமல் அழுதுவிட்டாள். கூடவே தானும் ஒரு பாட்டம் அழுதுதீர்த்த ப்ரீதி தன் கண்களைத் துடைத்துக் கொண்டு, அம்மா கண்ணையும் துடைத்தாள்.

''நான் தப்பான வழியில் ஒரு நாளும் போக மாட்டேம்மா. ஆனா எனக்கு ஒண்ணு கேக்கணும், கேக்கலாமா?''

''கேளும்மா'' என்றாள் கல்பனா.

''பெரியவங்களாப் பார்த்து கல்யாணம் பண்ணி வெச்சா மாத்திரம் கல்யாண வாழ்க்கையில் பிரச்னை வராதா?''

"வரலாம்மா, வரலாம்! ஆனா லவ் மேரேஜ்லே ரிஸ்க் ரொம்ப அதிகம். தாங்களே பார்த்து கல்யாணம் பண்ணி கிட்டவங்க நன்னாவும் வாழலாம் ஆனா, பெரியவங்க பாத்து பண்ணிவெச்சா, ஏதாவது பிரச்னைன்னா நம் மளுக்கு துணை வர மனுஷா இருப்பாங்க. நாமளே பண்ணிக்கிட்டா அந்த மாதிரி நேரங்கள்லே அநாதை யாக நிக்க வேண்டியதுதான். எனக்கு ஒரு சரோஜினி அம்மா கிடைச்சமாதிரி எல்லாருக்கும் கிடைப்பாங்களா? யோசித்துப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு பகீர்னும். அன்னிக்கு சரோஜினி அம்மா இப்படி அரவணைச் சிக்கல்லைன்னா என் கதி என்ன ஆயிருக்கும்? எந்த ரௌடிக் கும்பல்கிட்டே மாட்டியிருப்பேனோ! யார் என்னை எந்த விதமாக உபயோகப் படுத்தியிருப்பாங் களோ. அதையெல்லாம் நினைச்சா இப்பவும் வயத்தைக் கலக்குது" என்றாள் கல்பனா.

"அம்மா, நீ அந்த ஆளை... ஸாரி, என்னோட அப் பாவைத் தேட முயற்சிக்கவே இல்லையாம்மா" என்று கேட்டாள் ப்ரீதி.

"இல்லேம்மா, அவருக்கு ஏதோ ஆபீஸ் பிரச்னை. போலீஸ் தேடறதுன்னு கேள்விப்பட்டேன். போலீஸ் தேடும்போது நானும் வேறே முயற்சிபண்ணி கண்டு பிடிச்சா, அதுவே அவருக்குப் பெரிய பிரச்னை ஆகி விடும் இல்லையா? அதனால்தான் நான் டிரை பண்ண வேயில்லை. ஆனா அவராலே என்னைக் கண்டுபிடிச் சிருக்க முடியும். அதுக்கு ஒரு சின்ன க்ளூ கொடுத் திருந்தேன். அவர் பிரண்ட் சேகருக்கு நான் சென்னை வந்துவிட்டது தெரியும். சென்னை வந்து சேர்ந்துட்டேன்னு தெரிஞ்சா கண்டுபிடிக்கறது பெரிய கஷ்டமில்லை. தவிர பின்னாடியே போய் அவரைத் திணறவைக்கறதும் என்



நோக்கமில்லை. அவர் என்னைத் தேட ஏன் முயற்சிக் கல்லேன்னும் தெரியல்லே. அதனாலேதான் சொல்றேன் கண்ணம்மா, தவறிப் போய்கூட நீ இந்த மாதிரி எண்ணங்களுக்கு எல்லாம் இடம் கொடுத்துடாதேம்மா. நீ ரொம்ப சின்னப் பொண்ணும்மா, ஜாக்கிரதையாக இருக்கணும். அடலஸண்ட் வயசு, பருவக் கோளாறு, உடம்பில் ஹார்மோன் மாற்றங்கள் மனதையும் பாதிக் கறது சகஜம்தான் இதையெல்லாம் புரிஞ்சிண்டு ஒதுக்கித் தள்ளக் கத்துக்கணும்."

"நிச்சயமாம்மா! நான் மனசை பூர்த்தியா படிப்பில் செலுத்தி பெரிய படிப்பெல்லாம் படிப்பேன் அம்மா. உன் குடும்ப வாழ்க்கையிலே கிடைக்காத சந்தோஷத்தை என் மூலமா உனக்குத் தருவேன், அம்மா!" என்றாள் ப்ரீதி.

"என் கண்ணே! இந்த வார்த்தை போதும்மா எனக்கு" என்று மகளைக் கன்னம் வழித்து முத்தமிட்டாள் கல் பனா. சற்று நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தவர்கள் வனிதா வரும் நேரமாகிவிட்டதை அறிந்து உள்ளே போனார்கள்.




ஏறத்தாழ இதே சமயத்தில் மீராவும் அனுபமாவிடம் தன் காதல் கதையைச் சொல்லும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஒரு விடுமுறைதினம், மத்தியானம் சோபாவில் மீரா உட் கார்ந்திருக்க அவள் மடியில் தலை வைத்து படுத்திருந்தாள் அனு. தொலைக் காட்சியில் ஏதோ படம் ஓடிக் கொண்டிருந்தது. ஒரு சின்னப் பையனும், பெண் ணும் காதலிக்கும் படம். பையன் பரம ஏழை. பெண் மகா பணக்காரி, தீவிரமான காதல். இருவர் வீட்டிலும் பயங்கர

எதிர்ப்பு. இருவரும் வீட்டிற்குத் தெரியாமல் வெளியூர் போய் கல்யாணம் செய்து கொள்ளத் திட்டமிடுகிறார்கள்.

பட்டென்று கையில் இருந்த ரிமோட்டால் டி.வி.யை நிறுத்தினாள் மீரா. ''ஏம்மா படம் இன்டரெஸ்டிங்கா போயிண்டு இருக்கச்சே நிறுத்தறே?'' என்று கேட்டாள் அனு.

''எது இன்டரெஸ்டிங்? அவங்க இரண்டுபேரும் ஓடிப் போறதா?'' என்று காட்டமாகக் கேட்டாள் மீரா.

''ஐயே, அதை விடம்மா! இரண்டு பேருமே அழகா இருக்காங்க. பாட்டெல்லாம் நல்லா இருக்கும். அடுத்த ஸீன் மொத்தமும் ஊட்டியிலே எடுத்திருக்காங்க, தெரியுமா?''

''எத்தனை நல்ல ட்ரீட்மெண்ட் கொடுத்தாலும் ஆதாரமான கருத்து தப்பு. சின்ன பசங்க மனதைக் கெடுக்கறது இந்த மாதிரி படங்கள்தான். இப்ப என்ன ஆகும்? இவனுக்கு கௌரவப் பிரச்னை. அவங்க வீட்லே போய் இருக்கமாட்டான். அவங்க உதவியையும் ஏத்துக்க மாட்டான். இவ தன் வீட்லே, வீட்டு ஆளுங்க மூணு பேர் இருந்தா ஆறு வேலைக்காரங்கங்கற சூழ்நிலையில் வளர்ந்த பொண்ணு. இவன் வீட்லே ஸாரி, குடிசைலே போய் இவனுக்கு பொங்கிப் போட்டு லாரித்தண்ணியை அடிச்சிபிடிச்சி வாங்கிண்டு வாழற வாழ்க்கையையா நடத்துவா? இதெல்லாம் நடக்கிற காரியமா? நடந்தாலும் இனிக்குமா? சினிமாங்கறதுனாலே ஒரு 15 நிமிஷத்திலே இவங்க அப்படியே பெரிய பணக்காரர்களாகி வசதியா இருக்கறதா காமிப்பாங்க. நிஜ வாழ்க்கையிலே அது அத்தனை சுலபமா? சொல்லு? இது சின்னப் பசங்களைத் தப்பான வழிக்குக் கொண்டுபோறதில்லாம வேறென்ன?''



''அம்மா என்னம்மா நீ! ஒரு சினிமா விஷயத்திலே இவ்வளவு உணர்ச்சிவசப்பட்டு பேசறே? உன்னுதுகூட காதல் கல்யாணம்ன்னு கொஞ்ச நாள் முன்னாடி சொன்னியே! அது நிஜம்தானே? பின்னே இப்போ இப்படி பேசறே?''

''என்னுது காதல் கல்யாணம்தான். எங்க இரண்டு பேருக்கும் ஆதாரமான அன்புங்கறது இருக்கு. தவிர நாங்க இரண்டுபேருமே எதையும் ரொம்ப விடாப்பிடியாக பிடிச்சிண்டு சண்டை போடற டைப் இல்லே. இல்லேன்னா எங்களுக்குள்ளும் மனக் கசப்பு வர எத்தனையோ வாய்ப்புக்கள் வரத்தான் செய்தது.''

''அம்மா, நீ அப்பாவைக் கல்யாணம் பண்ணிண்டதுக்காக வருத்தப் படறியாம்மா?'' என்று பெரிய மனுஷி போல் கேட்டாள் அனு.

''இல்லேம்மா. அப்பா விஷயத்திலே எனக்கு வருத்தம் ஏதுவுமில்லை ஆனால் இதிலே வேறே எத்தனையே விஷயங்கள் பின்னி இருக்கு. அப்பாவுக்கும் நாலு மனிதர்கள் இருந்தாக்கா அவர் இன்னும் சந்தோஷமாக இருப்பார்ன்னு எனக்கு எப்பவும் தோணும். அதைவிட முக்கியம் உனக்கும் சித்தப்பா, பெரியப்பா அத்தைன்னு எல்லாம் நாலு மனுஷா இருப்பா இல்லையா? தவிர என்னதான் இதையெல்லாம் தள்ளிட்டு வாழ்ந்தாலும் அப்பாவுக்கும் எனக்கும் நடுவே அந்தஸ்து பேதம் கண்டிப்பா இருந்தது. அதை நான் மறந்தாலும் அப்பா இயல்பா ஆறதுக்கு எத்தனையோ வருஷம் ஆச்சு. பெரியவங்க பண்ணி வெச்சா இந்தப் பிரச்னை இருக்காது. இல்லையா?''

''அம்மா, நான் கொஞ்ச நாள் முன்னாடி மும்பைல அப்பாவோட வெளியிலே போறச்சே சீக்கிரம் வீட்டுக்குப் போய் 'உங்கம்மாவை பேங்குக்கு அனுப்பணும்

அப்படி'ன்னார். 'நாமே அந்த வேலையை முடிச்சிண்டு போயிடலாமே'ன்னேன். 'இல்லேம்மா, பணம் எடுக்கற வேலையெல்லாம் உங்கம்மாவுது. நான் அந்த வழிக்கே போறதில்லை'ன்னார். ஏம்மா அப்படி?''

''அதுவாம்மா, நான் அவரைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு சொன்னதும், தாத்தா விசாரிச்சபோது தெரிஞ்ச விஷயமெல்லாம் அவருக்கு அவ்வளவு திருப்தி யாக இல்லை. ஆனா நான் பிடிவாதம் பிடிச்சதனாலே கல்யாணம் பண்ணிவெச்சார். ஆனா பண விஷயத்திலே அவருக்கு எந்த உரிமையும் இல்லாம வெச்சுட்டார்.''

''பாவம்மா அப்பா! ரொம்ப வருத்தப் பட்டாரா?''

''அவர் இந்த விஷயத்தை அன்னிலேர்ந்து இன்னி வரைக்கும் பெரிசாவே எடுத்துக்கல்லே. தாத்தா கொஞ்ச வருஷத்திலே தன் அபிப்ராயத்தை மாத்திண்டுட்டார். நன்னாத்தான் நடத்தறார். ஆனா அப்பா ஒதுங்கியேதான் இருக்கார். இதெல்லாம் நினைச்சா ரொம்ப கஷ்டமா இருக்கு. அதனால்தான் உனக்குச் சொல்றேன். மனசை சிதறவிடாதே. ஒருமுகப்படுத்தி நன்னா படி. எந்தப் பெண்ணுக்கும் சரி, ஆணுக்கும் சரி சமூகத்தில் ஒரு மரியாதை வாங்கித் தருவது படிப்பும் அதன் மூலம் கிடைக்கும் வெற்றியும்தான். அப்பா கம்பெனின்னு பேரே தவிர நான் நன்னா படிச்சு முடிக்கற வரைக்கும் ஒரு பயத்தோடதான் வேலை பண்ணினேன். அதனால் படிப்பு, படிப்புங்கற ஒரு குறிக்கோள் வெச்சுண்டு படி.''

''என்னம்மா நான் இப்ப என்ன யாரையாவது காதலா பண்ணிட்டேன், இல்லே காதல் பண்ணற வயசா ஆயிடுத்து?'' என்றாள் அனு சற்று கோபத்தோடு.

''புரிஞ்சா சரி! கோபப்படாதே! காதல் பண்ற வயசு வந்தாலும் படிச்சு முடிக்கற வரை அந்த வழிக்கெல்லாம் போகாதே'' என்றாள் முத்தாய்ப்பாக மீரா.



இதன்பிறகு கொஞ்ச நாட்கள் கழித்து ப்ரீதியும் அனுவும் பேசிக் கொண்டிருந்தபோது இருவருமே அவர்களின் அம்மாக்களின் புத்திமதியைப் பற்றிப் பேச்சு வந்தது.

''எனக்கு அம்மா சொன்னது சரியாகத்தான் படறது. நீ என்ன நினைக்கிறே, ப்ரீதி?'' என்று கேட்டாள் அனு.

''ஆமாம் அனு, எப்படி யோசிச்சாலும் நம்ம வாழ்க்கையை நாமே தேடிக்கற அளவுக்கு நமக்கு ஏது பக்குவம்? அதுவும் நம்ம அம்மாக்கள் அவரவர் வாழ்க்கையைப் பற்றி இத்தனை தூரம் மனம் திறந்து காட்டினப்புறம், நாம இனிமே இன்னும் முழு மூச்சா படிச்சு அவங்களோட எதிர்பார்ப்புகளுக்குப் பாதகம் இல்லாமே நடந்துக்கறதுதான் சரி. நீ என்ன சொல்றே?'' என்றாள் ப்ரீதி.

''நீ சொல்றது நூத்துக்கு நூறு சரியா இருக்கும்போது நான் பேச என்ன இருக்கு? நானும் அதையேதான் நினைக்கிறேன். அவங்க நம்ம நல்லதுக்குத்தானே சொல்றாங்க? அதைப் புரிஞ்சிக்க நமக்கு சக்தி இல்லையா, என்ன?'' என்றாள் அனு.

அன்றிலிருந்து இருவரும் இன்னும் தீவிரமாக படிக்க ஆரம்பித்தார்கள். இருவரும் கற்பூர புத்திக்காரர்கள். ஆதலால் நன்றாகப் படித்து அவரவர் வகுப்பில் முதல் மாணவியாகத் திகழ்ந்தார்கள். தொடர்ந்த வருடங்களில் இருவருக்குமே ஸ்கூலில் நட்சத்திர அந்தஸ்துதான். ஆனால் எக்காரணம் கொண்டும் இருவரும் எந்த மாணவனையும், ஏன், வெளியிலேகூட எந்த ஆடவனையும் நெருங்கவே விடாமல் இருந்தார்கள். இல்லத்திற்கு அனு அடிக்கடி வருவாள். இருவரும் சேர்ந்து படிப்பார்கள். எப்போதாவது ப்ரீதியும் அனு வீட்டிற்கு போய் படிப்பாள்.

ஆயிற்று ஓடுகிற ஓட்டம் இருவரும் +2 வில் விருப்பப் பாடங்களை தேர்ந்தெடுக்கும் நேரம் வந்தது.

அனுபமா முதலிலிருந்தே தான் பிஸினஸ் மேனேஜ்மெண்ட்தான் படிக்கப் போவதாக உறுதியாகச் சொல்லிவிட்டாள். ப்ரீதி, தான் விஞ்ஞானத்தில் மேற்படிப்பு படித்து ஆராய்ச்சியும் செய்யணும் என்று சொல்லிவிட்டாள். பின்னே சம்பாதிக்க வேண்டாமா? என்று கேட்டதற்கு மேற்படிப்பு முடித்ததும் ஏதாவது ஒரு கல்லூரியில் விரிவுரையாளராகப் பணி செய்து கொண்டு ஆராய்ச்சி படிப்பு படித்துக் கொள்வேன் என்று சொல்லிவிட்டாள் இருவரும் மனம் ஒன்றி இஷ்டமானதைப் படித்தனர். தான் எம்.பி.ஏ. படித்தால்தான் அப்பா, அம்மா கம்பெனி, பிஸினஸ் போன்றவற்றைக் கவனித்துக் கொள்ள முடியும் என்று அனு அதைத் தேர்ந்தெடுத்தாள். ப்ரீதிக்கு ஆரம்பத்திலிருந்தே அம்மாவைப் போல் தானும் டீச்சராக வேண்டும் என்றுதான் ஆசை. தவிர ஆஸ்ரமத்தில் தன்னை விட சிறியவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து கொடுத்து அதில் ஒரு ஆர்வம் ஏற்கனவே இருந்தது. அவ்வப்போது சங்கீத வகுப்புகள் எடுக்கவும் அவள் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தாள்.

இப்போதெல்லாம் சரோஜினிக்கு ரொம்ப முடிவதில்லை. அவள்தான் முதல் முதலில் ப்ரீதியின் கல்யாணப் பேச்சை ஆரம்பித்தாள். படிப்பை முடித்துவிட்டுத்தான் கல்யாணம் என்று ப்ரீதி ஒரே அடியாக மறுத்துவிட்டாள். ''நீ பி.ஹெச்.டி செய்யவெல்லாம் ரொம்ப வருஷங்கள் ஆகும். அதுவரை என்னால் காத்திருக்க முடியாது'' என்று தன் பங்குக்கு கல்பனாவும் சொல்ல, கடைசியில் ப்ரீதி தான் எம்.எஸ்.சி முடித்து வேலைக்குச் சேர்ந்து ஒரு வருடம் வரை கண்டிப்பாக இவர்கள் இருவரும் கல்யாணம் பற்றியெல்லாம் பேசவே விடாது என்று சர்வ நிச்சயமாகச் சொல்லிவிட்டாள்.



இவர்களும் அவள் சொல்வதிலிருந்த நியாயத்தை புரிந்து கொண்டு மௌனமானார்கள்.

காலம் நின்ற இடத்தில் நிற்கிறதா என்ன? யாருடைய எந்த நிலைமையும் கவனிக்காமல் காலம் ஓடுவது உலகம் பிறந்த நாளாய் நடப்பதுதானே! இல்லத்தில் வயதானவர்களுக்கு சற்றே முடியாமை வர, புதிதாகச் சேர்ந்திருந்த பலபேர் பல வேலைகளைப் பகிர்ந்து கொண்டனர்.

கல்யாணம் ஆனதிலிருந்து ஐஸ்வர்யா மாதம் ஒரு முறையாவது இல்லத்திற்கு வந்து இவர்களைப் பார்த்து விட்டுப் போவதை வழக்கமாக வைத்திருந்தாள். அநேக வேளைகளில் காலையிலேயே அந்த இல்லத்தைத் தாண்டியிருக்கும் அவர்களுடைய பண்ணை வீட்டிற்குப் போகும்போது அவளை அவள் மாமனார் இறக்கிவிட்டு விட்டுப் போவார். சாயந்திரம் போகும் போது கூட்டிப் போய்விடுவார்.

முதல் மாதமே அவள் சரோஜினியிடம் ஒரு பெரிய தொகையை கொடுத்தபோது வாங்கிக் கொள்ளவே முடியாது என்று சரோஜினி தீவிரமாக மறுத்துவிட்டாள். 'என் மாமியார் கொடுக்கச் சொல்லித்தான் நான் இதைக் கொடுக்கிறேன்' என்று அவளும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். கேட்கவில்லை சரோஜினி. மறுமாதம் ஐஸ்வர்யாவின் மாமியாரே வந்து அந்தப் பணத்தை இரட்டிப்பாகக் கொடுத்தாள். கொடுத்துவிட்டு, ''அம்மா, நீங்கள் உங்களுடைய மொத்தப் பணத்தையும், சொத்தையும் இந்த இல்லத்தின் பராமரிப்புக்கே செலவழிச்சிருக்கீங்க. நாங்க எங்களுக்கு முடிஞ்ச கொஞ்சத்தை அனுப்பினால், நீங்க வாங்கிக்க மாட்டேன்னா எப்படிம்மா? தங்கம் மாதிரி ஒரு மருமகளை வளர்த்து எங்ககிட்டே

கொடுத்திருக்கீங்க. அவளும் எங்க பிள்ளையோட கிளினிக்லே அவனுக்கு சமமா உழைக்கிறா. அவளை இந்தப் படிப்பு படிக்க வெச்ச உங்களுக்கு ஏதாவது செய்ய ணும்னு அவளுக்கும் ஆசை இருக்கும் இல்லையா? தயவு செய்து வாங்கிக் கொண்டு எங்களை கௌரவிக் கணும்மா'' என்று கேட்ட போது சரோஜினியால் அதை மறுக்க முடியவில்லை.

மாதத்தில் ஒருநாள் ஐஸ்வர்யா வருவதும், தன்னால் முடிந்ததைக் கொடுப்பதும் வழக்கமாகிவிட்டது. காலை யிலிருந்து மாலைவரை எல்லோருடனும் ஆனந்தமாய் பொழுதைக் கழிப்பாள். மாலையில் யாராவது வந்து அவளைக் கூட்டிப் போவார்கள்.

அன்று வனிதா ப்ரீதி வந்ததும் ஸ்வீட் கொண்டுவந்து கொடுத்தாள். ''என்ன பெரியம்மா விசேஷம்?'' என்று கேட்டாள் ப்ரீதி.

''ஐஸ்வர்யா வந்திருக்காம்மா'' என்றாள் வனிதா.

''ஓ. அதுதான் ஸ்வீட்டா?''

''சும்மா இல்லே, அவ மாசமா இருக்காம்மா'' என்றாள் வனிதா.

''அப்படியா, இப்போ அக்கா எங்கே?''

''சரோஜினியம்மா ரூம்லே சித்தே தூங்கப் போயிருக் காம்மா, பாவம்! இந்த மாசங்கள்ல எல்லாம் தூக்கம் தூக்கமா வரும் இல்லையா?'' என்றாள்.

''சரி பெரியம்மா. அக்காவை இப்போ தொந்திரவு செய்ய வேண்டாம். அப்பறமா வாழ்த்துக்கள் சொல்லிட றேன்'' என்றாள் ப்ரீதி.

மாலையில் ஐஸ்வர்யா எழுந்ததும் அவளுக்குப் பிடித்தமான வெங்காய அடை செய்து கொடுத்தாள்



வனிதா. ஆனால் பாவம் ஒரு விள்ளல் சாப்பிட்டதுமே அவளுக்குக் குமட்டிக் கொண்டு வர வாந்தி எடுத்துவிட் டாள். சற்று நேரம் ஆயிற்று அவளுக்குத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள. திரும்ப சுருண்டு படுத்துக் கொள்ள, பாவம் வனிதா தவித்துப் போய் அவள் முதுகைத் தடவிக் கொடுத்து கன்னத்தில் லேசாக முத்தமிட்டாள். ஓஹோ! இப்படியெல்லாம்கூட கொஞ்சுவார்களா? இது கூட ஒரு சுகம்தான் போலிருக்கிறதே என்று தோன் றியது ப்ரீதிக்கு. அடுத்த முறை ஐஸ்வர்யா வந்த போதும் அவள் கர்ப்பிணி, ஒன்றும் சாப்பிடப்பிடிக்காமல் திண் டாடுகிறாள். பலஹீனமாக இருக்கிறாள் என்று எல்லோரும் அவளைத் தாங்கு தாங்கென்று தாங்க, சாயந்திரம் அவளை அழைத்துப் போகவந்திருந்த அவள் கணவர் ''அவள் இங்கேயாவது ஏதாவது சாப்பிட்டாளா, ஆன்ட்டி?'' என்று அக்கறையாகக் கேட்டார். பிறகு அவளைக் கைத் தாங்கலாக அழைத்துப் போய் காரில் ஏற்றினார். ஸீட் பெல்ட் போட்டுவிட்டார். பிறகு எல்லோரிடமும் விடை பெற்று காரைக் கிளப்பியபோது பார்த்துக் கொண்டிருந் தாள் ப்ரீதி. நாளைக்கு தனக்கும் கல்யாணம் ஆனால் தன் புருஷனும் இப்படித்தான் தன்னை அரவணைத்துப் பார்த்துக் கொள்வாரா? ப்ரீதிக்கு ஆவலும், லேசாக பொறாமையும் கூட எட்டிப் பார்த்தது.

ஐஸ்வர்யா வீட்டினரே அவளுக்கு வளைகாப்பு, பூச்சூட்டல் எல்லாம் செய்யப் போகிறார்களாம். அவள் பிரசவத்தைக்கூட அங்கேயேதான் வைத்துக் கொள்ளப் போகிறார்களாம் என்றெல்லாம் பெரியவர்கள் பேசிக் கொண்டார்கள். நமக்குக் கூட கணவன் வீடு இதேபோல் வாய்க்குமா என்று தோன்றியது ப்ரீதிக்கு ஒருதிமிடம்.

எதையுமே அனுவிடம் மறைத்துப் பழக்கமில்லாத அவள் தன் எண்ணங்கள் அனைத்தையும் அவளுடன் பகிர்ந்துகொண்டாள். ''நீ என்ன தீர்மானத்திற்கு வந்திருக்கே, அனு, கல்யாணம் பத்தி? மீரா ஆன்ட்டி எங்கம்மாவிடம் இதைப் பத்தி உன்னிடம் கேட்டிருப்பதாகச் சொன்னாளே'' என்றாள் ப்ரீதி.

''கல்யாணம் பண்ணிக்கலாம். ஆனா அதுக்கு முன்னாடி பிஸினஸ்ஸில் நான் சாதிக்க வேண்டியதெல்லாம் இருக்கு. அதை முடிச்சுட்டுத்தான் கல்யாணப் பேச்செல்லாம். பிஸினஸ் மேனேஜ்மென்ட்டில் மேற்படிப்பு படிக்க ஒரு கோர்ஸுக்கு அமெரிக்காவிலே மிச்சிகன் யூனிவர்சிட்டியில் அப்ளை பண்ணப் போறேன் 6 மாத கோர்ஸ்தான். அதை முடிச்சுட்டு, ஒரு வருஷம் பிஸினஸ்ஸைக் கவனிச்சுட்டு அப்புறம்தான் கல்யாணம் எல்லாம்'' என்றாள் அனு.

''ஸோ, உனக்கு இன்னும் கல்யாண ஆசை வரல்லியாக்கும்'' என்றாள் ப்ரீதி.

''இல்லை ப்ரீதி! என் மனசு பிஸினஸ் உலகத்திலே எனக்கென்று ஒரு இடம் பிடிக்கறதிலேதான் இருக்கு. ஆனா, நீ வேலைக்குப் போய்க்கூட இப்போ ஒரு 6, 7 மாசம் இருக்கும் இல்லே?'' என்று கேட்டாள் அனு.

''ஆமாம் அனு, நீ சொல்றது கரெக்ட்தான்'' என்றாள் ப்ரீதி. அவள் என்றைக்கும் முதல் மார்க் மாணவி இல்லையா? அதனால் அவள் எம்.எஸ்.சி எழுதி முடித்ததும் ரிஸல்ட்டுக்குக்கூடக் காத்திராமல் ஒரு நல்ல கல்லூரியில் அவளை விரிவுரையாளராகச் சேர்த்துக் கொண்டுவிட்டார்கள். தன் சம்பளத்தை வாங்கி சரோஜினியிடம்தான் கொடுப்பாள். அவள்தான் அதை கல்பனாவிடம் கொடுப்பாள். அதை அவள் வனிதாவிடம் கொடுப்பாள்.



அந்தப் பிரியமும் நன்றியுணர்வும்தான் அந்த இல்லத்தை பிரச்னையே இல்லாமல் நடத்தி வந்திருக்கிறது. பொறாமையும் வம்புப் பேச்சும் உள்ளவர்களும் அங்கு வராமலில்லை. எப்போது அந்த மாதிரி நடவடிக்கைகள் தென்பட்டாலும் எப்படியாவது அதற்குக் காரணமானவர்களை அங்கிருந்து அனுப்பி விடுவார்கள்.

''அப்போ அடுத்த தடவை அம்மா கேக்கும்போது சரி சொல்வாயா? இல்லேன்னா இப்பவே எனக்கு கல்யாணத்துக்கப் பாருங்கன்னு நீயே சொல்லிடுவியா?'' என்று கேட்டாள் அனு.

''நீ மொதல்லே சொன்னதுதான்'' என்று ப்ரீதி சொல்லவும் அனு அவள் கன்னத்தைக் கிள்ளினாள்.

''ஏய்! நான் இப்பவே போய் கல்பனா ஆன்ட்டியிடம் சொல்லி மாப்பிள்ளை பாக்கச் சொல்லவா?'' என்று அனு கேட்க,

'அடடா! உங்கிட்டே, மனசிலே இருக்கறதை சொன்னதே தப்பாயிடுத்தே!'' என்று செல்லமாக அலுத்துக்கொண்டாள் ப்ரீதி. பிறகு இருவரும் எழுந்து உள்ளே போனார்கள்.



## 48

கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம், அதிலும் ஒரு சுகம் இருக்கும் போலத்தான் தோன்றுகிறது என்று நினைத்த ப்ரீதி அனுவிடம் சொன்னது போலவே அடுத்தமுறை பேச்சு வரும்போது சும்மா இருந்துவிடலாம். சம்மதம் என்று தெரிந்துகொள்வார்கள் என்று காத்திருந்தாள். ஆனால் அடுத்தமுறை சரோஜினியும், கல்பனாவும் இவளிடம் சம்மதமே கேட்க

வில்லை வரன் பார்க்கப் போகிறோம் என்று தெரிவித்தார்கள் அவ்வளவுதான்.

அடுத்ததாக சரோஜினி அவளுக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் சொல்ல ஆரம்பித்தாள். ஐஸ்வர்யாவின் மாமியார், வக்கீல், டாக்டர் என்று எல்லோரிடமுமே சொல்லி வைத்திருந்தாள். ஆனால் இரண்டு மாதம் காத்திருந்தும் எங்கிருந்தும் பதில் இல்லை சரி, மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று ஆலோசித்து கல்பனாவும் சரோஜினியும் மணமகன் தேவை என்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்தார்கள்.

தெரிந்தவர்கள் மூலம் பேசியபோது ஒரு குடும்பம், வீடு என்று இல்லாமல் ஒரு மகளிர் இல்லத்தில் பிறந்து வளர்ந்தவள் என்பது முதலிலேயே தெரிந்து விட்டதால் தான் வரன் ஏதும் வரவில்லை என்று தெரியவந்தது. இல்லாவிட்டாலும் இது ஊகிக்க முடியாத விஷயமா என்ன? எல்லோருக்கும் ஐஸ்வர்யாவிற்கு அடித்தது போல் அதிர்ஷ்டம் அடிக்குமா?

செய்தித்தாள் விளம்பரத்தில் இவள் உயரம், நிறம், படிப்பு, வேலை பற்றி மட்டும் கொடுத்திருந்தார்கள். அவை எல்லாமே எல்லோருக்கும் பிடிக்கக்கூடியது தானே! அதனால் உடனேயே ஒவ்வொருவராகப் போன் செய்யத் துவங்கினார்கள்.

முதல் தடவை இந்த விஷயமாகப் பேசிய போதே கல்பனாவுக்கு அதிர்ச்சியாகிவிட்டது. அவர்கள் கேட்ட முதல் கேள்வி! உங்களுக்கு எந்த ஊர்? பெண்ணின் அப்பா என்ன வேலை பார்க்கிறார் என்பது. ஏதோ விளம்பரம் செய்துவிட்டார்களே தவிர என்னென்ன கேள்விகள் வரும் அதற்கு எப்படி பதில் சொல்லவேண்டும் என்றெல்லாம் யோசனை செய்து வைக்கவில்லை.



அவர்களின் பெண்ணின் அப்பா என்ன செய்கிறார் என்ற கேள்விக்கே கல்பனா வெலவெலத்துப் போய் போனை கட் செய்துவிட்டாள். போனில் பேசிய பெண்மணி திரும்ப தானே போன் செய்து "போன் கட்டாயிடுத்தம்மா. அதுதான் திரும்ப கூப்பிடுகிறேன். நீங்க உங்க கணவரை வரச் சொல்றீங்களா? விலாசம் தரேன்" என்றவள் விலாசம் கொடுத்து போனை வைத்துவிட்டாள்.

அடுத்து போன் பேசியவர் ஒரு பெரிய வேலையில் இருக்கும் அரசாங்க அதிகாரி. அவரும் "பெண்ணின் அப்பாவை வந்து எங்களைப் பார்க்கச் சொல்றீங்களா?" என்று கேட்டுவிட்டு விலாசம் தந்து போனை வைத்து விட்டார். பாவம், கல்பனா என்னதான் செய்வாள்? சரோஜினியிடம் போய் ஓவென்று அழுதுவிட்டாள்.

சரோஜினி "இதை நாம் முன்னாடியே யோசிச்சிருக்கணும். தப்பு பண்ணிட்டோம். இன்னிக்கு வர போன் காலையெல்லாம் எப்படியாவது சமாளிச்சுக்கோ. யார்கிட்டேயும் எதுவும் காண்பிச்சுக்காதே! நெகட்டிவா எதுவும் பேசிடாதே! விலாசம், போன் நெம்பர் சொன்னா வாங்கி வெச்சுக்கோ. சாயந்திரம் ப்ரீதியும் வரட்டும். அவளும் பெரிய பெண்தானே! அவ அபிப்ராயத்தையும் கேட்டு பிறகு முடிவெடுப்போம்! அநாவசியமா கலங்காதே. எந்தப் பிரச்னைக்கும் தீர்வு என்று ஒன்று நிச்சயம் உண்டு. போய் கவலைப் படாமே உன் வேலையைப் பார்" என்றாள் சரோஜினி.

சாயந்திரத்திற்குள் நான்கு, ஐந்து போன் அழைப்புகள் வந்தன. "பெண்ணோட அப்பாவைப் பேசச் சொல்றீங்களா, வரச் சொல்றீங்களா, அப்பா என்ன வேலை பார்க்கிறார்? அவருக்கு எத்தனை கூடப் பிறந்தவங்க? உங்க கூடப் பிறந்தவங்க எத்தனை பேர்?" என்று வரிசையாக

கேள்விமழைதான். இந்தக் கேள்விகளுக்கெல்லாம் இவளால் என்ன பதில் சொல்லமுடியும்? இடிந்துபோய் உட்கார்ந்துவிட்டாள்.

சாயந்திரம் ப்ரீதி வருவதற்குள் தான் மட்டும் சரோஜினியிடம் போனாள். "இன்னிக்கு நீ ஸ்கூலுக்குப் போகல்லியா, கல்யாணி?" என்று கேட்டாள் சரோஜினி.

"இல்லேம்மா, முதல் போன் வந்ததுமே தலைவலி வந்துடுத்து. சரி, நிறைய போனெல்லாம் வந்துண்டிருக்கே. அதனாலே மனசு வேறே எதிலும் ஒட்டல்லே. அதுதான் இன்னிக்கு லீவு போட்டுட்டேன். என்னம்மா, இத்தனை வருஷம் கழிச்சு இப்படியெல்லாம் கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டிய ε ட்டாயத்தில் நிக்கறேனே, எல்லாம் என் தலையெழுத்து" என்று கண்ணீர் சிந்தினாள் கல்பனா.

"முதல்லே கண்ணைத் துடைச்சுக்கோ. கவலையை விட்டுட்டு யோசனை பண்ணு. அப்பத்தான் இதுக்குத் தீர்வு கிடைக்கும்" என்று சரோஜினி சொல்லிக் கொண்டிருக்கையிலே அவளிடம் ஏதோ கேட்க வந்த வனிதா இவர்கள் ஏதோ ஸீரியஸான விவாதத்தில் இருப்பதைப் பார்த்து உடனடியாக திரும்பிப்போக யத்தனித்தாள்.

"வா வனிதா! உள்ளே வா. அப்படி ஒண்ணும் உனக்குத் தெரியக் கூடாத விஷயம் பேசல்லே, நாங்க" என்றாள் சரோஜினி. உள்ளே வந்த வனிதாவை உட்காரச் சொல்லி சோபாவில் இடம்கொடுத்தாள் கல்பனா.

"பாவம் இன்னிக்குக் கல்யாணி ரொம்பவே மனசு தளர்ந்துபோய் உட்கார்ந்திருக்கா, பாத்தியா" என்று கேட்டாள் சரோஜினி.

"போன் கால் விஷயம்தானே! என்ன பண்றது? இத்தனை வருஷம் கழித்து இப்படி ஒரு இக்கட்டான



சூழ்நிலை வந்துடுத்தே. பாவம் ரொம்ப மனமொடிஞ்சி தான் போயிருக்கா கல்யாணி" என்றாள் வனிதா.

"சரி, இதுக்கு ஒரு தீர்வு இருக்கு. சொல்லட்டுமா?" என்றாள் சரோஜினி.

"சொல்லுங்கம்மா நீங்கதான் எனக்கு சரியான வழியைக் காட்டணும்" என்றாள் கல்யாணி.

"பேசாம நிஜத்தை பிள்ளை வீட்டுக்காரங்ககிட்டே சொல்றதுதான் ஒரே வழி."

"என்னன்னு சொல்றது? அவர் ஆபீஸ் பணத்தைக் கையாடினதையா, ரௌடிகளோட சீட்டு விளையாடினதையா, போலீஸிடமிருந்து தப்பிக்கத்தான் அவர் ஓடிப் போனார்ங்கறதையா? எதையாவது சொல்ல முடியுமா? நிச்சயமா முடியாது. ஏன்னா அதுவே பிள்ளை வீட்டுக் காரங்களை விரட்டிடும்.

"சரி, காரணம் சொல்ல வேண்டாம். திடீர்னு எங்கேயோ போயிட்டார்னு சொல்லலாமே! இதுக்கு காரணமே தெரியல்லேன்னு சொல்லலாம், இல்லையா?" என்றாள் சரோஜினி.

"என்னக்கா சொல்றீங்க? அப்படிச் சொன்னா இவ மேலே என்ன தப்போ, அதான் வீட்டைவிட்டு ஓடியிருக்கார்ன்னு பேச்சு வராதா?" என்றாள் வனிதா.

"அதுவும் யோசிக்க வேண்டிய விஷயம்தான்" என்று சொன்ன சரோஜினி குறுக்கும் நெடுக்குமாய் நடந்தாள். "நீ ஒரு டைவர்சின்னு சொல்லிடலாமா, கல்யாணி?" என்றாள் திடீரென்று நினைத்துக் கொண்டவளாய்.

"அம்மா, நம் நாட்டிலே விவாகரத்தையெல்லாம் இன்னும் ஜனங்க சுலபமா எடுத்துக் கொள்ள பழகல்லே. அதனாலே உடனே "இந்தப் பெண்ணின் அம்மா

டைவர்சியாமே! எப்படிப்பட்டவளோ என்னவோ?ன்னு தான் பேச்சு எழும்'' என்று வனிதா இதற்கும் ஒரு பதில் சொல்ல, சரோஜினி பேசாமல் உட்கார்ந்துவிட்டாள்.

''இதற்கென்னதான் வழி? சரி, யோசிப்போம். நமக்கு ஏன் முன்னாலேயே இதெல்லாம் தோணவேயில்லே,'' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டவள், ''கல்யாணி, நீ எதுக்கும் பயப்படாதே! எல்லாம் நல்லதே நடக்கும். போய் வேலையைப் பார்'' என்றாள்.

ப்ரீதி அந்த நேரம் சரோஜினியைப் பார்க்க வந்தாள். வனிதாவும் கல்பனாவும் அங்கிருந்து கிளம்பிவிட ''வா ப்ரீதி! உட்கார்'' என்று அவளை வரவேற்றாள் சரோஜினி.

''என்னம்மா, இன்னிக்குப் பெரிய மீட்டிங்கா? எங்கம்மா ரொம்ப அழுதாளா?'' என்று கேட்டாள்.

'ஆமாம்மா, அதுக்காக நீ ஒண்ணும் கவலைப் படாதே! எல்லாம் நல்லதே நடக்கும். அம்மாவைப் பார்த்துக்கோ'' என்றாள் சரோஜினி.

''இல்லைம்மா, எங்கம்மாவைப் பாத்துக்கறது மட்டு மில்லை பிரச்னை. இந்த கேள்வியெல்லாம் கேட்காமே யார் என்னைக் கல்யாணம் பண்ணிக்க வரப் போறாங்க? இதற்குத் தீர்வுதான் என்ன?'' என்று படபடத்தாள்.

''நானும் நாலையும் யோசிச்சுட்டேன். இதுக்கு ஒரே ஒரு தீர்வுதான் இருக்கு.''

''சொல்லுங்க.''

''ஆனா அது அவ்வளவு சுலபமில்லை.''

''ஏன்?'

''உங்கம்மா ஒத்துக்க மாட்டாள்.''

''என்ன சொல்றீங்கம்மா?''

''இப்படிச் சொல்ல எனக்கே ரொம்ப கஷ்டமாக இருக்கு. பேசாமே உங்கம்மா தன் கணவன் உயிரோடேயே



இல்லேன்னு சொல்லிவிட்டுப் போயிடலாம். அதை ஏத்துக்க யாருக்கும் பெரிய ஆட்சேபணை இருக்காது. வேறே வழியும் தெரியல்லேம்மா.''

''அம்மா ஏத்துக்கறதா? எப்படி இப்படி ஒரு யோசனையைச் சொன்னீங்கம்மா? எனக்கே மனசு தாங்கலியே! இந்த யோசனையைத் தள்ளிடுங்க. இது வேண்டாம். ஆகிறபோது ஆகட்டும் என் கல்யாணம். வேண்டாம்மா, அம்மாகிட்டே தவறிப் போய்கூட இதை சொல்லிடாதீங் கம்மா'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போய்விட்டாள்.

''இள ரத்தம் கொதிக்கிறது'' என்று நினைத்துக் கொண்டாள் சரோஜினி.



## 49

அடுத்த முறை மீரா சென்னை வந்தபோது சரோஜினி அவளைக் கல்பனா இல்லாதபோது வரச்சொல்லி சந்தித்தாள். மீரா அப்படியெல்லாம் மென்மையான மனசுக்காரி இல்லை என்பதால் இதை அமைதியாகக் கேட்டுக் கொண்டாள்.

''இதற்கு ப்ரீதி இத்தனை ஸீரியசாகப் போக வேண்டியதில்லை. கல்யாணி ஒத்துக் கொள்ள மாட்டாள்தான். ஆனா நான் பேசிப்பார்க்கிறேன்'' என்றாள்.

கல்பனாவும், மீராவும் அன்று பேசிக் கொண்டிருந்த போது ''கல்பனா, ப்ரீதிக்கு 25 வயதுக்குமேல் ஆகிவிட்டது. இல்லையா? அனுவானால் அமெரிக்க போய் மேற் படிப்பு படிச்சு முடிச்சிட்டுத்தான் கல்யாணம்ங்கறதுலே தீவிரமா இருக்கா. ஆனா ப்ரீதி கல்யாணத்துக்குச் சம் மதிச்சுட்டதனால, காலாகாலத்திலே பார்த்து பண்ணிட்டாத் தேவலை, இல்லையா?''

''நானும் அப்படித்தான் நினைக்கிறேன் மீரா! நான் நினைச்சா ஆயிடுத்தா? இத்தனை வருஷமா இல்லாமல் இப்போ அவள் அப்பா பத்திய பிரச்னை பூதமா தலை தூக்கியிருக்கே. அதான் நினைச்சு நினைச்சு வேதனை பட்டுண்டிருக்கேன்'' என்றாள் கல்பனா.

''வேதனைப் பட்டு மட்டும் லாபம் உண்டா? ஏதாவது ஒரு தீர்வு கண்டுபிடிக்கணும். அதுதான் புத்திசாலித் தனம்.''

''நீதான் சொல்லேன் ஒரு தீர்வு. முன்னப்போனா கடிக்குது, பின்னேவந்தா உதைக்குது இந்தப் பிரச்னை.''

''நீங்க பேசினதையெல்லாம் சொன்னாங்க, சரோஜினி ஆன்ட்டி. ஆமா, உனக்கு அவங்க மேலே நம்பிக்கைங் கறது எவ்வளவு சதவிகிதம், சொல்லு!''

''இதென்ன கேள்வி மீரா? எனக்கு அவங்க மேலே 200% நம்பிக்கை உண்டு. அவங்க இல்லேன்னா நான் இல்லை. இன்னிக்கு நான் ஒரு மனுஷியா நடமாட றேன்னா அதுக்கு அவங்கதான் காரணம். நான் கும்பிடற தெய்வம் எங்கேயும் இல்லை, இந்த இல்லத்தில்தான் இருக்கு'' என்றாள் உணர்ச்சிகரமாக.

''அப்படீன்னா அவங்க சொன்ன ஆலோசனையை நான் தைரியமா சொல்லலாம். நீ உன் கணவனை விட் டுட்டு வந்து 25 வருஷம் ஆச்சில்லே.''

''ஆமாம் மீரா! ஓட்டியாச்சு இத்தனை வருஷங்களை.''

''அப்படின்னா அவர் இப்போ இல்லைன்னு சொல் விட்டா பிரச்னை தீர்ந்துடும், இல்லே?''

இதைக் கேட்டதும் கல்பனாவின் கண்களில் மளமள வென்று கண்ணீர் பெருகியது.

''மீரா, நீ நிஜமாகவே என் தோழி தானா? எனக்குச் சந்தேகமா இருக்கு'' என்று சொன்னவள் அப்படியே தேம்பிவிட்டாள்.



ஆறுதலாக அவள் கன்னத்தை வருடிய மீரா ''இப்போ நான் என்ன சொல்லிட்டேன்னு நீ இப்படி அழ ஆரம்பிச் சுட்டே'' என்று கேட்டாள்.

உதடுகள் துடிக்க, ''மீரா நான் என்னிக்கோ சொன்ன விஷயம் தான். தீர்மானம் பண்ணின விஷயம் தான். உனக்கும் தெரியும். நான் திரும்பவும் சொல்றேன். எனக்கு என் கணவர் மேலே கோபமே வரல்லே, வெறுப்பும் வரல்லே. அப்படியிருக்கச்சே அவர் இல்லைன்னு ஒரு வார்த்தை சொல்லுங்கறே. அதைச் சொன்னா நான் உயிரையே விட்டுடுவேன். அவர் எங்கே இருந்தாலும் நல்லா இருக்கணும்ங்கறதுதான் என்னோட பிரார்த்தனை. நீ இன்னோருதரம் அப்படிச் சொல்லக் கூடாது நீ அப்படி நினைக்கிறேங்கறது கூட என்னை ரொம்பவும் துன்புறுத் தறது. அந்த வார்த்தை இன்னொருதடவை உன் வாயி லிருந்து வரவே கூடாது. ப்ளீஸ் மீரா! தயவு செய்து என் னைப் புரிஞ்சிக்கோ'' என்றவள் ஹோவென்று கதறிவிட் டாள்.

''ஸாரி, கல்யாணி, வெரி ஸாரி! உன் மனசு இத்தனை வேதனைப் படுமானா நான் இனிமே அப்படிச் சொல்ல மாட்டேன். என்னை மன்னிச்சுக்கோ'' என்றாள் மீரா.

அதன் பிறகு மீரா, ப்ரீதியிடம் பேசிப் பார்க்குமாறு தன் மகள் அனுவிடம் சொன்னாள்.

அனுவிற்கேகூட ரொம்ப நாட்களாக இந்தப் பிரச்னைக் குத் தீர்வு இதுதான் என்று தோன்றிக் கொண்டே இருந்த தால், அடுத்த நாளே ப்ரீதியைப் பார்க்க இல்லத்திற்கு வந்தாள்.

''என்ன ப்ரீதி, உன் கல்யாண விஷயம் எந்த மட்டில் இருக்கிறது?'' என்று கேட்டாள் அனு.

''ப்ச,'' என்று சூள் கொட்டினாள் ப்ரீதி ''ஏண்டாப்பா கல்யாணம் பண்ணிக்க சம்மதம்னு சொன்னோம்னு இப்போ எரிச்சலா இருக்கு'' என்றாள் வெறுப்பாக.

''இந்த விஷயம் ஆரம்பிச்சதிலிருந்து அம்மா முகத்தைப் பார்க்கவே சகிக்கல்லே. நீயே சொல்லு, அனு! என் அம்மாவைக் கல்யாணம் பண்ணிண்டவர் ஆரம்பத்தி லிருந்தே எங்க கூட இல்லை. ஆனா அம்மா என்னை வளர்த்ததிலே என்ன குறைச்சல்? நல்ல துணிமணி வாங் கித்தரலியா, படிக்க வைக்கலியா, பாட்டு சொல்லித் தரலியா? எதுலே குறைச்சல்? கல்யாணம் மட்டும் அம்மாவாலே பண்ணிக் கொடுக்க முடியாதா? இதுக்கு ஒரு அப்பா வேணுமா? என் படிப்பு, தோற்றம், வேலை இதெல்லாம் வெச்சு முடிவு பண்ண முடியாதா? என்னடி உலகம் இது? ஒத்தொத்தரா அம்மாவை, அப்பாவை வந்து பேசச் சொல்லு, அப்பா எங்கே இருக்கார், அவர் என்ன வேலை பண்ணறார்? அப்படின்னே கேக்கறா. இதே கேள்விகளால் அம்மா நொந்து போயிட்டா! அவ முகத்தை நிமிர்ந்து பாக்கவே கஷ்டமா இருக்கு. போன் மணி அடிச்சாலே பயமா இருக்கு, ச்சே!'' என்றாள் ப்ரீதி.

''ஏய், நீ சின்ன வயசிலே உங்கம்மாவை அப்பா எங்கேன்னு கேட்டு நச்சரிச்சு அழவிட்டிருக்கேன்னு நீயே சொல்லியிருக்கே.''

''இந்தா, நான் அறியாத வயசிலே கேட்டதுக்கும், இப்போ யார்யாரோ சம்பந்தமில்லாதவங்கள் எல்லாம் அம்மா மனதை நோக அடிக்கறதுக்கும் வித்தியாசமில் லையா? அனு, ரொம்ப சின்ன வயசிலே கேட்பேன். அம்மாவோ, வனிதா பெரியம்மாவோ பேச்சை மாத்திடு வாங்க. அப்புறமெல்லாம் இதைக் கேட்டாலே அம்மா



அழறான்னு கேள்வி கேக்கறதையே விட்டுட்டேன். அப்பறம் அம்மாவே சொல்லிட்டாளே எல்லாத்தையும். அதுக்கப்பறமெல்லாம் நான் மனசிலேயே புழுங்குவேனே தவிர அம்மா கிட்டே ஒண்ணும் கேக்கமாட்டேன்.

உனக்கொண்ணு தெரியுமா, அனு! அம்மா எப்பவுமே எல்லா பண்டிகையையும் கொண்டாடிவா. வருஷா வருஷம் மார்ச் மாதத்திலே வர சாவித்திரி நோன்பு பண்டிகையை நினைச்சாலே எனக்கு ரொம்ப பயமா இருக்கும். அந்த நோம்பிலே சரடு கட்டிக்கிட்டு ''உருக்காத வெண்ணை யும், ஓர் அடையும் நான் நோற்றேன். ஒருக்காலும் என் கணவன் என்னைப் பிரியாதிருக்க வேணும்னு சொல்லி அந்த சரட்டைக் கட்டிக்கணும். பாவம் வனிதா பெரியம் மாவிற்கு மலையாளப் பக்கம் சொந்த ஊர். அதனாலே இதெல்லாம் தெரியாது. அம்மா இதைச் சொல்லிவிட்டு சாமி முன்னாடி ரொம்ப அழுவா. அதனால் கொஞ்சம் பெரியவளாக ஆனதும் நானே நினைவில் வெச்சிண்டு அதைச் சொல்லுவேன். அம்மா மனசுக்குள்ளதான் சொல லிப்பாளாயிருக்கும். அவளை யாரும் எதுவும் கேட்க விடாமே சரோஜினி அம்மாவும் அப்படிப் பொத்திப் பொத்தி பாத்துப்பா. இப்ப பாரு! எனக்கு கல்யாணம் பண்ணி வைக்கணும்னு எல்லாக் கேள்விகளையும் கேட்டுக் கூனிக் குறுகிப் போறா'' என்று துக்கம் தொண டையை அடைக்கக் கூறிமுடித்தாள் ப்ரீதி.

''ப்ரீதி நான் உங்கிட்டே என்னவோ சொல்லணும்னு திட்டம் போட்டு உன்னை இங்கே தனியா அழைச் சிண்டு வந்தேன். இப்ப பேசவே பயமா இருக்கு'' என்றாள் அனு.

''ஏய், என்ன சொல்ல வந்தே, எதுக்கு பயம்?''

''இல்லே ப்ரீதி! உன் உணர்ச்சிகள் தெரிஞ்சபின் நான் என்னன்னு சொல்றது?''

''நீ என்ன நினைக்கறியோ அதைச் சொல்லேண்டி, நமக்குள்ள என்ன தயக்கம்?''

சற்று நேரம் சும்மா இருந்த அனு. ''ப்ரீதி! நான் என்ன சொல்ல வந்தேன் தெரியுமா? இத்தனை அவஸ்தை என்னத்துக்கு? பேசாம அப்பா இப்போ உயிரோடு இல்லைன்னு சொல்லிட்டா, மேற்கொண்டு கேள்விகளே வராதில்லையா? அதைத்தான் சொல்ல நினைச்சேன்.''

காதைப் பொத்திக் கொண்டாள் ப்ரீதி. ''அனு, நிறுத்து அனு! எனக்கே இதைக் கேட்கப் பிடிக்கல்லே. அம்மா கேட்டுருந்தா 'அப்பா உயிரோடு இல்லைன்னு சொல்லணுமா? அதுக்குப் பதிலா நானே உயிரை விடறேன்'னு உயிரை விட்டுருப்பா. உனக்கே உன் பேச்சு குரூரமாத் தோணலியா அனு?'' என்று கத்திவிட்டாள் ப்ரீதி.

''இல்லை ப்ரீதி! உணர்ச்சிவசப் படாமல் யோசி! உங்கம்மா டைவர்சின்னு சொல்லக் கூடாது. அதுனாலே உனக்கு கல்யாணம் ஆகாது. ஓடிப்போனதுக்குக் காரணம் சொன்னா ஒழுக்கமில்லாதவர் குழந்தைன்னு கல்யாணம் ஆகாது. ஓடிப் போன காரணம் தெரியாதுன்னு சொன்னா இவள் என்ன பண்ணினாளோன்னு உங்கம்மாவை பழிப்பாங்க. உனக்கு கல்யாணமே ஆகாது. பின்னே இதுக்குத் தீர்வுதான் என்ன? நீயே சொல்லு! அதனால் தான் இப்படி ஒரு யோசனையைச் சொல்லத் துணிஞ்சேன்'' என்றாள் அனு.

''போதும் அனு, போதும்! இப்ப எங்கம்மாவை விதவை கோலத்தில் வேறு நான் பார்க்கணும்ா?''

''ஏய், மண்டு மாதிரி பேசாதே! நாம இப்போ எந்த நூற்றாண்டிலே இருக்கோம்? ஒரு பொண்ணை விதவைன்னு வெள்ளைப் புடவை கட்டி பொட்டில்லாமே, பூவில்லாமே மூலைலே உட்கார்த்தி வைக்கிற காலத்திலா இருக்கோம்? கணவனை இழந்த யாரும் இப்போதெல்லாம் சாதாரணமாக அவங்க பண்ணிக்கற எதையும் மாத்திக்கறதில்லே. உங்கம்மா இப்ப மட்டும் ஆடம்பரமா டிரெஸ் பண்ணிக்கறாங்களா, என்ன?''



''இதோ பார், அனு! இந்தக் கதையெல்லாம் வேண்டவே வேண்டாம். அம்மா கழுத்திலே ஒரு திருமாங்கல்யம் போட்டுண்டு திருப்தியா இருக்கா. அவள் தாலியை அவிழ்க்கவெச்சுத்தான் என் கழுத்திலே தாலி ஏறணும்னா எனக்கு அந்தக் கல்யாணம் வேண்டவே வேண்டாம்'' என்றாள்.

இதற்குமேல் இப்படி முரண்டு பிடிப்பவளிடம் என்ன பேசுவது என்று தெரியாமல் அதோடு விட்டுவிட்டாள் அனு. கொஞ்ச நேரம் தோழிகள் இருவரும் சும்மாவே உட்கார்ந்திருந்தார்கள்.

''சரி, நீ ஊருக்குப் போகும் ஏற்பாடெல்லாம் எந்த மட்டும் ஆகியிருக்கிறது, அனு?'' என்று கேட்டாள் ப்ரீதி.

''ஆயிண்டே இருக்கு. உன் கல்யாணம் சீக்கிரம் நிச்சயமானால் விருந்தெல்லாம் சாப்பிட்டுவிட்டு சந்தோஷமாக கிளம்புவேன்'' என்றாள் அனு.

''அது ஆறபோது ஆகட்டும்'' என்ற ப்ரீதி, ''ஏய், மறந்தே போயிட்டேன். உன் போட்டோ ஒண்ணு வேணும், அனு'' என்றாள்.

''அடுத்தவாரக் கடைசியிலே சென்னையில்தான் இருப்பேன். கொண்டு வரேன்.''

''மறக்காமே கொண்டு வா, அனு!'' என்றாள் ப்ரீதி.




அவர்கள் வீட்டின் வாசலிலிருந்த கயிற்றுக் கட்டிலில் மல்லாந்து படுத்துக் கிடந்தாள் ப்ரீதி. அவளுக்கு ரொம்ப பிடித்த இடம் இந்த வேப்ப மரத்தடி. எவ்வளவு வெய்யிலில் வந்து படுத்துக் கொண்டாலும் அதன் அடி நிழல் ஊட்டிதான், கொடைக்கானல்தான். படுத்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தால் மரங்களின் ஊடே தெரியும் ஆகாயம் ஒவ்வொரு இடத்தில் ஒவ்வோரு அழகாயிருக்கும். பக்கத்திலேயே இருக்கும் மல்லிகைச் செடியில் எப்படியும் நான்கு, ஐந்து பூக்கள் பாக்கியிருக்கும் அதன் சுகந்தமே ஆனந்தம்தான். பறவைகள் கிரீச், கிரீச் என்று கத்தினாலும் அது தொந்திரவு என்று தோன்றாது. அங்கு நிம்மதியாகப் படுக்கும்போதெல்லாம் தோன்றும் எண்ணம் இதுதான். அம்மா வாழ்க்கையில் நடந்த துன்பத்திற்கு நடுவே இந்த இடம், அதுவும் சொந்தமாகவே ஆகிப்போன இந்த இடம்தான் சொர்க்கம்,

சரோஜினி அம்மாதான் தெய்வம் என்றும், அவளை நன்றாகக் கடைசி காலம்வரை பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் நினைத்துக் கொள்வாள். இப்படியெல்லாம் எண்ணிக்கொண்டே பக்கத்தில் கிடந்த அன்றைய தினசரிப் பேப்பரைக் கையிலெடுத்தாள். ஆனால் ஒரு அட்சரம் கூட மனதில் ஒட்டவில்லை.

பின்னால் ஏதோ சப்தம் கேட்டது போலிருந்தது. ஜன்னலைச் சாத்தவில்லையோ, பூனை சமையலறையில் புகுந்துவிட்டதோ என்று எண்ணிக்கொண்டு எழுந்து உள்ளே போனாள். ஜன்னல் சாத்திதான் இருந்தது. மேடையில் கல்பனா எல்லா பதார்த்தங்களையும்,



இத்தனை வருத்தம், மனக் கஷ்டத்திலும் சமைத்து அழகாக மூடி வைத்திருந்தாள். பாவம் அம்மா என்று தோன்றியது. ச்சே, நாம் ஏன் அப்படி பொறுமை இழந்து கத்தினோம் என்று தோன்றியது. திரும்பப்போய் கட்டிலில் படுத்துக் கொண்டு அன்று காலையிலிருந்து நடைபெற்ற சம்பவங்களை மனதிற்குள் அசை போடத் துவங்கினாள்.

அன்று அனு வருவதாகச் சொன்னது நினைவுக்கு வந்தது. அவளை மாதிரித் தானும் தன் ஆராய்ச்சி முடிந்துதான் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியும் என்று சொல்லாமல் சற்று சபலப் பட்டுவிட்டோமோ என்று நினைத்துக் கொண்டாள். அதற்குள் அனுபமா வந்துவிட்டாள். அவளைப் பார்த்ததும் எழுந்த இவள் முகத்தின் கலக்கத்தைப் பார்த்த அனு பயந்தே போனாள். "என்ன ஆச்சு, ப்ரீதி?" என்று கேட்டாள்.

"புதுசா ஆறதுக்கு என்ன இருக்கு, அனு? எப்பவும் ஆறதுதான்" என்று அலுப்பாகச் சொன்னாள்.

"சரி, இன்னிக்கும் உன் அம்மாவை யாரோ போனில் ஏதோ பேசி அழவிட்டாங்களாக்கும்."

"ஆமா, அனு! எனக்கு எங்கேயாவது போயிடலாம்னு தோணறது. 'நீ வரன் ஒண்ணும் பார்க்க வேண்டாம், நிறுத்து. கல்யாணம் என்கிறது ஆறபோது ஆகட்டும்'னு இன்னிக்கு வந்த எரிச்சல்லே சொல்லிட்டேன்" என்றாள் ப்ரீதி.

"என்ன ஆச்சும்மா, நீயே இத்தனை கலக்கமும் பதட்டமுமா இருக்கே, அப்ப ஆன்ட்டி எப்படியிருப்பாங்க? பாவம். ஆமா, வனிதா ஆன்ட்டி இல்லையா என்ன?"

"நீ போனதரம் வந்தே பாரு! அதற்கப்புறம் வனிதா ஆன்ட்டி அவங்களுக்குப் பரிச்சயமான யாரோ

கேரளாவுக்கு டூர் போறாங்கன்னு கிளம்பிப் போனாங்க. வர 15 நாட்கள் ஆகும். 35 கோவிலுக்கோ, 40 கோவிலுக்கோ கூட்டிப் போறாங்கன்னு போயிருக்காங்க. புறப்படறச்சே ''அம்மாவை பத்திரமா பாத்துக்கோ, ப்ரீதி! உன் கல்யாணப் பேச்சு ஆரம்பிச்சதிலிருந்து அம்மா பாவம் வருத்தமாத்தான் இருக்காங்க. 'எனக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம் இல்லாட்டா, நான் இப்ப போகமாட்டேன்''னு சொல்லிட்டுத்தான் போனாங்க. யார் இருந்தாலும் போனாலும் அவங்க அவங்க துக்கம் அவங்க அவங்களுக்கு. இல்லையா அனு?''

''ஏய், என்னடி புதிர் போடறே இன்னிக்குப் புதுசா என்ன நடந்தது? கொஞ்சம் விவரமாகத்தான் சொல்லேன்.''

''சொல்றேன். எனக்கும் இதை உங்கிட்டே கொட்டினாத்தான் மனசு ஆறும்னு தோணித்து. போன மாதம் ஒரு ஆங்கிலப் பேப்பரிலே போட்டு கொஞ்சம் பிள்ளையை பெத்தவங்ககிட்டே வாங்கிக் கட்டிண்டது போதாதுன்னுட்டு இந்த மாதம் ஒரு பிரபல தமிழ் பத்திரிகையில் மணமகன் தேவைன்னு விளம்பரம் பண்ணியிருக்காங்க. அதற்கான தலைவலி இன்னிலேர்ந்து ஆரம்பம் அம்மாவுக்கும் சரோஜினியம்மாவுக்கும்.

காலங்கார்த்தாலே எழுந்து நான் பல் தேய்க்கும் போதே போன் மணி அடிச்சது. அம்மாதான் எடுத்தாள் பாவம். போனை எடுக்கும்போது கைகூப்பி ஸ்லோகம் எல்லாம் சொல்லிட்டுத்தான் எடுத்தாங்க. பேசியவங்க என்ன கேட்டாங்களோ. தெரியல்லே அம்மா முகம் சுண்டிப் போய் போனை வெச்சுட்டாங்க. அடுத்து வந்த போன் காலை அம்மா எடுக்கும்போதே நான் ஸ்பீக்கர்லே போட்டேன். ஏதாவது அத்து மீறிப் பேசினா, சூடாகப் பதில் சொல்லலாம்னு. அதுக்குள்ளே அம்மா என்னைப்



பார்த்து. ''ப்ளீஸ் நீ நடுவிலே ஒண்ணும் பேசிடாதேன்னு சொல்லிட்டுத்தான் போனை எடுத்தாங்க.

முதல் கேள்வியே. ''பொண்ணோட அப்பா எங்கே வேலை பார்க்கிறார்''ன்னு கேட்டாங்க. அம்மாவோட பதிலுக்குக் காத்திராமல் ''அவரும் நீங்களுமா எங்க வீட்டுக்கு வாங்கோ. நேரிலே எல்லாம் பேசிக்கலாம்'' என்றாள்.

''இல்லை அவர் வரது கஷ்டம்'' என்றாள் அம்மா.

''ஏன் வெளியூர் போயிருக்காரா? அவர் வந்ததும் வாங்களேன். அவர் எப்போ வரார்?''

''இல்லை, அவர் எங்களோட இல்லை.''

''இல்லைன்னா, வேறே கல்யாணம் பண்ணிண்டுட்டாரா?''

''தெரியாது. நான் இப்போதைக்கு அவரைப் பார்க்கவேயில்லை.''

''ஓ. நீங்க டைவர்சியா? அப்படீன்னா நாங்க கொஞ்சம் யோசிக்கணும்.''

''இல்லையில்ல, அப்படியில்லை.''

''அதுவும் இல்லைன்னா, உங்க கல்யாண வாழ்க்கையைப் பத்தி நாங்க என்னதான் நினைக்கறது''னு சொல்லிட்டு போனை வெச்சுட்டாள். ஒரு கால் மணிநேரம் கழித்து அடுத்த போன்.'' ''நான் எடுக்கட்டுமா''ன்னேன். ''வேண்டாம் நீ என்னை டென்ஷன் பண்ணாதே''ன்னுட்டா அம்மா. ஆனாலும் போனை ஸ்பீக்கர்லே போட்டேன். இந்த முறை பேசியது ஒரு ஆண். அவர் சம்பாஷணையிலும் அப்பாவைப் பத்தி இதே கேள்விகள். அம்மாவின் அதே பதில்கள். கடைசியாக அவர் ''உங்க கணவர் உயிரோட இருக்காரா இல்லையா?'' என்று

கேட்டதும் அம்மா "எதுக்கு இப்படியெல்லாம் பேசறீங்க சார்"ன்னு கேட்டுட்டே போனை வெச்சுட்டாள்.

அழுதுண்டே உள்ளே போன அம்மா, கொஞ்ச நேரம் கழித்து முகம் அலம்பி தன் வேலைகளை மொத்தமும் பார்த்தாள். நாங்க இரண்டுபேரும் பேசிக்கவே இல்லை. கிட்டத்தட்ட அம்மா ஸ்கூலுக்குக் கிளம்பற வேளை, போன் திரும்ப அடித்தது. "நான் எடுக்கறேம்மா" என்றேன். அம்மா விடவில்லை. தானே எடுத்தாள்.

இந்த முறை பேசினது பையனுடைய பாட்டி, நீட்டி முழக்கி "நீதான் பொண்ணோட அம்மாவா? நீயும் வேலை பாக்கறியா?" என்று ஆரம்பிச்சு கொஞ்ச நேரம் வேறே கேள்விகள் கேட்டுட்டு, "உங்க ஆத்துக்காரர் என்ன பண்றார்?ன்னு அதே டாப்பிக்குக்கு வந்தாள். அம்மா சொன்ன பதிலிலெல்லாம் திருப்தி ஆகாமே அந்த மாமி "ஏம்மா, அவரை பத்தின கேள்வி எதுக்குமே சரியா பதில் சொல்லவே இல்லையே நீ? இது முக்கிய மில்லையா? இதெல்லாம் தெரிஞ்சிக்காம நாங்க மேலே எப்படிப் பேசறது?" என்றாள்.

அதற்குள் அவளுக்குப் பிள்ளையாக இருக்க வேண்டும் அவர் அந்தம்மாளிடம், "போனை வைய் யம்மா, அந்த அம்மா கல்யாணம் ஆகாமே பிள்ளை பெத்துண்டாளோ என்னவோ வெச்சுத்தொலை. நம்ம லிஸ்ட்லே இருக்கிற அடுத்த நம்பருக்குப் போன் பண்ணு"ன்னார். அவர் சொன்னது நன்னாவே காதில் விழுந்தது. அம்மா போனை வைக்கறதுக்கு முன்னாடி நான் போனை வாங்கி "ஏன் சார்! கொஞ்சம் கூட நாகரிகம் இல்லாமே பேசறீங்களே"னு கேட்டுட்டேன். "ஆமா, ரொம்ப நாகரிகமான குடும்பம்தான் உங்களுடை



யது. கோபத்தைப் பார், வையம்மா போனை" என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டார்.

அம்மா ரொம்ப அழுதுட்டா. நான் அம்மாகிட்டே போய், "போதும்மா நீ எனக்கு வரன் பார்த்தது. கல்யாணம் ஆகணும்னு என் தலைலே எழுதியிருந்தா கண்டிப்பா ஒருநாள் நடக்கும். இப்படி நீ தினம் தினம் அழறதைப் பார்த்துப் பார்த்து மனசு ரொம்பவே வெறுத்துப் போயிடுத்து. இனிமே யாராவது இது சம்பந்தமா பேசினா போனைக் கட் பண்ணிடு" அப்படீன்னேன்.

"பேசாமே நீ யாரையாவது காதலிச்சிருந்தாக்கூட அழகா கல்யாணம் பண்ணி வெச்சுருப்பேன் இதுக் குள்ளே" என்றாள் அம்மா அழுகையினூடே.

எனக்கு ரொம்ப கோபம் வந்துடுத்து அதைக் கேட்ட தும். "ரொம்ப அழகாச் சொல்றேம்மா! ஒரு அம்மாவா, ஆசிரியையா," எப்பவும் போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்தாமட்டும் போதாது. போற வழியும் சரியா இருக்கணும்னு எத்தனை தடவை சொல்லியிருப்பே? அது இருக்கட்டும். எனக்கு 14 வயசு இருக்கும் போதே என்னை உட்கார்த்தி வெச்சு எந்தக் காரணம் கொண்டும் எந்த ஆம்பிள்ளையையும் பக்கத்திலே நெருங்க விடா தேன்னு சொன்ன அம்மாவா நீ?"ன்னு நன்னா உறைக் கிற மாதிரி கேட்டுட்டேன். அம்மா ஒண்ணுமே சொல் லாமே அடுத்த 10 நிமிஷத்திலே ஸ்கூலுக்குக் கிளம் பிட்டா" என்று முடித்தாள் ப்ரீதி.

"இப்போ மனசு கிடந்து அடிச்சிக்கிறதாக்கும் அம்மாவை அப்படி பேசிட்டோமேன்னு" என்று கேட்டாள் அனு.

"ஆமாம் அனு! நான் இத்தனை வருஷத்திலே அம்மா கிட்டே இப்படிக் கோபப்பட்டுப் பேசினதேயில்லை.

இன்னிக்கு எது என்னை இப்படிப் பேச வெச்சதுன்னு தெரியல்லே'' என்றாள் சோகத்துடன்.

''உனக்குத் தெரியாட்டா என்ன, எனக்குத் தெரியுமே!'' என்ற அனு, அவள் பதிலுக்குக் காத்திராமல் மேலே தொடர்ந்தாள். ''உன் மனசுக்குள்ளே நாம கல்யாணத்துக்கு சம்மதிச்சதே தப்போன்னு ஒரு எண்ணம். அதுக்கு நமக்குள்ளே இருக்கிற கல்யாண ஆசைதானே காரணம்னு ஒரு குற்ற உணர்ச்சி. நான் சொல்லட்டுமா? கல்யாண ஆசை வந்தது ஒண்ணும் கொலைக் குத்தம் இல்லையே? இந்த வயசிலே வரதுதானே எல்லோருக்கும். அவங்க கேட்டாங்க, நீ சரின்னே, இப்போ என்ன, கொஞ்சம் பொறுமை தேவை. எல்லாம் தன்னாலே சரியாயிடும். சரி வா! நீ ஒண்ணும் சாப்பிட்டுருக்க மாட்டேன்னு தெரியும். எனக்கும் பசிக்கறது வா, சாப்பிடலாம்.''

''போ, அனு! எனக்கு எல்லாமே வெறுப்பாயிருக்கு. நீ சாப்பிடு, எனக்குப் பசியில்லை.''

''சரி, சரி, சும்மா பிகு பண்ணாதே! ஆன்ட்டி நல்லா சமைச்சி வெச்சிருப்பாங்க. இரண்டு பேருமா தீர்க்கலாம், வா!'' என்று அனு சொல்லவும் ப்ரீதியும் எழுந்தாள். அனுவும் வருவாள் என்று தெரிந்திருந்ததால் கல்பனா அவளுக்குப் பிடித்தமான எலுமிச்சை சாதம், சீரக ரசம், உருளைக் கிழங்கு கறி, பப்படம் எல்லாம் செய்து வைத்திருந்தாள். தான் தட்டில் போட்டுக் கொண்ட அனு, ப்ரீதிக்கும் போட்டுக் கொடுத்தாள்.

''எனக்குத் தயிர் சாதம் போதும்'' என்றாள் ப்ரீதி.

''சரி, போ! நானும் போகிற வழியிலே எங்கேயானும் சாப்பிட்டுக்கறேன்'' என்று அனுவும் எழுந்திரிக்கவே, ''சரி, சரி, வா! நானும் சாப்பிடறேன்'' என்று சொல்லி அனுவைக் கையைப் பிடித்து உட்கார வைத்தாள்.



வேண்டாம் என்றாளே ஒழிய, ப்ரீதிதான் நன்றாகச் சாப்பிட்டாள். அனு தான் இவளுக்காகச் சாப்பிட்டதால் சுமாராகச் சாப்பிட்டாள்.

''ஏன்தான் காலேஜ் லீவு விட்டாங்களோ, ரொம்பவே போரடிக்கிறது'' என்றாள் ப்ரீதி.

''போரடித்தால் உருப்படியாக ஏதாவது பண்ணு. மேலே பார்! எத்தனை ஒட்டடை. எல்லாத்தையும் சுத்தம் செய்யறதுதானே! ஆன்ட்டிதான் இந்த வயசிலும் பண்ணனுமாக்கும்?'' என்ற அனு சற்றைக்கெல்லாம் புறப்பட்டுவிட்டாள். வாசல் வரை போனவள் ''ஐயோ, ப்ரீதி, மறந்தேபோயிட்டேன் இந்தா, போட்டோ கேட்டியே, நான் தனியா இருக்கிறது ஒண்ணும் சரியில்லை'' என்றாள்.

''அதனால் என்ன, ஆன்ட்டியும், உன் அப்பாவும் தானே கூட இருக்காங்க, பரவாயில்லை'' என்று அதை வாங்கி வைத்துக் கொண்டு அனுவிற்கு விடை கொடுத்தாள். திரும்ப உள்ளே வந்தவளுக்கு அனு சொன்னதில் ஒரு அர்த்தம் இருப்பதாகப் பட்டது. அம்மாவைத் திட்டி அழவைத்ததற்கு சாயந்திரம் வரும் போது அவளுக்கு ஒரு சர்ப்ரைஸ் கொடுப்போம் என்று நினைத்துக் கொண்டு வீட்டை சுத்தம் செய்வதை எங்கிருந்து ஆரம்பிக்கலாம் என்று யோசித்தாள்.

ஸ்வாமி அலமாரியே தூசியாக இருக்கிறது என்று தோன்றவே அதனருகே வாசலில் இருந்த ஒரு சின்ன ஸ்டூலை எடுத்துப் போட்டுக் கொண்டாள். மேலே இருந்த பிள்ளையார் படத்திற்கும் சுவற்றிற்குமாய் ஒட்டடை கண்ணில் பட்டது. அதை எடுக்க நினைத்தவளுக்கு அம்மா அந்தப் பிள்ளையாரை பற்றிச் சொல்லும் பெருமை நினைவுக்கு வந்தது.

சின்ன வயசில் அம்மாவிடம் அந்தப் பிள்ளையார் படத்தையும் விநாயக சதுர்த்தி பூஜையில் வைக்கலாமே

என்று இவள் கேட்டிருக்கிறாள். அப்போதுதான் ஒருமுறை அம்மா சொன்னாள். அம்மாவும் அவள் கணவரும் ஒருமுறை வெளியே போயிருந்தபோது, அங்கே ஒரு கடையில் இந்தப் பிள்ளையார் படம் கண்ணில் பட்ட தாம். அது பிள்ளையார் பொம்மையை ஒரு முகம் பார்க் கும் கண்ணாடியில் ஒட்டியதுபோல் இருக்கும். பிள்ளை யார் உருவம் முழுவதிலும் குட்டி, குட்டி முக்கோண வடிவில் வெட்டப்பட்ட கண்ணாடி பதிக்கப்பட்டிருக் கும். அம்மாவிற்கு அது வேண்டும் என்றிருந்ததாம் 180- என்று விலை சொன்னதும் அம்மாடி ரொம்ப விலை வேண்டாம் என்று நடக்க ஆரம்பித்துவிட்டாளாம். உடனே அவள் கணவர் (ஒரு முறை கூட அவரை அப்பா என்று நினைக்கத் தோன்றியதில்லை) நீ ஆசைப் பட்டுட்டே, வாங்கிக்கோ என்று வாங்கப் பார்த்தால் கையில் அன்று பார்த்து 200/- தான் இருந்ததாம். அதை வாங்கிவிட்டு வெளியே சாப்பிடுகிற எண்ணத்தில் புறப்பட்ட அவர்கள் வீட்டிற்குப் போய் உப்புமா கிண்டி சாப்பிட்டார்களாம். பெரிய தாஜ்மஹால், ஷாஜகான் கட்டிவிட்டார் மும்தாஜுக்கு இன்று இப்போது எரிச்சல் வந்தது.

''அதை எடுக்காதே! கீழே போட்டுடுவே! அது உடைஞ்சா என் மனசுக்கு ரொம்ப கஷ்டமாக இருக்கும்'' என்று அம்மா எப்போதும் சொல்லுவாள். இத்தனையும் மனதில் ஓட, அந்தப் படத்தை எடுத்தாள். அப்படி அம்மா சொல்லிச் சொல்லி உடைத்துவிடுவோம் என்ற எண்ணமோ என்னவே, கையில் எடுத்த படம் கைநழுவி தடாலென்று கீழே விழுந்துவிட்டது.

ப்ரீதி பயந்தே போனாள். 'ஐயய்யோ, அம்மா வந்தால் அழுது திட்டி ரொம்ப ரகளை பண்ணுவாளே' என்று



தோன்ற அவசரமாக அந்தப் படத்தை எடுத்தாள். நல்ல வேளை பிள்ளையார் உருவம் சேதமாகவில்லை படம் ஒட்டப்பட்டிருந்த கண்ணாடியும், வெளிக்கண்ணாடியும் உடைந்துவிட்டது. சரி, இந்தக் கண்ணாடித்தூளை பெருக்கி அள்ளிவிட்டு பிள்ளையார் படத்துக்கு முடிந் தால் வேறு கண்ணாடி போட்டுவிடலாம் நினைத்துக் கொண்டே பிரேமை விட்டு வெளியே வந்துவிட்ட பிள்ளையாரை எடுத்து சாமி அலமாரிக்குள் வைத்தாள். கண்ணாடி தூளையெல்லாம் உடைந்த அந்த தகர பிரேமுக்குள் அள்ளிவிடும் நோக்கத்தில் அந்த பிரேமை எடுத்தால், ஆ! இது என்ன போட்டோ? ஒரு மெல்லிய பிளாஸ்டிக் கவருக்குள் இருந்த போட்டோவில் அம்மாவும் ஒரு ஆணும் தெரிந்தனர். கருப்பு வெள்ளைப் படமான அதை நல்ல வெளிச்சத்தில் பார்த்ததும் குழப்ப மடைந்தவளாக, காலையில் மீரா தன்னிடம் கொடுத்த போட்டோவையும் எடுத்துக் கொண்டு வெளிச்சத்தில் போய் பார்த்தவள் விக்கித்துப் போனாள். பிரமை பிடித் தவள் போல் நின்றவள் கண்களில் நீர் கரகரவென்று வழிந்தோடியது. சிறிது நேரம் கழித்து சுய உணர்வு பெற்று ஏதோ தீர்மானத்திற்கு வந்தவளாய் ஸ்வாமி அலமாரியில் யாராவது பிள்ளை வீட்டுக்காரர்கள் கேட் டால் கொடுப்பதற்காக எழுதி வைத்திருந்த தன் பயோ - டேட்டாவை எடுத்தாள்.

அதில் அப்பா என்ற வார்த்தைக்கு எதிரில் ''இறந்து விட்டார்'' என்று எழுதினாள். பின் மனதில் ஏதோ பட அதை அடித்துவிட்டு அம்மா என்பதன் எதிரில் ''விவா கரத்தானவர்'' என்று எழுதி, அதை அந்தப் பிள்ளையார் படத்தின் கீழேயே வைத்துவிட்டாள்.

கட்டிலில் போய் படுத்துவிட்டாள்.

அன்று சீக்கிரமே வீடு வந்துவிட்ட கல்பனா, உள்ளே வரும்போதே எப்போதும் போல் பிள்ளையார் இருக்கும் இடத்திற்குக் கண்களை ஓட்ட, அதை அங்கே காணாமல் ''ப்ரீதி, என் செல்லப் பிள்ளையார் எங்கே?'' என்று பெரிதாகக் கத்தினாள்.

''உன் செல்லப் பிள்ளையார் அங்கே'' என்று ஸ்வாமி அலமாரியைக் காண்பித்தாள் ப்ரீதி.

''பாவி, அதை உடைச்சுட்டியா? தொடாதேன்னு உனக்கு எத்தனை தடவை சொல்லியிருப்பேன், இப்படிப் பண்ணிட்டியே'' என்று சொல்லிக் கொண்டே அதைக் கையில் எடுத்தவள் அதன் அடியில் வைக்கப்பட்டிருந்த ப்ரீதியின் பயோ-டேட்டாவை எடுத்துப் பார்த்தாள்.

''என்ன ஆச்சு, உனக்கு, ப்ரீதி? மூளை கலங்கிடுத்தா?'' என்று அவளை ஒரு உலுக்கு உலுக்கவும் மௌனமாக தன் கையில் இருந்த இரண்டு போட்டோக்களையும் அம்மாவிடம் கொடுத்தாள். அதை வெளிச்சத்தில் எடுத்துப் போய் இரண்டு போட்டோக்களையும் மாறி மாறிப் பார்த்தவள் ஒரு நிமிஷம் உறைந்து போனாள். அவளையும் அறியாமல் அவள் வாயிலிருந்து கேவல் எழுந்தது. தலையில் கை வைத்துக் கொண்டு அப்படியே தரையில் உட்கார்ந்தவள் திடீரென்று எழுந்து ப்ரீதியின் பயோடேட்டாவை எடுத்தாள். அதையே சற்று நேரம் உற்றுப் பார்த்தவள் அம்மா காலத்திற்கு எதிரில் ப்ரீதி எழுதியிருந்த ''விவாகரத்தானவர்'' என்ற வார்த்தைக்கு அருகில் சரி என்ற அர்த்தத்தில் ஒரு டிக் செய்து பின் அதை எடுத்த இடத்திலேயே வைத்துவிட்டாள்.

கல்பனா என்ற கல்பனாவின் கதை முடிந்தது.

இந்த முடிவு பிடிக்காதவர்கள் மேலே தொடரலாம்.






''என்னம்மா, அப்படியே கல்லாட்டம் உட்கார்ந்துட்டே!''

அவளை வெறித்து ஒரு பார்வை பார்த்தால் கல்பனா. ''இப்போ நான் என்ன செய்யணும்?''

''அம்மா இதை நீ வேணுமானால் இப்படியே விட்டுவிடலாம். ஆனால் நான் விடத் தயாராயில்லை இன்னிக்கு மீரா ஆன்ட்டியும் அனுவும் வெளியே போகிறார்கள். நாளை விடியற்காலையில் அவர்களுக்கு மும்பை ப்ளேன். அங்கிருந்து அனு இன்னும் ஒரு வாரத்தில் மேற்படிப்பிற்காக ஸ்டேட்ஸ் போகிறாள். அதனால் அவர்கள் சாமான்கள் வாங்குவதற்காக வெளியே போகிறார்கள். அந்த ஆளும் சென்னை வந்திருக்கிறார். நான் அவரைப் போய் இப்போது பார்க்கப் போகிறேன்'' என்று நீதி கேட்கக் கிளம்பிய கண்ணகி போல் கிளம்பினாள்.

''ஏய், எதுக்கடி? வேண்டாம். நான் சொல்றதைக் கேளு'' என்றாள் கல்பனா.

''இன்னிக்கு அந்த ஆளை இரண்டு கேள்வியாவது சுடச் சுடக் கேட்டுட்டு வந்தாத்தான் என் மனசு ஆறும் நான் போயிட்டு வரேம்மா. என்னைத் தடுக்காதே!'' என்று சொல்லிவிட்டு விருட்டென்று கிளம்பிப் போய் விட்டாள் ப்ரீதி.

''இரு நானும் வரேன்'' என்று மட்டும் சொல்லிவிட்டு வீட்டைப் பூட்டிக்கொண்டு அவளும் கிளம்பினாள்.

''வா, வா! நாக்கைப் பிடுங்கிக்கணும் அந்த மனுஷன் இன்னிக்கு'' என்று ஆங்காரமாய் ப்ரீதி புறப்படவும், இல்லத்தைச் சேர்ந்த வேன் சரியாக அந்த சமயத்தில் உள்ளே நுழைந்து குழந்தைகளை இறக்கிவிடவும் சரியாக இருந்தது.

''அங்கிள், பெஸண்ட் நகர் போகணும்'' என்றாள் ப்ரீதி டிரைவரிடம்.

''வாங்கம்மா, போகலாம்'' என்று டிரைவர் சொல்ல இருவரும் ஏறிக் கொண்டனர். மீராவின் வீட்டை இவர்கள் அடைந்தபோது, வாசற்கதவு திறந்துதான் இருந்தது. டி.வி.யின் முன் உட்கார்ந்து டிஸ்கவரி சேனல் பார்த்துக் கொண்டிருந்தான் ரவி. ஒரு புலி இரண்டு மான்களை வேட்டையாடும் காட்சி.

படியிலேயே நின்று கையைத் தட்டினால் ப்ரீதி ''பேஷ், அமர்க்களமான காட்சிதான். உங்களுக்கு ரொம்பவே பிடித்தமான காட்சிதான்'' என்றாள்.

சட்டென்று திரும்பிய ரவி ப்ரீதியைப் ட ார்த்ததும், ''வாம்மா, ப்ரீதி!'' என்று யதார்த்தமாக அழைத்தவன் ''ஆமாம்மா. கேமரா ஒர்க் ரொம்பவே நல்லா இல்லை?'' என்றான்.

''இரண்டு மான்கள் சிக்கியதா, புலிக்கு? மூன்றாவது, நான்காவதெல்லாம் கிடையாதா?'' என்று குத்தலாகக் கேட்ட அவள், வாசற்பக்கம் திரும்பி, ''அம்மா உள்ளே வாயேன், நம்ம மீரா ஆன்ட்டி வீடுதானே.''

''என்ன, உங்கம்மா வந்திருக்காங்களா,'' என்று பரபரப்புடன் எழுந்தவன் உள்ளே நுழைந்த கல்பனாவைப் பார்த்து அதிர்ச்சியுற்றான்.

''கல்... கல்பனா, நீயா? சென்னையிலேயா இருக்கே'' என்றான் முகத்தில் ஆறாக வழிந்த வியர்வைத் துடைத்துக் கொண்டே.

''நீங்க இதை எதிர்பார்க்கலே, இல்லையா மிஸ்டர் சந்தர்? செத்து ஒழிஞ்சிருப்பான்னு நினைச்சிண்டு இருந்தீங்க. இப்படிக் கண் முன்னாடி வந்து நிப்பான்னு கொஞ்சம் கூட எதிர்பார்க்கலே, இல்லையா? நீங்க நினைச்சதனாலே செத்துடுவாங்களா, என்ன? கடவுள் வேறே வழி ஒண்ணு காண்பிச்சுட்டார் எங்களுக்கு'' என்றாள் ப்ரீதி ஆத்திரமாக.



''கல்பனா, உள்ளே வா! இத்தனை வருஷமா நீ எங்கேம்மா ஒளிஞ்சிண்டிருந்தே? நான் உன்னை எப்படியெல்லாம் தேடினேன், தெரியுமா? கண்டுபிடிக்க முடியாமே, கடைசியிலே நீ அப்பா அம்மாவோட மலேசியாவுக்குப் போயிட்டேன்னு நினைச்சு உன்னைத் தேடறதைக் கைவிட்டேன்மா'' என்றான் கண்களில் நீர் வழிய.

''போதும், மிஸ்டர், போதும் உங்க அளப்பெல்லாம். அதான் தேடிக் கண்டுபிடிக்காமே, சந்தோஷமா இன்னொரு கல்யாணம் பண்ணிண்டு, பெண்ணும் பெத்துண்டு, பெரிய கம்பெனிகளையெல்லாம் ஆண்டுண்டு ஆனந்தமா இருக்கீங்களே'' என்று பொரிந்தாள்.

''ப்ரீதி கொஞ்சம் மெதுவா பேசு! என்ன இருந்தாலும் அவர் உன் அப்பா'' என்றாள் கல்பனா (கல்யாணி)

ரவி கண்களாலேயே ''இவள் என் பெண்ணா?'' என்று கேட்க, ''ஆமாம் இவள் தான் உங்கள் மகள் தான்'' என்று வாயாலேயே பதில் சொன்னாள் கல்பனா.

''அம்மா, நாம வரும்போது இவர் டிஸ்கவரி சானலில் புலி மானை வேட்டையாடறதைப் பார்த்துண்டிருந்தார். என்ன சந்தோஷம் மனுஷருக்கு? ஏன், மிஸ்டர் சந்தர், பெண்கள் வாழ்க்கை உங்களுக்கு அவ்வளவு கிள்ளுக்கீரை ஆகிவிட்டது, இல்லையா? மீரா ஆன்ட்டியோட சரியா, இல்லை இன்னும் உண்டா திருவிளையாடல்கள்?'' என்று கோபம் கொப்பளிக்கக் கேட்டாள் ப்ரீதி.

தடுமாறிப் போன ரவி, ''அம்மா ப்ரீதி! நீ கோபித்துக் கொள்வதில் நிச்சயமாக நியாயம் இருக்கு. ஆனா அது உன் பக்கத்து நியாயம். என் பக்கத்து நியாயத்தையும் கொஞ்சம் கேளம்மா'' என்றான் ''முதல்லே இங்கே வந்து உட்காருங்க இரண்டுபேரும்.''

''ஸார், உங்க உபசாரமெல்லாம் இருக்கட்டும். இப்போ நான் வந்தது இதற்கெல்லாம் இல்லே. நீங்க

நட்டாற்றிலே கைவிட்டுப் போனாலும் நாங்க ஒண்ணும் பிச்சை எடுக்கல்லே, கௌரவமாத்தான் இருக்கோம்ன்னு உங்ககிட்டே சொல்லிட்டுபோகத்தான் வந்தோம்.''

''ப்ரீதி, ப்ளீஸ்மா! நான் சொல்றதையும் கொஞ்சம். கேளும்மா! நான் என்ன சொல்லியும் நான் செஞ்சதை சரின்னு உன்னை ஒத்துக்க வைக்க முடியாதுன்னு எனக்குத் தெரியும். ஆனா, கொலைக் குற்றவாளிக்குக் கூட அவன் பக்கத்து நியாயத்தைச் சொல்ல ஒரு சந்தர்ப்பம் கொடுப்பாங்க, இல்லையா அந்த மாதிரி நினைச்சு எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடும்மா'' ரவி கெஞ்சினான்.

''எனக்கு இது ரொம்பவும் அதிர்ச்சி, ஆனந்த அதிர்ச்சி! முதல்லே நீங்க இரண்டு பேரும் உட்காருங்க. கல்பனா, என்னை மன்னிச்சுடும்மா, அதுக்கு முன்னாடி நான் சொல்றதைக் கொஞ்சம் கேளேன்'' என்றான் ரவி.

''மிஸ்டர் ரவி, நீங்க இப்போ மன்னிப்புக் கேட்டதனாலே இத்தனை வருஷத்திலே நானும் எங்கம்மாவும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பட்ட அவமானங்கள், ஆதங்கம் எல்லாத்தையும் எந்த விதத்தில் துடைக்கப் போறீங்க? மன்னிப்பாம், மன்னிப்பு! வெட்கக் கேடு'' என்று பட்டாசாக வெடித்தாள் ப்ரீதி ''தெரியாமே கேட்டவங்க, தெரிந்தே குத்திக் காயிக்கணும்னு கேட்டவங்க எத்தனை பேர் மத்தியில் எத்தனை அவமானப்பட்டு தனியே வந்து கண்ணீர் சிந்தியிருப்போம். அந்த அவமானத்துக்கெல்லாம் நீங்க எந்த விதத்திலே நஷ்ட ஈடு தரமுடியும்? இதோ கொஞ்ச நாளா எனக்குக் கல்யாணத்துக்குப் பார்க்கறாங்க. ஒரு நாள், ஒரே ஒரு நாள், அழாமே இருந்திருப்போம்னு நினைக்கறீங்களா? விடோவா, டைவர்ஸியா, கல்யாணம் ஆகாமே பிள்ளை பெத்துண்டாளாங்கற வரைக்கும் ஒவ்வொருத்தரும் எப்படியெல்லாம் கேட்டு அவளை வருத்தப் படுத்தினாங்க,



தெரியுமா? எல்லாத்துக்கும் நீங்கதான் காரணம், நீங்க மட்டுமேதான் காரணம். நடந்ததுக்கு உங்க மனச்சாட்சியே உங்களை நன்னா உறுத்தட்டும்.

''நீங்க சொன்னதைக் கேட்டு அவங்க சாதாரணமான வாழ்க்கையைத் தொலைச்சுட்டு, ஆயுசு பூரா ஒரு சந்நியாசி வாழ்க்கை வாழ்ந்தது போதும் எழுந்திரும்மா, கிளம்பு, போகலாம்'' என்றாள் ப்ரீதி.

''ஆமாம், மீரா வரதுக்குள்ளே நான் கிளம்பறேன்'' என்றாள் கல்யாணி என்கிற கல்பனா.

''கல்பனா! என்னம்மா இப்படி கிளம்பறேங்கறே உன்னை நான் பார்த்தாச்சு. இனிமேயும் நீ ஒரு அனாதை இல்லத்தில் போய் இருக்கணுமா. ப்ளீஸ்! என்னோடயே இருந்துடும்மா இனிமேலோவது'' என்று கெஞ்சினான் ரவி.

''மிஸ்டர், அநாதை இல்லம்னு ஏதோ ரொம்ப சர்வ சகஜமா அதைப் பத்தி பேச வேண்டாம். இத்தனை வருஷம் ஒரு பத்திரமான கௌரவமான வாழ்க்கையை எங்களுக்குக் கொடுத்திருக்கிறது அந்த இல்லம். அந்த சாந்தி இல்லம்தான் எங்கள் வீடு. அங்க இருக்கிறவங்கதான் எங்க சொந்தக்காராங்க. நீங்க இல்லாமேயே எங்க அம்மா இதோ 5 அடி, 5 அங்குலத்துக்கு என்னை வளர்த்து எம்.எஸ்.சி படிக்க வெச்சு காலேஜ் லெக்சரராகவும் ஆக்கியிருக்காங்க. வீடும் வாங்கி இருக்காங்க. அதுவுமில்லாமே, இந்த இல்லத்து தலைவிக்கு முடியாததனாலே, என் அம்மாவே அந்தப் பொறுப்பையும் ஏத்துக்கப் போறாங்க. எங்கம்மா தன்னை நம்பி இருக்கிறவங்களை ஒரு போதும் கைவிடமாட்டாங்க. அது உங்களுக்குத்தான் கை வந்த கலை. உங்களுக்கு இதைச் சொல்லிவிட்டுப் போக மட்டும்தான் நாங்க இங்க வந்தோம். இனிமேலும் உங்களோட நாங்க சேர்ந்து இருப்போம் என்றெல்லாம் நினைச்சீங்கன்னா அது வடிகட்டின முட்டாள்தனம். பை, பை!''

''உங்களால முடிஞ்சா கடைசியாக எங்களுக்கு ஒரு உதவி செய்யுங்க. மீரா ஆன்ட்டிக்கு இது தெரியாம பார்த்துக்குங்க. எங்க நிம்மதியைக் குலைச்ச மாதிரி அவங்க நிம்மதியையும் குலைச்சிடாதீங்க. அவங்க நிம்மதியையும் கெடுக்கறதிலே அர்த்தமில்லை, அம்மா, வா! போகலாம்'' என்று சீறிவிட்டு கிளம்பினாள் ப்ரீதி.

என்ன பேசுவது என்று அறியாமல் சிலையாக நின்றான் ரவி.

**இந்த முடிவும் பிடிக்காதவர்கள் மேற்கொண்டு படிக்கவும்.**




இவர்கள் பேசிக் கொண்டிருந்ததில் உள்ளே சப்தம் கேட்டதையே கவனிக்கவில்லை. பார்த்தாவிற்கு காது சுத்தமாக கேட்பதில்லை. அவர் தன் ரூமில் தூங்கிக் கொண்டிருந்தார். புஷ்பா பாட்டி கீழே உள்ள தன் ரூமில் படுத்துக் கொள்ள, அவளருகே அனுவும் படுத்திருந்தாள். மீராவோடு ஷாப்பிங் போக திட்டமிட்டு இருந்த அவளுக்கு ராத்திரியிலிருந்து வயிற்றுவலியாக இருந்ததால் அன்று அவள் போகவில்லை. ஹாலில் பேச்சச் சப்தம் கேட்டவுடனேயே புஷ்பா விழித்துக் கொண்டு விட்டாள். பேச்சு கத்தலாக ஆனபோது அனுவும் விழித்துக் கொண்டுவிட்டாள். அவள் எழுந்து வெளியே போக கட்டிலிலிருந்து இறங்க முயற்சிக்கையில் பாட்டி அவளைப் பேசாதே என்று வாயில் விரல் வைத்து ஜாடை காண்பித்து அவள் தோளைப் பற்றித் திரும்ப படுக்க வைத்தாள்.

''என்ன ஜுஜும்மா. என்ன நடக்குது அங்கே?'' என்று கிசுகிசுப்பாகக் கேட்டாள்.

''உன் சிநேகிதி ப்ரீதி வந்திருக்கா, அவ பேசறதைக் கவனி'' என்று அவள் காதிற்குள் ரகசியமாக



முணுமுணுத்தாள் புஷ்பா. ப்ரீதியின் கத்தல், ரவியின் சமாதானம், கல்பனா கடைசியாகப் புறப்பட்டது எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டுதான் இருந்தார்கள் அனுவிற்கு ஒரே அழுகை, அவர்கள் கிளம்பிப்போய் அடுத்த ஐந்து நிமிடங்களில் மீரா வெளியிலிருந்து வந்துவிட்டாள்.

வரும்போதே, ''அனு ப்ரீதி வந்தாளா என்ன? இல்லத்தின் வேன் இந்தத் தெருவிலிருந்து போறதே'' என்று கேட்டாள். வாசலில் கூர்க்கா உண்டு என்பதனால் அந்த வீட்டில் வாசல் கதவைத் தாழ்ப்பாள் போடும் பழக்கம் கிடையாது. அவள் கேள்விக்கு யாரும் பதில் சொல்லாததனால், திரும்பவும் கேட்டுக் கொண்டே ரூமிற்குள் வந்தாள்.

அனுவையும், பாட்டியையும் பார்த்த அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''என்ன பாட்டி, என்ன ஆச்சு உங்க இரண்டுபேருக்கும்? அனு உன் வயித்துவலி ஜாஸ்தியாயிடுத்தாம்மா?'' என்றாள் மீரா.

''எனக்குத்தான் வயித்தெரிச்சல்; ஜாஸ்தியா இருக்கு. ப்ரீதியும் அவ அம்மாவும் வந்திருந்தாங்க'' என்றாள் புஷ்பா.

''என்னது, கல்பனா வந்திருந்தாளா?'' என்று ஆச்சரியமாகக் கேட்டாள் மீரா.

''இப்ப ஒண்ணும் புதுசா வரல்லே, ஏற்கனவே வந்திருக்கா. உனக்குத்தான் தெரியல்லே'' என்றாள் புஷ்பா.

''என்ன பாட்டி சொல்றே, ஒரு மண்ணும் புரியல்லே!'' என்றாள் மீரா.

''போய் உன் புருஷனையே கேட்டுப் பார்'' என்றாள் அனு.

சாதாரணமாக அனு இப்படிப் பேசக் கூடியவள் இல்லை. அவளை விநோதமாகப் பார்த்துக் கொண்டே ''சந்தர், சந்தர்'' என்று கூப்பிட்டுக் கொண்டே வெளியே வந்தாள்.

''ரவின்னு கூப்பிட்டுப் பார் ஏன்னு கேட்பான். 25 வருஷத்துக்கு முன்னாடியே நான் அடிச்சிண்டேன் நீ கேக்கலலே. இப்ப திண்டாடு'' என்றார் ஹாலில் உட்கார்ந்திருந்த பார்த்தா. அவர் பாதி தூக்கத்திலேயே எழுந்திருந்தவர் காதில் மெஷினை மாட்டிக் கெண்டு ப்ரீதி கத்தியதைக் கேட்டிருக்கிறார்.

மீரா ''சந்தர், சந்தர்'' என்று கூப்பிட்டுக் கொண்டே மாடிக்குப் போனால், இவர்கள் ரூம் உள்ளே தாழ்ப்பாள் போட்டிருந்தது. மீரா கதவைத்தட்டினாள், திறக்கவில்லை. இன்னும் அதிக பலத்துடன் கூப்பிட்டுக் கொண்டே கதவைத்தட்டியும் திறக்கவில்லை. அதற்குள் கீழிருந்து எல்லோருமே வந்துவிட்டார்கள். எல்லோருமாகச் சேர்ந்து பலமாகக் கூப்பிட்டுக் கதவைத்தட்டிய பிறகுதான் ரவி கதவைத் திறந்தான். அவனைப் பார்த்த மீரா பயந்தே போனாள். அவன் இருந்த கோலம் அப்படி. கலைந்த முடியும் கலங்கின கண்களும், அழுது சிவந்த முகமுமாய் இருந்தான் அவன்.

''என்ன ஆச்சு, உங்களுக்கு?'' என்றாள் மீரா.

''நான் சொல்றேம்மா. அவருக்கு ஒண்ணும் ஆகல்லே. அவரால் நமக்கெல்லாம்தான் வாழ்க்கையே வீணாயிருக்கு'' என்றாள் அனு.

''என்ன உளர்றே அனு!'' என்று மீரா அதட்ட, ''ஒரே வார்த்தையில் சொல்லட்டுமா'' கல்பனா ஆன்ட்டியை கல்யாணம் பண்ணி ஏமாத்திட்டுப் போன மகானுபாவன் இவர்தான் இவரேதான் மிஸ்டர் ரவிச் சந்திரன்.''

''என்னது, இவரா?' என்று கேட்ட மீரா இடிந்துபோய் உட்கார்ந்துவிட்டாள்.

''போறும்மா, இவரோட சங்காத்தம். நீயும் என்னோடயே புறப்படு. உனக்கு வயசிருக்கு. நீயும் ஸ்டேட்ஸ் வந்துட்டு அங்கேயே வேலை பார்க்கலாம். இன்னும்



படிக்கலாம். ஏன், வேறே கல்யாணம் கூட பண்ணிக்கலாம். கிளம்பு!'' என்றாள் அனு.

மீராவால் உடனடியாக இந்த அதிர்ச்சியான விஷயத்தைக் கிரகித்துக் கொள்ள முடியவில்லை. சற்று நேரத்திற்குள் தன்னைச் சுதாரித்துக் கொண்டவள் ''அதுதான் செய்யணும். ஆனா அதுக்கு முன்னாடி நான் இவரைக் கொஞ்சம் கேள்வி கேட்கணும்'' என்றாள் மீரா. ''கல்பனா என்ன பாவம் பண்ணினாள்னு அவளை அப்படி நட்டாற்றில் விட்டீங்க? சரி விட்டீங்க, அப்புறமா அவளைத் தேடினீங்களா? எத்தனைதரம் நான் கல்பனாவைப் பத்தி உங்ககிட்டே பேசியிருப்பேன்? எங்கிட்டே அவளைத் தெரியும்னாவது சொன்னீங்களா?''

''இதோ பார், மீரா! நான் அவளை நட்டாற்றில் விட்டது பெரிய தப்பு. போலீஸும் ரௌடிக் கூட்டமும் அவளை நெருங்கும் முன்னே, அவள் பிறந்த வீட்டிற்கே போய் சேர்ந்துவிடட்டும், என்கிற நல்ல எண்ணம்தான் அதற்குக் காரணம். அடுத்து நான் எத்தனையோ தடவை மைலாப்பூரில் போய் தேடினேன், தெரியுமா? அப்புறம் வெறுமே இந்த ஆள் காரணம் இல்லாமே அடிக்கடி இங்கே சுத்தறான்னு அந்த வடக்கத்திக்காரங்க போலீஸ் புகார் கொடுக்கப் போறோம்னு சொன்னதும்தான் அங்கே போறதை நிறுத்தினேன். தவிர, அவள் மலேசியாவுக்கு அவள் அப்பா அம்மாகிட்டே போயிட்டான்னும் சொன்னாங்க மீரா! நீ கல்யாணின்னு சொன்னபோதெல்லாம் அவதான் கல்பனான்னு எனக்குச் சத்தியமா தெரியாது.

''உங்கிட்டே ஏன் சொல்லலலே தெரியுமா? நீயே சொன்னே எங்கிட்டே. நம்ம கல்யாணம் ஆனதும் உங்கப்பா விசாரித்ததிலே ரிசல்ட் அவருக்குத் திருப்தியில்லேன்னு. ஆனாலும் நீ என் மேலே நம்பிக்கை வெச்சுருக்கே. நிம்மதியா வாழற அப்பாவின் அதிருப்தியைப்

பத்திக் கவலைப் படாமே. அப்படி இருக்கும்போது நான் ஏன் உன் சந்தோஷத்தைக் கெடுக்கணும்னுதான் நான் உங்கிட்டே சொல்லலே. என்னை நம்பு, மீரா! சந்தர்ப்ப சூழ்நிலைகள் அப்படி அமைஞ்சுடுத்தே தவிர நான் யாரையும் வேணும்னே ஏமாத்தலே. ஆனாலும் குத்தம் என் மேலேதான்னு நான் ஒத்துக்கறேன். நான் நீ தர எந்த தண்டனையையும் ஏத்துக்கத் தயாரா இருக்கேன்'' என்றான் ரவி. ''பழைய சூழ்நிலைக்குப் பயந்துதான் நான் ரவிங்கற பெயரை வெளியே சொல்லாமே சந்தர்ன்னே பேர் மாத்திண்டேன்.''

''நீங்க என்ன சொன்னாலும் எனக்கு இனிமே உங்களோட இருக்கப் பிடிக்காது'' என்று மீரா சொல்லிக் கொண்டிருக்கும்போதே ரவியின் கட்டிலின் மேல் உள்ள தலைகாணியின் அடியிலிருந்து நீட்டிக் கொண்டிருந்த ஒரு கடிதத்தை எடுத்தாள் புஷ்பா.

அதில் எழுதியிருந்தது இதுதான் -

*''அன்புள்ள மீரா,*

*கல்பனாவைத் தனியே விட்டுவிட்டு ஊரை விட்டே போனேன். உன்னை விட்டுவிட்டு இந்த உலகத்தைவிட்டே போகிறேன். நான் எந்தத் தவறையும் வேண்டுமென்றே செய்யவில்லை. தயவு செய்து புரிந்துகொண்டு என்னை எல்லோரும், உன் சிநேகிதி, அவள் பெண் உட்பட, மன்னித்து விடுங்கள். நான்செய்த தவறெல்லாம் சந்தர்ப்பமும், சூழ்நிலையும் சேர்ந்து என்னை செய்ய வைத்தவைதான்.*

*என்னை எல்லோரும் மன்னித்துவிடுங்கள்*

*சந்தர்''*

''என்ன சந்தர் இதெல்லாம்'' என்று கடிதத்தை வாய் விட்டுப் படித்த புஷ்பா கேட்டாள்.



''ஆமாம், பாட்டி! செத்துப்போற எண்ணத்தில்தான் லெட்டரை எழுதி வைத்தேன். ஆனால் இதென்ன சினிமாவா, தேடினவுடனே விஷம் கிடைக்க? தூக்க மாத்திரை மீரா அப்பா ரூமிலே இருக்குன்னு தெரியும். அப்புறம் ஒருத்தரும் இல்லாத சமயமாகப் பார்த்து எடுத்துக் கொள்ளலாம்னு படுத்து அழுது கொண்டிருந்தவன் அப்படியே மயக்கமாயிருக்கேன் போல இருக்கு'' என்றான் ரவி.

''எதுவானாலும் இனிமேல் தற்கொலை எண்ணம் எல்லாம் வரவே கூடாது. நினைக்க மாட்டேன் அப்படியெல்லாம்னு அனுமேலே சத்தியம் பண்ணுங்க'' என்றாள் புஷ்பா. மௌனமாக நின்றிருந்தான் ரவி. ''மௌனம் தான் சம்மதம். மௌனம்தான் உங்க சத்தியம்'' என்றாள் புஷ்பா.

''நீ உள்ளே வாம்மா, அவர் எப்படியோ போகட்டும்'' என்ற அனு. அம்மாவைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு எதிர் அறைக்குப் போய் கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

பின்னாடியே போன புஷ்பா அவர்களின் தாளிட்ட கதவைத்தட்டி திறக்கச் செய்தாள். உள்ளே போனவள் ''என்ன மீரா, அனு சின்னப் பொண்ணு. அவள் இழுத்த இழுப்புக்கெல்லாம் நீ போவியா?'' என்று கேட்டாள்.

''என்ன பண்ணலாம்? இந்த மாதிரி நம்பிக்கை துரோகிகளை ஷூட் பண்ணணும்'' என்றார் ரிடையர்ட் ஆர்மி ஆபீஸர் பார்த்தா.

''நம்பிக்கை துரோகிகளையெல்லாம் அப்படி ஷூட் பண்ணிட முடியாது உடனுக்குடனே'' என்றாள் புஷ்பா அவர் கண்களை நேருக்கு நேர் பார்த்து.

''பின்னே அவன் பண்ணின காரியத்துக்கு'' என்று அவர் சற்று இறங்கிய ஸ்ருதியில் சொல்ல

''தடாலென்று அப்படி ஒரேயடியாய் ஒருமையிலெல்லாம் சொல்வது நன்னா இல்லை. கொஞ்சம் நிதானிச்சுக்கோங்கோ, மாப்பிள்ளை'' என்றாள் புஷ்பா.

''அப்புறம் மீரா, நீ உன் பெண்ணோடு ஸ்டேட்ஸ் போயிடுவே! பாக்கிபேர் கதி?''

''அந்த ஆளை அடிச்சுத் துரத்தனும் முதல்லே.''

''அப்புறம் பாக்கி இருக்கிற இந்த இரண்டு கிழங்களை என்ன பண்ணறதா உத்தேசம்?''

''ஸ்டேட்ஸ்லே அம்மா செட்டில் ஆனதும் திரும்ப வந்து மும்பை பிஸினஸை லீசுக்கு விட்டுட்டு, உங்களைக் கூட்டிண்டு போயிடுவோம்.''

''ரொம்ப சமத்து வழியறது! மீரா நீ ப்படி சற்று அமைதியா உட்கார்ந்து நான் சொல்றதையெல்லாம் கொஞ்சம் கவனமா காது கொடுத்துக் கேளு'' என்றாள் புஷ்பா.

''சந்தரோட வாழ்க்கையிலே ஏதோ நடந்திருக்குனு உங்கப்பா விசாரிச்சு சொல்லவிட்டும், நீ இஷ்டப்பட்டுத் தான் அவர் மேல் தீவிரமான அன்புனு கல்யாணம் பண்ணிண்டே! அதுக்கப்பறம் அதிலே உறுதியா இருக்க வேண்டாமா? நடந்த சம்பவங்கள் எல்லாம் உன் கல்யாணத்துக்கு முன்னாடி நடந்ததே தவிர, உனக்குத் தாலி கட்டினப்புறம் உன்னிடம் 100% உண்மையாத்தான் இருந்திண்டு இருக்கார்ங்கறதை, நீ மறுக்கவே முடியாது.''

''அவரால் ஏமாற்றப் பட்டது என் பிராண சிநேகிதி, பாட்டி! இவரை எப்படி மன்னிக்க முடியும், சொல்லு'' என்றாள் மீரா. ''இவர் அவளைத் தேடிக்கூட இருக்க மாட்டார்ங்கறதுதான் என் எண்ணம்.''

''அவர்தான் சொல்றாரே. தேடித் தேடி சலிச்சுப் போய்தான் அந்த முயற்சியை விட்டேன்னு.''

''அதை அவர் நிருபிச்சா நான் அவரோட இனியும் சேர்ந்திருக்கணுமான்னு யோசிக்கறேன்.''



''இதோ பாரு இது உன் வாழ்க்கை. நீயே மண்ணை வாரித் தலையில் போட்டுக்காதே! ப்ரீதியை வெச்சுண்டு இன்னிக்கு கல்பனா கஷ்டப்படற மாதிரி நாளைக்கு அனுவை வெச்சுண்டு கஷ்டப்படப் போறியா? ப்ரீதி வந்து கத்தின போது கூட நான் ஏன் வெளியே வரல்லே, தெரியுமா? எனக்கு கல்பனா பாவம்னு தோணினாலும், எனக்கு உன் வாழ்க்கைதான் முக்கியம். அதனாலே தான், நான் வாயை மூடிண்டு இருந்தால் அவள் கத்திட்டு ஓய்ஞ்சு போய் கிளம்பிடுவான்னுதான் நினைச்சேன்.

''குடும்பம் பிரியறது ரொம்ப சுலபம்மா. ஒட்டி ஒண்ணா இருக்கறதுதான் கஷ்டம். நீ சந்தரோட சேர்ந்து இருக்கறதுதான் எல்லோருக்கும், எல்லாத்துக்கும் நல்லது'' என்று சொல்லி முடித்தாள் புஷ்பா.

''சந்தராம், சந்தர்! பேரைப் பார்!'' என்றாள் அனு.

''இதோபார் அனு. சின்னப் பொண்ணா லட்சணமா இரு! இன்னிக்கு காலேலே ப்ரீதிக்குப் போட்டோ கொடுக்கறச்சே கூட ''எங்கப்பா எத்தனை அழகு. இல்லே பாட்டி? எங்கப்பா அழகு. அவர் பேரும் அழகு''ன்னு பீத்திண்டே! ஒரு பொழுதுக்குள்ளே இப்படி மாறுவியா என்ன? சும்மா இரு'' என்றாள் புஷ்பா.

நேரே ரவியிடம் போனாள் புஷ்பா. ''இதோ பாருங்க, உங்களாலே நீங்க கல்பனாவைத் தேடினதை நிருபிக்க முடியுமா?'' என்று கேட்டாள்.

''சந்தேகம்தான், பாட்டி! நான் ஒவ்வொருதரம் அவங்க வீட்டுக்குப் போனபோதும் எனக்குப் பதில் சொன்னவர் அங்கிருந்த ஒரு பெரியவர்தான். அவர் இப்போ உயிரோடயே இருக்காரோ, இல்லையோ?''

''அவர் பேரு தெரியுமா?''

''திருவேங்கடம்னு நினைவு.''

திரும்ப மீராவிடம் போன பாட்டி "இதோ பாரு, மீரா! எடுத்தேன், கவிழ்த்தேன்னு முடிவு பண்ணற காரியம் இல்லை இது. எதானாலும் அமைதியா யோசித்துத்தான் செய்யணும். இது உன் வாழ்க்கை மட்டுமில்லை, அனுவுதும்கூட! நினைவிலே வெச்சுக்கோ" என்றாள்.

"இப்போ குடா உள்ளே இட்லி பண்ணி வெச்சுருக்கேன். அம்மாவும் பெண்ணும் அப்பாவுக்கும் கொடுத்து நீங்களும் சாப்பிடுங்கோ. அப்புறம் கொஞ்ச நாழி தியானம் பண்ணுங்கோ, இல்லை தூங்குங்கோ."

"நீ என்ன பண்ணப் போறே ஜுஜீம்மா" என்று கேட்டாள் அனு.

"கொஞ்சம் வேலையிருக்கு எனக்கு. நீ முக்கியமாக வாயைத்திறக்காதே, அனு! உனக்குமேலே பெரியவங்க நாங்கள்லாம் இருக்கோம், பாத்துக்கறோம்" என்று கண்டிப்பாகச் சொன்னாள்.

திரும்ப ரவியிடம் சென்றாள். "கல்பனா வீட்லே இப்போ நடக்கிற கம்பெனி பேர் தெரியுமில்லையா. டைரக்டரியில் பார்த்து போன் நம்பரைக் கண்டு பிடியுங்க" என்றாள். அவன் டெலிபோன் டைரக்டரியைப் புரட்ட, பாட்டி போய் ரவிக்கு டிபன் எடுத்து வந்தாள். தானும் சாப்பிட்டாள். பிறகு "என்னோட வெளியே வரத் தயாரா இருங்கோ" என்றாள்.

அந்தக் கம்பெனிக்குப் போன் செய்து கேட்டு திருவேங்கடத்தின் விலாசத்தைக் குறித்துக் கொண்டார்கள். திருவல்லிக்கேணியில் உள்ள அவர் வீட்டிற்குப் புறப்பட்டனர். "கிளம்புங்கோ சந்தர். இந்தக் குடும்பத்தின் அதிர்ஷ்டத்தைப் பார்க்கலாம்" என்றாள்.

அந்த விலாசத்தை அலைந்து திரிந்து கண்டுபிடித்து அங்கு போனால் அவர் திடமாக நல்ல ஆரோக்கியத்தோடு இருந்தார். தங்களை அறிமுகப் படுத்திக் கொண்டு கல்பனாவைப் பற்றி விசாரித்தனர். ரவி தன்னை



அவருக்கு நினைவிருக்கிறதா என்று கேட்டான். "ஆமாம்,
இவரை நினைவிருக்கிறது. என்னிடம்தான் கல்பனாவைப்
பற்றிக் கேட்டார். நானும் அவள் என்னிடம் தன் கணவ
னிடம் திரும்பிப்போவதாக சொன்னாள் என்று சொன்
னேன். மறுபடியும் இவர் பல முறை வந்து அவள் தன்
னிடம் வரவில்லை என்று சொன்னார். அதனாலே ஒரு
வேளை அவ, தன் அப்பா அம்மாவிடம் மலேசியா
வுக்குப் போயிட்டாளோ என்னவோன்னு நாங்க பேசின
டோம். அதுக்கப்பறம் கூட இவர் இரண்டொரு தடவை
வந்து கல்பனாவைப் பத்தி ஏதாவது தெரியுமான்னு
கேட்டார். அந்தக் கம்பெனி ஓனர் துரத்தி அடிச்சதனாலே
தான் இவர் அப்புறமா வரல்லேன்னு நினைக்கிறேன்
சரியா?" என்று கேட்டார்.

ஒரு மாதிரி அவரையும் அவர் வீட்டினரையும் ஒப்புக் கொள்ள வைத்து பெஸன்ட் நகருக்கு அவரைத் தங்களுடன் அழைத்துச் சென்றார்கள். அங்கு போனதும் "இவளை சின்ன வயதில் கல்யாணி வீட்டில் பார்த்திருக்கிறேன்" என்றார். திருவேங்கடத்திற்கு எல்லா விஷயத்தையும் விளக்கியதும் "இப்போது நினைவுக்கு வரது. அந்தப் பெண் கல்யாணி அவ அப்பா, அம்மாவைத் தேடி எங்கிட்டேதான் வந்தா. அந்த டைம்லே அவாளெல்லாம் இந்தியாவைவிட்டே மலேசியாவுக்குப் போயிட்டா. நான் கூட சாரோட மலேசியா நம்பரை குடுத்து அந்தப் பெண்ணைப் பேசச் சொன்னேன். ஆனா அவர் ஒரே அடியா அவளை ஒதுக்கிட்டார். அப்பறம் அவ தான் திரும்பி புருஷன் வீட்டுக்கே போறேன்னுட்டு போயிட்டா. அப்புறமா இவர் நிறையதடவை வந்து விசாரித்ததனாலே நான் தான் கல்யாணி மலேசியாவுக்குப் போயிட்டான்னும் சொன்னேன். அதுகூட எதுக்குச் சொன்னேன் தெரியுமா? பாவம் இந்தப் பையனால் கல்யாணியைக் கண்டுபிடிக்க முடியலை. குறைந்த பட்சம் இவனாவது

ஒரு வேலை தேடிண்டு செட்டில் ஆகட்டுமேன்னு தாம்மா சொன்னேன் அப்பறமா இவரை நான் பார்க்கலே அந்தக் கம்பெனி ஓனரும் 'எதுக்கு இங்கேயே காரண மில்லாம சுத்தி சுத்தி வரே. போலீஸ் கம்ப்ளைண்ட் குடுக்கணுமா உன்மேலே' அப்படின்னு கத்தவிட்டுத் தான் அவர் அங்கே வந்து,தேடறதை நிறுத்தினார். அதுக் கப்புறமாத்தான் இவர் உன்னைப் பண்ணிண்டுருக்கார் போலிருக்கு'' என்றார்.

இவர் இப்படி விஷயத்தை விளக்கினதும் மீராவும், அனுவும் ஒருமாதிரி ஒத்துக் கொண்டுவிட்டார்கள். அப்பாடா என்றிருந்தது புஷ்பாவுக்கு.

இதவரை வாயே திறக்காமல் நின்றிருந்த ரவி திடீரென்று திருவேங்கடத்தின் கால்களில் விழப்போனான் ''ஸார், நீங்க என் கண்ணுக்குத் தெய்வமாக தெரியறீங்க. என் வாழ்க்கையைக் காப்பாத்திக் கொடுத்திட்டீங்க'' என்றான்.

''இருங்கோ, இருங்கோ! ஆத்துக்காரியோட சேர்ந்து சேவியுங்கோ! அப்பத்தான் ஆசீர்வாதமெல்லாம்'' என்றார் திருவேங்கடம். ஆமாம். காரில் வரும்போதே சுருக்கமாக எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள் புஷ்பா.

''மன்னிக்கணும், விஷய மும்முரத்திலே நான் உங்களை சரியாகவே உபசரிக்கலே கொஞ்சம் இருங்கோ டிபன் காப்பி கொண்டுவரேன்'' என்றாள் புஷ்பா.

''இல்லேம்மா, நான் வெளிலே சாப்பிடற வழக்கம் கிடையாது.''

''பால் கொண்டு வரேன் அதையாவது மறுக்காமே சாப்பிடணும்.''

''சரிம்மா, உங்க மனசு போலே'' என்றார்.

அவர் பாலை அருந்தியதும், ஒரு பையில் 6 ஆப்பிளைப் போட்டுக் கொடுத்தாள் அவரிடம்.



''சரிம்மா, நான் கிளம்பறேன். கிழவி சுத்துவா. அவளுக்கு நான் கண் முன்னாடியே இருக்கணும், என்னைச் சுத்திண்டே இருக்கணும், இல்லாட்டா அவளுக்குச் சரிப் படாது'' என்றார். எல்லோரும் கொல்லென்று சிரித்தனர். அந்தச் சிரிப்பு சூழ்நிலையின் இறுக்கத்தை லேசாக்கியது.

''அம்மா, நீங்க கல்யாணியை பார்த்தேள்னா நான் அவளைப் பார்க்க ஆசைப் பட்டேன்னு சொல்லுங்கோ. போன் நம்பர் குடுங்கோ நான் பேசறேன் அவளோட, பாவம் செல்லமா வளர்ந்த பொண்ணு.''

''மாமா, உங்களுக்கு அவள் கல்பனாவா, கல்யாணியா?'' என்று கேட்டாள் மீரா.

''கல்பனாதான். கல்யாணி அவ பாட்டி பேராச்சே யாராவது அந்தப் பேரைச் சொல்லிக் கூப்பிடமுடியுமா? அந்தக் குழந்தையே தன் பேரு கல்பனான்னுதான் சொல்லிப்பா. சரிம்மா நான் கிளம்பறேன் என்னைக் கொஞ்சம் கொண்டு விடச் சொல்றேளா?''

''வேண்டாம், நான் உங்க கூட வரேன்'' என்றான் ரவி.

''இல்லை சார், அப்படியெல்லாம் ஃபார்மாலிட்டியெல்லாம் வேண்டாம் என்னைக் கொண்டுவிடச் சொன்னாலே போதும் எல்லோரும் நன்னா இருங்கோ'' என்று சொல்லிக் கிளம்பிவிட்டார். அவரை வாசல் வரை சென்று வழி அனுப்பிவிட்டுத் திரும்பினர்.

''அனு, என்மேல் இன்னும் கோபமாடா கண்ணா. ப்ளீஸ் என்னைத் தப்பா நினைக்காதேடா'' என்றான் ரவி கண்களில் நீர் வழிய.

''எனக்கு என்னைவிட ப்ரீதியை நினைச்சாத்தான் பாவமா இருக்கு'' என்றாள் அனு.

''என் கை மீறிப் போயிடுத்தம்மா! என்னாலே என்ன பண்ண முடியும்னு தெரியலே'' என்றான் ரவி.

''இன்னும் ஒரு கேள்வி ரவியைக் கேட்கணும் எனக்கு'' என்றாள் மீரா.

''கேளும்மா, மனசிலே வெச்சுண்டு அவஸ்தைப் படாதே!'' என்றாள் பாட்டி.

''கல்யாணி தன் ஹைதராபாத் வாழ்க்கை பத்தி எனக்கு மொத்தமும் சொல்லியிருக்கா. உங்களுக்கு அத்தனை ஒத்தாசை செய்த அந்த பிரண்ட் சேகர், அவர் மனைவி கிட்டே கேக்கணும்னு உங்களுக்குத் தெரியல்லையா?''

''என்னால் ஹைதராபாத் போக முடியாத ஒரு சூழ்நிலை. சேகரைப் பத்தி போன்லே விசாரித்ததில் அவன் வேறே கம்பெனியில் வேலையாகி தான்சானியாவுக்குப் போயிட்டதாகச் சொன்னாங்க. மேல் கொண்டு எதுவும் செய்யமுடியாமல்தான் அந்தத் தொடர்பையும் விட்டேன் மீரா. நீயும் என்னை விட்டுப் போய் என்னை மறுபடியும் அனாதையாக்கிடாதே, மீரா'' என்று கெஞ்சினான் ரவி தன் இரு கைகளையும் கூப்பிக் கொண்டு.




கல்பனாவோடு இத்தனை வருஷங்கள் பழகினோம். பாவம் அவள் வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்ள போகிறாள் என்று கவலைப் படுகிறவர்கள் மேலே படிக்கவும்:

''நீங்க எல்லோரும் தயாராகுங்கோ நாமே போய் கல்யாணியைப் பார்த்துட்டு வரலாம்'' என்றாள் மீரா.

''எல்லாரும்னா'' பார்த்தா கேட்டார்.

''எல்லாரும்னா எல்லாரும்தான். வீட்டைப் பூட்டிவிட்டுப் போகிறோம்.''

எல்லாரும் கிளம்ப ரவி மட்டும் உள்ளே போய் உட்கார்ந்திருந்தான். புஷ்பா போய் ''நீங்க கிளம்பலியா?'' என்று கேட்க,

''அந்தப் பெண் ப்ரீதி பேசினதைக் கேட்டிங்க இல்லே, பாட்டி? எனக்குப் பயமா இருக்கு.''



''பயந்து ஆகப் போறது ஒண்ணுமில்லை, கிளம்புங்கோ'' என்று புஷ்பா சொல்லவும் அவனும் கிளம்பினான். எல்லோருமாகக் கிளம்பினார்கள். இவர்கள் இல்லத்திற்குப் போய் சேரும்போது இரவு மணி 8 ஆகிவிட்டது. கல்பனாவின் வீட்டிற்கு நேராக எல்லோரையும் அழைத்துப் போனாள் மீரா அங்கு சரோஜினியும் இருந்தாள். இதுவரை கல்பனா சரோஜினியிடம் எதை மறைத்திருக்கிறாள்? மொத்த விஷயங்களையும் சொல்லி குமுறி அழுது அப்போதுதான் முடித்திருந்தாள். ப்ரீதி வேறு ஒரே கொந்தளிப்பில் இருந்தாள்.

மீராவையும் மற்றவர்களையும் பார்த்த சரோஜினி, ''வாம்மா, மீரா'' என்று வரவேற்றாள்.

''வாங்க'' என்று கல்பனா புஷ்பாவையும் பார்த்தாவையும் பார்த்துக் கை குவித்தாள். ரவி வாசலிலேயே தயங்கி நின்றான்.

''வாங்க உள்ளே'' என்றாள் கல்பனா அமைதியாக.

'எப்படி இவள் இத்தனை அமைதியாக இருக்கிறாள்?' என்று எல்லோருக்கும் பெரிய ஆச்சரியம். நேராக உள்ளே வந்த மீரா கல்பனாவைக் கட்டிக் கொண்டுவிட்டாள்:

''உன் வாழ்க்கையை நான் திருடி வாழ்ந்திருக்கேண்டி. இத்தனை வருஷமாய். ஸாரின்னு சொன்னா போதவே போதாது. இதை நான் எப்படியாவது ஈடு பண்ணனும் கல்பனா'' என்று கேவினாள்.

''கடந்த காலம் நம் கையிலா இருக்கு? விடு, என் விதி அது'' என்றாள் கல்பனா.

''ஏய், நீ நிஜமாகவே பொறுமையில் பூமாதேவிதான்'' என்றாள் மீரா. ''சரி, நீ இனிமே என்ன செய்யப் போறே, எங்கே இருக்கப் போறே?'' என்றும் கேட்டாள்.

''என்ன புதுசாக் கேக்கறே?''

எல்லோரும் மௌனமாக இவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். கார்லே வரும்போது

இந்தப் பொண்ணு மீராவுக்கு படிச்சுப் படிச்சுச் சொன்னோமே! உணர்ச்சிவசப்பட்டு எந்த முடிவும் எடுக்காதேன்னு. இவ இப்ப என்ன கேக்கப் போறா? என்று டென்ஷனோடு பார்த்துக் கொண்டிருந்தாள் புஷ்பா. அவளுடைய கவலை அப்பட்டமாக அவள் முகத்தில் தெரிந்தது.

அவள் முகத்தைப் பார்க்காமலேயே மீரா கல்பனாவைக் கேட்டாள் "இதோ பார்! இத்தனை நாட்கள் நீ யார்னு தெரியாமே இருந்தது. இப்போ தெரியவிட்டும் கூட நான் உன்னைத் தனியே எப்படிம்மா விடுவேன்? நீயும், ப்ரீதியும் இனிமே எங்களோட தான் இருக்கணும்."

அதற்குக் கல்பனா புஷ்பாவைப் பார்த்தபடியே "அதெல்லாம் சரியே வராது, மீரா! நீ இத்தனை வருஷமா உன் கணவன், உன் பெண் என்று ஒரு வட்டத்துக்குள்ளேயே வாழ்ந்திருக்கே. இப்போ நான் என்னதான் உனக்குப் பிராண சிநேகிதியானாலும் நாம சேர்ந்திருந்தால் நாளைக்கே 100 பிரச்னைகள் வரும். நம்ம நடுவிலே, ரவி திண்டாடுவார். ப்ரீதி, அனுக்குள்ளேயும் பிரச்னை வரும். மனுஷ மனம்தானே, எப்படி மாறும்னு யார் கண்டா? ஒரு உதாரணம் சொல்றேன் கேளு. என்னை என்னமோ பூமாதேவின்னியே. நான் எப்பவுமே அவர் எங்கேயாவது நல்லபடியா வாழ்ந்தால் போதும்னு மட்டும்தான் நினைப்பேன். எனக்கு அவர்மேலே கோபமே இல்லைன்னுதான் உன்கிட்டேயே சொல்லியிருக்கேன். நானே அப்படித்தான் நம்பி வந்திருக்கேன். ஆனா இன்னிக்கு ப்ரீதி அவரை எத்தனை கோபமா, எத்தனை நாக்கை பிடுங்கிக்கற மாதிரி கேட்டாள், தெரியுமா? என் மனசிலே உள்ளூர ஒரு திருப்தி வந்ததுன்னு சொன்னா நீ நம்புவியா? அதுக்கு என்ன அர்த்தம்? நானே அவர்கிட்டே ஒரு உரிமை எடுத்துண்டா, உனக்குப் பிடிக்காமே போகலாம். இன்னும் உன் அப்பா, பாட்டி, அனு எல்லாரும் இருக்காங்க. யாருக்கு என்ன தோணும்னு யாராலும்



உத்திரவாதமெல்லாம் சொல்ல முடியாது" என்று அமைதியாகவே சொல்லி முடித்தாள்.

"ஆனால் கல்பனா, சந்தரை, உன்னுடைய ரவியை, நீ நம்பித்தான் ஆகணும். அவர் உன்னை, தன்னால் முடிந்த வரை தேடியிருக்கிறார். இப்போது திருவேங்கடம் மாமா வந்து சொன்ன போதுதான் அது எனக்கும் புரிந்தது. நீ தன்னை மன்னிக்கவில்லை என்ற எண்ணம் அவருக்குள் இருந்தால் அவர் தன்னையே மிகவும் நொந்து கொள்வார். அது அவருடைய ஆரோக்கியத்தை ரொம்பவும் பாதிக்கும்.

உன்னையும் கண்டுபிடிக்க முடியாமல், எதிலும் பிடிப்பில்லாமல், சுற்றிக் கொண்டிருந்தபோதுதான் என்னைப் பார்த்திருக்கிறார். எனக்காகவாவது நீ என்னையும் அவரையும் மன்னித்து விடு, கல்பனா! இந்தப் பெயர்க் குழப்பம் வேறே நடுவில் படுத்தியிருக்கிறது. நீ கோபப்படுவதற்கு முழுசாக உன் பக்கம் நியாயம் இருந்தாலும், தயவு செய்து கோபப்படாதே!" என்று மீரா உருக்கமாக கேட்டுக் கொண்டாள்.

"எல்லாமே விதிதான், மீரா! எனக்கு யார்மேலும் கோபமில்லை. ரவியும் பாவம். வேண்டுமென்றா செய்தார்? போகட்டும் விடு!

எனக்கு... என்று அவள் மேலே ஏதோ சொல்ல ஆரம்பிக்கும்முன் போன் மணி அடித்தது. ப்ரீதி ஓடிப் போய் எடுத்தவள், "அம்மா, மலேசியாவிலிருந்து ராமமூர்த்தி என்பவர் பேசுகிறான். உன்னோடு பேசணுமாம்" என்றாள்.

கல்பனா உடம்பெல்லாம் நடுங்க கைகள் ஆட அந்த போன் ரிசீவரைக் கையிலெடுத்துக் கேட்டாள் "அம்மா கல்பனா, நான் உன்னோட அப்பா பேசறேம்மா" இந்தக் குரலைக்கேட்ட கல்பனாவுக்கு உள்ளங்காலிலிருந்து உச்சந்தலை வரை ஒரு நடுக்கம் வந்து போயிற்று. அம்மாவின் ரியாக்ஷனைக் கவனித்துக் கொண்டிருந்த ப்ரீதி போனை ஸ்பீக்கரில் போட்டாள்.

''அம்மா, கல்பனா! நல்லாயிருக்கியாம்மா? நீ எங்கிட்டே பேசினபோது ரொம்பவே கோபமா பேசிட்டேன். அம்மா, சாதனா, உன் அத்தை எல்லோருமே ரொம்ப கோவிச்சுட்டாங்கம்மா. அப்பவும் என் கோபம் கொஞ்சம் கூடக் குறையலே. இப்பத்தான் நாலஞ்சு வருஷமா உன் நினைவாகவே இருக்கும்மா. உன்னோட பேசணும்னு ஆதங்கமா இருந்ததும்மா. ஏதோ வயசுக் கோளாறு. நீ தப்பு பண்ணிட்டேங்கற விவேகம் வர எனக்கு இத்தனை வருஷம் ஆகியிருக்கும்மா. இந்த அப்பாவை மன்னிச்சடும்மா'' என்றார்.

''இல்லேப்பா, உங்கமேலே தப்பு ஏதுமில்லேப்பா. நான் பண்ணினதுதான் தப்பு. அதற்குத் தண்டனை கொடுக்க உரிமை உள்ளவர்தானேப்பா நீங்க. அதனாலே நீங்கதாம்பா என்னை மன்னிக்கணும். அம்மா, சாதனா, அத்தை எல்லோரும் நல்லா இருக்காங்களாப்பா?'' என்று கேட்டாள். அவள் குரல் நடுங்கியது.

''எல்லோரும் நல்லாயிருக்காங்கம்மா.''

''அம்மாடி, கல்பனா! நீ அப்ப எப்பவோ திருவேங்கடத்தை வந்துகேட்டு நான் போனில் உன்னிடம் அப்படிக் கோபப் பட்டுட்டேன். அப்படிக் கோபப்பட்ட எனக்கு இப்போ உன் மேல் எப்படி அக்கறை வந்துதுன்னு பார்க்கறியா?

சாதனாவுக்கு இரண்டுதரம் குழந்தை இறந்தே பிறந்துடுத்தம்மா. இனிமே குழந்தை பிறக்கவும் வாய்ப்பில்லைன்னு சொல்லிட்டாங்கம்மா. உயிரோட இருக்கிற ஒரு பொண்ணுக்கு முழுகறேன்னு அடாத காரியத்தை நான் பண்ணின பாபத்துக்குத்தான், கடவுள் குடும்பம் மொத்தத்தையுமே தண்டிச்சுட்டார்மா. எனக்கு இப்போ புத்தி வந்துடுத்தும்மா.

திருவேங்கடம் இன்னிக்குத்தான் உன்னைப் பார்த்ததாகச் சொல்லி, உன் போன் நம்பரையும் கொடுத்தார்மா. நடுவிலே நான் கேட்டபோது அவருக்கும் தெரியல்லே.



நீ உன் கணவனோடு இல்லையாமேம்மா, நாங்கள் எல்லோரும் இருக்கோம் உனக்கு. நீ ஏம்மா தனியா இருக்கணும்? எனக்கு பேத்தி இருக்காளாமேம்மா! நான் பண்ணின தப்புக்காவோ என்னவோ சாதனாவிற்குக் குழந்தையே பிறக்கவில்லைம்மா. எல்லாம் என் பாவம் அம்மா, எனக்கு என் பேத்தியைப் பார்க்கணும்போல இருக்கு. அவள்கிட்டே போனைக் குடேன். அவள் குரலை யாவது கேக்கறேன்'' என்றார் ராமமூர்த்தி.

''அப்பா நீங்க முதல்லே பேசினதே அவள்கிட்டத்தானப்பா. இருந்தாலும் அவள்கிட்டே குடுக்கறேன்'' என்று சொல்ல போனை ப்ரீதியிடம் கொடுத்தாள்.

''தாத்தா, நல்லா இருக்கிறீங்களா? எனக்கும் உங்களைப் பார்க்கணும்போலத்தான் இருக்கு. தாத்தா. எப்ப முடியப் போறதே தெரியலே! பாட்டி சௌக்கியமா? அவங்களுக்கு என் நமஸ்காரத்தைச் சொல்லுங்க, தாத்தா, இருங்க அம்மாகிட்டேயே குடுக்கிறேன்'' என்று போனை கல்யாணியிடமே திருப்பிக் கொடுத்தாள்.

''ஏம்மா, கல்பனா! இப்ப நீ இருக்குற இடம் தெரிஞ்சபிறகு நீ ஏன் தனியா அங்கே இருக்கணும்மா? நான் இப்ப ஆபீஸிலிருந்துதான் பேசறேன். திரும்ப இரண்டு மணிநேரம் கழிச்சு மறுபடியும் கூப்பிடறேன். நீ எங்கிட்டேயே வந்துடும்மா'' என்று மூச்சிறைக்க பேசி முடித்தார் ராமமூர்த்தி.

''அப்பா, நீங்க கூப்பிடறது எனக்கு ரொம்பவே சந்தோஷமா இருக்குப்பா. ஆனா எனக்கு ஆதரவில்லாத போது தெய்வம் மாதிரி அணைத்துக் கொண்ட இந்த சாந்தி இல்லம்தான் இனியும் வாழ்நாள் பூரா என் வீடு. சரோஜினி அம்மாதான் எனக்கு அடைக்கலம் கொடுத்தாங்க. அவங்கதான் எனக்கு அப்பா, அம்மா, தெய்வம் எல்லாம். அன்னிக்கு அவங்க இல்லேன்னா நான் சென்னை வந்த போதே சீரழிந்து சின்னாபின்னமாகியிருப்பேன். அவங்களுக்கு இப்போ இல்லம் நடத்த உதவி தேவைப்

படுகிறது. இப்போ அவங்களோட தள்ளாத வயசிலே அவங்களை விட்டுட்டு நான் உங்களோட வந்தேன்னா என்னைவிட நன்றி கெட்டவ உலகத்திலே வேறே யாரும் இருக்கமுடியாது. அன்னிக்கு நடந்துண்டமாதிரி மன முதிர்ச்சி இல்லாத கல்பனாவாகத்தான் நானே என்னை உணருவேன். நான் என் சுகம்ன்னு இருந்த கல்பனா இல்லை இப்போ. நான் உயிர் வாழறதே ப்ரீதிக்காகவும், சரோஜினி அம்மாவுக்காகவும் தான். பேத்தி உங்க பேத்தி தான் அப்பா! அவளை வந்து பாருங்கோ. நாங்களும் வரோம். ஆனா என் நிரந்தரமான இடம் இந்த இல்லம் தான். அம்மாவையும் பேசச் சொல்லுங்கோ. ஆனா என்னைக் கூப்பிடறவங்களுக்கு என் நிலையான பதில் இதுதான்'' என்று சொல்லி போனை வைத்துவிட்டாள்.

அவள் பேசி முடித்ததும் ''எனக்கும் சொல்லவேண்டியதை அழகாக சொல்லிட்டே கல்யாணி! எனக்கு உன்னை நினைச்சா ரொம்ப பெருமையாக இருக்கு'' என்றாள் மீரா. ''எனக்கு எதுவும் பேசக் கூடிய தகுதியே இல்லே. உன்னோட இனிமேயும் இருக்க முடியாதுங்கறது வருத்தம் தான். ப்ரீதியாவது எங்களோட வருவாளா?'' என்று ரவி கேட்டான். உடனேயே மீரா ''நாம அவளைக் கூப்பிடறது கூட நியாயமில்லை. ப்ரீதியும்கூட இல்லாமல் கல்யாணி தனியே எப்படியிருப்பா?'' என்றாள்.

''அதுக்கென்ன, வந்துண்டு போயிண்டு இருக்கலாம். அடிக்கடி பாத்துக்கலாம். ப்ரீதி கல்யாணம்னா நீங்க எல்லோரும்தான் நடத்திவைக்கணும், சரியா மீரா?'' என்றாள் ''என் மீது யாருக்கும் கோபம் இல்லையே'' என்று பொதுவாகக் கேட்டாள் கல்பனா.

''சரியான முடிவுதான் எடுத்துருக்கேம்மா'' என்றாள் ப்ரீதி. இரவு டிபனுக்குப் பிறகு அவர்கள் புறப்பட்டபோது நிச்சலனமான மனதுடன் விடை கொடுத்தாள் கல்யாணி. இல்லை கல்பனா.

*